பிஸ்மில்லாஹி

# அஸ்றுறுல் ஆலம்.

இது

அறபிலும் தமிழிலும் பலநூல்கள் இயற்றியவரும்

சுப்றீங்கோட்டுப் பிறக்றரு மாகிய

மூகம்மதுகாசிம் சித்திலெவ்வை

அவர்களால்

கோர்வைசெய்து

கொழும்பு

"தாரகா" அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டு

கொளொனியல் ஆபிஸில்

றெஜிஸ்றர் செய்யப்பட்டது.

*All Rights Reserved.*

**1897.**

"Star Press" Colombo.

# அஸ்ருறுல் ஆலம்

## அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| தன்னையறிந்தவன் நாயனையறிவானெனும் வாக்கியத்தின் விளக்கம் ... ... ... ... ... | 1 |
| றூகை. ஹக்குக்கு உதாரணம் சொல்லக்கூடிய பத்து விஷயங்கள் ... ... ... ... ... | 2 |
| உயிரல்லாமல் நமக்கு றூகு இருக்கின்றதென்பதற்கும் அது அழியாதென்பதற்கும் அத்தாட்சிகள். ... ... | 4 |
| றூகு சரீரத்திற்கு வரக்காரணம் ... ... ... | 9 |
| றூகின் முதலாம் பிறப்பு ... ... ... | ,, |
| இரண்டாம் பிறப்பு ... ... ... ... | ,, |
| றூகுக்கும் சடப்பொருளுக்குமுள்ள வித்தியாசமும் அவைகளின் மூலப்பொருள்களும் ... ... ... ... | 10 |
| றூகின் மூன்றும் பிறப்பு ... ... ... | 12 |
| கியாலென்பதின் பொருள் ... ... ... | ,, |
| றூகு கபுறில் சரீரத்தைச் சேர்தல் ... ... | 13 |
| றூகின் நாலாவது பிறப்பு ... ... ... | ,, |
| கல்பு ... ... ... ... ... | 14 |
| அரூபமானபொருளை ரூபமான பொருளைப்போல் பேசப்படுகிறது | 15 |
| மறைவான ஆலங்கள் ... ... ... | 17 |
| ஆலமிதால் ... ... ... ... | ,, |
| ஆலமிதால் வெளியாகிற விதம் ... ... ... | 18 |
| யோக அப்பியாசமில்லாதவர்களுக்கு ஆலமிதால வெளியாகிற விதங்கள் ... ... ... ... ... | 19 |
| பிறப்பிலே சூக்ஷம சரீரத்தின் பார்வை கூர்மையாயிருப்பவர்கள் | ,, |
| பிறர் மனத்திலிருப்பவைகளைச் சொல்லுதல் ... | 20 |
| தல்ஸமா அல்லது வசியம் ... ... ... | 21 |
| ஒருவன் தன்னிஷ்டப்படி பிறரை நடக்கச்செய்யும் வசியம் | ,, |
| அரைவிழிப்பென்கிற வசியம் ... ... ... | ,, |
| காந்த உறக்க மென்கிற வசியம் ... ... ... | 22 |
| விழித்தவர்கள்போல் சகலதும்செய்து மயக்கந்தெளிய ஒன்றும் தெரியாதிருக்கிற வசியம் ... ... ... | ,, |
| நோயாளிகளைச் சேர்ந்த வசியம் ... ... | ,, |
| மயக்கிறவன் திட்டப்படுத்திய நாளையில் குறித்த வேலையைச் செய்யாமலிருக்கக் கூடாத வசியம் ... ... ... | ,, |
| மவுத்தான அறுவாகுகளை வரவழைக்குதல் ... ... | 23 |
| மெஸ்மரிஸம் என்கிற வித்தையின் அதிசயம் ... | 24 |
| இந்த வித்தைகளும் வசியங்களும் பழகும் முறை ... | 25 |

பக்கம்

நோயைக்கொண்டு சில தருணங்களில் ஆலமிதால் வெளியாகிற விதம் ... ... ... ... ... 26
சொப்பனத்தில் ஆலமிதால் தோற்றப்படுதல் ... ,,
மந்திரம் சூனியம் இந்திர ஜாலம் ... ... 27
சீமியா, சிஹ்று, ஹீமியா, ரீமியா வாசிலாத்துகள் சித்திகள் 29
முஸ்லிம்களல்லாத முஹக்கிக்கீன்களுக்கு சலாமத்துண்டா இல்லையா ... ... ... ... 30
சித்திகள் ... ... ... ... 31
பிசாசியும் ஜின்னும் ... ... ... 32
ஷரீயத்து ... ... ... ... ... 35
சுலூக்கு ... ... ... ... ... 36
நப்சு அம்மாரு ... ... ... 37
நப்சு அம்மாருவை யொடுக்கிறதற்குச் செய்யவேண்டிய அமல்கள் 38
தொழுகை முதலிய அமல்களால் பலன் தெரியாதிருப்பதற்குக் காரணம் ... ... ... ... ... 41
தொழவேண்டிய முறை ... ... ... ,,
ஸக்காத்தும் சதக்காவும் கொடுக்கவேண்டிய முறை ... 43
நேரம் பின்ஷர்த்துகள் ... ... ... 44
ஹஜ்ஜியின் அஸ்ருறு ... ... ... 45
துன்யா ... ... ... ... ... 46
துன்யாவின் பராக்கில் வழிகெட்டுப்போன சில கூட்டங்கள் 48
விவாகத்தினுலுள்ள பலன்களும் தீமைகளும் ... 50
தவ்பாவின் உள்ளமை ... ... ... 53
நப்சுல்லவ்வாமா ... ... ... ... 57
தீனக்குறைத்தல் ... ... ... 58
விழிப்பை யதிகப் படுத்துதல் ... ... 60
பேச்சைக் குறைதல் ... ... ... 60
துன்யாவைத் தள்ளுதல் ... ... ... ,,
இஃலாஸ் சுத்தம் ... ... ... ... 62
மருட்டப்பட்டிருக்கிற பலகூட்டங்கள் ... ... ,,
ரிய்யா-பிறர்மெச்ச வணக்கஞ் செய்கிறவர்களின் பலபிரிவுகள் 64
சபூர் ... ... ... ... ... 67
சுக்று ... ... ... ... ... 69
மஃரிபா ... ... ... ... ... 71
மஃரிபாவின் ஏழுபிரிவுகள் ... ... ... 72
வுஜூதுடைய மறுத்தபாக்கள் ... ... ,,
ஹக்குத்தாலாவை கல்கைவிட்டும் வேருக்கிற தவருனவிசுவாசம் 73
கல்கும் ஹக்கும் ஒன்றென்பதால் நாமும் ஹக்கென்கிற தவருன

| | பக்கம் |
|---|---|
| விசுவாசம் | 76 |
| ஹாலுல் இத்திஹாதென்கிற தவறான விசுவாசங்கள் | 78 |
| ஹிந்து ஞானத்திற்கும் நமது ஞானத்திற்குமுள்ள வித்தியாசம் | 79 |
| தன்ஸீஹும் தஷ்பீஹும் | ,, |
| மறுத்தபாக்கள் வுஜூது | 80 |
| அஹ்தியத்து | 83 |
| வஹ்தத்து | 84 |
| இசுமும் ஸிபாத்தும் | ,, |
| வாஹிதிய்யத்து | 86 |
| ஆலம்கியாலென்பதின் விளக்கம் | 88 |
| ஆலங்கள் படைக்கப்பட்ட விதம் | 93 |
| அமா | 94 |
| மலாயிக்கத்துல் முஹைய்மா | 95 |
| படைப்புகளைப் படைத்த ஒழுங்கு | 96 |
| வானசாஸ்திரமும் ஆரிபீன்கள் சொல்லியிருப்பவைகளும் | 98 |
| பூமியும் பூதங்களும் | ,, |
| முதலாம் வானமும் சந்திரனும் | 104 |
| இரண்டாம் வானமும் புதனும் | 103 |
| மூன்றாம் வானமும் சுக்கிரனும் | 105 |
| நாலாம் வானமும் சூரியனும் | 107 |
| ஐந்தாம் வானமும் செவ்வாயும் | ,, |
| ஆறாம் வானமும் பிரகஸ்பதியும் | 108 |
| ஏழாம் வானமும் சனியும் | 110 |
| நக்ஷத்திர மண்டலம் | 111 |
| இராஷிகள் புறாஜ் | 112 |
| சொர்க்க லோகங்களும் அதலஸ் மண்டலமும் | 115 |
| குர்ஸி | 116 |
| கிரகங்களாலுண்டாகிற இராகம் | 117 |
| தவ்ஹீது | 119 |
| லாயிலாஹ இல்லல்லாவென்று சொல்லுவதில் நாலு மறுத்தபாக்கள் | 120 |
| தவக்கலின் பிரிவுகள் | 121 |
| முரீதுக்கும் விருக்ஷத்திற்கும் தவ்ஹீதைப்பற்றிய சம்பாஷணை | 122 |
| ஆபிதுக்கும் முரீதுக்கும் தவ்ஹீதைப்பற்றிய சம்பாஷணை | 129 |
| அல்லாவின்மீது அன்பு | 134 |
| இஷ்கு ஆசை | 137 |
| அல்லாவுடனே மருவுதலாயிருக்கிறது | ,, |
| ரிளா | 136 |
| முறாக்கிபா | 139 |

| | பக்கம் |
|---|---|
| இக்று சித்தம் சித்தி வாசிலாத்து ... ... | 140 |
| அஷ்டாங்க யோகம் ... ... ... | 143 |
| நாற்பது தரீக்குகள் ... ... ... | 145 |
| எந்தத் தரீக்குமேலென்பதற்கு மறுமொழி ... | 148 |
| முஹமயின்னூருளிய்யா மறுளிய்யா காமிலாவும் ஆபிதுடைய சரித்திரம் ... ... ... ... | 148 |
| வியாபாரியின் சரித்திரம் ... ... ... | 153 |
| சாலிக்கீன்கள் கொள்ளவேண்டிய குணங்கள் ... | 159 |
| அல்லாஹ் என்கிற இஸ்மை உச்சரிக்கும் விதம் ... | „ |
| இக்ரின் பிரிவுகள் ... ... ... | 160 |
| இக்றுசெய்யும் முறையும் இருப்பு தரிப்புகளும் ... | 161 |
| இக்று கல்பீ ... ... ... | „ |
| சில்லாயிருக்கிற தலமும் ஒழுங்கும் ... ... | 164 |
| ஷைத்தானிய்யா நப்ஸானிய்யா மலக்கானிய்யா றப்பானிய்யா ஆகியவைகளின் வித்தியாசங்கள் ... ... | „ |
| சொப்பனம் .. ... ... ... | 165 |
| சாலிக்கீன்களுக்கு தோற்றுகிற தோற்றங்கள் ... | 167 |
| வஹீ இல்ஹாம் இல்முல்லதுன்னீறூயா ஆகியவைகள் | 169 |
| முகாஷபா ... ... ... ... | 170 |
| சாலிக்கீன்கள் ... ... ... | 173 |
| ஆலம் ஷஹாதாவைச்சேர்ந்த கஷ்புகள் ... | 174 |
| அஸ்மாக்களின் தஜல்லியாத்து ... ... | 175 |
| சிபத்துகளின் தஜல்லியாத்து ... ... | „ |
| அவுலியாக்காளுடைய புதுமையான பூமியின் செய்தி | 179 |
| கறுமாத்து ... ... ... | 182 |
| ஆலம் ஜபறூத்துக்குரிய அறுவாகுகள் ... | 185 |
| அக்கிலில் அவ்வல் ... ... ... | „ |
| லவ்ஹுல் மகுபூள் ... ... ... | „ |
| ஹயூலா ... ... ... | 186 |
| பல சாஸ்திரமும் கல்லாமல் மஃரிபாவுடைய இல்மை நன்றாய் விளங்கக் கூடாதென்பது ... ... | 187 |
| அவாம்கள், ஹாஹிறுடைய இல்முடையவர்கள், ஹுக்கமாக்கள், முன்ஜ்ஜிமீன்கள், மூஹக்கிக்கீன்கள், ஆகியவர்களின் இல்முகளின் வித்தியாசங்கள் ... ... | 190 |
| இந்த இல்முகளை அச்சிட்டு வெளியாக்கிறதனல் உலமாக்களாலும், செய்குமார்களாலும், தொந்தரவுகளுண்டாகுமோவென்று செய்கும், முரீதும, யோசித்தல் ... ... | 192 |
| குத்புமார்களும், அவுலியாக்களும், அவர்களின் பிரிவுகளும | 193 |
| அக்மலுலஷ் சுஹுது ... ... ... | 196 |
| இந்த கித்தாபைக் கோர்வை செய்யக் காரணம் | 198 |
| துஆ ... ... ... ... | 199 |

## பிஸ்மில்லாஹிற் றகுமா னிற்றஹீம்.

புகழெல்லாம் ஒருவனுக்கே. புகழுமவனைப், புகழ்பவனுமவனைப்புகழப் படுபவனு மவனையிருக்கின்ற பரிபூரணன். உவமையைக் கொண்டறிந்து ஒப்புவமைக் கெட்டாத பரிசுத்தன். அல்லாவெனுந் திருநாமத்தை யுடையவன். ஸலவாத்தும் சலாமும் அவனின் திருத்தூதராகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மீதும், அவர்க ளுறவினர்கள் நேசர்கள் சகலர்மீது முண்டாவதாக! ஆமீன்.

இந்தத் தேசங்களில் தமிழ்ப்பாஷையில் ஞான அறிவுகளைத் துலக்கமாகவும், யோகவிதிகளைத் தெளிவாகவும் விளக்கிய கித்தாபுகளரிதாயிருப்பதால், சொற்ப அறிவையுடையவனும் பாவத்தில் மூழ்கினவனும் சித்தீக்கின் மகன் முகம்மது காசிமென்ற நாம முடையவனுமாகிய நான் மிகவும் பிரயாசப்பட்டு ஆரிபீன்களின் சுல்தான்களாகிய முகியித்தீனிபுனு அறபிறளியல்லாகு அன்கு அவர்களுடைய புகூசுல்ஹிக்கம், [illegible]ஹாத்துல் மக்கிய்யா, இமாம் கஸ்ஸாலி றகுமதுள்ளா அவர்களுடைய எஹியா உலூமித்தீன், அப்துல் கரீமுல்ஜீலி றளியல்லாகு அன்கு அவர்களுடைய இன்ஸான்காமில், [illegible]துல் வஹ்ஹாபு ஷஉறானி றளியல்லாகு அன்கு அவர்களுடைய யவாக்கீத்துல் ஜவாஹிர்முதலிய கித்தாபுகளிலுள்ள விலைமதிக்கக் கூடாத இரத்தினங்களைப் பொறுக்கி இந்தக் கித்தாபிற் பதித்திருக்கிறேன். நபிநாயக மவர்களின் அருளாலும் இந்த மஹாத்துமாக்களுடைய பறக்கத்தாலும் அல்லாகுத்தாலாவின் மீது ஆசை கொண்ட எனது இகுவான்களுக்கு இந்தக் கித்தாபு நேர்வழியைக் காட்டுமோர் பந்தவொளியா யிருப்பதற்கு அல்லாகுத்தாலாவிடம் இரந்துநிற்கிறேன்.

வாசிப்பவர்களுக்கு இந்த அறிவுகள் நன்றாய் விளங்கும்பொருட்டு, ஒரு செய்குக்கும் அவர் முரீதுக்கும் நடந்த சம்பாஷணைபோல் எழுதுகிறேன்.

**முரீது**: செய்கைநோக்கி நாயகமே! நபிசல்லல்லாகு அலைஹிவ சல்லம், "தன்னை யறிந்தவன் திட்டமாகத்தன் நாயனை யறிவான்" என்ற திருவசனத்தின் கருத்தென்னை? குறுவானில் "அலிபுலாம்மீம் தாலிக்கல் கித்தாபு லாறைபபீஹி ஹுதன் லில்முத்தக்கீன்" என்று சொல்லிய வாக்கியத்திற்கு அப்துல்கரீமுல்ஜீலி றகுமதுல்லாகு அவர்கள் இன்ஸான் காமிலில் பாத்தின்பொருள் அலிபு லாம்மீம் என்றது இன்சான், தாலிக்

கல் கித்தாபு என்றது அவன் நபுசு, இன்சான் தன் நபுசை யறிந்து பயபக்தியுடையனா யிருந்தால், அது அவனுக்குச் சந்தேகமின்றி நேர்வழிகாட்டுமென்று சொல்லியதின் கருத்தென்ன எனக்குத் தெரியச்சொல்லவேண்டுமென்று கேட்டான்.

## ஹக்கை றாகுக்கு உவமை காட்டுதல்.

செய்கு: அல்லாகுத்தாலாவுக்குப் பத்து விஷயங்களில் நமது றாஹை உவமை காட்டலாம்.

முதலாவது. நமது சரீரத்தில் றாகில்லாமல் ஒன்றும் நடக்கக்கூடாது. ஒவ்வொரு உறுப்பையும் ஒவ்வொரு அங்கத்தையும் றாகு நடத்துகிறது. அந்த றாகு நமது கண்ணுக்குத் தெரியாதுபோனாலும் அதுதான் நடத்துகிறதென்பது நமது புத்திக்கு விளங்குகிறது. றாகில்லாது போனால் சரீரம் செத்தபிணமாயிருக்கும். இதுபோலவே அல்லாகுத்தாலா கண்ணுக்குத் தெரியாதுபோனாலும் அவனே ஆலங்களை யெல்லாம் நடத்துகிறான். நமது சரீரத்துக்கு றாகைக் கொண்டேயன்றி ஒரு உசும்புதலும் ஒரு நினைவும் ஒரு செய்கையு மில்லாதுபோலவே அல்லாகுத்தாலாவைக் கொண்டே யன்றி ஆலங்களில் ஒரு உசும்புதலும் ஒரு தத்துவமு மிராது.

இரண்டாவது. நமது சரீரத்திலுள்ள சகல உறுப்புக்களையும் நடத்துவது ஒரே றாகென்பதற்கு நமக்குச் சந்தேகமில்லாததுபோலவே ஆலங்களையெல்லாம் நடத்துகிறதும் ஆளுகிறதும் ஒரே நாயனென்பதற்குச் சந்தேகமில்லை.

மூன்றாவது. சரீரத்தைக்கொண்டு செய்கிற நன்மை தீமைகளனைத்தும் றாகின் நாட்டத்தைக் கொண்டே நடந்து வருவனபோல் ஆலங்கள் யாவிலும் நடக்கின்ற நன்மை தீமை முதலிய செய்கைகளனைத்தும் அல்லாகுத்தாலாவின் நாட்டத்தைக் கொண்டே நடத்தப்படுகின்றன.

நாலாவது. சரீரத்தில் நடக்கிற காரியங்களனைத்தும் றாகுக்குத் தெரியாதிருக்கக் கூடாது. அதுபோலவே ஆலங்களில் நடக்கிற காரியங்களனைத்தும் அல்லாகுத்தாலாவுக்குத் தெரியாதிருக்கக் கூடாது.

ஐந்தாவது. சரீரத்திற்கு மற்ற வஸ்துக்கள் யாவிலும் றாகு மிகவுஞ் சமீபமா யிருப்பதுபோலவே சகல வஸ்துக்களுக்கும் அல்லாகுத்தாலா மிகவுஞ் சமீபமாயிருக்கிறான்.

ஆறாவது. சரீரமுண்டாகும் முன் றாகு இருந்ததுபோலவே அல்லாகுத்தாலா படைப்புகளைப் படைக்குமுன்னிருந்திருக்கிறான். சரீரம் அழிந்தபின் றாகிருப்பது போலவே, படைப்புகளெல்லா மழிந்தபின் அல்லாகுத்தாலா நித்தியமா யிருப்பான்.

ஏழாவது. சரீரத்தில் எந்த விடத்தில் றாகிருக்கிறதென்று நமக்குத் தெரியாது. அது ஒரு உறுப்பில் அல்லது ஒரு தலத்திற் றங்கியிருப்பதல்ல, அதுபோலவே அல்லாகுத்தாலா இன்ன தலத்தி லிருக்[illegible]னென்று சொல்லக்கூடாது. இட[illegible]ம் தலமும் அவனி லமைந்திருக்கி[illegible]றன. செய்கு அப்துல்காதிறு ஜீல[illegible]னி றளியல்லாகு அன்கு அவ[illegible] அல்லாகுத்தாலா விடம் நாய[illegible]

நீ எந்தத் தலத்திலிருக்கிறு யென்று கேட்க, அல்லாகுத்தாலா கவுதுல் அஉளமே! எனக்கொரு தலமுமில்லை இடமுமில்லை, இடம் தலம் யாவையும் படைத்தவன் நானென்று திருவுளம் பற்றினுன்.

எட்டாவது. நமது றூகு சரீரத்திலிருக்கிறது தெரிந்திருந்தாலும் அது என்ன தன்மையாயிருக்கின்றதென்று நமக்குத் தெரியாதிருக்கிறது. அதுபோலவே அல்லாகுத்தாலா இருக்கிறுனென்பது உறுதியாயிருந்தாலும் அவனென்ன தன்மையிலிருக்கிறுனென்று அறியக்கூடாது.

ஒன்பதாவது. றூகு சரீரத்திலிருக்கும்போது பார்வையைக் கொண்டு காணவுங் கூடாது, வேறொரு பொருளுக்கு ஒப்பிடவுங்கூடாது. அதுபோலவே அல்லாகுத்தாலாவைப் பார்வையைக் கொண்டு காணவுங் கூடாது, ஒரு பொருளுக்கு ஒப்பிடவுங்கூடாது.

பத்தாவது. நமது றூகை பஞ்சேந்திரியங்களா லெட்டக்கூடாது. அதுபோலவே அல்லாகுத்தாலாவைப் பஞ்சேந்திரியங்களால் எட்டவுங் கூடாது. சீருஜி றஹிமகுள்ளாகு அவர்கள் இன்சானை அல்லாகுத்தாலா தன்னுடைய தாத்துக்கும் சிபாத்துக்கும் செயலுக்கும் உதாரணமாகப் படைத்தான். அல்லாகுத்தாலாவுக்கு ஒன்றையும் ஒப்புச்சொல்லக்கூடாதுபோனுலும் உதாரணமானச்சொல்லக்கூடும். இன்சானுடைய தாத்தை மற்ற உயிருள்ள உயிரில்லாத படைப்புகள் எல்லாவற்றையும் விட்டும் வேறு விதமாக்கினுன். அவனின் சொந்த சிபத்துகளாகிய ஹயாத்து, அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை, பேச்சு ஆகிய ஏழு சிபத்துகளையுங் கொடுத்து அவனுடைய தாத்துக்கு உதாரணஞ்சொல்லக் கூடியதாக்கிவிட்டான் என்று சொல்லியிருக்கிறுர்கள். அல்லாகுத்தாலா ஆதம் அலைகிஸ்ஸலாமைத் தன் சூறத்தில் படைத்தானென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் சொல்லிய வசனத்திற்கு, இமாம் கஸ்ஸாலி றகுமகுள்ளாகு சொல்லுகிறுர்கள்; அல்லாகுத்தலாவுடைய சூறத்தென்றது கண்ணுக்குத் தெரியும் ரூபமல்ல, அல்லாகுத்தாலாவுடைய தாத்துக்கும் சிபாத்துக்கும் செயலுக்கும் ஒப்புச்சொல்லக் கூடியதாயிருப்பதால் உதாரணமென்கிற கருத்தாயிருக்கும். றூகாவது கண்டிப்பையுடைய பொருளுமல்ல, கண்ணுக்குத் தோற்றப்படுகிற தோற்றமுமல்ல, பலதுஞ் சேர்ந்து சமைந்த பொருளுமல்ல, சரீரத்தைச் சேர்ந்ததுமல்ல, அதைவிட்டுப் பிரிந்ததுமல்ல, தன்னைக் கொண்டு தான் நிற்கிற பொருளாயிருக்கின்றது. இவைகளெல்லாம் அல்லாகுத்தாலாவுடைய தாத்தின் சிபத்துகளா யிருக்கின்றன. இன்னும் ஹயாத்து, அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை யாகிய சிபத்துகளெல்லாம் அல்லாகுத்தாலாவுக்குரிய சிபத்துகளே; செயலுமிப்படியே. நமது செயல்களெல்லாவற்றுக்கும் தொடக்கம் நாட்டமாயிருக்கும். ஒரு எழுத்து எழுதவேண்டுமென்று நாடினுல் அது கல்பில் வெளியாகி றூகுல் ஹைவானியைக் கொண்டு மூளைக்சேறி தாது நரம்பு வழியாகத் தசை நரம்புகளிற்சென்று பேனையைப் பிடித்துக் காகிதத்தில் அந்தநாட்டம் வெளியாகிறது. அல்

லாகுத்தாலா பூமியிலுள்ள தாவர
வஸ்துகளையும் உயிர்ப்பிராணிகளை
யும் வானலோகத்திலுள்ள சந்திர
சூரிய நக்ஷத்திரங்களின் உசும்புதல்
களையும் தத்துவங்களையுங் கொண்டு
நடத்துகிறான். அவைகளையெல்லாம்
மலாயிக்கத்துகள் நடத்திவருகிறார்
கள். சிறு ஆலமென்கிற நமது சரீ
ரம் பெரிய ஆலத்துக் கொப்பாயி
ருக்கின்றது. இருதயம் அறுசுக்கும்,
மூளை குறுசுக்கும், மலாயித்துகள் பஞ்
சேந்திரியங்களுக்கும், நரம்புகள் சந்
திர சூரிய நக்ஷத்திரங்களுக்கும்,
தசை நரம்புகள் தபீயத்தென்கிற
இயற்கைத் தத்துவத்திற்கும், நமது
கல்பிலுண்டாகிற எண்ணமென்கிற
கஸாணு லௌகுல்மஃபூளுக்கும் ஒப்
பாயிருக்கின்றன. இந்த உதாரண
ங்களை நோட்டமிட்டால் அல்லாகு
த்தாலா ஆதமைத் தன்சூறத்திற்
படைத்தானென்றதின் கருத்து விள
ங்குமென்று செய்கு சொன்னார்.

முரீது: தாங்கள் கிருபை கூர்ந்த
ருளியவைகளெல்லாம் உள்ளத்தில்
அமைத்துக்கொண்டேன். ஆகிலும்
நமக்கு றூகு ஒன்றிருக்கின்றதென்
று சொன்னீர்களே, றூகென்றொன்
றிருப்பதற்கு என்ன அத்தாட்சியிரு
க்கின்றது? 'காபிரீன்களிற் சிலர் நம
க்கு உயிரிருக்கும் வரையில் புத்தியு
ம் அறிவுமிருக்கும், உயிரற்றவுடனே
எல்லாமற்றுப் போகுமென்று சொல்
லுகிறார்களே, சரீரம் அழிந்து போ
கும், றூகு அழியாதென்பதற்கு என்
ன நியாயமிருக்கின்றது? இன்னும்
தாங்கள் பேசும்போது றூகென்கிற
சொல்லையும் நப்சென்கிற சொல்
லையும் பாவித்தீர்கள், இவைகளிர
ண்டு மொன்றா? இவைகளுக்கு வித்
தியாசங்களிருக்கின்றனவா? இவை
களைத் தெளிவுபடுத்த வேண்டு
மென்றான்.

## றூகு இருக்கின்றதென்பதற்கும்
## அழியாதென்பதற்கும்
## அத்தாட்சிகள்.

செய்கு: மகனே! உனது வினாக்
கள் என் மனத்திற்கு மிகவுஞ் சந்
தோஷத்தைக் கொடுக்கின்றது. சி
லர் கித்தாபுகளிலும் புத்தகங்களி
லுமிருப்பவைகளை வாசித்துப் பாட
மிட்டுக்கொண்டும், குருக்கள் சொ
ல்லுவதைக் கேட்டறிந்துகொண்டும்
அறிவு இதுதானென்று நினைத்துக்
கொள்ளுகிறார்கள். அப்படியல்ல;
அவைகளை யெல்லாம் நமது புத்தி
யைக்கொண்டு ஆராய்ந்து சந்தேக
ங்களெல்லாம் நீங்கி தெளிவுபெற்று
நமது கல்பில் துலங்க வேண்டும்.
அதுதான் அறிவு. பாத்தினுடைய
இல்மு மிகவும் வருத்தமானது, இதி
ற் பிரவேசிப்பவர்கள் கீழிருந்து கிர
மம் கிரமமாய் ஒவ்வொரு சொல்லை
யும் ஒவ்வொரு கருத்தையும் தீர
விளங்கி மேலேறவேண்டும். ஆகை
யால் நான் உன்மனம் திருத்தியடை
யத்தக்கதாய் உன் வினாக்களுக்கு
மறுமொழி சொல்லுகிறேன் கேள்.

பூமியிலுள்ள பொருள்களெல்லாம்
நாலு வகையாயிருக்கும். முதலாவ
து அறபில் ஜமாதென்றும், தமிழில்
நிரசவஸ்தென்றுஞ் சொல்லப்படுகிற
மண் கல் போலுள்ளவைகள். இர
ண்டாவது நபாத்து அல்லது த
ரவஸ்து. மூன்றாவது ஹைவா
அல்லது பிராணிகள். நாலாவ
இன்சான் மனிதன். இந்த நாலு
கும்நாலு றூகுகளிருக்கின்றன. ஜமா
துக்கு றூகுல் ஜமாதென்று சொல்

லப்படும். இந்த றூகுக்கு இரண்டு ஸிபத்துகள் அல்லது குணங்களிருக்கின்றன. இவைகளுக்கு ஆரிபீன்கள் திக்காலத்தென்றும், ஸிப்பத்தென்றுஞ் சொல்லுகிறார்கள். திக்காலத்துக்கு பாரமென்கிற பொருள். சாஸ்திரப்படி கரும கருஷணம், இங்கிலீசில் (Gravitation) என்றும், ஸிப்பத்தென்பது இலேசு, சாஸ்திரப்படிக்கு பிண்டிகர கருஷணம், இங்கிலீசில் (Attraction of repulsion) என்றுஞ் சொல்லப்படும். வான சாஸ்திரம் படித்தால் இந்தத் தத்துவங்கள் விளங்கும்.

இரண்டாவது. றூகுல் நபாத்து இதற்கு வளரச்செய்யும் தத்துவமிருக்கின்றது. இதற்கு ஏழு தத்துவங்களிருக்கின்றன. முதலாவது ஜாதிபா, வெளியேயுள்ள உணவுகளை யுள்ளே யெடுக்கும் தத்துவம். இரண்டாவது மாஸிக்கா, உள்ளே சென்றது வெளியே வராமல் பிடித்துக்கொள்ளும் தத்துவம். மூன்றாவது ஹாளிமா, ஜீரணிக்கச்செய்யுந் தத்துவம். நாலாவது முமய்யிஸா, ஜீரணமாகிறதைக் கூறாக்கிப் பல உறுப்புகளுக்கும் செலுத்துந் தத்துவம். ஐந்தாவது முஸவ்விரா அவைகளைப் பல நிறங்களாய்ச் செய்யுந் தத்துவம். ஆறாவது தாபிஆ தேவையற்றவைகளை வெளியே தள்ளும் தத்துவம். ஏழாவது முவல்லிதா பலுகச் செய்யுந் தத்துவம். இந்த ஏழும் தாவரவஸ்துக்குரிய தத்துவங்கள். மூன்றாவது றூஹுல் ஹைவானி, இது உயிர்ப்பிராணிகளுடைய றூகு. இதற்குப் பிரதானமான தத்துவம் ஷகுவத்து, அதாவது தனக்கு இன்பத்தைக் கொடுப்பவைகளில் விருப்பம். இரண்டாவது அகங்காரம் பிறரை மேவிடும் குணமும் தனக்குண்டாகும் விரோதங்களுக்காக எதிர்செய்யுங் குணமுமாயிருக்கும். இந்த றூகுல் ஹைவானி நமது இருதயத்திலிருக்கிற குழியிலிருந்து புகைபோல் வெளியாகி நரம்பு வழியாகச் சரீர முழுவதும் பரந்து ஹயாத்தைக் கொடுக்கும். அது விளக்கைப் போன்றிருக்கும். விளக்கு வீட்டின் மத்தியிலிருந்து பிரகாசித்து வீட்டின் பற்பல கோணங்களுக்கும் ஒளி கொடுப்பதுபோல், ஹயாத்தென்ற ஒளியையும் பார்வை கேள்விமுதலிய தத்துவங்களையுங் கொடுக்கும். இம்மூன்று றூகுகளும் சரீரமுமிருந்தால் நாம் மிருகங்களிலோர் மிருகமாயிருப்போம்.

நாலாவது. றூகுல்இன்சானி பகுத்தறிவு யோசனை முதலிய குணங்களெல்லாம் இந்த றூகுக் குரியவைகள். நாலும் ஐந்தும் இத்தனை யென்றும், ஐந்தில் இரண்டைக் கழித்தால் இத்தனையென்றும், மிருகங்களுக்குக் கணிக்கக் கூடுமோ? கூடாது. இந்த றூகு நமது சரீரத்தை யடுத்திருக்கும் வரைக்கும் நபுசுன்னாத்திக்கா வென்றும், சுருக்கமாகப் பேசும்போது நபுசென்றுஞ் சொல்லப்படும்.

நானிப்பொழுது சொல்வதை விளங்குகிறதும் யோசிக்கிறதும் உன்னபுசே; நினைக்கிறதும் அல்லாகுத்தாலாவை அறிய விரும்புகிறதும் அந்த நபுசே. அந்த நபுசுதான் நீ! இதைத் திறமாய்ப் பிடித்துக்கொள், சரீரம் உனது வீடு, உன் வீட்டையும் உன்னையும் ஒன்றாய்ச்சேர்த்து நீஎன்று நினைத்திராதே. கோபமும் மோகமும் இச்சைகளும் றூகு ஹவானி

யின் குணமென்பதையும், பசி தாகம் உறக்கம் முதலியவைகளுனது தபீயத்தல்லது இயற்கையின் குணமென்பதையும் விளங்கிக்கொள். உன் சரீரம் இந்த ஆலத்துக்குடையது; நீ மறைவான ஆலத்துக்குடையவன்; நீ இந்த ஆலத்தில் சொற்ப காலத்திற்குச் சிலகருமங்களை நிறைவேற்றிக்கொள்ள இந்த சரீரத்திற் பரதேசியாயிருக்கிறாய். நீயோ அரூபி, உன்னை ஒருவருக்கும் காணக்கூடாது. நீ சரீரத்திலிருந்து உறுப்புகளை யசும்பச் செய்கிறதும், கண்ணைக்கொண்டு பார்க்கச் செய்கிறதும், நாவைக்கொண்டு பேசச்செய்கிறதும் தெரிந்து, நீ யுள்ளே யிருக்கிறாயென்று நினைக்கப்படுகிறது. நீ மறைவான ஆலத்தைச் சேர்ந்தவன், உள்ளமையிலெப்பொழுதும் நீ மறைவான ஆலத்திலேதா னிருக்கிறாய். ஆகிலும் நீ இந்த சரீரத்தைக் கொழுகியிருப்பதால் இந்த ஆலத்தைச் சேர்ந்தவனாகவு மிருக்கிறாய், நீ இந்தச்சரீரத்தை விட்டு நீங்கினால் இந்தச் சரீரத்திற்கு உனது மையித்தென்று சொல்லப்படும். உனக்கழிவில்லை; உன் சரீரத்திற்கே அழிவு. இதை எவ்வேளையும் நினைத்துவந்தால் உன் சரீரம் உன்னைவிட்டும் வேறாகக் காண்பாய், மறுபெயர்களையும் அவ்விதமே சரீரத்தைவிட்டும் நீக்கிக்காண்பாய். ஆகிலும் இது புத்திக்கு விளங்கினாலும் எவ்வேளையும் உனது மனத்திற் றறிபடாது. சுலூக்குடைய பாதைக்கு இந்த அறிவு மிகவும் உதவியாயிருக்கும். சுகூதில் முதலாவது தெண்டிக்கிறது இந்தக்கண்டிப்புடைய ஆலத்தின் திரையை நீக்குதற்கே. இந்தத் திரை நீங்கினால் ஆலத்தில் கண்டிப்பான வைகளெல்லாம் சரீரமுள்பட அற்றுப்போனது போலாகும். அப்பொழுது நீயும் கண்டிப்பற்ற விதமாய்க் கண்டிப்பற்ற ஆலத்தி லிருக்கிறது போலிருக்கும். இன்சானென்பதும் நான் நீ என்று சொல்வதும் இந்த நபுசுக்கென்பதைத் தீர்க்கமாய் விளங்கிக்கொள்வது அவசியம். இந்த நபுசைக் குறித்துத்தான் அல்லாகுத்தாலா குருவானில் இன்சானை உயர்த்தியான தன்மையாய்ப் படைத்தேனென்று சொல்லியிருப்பதும், அந்த நபுசு சரீரத்திற்கு வந்ததைக் குறித்துத்தான் குறித்த ஆயத்திலே பின்பு கீழ்மையிலு மதிகக் கீழ்மையாக்கினேனென்று சொல்லியதுமே. இவவிதஞ் சரீரத்தைக் கீழ்மையாக அல்லாகுத்தாலா சொல்லி யிருப்பதைக்குறித்துப் பின்னால் பேசுவேன்.

இரண்டாவது. சரீரம் அழியுமென்றும் றூகு அழியாதென்றுஞ்சொல்லுதற்கு என்ன நியாய மிருக்கின்றதென்று கேட்டாய், அறிந்துகொள்; இறக்கிற தென்பதும் அழிகிற தென்பதும் ரூபம் அற்றுப்போகிறதேயன்றி அந்த ரூபமாய்ச் சமைந்த பொருள்களொன்றும் அற்றுப்போகிறதுமில்லை, இல்லாமற் போகிறதுமில்லை. நமது சரீரம் மண் தண்ணீர் காற்று நெருப்பு ஆகிய அனாசிறல்லது பூதங்களைக்கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றது. மவுத்தைக்கொண்டு றூகு பிரிந்தால் அச்சரீரத்தின் ரூபம் குலைந்து மண் மண்ணோடும், தண்ணீர் தண்ணீரோடும், காற்றுக் காற்றோடும், நெருப்பு நெருப்போடுஞ் சேர்ந்துவிடும். இதுபோலவே அல்லாகுத்தாலா படைத்த படைப்புகளின் மூலப்பொரு ளற்றுப்போகிறதுமில்லை, குறைகிறதுமில்லை, அ

திகமாகிறதுமில்லை, தண்ணீர் வற்றி ஆவியாய்க் காணுமற்போனால் அந்த நீர் அற்றுப்போய்விட்டதென்று நினைத்து விடாதே. அது ஆவியாய் ஆகாயத்திற்சென்று மேகமாகித் தண்ணீராய்த் திரும்பப் பூமியில் விழும். நீ குடிக்கிற தண்ணீரற்றுப் போகிறதென்று நினையாதே. அது சரீரத்திற்குச் சென்றபின் மலமாகவுஞ் சலமாகவும் வெயர்வையாகவும் வெளியாகித் திரும்பவும் தண்ணீராகிவிடும். இவ்விதம் ரூப மழிகிறதேயன்றி ஒரு அநுப்பிரமாணமாகுதல் கூடுகிறதுமில்லை, குறைகிறதுமில்லை. இதை நன்றாய் விளங்கி மனதிற் றரிபடுத்திக்கொள்.

இன்னும் நீ சுஷுக்குடைய பாதையிற்சென்று மறைவான ஆலங்கள் வெளியானல், உன் வாயால் வெளியாகிற பேச்செல்லாம் ரூபங்களுடையவைகளாகவும், எண்ணும் எண்ணங்களெல்லாம் ரூபங்களுடையவைகளாகவும் காண்பாய். ஆனால் இந்த ரூபங்கள் எங்கள் வெளிக்கண்ணுக்குத் தோற்றமாட்டாது, அணுசிர்களைக்கொண் டுண்டானவைகளுமல்ல. இதைப்பற்றி சூக்ஷ்ம சரீரத்தைக்குறித்துப் பின்னால் உனக்குச்சொல்லும்பொழுது தெளிவுபடுத்துவேன். இன்னும் உனக்கு ஞானக்கண் திறக்கப்படும்வரையும் அந்தக்கண் திறக்கப்பட்ட ஆரிபீன்கள் சொல்வதை விசுவாசித்துக் கொள். அதாவது ஆலத்தில் ஒன்றும் அற்றுப்போகிறதில்லை, ரூபம் பேதகப்படுகிறதேயன்றி, அப்படிப் பேதகப்படுவதும் பலபொருள் சேர்ந்து சமைந்த வஸ்துகளின் கட்டுக்குலைந்து மூலப்பொருள்கள் பிரிந்துபோவது மட்டுமாயிருக்கும். இவ்விதம் ஆலத்திலுள்ள வஸ்துக்களிலொன்றும் அழிந்து அற்றுப் போகாதிருக்க, நமது ரூஹுமட்டும் அழிந்து அற்றுப்போகுமென்று நினைப்பதற்கு என்னவிட மிருக்கின்றது. நமது சரீரத்தையும் ரூஹையும் ஒப்பிட்டுப் பார்த்தால் சரீரம் ரூஹில்லாதுபோனால் செத்த பிணமாயிருக்கும். சரீரத்தின் உறுப்புகளெல்லாம் ரூஹின் ஆயுதங்களாயிருக்கும். சகல தத்துவங்களும் அறிவு புத்திசகலதும் ரூஹுக்கே யுரியனவாயிருக்க, அது அற்றுப்போகு மென்று சொல்லலாமா? இன்னும் நான் சொல்லியபடி இறக்கிறதென்பது பலபொருள்கள் சேர்ந்த சமையல் குலைந்து அப்பொருள்கள் வெவ்வேறாகுதல். ரூஹோ பல பொருள்கள் சேர்ந்து சமையாமல் தனிமையான பொருளாயிருப்பதால் அது பிரிய அல்லது அழிய வழியில்லை. இன்னுமொரு அத்தாட்சி சொல்லுகிறேன். நமது சரீரத்திலுள்ளவைகள் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைகிறதும், மலம் சலம் வெயர்வை ஆவி முதலியவைகளாய் வெளியாகிறதும், அதற்குப் பதலாய் ஆகாரத்தைக்கொண்டு புது இரத்தமும் சதையும் அந்தக் குறைவுகளை நிறைக்கிறதுமாய் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணிநேரமும் ஒவ்வொரு நொடியும் நமது சரீரம் பேதகப்படுகிறதாயு மிருக்கின்றது. நீ இன்று என்னிடம்வந்த நேரத்திலிருந்த சரீரம் இப்போது உனக்கில்லை, அதில் பேதகங்கள் ஒவ்வொரு உறுப்பிலும் உண்டாகியிருக்கின்றன. வைத்திய சாஸ்திரத்திற் றேர்ச்சியுடையவர்கள் நமது சரீரத்தில் ஐந்து வருஷத்துக்குமுன் னிருந்தவைகளெல்லாம் கிரமம் கிரமமாய்க் கரைந்து முன்னிருந்தவைக ளொன்றுமி

விடுகின்ற
ல்லாமல் புதுச்சரீரமாகி விடுகின்ற
தென்று சொல்லுகிருர்கள். நமது
றூகு சரீரத்தைச் சேர்ந்ததா யிருந்
தால் அதுவும் ஐந்து வருடத்திற்
புது றூஹாகி விடவேண்டுமே, ஞா
பகமானது றூகின் ஓர் தத்துவமாயி
ருக்கும். நாற்பது ஐம்பது வருடங்
களுக்கு முன் நடந்த காரியங்களும்,
கற்ற கல்விகளும் இப்பொழுது ஞா
பகத்தில் வருவதால் யாதொரு பே
தகமின்றி நாற்பது ஐம்பது வருட
ங்களுக்கு முன்னிருந்த றூகுதான்
இப்பொழுது மிருக்கின்ற தென்பது
அத்தாட்சி யாகிறது. சரீரத்தை
யும் மனத்தையும் ஒப்பிட்டுப்பார்.
சரீரத்திலிடமிருக்கிறமட்டுக்கு சொ
ற்ப வஸ்துக்களை யுள்ளேகொள்ளும்,
மனமென்கிற கஸாணுவி லமைந்தி
ருக்கிறவைகளுக்கு மட்டுத்திட்டமி
ல்லை. நமது மனம் ஆலம்கள் முழு
வதையும் எண்ணத்தைக் கொண்டு
வளைந்துகொள்ள சக்தியுடையதாயி
ருக்கின்றது. நினைத்தபொழுது வா
னலோகமெல்லாம் எண்ணத்தைக்
கொண்டு சுற்றிவரவும் அவைகளை
மட்டுப்படுத்தவுங் கூடிய வல்லமை
யுடையதா யிருக்கின்றது. ஒரு அறி
வாளியின் மனத்தை நோட்டமிட்
டுப்பார்ப்போம், அவர் சிறுபிராயம்
முதல் வாசித்தறிந்த இல்முகளையும்
யோசித்து விளங்கிய அறிவுகளையும்
நூற்றுக்கணக்கான புத்தகங்களிலெ
ழுதினுலும் எழுதிமுடிக்கக் கூடாத
வைகளாயிருக்க, இவைகளெல்லாம்
எங்கிருக்கின்றன; மூளையிலா? மூளை
சொற்பகாலத்திற் கரைந்து புதுமூ
ளை யுண்டாகி விடுகின்றது. அது
மனமென்கிற கஸாணுவி லமைந்து
தேவையானபோது தேவையான
வைகள் ஞாபகத்திற்கு வருகின்றன.
சாமார்த்தியமுடைய ஓர் பிரசங்கி
எழும்பிப் பேசும்பொழுது பற்பல
காலத்திலும் வாசித்த அறிவுகளும்
நினைத்த எண்ணங்களு மொருநொ
டியிற் கருத்திற்கு வருவதையும், அ
வைகளை இணக்கமாய்க் கோர்த்து
மதுரமான சொற்களாலும் அலங்
காரமான வசனங்களாலும் அலங்க
ரித்து வாயினுற் சொரிவதையும்
நோட்டமிட்டால், அந்த மனத்தின்
வல்லமைக் கென்ன சொல்லலாம்?
ஆனுல் கல்பின் இருள்நீங்கி அல்
லாகுத் தாலாவின் தஜல்லியாத்தி
ஞெளி பிரகாசித்து ஆலங்களின்
அஸ்ருறுகளும் அல்லாகுத்தாலாவி
ன் தரிசனையின் ஆனந்தமும் பெற்ற
அவுலியாக்களின் நபுசின் மேன்மை
க்கு அந்தப் பிரசங்கியின் மனத்தி
ன் வல்லமையை யொப்பிடலாமா?
இந்த அவுலியாக்களின் மறுத்தபா
வைக் குறித்துத்தான் செய்கு அப்து
ல்காதிறு ஜீலானி யவர்களிடம் அ
ல்லாகுத்தாலா கவுதுல் அஉளமே!
மலாயிக்கத்துகளை இன்சானுடைய
ஒளிவைக்கொண்டு படைத்தேன்,
இன்சானை என்னுடைய ஒளிவைக்
கொண்டு படைத்தேன். இன்சான்
என்னுடைய சிர்ருகவிருக்கும். இ
ன்னும் கஉதுல் அஉளமே! இன்சா
ன் என்னிடத்தே யிருக்கின்ற பதவி
யை யறிவானேயானுல், நானே இரா
ஜாக்களுக்கெல்லா மிராஜன், எனக்
கல்லாது இராஜாங்கம் வேருெருவ
ருக்கில்லையெனச் சொல்வானென்று
திருவுளம்பற்றினுனென்று செய்கு
சொன்னுர்.

ஆகையால் றூகு சரீரத்தைப்போ
ல் பேதகமாக அல்லது அழியக்கூ
டாதென்றும், அது சரீரத்தைச்சே
ர்ந்த தல்லவென்றும் தெளிவா யத்
தாட்சிப்படுகின்றது.

முரீது, எனது உயிர்ப் பிதாவே ! தாங்கள் சொல்லிய அத்தாட்சிகளா ல் றூகு உயர்த்தியானதென்றும் மிக வும் வல்லமை யுடையதென்றும், அதுதான் இன்சானென்றும் என் மனத்திற்கு உறுதியாகிவிட்டது. இ னிமேலந்த றூகுதான் நானென்றும், இந்தச் சரீரம் ஊத்தையும் நாற்ற முமுள்ள வீடென்றும் உறுதியாக்கி க்கொள்ளுகிறேன், ஆனால் தேவரீர் கிருபைகூர்ந்து றூகு சரீரத்திற்கு வருமுன் எங்கிருந்தது ? அது எவ் விதம் படைக்கப்பட்டது ? அது இந் தக் கீழ்மையான சரீரத்திற்கு வரவே ண்டிய காரணமென்னவென்று எ னக்குத் தெரியச் சொல்லவேண்டும்.

## றூகு சரீரத்திற்கு வரக் காரணம்.

செய்கு அறிந்துகொள்; றூகுக்கு நாலு பிறப்புகளிருக்கின்றன. இ வைகளை விபரித்துச் சொல்லுகி றேன்.

## றூகுடைய முதலாம் பிறப்பு.

அல்லாகுத்தஆலா தொடக்கமாக நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மு டைய றூகைப் படைத்தான், அவ ர்களுடைய றூகில் நின்றும் மற்றும் அறுவாகுகளைப் படைத்தான். முகி யித்தினிபுனு அறபி றளியல்லாகு அ ன்கு அவர்கள் றூகுக்கு தன்னையு ம் தன்னைப் படைத்தவனையுந் தெரி ந்ததாயும், மற்றுந் தன்னைவிட்டு வெளியே யுள்ளவைகளைப்பற்றி உ ணர்வு அறிவு யாதொன்று மில்லா ததாயும், அல்லாகுத்தஆலாவை திக் று செய்துகொண்டிருந்தது. பின்பு அல்லாகுத்தஆலா தன் நாயகத்தன த்தைக்குறித்து வாக்கெடுத்த நாளை யிலே இஸ்றுபீல் அலைகிஸ்ஸலாமு க்கு சூறூதும்படி கட்டளை கொடுத் தான் அவர்களூதினார்கள்; உடனே றூகுகளெல்லாம் பயந்து புலம்பிக் கொண்டு வந்து கூடின. அல்லாகு த்தஆலா அந்த அறுவாகுகளை நோ க்கி நானுங்கள் நாயகனல்லவா வென் று கேட்க; அந்த அறுவாகுகளில் சீதேவிகளான அறுவாகுகள் மன மகிழ்ச்சி பொங்கி ஆமென்று வாக் குறுதி கூறின. மூதேவியானவைக ளோ மனவருத்தங் கொண்டவைக ளாகவும், வெறுப்புக் கொண்டவை களாகவும் உத்தாரங் கொடுத்துவிட் டு, தேனீக் கூட்டுக்குப் புகைபிடித் தா லெவ்விதமோ அவ்விதங் கலைந் து பறந்துவிட்டன. அவ்வேளையிற் றுன் முஉமின்களாகவுங் காபிரீன் களாகவும் பிரிவுண்டானது. துன் யாவில் காபிர்களாகவும், முஸ்லிம் களாகவும் பிறப்பதற்குக்காரணமிது வே. அறுவாகுகளுக்கு அதற்குமுன் சூறத்துகளில்லை, அந்த மீதாக்குடை ய நாளையிலேதான் சூறத்துண்டாயி ற்று. நமக்குப் பஞ்சேந்திரியங்களை க்கொண் டுண்டாகிற உணர்வும் அறி வும்போல, அந்த ஆலத்துக்குத் தக் க அறிவு முணர்வுமுண்டாகும் சூற த்துடையதாயிருந்தது. பின்பு துன் யாவில் தாயுடைய வயிற்றில் சரீர ம் நாலுமாதம் பிராயமாயிருக்கும் போது றூகு சரீரத்திற்கு வந்தது.

## இரண்டாம் பிறப்பு.

சரீரம், மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய அனாசிறல்லது பூதங் களைக்கொண் டுண்டாயிருக்கின்றது. அனாசிறல்லது பூதமென்பது அஸ் லிய்யத்தான அல்லது மூலப்பொரு ள். இந்த மூலப்பொருளா லுண்டா ன தாவரவஸ்து மாமிசம் முதலிய

வைகளால் சரீரம் சமையப்பட்டிருக்கின்றது. ஆலத்தில் பஞ்சேந்திரியத்துக்கு அல்லது பூதக்கண்ணாடிக்குத் தோற்றப்படுகிற சகல வஸ்துக்களுக்கும் சடப்பொருளென்று சொல்லப்படும். சடப்பொருளெவ்வளவு சிறிதாயிருந்தாலும் நீழம் அகலம் கனமுடையதாயிருக்கும். சடப்பொருளிருப்பதற்கு இடந்தேவை. இன்னமும் சடப்பொருள் பிரிக்கப்படவும் கூறுக்கப்படவுங் கூடியதாயிருக்கின்றது. இதை நன்றாய் விளங்கிக்கொண்டால் றூகுக்கும் அல்லாகுத்த ஆலாவுக்கும் சடப்பொருளுக்குமுள்ள வித்தியாசம் விளங்கும். சடப்பொருளிருப்பதற்கு இடம் வேண்டும்,இட மில்லாம விருக்கக்கூடாது. றூகுக்கோ ஒரு குறிப்பான இடந்தேவையில்லை. றூகைப் பிரிக்கக் கூடாது. அல்லாகுத்த ஆலாவுக்கு இடம்மட்டுமெல்ல காலமுமில்லை. அநேகர் இந்த வித்தியாசத்தை யறியாமல் கல்குகளுக்குரிய சட்டங்களையும் தத்துவங்களையும் தன்மைகளையுங்கொண்டு அல்லாகுத்தஆலாவுடைய உள்ளமைகளையும் தத்துவங்களையும் மட்டுபபடுத்தத் தெண்டித்து மோசம் போகிறார்கள். நானிப்பொழுது சொல்லியிருக்கிற வித்தியாசங்கள் தவ்கீதுடைய இல்மைக் குறித்துப் பேசும்பொழுது அதிகமாய்ப் பேசுவேன். சடப்பொருளினைத்திற்கும் அஸ்லாவது அறபுப் பாஷையில் மாத்தா வென்றும், தமிழ்ப்பாஷையில் அணுவென்றுஞ் சொல்லப்படும். ஆகையால் படைக்கப்பட்டவைகளெல்லா மிரண்டு வகையாயிருக்கும். ஒன்று அணு, மற்றது றூஹு.

மனிதனுடைய சரீரத்திற்குத் தொடக்கம் இந்திரியம். இன்சானுடைய இந்திரியத்தையும் மற்றும் உயிர்ப்பிராணிகளுடைய இந்திரியங்களையும் கூறுக்கிப் பரிசோதித்த வித்துவான்கள் அவைகளுக்கு வித்தியாசமொன்றுந் தெரியவில்லை, மனிதனுடைய இந்திரியத்திற்கும், நாயுடைய விந்துக்கும், பட்சிகளுடைய முட்டைக்கும், பூச்சிகளின் சினைக்குமொரு வித்தியாசமுங் காணப்படவில்லை. எல்லாம் பிராணவாயு, ஜலவாயு, தாக்கியசம், கரிவாயுவாகிய வாயுகளைக்கொண்டே சமைந்திருக்கிறதாய்த் தெரிகின்றன வென்று சொல்லுகிறார்கள். ஆனால் வித்துவான்களுடைய சோதனைகளைக்கொண்டு விளங்கக்கூடா திருந்தாலும் அவைகளுக்கு வித்தியாச மிருக்க வேண்டும். மனிதனின் விந்தைக் கொண்டு மனிதனும், நாயின் விந்தைக்கொண்டு நாயும், பட்சியின்முட்டையைக்கொண்டு பட்சியு முற்பத்தியாகுவதால் வித்தியாசமில்லாதிருக்கக்கூடாது. ஆனால் சாஸ்திரத்திற்கு மட்டுப்படவில்லை. இப்பொழுது இங்கிலாந்தில் கீர்த்திபெற்ற தத்துவசாஸ்திரியாகிய அக்ஸிலீ என்கிற துரை சொல்லுகிறார்; விந்தில் நின்றும் பிராணிகள் சமைகிறதை யறிவதற்கு மிகவுஞ்சிறிய பொருளைப் பருப்பமாய்க் காட்டுகிற பூதக்கண்ணாடியால் ஒரு சிறு பூச்சியின் முட்டையைச் சில மணிநேரமாகப் பார்த்திருந்தேன், அது தொடக்கத்தில் கழிபோலும் உண்டைவடிவமிருந்தது, கொஞ்சங் கூடுண்டான்பொழுது விரைவாய்ப் பேதகப்பட்டு நுட்பமான ஆயுதங்களால் வெட்டப்படுவதுபோலும், சில ஆயுதங்களால் திரட்டப்படுவதுபோலும், கால்

கை தலை கண் முதலியவைகள் சமைக்கப் படுவதுபோலுந் தெரிந்தது. சில மணிநேரத்திற்குள்ளாக நிரப்பமான ஓர் பூச்சியின் ரூபமாகி உயிர்த்தெழும்பி விட்டது. என் கண்ணுடிக்கு மிகவுஞ் சாமார்த்தியமுடைய ஒருவன் மிகுநுட்பமான ஆயுதங்களால் வெகு யூகமாய்ச் சமைத்தது போல் தெரிந்தது. ஆனால் ஆயுதங்களையும் செய்தவனையுந் தெரியவில்லையென்று சொல்லியிருக்கிறார். மேற்சொல்லிய சங்கதியைக் கருத்தில் அமைத்துக்கொண்டு இன்சானின் சரீரம் ஓர் துளி நீராயிருந்ததையும் புதுமைப்படத் தக்கவிதமான உறுப்புகளும் அவையவங்களும் ரூபங்களுமுண்டாகி றூகுடனே வெளியானதையும் நோட்டமிட்டால், மறைவான வல்லமையுடைய ஒரு தத்துவமே இவைகளைச் செய்கிறதென்று தீர்க்கமாய் விளங்கும். மனிதன் இரண்டு பிரிவாயிருக்கும், முதலாவது சரீரமும் றூகுல் ஹைவானியும், இரண்டாவது நபுசு. சரீரமும் றூகுல் ஹைவானியும் சேர்ந்து நபுசில்லாதிருந்தால் நாம் மிருகமாயிருப்போம். நம்மில் இயற்கைக் குணங்களும் மிருகங்களின் குணங்களு மட்டுந்தானிருக்கும். ஆரிபீன்கள் இச்சரீரத்திற்கு இருளையுடைய ஆழமான கிடங்கென்றும், நரகமென்றுஞ் சொல்லுவார்கள். அல்லாகுத்தஆலா குறுவானில் ஸிஜ்ஜீன் என்கிற நரகமென்று சொல்லியிருப்பதும் இக்குணங்களையுடைய சரீரத்திற்கே. இந்த சரீரத்தோடு நபுசு சேர்ந்ததைக் குறித்துத்தான் அல்லாகுத்தஆலா இன்சானைக் கீழ்மையிலு மதிக கீழ்மையாக்கினேனென்று சொல்லியது. தாய்வயிற்றி லிருக்கும்போது நாலாம் மாதத்தில் சரீரத்தோடு றூகுசேர்ந்தபோதிலும், சிறுபிராயம் முதல் சரீரத்தின் குணங்களை யதிகரித்து வேரூன்றினபடியால் பிராயமானபொழுது நபுசுக்கு இக்குணங்களைக் கீழ்ப்படுத்தக்கூடாமற் போகிறதுமல்லாமல், இக்குணங்கள் நபுசைச் சேர்ந்துவிடுகின்றன. நபுசுக்குடைய அறிவு யோசனை முதலிய குணங்கள் சரீரத்தின் குணத்தைச்சேர்ந்து, தந்திரம் வஞ்சகம் பொறாமை முதலிய சைத்தானின் குணங்களு முற்பத்தியாகின்றன. நபுசு தன் பகுத்தறிவைக்கொண்டு இது தீமை, இது கொடுமை, இது அநியாயமென்று அறிவித்தாலும், சரீரத்தின் இச்சை கோபம் முதலிய தீயகுணங்கள் மேலாகி, நபுசையும் அதற்குதவியாக்கிக் கொள்ளுகிறது. ஒரு மனிதன் ஸனாச்செய்ய நாடினால் அதுபாவம், அதைச்செய்யப் படாதென்று நபுசுசொன்னாலும் அதைத் தட்டிவிட்டு, அந்த மோகம் நபுசைத் தனக்கு உதவியாக்கிக் கொள்ளுகிறது. பெண்ணின் வீட்டிற்குள் போவதற்குரிய தந்திரங்களையும் யோசனைகளையும் நபுசு சொல்லிக்கொடுப்பதுபோ லாகிவிடுகிறது. இவ்விதம் சரீரத்தின் தீயகுணங்களால் நபுசு கீழ்ப்பட்டு, அக்குணங்கள் நபுசைச்சேர்ந்த தன்மைக்கு நபுசு அம்மாறு வென்று சொல்லப்படும். நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உன்னுடைய சத்துருக்களில் கொடிய சத்துரு, உன்னிருவிலாவுக்கு மிடையிலிருப்பவனேயென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நபுசு அம்மாறுவைக் குறித்துத்தான் நாயகமவர்கள் இவ்விதஞ் சொல்லியிருக்கிறது.

றூகு ஒளி யுடையதாயும், மலாயிக்கத்துகளின் தன்மை யுடையதாய்

மிருக்க, இந்த இருளான சரீரத்தை ச்சேர்ந்ததற்குக் காரணமாவது, றூகு தொடக்கத்தில் அக்லில் நிரப்ப முடையதா யிருந்தாலும், அதில் வெகு தத்துவங்க ளமைந்திருந்தன. அந்தத் தத்துவங்கள் வெளியாகிற தற்கும், செயலைக்கொண்டு நிரப்ப மாகிறதற்கும் சரீரம் தேவையாயிரு ந்தது. ஒரு மனிதனுக்குப் பலசிற் பவேலைகள் தெரிந்திருந்தாலும், கண்ணுங் கையும் ஆயுதங்களு மில்லா மல் ஒன்றுஞ் செய்யக்கூடாது. அதி போலவே சரீரத்தை யடுக்காது போனால் அந்த றூகிலமைந்திருக்கிற பல தத்துவங்களும் வீணய்ப்போம். அதற்காகச் சரீரத்தையும் சரீரத்தை க்கொண்டு துன்யாவையும் றூகுக்கு ப்பலனக்கி, துன்யாவுக்கு அல்லாகு த்தஆலா இன்சானைத் தன் கலீபா வாக அனுப்பினன். இந்தச் சரீரத் தை யடுத்திருக்கும் வரையும் பெரும் பாலு மதற்கு நபுசென்று சொல்லப் படும். அந்த நபுசு சரீரத்தை யடுத் திருக்கிறது மிகவுஞ் சொற்பகாலத் திற்கே. இந்த சொற்பகாலத்தினுள் ளே அந்தச் சரீரத்தை நமது அமல்க ளைக்கொண்டு சரீரத்தைவிட்டும் பிரி யும்பொழுது மேன்மையான மலாயி க்கத்துகளின் தன்மையாய்ப் பரிசுத் தமும் பிரகாசமுமுள்ள ஒளியாய்ப் பிரியவுங்கூடும். அந்த நபுசு சரீரத் துக்கு வந்த நோக்கத்தை மறந்து சரீ ர இச்சைகளிலும் துன்யாவினைசைக ளிலும் மூழ்கினல், அது சரீரத்தை விட்டும் பிரியும்பொழுது சைத்தா னின் தன்மையிலாகி இருளடைந்த தாய் நரகவேதனையிலாவ தற்குங் கூடும்.

## மூன்ரும் பிறப்பு.

றூகு சரீரத்தைவிட்டும் பிரிந்தவு டனே அதற்கு வேருெரு சூறத்து ண்டாகும். முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு அவர்களுடைய புத்தூஹாத்துல் மக்கிய்யா என்கிற கித்தாபில் மவுத்தானவுடனே றூகு க்கு ஒரு ரூபமுண்டாகும். அந்த ரூ பம் கியாலென்கிற பொருளைக்கொ ண்டுண்டாகி, பர்ஸகுடைய ஆலத் திலிருக்கும். அந்த ரூப மிருப்பத ஞல் அதற்கு உணர்வு மறிவுமிருக்கு ம். இந்த ரூபமாவது இந்தச் சரீரத் தில் நின்றும் பிரிந்ததாயிருக்கும். பர் ஸகுடைய ஆலத்திலிருக்கும் பொழு து பலபல பிறப்பாகப் பலபல ரூப ங்களெடுக்குமென்று சொல்லியிருக் கிறூர்களென்று செய்கு சொன்னர்.

## கியாலென்றதின்பொருள்.

முரீது, கியாலல்லது எண்ணம் ஒரு கண்டிப்பையுடைய பொருளல்ல வே. அப்படியிருக்க அதைக்கொண் டு சூறத்துண்டாகிறது எவ்விதமென் று என் புத்திக்கு மட்டுப்பட வில்லை யென்று கேட்டான்.

செய்கு; நம்முடைய எண்ணங்க ளெல்லாம் இந்த ஆலத்திற் கண்டி ப்பற்றதாய்த் தோற்றினலும், மறு ஆலத்தில் ரூபமுடையதாகவே இரு க்குமென்று நமது ஆரிபீன்கள் மட் டுமல்ல, ஹிந்துஞானிகள், புத்துஞா னிகள், சகலரும் ஒத்துக்கொள்கிறு ர்கள். இன்னும் முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு புத்தூ ஹாத்துல் மக்கிய்யாவில் அல்லாகுத் தஆலா இன்சானுடைய றூகை துன் யாவிலும், பர்ஸகிலும், ஆகிறத்திலு ம் எங்கிருந்தாலும் உணர்வு மறிவுமு டைய சூறத்துகளை நடத்துதற்காக வே படைத்தான். முதலாவது அத ற்குண்டான சூறத்து, அல்லாகுத்த ஆலா தனது நாயகத் தனத்தைப் பற் றி வாக்கெடுத்த மீதாக்கின் நாளையி

ல், அந்த சூறத்தில் நின்றும் தாயின் வயிற்றில் நாலாம் மாதத்தில் சரீரத்திற்கு வரச்செய்து மவுத்துவரையுமதிற் சிறையாயிருந்தது. பின்பு மவுத்தானவுடன் கபுறில் கேள்வி கணக்குக் கேட்கும்வரையும் ஒரு சூறத்தைப் பெற்றதென்று சொல்லியிருக்கிறார்கள்.

மவுத்தைக்கொண்டு நபுசு சரீரத்தை விட்டுப்பிரிந்தாலும், அதன்தன்மைக்கு ஒரு குறைவுண்டாக மாட்டாது. குதிரையிலேறிச் சவாரிசெய்தவன் குதிரையை விட்டிறங்கினதுபோலவே, சரீரத்தைவிட்டும் இறங்கினதாயிருக்கும். ஆனாலது சரீரத்திற்கு வந்தடுத்த நோக்கத்தையும், தான் செல்லவிருக்கிற ஆலங்களையும் மறந்து துன்யாவினுசையில் மூழ்கியிருந்தவனுடைய ஹால் மிகவும் பயங்கரமானதாயிருக்கும். ஒரு மனிதன் ஒரு கண்ணை யிழந்தால் எவ்வளவு கவலைகொள்வான், தன் சரீரம் முழுவதையு மிழக்கும்பொழு துண்டாகிற கவலை யெவ்விதமென்றுசொல்லலாம்! தான் நீடூழுய்த் தன்னுடைய சரீரத்தைவிட்டும் நீங்கப்போகிறதும், தான் அன்புவைத் திருந்த மனைவி மக்கள் உறவினர்கள் சகலரையும் விட்டுப்பிரியப் போகிறதையும், தான் இரவு பகலாய்த் தேடிய பொருள்களெல்லாவற்றையும் இழக்கப்போகிறதையும் நினைத்தவுடன் மனத்தில் நெருப்புப்பற்றிக் கிளம்பி, தான் ஆசைவைத்திருந்த பொருள்களொவ்வொன்றையும் நினைப்பான், ஒவ்வொன்றும் அந்த நெருப்புக்கு காற்றுகிவிடும். தான் செய்த பாவங்களெல்லாம் தன் முன்னே வந்து அவைகளெல்லாம் தன்னை வேதனைப்படுத்தும். பாம்புகளைப் போலும் தேள்களைப்போலு மாகிவிடும், இவைகளவனுக்கு நரகமாகி அதாபு தொடங்கிவிடும். கவனித்துப் பார்த்தால் நாம் துன்யாவில் ஆவலாய்ப் பிரயாசப்படுவதெல்லாம் இந்த நரகத்தை யுண்டாக்கிக் கொள்ளுதற்கே மவுத்தை எவ்வேளையும் நினைத்தும், ஆகிறத்தையும் அல்லாகுத்த ஆலாவையும் ஆசித்துமிருந்த ஸாலிஹீன்களுக்கு மவுத்தாகிறது சிறைச்சாலையைவிட்டும் நீங்கிறதாகவும், தான் செய்த நலவுகளெல்லாம் அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் காட்சிகளாகவுமிருக்கும்.

## கபுறி லெடுக்கிற பிறப்பு.

நாலாவது கபுறில் மலாயிக்கத்துகள் கேள்விகேட்கும்போது றூகை சரீரத்திற் புகுதிவிக்கப்படும். துன்யாவிலிருந்த சூறத்துண்டாகும், முஉத்தஸிலாக்கள் றூகு திரும்ப சரீரத்திற் சேருகிறதில்லையென்று சொலுகிறார்கள். சுன்னத்து ஜமாஅத்துகளின் இமாம்கள் சலரும் கபுறில் கேள்விகணக்குக ளுண்டுமென்றும், றூகு சரீரத்துக்குள் செல்லுமென்றுஞ்சொல்லுகிறார்கள். நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய ஹதீதுகளெல்லாம் சுன்னத்து ஜமாஅத்துகளின் கொள்கைக்கே ஆதாரமாயிருக்கின்றன. கபுறில் கேள்விகணக்கு முடிந்தவுடன் திரும்பவும் பர்ஸகில்முன் சொன்ன சூறத் துண்டாகிவிடும்.

## நாலாவது பிறப்பு.

கியாமத்து நாளையில் இஸ்றாபீல் அலைகிஸ்ஸலாம் சூறூதினவுடனே நாலாவது சூறத்துண்டாகும். அற்வாகுகளெல்லாம் அந்த சூறில் நின்றும் வெளியாகி விரைவாய்க் கபுறுகளிற்போய்த் தங்கள் சரீரத்தை

எடுத்துக்கொள்ளும், அப்பொழுது
கியாமமுண்டாகிவிடும். பாபுல் பத்
தாஹென்கிற கித்தாபிற் சொல்லி
யிருக்கிறதாவது:—இந்த ஆலத்தில்
இன்சான் ஒரே சூறத்தாகவும், ஒரே
வருக்கமாகவுமிருக்கிறான் ஆகிறத்தி
லோ அநேக வருக்கம்களாகவும், அ
நேக சூறத்துகளாகவு மாவான். நபுசு
அது தேடிக்கொண்ட குணங்களி
லும் தன்மைகளிலு மெக்குணம் அ
திகப்பட்டிருக்குமோ அக்குணத்துக்
கிணங்கிய சூறத்துகள் கியாமத்திலு
ண்டாகும். பாவியானவர்களில் மி
ருகங்களுடைய இச்சைகளும், துஷ்
டமிருகங்களுடைய கோபங்களு மு
டையவர்களா யிருந்தவர்கள் அம்மி
ருகங்களின் சூறத்தாய்க் கியாமத்தி
லாவார்கள். சரீரமாவது நபுசுடை
ய அச்சாயிருக்கும். இதைக்குறித்து
அல்லாகுத்தஆலா மிருகங்களையும்
அப்பொழுதே எழுப்பப்படுமென்று
சாடைகாட்டி யிருக்கிறான். இன்னு
ம் ஹதீதில் மனிதர்கள் தங்கள் நிய்
யத்துகளைப்போல் எழுப்பப்படுவார்
களென்று சொல்லப்பட்டிருக்கிறது.
முகியித்தீனிபு அறபி றளியல்லாகு
அன்கு புத்தூஹாத்துல் மக்கிய்யாவி
ல் கியாமத்தில் கேள்வி கணக்குக்கா
க இன்சான் துன்யாவிலிருக்கப் பட்
ட சூறத்தாக எழுப்பப்படுவான், கே
ள்வி கணக்கு முடிந்தபின் சொர்க்க
லோகத்துக் குடையவர்களை அதற்
கிணக்கமான சூறத்துகளாகவும், நர
கத்துக் குடையவர்களை அதற் கிண
க்கமான சூறத்துகளாகவு மாக்கப்ப
டும். சொர்க்கவாதிகள் சொர்க்கத்
துக்குள் நுழைந்தபின் அவர்களுக்
குப் பிரியமான சூறத்துகளை யெடு
த்துக்கொள்ளக் கூடியதாயிருக்கும்.
ஆனால் அந்த சூறத்துகள் அவர்களு
க்குண்டாகிற அல்லாகுத்தஆலாவின்
தஜல்லியாத்துகளுக்கு இணக்கமான
வைகளா யல்லாமல் வேறு சூறத்துக
ளா யிருக்கமாட்டா. அல்லாகுத்த
ஆலா முஸ்லிம்களெல்லோரும் சொ
ர்க்கலோகத்தில் அவனின் தஜல்லி
யாத்துகளின் ஆனந்தத்தைப் பெற்
றுக்கொள்ளும் பாக்கியத்தைத் தந்
தருள்வானாக.

## கல்பு என்பதின் பொருள்.

---

செய்கு, கல்பு என்கிற சொல்லுக்
கு இரண்டு பொருள்க ளுண்டாயிரு
க்கின்றன. முதலாவது மாங்காய்
வடிவான சதைக்கட்டி, இது நெ
ஞ்சில் இடது புறமிருக்கிறது. அதி
னுள்ளே ஒரு குழியுண்டு, அந்தக்கு
ழியில் கரு நிறமான இரத்தமிருக்கு
ம். இது றூகு ஹைவானியின் ஊற்
றுக் கண்ணும் சுரங்கமுமாயிருக்கும்.
இந்த இருதயம் மிருகங்களுக்கும்
மையித்துகளுக்கு மிருக்கும், குறுவா
னிலும் மற்ற கித்தாபுகளிலும் கல்
பென்கிற சொல்லைப்பாவிக்கிறது இ
ந்தச் சதைக்கட்டிக்கல்ல, இது கண்
ணுக்குத் தெரிகிற இந்த ஆலத்தைச்
சேர்ந்த வஸ்து. இரண்டாவது
பொருள் மேற்சொல்லிய உருவமு
டைய இருதயத்தைக் கொழுகிய
ரூபமற்ற கண்டிப்பில்லாத பொரு
ள், இதுதான் உள்ளமையில் இன்சா
னாயிருக்கும். பகுத்தறிவு யோசனை
முதலிய வைகளெல்லாம் இதற்கே
யுரியது. சரீரத்திலுள்ள சகல உறு
ப்புகளும் உருவமுடைய இருதயந்
தானும், அந்தக் கண்டிப்பற்ற இன்
சானென்கிற பொருளின் நாட்டங்
களையும் தேட்டங்களையும் நடத்து
தற்குரிய கருவிகளாயிருக்கும். இ
தற்கு ஹாக்கமாக்களால் நபுசென்

த்திக்காவென்றும், சூபிய்யாக்களிற் சிலர் றூஹானல் அஉளமென்றும் சொல்லுகிறதாக ரிசாலத்துல் காத்ரியாவென்கிற கித்தாபிற் சொல்லப்படுகிறது. இதில் உயர்புறத்தில் ஒரு வாயிருக்கின்றது, அதைக் கொழுப்பு மூடியிருக்கும் அல்லாகுத்தஆலாவின் மீது ஆசைகொண்டவன் திக்றுசெய்து வரும்பொழுது அந்தக் கொழுப்புருகி எரிந்துபோகும். அதனுல் சூபிய்யாக்கள் திக்று செய்துமுடிந்தபின் தண்ணீர்குடிக்கப்படாதென்று சொல்லுகிறூர்கள். இந்தக்கல்பில் எழுதட்டுகளிருக்கிறன. அதில் முதலாவது திக்றுடைய ஸ்தானம், இரண்டாவது ஹக்கின்பேரில் ஆசையுண்டாகும் ஸ்தானம், மூன்ருவது ஹக்கின்மேல் அன்புண்டாகும் ஸ்தானம், நாலாவது சிர்ரின் ஸ்தானம், ஐந்தாவது றூகின் ஸ்தானம், ஆருவது மஉரிபாவுடைய ஸ்தானம், ஏழாவது முத்திஆனந்தத்தின் ஸ்தானம், இவ்வேழும் கல்பி லடங்கியிருக்கின்றன. அதற்காகத்தான் கல்பு அஸ்ருறுகளுடைய கஸானு அல்லது களஞ்சியமென்று சொல்லப்படுகிறது. இதற்கு மேல்விசாரணைக் காரனுகை சைத்தானிருக்கிறூன். அவன் சிலந்தி நூலிழுப்பதுபோல் இந்த ஏழு ஸ்தானங்களுக்குமேலே இருளென்கிற திரையைக்கொண்டு மூடிவிடுகிறூன். அவன் பாம்பின் ரூபமாயிருப்பான். அதற்குத் தும்பிக்கை போல் வழைந்த முள்ளிருக்கும், அதில் நஞ்சுண்டாயிருக்கும், பகல் முழுவதும் ஒருவன் நன்ருய்ப் புசித்தால் அந்த சைத்தானுக்குப் பெலனுண்டாகி இரவில் தன் தும்பிக்கையால் குற்றி நஞ்சைச் செலுத்துவான், அந்த நஞ்சு பரந்து தீய குணங்களும், கெடுதியான நடக்கைகளும், பாவமான செய்கைகளும் உண்டாகிவிடும். இந்த சைத்தான் கல்பைவிட்டும் அகன்று நிற்கவும், அவனுடைய இருளென்கிற திரை நீங்கவுஞ் செய்யவேண்டிய கருமங்களைச் செய்து வந்தால் மேற்சொல்லிய ஏழு ஸ்தானங்களும் வெளியாகி ஒளிவு பிரகாசிக்குமென்று சொன்னுர்.

### அரூபமான பொருள்களை ரூபமானபொருள்களைப்போல பேசப்படுகிறது.

முரீது, தாங்கள் சொல்லியதில் ஒரு காரிய மெனக்கு மயக்கத்தைக் கொடுக்கின்றது. தாங்கள் கல்பென்கிற சொல்லுக்கு இரண்டு பொருள்க ளிருக்கின்றனவென்றும், அதிலொன்று சதைக் கட்டியா யிருக்கிற இருதயமென்றும், மற்றது ரூபமற்ற இன்சானென்கிற உள்ளமையென்றும், அந்த ரூபமில்லாத இன்சானென்கிற உள்ளமைக்குரிய குணங்களை விவரித்துச் சொல்லுகையில் சைத்தான் பாம்பின் ரூபமாய்த் தன் தும்பிக்கையாற் குற்றி நஞ்சைச்செலுத்துவானென்று சொன்னீர்கள். அப்படியானுல் சைத்தானுங் கண்டிப்பை யுடையவனுயிருக்கவேண்டுமே, அந்த கல்பும் கண்டிப்பை யுடையதாயிருக்கவேண்டுமே. இதை என் பெயரில் கிருபைவைத்துத் தெளிவாக்கும்படி மன்றூடுகிறேனென்றுசொன்னுன்.

செய்கு, எனது அன்பான பிள்ளையேகேள்! நாமிப்போதிருக்கிற ஆலத்துக்கு ஆலம் அஜ்ஸாமென்று சொல்லப்படும். இது நமது பஞ்சேந்திரியத்திற்குத் தெரியப்படுகிற ஆலமாயிருக்கும். இதையன்றி மறைவா

ன ஆலங்களிருக்கின்றன. அந்த மறைவான ஆலங்களிலுள்ள வைகள் கண்டிப்பை யுடையவைகளல்ல, ஆனால் அந்த ஆலங்களின் தன்மைகளையும் பொருள்களையும் நாம் விளங்கிக்கொள்ளும் பொருட்டு நாமிந்த ஆலத்தில் பாவிக்கிற சொற்களைக்கொண்டு சொல்லவேண்டியதாயிருக்கிறது. அப்படிப் பாவிப்பதனால் மற்ற ஆலங்களிலும் இந்த ஆலத்தி லுள்ளவைகளைப்போல் கண்டிப்பையுடையவைகளென்றும், மண் தண்ணீர் காற்று நெருப்பாகிய பூதங்களால் சமையப்பட்டவைகளென்றும் நினைக்கப்படாது. இதற்கோருதாரணஞ் சொல்லுகிறேன், குறுவானில் அல்லாகுத்த ஆலாவுடைய முகமென்றும், கையென்றும், விரலென்றுஞ் சொல்லி யிருப்பதினால், அவனுக்கு நமது முகத்தைப்போலும் கையைப்போலும் விரலைப்போலும், முகமும் கையும் விரலும் இருக்கின்றனவென்று எண்ணப்படாது. நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய ஒளிவைப் படைத்தா னென்று சொல்லியிருப்பதை கண்டிப்பையுடைய சூரியனின்ஒளிக்குஅல்லதுவிளக்கின் ஒளிவுக்கு ஒப்பிடப்படாது. நரகத்தில் நெருப்பும் பாம்புகளுமிருக்கின்றன வென்பதை இந்த நெருப்பைப்போலும், இங்குள்ள பாம்புகளைப்போலு மிருக்குமென்று நினைத்துவிடப்படாது. கண்டிப்பையுடைய பொருள்கள் இந்த ஆலம் அஜ்ஸாமுக்குடையது, நமது சூக்ஷமசரீரம் ஆலம் மிதாலுக்குடையது, நமது றூகு ஜபறூத்துடைய ஆலத்துக்குடையது, நமது சிர்று லாகூத்துடைய ஆலத்துக்குடையது. இவைகள் உனக்கு இல்மு அதிகப்பட அதிகப்பட நன்றாய் விளங்கிவருமென்று செய்கு சொன்னார்.

## மறைவான ஆலங்களிருக்கின்றனவென்பதற்கு அத்தாட்சிகள்.

முரீது, மறைவான ஆலங்களிருக்கின்றதெனச் சொன்னீர்களே! அவைகளிருக்கின்றன வென்பதைப் பற்றி என்மனத்தில் சற்றும் சந்தேகமில்லாதிருக்கச் சில அத்தாட்சிகளைச் சொல்லும்படி தங்களைத் தாழ்மையாய் வேண்டுகிறேனென்று கேட்டான்.

செய்கு, நமது பஞ்சேந்திரியங்களுக்குத் தெரிகின்றவைகளெல்லாம் இந்த ஆலம் அஜ்ஸாமுக்குடையது. இவைகளல்லாமல் மறைவானவைகளுமிருக்கின்றனவென்று நமது புத்திக்கு விளங்குகின்றது. நமக்கும் மிருகங்களுக்கும் மரஞ்செடிகளுக்கும் உயிரிருக்கிறதென்பது எவருக்குந்தெரியும். ஆனாலந்த உயிரென்பதென்னை? அது எங்கிருக்கின்றதென்று புத்திக்கு விளங்கவில்லை, நமக்கு அறிவிக்கிறதென்பதும், கோபமிருக்கிறதென்பதும் நமக்கு நிச்சயமாய்த் தெரிகின்றது, ஆனால் அவைகளெப்படிப்பட்டவைகள் அவைகளெங்கிருக்கின்றனவென்று நமது இந்திரியங்களைக்கொண் டறியக்கூடியதாயில்லை. அல்லாகுத்தஆலா ஒருவனிருக்கிறானென்றும், அவன் தான் யாவையும் நடத்திவருகிறானென்றும் விசுவாசங் கொண்டிருக்கிறோம், ஆனால் அல்லாகுத்தஆலாவைக் காணக் கூடியதாயுமில்லை, அவன் நடத்துகிறது தெரியவுமில்லை, இவைகளெல்லாம் மறைவான ஆலங்களைச் சேர்ந்தவைகள். நாம் சகல ஆலங்களையுஞ் சேர்ந்திருக்கிறோம்,

அந்த ஆலங்கள் நமக்கு வெளியாகச் செய்யுந் தத்துவங்களும் நம்மில மைந் திருக்கின்றன. பஞ்சேந்திரிய ங்களுக்கு இந்த ஆலத்திலுள்ள வெ ளித்தோற்றம் மட்டுந்தான் தெரியும். அல்லாகுத்தஆலா நமக்கு கல்புக் கண்ணைத் தந்திருக்கிருன், அந்தக் கண் நமது ஸூக்ஷமசரீரம் றூகு சிர்று ஆகியவைகளுக்கெல்லாம் கண்ணுயி ருக்கின்றது. ஸூக்ஷம சரீரத்தின் கண் திறந்தால் ஆலம்மிதால் வெளியாகும். றூகின் கண்திறந்தால் ஆலம் அறு வாகு வெளியாகும், சிர்ரின் கண் வெளியானுல் ஆலம் லாகூத்துவெ ளியாகும். இந்தக் கண்கள் திறக் கப்படுதற்குத்தான் பாத்தினுடைய இல்மை யறிகிறதும், சுலூக்குடைய பாதையிற் செல்லுகிறதுமா யிருக்கு மென்றுசொன்னுர்.

முரீது, இந்த ஆலங்கள் எங்கிருக் கின்றனவென்று கேட்டான்.

மறைவான ஆலங்களிருக்கின்றன வென்பது.

செய்கு, ஆலங்களெல்லாம் தோற் றமே யல்லாமல் உள்ளமையில்லை. ஆனுல் அந்தந்த ஆலங்களிலிருப்பவ ர்கள் அந்தந்த ஆலங்களிலிருக்கிருே மென்ற எண்ணமிருக்கும் வரையும் அவர்களுக்கு அவைகளிருக்கின்றன வென்பது உள்ளமையா யிருக்கும், அந்த எண்ண மற்றவுடனே அந்த ஆலங்களெல்லாமற்று, ஒரே உள்ள மைப்பொருளைக் காணப்படும். ஆனு லிது தவ்ஹீதுடைய இல்முக்குடை யது, இப்பொழுது உன் கருத்தை யதிற் செலுத்தாதே. இந்த ஆலங்க ளெல்லாம் ஒன்றை விட்டொன்று நீங்கவில்லை, இவைகள் வெளியாகி றது சில கூத்துகளில் சித்திரக்காட் சி காட்டுவதுபோலாயிருக்கும். ஒரு திரை நீங்கினுல் சில காட்சிகள் தோ ற்றும், மறு திரை நீங்கினுல் வேறு காட்சிகள் வெளியாகும். இந்த ஆ லங்களின் திரைகளை நீக்குவது நமது சித்த மென்கிற தத்துவமேயென்று செய்கு சொன்னுர்.

## ஆலம் மிதால்.

முரீது, இந்த ஆலங்க ளெப்படிப் பட்டவைகளென்று அறிய மிகவு மாசையா யிருக்கிறேனென்று சொ ன்னுன்.

செய்கு, நானிந்த ஆலங்களைக் கு றித்து சுலூகைப்பற்றிப் பேசும்போ து உனக்கு விவரித்துச் சொல்ல நி னைத்திருந்தேன். ஆகிலும் நீ இப் பொழு திவைகளை யறிய ஆசைகொ ண்டிருப்பதால் மிதாலுடைய ஆல த்தைக் குறித்து மட்டும் உனக்கு அறிவிக்கிறேன் கேள்.

ஆலம் மிதால், இந்த அஜ்ஸாமு டைய ஆலத்திலும் மிகவும் விஸ்தா ரமுடையது. துன்யாவிலுள்ள பொ ருள்களுக்கெல்லாம் ஸ்தூல சரீரமெ ன்றும், ஸூக்ஷம சரீரமென்றும் இர ண்டு சரீரங்க ளிருக்கின்றன. ஸ்தூல சரீரம் இந்த அஜ்ஸாமுடைய ஆலத் துக்குடையது, ஸூக்ஷம சரீரம் மிதா லுடைய ஆலத்துக்குடையது. ஸ்தூ ல சரீரத்துக்குரிய உறுப்புகளும் ரூப மும் ஸூக்ஷம சரீரத்திற்கு மிருக்கும். ஆனுல் ஸூக்ஷம சரீரம் மிகவும் நுண் மையான பொருள்களைக் கொண்டு சமைந்திருக்கின்றன. நமது ஆரிபீ ன்கள் நூருனிய்யாவால் சமையப் பட்ட ஸுறத்தென்றும், ஹிந்து ஞா னிகளும் சில ஹுக்கமாக்களும் ஆ காச நுண்ணணுவால் சமைந்திருக்கி ன்ற தென்றுஞ் சொல்லுகிருர்கள்.

ஆகாச நுண்ணணுவுக்கு அறபுப் பாஷையில் அதீரென்று சொல்லப்படும். இதின் நுண்மையை உனது புத்தியைக்கொண்டு மட்டுப்படுத்தக் கூடாது, யாதொரு தடையின்றி சுவருக்குள்ளால் அல்லது கல்லுக்குள்ளால் சென்றுவிடும். இப்பொழுது உன் மனத்திலதை சூறத்துப்படுத்துதற்காக உன் சரீரத்தின் நிழல்போல் நினைத்துக்கொள். ஆனாலுனக்கு பாத்தினுடைய இல்மு அதிகப்பட்டால் உன் ஸ்தூல சரீரம் சூக்ஷுமசரீரத்தின் நிழலென்பது திட்டமாகும். இமாம் கைசரீபுகூசின் முக்வுரையில் அஃயானில் ஹக்குத்தஆலாவுடைய இல்மிலுண்டான சூறத்துகள் தான் ஆலம்மிதாவில் வெளியாயிருக்கிற சூறத்தென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மிதாலுடைய ஆலத்துக்குள் அறுசு குறுசு ஏழுவானங்கள் மலாயிக்கத்துகள் ஜின் முதலியவைகளெல்லா மடங்கியிருக்கின்றன. ஜின் நெருப்பைக்கொண்டு படைத்ததாயிருந்தாலும் அதுவும் இந்த ஆலத்துக் கடங்கினதாயிருக்கும். சூக்ஷும சரீரத்தின் தன்மை யெப்படியானால் அதை வெட்டிப் பிரிக்கவும் நொறுக்கிப் பொடியாக்கவுங் கூடாதென்று செய்குசொன்னார்.

## ஆலம் மிதால் வெளியாகிற விதம்.

முரீது, இந்த ஆலம் நமக்கு வெளியாகிற தெவ்விதமென்று கேட்டான்.

செய்கு, இந்த ஆலம் நமது கல்பிலிருக்கிற கியாலென்கிற தத்துவம் அல்லது மனோபவமென்கிற பார்வையைக்கொண்டு தெரியும், இந்தச் சொல்உனக்கு விளங்காததால் எண்ணமென்கிற சொல்லைப்பாவித்து உனக்கு விளக்குகிறேன். நீ கண்ணைப்பொத்திக்கொண்டு நீ முன் கண்ட மனிதர்களை யல்லது ஊர்களை யல்லது பொருள்களை நினைத்தால் உடனே அந்த மனிதர்களின் ரூபமும் லக்ஷணமும் அந்த ஊர்களிலுள்ள பொருள்களும் அந்தப் பொருள்கள் கண்ணுக்குத் தெரிகிறதுபோல் எண்ணத்திற்குத் தெரியும், இதற்கு கியாலென்று சொல்லப்படும். இந்த அறபுச் சொல்லின் பொருளை நன்றாய் விளங்கிக்கொள். சகல ஆலங்களும் நமக்குத் தோற்றுகிறது இந்த கியாலைக்கொண்டே. இந்த கியாலற்றால் ஆலங்களெல்லாமற்றுப்போகும், இதைப்பின்னால் தெளிவாய்ச்சொல்வேன். சாலிக்கீன்களுக்குத் தொடக்கமாக இந்த ஆலம் வெளியாகிற விதத்தைச் சொல்லுகிறேன். சுகூதில் பல எண்ணங்களும் கல்பைவிட்டகன்று ஒரே பொருளில் மனத்தைத் தரிபடுத்திக்கொண் டிருக்கையில், விழிப்புக்கும் உறக்கத்திற்கும் மத்திபமான நேரத்தில் திடீரெனச் சில காட்சிகள் வெளியாகும், உடனே விளிப்புண்டாகி அக்காட்சி மறைந்துவிடும். இந்தக் காட்சி உறக்கத்திற்குச் சார்ந்ததாயிருந்தால் சொப்பனமாயிருக்கும், விழிப்புக்குச் சார்ந்ததாயிருந்தால் மிதாலுடைய ஆலத்தின் பிரகாசமாயிருக்கும். இது விழிப்பிலென்றும் நித்திரையிலென்றும் பிரித்தறிவதற்கு ஆரிபீன்கள் ஒரு குறிப்புச்சொல்லுகிறார்கள். அக்காட்சி வெளியாகும்பொழுது நீ இருக்கிற விடமும் நேரமும் ஞாபகமிருந்தால் அது விழிப்பென்றும், அது மிதாலியின் காட்சியென்றும் நிச்சயித்துக்கொள்ளலாம். அல்லாதவரையில் அது சொப்பனமா யிருக்கு

ம், அது சாலிக்கானவனுக்கு இது மிதாலியின் காட்சியென்று நிச்சயமானவுடனே அக்காட்சியின் இன்பமும் சந்தோஷமும் உண்டாகி மிகவுமாசையாக சுஹூதிற் றரிபடுவான். கிரமம் கிரமமாயந்த ஆலம் துலக்கமாகி அந்த ஆலத்தின் அதிசயங்களும் அஸ்றாறுகளும் வெளியாகும். அந்த ஆலத்துக்குட் செல்லவும், அந்த ஆலத்தி லுள்ளவர்களோடு சம்பாஷணை செய்யவுங் கூடியதாகி விடும். இதைப் பற்றிப் பின்னுற் சொல்வேன்.

## ஆலமிதால் யோகஅப்பியாசமில்லாதவர்களுக்கு வெளியாகிற விதங்கள்.

முரீது, இந்த ஆலம் யோக அப்பியாசம் பண்ணுதவர்க ளொருவருக்கும் வெளியாக மாட்டாதா வென்று கேட்டான்.

செய்கு, வெளியாகுவது முண்டு. றசூல்மார்களும் நபிமார்களும் பிறப்பிலே அவர்கள் கல்புகள் பரிசுத்தமாயிருப்பதால் மறைவான ஆலங்களும் அஸ்றாறுகளும் அவர்களுக்குத்தெரியும். இரண்டாவது சிலர் பிறப்பிலே இந்திரியங்களின் தத்துவங்கள் குறைந்தவர்களாகவும், சூக்ஷமசரீரத்தின் பார்வை கூர்மையுள்ளவர்களாகவு மிருப்பவர்களு மிருக்கிறார்கள். இவர்களுக்குக் குறித்த ஆலத்திலுள்ள சில மறைவான காரியங்கள் வெளியாகிறதுமுண்டு. மூன்றாவது சில நோய்களைக்கொண்டு ஸ்தூல சரீரத்தின் தத்துவங்கள் குறைந்து சூக்ஷம சரீரத்தின் குணம் அதிகரித்து அந்த ஆலத்தின் காரியங்கள் வெளியாகிறதுமுண்டு. மவுத்துடைய நேரத்தில் சூக்ஷமசரீரம் வேறாகி மனிதர்களுக்குத் தெரியப்படுகிறது முண்டு. ஐந்தாவது சொப்பனத்தில் அந்த ஆலத்தின் சில காரியங்கள் தெரிகிறதுமுண்டு. இன்னும் மந்திரம் சூனியம் ஹிமியா றிமியா வென்கிற சித்திகளும் வாசிலாத்துகளும் இந்த ஆலத்தைச்சேர்ந்தவைகள், சில தருணங்களில் மலாயிக்கத்துகள் தெரியப்படுகிறதும், இந்துகள் பசாசியென்றும், நாம் ஜின்னென்றும் சொல்லுகிறவைகள் மனிதருக்குத் தோற்றுவதுமுண்டு, இவைகளெல்லாம் ஆலம் மிதாலுக் குரியவைகளென்று சொன்னார்.

## பிறப்பிலே சூக்ஷமசரீரத்தின் பார்வை கூர்மையாயிருப்பவர்கள்.

முரீது, தாங்கள் சொன்னதில் றசூல்மார்களுக்கும் நபிமார்களுக்கும் அந்த ஆலம் தெண்டிப்பில்லாது வெளியாகுமென்பது எனக்கு உறுதிப்படுகிறது. தாங்கள் சொன்ன மற்றவைகளெல்லாம் எனக்கு நூதனங்களா யிருக்கின்றன. ஆகையாலிவைக ளொவ்வொன்றையும் விவரித்துக்காட்டுவதில் முதலாவது சிலர் பிறப்பிலே சூக்ஷமசரீரத்தின் பார்வை கூர்மையா யிருப்பவர்களுக்கு அந்த ஆலத்தின் மறைவான சில காரியங்கள் வெளியாகுமென்று சொன்னீர்களே இதை எனக்கு விளங்குதற்குச் சொல்லும்படி தங்களை வேண்டிக்கொள்கிறே னென்று சொன்னார்.

செய்கு, அஞ்சன மையிட்டு மறைவான காரியங்கள் சொல்லப்படுகின்றதென்பதை நீ கண்டிருப்பாய் அல்லது கேள்விப்பட்டிருப்பாய், நானிது உண்மையோ பொய்யோவெ

ன்றறிவதற்குப் பல முறைகளிலும் பரிசோதித்தேன். அச்சோதனைக ளால் எனக்குத் தெரியவந்தது முத லாவது என்முன்னே செய்தவர்க ளெல்லாம் பொய்யர்களென்றும், ம னிதரை மருட்டத் தெண்டித்தவர்க ளென்றும் திட்டமாயிற்று. ஆகிலும் என்னுடைய ஆராய்வுகளைக்கொண்டு சில காரியங்கள் என் மனத்திற்குத் திட்டமாயின. முதலாவது அஞ்ச னமையிட்டு மறைவான காரியங்க ள் வெளியாகிறது நிசமென்பதும் அதற்கு மூன்று காரியங்கள் அவசிய மென்றும் முதலாவது அந்த மை பார்க்கிறவன் இழைத்த மனமுடை யவனாகவும், யோசிப்பதற்கு வதலாய் மனத்தை எண்ணத்தில் அல்லது கி யாலில் செலுத்துகிறவனாகவுமிருக்க வேண்டும். இக்குணங்களை யுடைய இழம் வயதையுடைய பெண்கள் மி கவுமிதற்கு உத்தமம். இரண்டாவ து மந்திரிக்கிறவன் மனத்திடனும் ஒரு காரியத்தில் அல்லது ஒரு பொ ருளில் மனத்தைத் தரிபடுத்தக் கூ டிய வலுவான சித்தமுடையவனாக வுமிருக்கவேண்டும், ஆனால் அவன் வாயால் வரும் சொற்களால் ஒரு உபயோகமில்லை, ஆகிலும் அவனதி ல் நம்பிக்கைவைத்தால் அவன் சித் தம் வலுவாகுதற்கு உபயோகமாயி ருக்கும். இன்னும் அந்த மை கரு நிறமாகவும் தெளிவாயு மிருக்கவே ண்டும். அது என்ன பதார்த்தங்களை க்கொண்டு செய்தாலுஞ்சரி. இவ்வி தம் அந்த மை பார்க்கிறவன் அந்த மையைக் கண்ணைச் சிமிட்டாமல் உற்றுப்பார்த்துக்கொண் டிருக்கையி ல் கண்ணுக்கும் மூளைக்குங் கொழு கிய ஓர் நரம்பு பெலக்குறைவாகின் றதால் மயக்கமுண்டாகி சூக்ஷமசரீ ரத்தின் கியாலென்னும் தத்துவமதி கப்பட்டு மிதாலென்கிற ஆலத்தின் மறைவான சில காரியங்கள் வெ ளியாகும்.

மூரீது, தங்களுடைய ஆராய்வை க்கொண்டு தங்களுக்குத் தெரிய வந்ததைச் சொன்னீர்கள் சரிதான். ஆகிலுமிதற்கு அத்தாட்சிகளிருந்தா ல் தயவுபுரிந் தருளவேண்டு மென்று கேட்டான்.

அறபில் "தல்ஸமா"வென்றுசொ
ல்லும் வித்தைகளில் பிறர்
மனத்திலிருப்பவைகளைச்
சொல்லுதல்.

செய்கு, பின்னல் திக்றைக்கொ ண்டு கஷ்புண்டாகிற விதங்களைச் சொன்னல் நானிப்பொழுது சொன் னது சரியென்று நிச்சயங்கொள்வா ய். ஆகிலுமுனக்குச் சில அத்தாட் சிகளைச் சொல்லுகிறேன். தற்கால த்தில் ஐரோப்பாவிலும் அமரிக்காவி லும் இந்த வித்தையில் மிகவுந் தேர் ச்சியுடையவர்க ளிருக்கிறார்கள், அ வர்களிற்சிலர் இந்த வித்தையைக் காட்டக் கண்டிருக்கிறேன். சில வ ருடங்களுக்குமுன் கண்டிக்கு ஒரு துரையும் ஒரு இளம் வயதையுடைய ஒரு துரைச்சானியும் வந்து நகரசங் கத்து மண்டபத்தில் வித்தை காட் டினார்கள் நானும் போயிருந்தேன். அந்த துரை அந்தப் பெண்ணின் கண்ணைச் சொற்பநேரம் உற்றுப்பா ர்க்க அவளுக்கு மயக்கமுண்டான வுடன் அந்த துரை அங்கு கூடியிரு ந்தவர்களிடம் நீங்கள் விருப்பமானை தை நினைத்துக்கொள்ளுங்கள், அல் லது ஒரு காகிதத்தில் எழுதி வைத்து க்கொள்ளுங்க ளென்று சொன்னார் ஒவ்வொருவரும் சில சில வருத்த

மான கணக்குகளை நினைத்துக்கொண்டார்கள். நானுமொரு காகிதத்தில் ஒரு காரியத்தை எழுதிவைத்துக்கொண்டேன், ஒவ்வொருவர் நினைத்ததையும் எழுதியதையும் சரியாகச்சொன்னுள்.

கம்பர்லாண்டு என்ற பெயரையுடைய ஒரு துரை உலக முழுவதிலும் பிறர் மனத்திலிருப்பவைகளைச் சொல்லுவதிலும், மறைத்து வைத்த பொருள்கள் எவ்விடத்தில் ஒழித்து வைத்தாலும் எடுத்துக்கொடுப்பதிலும் கீர்த்திபெற்றவர். இவர் 1886-ம் ஆண்டில் கொழும்புக்கு வந்தபொழுது அறபிபாக்ஷா அவர்கள் வீட்டுக்கு விருந்துக்குப்போனுர். பாக்ஷா அவர்களிடம் தாங்களொரு சொல்லை அறபு எழுத்தைக்கொண்டு நினைத்துக் கொண்டிருங்கள், நானந்த எழுத்துகளைச் சுவரிலெழுதி விடுகிறேனென்று சொல்லி அறபி பாக்ஷா ஒரு சொல்லை நினைத்தவுடன் சுவரில் அறபெழுத்தில் ஜீஸஸ் என்றெழுதி விட்டார். அந்த துரைக்கு அறபுப் பாஷை தெரியாதிருந்தும் இவ்வித மெழுதினதைப்பார்த்து அறபி பாக்ஷா மிகவும் ஆச்சரிய மடைந்தார்கள். சிலரிது பிசாசைக்கொண்டு செய்கிற வேலையென்று சொல்லுவார்கள், ஆனுல் அந்த துரை அச்சிட்ட புத்தகத்தில் சிலர் நானிந்த வித்தையைப் பிசாசியின் தத்துவத்தைக் கொண்டு செய்கிறேனென்று சொல்லுகிருர்கள். அப்படியல்ல, சில காலத்திற்குமுன் பிறருடைய எண்ணங்களை எனக்குச் சொல்லக் கூடுமென்றொரு உதிப்புண்டாகி என் மனத்தைப் பல எண்ணங்களிற் செல்லாது அசையாமல்வைத்து ஒருவன் கையைச் சற்றுநேரம் பிடித்துக்கொண்டிருக்கையில் அவன் மனம திலுதிக்கிறது என் மனத்திலுதிக்கிறதுபோல் தெரிந்தது. இவ்விதம் அப்பியாசப்படுத்தி நான் இப்பொழுது இவ்வேலைகளைச் செய்கிறேனென்று சொல்லி, பிறர் மனத்திலிருப்பதை யறிவதற்குரிய அப்பியாசங்களையும் அப்புத்தகத்திற் சொல்லியிருக்கிருர்.

தல்ஸமா அல்லது வசியம்.

இதிலும் மிகவும் புதுமையுள்ளது தல்ஸமா இங்லீசில் மெஸ்மரிஸ் மென்று சொல்லுகிறவித்தை. இதைக் கொண்டு எவனையும் சொற்பநேரத்தில் மயக்கமுண்டாக்கி அவனை மயக்கச் செய்கிறவனுடைய ஓராயுதத்தைப்போலாக்கி அவன் நினைத்ததெல்லாம் செய்யும்படி செய்யப்படுகிறன்றன.

மெஸ்மரிஸமைக்கொண்டு ஒருவனை மயக்கி வசப்படுத்துதலில் ஏழு பதவிகளிருக்கின்றன. முதலாவது ஒருவன் விழித்திருக்கும்போதே அவனுக்குத் தன் சித்தப்படி ஒன்றுஞ் செய்யக்கூடாமல் அந்த வித்தையைச்செய்கிறவன் எண்ணியபடியே அவன் நடக்கும்படி வசப்படுத்தல், இவர்களுக்குப் பார்வை கேள்வி பேச்சு நடை யெல்லாமிருக்கும். அந்த வித்தையைச் செய்கிறவன் நினைத்ததைச் செய்யாம லிருக்கக்கூடாது.

இரண்டாவது பதவிக்கு, அந்த வித்தைக்காரர்கள் அரை விழிப்பென்று சொல்லுவார்கள். இதில் அந்த வித்தையைச் செய்யப்படுகிறவன் கண்ணைமூடினவனுகவும் உறங்கினவனைப்போலு மிருப்பான். ஆகிலும் பேசினுல் பேசுவான் பார்வை மட்டுமிராது, மற்ற இந்திரியங்களுமு

ணர்வுஞ் சரியாயிருக்கும். அவனைச் சுற்றி நடக்கிற காரியங்களெல்லாம் விளங்கும்.

மூன்றும் பதவிக்கு, காந்த உறக்கமென்று சொல்லுவார்கள். இந்தப் பதவியில் வசப்பட்டவன் ஆழமான உறக்கமுடையவனுயிருப்பான். பஞ்சேந்திரியங்களின் உணர்வொன்றுமிராது. மயக்கினவன் பேசினுல் மறுமொழி சொல்வான், மற்றவர்கள் எவ்வளவு சத்தமிட்டுப் பேசினுலுங்கேளாது. பீரங்கியை யவனுக்குச்சமீபமாகச் சுட்டாலுங் கேளாது. அவனுக்கு நோவு வேதனை யொன்றுந் தெரியாது, சரீரத்தை வெட்டினுலும் நோவு தெரியாது, விழித்தபின் தானிருந்த நிலைபரமொன்றுந்தனக்குத் தெரியாது. இந்த பதவியில் டக்ர்ர்மார்கள் கைகால்களை வெட்டுவார்கள், வேதனை தெரியாமல் சரீரத்தை வெட்டிக்கிறிப் பல வேலைகளையுஞ் செய்வார்கள். ஐந்து இந்திரியங்களின் உணர்ச்சிகளும் சரீரத்திலில்லாமல் வேறு சில இந்திரியங்களிருப்பதுபோல அவனுக்கு விளங்கும். தான் உயிரோடிருக்கிறது மட்டிலுணர்விருக்கும். இப்படியிருக்கும் வேளையில் அவனிடம் உன் பெயரென்னவென்று கேட்டால் தன் பெயர் சொல்லத் தனக்குத் தெரியாமலிருக்கும். வசப்படுத்தினவன் என்னபெயரை நினைத்தானே அதைச்சொல்வான், வசப்படுத்தினவன் மனத்திலுண்டாகிற எண்ணம் அவன் மனத்திலுண்டாகும்.

நாலாம் பதவி, கண்ணைத் திறந்து விழித்திருக்கிறவர்களைப்போல் சகலதையுஞ் செய்வான், அந்த மயக்கந் தெளிந்த வுடன் நடந்த காரியங்களொன்றுந் தெரியாது திரும்பவும் மயக்கமுண்டானுல் முன்மயக்கத்தில் நடந்த காரியங்களெல்லாம் ஞாபகத்துக்கு வரும், அவைகளை யவ்வேளைகளிற் கேட்டால் இன்ன தின்னதென்றுஞ் சொல்வான்.

ஐந்தாவது, நோயாளிகளாயிருக்கிறவர்களுக்கு ஒரு பிரகாசமுண்டாகிச் சரீரத்துக்குள்ளிருக்கிற நோய்களிவ்விதமென்று தெரியும், அவைகளுக்குச் செய்யவேண்டிய மருந்தினதென்று சொல்வார்கள், அவ்விதமே செய்தால் சவுக்கியமுண்டாகும், இது நோயாளிகளுக்கு மட்டுமுண்டாகும், சுகமேயிருப்பவர்களுக்குண்டாக மாட்டாது.

ஆறுவது, ஒருவனை மயக்கி அவன் நினைவற்றிருக்கையில் இன்ன நாளையில் இன்னநேரத்தில் இன்னவேலையைச் செய்யென்று சொன்னுல் மயக்கந் தெளிவானபின் அவனுக்குச்சொன்னதொன்றுந் தெரியாமலிருந்து குறித்த நேரம் வந்தவுடன் அந்த வேலையைச் செய்வதற்கு மனம் எழுப்பிவிடும். ஒருவனை யடிக்க அல்லது கொல்லச் சொல்லியிருந்தால் அந்த நேரத்தில் அந்தவேலையைச் செய்யாதிருக்கக் கூடாது.

ஏழாவது, மிகவும் பிரதானமாகையாலதைக் கொஞ்சம் விரித்துச்சொல்லுகிறேன், ஆனுலிதின் உண்மையை உறுதியாக எனக்கு சொல்லக் கூடியதாயில்லை, இதைப்பற்றிப் புத்தகங்களி லெழுதியிருப்பதைச் சொல்லுகிறேன்.

இதிலொருவனை மயக்கி வசப்படுத்திக்கொண்டவுடனே அவனுடைய சூக்ஷுமசரீரம் பற்பல விடங்களுக்குஞ்சென்று பல காரியங்களையுமறிந்து

தன் வாயினுற் சொல்லுகிறது, இறந்தவர்களின் சூக்ஷம சரீரங்களையுங் காணும், அவர்களிருக்கும் நிலபரங்களையுந் தெரியும், அவர்களை யழைத்துத் தோற்றத்தக்க ரூபங்களை யெடுக்கவும் பார்க்கப்போ யிருக்கிறவர்களுக்குத்தெரியவுஞ் செய்யக்கூடும், இது அமரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சிலர் செய்து வருகிருர்கள், இதை வித்துவான்க ளுண்மையென்று ஒப்புக்கொள்ளாமல் ஏதோ இதில் தந்திரமிருக்குதென்று திர்க்கமாயறிவதற்குப் பலவிதமான சோதனைகளையுஞ்செய்து சோதித்தவர்களெல்லாம் இது உண்மையென்று ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்

இந்த ரூபங்கள் முதலாவது, ஒரு மேகம்போல்தோற்றிச் சொற்பநேரத்தில் மனுரூபமாகி. பின்பு ஓர் குறிப்பான மனிதனின் ரூபமாய்த் தெரியும், இதைச் சுத்தமா யறிதற்கு வித்துவான்கள் ஒரு கொமிட்டிச் சங்கஞ்சேர்ந்து ஆலோசித்து பொட்டகிருபைக்கொண்டு படமெடுத்தால் இதுஉள்ளமையோ அல்லவோவென்று அறியக்கூடுமென்று பொட்டகிருபெடுக்கிறவனைக் கொண்டுபோய்வைத்து இறந்துபோனவர்களின் ரூபத்தை வரவழைத்துப் படமெடுத்ததில் இறந்துபோனவர்களின் ரூபங்கள் சரியாகவே எடுக்கப்பட்டன. மெஸ் ஓவிட் என்கிற துரை தன்னுடைய இறந்துபோன தாயைக் காணவேணுமென்றுசொல்லி அந்த ரூபத்தின் படத்தை பொட்டகிருபைக்கொண்டெடுத்தார். அவர் தன் தாயைக் கண்டில்லை, அவர் பிறந்த நாளையிவிறந்துபோனுள், அதனுலந்தப் படத்தை யெடுத்துக்கொண்டு தன்னுடைய மாமனிடங்காட்ட இது உன் தாயுடைய படயென்று சொன்னுர். பின்பு அவரிடம் தாயுடைய படமொன்று இருந்ததைத்தேடி எடுத்துப் பார்க்க இரண்டுஞ் சரியாகவே யிருந்தன.

இன்னு மிவ்விதம் வசப்பட்ட பெயர்கள் பின்வருங் காரியங்களைச் சொல்வார்கள், தானறியாத பாஷையிற் பேசுவார்கள், எழுதுவார்கள், இதுபோல் அதிசயமான காரியங்கள் அதிகமாகச் சொல்வார்கள்.

இவ்விதம் வசப்பட்ட ஒரு பெண்ணிடம் இறந்துபோனவர்களை உனக்கென்னவிதமாகத் தெரிகின்றனவென்றுகேட்க, அவள் சொன்னதாவது:—பூமியை நெருங்கிக் கணக்கில்லாத சூக்ஷம சரீரங்கள் வீடுகளையும் மனைகளையுஞ் சுற்றிச்சுற்றிக் கராவிக்கராவித் திரிகின்றன. உலகத்திலிருக்கையில் தீமையான ஆசைகளிலிருந்தவர்களின் ஆத்துமாக்கள் ஆசித்திருந்த பொருள்களைச் சுற்றிச்சுற்றி அந்த ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள ஸ்தூலசரீர மில்லாததால் வேதனைப்பட்டுக்கொண்டு திரிகின்றன. பெண்ணாசையில் மூழ்கியிருந்தவர்களின் ஆத்துமாக்கள் பெண்களைச் சுற்றிச் சுற்றித் திரிந்து அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ளக் கூடாததால் வேதனைப்பட்டுக்கொண்டு திரிகின்றன. பொருள் சம்பாதிப்பதிலேயே சீவிய காலங்களைக் கழித்தவர்களின் ஆத்துமாக்கள் பொருள்களை ஆவலாய்ப்பார்த்து அலைந்தலைந்து வருத்தப்பட்டுக்கொண் டிருக்கின்றன. இதுபோலவே உயிரோடிருந்தவர்கள் எந்தெந்த ஆசைகளிலிருந்தார்களோ அல்லது இறக்கிற நேரத்தில் எந்தெந்த ஆசைகளில் மனம் நின்றதோ அவைகளவர்களை வேதனைப்படுத்திக்கொண் டிருக்கின்றன

இவர்களுக்கு மேலே உலகத்தில் ந
ன் நடக்கையா யிருந்தவர்களின் ஆ
த்துமாக்கள் சந்தோஷமாய்ப்பறந்து
திரிந்துகொண் டிருக்கின்றன, அவ
ர்களுக்குமேல் படிப்படியாய் மிகவு
முல்லாசமாயும் மகிழ்ச்சியாயும் ஆத்
துமாக்க ளிருக்கின்றன, எவ்வளவு
உயரப்போனாலும் கோடிக்கணக்கா
ன ஆத்துமாக்களும் வேறு பற்பல
படைப்புகளும் தெரிகின்றனவென்
று சொல்ல, இவைகளைக் கேட்டுக்
கொண் டிருந்தவர்கள் நல்லது; யாவு
க்கும் இராஜனாகிய ஆண்டவனை யு
னக்குத் தெரிகிறதாவென்று கேட்
டார்கள், அதற் கவள் எனக்குத் தெ
ரியவில்லை, அந்த ஆத்துமாக்களிடங்
கேட்டாலும் ஒருவருங் காணவில்லை
யென்றும் ஒருவருக்குங் காணக்கூடா
தென்றுஞ் சொல்லுகிறார்க ளென்று
சொன்னாள்

இந்த மெஸ்மரிஸ மென்கிற சாஸ்
திரத்திலுள்ள அதிசயங்களைச் சொ
ன்னால் அது ஒரு புத்தகமாகிவிடும்,
இப்பொழுது இதைப்படிக்கிற டக்
டர்மார்கள் வைத்தியத்திற்கு உப
யோகமாக்கி யிருக்கிறார்கள், மூட
வர்களை நடக்கச் செய்கிறார்கள், கு
ருடர்களுக்குப் பார்வை யுண்டாக
ச்செய்கிறார்கள், மெஸ்மரிஸமைக்
கொண்டு ஒருவன் வசப்பட்டபின்
அவனுக்குத் தண்ணீரைக்கொடுத்து
இது சாராயமென்று சொன்னால் அ
வனுக்குச் சாராயத்தைப்போல் மஸ்
த்தைக் கொடுக்கும், தண்ணீரை ந
ஞ்சென்று சொல்லிக்கொடுத்து அ
வன் குடித்தால் அது நஞ்சாக அவ
னைக்கொல்லும், சொற்ப காலத்து
க்குமுன் இங்கிலாந்திற் பிரசுரஞ்
செய்கிற புதினப்பத்திரிகையில் இ
தற்குபின் வருகிறசெய்தியை எழு
திருந்தது, லண்டன் பட்டணத்தி
ல் வெகு துரைமார்கள் கூடின கூட்
டத்தில் மெஸ்மரிஸம் செய்கிறவ
ரொருவர் வாசலிலிருந்த ஒரு பொ
லிஸ் கொஸ்தாப்பளை யழைத்து அ
வனை மயக்க, சொற்பநேரத்தி லவன்
அறிவற்றுப் பிரேதம்போலாகி விட்
டான், அவனுடைய காதுக்கு நெரு
ங்கி இந்த மேசையிலொரு வாளி
ருக்கிறது அதை இத்தனை மணியடி
த்து இத்தனை மினிட்டுச் சென்ற
வுடனே எடுத்துக்கொண்டு இந்த
வீட்டுக்கு வெளியே யிருக்கிற தோ
ட்டத்தில் ஒரு நெட்டைய னிருக்கி
றான் அவனை இந்த வாளினால் வெ
ட்டிக் கொல்லென்று சொல்லிவிட்டு
முகத்தைக் கையினால் தடவினான்.
உடனே படுத்து விழித்தவனைப்போ
ல் எழும்பி யிருந்துக் கொண்டான்,
குறித்த நேரம் வந்தவுடனே அவன்
வெறிகொண்டவனைப் போல் பாய்ந்
து அந்த வாளை யெடுத்துக் கொண்டு
வெளியேயோடி அந்தத் தோட்டத்
திலிருந்த ஒரு மரத்தை வெட்டிவி
ட்டுச் சத்தமிட்டான், நான் அநியா
யமாய் ஒருவனைக் கொன்று போட்
டேனென்று அலறிக்கொண்டு சன
ங்களிருக்கிற கூட்டத்திற்கு வந்தா
ன், அப்பொழு தங்கிருந்தவர்கள் நட
ந்த காரியமென்னவென்று கேட்டா
ர்கள், அதற்கவன் நானிருக்கும்பொ
ழுது என்னை அந்த வாளையெடுத்து
க்கொண்டு பாயவும் அந்தத் தோட்
டத்திலிருக்கிற மனிதனைக்கொல்ல
வும் அடக்கக்கூடாத ஒரு எண்ண
மென்னை யெழுப்பிவிட்டது, இந்த
எண்ண மெனக்குண்டாகக் காரண
மின்னதென்று சொல்லக்கூடா தெ
ன்று சொன்னான்.

அப்பொழுது அந்த வித்தைகாட்
டுகிறவன் அந்தச் சனங்களைப்பார்த்
து நானிந்த மனிதன் அறிவற்றிருக்

கும்பொழுது சொன்னபேச்சு அவனுக்கு ஞாபகமிராது, ஆகிலும் அறிவுண்டானபின் நான் நியமித்த நேரத்தில் நியமித்த காரியத்தைச் செய்யாதிருக்கவுங் கூடாது, அவனிடமின்ன இரவு இன்ன நேரத்தி லுன் மனைவியைக்கொல்லென்று சொல்லியிருந்தால் அதுபோ லந்தநேரத்தில் அவன் மனைவியை அவனுக்குக் கொல்லாமலிருக்கக் கூடாது கொன்றே போடுவானென்று சொன்னார். அவனுடைய சித்த மென் சித்தத்துக்கு வசப்பட்டுப் போயிற்றென்று சொன்னார். இந்த சாஸ்திரத்தைப் படித்தவர்கள் உலகத்தில் வெகு பெயர்களிருக்கிறார்கள். காலத்திற்குக் காலம் இலங்கைக்கும் வருகின்றார்கள். அவர்களிடம் போனாலவர்கள் செய்கிறதைக் கண்ணாற் கண்டுகொள்ளக்கூடும். இன்னுமிந்த சாஸ்திரத்தைப்பற்றி புத்தகங்களை யழைப்பித்து வாசித்தாலும் நன்றாய் விளங்கும்.

மெஸ்மரிஸ மென்பதையும் மஃரிபாவுடைய வழியையுஞ் சொன்னால் மிகவு மிலேசுபோலிருக்கும், அவைகளை நடத்துவது மிகவும் பிரயாசம்.

மெஸ்மரிஸம் பலவிதமாகச் செய்யக்கூடும், மிகவு மிலேசான விதமாகிறது வசப்படுத்த நினைத்தவனை ஒரு நாற்காலியிலிருக்கச்செய்து அவனுடைய நாற்காலியிலும் கொஞ்சமுயரமான ஒரு நாற்காலியிலிருந்து கொண்டு, உனது இரண்டு கைப் பெருவிரல்களைக் கொண்டும் அடுத்த விரல்களைக் கொண்டும் அவனுடையஇரண்டு பெருவிரல்களையும் பிடித்துக் கொள், உனது பெருவிரல் உட்புறமும் அவனுடைய பெருவிரல் உட்புறமுஞ் சேர்ந்திருக்கவேண்டும், அவனுடைய முழந்தாழ்களிரண்டும் உனது முழந்தாழ்களுக் கிடையே வைத்துக் கொண்டுஉனது மனத்தைப் பலஎண்ணங்களிலுஞ் செல்லாமல் உறுதியாக் நிறுத்திக்கொண்டு,கால்மணி நேரம்வரையும் அவன் கண்ணைக் கூர்மையாய்ப் பார்த்துக்கொண் டிருந்தால் அவனுடைய விரற்சூடும் உன்விரற்சூடு மொருஸ்தானத்தில்வரும் அப்பொழுது அவன் விரல்களை விட்டுப்போட்டு திறந்த கையாக வலது கையை வலது புறமாகவும், இடது கையை இடது புறமாகவுமெடுத்துவிட்டு, திரும்ப உன் கைகளையுயர்த்தி அவன் தோள்களில் மெதுவாய் வைத்துக் கொண்டு சொற்பநேரமிருந்து உனது கைகளைக்கொண்டு மெதுவாயவன் கைகளைத் தடவவேண்டும், அதன்பின் அவன் மேலிற்படாமல் உனது உள்ளங் கைகளால் தடவுவது போல் முகமிருந்து நெஞ்சுவரையும் பின்பு நாபிவரையும் கையைக் கொண்டுவரவும், பின்பு அவன் கால்களுக்கு முன் விரல்வரையும் திறந்த கையைக் கொண்டுவரவும் இவ்விதஞ் செய்யும்பொழுது அவனுக்கு மயக்கமுண்டாகி கண் சோர்ந்துபோகும், உனது சரீரத்தின் காந்த தத்துவம் அவன் சரீரத்திற்சென்று உனது மனத்திற்கும் அவன் மனத்திற்கு மொரு கொழுகுத லல்லது சம்பந்தமுண்டாகிவிடும், நீ நினைப்பதையவன் நினைப்பான், நீ செய்வதையவன் செய்வான்.

ஆனாலுனக்குக் கஷ்டமுண்டானபொழுது இவைகளெல்லாம் மிகவு மற்பமாய்க் காண்பாய், ஆனாலிவைகளையறிந்திருப்பது உனக்கு உபயோகமாயிருக்கும். ஒருவனிவ்விதமான

காரியங்களைச் செய்யக்கண்டால் அவைகளைக் கண்டு மயங்கி விடாமலும், அப்படிச் செய்கிறவன் விலாயத்தை யுடையவனென்று நினைத்துவிடாமலு மிருப்பதற்கே. முகியித்தீனிபு அறபிறளியல்லாகுஅன்கு இப்படிப்பட்டவைகளெல்லாம் சிஹ்றென்றும், சிஹ்றும் விலாயத்தைச் சேர்ந்தவைகள்தான் ஆகிலும் இப்படிப் பட்டவைகள் கீழ்மையும் கெடுதியையு முடையவைகளென்று சொல்லியிருக்கிறார்கள். சூபியாக்களிவைகளை மிகவும் அற்பமானவைகளென்றும் உயர்ந்தமக்காம்களை ஏறுதற்குத் தடையானவை களென்றுஞ் சொல்லுகிறார்களென்று சொன்னார்.

முரீது, தாங்கள் சொன்னது எனக்கு நன்றாய் விளங்கிற்று, நோய்களைக்கொண்டும் மிதாலுடைய ஆலம் வெளியாகிறதுமுண்டு மென்று சொன்னீர்களே, அதுவுமெனக்கு நன்றாய் விளங்கச்செய்ய வேண்டுமென்று கேட்டான்.

செய்கு, நித்திரையிலிருந்து விழிக்காமல் சிலர் எழும்பித்திரிகிறது நீ கேட்டிருக்கும் இது ஒரு நோயாயிருக்கும், வைத்திய நூல்களி லிந்த நோயுள்ளவர்களுடைய குணங்களில் ஆச்சரியப்படத்தக்க குணங்களைச் சொல்லியிருக்கிறார்கள், இந்த நோயாளிகளிற் சிலர் படுக்கையை விட்டெழும்பிக் கதவைத்திறந்து குதிரைலாயத்திற்சென்று குதிரையையெடுத்து ஜீனப்பூட்டி ஏறிப் பல விடங்களுக்குப் போய்த் திரும்பவும் லாயத்திற்குவந்து குதிரையையுங் கட்டி ஜீனியையும் வைக்கவேண்டிய தலத்தில் வைத்துவிட்டு வீட்டிற்கு வந்து படுத்து, காலையில் விழித்தபின் இரவு நடந்ததொன்றுந் தெரியாதவர்களாயிருப்பார்கள். சொப்பனம் கண்டாலும் விழித்தவுடன் ஞாபகமிருக்கும் இவனுக்கு ஒன்றும் ஞாபகமில்லாதவனாயிருப்பான். இன்னுஞ் சிலர் இரவி லெழும்பிச் சில வேலைகளைச்செய்து காலமேயொன்றும் ஞாபகமில்லாமலிருந்து மற்றநாள் இரவி லவ்வேலைகளின் குறைவுகளைச் செய்துமுடிப்பார்கள், அவர்களின் தன்மை இரண்டு பெயர்களைப் போலிருக்கும், இரவில் நடக்கிறது புத்தியைக்கொண்டும் யோசனையைக் கொண்டும் செய்தாலும் பகலிலொன்றும் ஞாபகமிராது. இதுவுஞ் சூக்ஷமசரீரத்தின் குணமாயிருக்கும். அதற்குக்காரணம் நோயால் அவ்விரண்டு சரீரங்களின் பற்றுக்குறைந்திருப்பதே. இன்னும் மவுத்து நெருங்கின நேரத்தில் தனக்கு மிகவும் அன்பானவர்களுக்குச் சொப்பனத்திலே தோற்றப்படுவது முண்டு. விழிப்பிலும் தோற்றப்படுவது முண்டு, இதை ரூபிக்க அநேக அத்தாட்சிகளிருக்கின்றன, ஆகிலு மனக்கிப்பொழுது தேவையில்லை. பெரியோர்களுக்கு எங்கள் ஸ்தூலசரீரம் ஒரு விடத்திலிருக்க, சூக்ஷம சரீரத்தோடு வேறொரு விடத்திற்குச் சென்று அச்சரீரத்தை ஸ்தூல சரீரத்தைப் போலாக்கி மனிதர்களோடு சம்பாஷணை செய்யவுங்கூடும். இன்னும் ஆகாச நுண்ணணுக்களைக் கொண்டு தங்களைப்போலவே பல ரூபங்களை யுருவாக்கவுங் கூடும், அவுலியாக்களுடைய சரித்திரங்களை வாசித்தால் நான் சொல்லியது நன்றாய் விளங்குமென்று சொன்னார்.

முரீது, சில சொப்பனங்களும் இந்த ஆலத்தைச் சேர்ந்தவைகளென்று சொன்னீர்களே அதைக்குறித்தும்

என் மனம் திருப்தியடையச் செய்ய வேண்டுமென கேட்டான்.

செய்கு, நான் பின்னால் நபிமார்களுக்கு வெளியாக்கப்படுகிற வஹிக்கும், அவ்லியாக்களுக்குண்டாகிற இல்ஹாமுக்கு முடைய வித்தியாசத்தை யுனக்கு விவரித்துக் காட்டும் பொழுது சொப்பனத்தைப் பற்றிப் பேசுவோமென்று சொன்னார்.

## மந்திரம், சூனியம், இந்திர ஜாலம்.

---

முரீது, மந்திரங்களும் சூனியங்களும் இந்த ஆலத்துக் குரியவைகளென்று சொன்னீர்களே இவைகள் நிசமல்லவென்று நானிதுவரையும் நினைத்திருந்தேன், தாங்களிவைகளும் மிதாலுடைய ஆலத்திற் சேர்ந்தவைகளென்று சொன்னது எனக்கு மிகவும் மனக்குழப்பத்தைக் கொடுத்திருக்கின்றது, அது நீங்குதற்குத் தக்க அத்தாட்சிகளை என்மேல் கிருபைகூர்ந்து வெளியாக்கும்படி மன்றாடுகிறேனென்று சொன்னான்.

செய்கு, மந்திரம் சூனியம் முதலியவைகளுக்கெல்லாம் நமது ஆரிபீன்கள் சிஹ்றென்று சொல்வார்கள். அநேகர் தங்களுக் கிவைகள் தெரியுமென்று பாசாங்கு காட்டினாலும் அவைகளைச் செய்வதற்குத் தேவையான மட்டு தங்கள் சித்தத்தை வலுப்படுத்துகிறவர்கள் மிகவுஞ் சொற்பம், சிஹ்று உண்மையென்பதற்கு குருவானைக்கொண்டும் ஹதீதைக்கொண்டும் ஆரிபீன்களி னைத்துமையான பேச்சுகளைக்கொண்டும் அத்தாட்சிப்படுகின்றது. நீ! இவைகளைப்பற்றிச் சந்தேகங் கொண்டிருந்தது எனக்கு ஆச்சரியமல்ல, இவ்விஷயங்களைப்பற்றி எனது சரித்திரத்திற் கொஞ்சம் சொல்லுகிறேன் கேள். நான் சிறுபிள்ளையாயிருக்கும் பொழுது எனக்கொரு சகோதரரிருந்தார் அவரொரு ஆலிம், பக்தியும் சாலிஹான நடக்கையு முடையவர், நான் ஒன்பது பத்து வயதுப் பிராயமாயிருக்கையில் எனது கல்பில் நமது மார்க்கத்தின் உண்மையெனும் விதையைத் தூவிவிட்டார், அது எனது கல்பில் முளைத்து வந்தது, இருபது வயது மட்டுப் பிராயமாகும் வேளையில் என்னோடு ஒரு காபிரான மனிதன் மிகவுஞ் சிநேகிதமாயிருந்தார், அவர் கல்வியில் மிகவும் தேர்ச்சியுடையவர், ஆனாலவர் மந்திரம் சூனியங்களெல்லாம் பொய்யென்று சொல்லுவது மல்லாமல், படைத்தவனொருவ னில்லையென்றும், நபிமார்களுடையவும் ஒலிமார்களுடையவும் கறுமாத்துகள் பொய்யென்றுஞ் சொல்லுகிறவர், அவர் பலாசிபாக்களுடைய புத்தகங்கள் மிகுதம் வாசித்தவர், என்னோடு சம்பாஷணை செய்யும் வேளையெல்லாம் தன் கொள்கையை என் மன மேற்றுக் கொள்ளுதற்குத் தர்க்கங்கள் பேசிவந்ததுமல்லாமல், அவரிடமிருந்த பலாசிபாக்களுடைய புத்தகங்களை வாசிக்கும்படிக்குந் தந்தார், நானவைகளை வாசித்துவரும்பொழுது என் மனத்திற் கலக்கமுண்டாகிவிட்டது மன்றிப் பற்பல சந்தேகங்களுமுற்பத்தியாகி விட்டன இன்னும் நமது ளாஹிறுடைய உலமாக்கள் கோர்வை செய்திருக்கிற சில கித்தாபுகளிற் சொல்லியிருப்பவைகள் பூமி சாஸ்திரம் வானசாஸ்திரம் தத்துவ சாஸ்திரமாகிய வைகளி லென்மன

த்திற்கு உண்மையென்று தெரிந்த வைகளுக்கு மாருயிருப்பது எனக்கு மயக்கத்தைக் கொடுத்தது. அல்லாகுத்தஆலா யிருக்கிருனென்பதை முழுதும் அவிசுவாசங் கொள்ளாது போனுலும், மவுத்துக்குப் பின்னுள்ள கபுறின் அதாபு கேள்விகணக்கு நரகத்தின் அதாபு முதலியவைகள் என் மனதி லுறுதியாகாமல் சரீர இச்சையிலும் துன்யாவினுசையிலும் மூழ்கிவிட்டேன். இந்த ஹாலாக எனக்கு வயது இருபத்தொன்று மட்டாயிருக்கையிலெனது தமையனுருடைய அந்திய காலமாகி என்னை யழைத்துக் கட்டி முத்தமிட்டு என் இருபையான தம்பியே ! நானுன்னை ப்பிரியுங்காலஞ் சமீபித்துவிட்டது, நீ காபிரீன்களுடனே எவ்வேளையுஞ் சிநேகிதங் கொண்டாடுகிறவனுயிருக்கிருய், உனது ஈமானை சலாமத்தாய் வைத்துக்கொள்ளுதற்கு எவ்வேளையும் அச்சமாயிருந்துகொள், உனது ஈமானுக்கு நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்ல முடைய கார்மானங் கிடைக்கும்படி துஆக்கேட்கிறேன்; ஆகிறத்திலும் உன் ஈமானைப்பற்றி துஆக்கேட்கிறவனு யிருப்பேனென்று வசிய்யத்துச் சொன்னபின் மவுத்தானுர்கள். நானிவைகளை முழுதும் அவநம்பிக்கை கொள்ளாமல் ஒவ்வொன்றையும் ஆராயவேண்டுமென்று முதலாவது கண்கட்டி வித்தையென்று சொல்லுகிற இந்திரஜாலத்தைப் படித்தேன், இதற்கு அறபில் சீமியா என்று சொல்லுகிறது, இது முழுதும் கையின் சாமார்த்தியமும் சில தந்திரங்களு மல்லாமல் வேருென்று மில்லையென்பதை அறிந்தேன். பசாசுகளிருப்பதென்பது நிசமோவென்றறிய நடுச்சாமங்களில் சவக்காலைக் கருகாயிருந்த பாதையால் தனியே அநேக முறைகளிற் போனேன் ஒன்றுந் தோற்றவில்லை, இவ்வித மிருக்கையி லெங்கள் சக்கரவர்த்தினியின் இளையமகன் இலங்கைக்கு வந்தபொழுது காட்டுயானைகள் பிடிக்க ஆயத்தஞ்செய்யப்பட்டது, நானும்போயிருந்தேன், யானைகளைப்பிடித்துக் கட்டுஞ் சமயத்தில் நான்மிகவுஞ் சமீபமாக வேலிக்கப்பால் நின்று பார்த்தேன், ஒரு யானையின் பின்கால்களைக் கட்டியபின் முன்கால்களைக் கட்டவிடங்கொடாமல் மிகவும் வேகமாய்க் கட்டுகளையறுக்கத் தெண்டித்தது, மந்திரவாதி நெருங்கும்வேளையில் தும்பிக்கையை வெகுவேகமா யுயர்த்தி அவனையடிக்கப் போகும்பொழுது அம்மந்திரவாதி கையை யுயர்த்திக் காட்டி ஹக் என்று சொன்னுன், அக்ஷணமே தும்பிக்கையைப் பணித்து முன்கால்களுக்கு மிடையேசெலுத்திச் சாட்டாங்கஞ் செய்வதுபோல் சாந்தமாயிருந்தது, இதைக்கண்ட நாள்முதல் மந்திரத்தைப்பற்றி ஆராய்தல் செய்துவந்தேன், அந்த நாளையில்தான் ஐரோப்பாவி லிருந்து நானுனக்குச் சொன்ன பிறர் மனத்திலிருப்பதைச் சொல்லுகிறவர்களைக்கண்டதும், மெஸ்மரிஸ் மென்று சொன்ன வித்தையைக் கண்டதுமாயிருக்கும். இவைகளைப் பார்த்தவுடன் மறைவான ஆலங்களிருக்கக் கூடுமென்பது என் மனத்திலுற்பத்தியாகி அவைகளை யாராயத் துணிந்தேன், அவைகளைப்பற்றிய புத்தகங்களை வரவழைத்து வாசித்தேன், ஆரிபீன்களுடைய கித்தாபுகளை வாசித்தேன். ஆரிபீன்களுடைய கித்தாபுகளிற் சொல்லியிருப்பதில் புத்தியைக்கொண்டு அறியக்கூடியவைகளெல்லாம் புத்திக்கும் சாஸ்திரத்

இற்கும் விரோதிக்கா திருப்பதையும் அல்லாகுத்தஆலா ஒருவனிருக்கிறு னென்பதும், நமது மார்க்கத்தின் ளாஹிறும் பாத்தினும் ஒன்றுக்கொ ன்று விரோதிக்கா திருப்பதும், என் மனத்தி லுறுதியாகி விட்டது.

இவ்வித மென் மனத்தி விவைக ளெல்லா முறுதியாயிருக்கையில் எ ன்னோடு சிநேகிதமாயிருந்த எனது மனத்தில் சிறுபிராயத்திற் கலக்கத் தை யுண்டாக்கியவருடைய மனைவி இறந்து. அவர் மிகவும் மனச் சஞ்சல மாயிருக்கையி லென்னிடம் வந்து நாங்களிருவரும் படைத்தவனொரு வனிருக்கிறானோ இல்லையோ வென் பதைப் பற்றியும் மவுத்துக்குப் பின் நடக்கிற காரியங்களைப் பற்றியும் அ நேக முறைகளில் தர்க்கமாடி வந் தோமே, அவ்விஷயங்களைப்பற்றி நீர் சொல்லும் நியாயங்களை யறிய என க்கு மிகவு மாவலாயிருக்கின்றது. நீர் சொல்லுகிறபடி மவுத்திற்குப்பின் அ றுவாகுகளிருக்குமென்பது என் மன த்திற்கு நிச்சயப்பட்டால் எனக்கு மிகவுஞ் சந்தோஷமாயிருக்கும். என் மனைவியை மறு ஆலத்தில் சந்தித் துக்கொள்ள இடமிருக்கின்றதென் பது எனக்குத் திட்டமானல் எனக் கு இப்போதிருக்கிற சஞ்சல மொரு மட்டிற்கு ஆறிப்போகு மென்றார். நானவருக்கு அவர் மனமேற்றுத் கொள்ளத்தக்க நியாயங்களைக்காட் டி அவர்முன் நினைத்திருந்த எண் ணங்கள் நீங்கி நான் சொல்லியவை களை யுறுதிகொண்டாரென்று செய் கு சொன்னார்.

முரீது, தாங்கள் சீமியாவென்று ம், சிஹ்றென்றும், ஹீமியாவென்று ம், றீமியாவென்றும், வாசிலாத்துக ளென்றும் சொன்னீர்களே இவை களை எனக்கு விளங்கச் சொல்லவே ண்டுமென்று கேட்டான்.

## சீமியா, சிஹ்று, ஹீமியா, றீமியா, வாசிலாத்துகள் சித்திகள் -

செய்கு, சீமியாவென்பது இந்திர ஜாலம், இதைக்குறித்து நானுனக் குச் சொல்லியிருக்கிறேன். இவை கள் கைச்சாமர்த்தியத்தைக் கொண் டும், சில தந்திரங்களைக் கொண்டுஞ் செய்கிற காரியங்களாயிருக்கும். சிஹ் றென்பது வசியம், வசப்படுத்திக் கொள்ளுதல். மோகனம், மோகத் தை யெழுப்புதல். தம்பனம், உசு ம்பக்கூடாதபடிக்குச் செய்தல். ஆக ருடணம், வரவழைத்தல். வித்துவே டனம், பொல்லாங் குண்டாகுதல். பேதனம், மனிதர்களுக்குள்ளே பிரி வினை யுண்டாக்குதல். மாரணம், மர ணமுண்டாக்குதல் ஆகிய அஷ்டகரு மங்களென்றும், சூனியமென்றுஞ் சொல்லப்படும். ஹீமியாவென்பதற் கும் ஹிந்து ஞானிகள் சித்தியென்று சொல்லுவார்கள். அநிமா, தன்னை யொரு அணுபோலாக்கி நிதானித்து க்கொள்ளல் மரிமா, தன்னை மட் டில்லாத பருப்பமாக்கிக் கொள்ளல். ஆகாயப்பிரவேசம், ஆகாசத்திற்செ ன்று மறையுதல், ஆகாய கமனம், ஆகாசத்தில் நடக்குதல். அக்கினித் தம்பம், நெருப்புச் சுடாதிருக்கச்செ ய்தல். அதிர்சயம், கண்ணுக்குத்தெ ரியாமற் போகல். பரிகாசப் பிரயா ணம், உயிரோடு வேறொரு சரீரத்து க்குட்புகுதல். பிராப்தி, விரும்பின தெல்லாம் செய்து நிறைவேற்றிக் கொள்ளல் முதலிய சித்திகளிருக்கி ன்றன. இவைகள் யோகஅப்பியா

சத்தைக்கொண்டு செய்கிறதாகச் சொல்லுகிறார்கள். யோக அப்பியாசத்தி லவர்களிடத்தே பிரதானமாவது சுவாசத்தை யடக்குதல். ஒரு மனிதனுக்கு ஒருநாளில் இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் வெளியாகிறதில் நாளொன்றுக்கு இரண்டல்லது நாலாகக் குறைத்து, கண்டம் இதையம்நெற்றி கபாலம் நாபி யாகியவைகளில் சிந்தையைத் தரித்தல். இதற்குத்தாரணை யென்று சொல்லப்படும். வாசிலாத்துகளென்பதும் இவைகளைப்போ லுள்ளவைகள் தான். ஆகிலுமிவைகளைப் பற்றிய விதிகளில் வித்தியாசங்க ளிருக்கின்றன.

முரீது, ஹிந்துஞானிகளிடத்தி லல்லது இரிஷிகளிடத்தில் இந்தச்சித்திகளிருக்கவுங் கூடுமென்பது திட்டமாவென்று கேட்டான்.

செய்கு, அவர்களுக்கு இந்தச் சித்திகளிற் சிலது இருக்கின்றனவென்பது நமது அவுலியாக்களுடைய சரித்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு மட்டுமெல்ல, சூபியாக்களில் கீழான மறுத்தபாவையுடைவர்க ளிடத்திற்றானும் இச்சித்திகளுடையவர்க ளிருக்கிறார்கள். இந்தச்சித்திகளை நீ பெரியவைகளாய் நினைக்கவேண்டாம், இவைகளெல்லாம் மிதாலுடைய ஆலத்திற்குட்பட்டவைகள் யாவுக்கும் மேலான மக்காமாவது வுசூலுடைய மக்காம். நமது அவுலியாக்களும் குத்துபுமார்களும் இவைகளை மிகவும் அற்பமாகவும், இவைகள் அல்லாகுத்தாலாவின் திக்றைவிட்டும் வேறுபராக்கிலிழுத்துவிடுமென்றும் இவைகளுக்காகப் பிரயாசப்பட மாட்டார்கள். ஆனால் இவைகளை மட்டுமெல்ல, இவைகளுக்குமேலான அற்புதங்கள் செய்ய அவர்களுக்குத் தத்துவமிருக்கும்.

## முஸ்லிம்களல்லாத முஹக்கிக்கீன்களுக்குசலாமத் துண்டா இல்லையா?

முரீது, முஸ்லிம்களல்லாதவர்கள் அல்லாகுத்தாலாவைத் தவ்ஹீது செய்து முவஹ்ஹிதீன்க ளாவார்களா? அவர்களுக்கு ஆகிறத்தில் சலாமத்துண்டாவென்று கேட்டான்.

செய்கு, உலமாக்கள் எங்கள் நாயகம் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பேரில் விசுவாசங்கொள்ளாதவர்களுக்கு ஆகிறத்தில் மீட்சி இல்லையென்று சொல்லுகிறார்கள். ஆகிலும் முகியித்தீனிபுனு அறபிறளியல்லாகு அன்கு புத்தூஹாத்துல் மக்கியாவில் ஒருவன் அல்லாகுத்தஆலாவைத் தவ்ஹீது செய்து, முவஹ்ஹிதீன்களுடைய மக்காமைச் சேர்ந்தால் அவனை மூமினென்று சொல்லக்கூடாது, ஆகிலும் அவன் நரகத்தைவிட்டும் மீட்சிபெற்றவனா யிருப்பானென்று சொல்லி, ஒருவன் லாயிலாஹ இல்லல்லாகுவென்ற கலிமாவைக்கொண்டு மவுத்தானால் அவனுக்கு நரகம் ஹறாமென்ற திருவசனத்தை அத்தாட்சியாகக் காட்டியிருக்கிறார்கள். ஆகிலும் அப்துல்கரீமுல்ஜீலீ றகிமகுள்ளாகு இதற்குவிரோதஞ் சொல்லுகிறார்கள், நீ நன்றாய் விளங்கிக்கொள்ளவேண்டும், நான் ஹிந்து ஞானத்தைப்பற்றிப் பேசுவதெல்லாம் நீ யவர்களுடைய ஞானத்தைச் சரியென்று ஒப்புக்கொள்ளுதற்கல்ல, அவர்கள் ஞானத்தையும் நமது ஞானத்தையு மொப்பிட்

டிக் காட்டவும், நமது யோகத்திற்கு மவர்களின் யோகத்திற்கு மிருக்கிற வித்தியாசத்தை யுனக்குத் தெரிவித்துக்கொடுக்கவும், அவர்களுடைய யோகவழி மிகவுங் கஷ்டமென்பதையும் மோசங்கள் சம்பவிக்கக் கூடுமென்பதையும், நமது யோகவிதிகளோ மிகவு மிலேசும் மோசங்களுக்கிடமில்லாதவைகளென்றும் காட்டுதற்கே. இவைகளையும் இந்தச் சித்திகளுண்டாவது இவ்விதமென்பதையும் திக்ஷைப்பற்றிப் பேசும்பொழுது விளக்கிக் காட்டுவேனென்று சொன்னார்.

## சித்திகள்.

---

முரீது, தாங்கள் சித்திகள் நிசமென்பது அவுலியாக்களுடைய சரித்திரங்களால் அத்தாட்சிப்படுகின்றது என்று சொன்னீர்கள், ஆனால் அந்தச் சரித்திரங்களில் மிகுதியெல்லாம் கோர்வை செய்தவர்கள் அவைகளுண்மையென்று நினைப்பதற்கு அத்தாட்சிகள் காட்டாததாலும், அவைகளைக் கண்டவர்களின்னாரென்றுஞ் சொல்வியில்லாததாலும் அச்சரித்திரங்களை யுண்மைகொள்ளுகிறவர்களுக் கல்லாது சந்தேகிக்கிறவர்களுக்குப் போதிய அத்தாட்சிகளுடையவைகளாயிருக்கக் காணவில்லை. ஆகையாலிவ்விஷயத்தில் உறுதிகொள்ளத்தக்க அத்தாட்சிகளிருந்தால் சொல்லும்படி தங்களின் தயவைக் கோருகிறேன்.

செய்கு, உனக்கொரு அத்தாட்சி சொல்லுகிறேன் சித்திகளிலொன்று தன்னுயிரைத் தன்சித்திக்குக் கீழ்ப்படுத்தி யதைச் சரீரத்திலொருதலத்தி லமைத்துவிட்டுச் செத்தபிணம் போல் சிலகாலமிருந்து, திரும்பவு முயிரா எழும்பிவிடுகிறது. 1844-ம் ஆண்டில் இந்தியாத்தேசத்தில் பஞ்சாப்பென்கிற பட்டணத்தில் ஸீக்குச்சாதிகளுக்கு றஞ்சீத்சிங்—என்கிற ஒரு இராஜனிருந்தார், அவர் இங்லீஷ் அரசாட்சிக்கு அடக்கமாயிருந்தமையால் இங்லீஷியருடைய ஒரு ஏஜன்று அந்த நகரத்தில் நிறுத்தப்பட்டிருந்தார். அந்த நாளையில் அந்தப் பட்டணத்திற்கு ஒரு பக்கீர் போயிருந்து அவர் வெகு அற்புதங்கள் செய்கிறாரென்று அந்த ராஜனுக்குத் தெரியவந்து அவரை யழைத்து நீர் அற்புதங்கள் செய்கிறதாகத்தெரியவந்திருக்கின்றது, நான் காணும்படி ஏதாகிலுஞ் செய்யவேண்டுமென்று சொல்ல, பக்கீர் நல்லது நான் சொல்லுகிறபடி செய்யுங்கள். என்னை நன்றாயுருட்டிக்கட்டி ஒரு பெட்டியிற்போடுங்கள், அந்தப் பெட்டியைப்பூட்டித் திறவுகோலைத் தாங்கள் வைத்துக்கொள்ளுங்கள், பின்பு ஒரு ஆழமான குழியைத்தோண்டி அந்தக்குழியில் அந்தப் பெட்டியைப்போட்டு மண்ணையுங் கற்களையும் போட்டு மூடிப்போடுங்கள், அந்தக் குழியைச் சுற்றியும் மேலையும் கற்களால் வாசல்களில்லாமல் கட்டிவிட்டு உங்களுக்குப் பிரியமானவர்களை வைத்துக் காவல் படுத்திவையுங்கள், நாற்பது நாள் சென்றபின் கட்டுமானத்தை யுடைத்துக் குழியைத்தோண்டி பெட்டியை யெடுத்துத் திறந்து வெளியே என்னைவைத்துச் சொற்பநேரம் என் வாயில் தண்ணீரைக் கொஞ்சங்கொஞ்சமாய்ப் பருக்குங்கள், நானுயிரோடிருந்தால் எனது அற்புதம் உண்மையென்று கண்டு கொள்வீர்களென்று சொன்னார். இராஜா உடனே தன் மந்திரிமா

ர்களையும் இங்லீசுடைய எஜன்று மார்களையும் இன்னும் இங்லீஷ் உத்தியோகஸ்தர்களையும் அழைத்து இச்சங்கதியைச் சொல்லி, நாங்கள் இதைப் பரிசோதிக்கவேண்டும், வெகு பேணுதலாயும் கவனமாயும் சகல வேலைகளையுஞ் செய்யவேண்டுமென்று தீர்மானித்து அந்தப் பக்கீர் சொன்னபடியே சகலமுஞ் செய்தார்கள். இந்த அதிசயமான காரியம் நடக்கப்போகிறது இந்தியா தேசத்திற் பிரசுரஞ்செய்கிற பத்திரிகைகள் மட்டிலுமல்ல, ஐரோப்பாவிலுள்ள பத்திரிகைகளிலும் வெளியாயிற்று. இதின் முடிவையறிய இச்செய்தி பிரசுரமான தேசங்களிலுள்ளவர்களெல்லோரும் ஆவலாய் வழிபார்த்திருந்தார்கள். அந்தக் கட்டுமானத்தைச் சுற்றி இங்லீஷ்ப் போர்வீரர்களும் ஒபிசர்மார்களும் இரவும்பகலும் காவலிருந்தார்கள், நாற்பது நாள் சென்றபின் சுவரை யுடைத்துக் குழியைத்தோண்டிப் பெட்டியைத் திறந்தெடுத்துப் பார்க்கக் கட்டிவைத்த கட்டுகளோடு சரீரமுயிரில்லாத கட்டையைப்போலிருந்தது, கட்டுகளைத் தறித்து சொன்னபடி தண்ணீர் பருக்கிவரும்வேளையில் தொடக்கத்தில் நாவு|உசும்புதற் காயிற்று, சற்றுநேரத்திற்குப்பின் கண்ணைத்திறந்து எழும்பி இராஜாவுக்கும் அங்கிருந்த சபையாருக்குஞ் சாட்டாங்கஞ்செய்தார். இந்தச்செய்தி பலதேசங்களிலும் பிரசுரஞ்செய்யப் பட்டதுமல்லாமல் இங்லீஷியருடைய பல புத்தகங்களிலும் சொல்லியிருக்கின்றன.। மெக்ஸ்முளர்—என்கிற துரை எழுதிய புத்தகத்திலும் இதைச் சொல்லி, இது சில பிராணிகளுடைய உயிர் கோடைகாலத்தில் அல்லது மாரிகாலத்தில் உடலிலமைந்திருந்து காலம் மாறினவுடன் உயிர்த்தெழும்புவதுபோலாயிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். உனக்கு வேண்டுமானால் அக்காலத்திற் பிரசுரஞ்செய்த பத்திரிகைகளையும் புத்தகங்களையும் பார்த்துக்கொள்ளலாம், இப்படிப்பட்ட அற்புதங்களில்லையென்று சொல்லுகிற கிறிஸ்தவர்களே யேற்றுக்கொள்வதால் இதிலுமதிக அத்தாட்சிகளிருக்கக் கூடுமா? இன்னுமிதுபோல் அநேக அத்தாட்சிகள் காட்டக்கூடும், ஆகிலுமுனக்கு அறிவுண்டாக வுண்டாக இவைகளின் அந்தரங்கங்கள் தெரியவந்து இவைகளை மிகவு மிலேசாய்க் காண்பாயென்று சொன்னார்.

முரீது, பிசாசி இருக்கிற தென்பது உண்மையோ அல்லவோ வென்பது என்மனத்திற்குத் திட்டமாகும்படி செய்விக்கவேண்டியதென்றுகேட்டான்.

## பிசாசியும் ஜின்னும்.

செய்கு, உன் கேள்வி மிகவும் வருத்தமான கேள்வியாயிருக்கிறது, பிசாசென்கிற சொல்லை தமிழர் ஒரு பொருளைவைத்துப் பாவிக்கிறார்கள். நாம் வேறொரு பொருள்வைத்துப் பாவிக்கிறோம். தமிழர்களின் கொள்கைப்படி இறந்தவர்களில் பாவிகளின் றூகுகள் தான் பிசாசிகளாகத் தோற்றப்படுகிறது, இவ்விஷயமுனக்கு நன்றாய் விளங்கும் பொருட்டு ஹிந்து ஞானிகளும் புத்து ஞானிகளும் நபுசைப் பிரித்திருக்கிற எழுமறுத்தபாக்களையும் நீ நன்றாயறியவேண்டும். ஸ்தூலசரீரம், சூக்ஷும சரீரம், பிராணம், காமம், மனம்,

புத்தி, ஆத்துமாவாகிய ஏழு மறுத்த பாக்கள். நமது ஞானப்படிக்கு ஸ்தூலசரீரத்திற்கு ஐஸ்மென்றும், சூக்ஷமசரீரத்திற்கு மிதாலியென்றும், பிராணத்திற்கு றூகுல்ஹைவானியென்றும், காமத்திற்கு நபுசு அம்மாறுவென்றும், மனத்திற்கு நபுசுன்ஞத்திக்காவென்றும், புத்திக்கு அக்கிலென்றும், றூகுக்கு ஆத்துமாவென்றுஞ் சொல்லலாம், ஆகிலுஞ் சொற்பவித்தியாசங்களிருக்கின்றன. நமது ஞானத்தைப்போலவே ஸ்தூலசரீரம், சூக்ஷமசரீரம், பிராணம், காம மாகிய நாலுமிறந்து சொற்பகாலத்தி லழிந்துபோகுமென்றும், அழியாததுமனம், புத்தி, ஆத்துமாவென்றுஞ் சொல்லுகிறுர்கள். சற்குணனுயிருந்த மனிதன் இறந்து ஸ்தூலசரீரம் பிரிந்தவுடனே, சூக்ஷமசரீரம், பிராணம், காமம், மனமாகிய நாலும் சூக்ஷம ஆலத்திற் சொற்பகாலமிருந்து மனம் வேருகிப் புத்தியுடனும் ஆத்துமாவுடனுஞ் சேர்ந்து தெய்வலோகஞ்சேர்ந்து சொப்பனத்தின் றன்மையாய் ஓயாத வின்பத்தை யனுபவித்துக் கொண்டிருக்கும், மற்ற நாலு மழிந்துபோகும். துஷ்டனுகவும், உலகஆசையில் மூழ்கினவனுகவுமிருந்தவனுடைய மனம் வேருனவுடனே சூக்ஷமம், பிராணம், காமமாகிய மூன்றுமொரு ரூபமெடுக்கும். அதற்குக் காமரூபமென்று சொல்லப்படும். இதற்கு அவ்வேளையில் உலக ஆசைகளில் மனங்கொழுகி இன்ன காரியத்தைச் செய்துகொண்டோ மில்லையே, இவ்வளவு பொருள்களையும் எவ்வளவு பிரையாசப்பட்டுச் சம்பாதித்தும் அவைகளையெல்லாம் விட்டுப் பிரியலாயிற்றே, மனைவிமக்களை இழக்கலாயிற்றேயென்று ஆவல்கொண்டவனுக இருந்தவனுடைய ஆவல் அந்த காமரூபத்தை இழுத்துக்கொண்டு தன் வீட்டைச் சுற்றிச்சுற்றித் தனது எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ளக் கூடாமையால் பரிதபிக்கிறதும் கராவுகிறதுமாய் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும், அதற்குத்தான் பிசாசென் றவர்கள் சொல்லுகின்றுர்கள். அவைகளில் மிகுதியாய் மனிதருக்குத் தீங்குசெய்யச் சத்தியில்லாதவைகளா யிருந்தாலும் சிலது தீங்குஞ்செய்யும். பூலோகத்திலிருக்கையில் வேடிக்கை விளையாட்டுகளில் மூழ்கி யிருந்தவர்களின் காமரூபம் மனிதர்கள் வீடுகளுக்குக் கல்லெறிகிறதும், கதவுகளைத் தட்டுகிறதும், சத்தங்க ளுண்டாக்குகிறதும், வீட்டு சாமான்களைப் பல புறங்களிலு மெடுத்தெறிகிறதுமாகிய வேலைகளைச் செய்யும். திடுகூருய்க் கொல்லப்பட்டவர்களும் தூக்கிக்கொல்லப்பட்டவர்களுந் தற்கொலை செய்தவர்களுமாகியவர்களுடைய காமரூபம் மிகவுங் கொடியது. மனிதர்கள் அப்பிசாசுகளின் குணத்திற்குத் தக்கபெயர்கள் சொல்வார்கள், நமது செய்காகிய நாயகம் அப்துல்லா பாதிமவுலானு அவர்களோடு இவ்விஷயங்களைப்பற்றிப் பேசும்போது ஒரு சங்கதியைச் சொன்னுர்கள். அதாவது:—

சென்னப்பட்டணப் பகுதியிலொரு ஊரிருக்கிறது. அதின்பெயர் எனக்கு மறதியாயிருக்கிறது, அந்த ஊருக்கொரு சாலிஹான பெரிய மனிதர் அவர்களுடைய முரீதீன்கள் மூன்று பெயர்களுடனே வந்து அந்த ஊர்ப்பள்ளிவாசலில் தங்கியிருந்தார், அப்போது அந்த முரீதீன்களி லொருவருக்குச் சுகவீனமுண்டாகி மவுத்தாகி அந்தப் பள்ளிவாசல் கபுறு

ஸ்தானி லடக்கஞ்செய்யப் பட்டார், அவரை யடக்கியபின் அந்தப் பெரியமனிதர் அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார், அந்த நாள்முதல் அந்தப் பள்ளிவாசலுக்கு வந்து இரவிற் படுத்திருந்தவர்கள் காலமே வாயினாலும் நாசிகளினாலும் இரத்தஞ் சிந்தினவர்களாக இறந்திருப்பார்கள், அதனை லொருவரும் அந்தப் பள்ளிவாசலிற் படுக்கிறதில்லை. இப்படிச் சில காலஞ்சென்றபின் அந்தப் பெரிய மனிதரும் அவருடைய சீஷர்களிருவரும் பல வூர்களுக்கும்போய்த் திரிந்துகொண்டு திரும்பவு மிந்த ஊருக்குவந்து சேர்ந்தார்கள், அவர்கள் பள்ளிவாசலிலிரவு தங்கப்போகும்போது அந்த ஊர் மனிதர்கள் இவர்களிடம் நீங்களிந்தப் பள்ளிவாசலைவிட்டுப் போனநாள்முத லிதுவரையு மிங்கு இரவிற் படுத்தவர்கள் காலமே மையித்தாய்ப் போனார்கள், ஆகையால் நீங்களங்கு படுக்காதையுங்களென்று தடுத்தார்கள். அந்தப் பெரிய மனிதர் நல்லது பார்ப்போமென்று சொல்லிவிட்டுப் பள்ளிவாசலுக்குப் போய்த்தமது முரீதீன்களிடம் நீங்களிரவுநேரத்தில் விழித்திருந்துகொண்டு கபுருஸ்தான் புறம் பாராமல் என் முகத்தையே பார்த்துக்கொண்டு நான் சொல்லித் தருகிற ஓதலை யோதிக்கொண்டிருங்கள், ஆர்வந்து பேசினாலும் மறுமொழி சொல்லாதையுங்களென்று அவர்களுக்குச் சில ஓதலைச் சொல்லிக்கொடுத்து மூவருஞ் சுற்றியிருந்து ஓதிக்கொண்டிருந்தார்கள். நடுச்சாமநேரத்தி லவருடைய மவுத்தாய்ப்போன சீஷனுடைய கபுறு பிளந்து அதில் நின்றும் ஒரு மனிதன் வெளியாகிப் பள்ளிவாசல் படிக்குவந்து இவர்களுக்கு சலாம் சொன்னான், அவனைப்பார்த்தால் இவர்களுடைய மவுத்தான சீஷனென்பதற்குச் சந்தேகமில்லை, இவர்களொருவரு மதற்கு வதற் சொல்லாமலும் இவர்களுடைய ஓதலை விடாமலோதிக்கொண்டிருந்தார்கள், பின்பவன் ஏனென்னோடு பேசுகிறீர்களில்லையென்று கேட்டான், அதற்கு மிவர்கள் மறுமொழி சொல்லாமலிருந்தார்கள், இப்படிச் சில நேரமிருந்தபின் அந்தக் கபுறிலிருந்துவந்த மனிதன் பள்ளிவாசற் படியிலிருந்து உள்ளே வந்தான் அதன்பின் அவனுக்குமுன்னேவர அல்லது பின்னுக்குப்போகக் கூடாமலாகிவிட்டது. இவ்விடமிருந் தென்னைப்போகும்படி விடுங்களென்று கெஞ்சத் தொடங்கினான், இவ்விதஞ் சிலநேரஞ் சென்றபின் அந்தப் பெரியோர்கள் அவனைப்பார்த்து நீயேனிவ்விதம் வந்து மனிதர்களைத் தீங்கு செய்கிறாயென்று கேட்டார், அதற்கவன் நானென்னசெய்வேன், எனக்குமனிதர்களினிரத்தத்தைக்குடிப்பதுபோற்சந்தோஷமானதும் இன்பமானது மொன்றுமில்லை, நானுங்களுக்குசலாம்சொன்னபோது நீங்கள் மறுமொழி சொன்னாலுடனே நானுங்கள் மூவர்கள் கழுத்துகளையுமுடைத்து இரத்தங் குடிப்பேன், எனக் கிவ்விதஞ்செய்யாம லிருக்கக் கூடாது, தாங்களெனக்குண்டாயிருக்கிற அதாபைவிட்டும் மீட்சிபெறுதற்காக அல்லாகுத்தஆலாவிடம் துவாக்கேளுங்களென்று சொன்னான், அப்போது அந்தப் பெரியோர்கள் அல்லாகுத்தஆலாவிடம் அந்தப் பாவியின் பாவங்களை மன்னிக்கும்படி துவாக்கேட்டார்கள், வெகு நேரங் கேட்டபின் அந்த மனிதனைப் போகும்படி சொல்ல அவ்னிவர்களிடம் உத்தரவுப் பெற்றுக்கொண்டு தன்

னுடைய கபுறுக்குப்போய் மறைந்து விட்டான், அந்த நாள்முதல் அந்த ப்பள்ளிவாசலிற் படுக்கிறவர்களுக்கு யாதொரு தீங்குமுண்டாகவில்லை.

மேலேசொல்லிய செய்தியை யந் தப் பெரிய மனிதர் நம்முடைய மவு லானா அப்துல்லாபாதிபவர்க ளிடஞ் சொன்னதாக, மவுலானா அவர்கள் நம்மிடஞ் சொல்லியிருக்கிறார்கள்.

கண்டியி லிப்பொழுது அட்வக் கேற்றாயிருக்கிற ஈட்டன் துரையவ வர்கள் வெகு துரைமார்களும் து ரைச்சானிமார்களுங் கூடிய கூட்ட த்தில் பிசாசுகளைப்பற்றிப் பிரசங்க ஞ்செய்ததில் அவர் பிசாசுகள் வீடு களுக்குக் கல்லெறிவதினாலும் சத் தமுண்டாக்குவதினாலும் கொழும்பி லும் காலியிலும் மாத்துரையிலும் பாழாய்ப்போன வீடுகளித்தனை யெ ன்றும் அங்கு நடந்த காரியங்களை யுஞ் சொன்னார்.

இப்படி ஹிந்துக்களும் புத்துமதஸ் தவர்களுஞ் சொல்லுகிறார்கள். நம து கித்தாபுகளி லிவைகளுக்கெல்லா ம் ஜின்களென்று சொல்லப்படுகின் றன. இவைகளி லெது சரியென்று பார்க்கும்பொழுது ஒன்றுக்கொன்று விரோதம்போலிருந்தாலும் இரண்டு மொத்திருக்கலாம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் ஒவ்வொரு பிள்ளை பிறக்கும்பொழுது ஒரு ஜின்னும் பிறக்குமென்று சொல்லியிருக்கிறார் கள், இன்னும் ஹதீதில் நம்மோ டொரு சைத்தானும் இரண்டு மலா யிக்கத்துகளும் இருக்கிறார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. முகியி த்தீனிபுனு அறபிறளியல்லாகுஅன்கு சைத்தானென்பது நபுசானிய்யாவி ன் குணமல்லது தத்துவமென்றுசொ ல்லியிருக்கிறார்கள். நாமொரு நல வான காரியத்தைச் செய்யநாடுவது மலக்கானிய்யாவின் தத்துவம், அ தைத்தடுத்து மனத்தைத் திருப்புவ து சைத்தானிய்யாவின் தத்துவம், இந்தக் கருத்தைக்கொண்டு பார்த் தால் பிசாசென்பதும் ஜின்னென் பதும் சைத்தானென்பதும் ஒன்றெ ன்று நினைக்கக்கூடியதா யிருக்கின்ற து. ஆனால் ஹிந்துக்கள் சொல்லுகிற படி இது மனுக்கள் தானென்றுசொ ல்லுவது தப்பாயிருக்கின்றது. ஹிந் துக்கள் சொற்படிக்கு மன மென்ப துதான் மனிதனினுள்ளமை. நாமு ம் நபுசன்னாத்திக்காதான் உள்ளமை யில் மனிதனென்று சொல்லுகிறோ ம். அந்த மனமல்லது நபுசுன்னாத் திக்கா நீங்கி ஹிந்துக்கள் சொற்படி நன்மை செய்தவர்களானால் தெய்வ லோகத்திற்கும் பாவஞ்செய்தவர்க ளானால் நரகலோகம் என்கிறதலத்தி ற்குஞ் சேரும். நமது கொள்கைப் படிக்கு ஆலம் பர்ஸகிலாகும். ஆனா லிவ்விஷயத்தை இன்னு மாராயவே ண்டிய திருக்கிறதென்று சொன்னார்.

முரீது, நமது றூகு சரீரத்தைவி ட்டும் பிரியும் வேளையில் மலாயிக்க த்தின் தன்மையாயும் பரிசுத்தமும் பிரகாசமு முடையதாயும் வெளியா கக் கூடுமென்றுஞ் சொன்னீர்களே! அதற்காக நான் செய்ய வேண்டிய தென்னவென்று கேட்டான்.

## சரீயத்து.

செய்கு, நமது நாயகம் நபிசல்லல் லாகு அலைகிவசல்லமவர்கள் வெளி யாக்கிய சரீயத்தென்கிற மார்க்கச் சட்டப்படி நடக்கிறதாயிருக்கும், சரீயத்தென்கிற சொல்லை வழக்கத்தி

ல் ளாஹிருன அமல்களுக்கு மட்டும் பாவித்தாலும் அந்தச் சொல்லில் தரீக்கத்து, ஹக்கீக்கத்து, மஃரிபத்து ஆகியவைக ளெல்லாம் அடங்கியிருக்கின்றன. இமாம் கஸ்ஸாலி றகிமகுல்லாகு இந்த இல்முகள் யாவையுமிரண்டுபிரிவாய்ப் பிரித்திருக்கிறார்கள். முதலாவது இல்முல்முஆமிலா, அமல்களைப்பற்றிய இல்மு. இரண்டாவது இல்முல் முக்காஷிபா, கஷ்புகொண்டுண்டாகிற இல்மு. இதின்கருத்து இல்முண்டாகி நாம் அமல்செய்கிறது தான் ளாஹிறைச்சேர்ந்தவைகள், மற்றது அமலைக்கொண்டு இல்முண்டாகிறது இது பாத்தின். நாம் பிரையாசப்படுகிறதும் அமல் செய்கிறதும் அல்லாகுத்தஆலாவை யறிகிற இல்முக்காயிருக்கும். ளாஹிறுடைய இல்முகளுக்கும் பாத்தினுடைய இல்முகளுக்குமாதாரம் குறுஆனும் நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய ஹதீதுகளுமாயிருக்கும், அதற்கு மாற்றமானவைகளெல்லாம் எந்த ஆரிபீன்கள் சொன்னாலும் எந்தக் கித்தாபி லிருந்தாலுந் தவறாயிருக்கும். ஆனால் ஆரிபீன்கள் அல்லாகுத்தஆலாவின் ஒளி பிரகாசித்தவர்கள், அவர்கள் குறுவானிலும் ஹதீதிலும் மூடலாய்ச் சொல்லியிருப்பவைகளைத் துலக்கமாக்கி யிருக்கிறார்கள், அவைகளை அதனால் நாம் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்.

## சு லூ க் கு.

---

முரீது, சுலூக்குடையபாதையென்று சொன்னீர்களே! அதென்னவென்று என்பெயரிற் கிருபைவைத்துச் சொல்லவேண்டுமென்று கேட்டான்.

செய்கு, யோகமல்லது சுலூக்கென்பது உலகமாயை யென்னும் வலையைவிட்டுக் கழன்று தபீயத்தென்னும் சிறைசாலையைவிட்டு வெளியாகி இராஜாக்களுக்கெல்லாம் இராஜாகிய அல்லாசுபுஹானகூவத்தஆலாவின் திருச்சமுகத்தைச் சேர ஆசைகொண்டு ஹிம்மத்தென்னும் வாகனமேறி, சைத்தானெனும் சத்துருவோ டெதிர்க்க அஸ்மாக்களெனுமாயுதங்களணிந்து சற்குணங்களெனும் ஆபரணம்பூண்டு, அன்பியாக்கள் முறுசலீன்கள் அவ்லியாக்களாகியவர்கள் போன பாதையிற்போவதாயிருக்கும். இவர்கள் துன்யாவின் இன்பங்களைத் தேடாதவர்களாகவும், ஆகிறத்தின் செல்வங்களை யாசித்தவர்களாகவும், தனது மஃறூபின் நாமத்தை மறவாதவர்களாகவும், சூரியன் அஸ்தமிக்கையில் பட்சிகள் கூடுகளைச் சேர்வதுபோல் இருட்டறையிற்சென்று மனமுருகத்தக்க வார்த்தைகளால் தங்கள் மஉசூக்கின்மீதுள்ள அன்பைச்சொல்பவர்களாகவும், அவனின் வல்லமைக்கும் மகத்துவத்துக்கும் தக்க பயமும் அச்சமுங் கொண்டவர்களாகவும், அவனின் றஹ்மத்துக்குப் புகழ் கூறுகிறவர்களாகவும், அவனின் நிஉமத்திற்குச் சுக்று செய்கிறவர்களாகவும், அவனின் தஜல்லியாத்துகளைக் கொண்டு ஆனந்தங் கொள்ளுகிறவர்களாகவும், புகழுகிறவர்களாகவும், துதிக்கிறவர்களாகவும், சலிக்கிறவர்களாகவும், அழுகிறவர்களாகவும், கெஞ்சுகிறவர்களாகவும், இரக்குகிறவர்களாகவும், மகிழ்ச்சி பொங்குகிறவர்களாகவும் இரவெல்லாம் போக்குவார்கள். நமது நபுசின் தன்மைகளை ஏழாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; இதில் முதலாவது இருள் நிறைந்த தன்மையிலுள்ளது. இதற்கு நபுசு அம்மாறாவென்று சொல்லப்படும். இரண்

டாவது ஒளியுடைய தன்மை, இதற்கு நபுசு லவ்வாமாவென்று சொல்லப்படும். மூன்ருவது அஸ்ருறுகளுடைய தன்மை, இதற்கு நபுசுல் முல்ஹிமாவென்று சொல்லப்படும். நாலாவது தன்மை கமாலல்லது நிரப்பம், இதற்கு நபுசு முத்மயின்னுவென்று சொல்லப்படும். ஐந்தாவது விஸால் அல்லது சேர்மானத்துடைய தன்மை, இதற்கு நபுசுருளியாவென்று சொல்லப்படும். ஆருவது தஜல்லியாத்துல்லபுஆல் அல்லது செயல்களின் தஜல்லியாத் தென்கிற தெரிசனே வெளியாகும் மக்காம், இதற்கு நபுசுல் மரளியாவென்றுசொல்லப்படும். ஏழாவது அஸ்மாக்களும் சிபாத்துகளுந் தஜல்லியாத்தாகிற மக்காம், இதற்கு நபுசு காமிலாவென்றுசொல்லப்படும். இப்படி நபுசை ஏழாகப்பிரித்துப் பேசினுலும் ஏழு நபுசுகளல்ல, நபுசுன்னுத் திக்காவென்கிற ஒரு நபுசே. அந்த நபுசிருக்கின்ற தன்மைகளுக்கு இப்பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒருவனுெரு நபுசின்குணத்திலிருக்கும்போது அந்தநபுசு அதற்கு மேலானநபுசுக்குத் திரையாயிருக்கும், நபுசு அம்மாருவிலிருக்கும்போது அந்த நபுசின் குணங்கள் அதற்கு மேலான நபுசாகிய நபுசு லவ்வாமாவுக்குத் திரையாயாயிருக்கும், இதுபோலவே மற்ற நபுசுகளும் கீழானது மேலானதுக்குத் திரையாயிருக்கும். அல்லாகுத்த ஆலாவுக்கும் அப்துக்கு மிடையில் எழுபது திரைகளுண்டா யிருக்கின்றன, ஒவ்வொரு நபுசுக்குமிடையில் பத்துத் திரைகளுண்டா யிருக்கின்றன. அவைகளில் முதலாவது திரை இரண்டாவதிலு மதிகக் கண்டிப்பை யுடையது, இரண்டாவது திரை மூன்ருவதிலு மதிகக் கண்டிப்பையுடையது. இதுபோலவே கடைசிவரைக்கும் ஒன்றுக்கொன்று கீழானது மேலானதிலுங் கண்டிப்பையுடையதாயிருக்கும், ஆனுல் கண்டிப்பென்பது ஒரு சூறத்தைக் கொண்டல்லது பொருளைக் கொண்டுண்டாகிறதல்ல, தெரிசனை யுண்டாகாமலிருக்கிற மறைவாயிருக்கும். இந்த மக்காம்களிலொரு மக்காமைச் சேர்ந்தவுடன் சாலிக்குகள் அல்லாகுத்த ஆலாவைச் சேர்ந்துவிட்டோமென்று நினைத்துவிடுவார்கள், ஆனுலொவ்வொரு மக்காம்களின் தன்மைகளையறிந்த செய்குமார்கள் அந்தந்த மக்காம்களுக்குறிய அமல்களைத் திட்டப்படுத்துவார்களென்று சொன்னுர்.

## நபுசு அம்மாரு.

முரீது, நபுசு அம்மாருவென்றும் அது இருளையுடைய மக்காமென்றுஞ் சொன்னீர்களே! அதை எனக்கு விவரித்துச் சொல்லவேண்டு மென்று கேட்டான்.

செய்கு, நபுசு அம்மாரு இருளையுடைய மக்காமென்றது நம்மை இருள் மூடியிருப்பதால்தான், யாவிலும் மிகவும் முக்கியமா யறியவேண்டியவைகள் நானென்பது என்னே? நான் எங்கிருந்து வந்தேன்? இந்த துன்யாவுக்கு வந்த நோக்கமென்ன? நானிப்பொழுது என்ன நிலைவரத்திலிருக்கிறேன்? எனது முடிவென்னே? என்கதி எவ்விதமாகுமென்று ஒன்றையும் நினையாமல் மிருகங்களைப் போல் சரீர இச்சைகளுக்கும், நபுசின் தீயகுணங்களுக்கும், கீழ்ப்பட்டு மிருகங்களாக ஹயாத்தைப் போக்குகிறதாயிருக்கும். சிலர் ஆடுமாடுபோ

னுள்ள மிருகங்களின் தன்மையாய்த் தின்னுகிறதும், உறங்குகிறதும், ஜிமாஉ செய்கிறதுமாய்க் காலத்தைக் கழிக்கின்றார்கள், சிலர் கின்ஸீர் அடங்காத ஆவலுடையதாயும் அசஸ்கிதமாகிய எவையுந் தின்னுகிறதாயுமிருப்பதுபோல் பொருளில் அடங்காத ஆவலும் ஹறுமான தீனைத்தின்னுதலுமாய் வெறிகொண்டவர்களாய்ச் சிவிய காலத்தைப் போக்குகிறார்கள், சிலர் துஷ்ட மிருகங்களின் குணத்தையுடையவர்கள், பிறருக்குநோவு செய்வதுமாய்த் தீங்கு செய்வதுமாய் அவர்கள்வாழ்காலம் முடிகிறது, இன்னுஞ்சிலர் சைத்தானுடைய துஷ்ட குணங்களாகிய பொறாமை, குரோதம், வஞ்சகமுதலிய தீயகுணங்களைக்கொண்டு பிறருக்கு விரோதஞ் செய்வதி லின்பங்கொண் டாடுவார்கள், இவ்விதமான தன்மைக்குத்தான் நபுசு அம்மாறுவென்றும் இருளான கிடங்கென்றும் நரகமென்றும் ஆரிபீன்கள் சொல்லுகின்றார்க ளென்று சொன்னார்.

முரீது, இந்த நரகத்தைவிட்டு மீட்சிபெறவும், இந்த இருளான கிடங்கைவிட்டு ஏறவும், இந்தகுணங்கள் மாறவும் என்னசெய்யவேண்டு மென றுகேட்டான்.

### நபுசு அம்மாறுவை யொடுக்கிறதற்கு அமல்கள் செய்யவேண்டிய முறைகள்.

---

செய்கு, முதலாவது வணக்கத்துக்குரிய நாயன் வேறில்லை அல்லாகுத்த ஆலாவென்றும், அவன் திருத்தூதர் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்க ளென்றும் உறுதிகொண்டு தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜி ஆகிய வணக்கங்களைச் செய்துவருகிறதும், எவப்பட்டதின்னது விலக்கப்பட்ட தின்னதென்றறிந்து, அவைகளில் ஏவப்பட்டவைகளின் நலவுகளையு முணர்ந்து, விலக்கப்பட்டவைகளின் கெடுதிகளையுந் தெரிந்து, நலவுகளைச் செய்யவும் தீமைகளைத் தள்ளவுந் திர்மானமும் துணிகரமு முடையவனாய் நடந்து வருகிறதாயிருக்கு மென்று சொன்னார்.

முரீது, தாங்கள் யோகவிதிகளைச் சொல்லப்போகிறீர்க ளென்று நினைத்திருந்தேன், தாங்கள் நான்குழந்தைப்பிராயத்தில் கற்றுக்கொண்டவைகளைமட்டுஞ் சொன்னது எனக்காச்சரியத்தைக் கொடுக்கின்றது என்று சொன்னான்.

செய்கு, என்மகனே! இன்சான் காமிலில் அப்துல்கரீ முல்ஜீலீ றளியல்லாகு அன்கு சொல்லியிருக்கிறதைச் சொல்லுகிறேன் கேள்; அல்லாகுத்த ஆலா முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய உம்மத்துகளை ஏழு மறுத்தபாக்களி லாக்கியிருக்கிறான், முதல் மறுத்தபா இஸ்லாம், அதாவது கலிமா தொழுகை முதலியவைகள். இரண்டாவது ஈமான், அல்லாகுத்தா ஆலாவையும் றசூலையும் மலாயிக்கத்துகளையும் வேதங்களையும் நடுத்தீர்ப்பின் நாளையும் நலவு கெடுதியாகியவைக ளெல்லாம் அல்லாகுத்த ஆலாவில் நின்று மென்பதையும் சக்குச் சந்தாபமில்லாது விசுவாசங்கொள்ளுதல். மூன்றாவது ஸலாஹு, முன்சொன்ன ஈமான் இஸ்லாமாகியவைக ளுடனே வணக்கத்தை அச்சமுடனும் நம்பிக்கையுடனும் பயபக்தியா யெவ்வேலைளையும் நடத்தி

வருதல். நாலாவது இஃசான், இதில் முன்சொல்லிய ஈமான், இஸ்லாம் ஸலாஹு ஆகியவைகளுடனே அதிக மாய் ஏழுமக்காமத்துகளிருக்கின்றன அவைகளாவன:- முதலாவது தவுபா இரண்டாவது இனுபத்து, அல்லாகுத்த ஆலா விலக்கப்பட்டவைகள் யாவையும் விட்டுவிலகி ஏற்படுத்திய சட்டத்தின்படி நடக்கிறது. மூன்றாவது ஸுஃது, துன்யாவின் பராக்குகளைவிட்டு நீங்குதல். நாலாவது தவக்கல், சகலத்தையும் அல்லாகுத்த ஆலாவில் பாரஞ்சாட்டுதல். ஐந்தாவது ரிளா, அல்லாகுத்தஆலா செய்வதற்கெல்லாம் பொருந்தின வனாயிருத்தல், ஆறாவது தப்வீள், சகலகருமங்களும் ஹக்குத்தஆலாவில் நின்றுமென்று உறுதியாயிருத்தல், ஏழாவது இஃஸால், தனது இபாதத்துக்கு இருலோகத்திலுங் கூலிபெற்றுக் கொள்ள நாடாது அல்லாகுத்தஆலாவின் பெயரிலுள்ள அன்பைக்கொண்டே செய்கிறது. இந்த ஏழுக்கும் பற்பல பொருள்களும் பற்பல பதவிகளுமிருக்கின்றன.

ஐந்தாவது மறுத்தபா ஷஹாதத்து, இதுமுன்சொல்லிய ஈமான் இஸ்லாம் ஸலாஹு, இஃசானுடனே மேலதிகம் ஐந்து காரியங்களிலே தரிபட்டிருத்தல். முதலாவது இருதத்து நாட்டம், இதற்கு சறுத்துகள் மூன்றுண்டு. ஒருநோக்கத்தைக் கொண்டல்லாது அல்லாகுத்தஆலாவின் பேரில் அன்பைக்கொண்டு பற்றிநிற்கிற தன்மையும், இடைவிடாமல் அல்லாகுத்தஆலாவை திக்று செய்வதும், நபுசின் தேட்டங்களுக் கெல்லாம் மாற்றமாயிருப்பதுமே. ஆறாவது சித்திக்கிய்யா, இது முன்சொல்லிய ஈமான், இஸ்லாம், ஸலாஹு, இஃசான், சஹாதத்தாகிய வைகளுடனே மேலதிகமாக ஆறு காரியங்களை யெடுத்தல். முதலாவது இல்முல் எக்கீன், இரண்டாவது ஐனுல் எக்கீன், மூன்றாவது ஹக்குல் எக்கீனாகிய இவைகளொவ் வொன்றுக்கும் ஆறு சறுத்துகளிருக்கின்றன முதலாவது பனா, நானில்லையென்று அல்லாகுத்த ஆலாவின்பேரில் பனாவாகிறது. இரண்டாவது பக்கா, அல்லாகுத்தஆலா விலேதரிபாடாகிறது. மூன்றாவது அஸ்மாக்களின் தஜல்லியாத்துகளைக் கொண்டு தாத்தையறிகிறது. நாலாவது சிபாத்துகளின் தஜல்லியாத்துகளைக்கொண்டு தாத்தை யறிகிறது. ஐந்தாவது தாத்தாயிருப்பதைக் கொண்டு தாத்தையறிகிறது. ஆறாவது தாத்தைக்கொண்டு அஸ்மாக்களை யறிகிறது. ஏழாவது அஸ்மாக்களும்சிபாத்துகளு முடையவனா யிருக்கிறது. ஏழாவது குறுபத்து, இதில்மேலே சொல்லிய இஸ்லாம்முதல் சித்தீக்கிய்யாவுடைய மறுத்தபாக்களைச் சேர்ந்தவைகளுடனே விலாயத்தில் குபுறா மேலதிகமா யிருக்கிறது, பெரிய விலாய்த்துக ளென்கிறவைகளின் மக்காம்கள் நாலு. முதலாவது இபுறாகீம் அலகிவஸ்ஸல்லமுடையமக்காம், இரண்டாவது அல்லாகுத்தஆலாவின் தோழனென்கிற மக்காம், மூன்றாவது நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய லிவாவுல் ஹம்தென்கிற கொடியின் மக்காம், நாலாவது உபூதிய்யாவின் மக்காம், அதாவது அடிமைத்தனத்தின் மக்காமாகிய இவைகளேழுமே. இதற்குமேல் நுபுவ்வத்துடைய மறுத்தபாக்களா யிருக்கும், இவ்விதங் கீழிருந்து ஒவ்வொரு மறுத்தபாவாக அந்தந்த மறுத்தபாவுக்குரிய அமல்களைச் செய்து மேலேறவேண்டும். முஸ்லிம்களில் மிகுதியானவர்கள் அல்லாகுத்தஆலாவை றப்பெ

ன்கிற இஸ்மைக்கொண்டு வணங்குவார்கள். றப்பென்பது வளர்த்தாதரிக்கிறவன், றப்புக்கு ஒரு (மர்பூபு) அல்லது ஆதரிக்கப்பட்டவனிருக்க வேண்டும். அல்லாகுத்தஆலா தொடக்கமாயிறக்கின ஆயத்து (இக்றஉபிஸ்மிரப்பிக்க) உமதுறப்புடைய நாமத்தைச் சொல்லுமென்பதே. அதனால் றப்பென்கிற இஸ்மைக்கொண்டு வணங்கப்படும். ஆரிபீன்கள் றகுமானென்கிற இஸ்மைக்கொண்டு அல்லாகுத்தஆலாவை வணங்குவார்கள், சகல படைப்புகளும் அவன் வுஜூதைக்கொண் டிருப்பதால் றகுமாகுனியாவுடைய மறுத்தபாவில் அவனை வணங்குவார்கள், முஹக்கிக்கீன்களோ அல்லாவென்கிற இஸ்மைக்கொண்டு வணங்குவார்கள், அஸ்மாக்கள் சிபாத்துகளெல்லாம் அதிலமைந்திருப்பதினலேயே, இவ்வித மந்தந்த மக்காமுக்குத் தக்கதாகவே இபாத்துகளிருக்க, மிருகங்களின் குணங்களும் சைத்தானின் குணங்களு முடையவர்களாகிய நபுசுஅம்மாருவிலிருக்கிற அவாம்களாகிய சனங்களுக்கு சித்தீக்கீன்கள் முகர்றபீன்களாகிய அவுலியாக்களுடைய மறுத்தபாவுக்குரிய தவ்ஹீதுடைய பேச்சாகிய அல்லா அல்லாமல் வேறொன்றில்லை யென்று இந்தத் தேசங்களில் மிகுதியானசெய்குமார்கள் சொல்லிக்கொடுக்கிறார்கள். இதற்கு அத்தாட்சியாக உயர்ந்த மக்காமில் ஆரிபீன் சொல்லியிருக்கிற பைத்துகளையும் பேச்சுகளையும் எடுத்துக்காட்டி இதை யுறுதிக்கொண்டு திக்றுசெய், உனக்குத் தஜல்லியாத்துகள் உண்டாகு மென்று சொல்லிக் கொடுக்கிறார்கள். ஒருகாரியத்தை யுறுதிகொள்ள முதலாவது விளங்கவேண்டும், வானம், பூமி, சந்திரன், சூரியன் முதலியவைகளு மிவைகளினுள்ளபடைப்புகளும் இல்லையென்று எவ்வித மெண்ணக்கூடும்? நானென்கிறதும் பொய், நீயென்பதும்பொய், கண்ணுக்குத் தெரியாத அல்லாகுத்தஆலா மட்டுந்தா னிருக்கிறனென்று நிச்சயப்படுத்துவ தெப்படி? நாம் வேதங்களுண்மை, றசூல்மார்க ளுண்மை, நரக முண்மை, சொர்க்கமுண்மை, ஹக்கிருப்பதுண்மை, கல்கிருப்பதுண்மை, றப்பிருப்பதும் உண்மை, அப்திருப்பது முண்மையென்று ஈமான்கொண் டிருக்கிறோம், இவைகளெல்லா மில்லையென்று பஞவாக்குகிற தெவ்விதம்? பஞவாக்குதற்கு நமது பார்வை கேள்விமுதலியவை களற்று, கல்பின் பார்வை கேள்விமுதலியவை களுண்டாகவேண்டும். நமது கல்பிலுள்ள நஜீசுகளெல்லாம் கழுகப்பட்டுப் பரிசுத்தமாகி அல்லாகுத்தஆலாவி னறிவு பிரகாசிக்கவேண்டும், அப்பொழுது தன் சுபாவகுணம் மாறி மலாயிக்கத்துகளின்குணமுண்டாகும், அப்பொழுதுதான் இந்தத் தவ்ஹீதுதிட்டப்பட்டு முஹக்கிக்கீன்களின் மறுத்தபாவிற் சேரலாம், இதற்காக எத்தனையோ ஆலங்களைக் கடக்கவேண்டும், எத்தனையோ திரைகள் நீங்கவேண்டும். இப்படியிருக்கத் தொழுகையின் பறுளு ஷுறுத்துகளைத் தெரியாத ஜாஹிலீன்களுக் கெல்லாம் நசீஹத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையையும் இந்தியாவையுஞ் சுற்றிப்பார்; எத்தனை லக்ஷம்பெயர்கள் நசீஹத்துப் பெற்றவர்களிருக்கிறார்களென்றும், இவர்களி லெத்தனைப்பெயர்கள் சூபியாக்களுடைய நடக்கையை யுடையவர்களென்றும் நோட்டமிடு, நசீஹத்துப் பெற்றபின் சிலகாலம்வரையும் செய்கு சொன்ன உபதேசப்படி நடந்து ஒரு பலனு

ந்தெரியாமல் மிகுதம் பெயர்கள் அதையும்விட்டு ளாஹிருடைய வணக்கங்களையும்விட்டு ஹலாக்காய்ப் போகிறார்கள். நசீஹத்துப் பெறுகிறவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கிற திக்றுகளிலொன்று (லாபாயில இல்லல்லா) செய்கிறவ னொருவருமில்லை அல்லாவே யல்லாமல். நாம் நடக்கிறோம், இருக்கிறோம், அடிக்கிறோம், வணங்குகிறோம், பாவஞ் செய்கிறோமென்ற உறுதியிருக்க, அல்லாகுத்தஆலா தானும் இன்னதைச்செய், இன்னதைச் செய்யாதே யென்றும், இன்னதைச் செய்தால் சொர்க்கத்தைத்தருவேன், இன்னதைச் செய்தால் நரகத்திற் போடுவே னென்றுஞ் சொல்லியிருக்க, செய்கிறவன் வேறில்லை அல்லாவே யல்லாமலென்றுசொன்னால் நமது எண்ணத்தில்லாததை வாயினாற் சொல்வதாயிருக்கும். இவ்விதமானபேச்சுகள் அவாம்களின் புத்திகளைத் தடுமாறச்செய்யும். இதற்காகத்தான் ஜுனைதுறகிமகுல்லாகு அவர்கள் ஆராகிலுமொருவன் (லாமவ்ஜூத இல்லல்லா) உண்டா யிருக்கப்பட்டவைக ளொன்றுமில்லை அல்லாவே யல்லாமலென்று சொன்னால் அவன் கழுத்தை வெட்டிப்போடுவே னென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலிந்த திக்றுகளை ஓதுவது குற்றமென்று நான்சொல்லுகிறதல்ல, கல்புஞ்சேர்ந்து வாயினால் சொல்லுகிறது தவ்ஹீதுடைய மக்காமிலேயே. ஆகையால் தரீக்குகளுடைய இமாம்களும் ஆரிபீன்களும் நியமித்திருக்கிற ஒழுங்குப்படி நபுசு அம்மாறாவின் குணமொடுங்குதற்குச் செய்யவேண்டியவைகளையுனக்குச் சொன்னே னென்று செய்குசொன்னார்.

## தொழுகைமுதலிய வணக்கங்களால்பலன் தெரியாதிருப்பது.

---

முரீது, தாங்கள் சொல்லியவைகள்யாவையும் மனத்திலிருத்திக்கொண்டேன்; தாங்கள் தொழுகை முதலிய வணக்கங்கள் நபுசு அம்மாறாவையொடுக்கு மென்று சொன்னீர்களே லக்ஷக்கணக்கான பெயர்கள் தொழுகிறார்கள், நோன்பு முதலிய வணக்கங்களையெல்லாம் தவறாது செய்து வருகிறார்கள், ஆனாலவர்களில் பொய், பொறாமை, மாறுபாடு, பொருளாசை முதலிய நபுசு அம்மாறாவின் குணங்கள் மாறாதிருக் கின்றனவே. ஒரு நோய்க்குரிய மருந்தைப் பத்துப் பெயர்களுக்குச் செய்தால் ஐந்து பெயர்களுக்காவது குணந்தெரியவேண்டுமே, இதற்குக் காரணமென்ன வென்றெனக்கு விளங்கச் செய்வீர்களாகவென்று கேட்டான்.

செய்கு, இந்த அமல்கள் பலன் கொடாதிருப்பது அந்த வணக்கங்களைச் செய்யவேண்டிய விதமாகச் செய்யாததி னாலேயே. முதலாவது, ஒரு மனிதன் தொழுகைக்காகச் சென்றவுடன் நான் அல்லாகுத்த ஆலாவின் சமுகத்தி லிருக்கிறே னென்ற எண்ணமும் அச்சமு முண்டாகவேண்டும், குருடன் பார்வையுள்ள மனிதர்களின் மஜ்லீசுக்குச் சென்றால் தனக்கவர்களைத் தெரியாது போனாலும் அவர்களுக்குத் தன்னைத் தெரியுமென்ற எண்ணமுடையவனா யொழுக்கமாய் நிற்பதுபோல் நமக்கு அல்லாகுத்த ஆலாவைக் கண்ணுக்குத் தெரியாதுபோனாலும் அவன் பார்க்கிறான், நமது இரப்பைக் கேட்கிறான், நமது கல்பி னுதிப்பை யறிந்தி

ருக்கிருனென்ற எண்ணந்தன்னில் தரிபாடாகி, அவனுடைய வல்லமையையும் மகத்துவத்தையும் நினைத்து அச்சங்கொள்ள வேண்டும். இரண்டாவது, கல்பு பல பராக்குகளையும் எண்ணங்களையும் விட்டு நீங்கியும் அல்லாகுத்த ஆலாவை நோக்கியும் நாவால்வரும் சொற்களின் பொருள்களும் அவைகளின் கருத்துகளும் விளங்கிக் கல்பில் நின்றும் வெளியாகிறதா யிருக்கவேண்டும், அவன் நமக்குத் தந்தருளிய நிஉமத்துகளையும் அவனின் கிருபை கடாக்ஷத்தையும் நினைத்து மனம் பூரித்தவனாய் அல்ஹம்துலில்லா அல்லாவுக்கே சகல புகழுமென்று சொல்ல வேண்டும், அவன் வல்லமையையும் மகத்துவத்தையும் நினைத்து அச்சங்கொண்டவனாய் அல்லாகு அக்பர். அல்லாபெரியவனென்று மொழிய வேண்டும், எனது நபுசுக்கு நான் அநியாயஞ் செய்துகொண்டேனென்று மொழியும்பொழுது கல்பு துயரங் கொண்டதாய் றகுமானை நோக்கி உனது கருணையாலெனது பாவங்களை மன்னித்தருளென்று கல்புருகிக் கண்ணால் கண்ணீர்சொரிய வேண்டும், நரகத்தை நினைக்கும்பொழுது கல்பஞ்சிப் பதற வேண்டும், சொர்க்கத்தை நினைத்து கல்பு மகிழ்ச்சிபொங்கி மலரவேண்டும், இவ்விதமாய் கல்பும் நாவுஞ் செயலு மொன்றாய்ச் சேர்ந்து தொழ வேண்டும், தொடக்கத்தி லொருவனுக்குத் தன் கல்பை இந்த நிலபரத்துக்குக் கொண்டுவரக் கூடாதுபோனாலும், அதற்காக ஒவ்வொரு நேரத்துத் தொழுகையிலும் தெண்டிக்க வேண்டும். ஈமானுடையவனா யிருந்தால் அவன் பிரயாசம் பலன்கொடுக்கும், தொடக்கத்தில் வணக்கஞ் செய்வது வருத்தமாயிருக்கும், நான் சொல்லியவிதம் வணக்கஞ் செய்து வரும்பொழுது நாளுக்குநாள் இன்பமதிகப்பட்டு வரும். தொழுகையை விட்டு நீங்கும்பொழுது தனக்கன்பான சிநேகிதனோடு கலந்து கல்புக்கு மிகவு மினிமையும் மதுரமுமான சுகிப்பைவிட்டு நீங்குவது போலாகும். இந்த ஹாலாகும்பொழுது பாவங்களையும் துற்செய்கைகளையும் வெறுக்கும் தயாள சீலமும் சற்குணமு முண்டாகும், தன் கல்பு கனத்திருந்தது இழக்கமாகி வருவதும், தீதானதைக் கேட்டால் அது சுருங்குவதும், நலவானதைக்கேட்டால் மலருவதும் தனக்கே விளங்கும், அறிவின் தாகமுண்டாகிவிடும், வணக்கங்களின் அஸ்ருறுகளை விளங்கத் தேடும் மறுத்தபாக்கள் ஏறயேற இந்தளாஹிருன வணக்கங்கள் பாத்திரனை வணக்கமாகிவிடும். இதை இப்பொழுது விரிக்க எனக்கு விருப்பமில்லாது போனாலும் ஒரு உதாரணஞ் சொல்லுகிறேன். சில அறபுச் சொற்களைச் சொல்லிச் சில உறுப்புகளின் தோலின் மேல் தண்ணீராற் கழுவுகிறது ஒரு இலேசான காரியம் போலிருந்தாலும், அச்சொற்களின் கனத்தையும் அச் செய்கையின் அஸ்ருறுகளையுமறிந்தால் அதின் மேன்மை தெரியும். இதாகிறது தஹ்ஸீகென்கிற சிபத்தைச் சேர்ந்தது, இது வெளிச் சரீரத்தின் துப்புரவும், நமது நபுசின் துப்புரவும் நமது சிரசின் துப்புரவும் பொதிந்ததாயு மிருக்கும். நபுசின் துப்புரவாகிறது தீயகுணங்களென்கிற நஜீசுகளைவிட்டுந் துப்புரவாகிறது, சிரசின் துப்புரவாகிறது நானென்றும் வேறென்றுமுள்ள எண்ணங்களை விட்டும் துப்புரவாகிறது. இவ்விதம் வணக்கஞ் செய்யாமல் கல்பு பல எண்ணத்திலுமிருக்க வாயினால் விளங்

காத பாஷையில் சில சொற்களை மொழிந்துவிட்டு, நான்தொழுது என் கடமையை நிறைவேற்றி விட்டேனென்று நினைப்பது தவமுன எண்ணம். இவ்விதந் தொழுகையிலுள்ள அதுக்காறுகள் மட்டுமல்ல, மவுலிது, ருத்திபு, துஆமுதலிய ஓதல்களையெல்லாம் நமக்குவிளங்கும் பாஷையி லோதினுல் அவைகள் நமதுகல்பைக் கொழுகிய இபாதத்தாகும். விளங்காமல் மொழிகிறது பைத்தியகாரன் உணர்வற்று மொழியும் பேச்சுகளைப் போலும், உறங்குகிறவன் உறக்கத்தில் புலம்புவதுபோலுமாயிருக்கும். இமாம் கஸ்ஸாலிறஹிமகுல்லாகு அலைகி குறுவானேதுகிறதைப்பற்றி எஹியா உலூமித்தீனென்கிற கித்தாபிற் சொல்லியிருக்கிறதாவது :- சிலர் குறுவானேதுகிற விஷயத்தில் தவமுன எண்ணங்கொண்டு மருண்டு போகிறவர்களுமிருக்கிமுர்கள், ஒரு இரவினும் பகலிலும் குறுவான் முழுவதையுமோதித் தமாமாக்கிவிடுவார்கள், அதிலவர்கள் நாவு உசும்பும், மனமோ! அது கொழுகி யிருப்பவைகளிலே திரும்பிநிற்கும். குறுவானுடைய பொருளை விளங்கி எச்சரிக்கை கொள்ளாமலும், அதிலுள்ள உபதேசங்களைக் கொண்டு உபதேசம் பெருமலும், ஏவல் விலகலைவிளங்கி அவைகளைப் பற்றிப்பிடிக்காமலும், இன்னும் குறுவானேதுவதின் நோக்கமின்னதென்று சொல்லி யிருப்பவைகளை விளங்கத்தேடாமலும், எண்ணம் வேறுபராக்கிலிருக்க வாயால் முணுமுணுப்பதற்குத்தான் குறுவான் இறக்கப்பட்டதென்று நினைத்தார்களேயானுல், அவர்கள் தங்களையே தாங்கள் மருட்டிக்கொண்டவர் களாயிருப்பார்கள். அவர்களுக்கு உவமையாகிறது ஒரு நாயன் தன் அடிமைக்கு ஒரு கடிதமெழுதி அதில் இன்னது செய், இன்னது செய்யாதேயென் றறிவித்திருக்க, அந்த அடிமை அதிலெழுதியிருப்பதை விளங்கியறியப் பிரயாசமெடுக்காமலும், அதிலுள்ளவைகளைச்செய்ய நாடாமலும், அதைப் பாடமிட்டுக்கொண்டு சத்தமிட்டு இராகமா யொருநாளைக்கு நூறுதரஞ் சொல்லுவதாயிருந்தால் அவன் தன் எசமானுடைய ஆக்கினைக்குப் பாத்திரவாளியா யிருப்பதுபோலவே தான் இதுவுமென்று சொல்லியிருக்கிமுர்கள். குறுவான் முப்பது ஜுசுமுழுதும் விளங்காது ஓதி முடிப்பதிலும் அல்ஹம்து போலொரு சூறத்தின் பொருளை நன்முயறிந்து அச்சத்துடனேதுவது அதிகப் பிரயோசனங் கொடுக்கும்.

## ஸக்காத்தும் சதக்காவும்.

---

தருமங் கொடுக்கும்பொழுது கீர்த்தியை நாடிக் கொடுப்பதும், பிறர் தருமசீலனென்று சொல்வதை விரும்பிச் செய்வதும் பலன்கொடா. ஸக்காத்துக் கொடுப்பதும் உலோபத்தனமென்கிற கெட்டகுணம் நீங்கித் தயாளகுண முண்டாவதற்கே. தருமத்தைக் கொண்டு பெருமையைத் தேடுவது உலோபத் தனத்திலும் கொடியது, தருமம் கொடுக்கையில் ஏழைகள்மீது முகங்கடுத்தும் தூஷித்து மனவருத்த முண்டாக்கியும் கொடுப்பது பாவத்தை யுண்டாக்கும், பொருள் அல்லாகுத்த ஆலாவுக்குடையது, அப்பொருள்களை ஏழைகளுக்குக் கொடுத்து அந்தஏழைகளின் வழியாக நாம் பேறுபெற்றுக் கொள்ளுதற்கு அப்பொருள் நம்மிடத்தில்

வந்திருக்க நம்மை கொடுப்பவனென்ற பெருமையாகவும் எடுக்கிறவனைக் கீழ்மையாகவும் நினைக்க நியாயமில்லை, நமக்கு ஸதக்கா அல்லது ஸக்காத்து பலன் கொடுப்பதற்குக் கூடுமானால் இரகசியமாய்க்கொடுக்கவேண்டும், ஏழைகளின் பரிதாப நிலைபரத்துக்கு மனமிரங்கி அன்பாய்ப் பேசி சந்தோஷ முகத்தோடு கொடுத்தால் அவர்களுடைய கல்பு நன்றியைக்கொண்டு பூரித்து மலரும், அவர்கள் கல்பு பூரிக்கையில் நமது கல்பிலின்பமும் ஆனந்தமுமுண்டாகும். இவ்விதம் தருமஞ் செய்து வரும்பொழுது பிறர் பெயரில் பொருமை, குரோதம் முதலிய தீயகுணங்க ளகன்றுவிடும், காருண்யம் யாவர்மீதும் பரக்கும், கல்பு சுத்தமாகிவரும், றகுமானுடைய குணமுண்டாகும், பிறரென்றும் நாமென்றும் நம்முடையதென்றும், பிறருடையதென்று முள்ள வித்தியாசம் குறைந்து அஸிலி லொன்று யிருந்த தன்மைக்கு நெருங்கும்.

## நோன்பு.

நோன்பு பிடிப்பதில் மூன்று பதவிகளிருக்கின்றன. முதலாவது அவாம்கள் பிடிக்கிற நோன்பு, உண்ணமலும், குடிக்காமலும், ஜிமாஉசெய்யாமலும், வயற்றையும் பர்ஜையும் பேணிக் கொள்ளுதல். இரண்டாம் பதவி கண், செவி, நாவு, கை, கால் முதலிய சரீரத்திலுள்ள உறுப்புகளெல்லாம் பாவஞ்செய்யாது காப்பாற்றிக் கொள்ளுதல். மூன்றும் பதவி துன்யாவுடைய எண்ணங்கள் சகலதையும் நீக்கி ஹக்குத்த ஆலாவின் சிந்தையிலே மனத்தைத் தரிபடுத்திக்கொண் டிருக்கிறது, இது பெரியோர்களுடைய நோன்பாயிருக்கும். கண்ணைப்பேணுவதும் பார்வை தீதானவைகளிற் செல்லாமலும் அல்லாகுத்த ஆலாவை மறக்கச்செய்யும் பொருள்கள் யாவையும் விட்டுப் பேணிக்கொள்ளுதலு மாயிருக்கும். நாவைப்பேணுவதுவீண்பேச்சு, கோள், அபதூறு, தூஷணம் முதலியவைகளைவிட்டும் நாவைக் காப்பாற்றிக் கொள்ளுதல், இதுபோல ஒவ்வொரு உறுப்புகளைக்கொண்டும் செய்யப்படுகிற பாவங்களை விட்டு அந்த உறுப்புகளை சலாமத்தாக்கிக் கொள்ளுதல், நோன்பென்பது ஹலாலான தீனை நிறுத்தி மற்ற உறுப்புகளால் ஹறுமான பாவங்களைச் செய்வதல்ல, இமாம் கஸ்ஸாலி றகிமகுல்லாகு தீனைமட்டுந் தின்னாது மற்றப்பாவங்களைச் செய்வதற்கு ஒருமாளிகையைக்கட்டி ஒருபட்டணத்தையுடைப்பதுபோலென்று உவமை சொல்லியிருக்கிறார்கள், றமுளான் மாதம் இபாதத்துக்குரிய மாதம், நோன்புப்டிக்கிறது இபாதத்துக் குதவியாயிருப்பதற்கே. சரீர இச்சைகளொடுங்கவும் இச்சைகளொன்று மில்லாத மலாயிகத்துகளின் பதவியிலாகி, அல்லாகுத்தஆலாவின் திக்றிலும், பிக்றிலும், தஸ்பீஹிலுந் தரிபடுதற்கே நோன்பு பிடிக்கிறது. இதற்காக நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் எத்தனையோ பெயர்கள் நோன்பு பிடிக்கிறார்கள் அவர்கள் நோன்பல்ல, அவர்கள் பசியுந் தாகமுமா யிருப்பவர்களாயிருக்கும். அதாவது அவர்கள் ஹறுமானவைகளைச் செய்து நோன்பைமுறித்து விடுகிறார்கள், ஹலாலான தீனைத்தின்பதை நிறுத்தி மனிதரின் சதையைத் தின்கிறார்கள், அபதூறு சொல்வது மனிதரின் சதையைத் தின்பதாயிருக்கு மென்

சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் பேணி நோன்பு பிடிக்கவேண்டும்.

## ஹஜ்ஜி.

ஹஜ்ஜியாவது அல்லாகுத்த ஆலாவை கல்புக் கண்ணைக்கொண்டு தரிசனைசெய்வதற்குப் பிரயாணஞ் செய்கிறதா யிருக்கும், மவுத்தாகிறவனைப்போல் துன்யாவின் கொழுகுதலைத் தறித்துவிடுவான், மனைவிமக்கள், உறவினர்கள் சகலருடைய பற்றுகளைப்பிரித்து விடுவான், தன் ஆஸ்திகளுக்கு ஒசியத்துச் செய்துவிடுவான், துன்யாவை விட்டு ஆகிறஞ் சேர்வதாய் நிய்யத்து வைத்துக்கொள்வான், இஹ்றும் கட்டைத் தனக்குக் கபனுக்கிக் கொள்வான், ஏறுவாகனம் சந்தூக்காக்கிக் கொள்வான், அவுலியாக்கள் ஸாலிஹீன்கள் முதல் இலக்ஷக் கணக்கான சனங்கள் கூடும் கூட்டம் இராஜாதி ராஜனின் நடுத்தீர்வைக்குக் கூடும் மஃஷர்போலாயிருக்கும், அகப்பார்வை யுள்ளவர்களுக்கு அங்கு முஉமீன்களுடைய வணக்கங்களும் துஆக்களும் மலாயிக்கத்துகளுடைய தஸ்பீகுகளும் ஒளிவாயிலங்கும், றகுமானின் றகுமத்தென்னும் மாரிசொரியும், கஉபத்துல்லாவைச் சுற்றுவது மலாயிக்கத்துகள் அறுசைச் சுற்றி தஸ்பீகு செய்வதுபோலாயிருக்கும். சரீரம் கட்டுமானத்தைச் சுற்றும்பொழுது கல்புதிக்றென்னும் வாகனத்திலேறி அல்லாகுத்தஆலாவின் திருச்சமுகத்தைத் தவாபுசெய்யும் அறபாவில் இலக்ஷக் கணக்கான சனங்கள் அவனின் காருண்யக் கடாக்ஷத்தை யிரந்துநிற்பதும், மகுஷறில் நபிமார்களும் அவர்கள் கவும்களும் சபாஅத்தை இரந்துநிற்பதுபோலா யிருக்கும், இவ்வித மேன்மையான கூட்டமா யிருக்கும். ஆகிலும் ஹஜ்ஜிக்குப் போகிறவர்களில் வியாபாரத்தைக் கருதிப் போகிறவர்களு மிருக்கிறார்கள், கொண்டாட்டத்திற்குப் போகிறவர்களு மிருக்கிறார்கள், பெயர் கீர்த்தியை நாடிப் போகிறவர்களு மிருக்கிறார்கள். நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் ஆகிற சமானில் ஹஜ்ஜிக்கு நாலு கூட்டங்கள் போவார்கள், சுல்த்தான்கள் கொண் டாட்டத்திற்கும், சீமான்கள் கச்சவடத்திற்கும், எழியவர்கள் இரக்கிறதற்கும் போவார்களென்று சொல்லியிருக்கிறார்களென்று சொல்லியிருக்கிறார்கள். ஆச்சரியமாவது இந்தியாவி லிருந்தும் இலங்கையிலிருந்தும் ஹஜ்ஜிக்குப் போய்வருகிறவர்கள் ஹாஜியென்று பட்டந் தரித்துக்கொள்ளுகிறார்கள், சிலர் தங்கள் பெயரோடு ஹாஜியென்கிற பெயரைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள், ஹஜ்ஜியின் பேறு நமக்குக் கிடைத்ததோ இல்லையோவென்று தெரியாதிருக்கிறோம், நாம்செய்யும் அமல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவோ வென்ற றியாதிருக்கிறோம், நம்முடைய எந்த அமலும் பிறர் மெச்சுதற்குச் செய்தாலும், நமது மனத்தில் பெருமையை யுண்டாக்கினாலும் அந்த அமல்கள் பலனற்றதாய்ப்போகும். இவைகளைவிட்டு அமல்கள் இஃலாஸல்லது சுத்தமாகவேண்டும்.

தொழுகை, ஸக்காத்து, நோன்பு, ஹஜ்ஜாகிய வணக்கங்களை மேலே சொல்லிய விதங்களாய்ச் செய்துவருவதும் துன்யாவின் கீழ்மையை யறிந்து அதைப் பற்றிப்பிடிக்கா திருப்பதும் தவ்பாவைத் தரிபாடாக்கிக் கொள்வதும் நபுசு அம்மாறுவையொடுக்குமென்று செய்கு சொன்னார்.

முரீது, துன்யாவின் கீழ்மையை
யறிந்து அதைப் பற்றிப்பிடிக்கா தி
ருக்க வேண்டுமென்று சொன்னீர்க
ளே, அதின்கருத்தை யறிவிக்கவே
ண்டுமென்று கேட்டான்.

## துன்யா.

செய்கு, மஃறிபாவுடைய இல்மா
கிறது உள்ளமையை முதலாவது நம
து அக்கிலைக்கொண்டும், இரண்டா
வது கஷ்பைக்கொண்டு மறிகிறதா
யிருக்கும். இந்தப் பாதையிற் செல்
லுகிறவன் ஒவ்வொரு காரியத்தையு
ம் ஆராய்ந்து ஹக்கின்னது, பாத்தி
லின்னது யென்றும், சத்தியமின்ன
து அசத்திய மின்னதென்றுந் திட்ட
ப்படுத்திக்கொள்ள வேண்டும். ஹக்
கையெடுத்து பாத்திலைத் தள்ளுதற்
குத் தீர்மானமும் துணிகரமுமிருக்க
வேண்டும். முதலாவது துன்யாவின்
னதென்றும் அதிலுள்ள நலவுகளையு
ம் தீமைகளையும் பிரித்துக் கூறுக்கி
நலவைப் பற்றிப் பிடித்துக்கொள்ள
வேண்டும். ஆகையால் துன்யாவின்
நலவுகளையும் தீமைகளையுஞ் சொல்
லுகிறேன்.

மனிதர்க ளொவ்வொரு வருக்கும்
துன்யாவாகிறது பிறப்புக்கும் இறப்பு
க்குமிடையேயுள்ள காலத்தில்நடக்கி
ன்ற காரியங்களா யிருக்கும். பலதே
சங்களிலும் மனிதர்களுடைய பிறப்
பிறப்புக் கணக்குகளைக் கணக்கெடுக்
கிறவர்கள், மனிதர்களிறக்கிறவயசுக
ளை யெல்லாங்கூட்டி அவர்களின்
தொகையைக் கொண்டு பிரித்து ஈவு
வைத்து மனிதர்களின்வயசு இருபத்
தெட்டென்று சொல்லி யிருக்கின்று
ர்கள். ஆகிலும் நாமெல்லோரும் ஐம்
பது பிராயம்வரையும் சீவித்திருப்
போமென்று வைத்துக்கொள்வோம்,
இந்த ஐம்பது வருடத்தில் சிறு பிரா
யத்திற் பதினாறுவருடமும், உறக்கத்
தில் நாளொன்றுக்கு எட்டுமணிவீத
ம் பதினாலுவருடமும் எட்டுமாதமும்
போய்விடுகின்றன. நீக்கியுள்ள இரு
பத்தேழு வருடமும் நாலு மாதத்தில்
நோய்முதலிய வருத்தங்களால் உபத்
திரவப்படுகிறகாலத்திற்கு நாலுவருட
த்தையும், சோம்புதலா யிருப்பதற்கு
நாலு வருடத்தையுங் கழித்தால் ஐம்
பது பிராயமுடைய வனுக்குப் பத்
தொன்பது வருடமும் நாலு மாதமு
ந்தான் மீதமிருக்கின்றன. இந்தச்
சொற்பகாலமும் மவுத்துடைய நே
ரத்தில் ஒரு சொப்பனங் கண்டது
போலிருக்கும், ஒரு மனிதன் தன்
னுடைய சென்றுபோன ஹயாத்தை
நினைத்தால், சொப்பனங் கண்டது
போலல்லாமல் வேறொன்றையுங் கா
ணமாட்டான். நபிசல்லல்லாகு அ
லைகிவசல்ல மவர்கள் மனிதர்களுறங்
குகிறார்கள், மவுத்தானால் விழிப்பார்
களென்று சொல்லி யிருக்கிறார்கள்.
அபீதிபுனு யூனுசு அவர்கள் என்
னுடைய நபுசை வேறொன்றுக்கும்
ஒப்பிடக் கூடாது சொப்பனங் கா
ண்கிற மனிதனுக்கேயன்றி. அவன்
சொப்பனத்தில் சந்தோஷமான கா
ரியங்களையும், வெறுப்பான காரி
யங்களையும் காண்கிறான், இப்படி
கண்டுகொண் டிருக்கையில் விழித்
துவிடுகிறான். இதுபோலவே மனி
தன் மவுத்தான வுடனே விழிப்
பான், அப்பொழுது தனக்கு ஆதார
மென்று நம்பிக்கை வைத்திருந்தவை
கள் தனக்குச் சந்தோஷங் கொடுத்
துக் கொண்டிருந்தவைகள் யாதொ
ன்றையுந் தன்னிட மில்லாதிருக்கக்
காண்பானென்று சொல்லி யிருக்கி
றார்கள். இபுறாகீமிபுனு அதுஹம் ற

ளியல்லாகு அன்கு அவர்கள் ஒரு மனிதனிடம் நீ சொப்பனத்தில் காண்கிற திர்ஹமின்பெயரில் உனக்கு விருப்பமோ? விழிப்பிற் காண்கிற திர்ஹமின்பேரில் விருப்பமோ வென்று கேட்க விழிப்பில் காண்கிற திர்ஹமின் பேரில்தான் விருப்பமென்ருன். அதற்கவர்கள் நீ சொல்லுகிறது பொய், நீ துன்யாவில் விருப்பங்கொண்டிருப்பவைக ளெல்லாம் கனவி லுண்டாகிற விருப்பம்போல் தானென்று சொன்னுர்கள். துன்யாவின் சீவியம் இவ்விதம் தரிபாடற்ற சொப்பனத்துக் கொப்பானதாயிருந்தாலும், இன்சானுக்கு அதிலொவ்வொரு நாளும் ஒவ்வொரு மினிட்டும் விசேஷமானதா யிருக்கின்றது. இந்த சொற்பகாலத்திலுள்ள அமல்களைக்கொண்டு அவுலியாக்கள் குத்துபுமார்களாகி யவர்களுடைய மறுத்தபாக்களைப் பெற்று, இருலோகத்திலும் ஜயம் பெற்றவர்களாகவும், அல்லாகுத்த ஆலாவின் மஹ்பூபுகளாகவுமாகக்கூடும். நபுசுக்குக் கீழ்ப்பட்டு துன்யாவின்மாயையிலாகி மவுத்தானவுடன் சைத்தானின் தோழர்களாகி நரகத்தில் நீடியகாலம் அதாபு படுவதற்காகவுங் கூடும். இந்த சொற்பகாலத்தின் நடக்கைகளைக் கொண்டு இவ்வளவு பாரதூரமான முடிவுகளுண்டாவதற்கிருப்பதால், நம்முடைய நடக்கை எவ்வித மிருக்கவேண்டுமென்பதை யறிவது அவசியம். நபிமார்களில்லாத பத்துறத்துடைய காலத்திலிருந்த புத்திமான்கள் தீயகுணங்களைவிட்டு நீங்குதலும், சற்குணங்கொள்ளுதலும், பராபரப் பொருளை த்தியானஞ் செய்து தவ்ஹீது செய்தலுங் கடமையென்று மார்க்கங்களை யுண்டாக்கி அம்மார்க்கத்தில் மனிதரைத் திருப்பி, அம்மார்க்கங்க ளி

துகாலம்வரையும் நிலைத்து வருகின்றன. ஹிந்துக்களின் முனிவர்கள், ரிஷிகள், சீனரின் வேதத்தை யுண்டாக்கிய கொன்பிவ்சியஸ், மஜூஸிகளின் மார்க்கத்தை யுண்டாக்கிய சொறஸ்றர், புத்துவேதத்தை யுண்டாக்கிய சக்கியாமுனி யல்லது புத்தராகியவர்கள் சகலரும் தங்கள் சுயபுத்தியைக் கொண்டுண்டாக்கிய மார்க்கங்க ளாதலால், ஹக்குடைய விஷயத்தில் தவறுகளுண்டாயிருந்தாலும் நன்னெறி நல்லொழுக்க மாகியவைகளிலொத்துமையா யிருக்கிறுர்கள். அல்லாகுத்த ஆலா றசூல்மார்களையும் நபிமார்களையு மனுப்பி வேதங்களை இறக்கினதும் மனிதன் துன்யாவின் மாயையிற்சிக்கி மோசம்போகாமலெச்சரிக்கவும் ஆகிறத்தின் ஆசையை எழுப்பவுமே. ஆனல் நமது மார்க்கமோ அவாம்களுக்கும், கவாசுகளுக்கும், அறிவாளிகளுக்கும், மடையர்களுக்கும், அவரவர்களுடைய அக்கிலுக்குத் தக்க அறிவுகளும், அவரவர்களுடைய தகுதிக்குத் தக்க அமல்களும் அடங்கிய மார்க்கம். அதனுல் தான் அல்லாகுத்த ஆலா முஸ்லிம்களை மனிதர்களில் உயர்த்தியான உம்மத்தென்று புகழ்ந்து பேசியிருக்கிருன். நமது வேதப்படிக்கு சகல அமல்களுக்கும் அடித்தளம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் துன்யாவாகிறது ஆகிறத்துக்குப் பயிர்செய்யுந் தலமென்று சொல்லியிருக்கிற ஹதிதே. மறு மார்க்கங்களைப் போல துன்யாவுடைய செல்வங்களை யனுபவித்துக் கொண்டு நம்முடைய சீவியகாலத்தைப் போக்குதற்கு இடம் வைத்தேயில்லை. அதனுலேதான் நபிசலல்லாகு அலைகிவசல்லம் துன்யாவாகிறது மூமீன்களுக்குச் சிறைச்சாலை யென்றும், காபிரீன்க

னுக்கு சுவர்க்கமென்றுஞ் சொல்லி யது. நமது சரீயத்து துன்யாவை எவ்விதம் பாவிக்கவும் கொண்டாடவுமிடந் தந்திருக்கின்றதென்பதை நன்ரு யொவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். குறுவானில் அநேகவிடங்களில் துன்யாவின் கெடுதிகளையும், அதை யாசித்தவர்கள் ஹலாக்காய்ப் போவார்களென்று எச்சரித்துக் காட்டியிருப்பது போலவே, நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அதின் கெடுதிகளை விவரித்துக் காட்டியிருக்கிருர்கள். அவர்கள் திருவாக்கால் துன்யாவாகிறது முனிவுபெற்றதாயிருக்கும், அதில் அல்லாகுத்தஆலாவுக் குரியவைகளை யன்றி மற்றவைகளெல்லாம் முனியப்பட்டவைகளாயிருக்குமென்று சொல்லியிருக்கிருர்கள். இந்த வசனத்தில் அல்லாவுக் குரியவைகளென்று சொல்லியதை இமாம் கஸ்ஸாலி றகுமகுல்லாகு விவரித்துச் சொல்லியிருக்கிறதாவது:- முதலாவது மவுத்துக்குப்பின் இன்சானேடு சேர்ந்து போகிறவைகளிரண்டு, இல்மும் அமலும், இல்மாவது அல்லாகுத்தஆலாவையும் அவனுடைய சிபத்துகளையும், செயல்களையும், றசூல்மார்களையும், மலாயிக்கத்துகளையும், முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சரீஅத்தையும் பற்றிய இல்முகள். அமலாவது அல்லாகுத்தஆலாவுக்குச் செய்யுங் கலப்பற்ற இபாதத்துகள், இல்மையுடையவன் இல்மில் ஆசைகொண்டால் அதின் இன்பம் மற்ற இன்பங்களெல்லாவற்றிலும் மேலாயிருக்கும், ஊணுறக்கம் சையோகமாகியவைகளிலுள்ள இன்பங்களை யெல்லாம் தள்ளிவிடுதல். இதுபோலவே இபாதத்தைப் பற்றிப்பிடித்தவனுக்கு அதின் இன்பம் எந்த மட்டிருக்குமாஞல் அதைவிட்டும் அவன் விலக்கப்பட்டால் அது அவனுக்கு மகா கடுமையான ஆக்கினைபோலா யிருக்கும். இல்மையும் அமலையும் துன்யாவோடு சேர்க்காமல் ஆகிறத்தோடு சேர்க்கப்பட் டிருக்கின்றன. இரண்டாது இல்மைப் பெற்றுக்கொள்ளவும் இபாதத்துச் செய்யவும் சுகமும்பெலமு மிருக்கவேண்டிய தாலதற்கு ஊணுடை குடியிருக்கவீடு முதலியவைகளெல்லாம் தேவையான மட்டுக்கு ஆகிறத்தைச் சேர்ந்தவைகளிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர பாவமான செய்கைகளாலுண்டாகிற இன்பங்கள், தேள்வைக்கதிகமான சுகிப்பு, பொருளை யதிகமாய்ச் சம்பாதித்து அவைகளைக் கொண்டுண்டாகிற சந்தோஷம் முதலியவைகளெல்லாம் துன்யாவைச் சேர்ந்தவைகளும் கீழ்மையானவைகளுமாயிருக்கும். இவைகளைக் குறித்துத்தான் அல்லாகுத்தஆலா துன்யாமிகவுங் கெடுதியை யுடையதென்று சொல்லியிருப்பதும், நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் துன்யா முனியப்பட்டதென்றும், சகல பாவங்களுக்கும் தலையென்றும், ஒருவன் துன்யாவை நேசித்தானே யாஞல் ஆகிறத்தைப் பழுதாக்கிவிட்டான், ஆகிறத்தை நேசித்தால் துன்யாவைப் பழுதாக்கிவிட்டான். ஆகையால் அழிந்து போவதைப் பார்க்கிலும் தரிபாடானதைத் தெரிந்து கொள்ளுங்களென்று எச்சரிக்கை செய்திருப்பதுமே. இமாம் கஸ்ஸாலி றகுமகுல்லாகு துன்யாவின் பராக்காகி வழிகெட்டுப்போன கூட்டங்களிற் சிலதைச் சொல்லியிருக்கிருர்கள்.

முதலாவது மூடத்தன முடையவர்கள் தங்களின் முடிவைப் பற்றிச்

சற்றுங் கவனியாதவர்கள், சம்பாதிக்கிறதும் சம்பாதித்ததைத் தின்று பெலனைத் தேடுகிறதும், பெலத்தைக்கொண்டு சம்பாதிக்கிறதும் இவ்விதம் பகல்முழுவதுந் தேடுகிறதும் இரவில் தின்னுகிறதுமாய்த் தங்கள் சீவிய காலத்தைப் போக்குவார்கள், உழவர் முதலியவர்களுடைய செல்வம் இந்தமட்டுந்தான். இரண்டாவது கூட்டத்தார் வயற்றை நிரப்புவதும், மோகத்தைத் தீர்த்துக் கொள்ளுவதுமே, அவர்களுடைய செல்வம் மிருகங்களைப்போல மோக விகாரமும், தீனிவிச்சையுமே யல்லாது தங்கள் முடிவையாவது அல்லாவையாவது ஆகிறத்தையாவது நினையாமல் தங்கள் ஹயாத்தைப் போக்குவார்கள். மூன்றுவது கூட்டத்தார் அதிக பொருள் சம்பாதிப்பதே பாக்கியமென்று இரவு பகலெல்லாம் வெறிகொண்டவர்களைப் போல் பணந்தேடுவதில் பிரயாசப்படுவார்கள், சம்பாதிப்பதைச் சேர்த்து அதிகப்படுத்துவார்கள், சரியாக உண்ணமாட்டார்கள், செலவு செய்யவு மாட்டார்கள்; சம்பாத்தியத்தை நினைப்பது மட்டுமே, அவர்களின் செல்வம். இவ்விதமாகக் காலத்தைப்போக்கி கபுறிற் புகுதுவார்கள். இவர்களைக் குறித்துத் தான் அல்லாகுத்த ஆலா அல்ஹாக்கு என்கிற சூறத்தில் நீங்கள் கபுறைச்சந்திக்கும்வரையும் ஆஸ்திகளையும் பிள்ளைகளையும் அதிகமாக்கி மேலிடவேண்டு மென்கிற ஆவலுங்களைப்பராக்காக்குகின்றது, ஒருபோது மப்படி நீங்கள் பராக்காகப்படாது. பின்னுலுங்கள் மதியீனத்தை யறிவீர்கள், இன்னும் ஒருபோது மப்படியல்ல, பின்னுலுங்கள் மதியீனத்தை யறிவீர்கள். திட்டமான அறிவாக அறிந்தீர்களேயானுல் இவ்விதம் நடக்கமாட்டீர்கள், உண்மையாக நீங்கள் நரகத்தைக் காண்பீர்கள். மேலுந் திட்டமான பார்வையாகக் காண்பீர்கள், பின்பு துன்யாவி லுங்களுடைய சுகிப்புகளைப் பற்றியும் நீங்கள் பராக்காயிருந்தவைகளைப் பற்றியு முங்களைக் கேட்கப் படுமென்று சொல்லியிருக்கிருன். நாலாவது கூட்டத்தார் அவர்கள் தங்களைச் சீமான்களும் சீர்திருத்த முடையவர்களு மென்று பிறர் நினைக்கும்படி சம்பாதிப்பதைத்தங்கள் நபுசுக்காகச் சுருக்கமாய்ச் செலவு செய்துகொண்டு மற்றவைகளை அழகானவீடுகளிலும், குதிரை வண்டில் முதலியவைகளிலும், உடைகளிலும், மனிதர் பார்த்துமெச்சத்தக்கவைகளிலுஞ் செலவு செய்வார்கள், இவர்கள் பாக்கியமென்று நினைத்து இரவும் பகலும் பிரயாசப்படுகிறது பிறருடைய புகழைப் பெறுதற்கே. ஐந்தாவது கூட்டத்தார் இவர்கள் பாக்கியத்தின் நிரப்பமாவது பிறர் தங்களைக் கனம்பாராட்டுகிறதும், மரியாதைசெய்கிறதும் கீழ்ப்படிகிறது மென்றெண்ணி, அதற்காகத் தங்கள் பொருள்களையும் ஹயாத்தையும் போக்குவார்கள், அவர்களுடைய தேட்டமெல்லாம் தலைமைத்தனம் பெற்றுக் கொள்ளுதற்கே, இவர்கள் தங்களுக்கு மவுத்து வருமென்றும் அதற்குப்பின் நடக்கப்போகிற தின்னதென்றும், படைத்தவ னிருக்கிருனென்று மவனுக்கு உத்தரவாதங்கொடுக்க வேண்டுமென்றும் நினைக்கமாட்டார்கள். இமாம் கஸ்ஸாலி றகுமதுள்ளாகு இதுபோல எழுபதே சொச்சம் கூட்டத்தவர்களிருக்கிருர்கள், இவர்களெல்லோரும் வழிசறுகி மோசம் போனவர்கள் இவர்கள் துன்யாவில் சரீரசவுக்கியத்திற்கு ஊணுடை இருப்பிடம் முத

லியவைகள் இந்தமட்டுத் தேவையெ
ன்பதை விளங்கி, அந்தமட்டுஞ்
சம்பாதிக்க நாடினால் அநேக கஷ்ட
ங்களும் வருத்தங்களும் கவனங்களு
ம் நீங்கி, அமரிக்கையும் சாந்தகுண
மு முடையவர்களாகி, அல்லாகுத்த
ஆலாவை நினைக்கவும், ஆகிறத்துப்
பயணத்திற்கு ஆயத்தமாகவும் இட
முண்டாகும். ஒருவன் துன்யாவைச்
சேர்ந்த ஒரு காரியத்தில் திரும்பினா
ல் ஒன்றின்பின் னொன்றாய்ப் பல
பல காரியங்களும் பராக்குகளும்
கூடி அவனைக் கீழ்ப்படுத்தி அடிமை
யாக்கிக் கொள்ளும், அவைகளைவிட்
டுந் தப்பிக்கொள்ள நினைத்தாலுங்
கூடாதவனாய் ஹலாக்காய்ப் போ
கிறான் என்று சொல்லியிருக்கிறார்
கள்.

அல்லாகுத்த ஆலா துன்யாவை ம
னிதனுக்காகப் படைத்திருக்கிறான்,
அவனுக்குக் கோபம், ஆசை, தேட்
டம் முதலிய குணங்களையும் கருவி
களையும் கொடுத்திருக்கிறான், புத்தி
யுடையவன் இவைகளால் இவ்வுலக
த்திலும் மறுலோகத்திலும் நஷ்டங்
களும் கஷ்டங்களும் வராமல் பாவி
ப்பதெவ்வித மென்றறிந்து அவ்வி
தம் பாவிக்கவேண்டும். அநேகர் மற்
றுமுலக விஷயங்களில் கூர்மையான
புத்தியுடையவர்களாயிருக்கிறார்கள்.
ஒவ்வொரு பொருளையும் பணத்தைக்
கொண்டு விலைமதித்துப் போடுகிறார்
கள், அப்பொருள்கள் தங்கள் நபுசுக்
கும் இருலோக பாக்கியத்திற்கும் இவ்
வளவு பெறுமதியென்று மதிக்கிறார்
களில்லை, தங்களோடுசேர்ந்து ஆகி
றத்துக்குப் போகாத பணத்தின் வரு
மானம் செலவு கொடுக்கல் வாங்கல்
முதலியவைகளின் கணக்குகளை ஒவ்
வொருநாளும் பார்த்துக் கணக்குத்
திட்டங்கட்டி விடுகிறார்கள், தங்க
ளோடு ஆகிறத்துக்குச் சேர்ந்துப்போ
கிற நன்மை தீமையாகியவைகளை
யொருநாளும் கணக்கெடுக்கிறார்களு
மில்லை, நினைக்கிறார்களு மில்லை. அ
வனிவைகளி லெவ்வளவு கவனமில்
லாதிருந்தாலும் அல்லாகுத்த ஆலா
குறுவானிற் சொல்லியபடி ஒருவன்
ஒரு அற்பநன்மை செய்திருந்தாலும்
அதையுமவன்காண்பான், அற்ப தின்
மை செய்திருந்தாலும் அதையுமவன்
காண்பான்.

முரீது, நாயகமே! தங்களிடம் ஒ
ருகாரியத்தைக் குறித்துக் கேட்கவே
ண்டியதிருக்கிறது, சொல்வதற்குக்
கூசுகிறேன். எனது உறவின்முறை
யார்கள் எனக்கு விவாகஞ்செய்யும்
படி தொந்தரவு செய்கிறார்கள். வி
வாகம் இந்தப்பாதைக்கு இடையூறா
யிருக்குமோ வென்பதை யறிய விரு
ம்புகிறேனென்று கேட்டான்.

## விவாகம்.

செய்கு, உலகத்தி லுள்ளவைக
ளொவ்வொன்றிலு முள்ள நலவுகளை
யும் இடறுகளையு மறிந்திருப்பது மிக
வும் பிரயோசனமா யிருக்கும். இவை
களில் பிரதானமாவது விவாகம், நம
து சரீஅத்துப்படி இதிலுள்ள நலவு
களையும் நஷ்டங்களையும் சுருக்கமாக
ச்சொல்லுகிறேன்.

விவாகஞ் செய்கிறதிலுள்ள நலவுக
ளில் முதலாவது, அல்லகுத்தஆலாவி
ன் நாட்டத்துக் கிணங்குதல், அல்லா
குத்த ஆலா மனிதர்கள் துன்யாவில்
விர்த்தியாவதற்காக ஆணும்பெண்ணு
மாய்ப் படைத்து அவர்களுக்கு இச்
சையுங்கொடுத்து அதை நிறைவேற்
றுதற்குரிய அங்கங்களையு முண்டாக்

கி அவ்வழியாக இந்திரியஞ்சென்று, தரிப்பதற்கும் பிள்ளையுண்டாகி வளர்வதற்கும் கருக்குழியு மூண்டாக்கியிருப்பதால் அல்லாகுத்த ஆலாவின் நாட்டம் விவாகஞ்செய்து மனிதர்கள் விர்த்தியாக வேண்டுமென்பது தெரிகின்றது. இரண்டாவது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமதை சுன்னத்தாக்கியிருத்தல். மூன்றாவது ஸாலிஹான பிள்ளைகளிருந்தால் அவர்களுடைய துவாவின் பறக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல். நாலாவது குழந்தையில் மவுத்தான பிள்ளைகளால் கியாமத்தில் சபா அத்துப் பெற்றுக்கொள்ளுதல், கியாமத்து நாளையில் அல்லாகுத்த ஆலா குழந்தைகளைக் கேள்வி கணக்கில்லாமல் சொர்க்கலோகத்திற்குக் கொண்டுபோகும்படி மலாயிக்கத்துகளுக்குக் கட்டளை கொடுப்பான். அந்தப் பிள்ளைகள் சொர்க்கலோகத்திற்குச் செல்லாமல் எங்கள் தாய் தந்தையர்க ளெங்கே என்று கேட்பார்கள்; மலாயிக்கத்துகள் அவர்களுங்களைப் போலல்ல, அவர்கள் பாவஞ் செய்திருப்பதால் அவர்களுக்குக் கேள்வி கணக்கிருக்கின்றது என்று சொல்வார்கள், இதைக் கேட்டவுடனே அந்தப்பிள்ளைகள் கதறிச் சத்தம்போடுவார்கள், அல்லாகுத்த ஆலா மலாயிக்கத்துகளிடம் இந்தச் சத்தமென்ன வென்று கேட்பான்; மூஸ்லீம்களுடைய பிள்ளைகள் எங்கள் தாய்தந்தைக ளில்லாமல் சொர்க்கலோகத்தி னுள்ளே செல்ல மாட்டோ மென்று சத்தமிடுகிறார்களென்று மலாயிக்கத்துகள் சொன்னபொழுது அல்லாகுத்த ஆலா தாய் தந்தையர்களுடைய கைகளைப்பிடித்து சொர்க்கலோகத்திற்குச் செல்லும்படிக்கு அப்பிள்ளைகளுக்கு உத்தரவுகொடுப்பான். ஐந்தாவது மோகவிகாரத்தைத் தீர்த்துக் கொள்ளுதலால் ஸினவுடைய பாவத்தைவிட்டுங் கார்மானங் கிடைத்தல். நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் நிக்காகு நீ ணிலரைவாசிக்கு ஒரு கோட்டையாயிருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆறாவது அல்லாகுத்த ஆலாவுடைய பாதையிற்றிரும்பி இபாதத்தில் மூழ்கியிருப்பவன் கல்புக்கு ஆறுதலாக மனைவியோடு கொஞ்சி மருவியிருப்பது நலமென்று இமாம்கஸ்ஸாலி றகுமகுல்லாகு சொல்லி யிருக்கிறார்கள். அலிறளியல்லாகு அன்கு கல்பை ஒருமணிநேரம் ஆறவிடுங்கள் அது வெறுப்புக் கொண்டால் குருடாகிவிடு மென்று சொல்லியிருக்கிறார்கள். எழாவது விவாகஞ்செய்வதினல் வீட்டைப் பரிபாலனஞ்செய்தல், சமைத்தல், சாமான்களைப் பேணுதல், பணிவிடைக் காரர்களை நடத்துதலாகிய வேலைகளை விட்டொழிந்து வணக்கத்தில் மனத்தைத் தரிபடுத்துவதற் கிடமுண்டாகிறது. அபூசுலைமானுத்தாறானீ றகிமகுள்ளாகு சாலிஹான மனைவி துன்யாவுக்குடையவளல்ல, ஆகிறத்துக் குடையவளாயிருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். உமறிபுனுல்கத்தாபு றளியல்லாகு அன்கு அல்லாகுத்தஆலா மனிதனுக்குக் கொடுத்தருளிய நலவுகளில் ஈமானுக்குப்பின் சாலிஹானமனைவியென்று சொல்லியிருக்கிறார்கள். எட்டாவது மனைவி மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் பிரயாசப்படுதல், அவர்களாலுண்டாகிற துன்பங்களுக்குப் பொறுதிசெய்தல், அவர்களை தீனுடையநேர்வழியிற் றிருப்புதல், இல்முகற்றுக்கொடுத்தல், இபாதத்தைப் பயிற்றுதல், மனைவியின் துற்குணங்களைச் சகித்துக் கொள்ளுதலாகியவை

களெல்லாம் இபாதத்தாயிருக்கும்,

விவாகஞ் செய்வதனாலுண்டாகிற ஆபத்துகளாவன:- முதலாவது ஹலாலான சம்பாத்தியஞ் செய்வதிலுள்ள கஷ்டம், இந்த ஸமானில் மிகுதியானபெயர்களுக்குத் தங்கள் சீவனத்தின்மட்டுக்கு ஹலாலான சம்பாத்தியம் சம்பாதித்துக்கொள்வது கஷ்டமா யிருக்கையில் சமுசாரவாழ்க்கையினால் ஹறுமான தேட்டங்கள் தேடுதற்கு நேரிட்டு அவர்களும் ஹலாக்காகி அவர்கள் மனைவிமக்களையும் ஹலாக்காக்கிவிடுகிறார்கள், மனைவிமக்களுக்காக ஆகிறத்தை துன்யாவுக்காக விற்றுப்போட நேரிடுகிறது. கியாமத்தில் முதலாவது வழக்காடுகிறவர்கள் மனைவியும் பிள்ளைகளுமாயிருக்கும். நாயனே! எங்களுக்கு இல்மு படித்துத் தராமல் மடையர்களாக்கி விட்டான், நல்ல அமல்களிற் பழக்காமல் எங்களைக் கெடுத்துவிட்டான், ஹலாலான தீனைத்தராமல் எங்களை நிற்பாக்கியர்களாக்கினான், எங்களுரித்துக ளெங்களுக்குக்கிடைக்கவேண்டுமென்று முறையிடுவார்கள், அல்லாகுத்த ஆலா தகப்பனின் அமல்களைப்பறித்து அவர்களுக்குக் கொடுப்பான். இரண்டாவது மனைவிமார்களின் துற்குணங்களையும், துற்செய்கைகளையுஞ் சகிக்கக்கூடாமல் எவ்வேளையும் வாதாடுவதும் போராடுவதுமாய் உலகசெல்வமுமற்று ஆகிறத்தில் நீடித்த அதாபுக்கும் கீழ்ப்படுகிறதற் கிடமாகிறது, இப்படிப்பட்ட மனைவியுடன் வாழ்கிறவனுக்கு ஸலாமத்து வேண்டுமானால் புத்தியுடையவனாகவும், சற்குணமுடையவனாகவும், பெண்களின் நடக்கைகளையும் வழக்கங்களையும் அறிந்தவனாகவும், அவர்கள் நாவுக்கு சபூறு செய்கிறவனாகவும், அவர்கள் குற்றங்களைப் பராமுகமாய் விடுபவனாகவு மிருக்க வேண்டும். மிகுதியானவர்கள் இப்படிப்பட்டவர்க ளல்லாததால் தங்கள்வீடு தங்களுக்கு வேதனையுடைய நரகமாகிவிடுகின்றது. மூன்றாவது மனைவிமக்களை செல்வமாக வைக்க வேண்டுமென்ற விருப்பத்தினால் பணமதிகந்தேடவும், அவைகளைச் சேர்த்துவைக்கவும் ஆவலுண்டாகி, அந்த ஆவலினால் வெறிகொண்டவனைப் போல் அவனுடைய ஹயாத்தைப் போக்கி, அல்லாவையும் ஆகிறத்தையும் மறந்து அனேகர் மோசம்போகிறார்கள், இவைகள்விவாகஞ்செய்வதினாலுள்ள ஆபத்துகளாயிருக்கும். நான் மேலே சொல்லியபடி நிக்காகு செய்வதினா லுண்டாகிற பலன்களையும் கஷ்டங்களையும் சிந்தித்தால் விளங்கும். முதலாவது ஹலாலான பணமுடையவனாகவும் அல்லது ஹலாலான தேட்டம் தேடிக்கொள்ள க்கூடியவ னாகவுமிருந்து விவாகஞ் செய்துகொண்டு, அல்லாகுத்த ஆலாவையும் ஆகிறத்தையும் மறவாமல் தீனைப்பற்றிப் பிடித்துக்கொள்ளத் தைரியமுடையவ னாகவுமிருந்தால் விவாகஞ்செய்வது உத்தமமாயிருக்கும். இச்சை பாவத்திலிழுத்து விடாமல் நிக்காகு சரீரத்தையும் பார்வையையும் கல்பையும் காப்பாற்றும், பிள்ளைகளுக்கு இல்மு கற்றுக் கொடுப்பதும் அவர்களை இபாதத்திற் பழக்குவதும், மனைவி மக்களுடைய சீவனத்திற்கு ஹலாலான பொருள் சம்பாதிப்பதுமாகிய வைகளெல்லாம் இபாதத்தாயிருக்கும். இப்படிப்பட்ட விவாகம் துன்யாவுக்கும் ஆகிறத்துக்கும் பாக்கியமாயிருக்கும், ஹலாலான பொருளில்லாதவனாகவும் அல்லது அவ்விதமான பொருள் தேடிக் கொள்ளச் சத்தி இல்லாதவனாகவு

மிருப்பவன் நிக்காகுசெய்து ஹறுமா னசம்பாத்தியஞ் சம்பாதிப்பதில் ஹயாத்தைப் போக்குவதால் அல்லாகுத்த ஆலாவையும் நித்திய செல்வத்தையும் மறந்து இருலோகத்திலும் கைசேத மடைந்தவ னுயிருப்பான்

அல்லாகுத்த ஆலாவுடைய திக்றிலும், பிக்றிலும் மறைவான இல்முகளிலும் மூழ்கியிருக்கிறசூபியாக்களுக்கோ விவாகஞ்செய்யாதிருப்பது உத்தமமாயிருக்கும் எங்கள் நாயகம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அதிகமான விவாகஞ் செய்திருக்கிறார்களே அவர்களுடைய பதவிக்கு மேலானவர்க ளொருவருமில்லையே யென்றொரு கேள்வியுண்டாகக் கூடும்; ஆனலெங்கள் நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நம்பிராட்டிமார்கள் பலரிருந்தாலும் அவர்களுடைய கல்பு அல்லாகுத்த ஆலாவை விட்டும் நீங்காம லிருக்கச்செய்து கொண்டுவந்தார்கள், அவர்களொரு நம்பிராட்டியுடனே படுக்கையி லிருக்கும்பொழுது வஹி இறங்கப்பட்டிருக்கிறது, ஆகையால் நாயகமவர்களுடைய தத்துவத்தையும் மறுபெயர்களுடைய தத்துவத்தையும் ஒப்பிடக்கூடாது. ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் விவாகஞ் செய்வதிலும் அல்லாகுத்த ஆலாவின் இபாதத்தையே தெரிந்து கொண்டார்களென்று செய்கு சொன்னர்.

முரீது, தவ்பாவென்பதின் பொருளென்னவென்று கேட்டான்

## தவ்பா.

---

செய்கு, தவ்பா அல்லது மன்னிப்புக் கேட்குதலில் மூன்று காரியங்களடங்கியிருக்கின்றன. முதலாவது இல்மு, அதாவது ஒருவன் தான்செய்த பாவங்களின் கெடுதியையும் அதனல் தான் அல்லாகுத்த ஆலாவைவிட்டுந் தூலையாகி தனக்கு மவனுக்குமிடையே திரையுண்டாகி யிருப்பதையும் நன்ருயறிதல், இரண்டாவது இந்த அறிவு கல்பிலுண்டானல் தனது மஃறூபாகிய அல்லா சுபுஹானகூவத்த ஆலாவைப் பிரிந்துவிட்டேன், அவனுடைய கோபத்திற்குப் பாத்திரமா யிருக்கிறேனென்று கல்பில் வேதனை யுண்டாகும். இந்தவேதனை யுண்டாவதற்கு இரண்டு காரியங்கள் தேவையாயிருக்கும், முதலாவது ஈமான், பாவம் மனிதனை ஹலாக்குச் செய்யும் நஞ்சென்று வீசுவாசங்கொள்ளுதல், இரண்டாவது யக்கீன் அந்தவிசுவாசம் சக்குச்சந்தாபமின்றி உறுதிப்பட்டு கல்பில் மிகைத்திருத்தல். இந்த உறுதி யுண்டானல் அல்லாகுத்த ஆலாவை விட்டும் பிரிந்துவிட்டேன், என்கிருபையுள்ள றகுமானின் கோபத்திலாகிவிட்டேன், நீழேிகாலத்து அதாபுக்குப் பாத்திரமாகி விட்டேனென்கிற கவலையின் நெருப்பு எரிதல். மூன்ருவது இவ்விதம் வேதனைப்படும் வேளையில் இனிமேல் ஹயாத்துள்ளவரையும் பாவஞ் செய்கிறதில்லையென்று கல்பில் தீர்மானமுண்டாகுதல். ஆகிய இம்மூன்றுஞ் சேர்ந்த தவ்பாவுக்குத்தான் அல்லாகுத்த ஆலா கலப்பற்ற தவ்பாச் செய்யுங்களென்று சொல்லியதும், தவ்பாச் செய்கிறவர்களை நான் பிரியம் வைத்திருக்கிறேனென்று சொல்லியிருப்பதுமே. இவ்விதந் தவ்பாச் செய்கிறவன் தான் செய்த பாவங்களை நினைக்கத் தொடங்குவான், தான் பிராயமான நாள் முதல் ஒவ்வொரு வருடத்திலும்,

ஒவ்வொரு மாதத்திலும், ஒவ்வொரு நாளையிலும் செய்த பாவங்களை சிந்திக்கும்வேளையில் ஆ! என்று சத்தமிட்டு நான் செய்திருக்கிற பாவங்கள் மலைமலையா யிருக்கின்றனவே, நான் செய்த நன்மைகளோ கண்ணுக்குத்தானுந் தெரியாதவைகளா யிருக்கின்றனவே, அல்லாகுத்த ஆலா குருவானில் நீங்கள்செய்த அமல்களையும் நன்மைகளையும் நீங்கள் காண்பீர்களென்று சொல்லியிருக்கிறானே, நானெவ்வித மிவைகளைப் பார்ப்பேன், நானெவ்வித மிவைகளுக்கெல்லாம் உத்தரங் கொடுப்பேன், அல்லாகுத்த ஆலாவுடைய கோபத்துக்கெவ்விதம் தப்புவேன், நரகத்தின் நீழேிகாலத்து வேதனையை எவ்விதஞ்சகிப்பேனன்று பெருமூச்சு விடுவான், தான்செய்த ஒவ்வொரு பாவத்தையும் நினைப்பான், என்னுடைய நாவால் எவ்வளவு பாவஞ்செய்திருக்கிறேன். அல்லாகுத்த ஆலாவைப் புகழவும், அவனை இரக்கவும் அவனுடைய திக்றை யோதவும் நலவான பேச்சுகளைப் பேசவுந்தந்த என்மேன்மையான நாவைக்கொண்டு எவ்வளவு கீழ்மையான பாவங்களைச் செய்திருக்கிறேன், எவ்வளவு பெயர்களுடைய புறங் கூறியிருக்கிறேன், அல்லாகுத்த ஆலா புறங்கூறுவது தன் சகோதரனுடைய மையித்தின் சதையைத் தின்பதுபோலா யிருக்குமென்று திருவுளம்பற்றி யிருக்கிறானே புறங்கூறின பாவத்தை நான் மன்னிக்கமாட்டேன், புறங்கூறப்பட்டவன் மன்னித்தாலேயன்றி, என்று சொல்லியிருக்கிறானே. கியாமத்தில் நன்மை தீமைகளை நிறுக்கும்வேளையில் புறங் கூறினவனுடைய நன்மைகளை யெடுத்து புறங் கூறப்பட்டவனுக்குக் கொடுக்கப்படுமென்று ஹதீதிற்சொல்லப்பட்டிருக்கிறதே, நானெவ்வளவு பெயர்களுக்குப் புறங் கூறியிருக்கிறேன், அவதூறு சொல்லியிருக்கிறேன், இந்தப் பாவங்களைவிட்டு எவ்விதந் தப்புவேனென்று மனஸ்தாபப்படுவான், இந்த நாவாலெவ்வளவு கோட் சொல்லியிருக்கிறேன், எவ்வளவு பெயர்கள் அவைகளால் பகையாவதற் கிடமாக்கியிருக்கிறேன், அல்லாகுத்த ஆலா குருவானில் அபதூறு சொல்லுகிறவர் களுக்கும் கோட்சொல்லுகிறவர்களுக்குமே கேடென்று சொல்லியிருக்கிறானே, நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் கோட்சொல்லுகிறவன் சொர்க்க லோகத்துக்குட் செல்லமாட்டானென்று திருவாய்மலர்ந்தருளி யிருக்கிறார்களே. அப்துல்லா இபுனு முபாறக்குறகுமகுல்லாகு எவனொருவன் பேச்சை மறைக்கக்கூடாது, கோட் சொல்லுவானோ அவன் ஸனாவிற் பிறந்தவனா யிருக்குமென்று அல்லாகுத்த ஆலாவுடைய சொல்லைக்கொண்டு அத்தாட்சிப் படுகின்றதென்று சொல்லியிருக்கிறார்களே, நானிந்த பழிப்பான பாவத்தை எவ்வளவோ முறையிற் செய்திருக்கிறேன், என் கதி எவ்விதமாகுமோ வென்று சலிப்பான், இன்னும் என்வாயினால் எவ்வளவுபொய்கள் சொல்லி யிருக்கிறேன் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம்பொய் ஈமானைத் தூரமாக்குமென்றும் நாலுகாரியங்கள் ஒருவனி லிருந்தால் அவன் கலபபற்ற முனாபிக்கா யிருப்பானென்றும், செய்தி சொன்னால் பொய் சொல்லுகிறதும், வாக்குச் சொன்னால் மாறுகிறதும், பொருத்தம் பண்ணினால் மாற்றஞ் செய்கிறதும், வழக்குப் பேசினால் பொய்பேசுகிறது மாகியவைகளி லொன்றிருந்தாலும் அவன் முனாபிக்கா யிருப்பா

னென்றும் சொல்லியிருக்கிருர்களே, இவைகளெல்லாம் தெரிந்திருந்து நானெவ்வளவு பொய் சொல்லியிருக்கிறேன் இவைகளுக்கு எவ்வளவு கடுமையான ஆக்கினைக்குப்பாத்திரவானுயிருக்கிறேனென்று பதறுவான். நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் மனிதனுக்கு முதல் அவனுடையஹயாத்தாயிருக்குமென்று சொல்லியிருக்க, வீண்பேச்சிலும், வீண்கதையிலும், சரசத்திலும், பரிகாசத்திலு மென்னுடைய ஹயாத்தென்கிற முதலால் எவ்வளவு செலவாக்கி விட்டேனென்று புலம்புவான். மனிதர்கள்பெயரில் குரோதம்வைத்து அந்தக் குரோதத்தினுல் அவர்களுக்கு அல்லாகுத்த ஆலா கொடுத்தருளிய வாழ்வுகளுக்கும் நிஉமத்துகளுக்கும் பொருமையென்னுங் கொதிப்பு என் கல்பில் கொதிக்கவும், அவர்களைப் பழிக்கவும் நிந்திக்கவும் சிறுமைப் படுத்தவும், அவர்களுக்குச் செல்வமதிகப்பட என் கல்பின்வேதனை யதிகப்படவும் என் நபுசுக்கிடங் கொடுத்துவிட்டேனே, என் கல்புக்குண்டாயிருக்கிற நோய்கள்யாவிலும் இதுகொடிய நோயாயிருக்கின்றதே, நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் பொருமையாகிறது நெருப்பு விறகைத் தின்பதுபோல் நன்மைகளைத் தின்றுவிடுமென்றும், தேனைக் கற்ருளைப் பழுதாக்குகிறதைப்போல் பழுதாக்குமென்றும், அல்லாகுத்த ஆலா பொருமைகொண்டவன் என் நிஉமத்துகளுக்குப் பகைகொண்ட வனுகவும், நான் விதித்த நியமங்களுக்குக் கோபங்கொண்ட வனுகவும், நான் எனது அடியார்களுக்குக் கொடுத்த பங்குகளுக்குப் பொருந்தாத வனுகவு மிருக்குமென்று திருவுளம்பற்றியதாக ஸக்கரிய்யா அலைகிஸ்ஸலாம் சொல்லியிருக்கிருர்களே, இப்படிப்பட்ட பயங்கரப்படத்தக்க நோய் என் கல்பைவேதனைப் படுத்துகின்றதே, துன்யாவில் நிர்பாக்கியனுகவும், அல்லாகுத்த ஆலாவுடைய கோபத்திற்குப்பாத்திரமானவனுகவுமா யிருக்கிறேனேயென்று துயரப்படுவான். இன்னும் அகங்காரம் என்னைவிட்டதா? எனது உடை, நடை, பேச்சு, என்ணமெல்லாம் பெருமையாக யிருந்தனவே என்குலத்தின் பெருமையைப்பேசினேன், என் பெலத்தின் பெருமையைக் காட்டினேன், என் பணத்தின் பெருமையை வெளியாக்கினேன், நான் கீழ்மையிலும் மிகவுங் கீழ்மையானவ னென்பதை யுணர்ந்தேனில்லையே, அல்லாகுத்த ஆலா ஹதீது குதுசியில் பெருமை எனது அங்கவஸ்திரம், வலுமை என் முக்காடு, ஆராகிலுமொருவன் இவைகளிலொன்றுக்கு வழக்காடுவானே யாகுல் ஒன்றும் பாராமலவனை நரகத்திற் புகுதவைப்பே னென்று திருவுளம்பற்றி யிருக்கிருனே, நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் ஆராகிலும் ஒருவன் மனிதர் தன்முன்னே எழும்பிநிற்பதைப் பிரியம் வைத்தால் அவனுதுங்குந் தலம் நரகமாயிருக்குமென்று சொல்லி யிருக்கிருர்களே, இப்படியிருக்க எனது கிருத்துவத்துக்கும் அகங்காரத்துக்கு மென்ன சொல்வேனென்று பிரலாபிப்பான். இன்னு மென் கையால் எவ்வளவு பாவங்களைச் செய்திருக்கிறேன், என் கண்ணு லெவ்வளவு ஹருமானவைகளைப் பார்த்திருக்கிறேன், என் செவியா லெவ்வளவு ஹருமான செய்திகளைக் கேட்டிருக்கிறேன். என் மனத்தா லெவ்வளவு பாவமான எண்ணங்களை எண்ணியிருக்கிறேன், இதுபோலவே ஒவ்வொரு உறுப்புஞ் செ

ய்திருக்கிற பாவங்க ளெவ்வளவு! அ ல்லாகுத்த ஆலா விதியாக்கப்பட்ட அமல்களைச் செய்யாமல்விட்ட பாவ ங்களெவ்வளவு! என்பாவங்கள் மலேம லேயாய்க் குவிந்திருக்கின்றனவே யெ ன்று அழத்தொடங்குவான், இவ்வித ம் அழும்போது அவனுடையகல்பில் ஒரு உதிப்புண்டாகும், அல்லாகுத்த ஆலா பாவங்களை மன்னிக்கிற வஞ கவும், தயாபரனுகவு மிருக்கிருனே அவன் தவ்பாச் செய்பவர்களை உவந் தவனென்று குறுவானிற் சொல்லியி ருக்கின்ருனே என்று அவனிடங்கெ ஞ்சி இரப்போமென்று துவாக்கேட் கத் துணிவான். பாவங்களை மன்னி க்கிறவனே! கருணை நிறைந்தவனே! இருளான தபீயத்தென்னும் நரகத் தில் விழுந்த ஏழையாகிய என்னைக் கரைசேர்த்தருள், துன்யாவி ஞசை யில் மருண்டு உன்னையு மெனது தொடக்கத்தையு மொடுக்கத்தையும் மறந்த மூடனின் குற்றங்களைப் பொ ருத்தருள், நேர்வழி காட்டுகிறவனே எனது கல்பின் இருள் நீங்கவும் ஈமா னெனும் ஒளி பிரகாசிக்கவும் நேர் வழியில் திரும்பவும் உதவிசெய்தரு ளென்று இரந்து துஆக் கேட்பான், இவ்விதமான தவ்பாவுக்குத்தான் அ ல்லாகுத்த ஆலா கலப்பற்ற தவ்பாச் செய்யுங்க ளென்று சொல்லியிருப் பது. ஆனல் இந்தத் தவ்பாச் செ ய்கிறதுடனே துற்குணங்களுக் குப் பதலாய் நற்குணங்களைக் கொள்ள வேண்டும், பெருமைக்குப் பதலாய்த் தாழ்மையை எடுக்கவேண்டும், கோ பத்துக்குப் பதலாய்ப் பொறுதியை யெடுக்கவேண்டும், குரோதத்திற்குப் பதலாய்த் தயவைக் கொள்ளவேண் டும். இவ்விதமாக ஒவ்வொரு துற்கு ணத்திற்கும் மாற்றமாயிருக்கிற நற்கு ணத்தைக் கொள்ளவேண்டும், இவ் வித நற்குணங்களுண்டாகி வரும் பொழுது நபுசு அம்மாருவின் குண ங்களொடுங்கி, நபுசு லவ்வாமாவுடை ய குணங்களுண்டாவதற் காகிவிடும் இந்த நபுசு அம்மாருவின் குணங்க ளோடு போர்செய்து ஜயம் பெறுதற் கு பெரிய பீசபீலென்று நாயகம் சல் லல்லாகு அலைகிவசல்லம் சொல்லியி ருக்கிருர்கள். அல்லாகுத்த ஆலா ந புசைச் சுத்தமாக்கிக் கொண்டவன் பாக்கிய மடைந்தான், அசுத்தமாக்கி னவன் கைசேத மடைந்தா னென்று திருவுளம்பற்றி யிருக்கிருன். ஆகை யால் அல்லாகுத்த ஆலா எங்களெல் லோரையும் நபுசைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களிலாக்கி யருள்வா ஞக.

# நபுசுல்லவ்வாமா.

இந்த நபுசின் குணமாவது:—சரீயத்துடைய அமல்களை யெடுத்து நடப்பதில் விருப்பமும், தொழுகை, நோன்பு, ஸக்காத்து முதலிய வணக்கங்களைத் தவருது செய்துவருதலும், சத்திய மின்னது அசத்திய மின்னதென்றறிந் திருத்தலுமாகிய நற்குணங்களிருந்தாலும், நபுசு அம்மாருவுக்குரிய சில குணங்களுமிருக்கும். தன்னை வணக்கவாளி யென்றுபிறர் அறிகிறதும், மெச்சுகிறதும் சந்தோஷத்தைக் கொடுக்கும். பெருமையை வெளியாக்காமல் மறைத்தாலும், அது கல்பில் குடிகொண்டிருக்கும். சரீர இச்சைகள் முற்றிலும் நீங்கா. இவைகள் அல்லாகுத்த ஆலாவுக்கு வெறுப்பானவைகளென்று தெரிந்தாலும், அவைகளை விட்டொழிதற்கு மனத்திடனும் முயற்சியுமிரா. இக்குணங்களிருப்பவன் தன் நபுசுலவ்வாமாவின் தன்மையி லிருக்கிறதென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். இந்த மக்காமில் நிற்பவனுக்கு ஆபத்துகளும் இடையூறுகளு மிகுதமிருக்கின்றன. சற்று சறுகினல் திரும்ப அம்மாருவில் விழுந்துவிடுவான். ஆகையால் பெரியோர்கள் இந்த மக்காமைவிட்டு ஏறுதற்கு மிகவுந் தெண்டிப்பார்கள். மவுத்துக்கு முன் மவுத்தாகுத லென்பது சரீர குணங்களெல்லா மற்று, அல்லாகுத்தாலாவுடைய குணங்கொண்டு, அவனில் பனவாகுதலா யிருக்கும். அவ்விதம் பனவாகிறதற்குப் பெரியோர்கள் ஓயாத பிரயாச மெடுப்பார்கள், இது முத்மயின்ன முதல் காமிலாவென்கிற மக்காம்களிலா யிருக்கும். இந்த மக்காம்களிற் சென்றவர்கள் முகர்றபீன்க ளென்றும், அவுலியாக்களென்றுஞ் சொல்லப்படும். இவர்களுடைய தன்மைக்கும், ளாஹிறிற்றரித்திருப்பவர்களுடைய தன்மைக்கும் வித்தியாசமாவது:— ளாஹிறுடைய வணக்கங்களை யுடையவர்களைவிட்டும் தீய குணங்கள் முற்றிலும் நீங்கிவிடா. கபுறுடைய வருத்தங்களையும், நரகத்தின் வேதனைகளையும், மஃஷறின் அமழிகளையுங் கேட்டவுடன் அச்சமுண்டாகி தெண்டிப்பினல் அக்குணங்கள் சில வேளைகளில் மாறினும், அந்த அச்சந்தீர்ந்தவுடனே அக்குணங்கள் திரும்பவுமுண்டாகிவிடும். இவர்கள் ஒரு நஞ்சுக்கனியுள்ள மரத்தை யற்றுவிக்கிறதற்காக மரத்தின் கொப்புகளை வெட்டுகிறவர்களைப் போலாயிருக்கும். அக்கொப்புகள் சொற்ப நாளையில் திரும்ப வளர்ந்து முன்போலாகிவிடும். முகர்றபீன்களோ அம்மரத்தை வேரோடுபிடுங்கி எறிந்துவிட்டு, அதற்கு வதல் வேறு நல்லமரங்களை யுண்டாக்கிறவர்கள்போல் நபுசின் தீயகுணங்கள்யாவையும் பிடுங்கி எறிந்துவிட்டு அதற்கு வதலாய் அந்தவிடத்தில், அல்லாகுத்தாலாவுடைய திக்று பிக்று

வென்கிற விதைகளைநாட்டி வளர்த்துவருவார்கள். ஆகையால் இந்த மக்காமைக்கடந்து உயர்த்தியான மக்காமிற் சேர நினைப்பவர்கள் கூர்மையான புத்தியுடையவர்களாகவும், மனத்திடனுடையவர்களாகவு மிருக்கவேண்டும். மூமினீன்களின் அறபி றளியல்லாகு அன்கு சூபியாக்களுடைய வழியில் நடப்பவர்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறார்கள், இந்தப் பாதையில் நடப்பவன் முதலாவது கூர்மையான புத்தியுடையவனாயிருக்கவேண்டும், நிரப்பமான அறிவுகளைப் பெற்றுக்கொள்ளத் தேடுவதால் அவைகளைப் பெற்றுக்கொள்ளத் தக்க விவேகமுடையவனாயிருத்தல்வேண்டும். இரண்டாவது, தன் நபுசின் தேட்டங்களையொடுக்க மனத்திடனும் ஹிம்மத்து மிருத்தல்வேண்டும். மூன்றாவது, அல்லாத்த ஆலா சகலபடைப்புகளையும்படைத்து இன்சானை கலீபாவாக்கி யிருப்பதையறிந்து, அதற்குரிய மேலான நடக்கைகளை யெடுப்பவனாயிருக்கவேண்டும். நாலாவது, தன் சரீரத்தின் குணங்களை நீக்கி றகுமானுடைய குணங்களைக் கொள்ள ஆசையுடையவனாயிருக்கவேண்டும். துன்யாவைத்தள்ளி ஆகிறத்தைத் தெரிந்துகொள்ளவும், சிற்றின்ப அனுபோகங்களை வெறுத்துப் பேரின்ப ஆனந்தத்தைத்தேடவும் ஈமான் உறுதியாயிருக்கவேண்டும். ஒரு மனிதன் ஒரு கண்ணாடித் துண்டையும், விலைமதிக்கக் கூடாத ஒரு இரத்தினத்தையுங் கண்டு, கண்ணாடித் துண்டைத் தெரிந்துகொண்டால், அவன் இரத்தினத்தின் பெறுமதியை யறியாதவனாயிருக்கவேண்டும். அதுபோலவே சொற்பகாலத்தின் அற்ப இன்பங்களைத் தெரிந்து அல்லாகுத்த ஆலாவின் தரிசனையின் ஆனந்தத்தைத் தேடாதவன், அவைகளின் ஹக்கீக்கத்துகளை யறியாதவனாகவும் அதில் ஈமானில்லாதவனாகவு மிருக்கவேண்டும். ஈமானென்பது கலிமா ஷஹாதத்தை நாவினால் உச்சரிப்பதல்ல, அதின் பொருளாகிய உள்ளமையை மெய்யென்று விளங்கி உறுதியாக விசுவாசங் கொள்ளுதலாயிருக்கும். செய்குமார்களின் கடமைகளில் முதன்மையாவது, முரீதீன்களுடைய ஈமானைத் திறப்படுத்துதலாயிருக்கும். துன்யாவி னாசைகளின் கெடுதிகளையும், ஆகிறத்தின் நீடித்தமட்டிடக் கூடாத இன்பங்களையும் போதித்துக் காட்டி, அவைகள் சக்குச் சந்தேகமின்றி மெய்யென்றுறுதிகொள்ளச் செய்வதும், அல்லாகுத்த ஆலாவின் பெயரிலன்பும் ஆசையுமுண்டாகச் செய்வதுமாயிருக்கும். முத்மயின்னாமுதலிய மேலான மக்காம்களின் உள்ளமைகளையும், புதுமைகளையும், அவைகளைச் சேர்ந்தவர்களுடைய விலாயத்துகளையும், அத்தாட்சிகளைக் கொண்டு ரூபித்துக் காட்டி மன மொப்புக் கொள்ளச் செய்யவேண்டும். இரண்டாவது, இந்தப் பாதையிற் செல்லுகிற சாலிக்கீன்கள் தங்கள் சுபாவ வழக்கங்களுக்குமாறாக நாலு காரியங்களைச்செய்துவருவது மிகவும் உபயோகமாயிருக்கும். அவைகளாவன:- தீனைக்குறைத்தல், விழிப்பை யதிகப்படுத்தல், பேச்சைக் குறைத்தல், துன்யாவி னாசையை வெறுத்த லாதியவைகளே.

## தீனைக் குறைத்தல்.

தீனைக்குறைப்பதினால் பத்து நலவுகளிருக்கின்றன. முதலாவது, அது கல்பைத் துப்புரவாக்கும், மனோ சக்

தியைப் பெலமாக்கும், அகப்பார்வையைத் தெளிவாக்கும், பசி தீர உண்ணுதல் புத்தியை மந்தமாக்கும், கல்பைக் குருடாக்கும், மூளையிற் புகை மூடி மயக்கமுண்டாக்கும்.

இரண்டாவது, கல்பு இழக்கமாகி இரக்கமுண்டாக்கும், அல்லாகுத்தஆலாவின் முனாஜாத்தில் இன்பமும், இற்றுபிக்றுகளின் மதுரமுமுண்டாக்கும். மூன்றாவது, மனத்தாழ்மையையுண்டாக்கும், மகிழ்ச்சி பெருமை முதலிய தீயகுணங்களை மாற்றும். நாலாவது, பசியிருப்பதினால் பிறருடைய பசியையும் பிறர் படுந் துன்பங்களையும் ஆகிறத்தின் அதாபுகளையும் நினைப்பதற்கு மனமிடங்கொடுக்கும். வயற்றை நிறைத்து வந்தால் இவைகளொன்றையும் நினைப்பதற் கிடமாகாது. ஐந்தாவது, பாவத்தின் தேட்டங்களும், சரீர இச்சைகளு மடங்கும், நபுசு அம்மாறாவின் குணங்களொடுங்கும். ஆறாவது, தூக்கத்தைக் குறைக்கும், விழிப்பை யதிகப்படுத்தும், தண்ணீர் குடிப்பது உறக்கத்தை யதிகப்படுத்தும். ஏழாவது, தீன் சமைப்பதிலும், ஆயத்தப் படுத்துவதிலும், உண்பதிலுஞ் செல்லும் நேரங்களை இபாதத்திற் குபயோகமாக்கிறதற்கிடமாகும். அதிகம் உண்பதினாலும், குடிப்பதினாலும் மலசல பாதைகளுக்குச் செல்லுதலால் அதிகமாக ஒழு முறிபட்டுத்திரும்பத் திரும்ப ஒழுச்செய்ய நேரிடும். அதனால் இபாதத்தின் தரிபாட்டுக்குத் தொந்தரவைக் கொடுக்கும் எட்டாவது, தீனைக் குறைப்பது சரீர சுகத்துக்கு அநுகூலமாயிருக்கும். ஹாறூன்றசீது சுல்த்தானவர்கள் கீர்த்திபெற்ற வைத்தியர்கள் நால்வரை யழைத்து நீங்கள் ஒருமருந்தைச் சொல்லவேண்டும், அந்த மருந்தைக் கொண்டு ஒருநோயு முண்டாகா திருக்கவேண்டுமென்று கேட்க, இந்தியாதேசத்து வைத்தியன் ஒரு மருந்தைச் சொன்னான், றூம் தேசத்தவன் ஒரு மருந்தைச் சொன்னான், இறாக்கு தேசத்தவன் ஒரு மருந்தைச் சொன்னான், அந்த நாட்டிலுள்ள வைத்தியன் இம்மருந்துக ளெல்லாம் சில நோய்களுக்கு ஒளஷதமா யிருந்தாலும், இன்ன இன்னநோய்களையுண்டாக்கும். தீனைக்குறைப்பதே ஒரு நோயையு முண்டாக்காத மருந்தென்று சொல்ல, மற்ற வைத்தியர்களுமதை யொப்புக்கொண்டார்கள். ஒன்பதாவது, தீனைக்குறைத்துச் சொற்பம் போதுமாகிறதுகொண்டு சம்பாதிக்கிற வருத்தங் குறைந்துவிடும். ஹறாமான சம்பாத்தியங்களைவிட்டுங் கார்மானத்துக் கிடமாகும். ஒரு அறிவாளி, என் வயற்றிற்காக நான் பிறரிடம் கடனெடுக்க நேரிட்டால், நான் என் நபுசிடமே கடன் கேட்பதைத் தெரிந்துகொண்டு, நீ! இந்தத் தேட்டத்தை விட்டுவிடு என்று சொல்வேனென்று சொல்லியிருக்கிறார்கள். நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் பசியைக் கொண்டு சொர்க்கத்தின் வாசலைத் தட்டுங்களென்று சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் தீனைக் குறைக்கும்படி சொல்லியிருப்பதே யன்றி, தீனை விட்டுவிடச் சொல்லவுமில்லை. பசியின் வேதனையைச் சகிக்கச்சொல்லவுமில்லை. பசியின்வேதனை இபாதத்தைப் பழுதாக்கிவிடும். நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பொதுவாய்வயற்றில் மூன்றிலொருபங்கு தீனும், மூன்றிலொருபங்கு தண்ணீரும், மூன்றிலொருபங்கு ஒழிந்துமிருக்க வைத்துக்கொள்ளும்படி சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சூபியாக்களோ கிரமம் கிரமமாய்க் குறைத்துப் பழக்கி

வந்து, பசி அவர்களுக்குத்தெரிகிறது மிகவுஞ் சாடையாயிருக்கும். சாலிக்கீன்கள் இனைக் குறைத்துவரும் வேளையில் அசவுக்கியமுண்டானால் உடனே சரீரசுகத்துக்குத் தக்கதாய்ப் புசித்துவரவேண்டும். இந்த வழியிற்செல்பவர்கள் சுகத்தைப் பேணிக்கொள்ளத் தெண்டித்துக்கொள்ள வேண்டும். நோய் இபாதத்துக்கு இடையூறுயிருக்கும், ஆனால் திக்றிலும் பிக்றிலும் பராக்காகிவிட்டால் பசியின் தேட்டம் குறைந்துவிடும்.

## விழிப்பை அதிகப்படுத்துதல்.

விழிப்பை யதிகப்படுத்துவதும் அவசியமா யிருக்கும். மனிதனுடைய ஹயாத்தாவது தனக்கு அல்லாகுத்தஆலா கொடுத்தருளிய இரத்தினங்களுக் கொப்பான முதலாயிருக்கும், இந்த இரத்தினங்களைக் கொண்டு அவைகளிலும் பெறுமதியான ஆகிறத்துக்குத் தேவையான சரக்குகளை வாங்குவது அவன் கடமை. உறக்கத்தில் ஹயாத்தைப் போக்குவது, ஹயாத்தென்கிற இரத்தினங்களை இல்லாம வாக்குகிறதுபோலா யிருக்கும். விழிப்பை யதிகப்படுத்துவது ஹயாத்தை நீளமாக்குகிறதா யிருக்கும். ஆகையால் உள்ளமைகளை யறிந்தபெரியோர்கள் ஒவ்வொரு நொடி நேரத்தையும் வீணாக்காது, மறைவான ஆலங்களின் புதுமைகளிலும் இன்பங்கள் அனுபவிப்பதிலும் போக்குவார்கள். நபுசின் கெடுதிகள் துய்தாகி மறைவான ஆலங்கள் வெளியாகும் போது உறக்கம் தானே அற்றுப்போகும்.

## பேச்சைக் குறைத்தல்.

மூன்றாவது, பேச்சைக் குறைத்தல். நாவைக்கொண் டுண்டாகிற பாவங்களும் ஆபத்துகளு மிகுதம், அதற்காகத்தான் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் வாயைமூடினவன் ஈடேற்றம்பெற்றான் என்று சொல்லியிருக்கிறார்கள். நாவைக் கொண்டு பொய் பேசல், புறங் கூறல், கோட் சொல்லல், திட்டுதல், பழி தூற்றுதல், நிந்தித்தல், வாதாடுதல், ஏசுதல் வாக்குச்சொல்லி மாறுதல், வீண்பேச்சுப் பேசுதல், விலக்கான இராகங்கள் பாட்டுகள் பாடுதல், கேலிபண்ணுதல், சரசம்பண்ணுதல், இரகசியங்களை வெளியாக்குதல், முகஸ்துதியாய்ப் பேசுதல், பெருமை பேசுதல்முதலிய பாவங்களுண்டாவதால் வாயைப் பொத்தி நேரத்தை திக்றிலும் பிக்றிலும் போக்கலாம்.

## துன்யாவைத் தள்ளுதல்.

நாலாவது தனித்திருத்தல், இந்தப் பாதையிற் செல்லுகிறவர்கள் இந்த மக்காம்களிற் கூடியமட்டில் மனிதர்கள்பெயரில் வைத்திருக்கிற நம்பிக்கையையும், பற்றையுந் தறித்துவிடவேண்டும். மனிதர்களோடு கூடியிருப்பதையும், அவர்களோடு பேசியிருப்பதையும் விலக்கிக்கொள்ளல்வேண்டும். மனிதர்களோடு சேர்ந்திருப்பதில் வீண்வார்த்தைகளும் சரசங்களும், பாவமான பேச்சுகளும் கேட்கவும் பேசவும்நேரிடும். உயர்த்தியான மக்காம்களை நாடுகிறவர்கள் மனைவிமக்கள் நேசர்கள் சகலரைவிட்டும் தனித்து, அல்லாகுத்த ஆலாவி

ன் திக்றிலும் பிக்றிலும் கல்பைத் தரி படுத்துவார்கள், அல்லாகுத்த ஆலாவை ஆசித்து அவன் பராக்கிற்றரிப டாமல், நசீஹத்துப் பெற்றுக்கொண்டு துன்யாவைத்தாவிக்கட்டிக்கொண்டவர்களாய், மேலான மக்காம்களைப் பெற்றுக் கொள்ளுதற்காகப் பிரயாசப்படுவது பலனற்றதாயிருக்கும். இவ்விதம் துன்யாவை வெறுப்பதற்கு துன்யாவைக் கீழ்மையாக வெண்ணவும், அல்லாகுத்த ஆலாமீது ஆசையுண்டாகவும் தக்க இல்மிருக்கவேண்டும். துன்யா பனிக்கட்டியைப் போலும், ஆகிறம் இரத்தினத்தைப் போலும் நினைப்பதற்கு செய்குமார்கள் அறிவுகளைப் போதித்துக் காட்டி முரீதீன்களுடைய கல்பு உறுதியுண்டாகச்செய்வார்கள்.

துன்யாவைவிட்டு நீங்குகிறவர்கள் மூன்று வகையாயிருக்கும். முதலாவது நரகவேதனைக்கும் கபுறின் அதாபுக்கும் சிருத்தல் முஸ்தக்கீம் பாலங்கடக்கும் கஷ்டத்துக்கும் மஹ்ஷரின் அமளிகளுக்கும் பயந்து, துன்யாவின் இன்பங்களைவிட்டு நீங்கினும் கல்பு இவைகளிற் றிரும்பும். கூடியமட்டிலும் அவைகளைவிட்டும் விலகி நடக்கத் தெண்டித்துக்கொள்வார்கள், சிலவேளை கல்பின்தேட்டம் மேலிட்டு அதற்கிடங்கொடுத்து மோசம் போகிறதுமுண்டு. இரண்டாவது ஆகிறத்தில் சொர்க்கலோகத்தின் செல்வங்களுக்காகவும், ஹூறுலீன்களோடு வாழுதல்முதலிய இன்பங்களுக்காகவும், துன்யாவின் அற்ப சுகங்களைத் தள்ளி நடக்கிறவர்கள் கிழிந்த ஒருபழைய உடையை ஒரு இரத்தினத்தைப் பெற்றுக்கொள்ளுதற்காகத்தள்ளின ஒருவன் திரும்ப அந்த உடையைத் தேடாதிருப்பது போல் ஆகிறத்தின் மேலான பாக்கியங்கள் கிடைக்குமென்ற நம்பிக்கையுடையவன் திரும்ப துன்யாவிலுள்ள அற்ப இன்பங்களைத் தேடான். மூன்றுவது துன்யாவி னின்பங்களையொருகாரியமா யெண்ணுமலும் அதைவிட்டு விட்டோமென்கிற எண்ணந்தானும் வராமலுமிருப்பவர்கள். இது பெரியோர்களுடைய மறுத்தபாவாயிருக்கும். அபூ எசீது றகிமகுல்லாகு அவர்கள் மஃரிபா உடையவர்கள் துன்யாவை வெறுத்திருக்குந் தன்மையைக்குறித்துக் கேட்டபோது துன்யாவென்பது எண்ணம், அதையொரு காரியமென்று நினைக்கத்தானுந் தகுதியற்றதென்று சொல்லிவிட்டு, கஷ்பையுடையவர்கள் துன்யாவை வெறுக்கிற விதத்திற்கு ஒரு உவமைசொன்னார்கள். ஒரு இராஜனைத் தரிசிக்கப்போன வேளையில் மாளிகை வாசலில் ஒரு நாய் நிற்கக்கண்டு ஒருதரம் சப்பிவிழுங்கிறமட்டு, ஒரு சிறு ரொட்டித்துண்டை அந்தநாய்க்கெறிந்துவிட்டு அது அதைத் தின்னும் பராக்கிலிருக்கையில் உள்ளே நுழைந்து இராஜாங்கத்திற்குரிய காரியங்களிற் பராக்கா யிருக்கையில் நாய்க்கெறிந்த ரொட்டித் துண்டில்மனத்தைத் திருப்புவானா? அதுபோலவே துன்யாவினின்பம் அந்தரொட்டித்துண்டைப் போலாயிருக்கும். அதினின்பம் வாயில்சப்பிவிழுங்கும் வரையுமல்லாது பின்னுக்கில்லை. அது வயிற்றிற்சென்றபின் நாற்றமுள்ள நஜீசாகி வெளியேதள்ளிவிடுதற்கு நேரிடுகிறது. துன்யாவி னின்பங்களெல்லாமவைகளை யனுபவிக்கும் நேரம் வரையுந்தான் பின்பு அதைக்கொண்டு கெடுதியும் கைசேதமும் ஹலாக்குமுண்டாகும். அந்த ரொட்டியை நாய்க் கெறிந்ததுபோல் பெரியோர்கள் துன்யாவை இபுலீசுக்கெறிந்து

விட்டு, இராஜாதி ராஜனுகிய அல்லாகுத்த ஆலாவின் சமுகத்தில் ஆனந்தங் கொண்டாடுவார்கள். இவர்கள் துன்யாவி னின்பங்களை வெறுப்பதுமல்லாமல் சொர்க்கலோகத்தின் செல்வங்களையும் நாடார்கள்.

## இஃலாஸ் சுத்தம்

நீ எந்த மக்காமிலும் உனது அமல்களை இஃலாஸ் அல்லது சுத்தமானதாக்கிக் கொள்ளவேண்டும், பிரதானமாக இரண்டு காரியங்கள் அமல்களை அசுத்தமாக்கிப் பழுதாக்கிவிடும். அவைகளை நீ நன்ருயறிந்திருந்து அவைகளை நீக்குதற்கு முயற்சியெடுக்க வேண்டும். அவைகளாவன :- முதலாவது அறபுப் பாஷையில் மஃறூர் என்று சொல்லப்படும். மருட்டப்படவனுயிருத்தல், அதாவது அமல்களைச்சரியென்று நினைத்துச் செய்தல், உள்ளமையிலோ அவைகள் தவருயிருத்தல், இரண்டாவதற்கு அறபுப்பாஷையில் ரியாவென்று சொல்லப்படும், அமல்களைப் பிறர் மெச்சவும் புகழவும் தக்கவிதமாய்ச் செய்தல், அல்லது அது கல்புக்குச் சந்தோஷத்தைக்கொடுத்தல் இவைகளை விவரித்துச் சொல்லுகிறேன்.

## மஃறூறு
## மருட்டப்பட்டிருத்தல்

நானிப்பொழுது சொல்லப்போகிறது இமாம்கள் சொல்லி யிருப்பவைகளில் பொறுக்கிச் சுருக்கமாய்ச் சொல்லுவதேயன்றி எனது சொந்தக் கருத்தல்ல, உனது அமல்கள் இக்கெடுதிகளால் பழுதாய்ப் போகாதிருப்பதற்குச் சொல்லுகிறேன்.

முதலாவது இல்முடையவர்களிலும் வணக்கவாளிகளிலும் மருண்டிருப்பவர்களு மிருக்கிருர்கள். முதலாவது சிலர் சரீயத்தைச் சேர்ந்த இல்முகளிலும் அக்கிலைச்சேர்ந்த இல்முகளிலும் ஆழ்ந்திருப்பார்கள், தங்கள் நபுசைப் பரிசோதிப்பதிலும் கல்பைச் சுத்தப் படுத்துவதிலும் கவலையீனர்களா யிருப்பார்கள், ஆனல் இவர்களுடைய எண்ணத்தில் நாம் இல்மையுடையவர்களா யிருப்பதால் நாம் அல்லாவிடத்தே மேலானபதவியையுடைவர்களா யிருக்கிருேம், பிறரைத் தண்டிப்பதுபோல நம்மைத் தண்டிக்கப்பட மாட்டாது, நாம் பிறருக்கு சபா அத்துச்செய்யும் பதவியிலிருக்கிருேமென்று தங்களைத் தாங்களே மருட்டிக்கொண்டவர்களாயிருப்பார்கள், இல்மாவது இரண்டு வகையாயிருக்கும். இல்முல் முஆமலா வாகிருன அமல்களுக்குரியது, இல்முல் முகாசிபா மஃரிபாவைச் சேர்ந்தது ளாஹிறுடைய இல்மு ஹலாலையும் ஹறுமையும், புகழுக்குரிய கருமங்களையும், பழிப்புக்குரிய குணங்களையும் அறிகின்றதா யிருக்கும், அந்த இல்முமட்டு மிருந்து அந்த இல்முப்படிக்கு அமல்செய்யாதவரையில் அந்த இல்முக்கு ஒரு பெறுமதியுமில்லை, ஒரு நோய்க்கு வைத்தியனிடம் மருந்தெழுதி யெடுத்துக்கொண்டு அதின் படிக்கு மருந்தைச்செய்து அருந்தாமல் எவ்வேளையும் அந்தப் பட்டோலையை வாசித்துக் கொண்டிருப்பது போலாயிருக்கும். அல்லாகுத்த ஆலா நபுசை சுத்தமாக்கினவன் ஜயமடைந்தானென்று குறுவானிற் சொன்னதல்லாமல் இல்மைப் படித்தவன் ஜயமடைந்தானென்று சொல்லவில்லை, இன்னும் இல்மை யுடையவர்களிற் சிலர் அறிவுடையவர்களாகவும் வா

ஹிருன வணக்கத்தைப் பற்றிப் பிடித்தவர்களாகவும், பாவங்களை விட்டும் பேணி நடப்பவர்களாகவு மிருப்பார்கள். ஆனாலவர்கள் கல்பில் பொருமையும், பிறர் கனஞ்செய்யவேண்டுமென்கிற பெருமையும், புகழிலாசையு மிருக்கும். இவர்கள் வெளியரங்கமான நடக்கைகள் அழகாயிருக்கும், அவர்களுடைய பாத்தின் கெடுதியாயிருக்கும். இமாம் கஸ்ஸாலி றகுமகுல்லாகு இவர்களுக்கு கபுறை உவமை சொல்லி யிருக்கிறார்கள், கபுறின் வெளிப்புறம் அழகாய் வைத்திருக்கும், உள்ளே துற்கந்தமுடைய பிணமும் இருளுமிருக்கும். இன்னும் இமாம் கஸ்ஸாலி றகுமகுள்ளா இவர்கள் இல்முடையவர்களென்றும், இபாதத்தை யுடையவர்களென்றும் நினைப்பதற்கும், சங்கை செய்வதற்குந் தக்க உடைகளைத் தரித்துக் கொள்வார்கள், அவர்களிடம் இது பெருமையைக் காட்டுகின்றதேயென்று சொன்னால், அவர்கள் நாங்க ளிவ்விதம் சிறப்பா யுடுப்பது பெருமையினு லல்ல, இல்முடைய சங்கைக்காகவும், தீனுக்கு உதவிக்காகவுஞ் செய்கிறோம், நாங்கள் மறுபெயர்களைப்போல் உடுத்து அவர்களோடு சரிசரியாயிருந்தால் நமது மார்க்கத்துக்கு விரோதியானவர்கள் நமது மார்க்கத்தைக் கனம் பாராட்டாது நகைப்பார்களென்று சொல்வார்கள், ஆனால் நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் நமதுமார்க்கத்தின் மேன்மை தாழ்மையும் மனரம்மியமும் எழிமையுமாயிருக்கு மென்று சொல்லி யிருப்பதையும், உமறுறளியல்லாகு அன்கு தங்கள் யுத்தவீரர்கள் சாமுக்கு அழகான உடைகளை யணிந்து போவதைக்குறித்து எங்களுடைய மேன்மை இஸ்லாத்தைக் கொண்டாயிருக்கும், வேறொன்றைக்கொண்டல்லவென்று கண்டித்தெழுதியதையும் கவனிக்கிறார்களில்லையென்று கஸ்ஸாலிறகுமகுல்லா அவர்கள் சொல்லி யிருக்கின்றார்கள். இன்னும் இந்தத் தீயகுணங்கள் கல்பிலிருப்பதால் சிலர் பொருமையினாலும் பெருமையினாலுந் தங்கள் இல்முகளை வெளியாக்கும் நாட்டத்தாலும், மார்க்க விஷயங்களிலே தர்க்கங்களை யுண்டாக்கிக் கொள்வார்கள், கூட்டங்களைச் சேர்த்துக்கொள்வார்கள், கட்சிகளை யுண்டாக்கிக் கொள்வார்கள், அவர்களிடம் இதைக்குறித்துக்கேட்டால் நாங்கள் பெருமையினாலும் விரோதத்தினாலும் வாதாடுகிறதல்ல, மார்க்கத்தி னுண்மையைப் பெலப்படுத்தவும், நூதனங்கள்வராது பேணவும் பிரயாசப்படுகிறோமென்று சொல்லுவார்கள், இப்படிப்பட்டவர்களின் கெடுதி உமையா, அப்பாசியாவாகிய கலீபாக்களின் ஸமான்களில் மிகவு மதிகமாயிருந்தது, இவ்விதமான தர்க்கங்களால் மூஸ்லிம்கள் பற்பல கூட்டங்களாகப் பிரிவதற்கும் ஒவ்வொரு கூட்டமும் மற்றவர்களோடு பகையாவதற்கும், யுத்தங்க ளுண்டாவதற்கும், இலக்ஷக்கணக்கான சனங்கள் உயிரிழப்பதற்குமாயின. இன்னுமிவர்களிற் சிலர் இல்மிற் றேர்ச்சியுடையவர்களாகவும் இபாதத்தைப் பயபக்தியாய்ச் செய்கிறவர்களாகவும், பொருளாசையையும் பெண்ணாசையையும் வெறுத்தவர்களாகவும், மனிதர்களை நேர்வழியிற் றிருப்பவேண்டுமென்கிற ஆசையுடையவர்களாகவு மிருப்பார்கள், அவர்கள் பெரிய மனிதர்களென்றும் சாலிஹான மனிதர்களென்றும் பிரபலமாகி, அவர்கள்போகிற விடமெல்லாம் அவர்களால் கற்போதனைகளைப்

பெற்றுக் கொள்ளவும், அவர்களால் பறக்கத்துப் பெற்றுக்கொள்ளவும் சனங்கள் கூடுவதும், தங்களுக்குச் சாட்டாங்கஞ் செய்வதும் மிகவுமின்பத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கும், மனிதர்கள் கைகளை முத்தமிடுகிறதும், அவர்கள் வாயால்வருகிற வஉழுகளைக்கேட்டுப் புதுமைப் படுகிறதும், அழுகிறதும் ஆனந்தத்தைக் கொடுக்கும். மனிதர்கள் நோய்களுக்குத் தண்ணீரோதி யெடுத்துக்கொண்டும், கையால்தடவப் பெற்றுக்கொண்டும், சில தருணங்களில் நோய்கள் குணங்கண்டவுடன் அவர்களுக்கு விலாயத் திருக்கின்றதென்று நினைத்துக்கொண்டும் ஒலியுல்லாவென்று கூறுவது மகிழ்ச்சிகொடுக்கும் அவர்களுக்குத்தானும் தாங்கள் விலாயத்துடைய மறுத்தபாவி விருக்கிறோமென்கிற பெருமை யுண்டாகி விடும். அவர்கள் துன்யாவை வெறுத்தவர்களென்று தவருய் நினைத்திருக்கிருர்கள், துன்யாவை வெறுக்கிறதென்பது பொருளையும் மனைவிமக்களையும் வெறுக்கிறது மட்டுமல்ல கீர்த்தியையும் புகழையும் பெருமையையும் வெறுக்கின்றதா யிருக்கும் பணத்தை யதிகமாகத் தேடுவது மிகுதமெல்லாம் கீர்த்தியையும் பெருமையையும்பெற்றுக் கொள்ளுதற்கே. ஒருவன் இல்மைக்கொண்டும் அமலைக்கொண்டும் கீர்த்தியையும் பெருமையையும் புகழையுந் தேடுவானேயானல் எவ்விதம் துன்யாவினசையை வெறுத்தவனென்று சொல்லலாம்? அவனுடைய அமல் எவ்விதம் பலன் கொடுக்கும், சுலூக்குடைய பாதையிலுள்ள ஆபத்துகளில் மஹா பெரிய ஆபத்து பெருமையா யிருக்கும். ஒருவன் எந்த மக்காமுக்கேறினும் பெருமையுண்டானல் அது அவனைக் கீழான மக்காமுக்குத் தாழ்த்திவிடும். பெருமைத்தன முடையவர்களுக்கு விலாயத்திருக்கக் கூடுமா? பெருமைத்தனம் ஷைத்தானின்குணம், அவுலியாக்களுக் கிருக்கக் கூடாது.

## ரிய்யா

### பிறர் மெச்சுதற்கு வணக்கஞ் செய்கிறது.

---

இவைகளில் மிகவுங் கெடுதியானது வாயினல் கலிமா ஷஹாதத்தைச் சொல்லுவார்கள். கல்பில் உண்மை கொள்ளா திருப்பவர்கள், வெளியரங்கத்தில் முஸ்லிம்களைப் போலிருப்பார்கள். அல்லாகுத்த ஆலாவுடைய திருவசனப்படிக்கு இவர்கள் நரகத்திற் றரிபாடா யிருப்பார்கள், இவர்களுக்கு முனுபிக்கீன்க ளென்று சொல்லப்படும், இவர்கள் அல்லாகுத்த ஆலாவுக்குப்பயப்படார்கள், நரகத்திற்கு அஞ்சார்கள்.

இரண்டாவது கூட்டத்தார்கள் இவர்கள் தீனை விசுவாசித்தவர்கள், ஆகிலும் பிறருக்குப் பயந்து வணக்கங்களைச் செய்வார்கள், ஸக்காத்தல்லது சதக்காக் கொடுப்பதற்கு கல்பு பிரியங்கொடாது பிறர் உலுத்தனென்று பழிப்பதற்குப் பயந்து கொடுப்பார்கள், நோன்பு மனிதருக்குப் பயந்து பிடிப்பார்கள், தொழுவதும் கூட்டத்தில் தொழுவார்கள், தனித்தபொழுது விட்டு விடுவார்கள். சீமான்கள் பள்ளிவாசல்களும் மதுரசாக்களும் பாலங்களுங் கட்டுவார்கள், அவர்கள் நாட்டம் தங்களுக்குக் கீர்த்தியுண்டாகவும், தாங்கள் மவுத்தானுலும் தங்கள் பெயர் அழியாதிருக்கவுமே. ஆனல் அவர்களப்

பொருள்களை யனியாயமாய்ச் சம்பாதித்திருந்தால் அவர்களின் கடமை, முதலாவது இனிமேல் இவ்விதம் சம்பாதிக்க மாட்டேனென்று தீர்மானிப்பதும், இரண்டாவது அல்லாகுத்த ஆலாவிடம் மன்னிப்புக் கேட்பதும், மூன்றாவது அப்பணம் உடையவர்களுக்குச் சேர்ப்பதும், அவர்களில்லாதுபோனால் அவர்களுரித்தாளர் களுக்குக் கொடுத்துப்போடுவதும், அவர்களு மில்லாதுபோனால் மிஸ்கீன்களுக்கு தருமஞ்செய்து போடுவதுமாயிருக்கும். அவர்கள் மனிதர்களின் புகழையும் கீர்த்தியையும் நாடிச்செய்திருந்தால் அவைகளை அவர்கள்பெற்றுக்கொள்வார்களே யன்றி, அல்லாகுத்த ஆலாவிடத்தே ஒருபோதும் பெறமாட்டார்கள்.

நாலாவது இரகசியமாக சதக்காக் கொடுத்தால் மனிதர்களுக்குப் பிரபலமாகாதென்று கூட்டமாக அழைத்து வெகு சத்தமும் ஒச்சமுமுடனே கொடுப்பார்கள், இன்னும் சிலர் பறுளான ஹஜ்ஜுக்குமேல் ஹஜ்ஜிசெய்வதற்குப் பணஞ்செலவு பண்ணுவார்கள், தன்னைச்சுற்றியிருக்கிற தன் உறவினர்கள் அயலார்கள் மிஸ்கீன்களுக்குக் கொடுத்துதவ நாடார்கள் இதுவுந் தவறாயிருக்கும், பிஷ்ரிபுனு ஹாரிது றகுமகுல்லாகுவிடம் ஒரு மனிதன் ஹஜ்ஜிக்குப்போக விடைபெற்றுக்கொள்ள வந்தபொழுது அவர்கள் அவனிடம் உனது நாட்டமென்ன வென்றுகேட்க அல்லாகுத்தஆலாவுடைய பொருத்தத்தை விரும்பித் தானென்று சொன்னான், அவர்கள் அப்படியானல் நீ யுன் வீட்டிலிருந்து கொண்டு ஆயிரம்திர்ஹமைச் செலவு செய்து அவன் பொருத்தத்தைப்பெற்றுக்கொள்வது நல்லதல்லவாவென்றுசொல்லி, ஆயிரம் திர்ஹமைக் கடனாளிகளா யிருப்பவர்கள் பத்துப்பெயர்களுக்குக் கொடுத்து அவர்கள் கடன்களைத் தீர்த்துவிடு அல்லது பக்கீர்களின் குறைவுகளை நீக்கிவிடு, அல்லது அநாதர்களுக்கு மகிழ்ச்சியுண்டாக்கிவிடு, உன் மனம் கெட்டியாயிருந்தால் ஒருவனுக்குமட்டுங் கொடுத்துவிடு. இப்படி முஸ்லிம்களின் வருத்தத்தை நீக்கிச் சந்தோஷமுண்டாக்கிறது பறுளான ஹஜ்ஜிக்குப் பின் நூறு ஹஜ்ஜி செய்கிறதிலும் உத்தமமென்று சொன்னார்கள்.

ஐந்தாவது, துன்யாவை வெறுத்து சூபியாக்களாகி விட்டோமென்று இந்தத் தேசங்களில் அநேகர் மஸ்த்தான்களென்று கூறிக்கொண்டு ளாஹிறான அமல்களையும் பாத்தினுடைய அமல்களையுந் தள்ளிவிட்டு மஸ்த்துக்களைப் பாவித்துக்கொண்டு காலம்முழுவதுஞ் சோம்புதலாய்ப் போக்குவதும், இரந்து ஜீவனஞ்செய்வதுமாயிருக்கிறார்கள். இவர்களை நெருங்கிப்பார்த்தால் அவர்கள் வெள்ளியும் உள்ளும் நஜீசாய்க் காணப்படும்.

ஆறாவது, இந்த ஊர்களிற் சில செய்குமார்கள் தவ்ஹீதென்று சொல்லிக்கொடுத்த உபதேசத்தை மனத்தி லிருத்திக்கொண்டு, அல்லாகுத்த ஆலா நமது அமல்களை விட்டுந்தேவையறறவ னென்று ளாஹிறுடைய அமல்களை விட்டுவிடுவார்கள், சரீர இச்சைகளிலும் துன்யாவினாசைகளிலும் மூழ்கினவர்களா யிருந்துகொண்டு அல்லாகுத்த ஆலாவைச் சேருகிறது நமது கல்பைக்கொண் டல்லாது ளாஹிறைக் கொண்டல்ல, நமது கல்பை அல்லாகுத்த ஆலாவின் திக்றிலும் பிக்றிலும் வைத்துக்கொண் டிருக்கிறோமென்றுசொல்லிக் கொள்

வார்கள். இவர்கள் நபிமார்களிலும் மேலான தறஜாவைப் பெற்றுக்கொண்டவர்களைப்போல் பேசுவார்கள் இவர்களை நெருங்கிப்பார்த்தால் இவர்களுடைய இல்மெல்லாம் பிழையான கருத்துகளை விளங்குதற்கு வருத்தமான சொற்களைக்கொண்டு பாடியிருக்கிற ஞானப்பாட்டுகளும், கருத்து விளங்கக்கூடாத அறபுச் சொற்களையும், கொச்சைத்தமிழ்ச் சொற்களையுங் கலந்தெழுதிய சில உரைக்கித்தாபுகளு மல்லாமல் வேறொன்றுமில்லை. இவர்களுடைய பேச்சுகளெல்லாம் அல்லாகுத்த ஆலாவுடைய திருவசனத்திற்கும், நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய போதனைக்கும் ஆரீபீன்களுடைய கருத்திற்கும் நேர்மாற்றமாயிருக்கும்.

ஏழாவது, இன்னுஞ்சிலர் சூபியாக்களைப்போல் உடை நடைகளிலும் கோலங்களிலும் பேச்சுகளிலு மிருப்பார்கள், தலையைக்கவிழப் போட்டவர்களாகவும் பேச்சின் தொனியை யடக்கினவர்க ளாகவும் இடைக்கிடை பெருமூச்சுவிடுகிறவர் களாகவுமிருப்பார்கள், ஆகிலும் நபுசைத் துய்தாக்குவதிலும் மறைவான பாவங்களையும் வெளியிரங்கமான பாவங்களையும்விட்டு நீங்கியிருப்பதிலும் முயற்சியெடுக்கமாட்டார்கள். பொருளின்விஷயங்களில் மிகவும்நோட்டமாயிருப்பார்கள், இவர்களும் தங்களைத் தாங்களே மருட்டிக்கொண்டிருப்பவர்கள்

எட்டாவது, இன்னுஞ் சிலர் தாங்கள் மஃரிபாவுடைய இல்முடையவர்களென்றும், ஹக்குத்த ஆலாவைத்தரிசித்துக்கொண் டிருப்பவர்க ளென்றும், பல மக்காம்களையுங் கடந்து கமாலிய்யத்தைப் பெற்றிருக்கிறவர்களென்றுஞ் சொல்லிக்கொண்டு, புக்கஹாக்கள் முபஷ்ஷிரீன்கள் முஹத்திதீன்களாகிய உலமாக்களை மிகவும் நிந்தனையாகப் பேசுவார்கள், இவர்களெல்லாம் ளாஹிறுடைய இல்மைக்கொண்டு திரைபோடப் பட்டவர்களென்று பழிப்பார்கள், தங்களுக்கு அல்லாகுத்த ஆலாவால் வொஹி வருகிறதென்றும் மறைவான காரியங்களெல்லாம் அறிந்தவர்க ளென்றும் ஊருக்கூர் சென்று மனிதர்களை ஏமாற்றி ஒன்றுமறியாத உழவர்களுக்கும், பொருளில் வெறிகொண்டிருக்கிற கச்சவடக்காரர்களுக்கும் முரீது கொடுத்துவருவார்கள். இமாம் கஸ்ஸாலி றகுமகுல்லாகு இவர்களை முஜுபிக்கீன்க ளென்று சொல்லுகிறார்கள்.

ஒன்பதாவது, இன்னுஞ்சிலர் மஃரிபாவுடைய இல்மைப் படிக்கிறதும் விளங்குகிறதும், சூபியாக்களுக்கிடையே யிருக்கிற கிலாபுகளை யாராய்கிறதுந், தஸுசிஹிய்யாக்களுடைய விசுவாசமாகியமறுபிறப்புண்டோஇல்லையோவென்று விளங்கப் பிரயாச மெடுப்பதுமே யல்லாமல் தங்களுடைய நபுசு அம்மாருவின் குணங்களையாவது சீழ்ப்படுத்த நினைக்காமல் அவர்கள்ஹயாத்து வீணுகி,கபுறரையிற்புகுதுகிறார்கள். இவர்கள் பெருவியாதி நோய்க்காகத்தன் ஊரைவிட்டு தூரத்தப்பட்டு வேறொருருக்கு வைத்தியஞ்செய்து சவுக்கியம் பெறுதற்குப் போயிருப்பவன் வைத்தியனெழுதிக் கொடுத்த மருந்துப் பட்டோலையை ஒருபுறம் வைத்துவிட்டு மருந்தைச் செய்யாது நானிந்தநோய் சுகமாகாமல் திரும்பி என்சொந்த ஊருக்குப் போனபின் திரும்பவும் இவ்வூருக்கு வர நேரிடுமோ அல்லது வேறு ஊருக்குப்போக வேண்டியதாகுமோ இவ

ன்ற ஆலோசனையிலே காலமுழுவதையும் போக்கி மருந்தொன்றும் அருந்தாமல் தன் ஊருக்குத் திரும்பிப் போகிறவன் போலாயிருக்கும். இதுபோல் அநேகவிதமான தவருன எண்ணங்களுடையவர்களிருக்கிருர்கள், அவைகளை விரித்துச்சொல்ல இப்பொழுதெனக்கு விருப்பமில்லை. ஆகிலும் நானுனக்குச் சொல்லியவைகளைக்கொண்டு எவ்விஷயங்களிலும் பிறர் மெச்சவும் புகழவும் நடக்கக்கூடாதென்று நான் சொன்னதென்று நினைத்துவிடாதே. நமது உஸ்தாது நமது உறவினர் முதலியவர்கள் நமது நன்னடக்கையைப் பார்த்து மெச்சுவதை விரும்புவது குற்றமல்ல, பொருள் நமக்கு சீவனத்திற்குத் தேவையாயிருப்பதுபோல் சில விஷயங்களிலதுவும் தேவையாயிருக்கும். ஆனல் நமது அமல்களைப் பிறர் மெச்சுதற்கு நாட்டம் வைத்துச் செய்வதுதான் குற்றமாயிருக்கும், உலமாக்களுடைய ஹாலோ மிகவும் வருத்தமானது, இல்மு மேன்மையுடையதாயும் ஹக்குடைய சிபத்துகளி லொன்ருயும் இருப்பதால் இல்மு அதிகமதிகமாக ஹக்குடனே சேருதல் நெருங்கிநெருங்கிவரும், இப்படிப்பட்ட மேன்மையான சிபத்தை யுடையவனுக்கு அந்த மேன்மையின் உணர்வுண்டாகா திருக்கக்கூடுமோ? அந்த மேன்மையுடையவனென்று தெரிகிறதும் பெருமையாயிருக்கும். இன்னும் இல்மு ஒளிவா யிருக்கின்றது, மனிதர்களை நேர்வழியிலாக்குதற்கு முயற்சியெடுக்கிறவர்களின் இல்மின் பிரகாசம் எங்கும் பிரகாசமாயிருக்கும், அப்படிப்பட்டவர்கள் பெயரிலன்பும் கனிசமும் உண்டாகா திருக்கக்கூடா. ஆகையால் இல்மைக்கொண்டும் இபாதத்தைக் கொண்டும் பெருமையுண்டாகாதிருக்க மிகவும் பிரயாசமெடுக்கவேண்டும், பெருமை றப்பானிய்யாவின் குணத்திலுள்ளது, மனிதரில் சிறுபிள்ளைமுதல் பெரியமனிதர்கள் வரையும் யாவையுங் கீழ்ப்படுத்திக்கொள்ள வேண்டுமென்கிற நாட்டம் தனது தத்துவத்திற்குத் தக்கதாயிருக்கும், மஷாயி குமார்களிலொருவர் மனிதர்களொவ்வொருவரிலும் பிர்ஊன் நானுங்களுக்கு மேலான நாயனென்று சொல்லுதற்குண்டான எண்ணமிருக்கின்றதென்று சொல்லியிருக்கிருர்களென்று செய்கு சொன்னர்.

முரீது, சபூரென்று சொல்லுவதென்னவென்று கேட்டான்.

## சபூற்.

---

சபூருவது, அல்லாகுத்த ஆலாவுடைய பாதையிற்போகிற சாலிகீன்களெடுக்கவேண்டிய குணங்களிலொன்ருயிருக்கும், இது இரண்டு வகையாயிருக்கும். சரீரத்திற் குண்டாகிற வருத்தங்களையும் நோவுகளையும் சகித்து சபூறுசெய்தல், இரண்டாவது இவைகளுக் கெல்லாம் மேலாகப் புகழப்பட்ட சபூருவது தன்சரீர இச்சை தேட்டங்கள் ஆவல் முதலியவைகளை யடக்கவேண்டிய மட்டிற்கு அடக்குதல், மோகத்தை யடக்குதற்குக் கற்பென்றும், கோபத்தை யடக்குதற்குத் தயாளசீலமென்றும், துன்யாவின் வாழ்க்கையை விட்டொளிதலுக்குத் துறவரமென்றும், யுத்தத்தின் அச்சம் வருத்தங்களில்லா திருப்பதற்கு வீரியமென்றும், சொற்பமானவைகள் போதுமென்றுக்கிக் கொள்ளுதலுக்கு மனரம்மியமென்றுஞ்

சொல்லப்படும், இவ்விதமான பல நற்குணங்கள் சபூறிலமைந்திருக்கின்றன. அறபிகள் பழமொழியாக சபூறு செய்தவன் ஜயமடைந்தானென்று சொல்லுவார்கள், இந்த மொழியின் கருத்தாவது சபூறைக்கொண்டு மனக்கலக்கங்கள் விசனங்கள் கெடுதிகளாகியவைகளை யுண்டாக்கிறவைகளெல்லாவற்றையுங் கீழ்ப்படுத்தி வெற்றியடைந்தானென்பதே, இது அமல்களில் மிகவு முயர்த்தியான அமலாயிருக்கும். ஒருமுறை நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடம் சபூறென்பது என்னவென்று கேட்டபோது ஈமானி லரைவாசியென்றும், இன்னு மொருமுறை சபூறுதான் ஈமானென்றுஞ் சொல்லியிருக்கிருர்கள். இன்னும் சபூறின் மேன்மையை அல்லாகுத்த ஆலா குறுவானில் எழுபது முறைக்குமேல் பேசியிருக்கிருன்.

துன்யாவில் செல்வ மிருக்கிறதாவென்றறிய ஒருவன் நாடி ஆராய்வானுகில் உலகத்திலுள்ள மனிதர்களில் பத்தி லொன்பது பெயர்கள் எழியவர்களாகவும் ஒவ்வொரு நாளையும் போக்கிக் கொள்வதற்கு மிக கஷ்டமும் கவனமு மடைந்தவர்களாகவும், அவர்களிடம் உங்கள் நிலைபரமென்னவென்று கேட்டால் அல்லாகுத்த ஆலா எங்களை என் படைத்தானென்று தெரியவில்லை, எங்கள் ஹயாத்து முழுவதும் கஷ்டத்திலும் துன்பத்திலுமே போக்கிருே மென்பார்கள், மீதமுள்ளவர்களாகிய யாபாரிகள் சீமான்கள் முதலியவர்களை நெருங்கிப் பார்த்தால் அவர்கள்காலம்முழுவதும் கவனத்திலும் பொருள் அதிகமாக்க வேண்டுமென்கிற ஆவலிலுமேயன்றி அவர்களுக்கு மனப் பாக்கியமிருப்பது மிகவுமரிது. சகல அறிவாளர்களும் புத்திமான்களும் ஒற்றுமையாகப் பாக்கியமாவது மனரம்மியமென்று சொல்லியிருக்கிருர்கள். மேலே சொன்ன எழியவர்கள் சீமான்களைப் போல் நாமும் சீமான்களாகவேண்டுமென்றும், அயலார்களைப் பார்த்து நாமு மவர்களைப்போல பொருளுடையவர்களாகவேண்டுமென்றுங்கவனங் கொள்ளாமல், தங்களுடைய செலவையும் தேவைகளையும் இல்லத்துண்டாகாத மட்டுக்குக் குறைத்துத் தங்களுக்குள்ளமட்டைக் கொண்டு மனப்பூரணமடைவார்களே அவர்கள்தான் பாக்கியவான்களாயிருக்கும். மிகுதியான கவனங்களும் வருத்தங்களும் நீங்கிவிடும், பிறரிடம் உதவிதேடுங் கீழ்மை விழுந்துவிடும். பக்கீரென்கிற அறபுச் சொல்லின் பொருள் தேவையுள்ளவன் ஒருவன் எழியவனுயிருந்தாலும் சீமானுயிருந்தாலும் அவனுக்கு இன்னும்வேண்டுமென்கிற விருப்பமிருந்தால் அவன் தேவையுடையவனல்லது பக்கீராயிருக்கும். அறபில் சீமான்களுக்கு கனியென்று சொல்லப்படும், அந்தச்சொல்லின்பொருள் தேவையற்றவன், மிகுதியான சீமான்கள் தாங்கள் தேடியவைகளெல்லாம் பின்னுல் பிறரொப்புக்கொள்ள வைத்துவிட்டு, இன்னும்போதாது இன்னும் வேண்டுமென்று பிரயாசப்படுவதால் அவர்கள் உள்ளமையில் பக்கீர்களாயிருக்கிருர்கள், அவர்கள் அல்லாகுத்த ஆலா கொடுத்தருளிய வாழ்வுக்கு சுக்று செய்தவர்களாகவும் மனரம்மியமுடையவர்களாகவும், ஆகிறத்திற்காகப் பணத்தைக்கொண்டு நன்மைகளை வாங்கிறவர்களாகவு மிருந்தால் இருலோகத்திலும் பாக்கியமுடையவர்களா யிருப்பார்கள். தேவையற்ற

வனென்கிற சிபத்து அல்லாகுத்த ஆலாவுடைய சிபத்துகளி லொன்று யிருப்பதால் சபூறைக்கொண்டு தே வையற்றவனென்கிற சிபத்தை யெடு த்தால் அல்லாகுத்த ஆலாவுடைய சிபத்தை யெடுத்தவனுவான். எழிய வர்கள் மேலே சொல்லியபடி மன ரம்மியமடைந்து, அல்லாகுத்த ஆ லாவிடத்தே தாங்களிருக்கிற பதவி யை நினைத்தார்களே யானுல் நாய னே! சீமான் தனமென்கிற முசீபத் தைவிட்டுங் காப்பாற்றினவனே உ னக்கே புகழென்று சொல்லுவார்கள் நபிசல்லலல்லாகு அலைகிவசல்லம் என் னுடைய உம்மத்திலுள்ள பக்கீர்கள் சீமான்களுக்கு ஐந்நூறு வருடங்க ளுக்குமுன் சொர்க்கம் புகுதுவார்க ளென்று சொல்லியிருக்கிறுர்கள். ப க்கீரான அடியானை கியாமத்திற்கொ ண்டுவரப்பட்டபொழுது அல்லாகுத் தஆலா எனது வலலமையின்பேரிலு ம்மகத்துவத்தின்பேரிலுஞ்சத்தியமா யுனக்கு துன்யாவிற் குறைவுவைத்த து நீ என்னிடத்தில் தாழ்மையுடை யவனு யிருந்தாயென்றல்ல, இவ்வி டத்திலுனக்குச் சங்கையும் வரிசை யும் வைத்திருப்பதால் உனக்கு அங் கு சுருக்கினேன், நீ இந்த அணிகளி ற்போய் என் முகத்திற்காக உனக்கு ஊண் வஸ்திரம் தந்தவனைப்பார்த்து அவன் கையைப் பிடித்துக்கொள், அவனுனக்கா யிருக்குமென்று சொல் வானென்றுஞ் சொல்லி யிருக்கிறுர் கள். இதைக்கொண்டு மிஸ்க்கீன்க ளாகிறவர்கள் சபா அத் துடைய பதவியை யுடைவர்களா யிருக்கிறுர் களென்பது விளங்குகின்றது. எழிய வர்கள் தங்களுடைய உயர்த்தியான பதவியையறிந்து அதை யுறுதிகொ ள்வார்களேயானுல், அவர்களுடைய வறுமைக்கு சபூறு செய்கிறதும், வ ருத்தங்களை சகித்துக் கொள்ளுகிற தும் இபாதத்தாய்விடும். மேலான ம றுத்தபாக்களைப் பெற்றுக்கொள்ளுத லும் இலேசாகிவிடும். சீமான்களுக் கோ பலவிதமான மருட்டுதல்களும் கொழுகுதல்களு மிருப்பதால், அ வைகளைவிட்டுக் களருகிறது மிகவும் வருத்தமாயிருக்கும். ஒரு கேள்வியு ண்டாகிறதற் கிடமிருக்கிறது; துன் யாவை அல்லாகுத்த ஆலா அழகாய் ப்படைத்து அதிலே பலவிதமான இ ன்பங்களுஞ்சுகிக்கக் கூடியதாயுஞ்செ ய்து, அதைச் சுகிக்கிற செல்வங்கள் காபிரீன்களுக்கும், கஷ்டப்படுத்து வது மூமீன்களுக்குமாய் வைத்திருக் கிறுனே. நாயகம் சல்லலல்லாகு அலை கிவசல்லம் துன்யா காபிரீன்களுக்கு சுவர்க்க மென்றும், மூமீன்களுக்குச் சிறைசாலையென்றுஞ் சொல்லி யிரு க்கிறுர்களே, இதற்குக் காரணமென் னவென்று யோசனை யுண்டாகும், நாயகம் சல்லலல்லாகு அலைகிவசல்லம் சொல்லியிருப்பது உண்மையே. அ வர்கள் வெளியிரங்கமாக யாவரும் பேசுகிற பேச்சுப்படிக்குச் செல்வம் காபிரீன்களுக்கும், துன்பம் மூமீன்க ளுக்கென்றுஞ் சொல்லி யிருக்கிறுர் கள். ஆனுல் உள்ளமைப்படிக்குப் பார்த்தால் காபிரீன்களுக்கும் பாவிக ளுக்கும் இவ்வுலகத்திலும் நரகம், ஆ கிறத்திலும் நரகம். மூமீன்களுக்கோ இவ் வுலகத்திலும் பாக்கியம், மறு லோகத்திலும் பாக்கியம்.

## சுக்று.

சுக்ருகிறது துதி, இது சாலிக்கீன் களுக்குச் சகல மக்காம்களிலும் தே வையாயிருக்கும். மற்ற அமல்களைப் போலவே, முதலாவது அதென்ன வென்றறிகிறதும், இரண்டாவது அ

தைக்கொண்டு கல்பில் நன்றியென்
னுங் குணமுண்டாகிறதும், மூன்றா
வது அந்த நன்றிசெய்தவன் பெய
ரிலன்புண்டாகி கல்பாலுஞ்சரீர உறு
ப்புகளாலும் நாவாலும் துதி கூறுகிற
துமாயிருக்கும். ஒருவனைப்புகழ அ
ல்லது துதிகூற, அவனொரு உபகார
மல்லது நலவு நமக்குச் செய்திருக்க
வேண்டும். அதை நினைத்தவுடனே
அவன் பெயரிலன்பும் நன்றியுமுண்
டாகி அவனைப்புகழ வேண்டியதாய்
வரும். இதுபோலவே அல்ஹம்து
லில்லா புகழெல்லாம் அல்லாவுக்
கா யிருக்குமென்று மொழியுமுன்,
அவனால் நாம் பெற்றிருக்கிற நிஉமத்
துகளையறிந்து சந்தோஷம் பொங்கி
அவனுடைய கிருபை கடாக்ஷத்திற்
கு நன்றியுணர்வுண்டாக வேண்டும்.
உள்ளமையைப் பார்த்தால் சகல நி
உமத்துகளும் அல்லாகுத்த ஆலாவில்
நின்றுமாயிருக்கும், நமது சரீரம் நபு
சு சுகம் நாம் பெற்றுக்கொள்ளும் நி
உமத்துகள் சகலதும் அவனில் நின்
றுமாயிருக்கும். ஒருவன் நமக்குச் சி
ல பொருள்களைத் தந்தால் அதற்கு
நாம் புகழ்கூறவேண்டியது அவனுக்
கல்ல, அல்லாகுத்த ஆலாவுக்கே. அந்
தப்பொருளைப் படைத்தவனு மவ
னே, அது அந்தமனிதன் கையில்வர
ச்செய்தவனுமவனே. இமாம்கஸ்ஸா
லி றகுமதுல்லாகு இதற்கொரு உவ
மைசொல்லுகிறார்கள்; ஒருஇராஜன்
ஒருமனிதன்பெயரில் பிரியங்கொண்
டு சிலபொருள்களைக் கொடுக்கும்படி
தன்மந்திரிக்குக்கட்டளை கொடுத்தா
ன், அவன் பொக்கிஷக்காரனுக்கு ஏ
வினான், பொக்கிஷக்காரனிடம் அந்
தமனிதன் அந்தப்பொருளைப் பெற்
றுக்கொண்டு, இராஜாவின் தயாள
சீலத்தையும் தாராளத்தையும் நினை
த்துச் சந்தோஷமுண்டாகி இராஜா
வுக்குத் துதிகூறாமல் அந்தப் பொக்
கிஷக்காரனுக்குத் துதிகூறுவதுபோ
ல் நமக்கு ஒருமனிதன்செய்த உபகா
ரத்திற்கு நாம் அல்லாகுத்த ஆலா
வைப் புகழாமல் அந்த மனிதனைப்
புகழுகிறதென்று சொல்லியிருக்கிறா
ர்கள்.

இந்த இல்மை யொருவன் தெளி
வாயறிந்து கல்பிற் றரிபடுத்திக்கொ
ண்டு அல்ஹம்துலில்லா வென்றுசொ
ல்லுவானே யாகில், இமாம் கஸ்ஸா
லி றகுமதுல்லாகு அவர்களுடைய
சொற்படிக்கு அது, நிஉமத்துகளெல்
லாம் அல்லாகுத்த ஆலாவில் நின்று
மென்றஉறுதியுண்டானதாயிருக்கும்,
அப்படியல்லாமல் இன்னா ரெனக்கு
இந்தஉபகாரத்தைச்செய்தான், இன்
னான் நலவைச்செய்தானென்றுநினை
ப்பதெல்லாம் சிர்க்காயிருக்கும். அல்
லாகுத்த ஆலா இன்னார்வழியாக இந்
த நிஉமத்தைத் தந்திருக்கிறானென்
று நினைப்பது சரியான நிய்யத்தாயி
ருக்கும். அல்லாகுத்த ஆலாவைக் க
ல்புகொண்டு சுக்று செய்கிறது முன்
சொல்லியபடி கல்பில் ஈமான் தரிப
ட்டு, கல்பு பூரிப்பதாயிருக்கும். நா
வைக்கொண்டு செய்கிறதாவது அந்த
கல்பின் பூரிப்பினால் நாவால் புகழை
வெளியாக்கிறதா யிருக்கும். சரீரத்
தி னுறுப்புகளின் சுக்றாவது அவை
களையெல்லாம் அல்லாகுத்த ஆலாவு
டைய ஏவலுக்கு வழிபடச் செய்கிற
தாயிருக்கும் கண்களால் முஸ்லிம்க
ளுடைய ஐபுகளைக்கண்டால் மறைக்
கிறதும் காதுகளால் கேட்ட ஐபுகளை
ஒழிக்கிறதும்இதுபோல மற்ற உறுப்
புகளாலும் அல்லாகுத்த ஆலாவுடை
ய பொருத்தத்தைத் தேடுகிறதும் சுக்
றாயிருக்கும். சகல நிஉமத்துகளும்
அல்லாவைக் கொண்டென்று கல்பி
ல் திட்டமாக்கி வரும்பொழுது தவ்

ஹீதுடைய மக்காம் வந்தடுத்துவிடும் நமது சரீரமு மவனுடைய நிலமத்தே நமது நபுசும் அவனுடைய நிலமத்தே நமது பேச்சு மவனைக்கொண்டே. ஆகையால் சுக்று செய்கிறவனு மவன் தான், சுக்று செய்யப்பட்டவனு மவன்தான். மூசா அலைகிஸ்ஸலாமுடைய மனத்தில் இந்த எண்ணமுண்டானபொழுது நாயனே! நானெவ்வித முன்னை சுக்றுசெய்கிறது, ஒரு நிலமத்தை இன்னுமொரு நிலமத்து சுக்று செய்கிறது எவ்விதமென்று கேட்க, அல்லாகுத்த ஆலா நீரிதை யறிந்திருப்பதுதான் சுக்றென்று வஹி யறிவித்தான் ஆகையால் கலப்பற்ற தவ்ஹீதில் சுக்று செய்கிறவனும் அவன் தான், சுக்று செய்யப்பட்டவனு மவன்தான். ஆரிபீன்கள் தவ்ஹீதுடையமக்காமில் சுக்றைவிட்டுவிட வேண்டுமென்று சொல்லுகிறது, நாம் சுக்று செய்கிறவனென்றும், அல்லாகுத்த ஆலா சுக்று செய்யப்பட்டவனென்றும் வந்தால் நமக்கொரு வுஜூதிருக்கிறது போலாகிறது. இது உள்ளமைக்கு மாற்றமான கருத்தாகிவிடும், அல்லாகுத்த ஆலா ஒருவனே தன் நபுசைக்கொண்டு தரிபட்டவன் கல்குகளெல்லா மவனைச்கொண்டு தரிபட்டவைகளா யிருக்கும். ஆகையால் உள்ளமையுடைய புறத்தில் கல்கை, ஹக்கைவிட்டு வேறுக்கிறதற்கு வழியில்லை, இந்த இல்மு மகா வருத்தமானது, கஷ்புகொண்டே திட்டமாகவேண்டும், ஆகிலும் தவ்ஹீதுடைய பேச்சில் கூடியமட்டில் விரிவாய்ச்சொல்வேன்.

## மஃரிபா.

மஃரிபாவாவது, உள்ளமையை யறியும் அறிவாயிருக்கும், உள்ளமையை யறிந்தவன் அல்லா ஒருவனே. மனிதனுடைய அறிவுகளெல்லாம் பஞ்சேந்திரியங்களைக் கொண்டும் யோசனையைக்கொண்டுமே யுண்டாகின்றன. இந்திரியங்களின் தத்துவக் குறைவினுல் தவறுன அறிவுகளுண்டாகலாம்,

எங்கள் கண்ணுக்குச் சூரியன் ஓர் சிறிய பொருளாய்த் தெரிகின்றபடியால் அதையோர் சிறிய பொருளென் றெண்ணுகிறோம், உள்ளமையிலோ அது பூமியிலும் இலக்ஷம்பங்கு பருப்பமுடையதா யிருக்கின்றது. நமது பார்வை தூலையிலிருக்கிற பொருளைச் சிறியதாய்க் காண்பதால் இந்தத் தவறுண்டாகிறது. நாம் யோசிக்கும் முறையில் தவறுண்டானுல் நமது கருத்துப் பிசகாகிவிடும். முற்காலங்களிலிருந்த அபுலாத்தூன் (Plato) சொக்றட்டிஸ் (Socrates) ஜாலினூஸ் (Yalon) முதலிய ஞானிகளுடைய புத்தகங்களைப் பலபாஷைகளுக்கும் மொழிபெயர்த்து அவைகளிலுள்ள அறிவுகள் மேன்மை பாராட்டிவரப்பட்டன. காலஞ் செல்லச்செல்ல பின்னுள்ள ஹுக்கமாக்கள் அவர்களின் கருத்துகளிலுள்ள தவறுகளைக்காட்டித் திருத்துதற்காயிற்று. இதுபோலவே மனிதனின் புத்தியைக் கொண்டு விளங்கியறியும் அறிவுகளும் சாஸ்திரங்களும் காலத்திற்குக் காலம் பேதகப்பட்டு வருகின்றன. ஆகையால் நமது புத்தியைக்கொண்டுள்ள அறிவுகள் சந்தேகங்களை விட்டும் பிசகுகளைவிட்டும் நீங்கமாட்டா, இன்னும் வஸ்துக்களின் வெளித்தோற்றங்களன்றி அவைகளின் உள்ளமை புத்திக்கெட்டாது. அதை ஹக்குத்த ஆலா ஒருவனேயறிவான், நாமவைகளை யறியவேண்டுமானுல் ஹக்குத்த ஆலாவைப் பின்பற்ற வேண்டும் அவனுடைய குறுஆனையும் அவ

ன் அாதரால் வெளியாக்கினவைகளே யுமுறுதிகொண்டு நடக்கவேண்டும் தக்வாவும் அமலும் சுலூக்கும் நமது நபுசைத் துப்பரவாக்கிவரும் வேளை யில், நமது பார்வை ஹக்குடைய பா ர்வையாகவும், நமது கேள்வி ஹக்கு டைய கேள்வியாகவும், அவனுடைய அறிவு நமதறிவாகவு மாகிவிடும். வ ஸ்துக்களி னுள்ளமையை அல்லா வைக்கொண்டு, அறியும் அறிவாக வும், அல்லாவைக் கொண்டுண்டாகி ற அறிவுகள் சக்குப்பிழை தவறுதல் சகலதையும்விட்டு மொழிந்ததாகவு ருமிக்கும்.

## மஃரிபாவின் பிரிவுகள்.

மஃறிபா எழு பிரிவாயிருக்கும். முதலாவது ஹக்காயிக்குடைய இல் முகள் அல்லாகுத்த ஆலாவுடைய ம றுத்தபாக்களுடையவும் அவனுடை ய அஸ்மா சிபாத்துகளுடையவும் அ றிவுகள். இரண்டாவது ஹக்குத்த ஆலா வஸ்துகளில் தஜல்லியாகும் அறிவுகள், மூன்ருவது ஹக்குத்த ஆ லா தன் அடியார்களுக்குக் கடமை யாக்கிய சரீயத்தைப் பற்றிய இல்மு கள், நாலாவது வுஜூதுடைய நிரப் பத்தையும் குறைவையும் பற்றிய அ றிவுகள், ஐந்தாவது இன்ஸான் தன் னுள்ளமையை யறிகிறது. ஆருவது கியாலுடைய இல்மு, அது சேர்ந்தி ருக்கும், ஆலங்களையும் பிரிவாயிருக் கும் ஆலங்களையும்பற்றிய இல்முகள். ஏழாவது நபுசுக்குடைய நோய்களும் அவைகளுக்குரிய மருந்துகளும் ஆகி ய எழு இல்முகளே.

## வுஜூதுடைய மறுத்த பாக்கள்:

ஆரிபீன்கள் இந்த இல்மை ஒரு ஒ ழுங்காயும் திட்டமுமாக்கிக்கொள்ளு தற்காகச்சிலர் எழுமறுத்தபாக்களாக வும், சிலர் நாற்பதுமறுத்தபாக்களாக வும் பிரித்திருக்கிருர்கள். இவ்விதம் பிரித்து நினைக்காதுபோனுல் அவனை ப்பற்றிய இல்முகள் தெளிவுபடாது. நானுனக்கு எழுமறுத்த பாக்களாய்ப் பிரித்திருக்கிற பிரிவைச் சொல்லுகி றேன் இந்தமறுத்தபாக்களை யறிவது கொண்டுஹக்கென்றும், கல்கென்று ம்பிரிவாய்ப்பேசினுலும் உள்ளமையி லொன்றென்பது திட்டப்படும். ஒரு மனிதனென்கிற சொல்லில் சரீரமு ம் றூஹுமடங்கிவிட்டன. பிரித்துச் சரீரமென்றும் றூஹென்றும் இரண் டாகப்பேசினுல் இரண்டு மறுத்தபாக் களென்று சொல்லலாம். வேண்டுமா னுல் எழாகவும் பிரித்துப் பேசலாம் சரீரம், சூக்ஷமம், பிராணம், காமம், மனம், புத்தி, ஆன்மா ஆகியவைகளே இன்னும் தேவையானுல் எழுபதாய்ப் ப்பிரித்தும் பேசலாம். பிரித்துப்பே சுவதெல்லாம் அக்கிலைக்கொண்டு வி ளங்குதற்கே. உள்ளமைப்படிக்கு யா வுமொன்றுதான். இதை விளங்காது சிலர் மறுத்தபாக்களுடைய பெயர்க ளையும் ஒன்றுக் கொன்றிருக்கிற வித் தியாசங்களையும் விளங்கிக்கொண்டு இதுதான் மஃறிபாவுடைய இல்மெ ன்று நினைத்துக் கொள்ளுகிருர்கள் இது தவறு இந்தப் பிரிவுகளைக்கொ ண்டு விளங்கி பிரிவற்றதா யொன்ரு க்கிறதுதான் தவ்ஹீது. பிரிவற்றதா யொன்றுபடுத்துதற்கு அக்கிலைக்கொ ண்டு கூடாது. ஹக்குக்கும் நமக்குமி

ருக்கிற திரைகள் நீங்கப்படவேண்டும். இதற்காக இல்முடனே பெரியோர்கள் காட்டியிருக்கிற அமல்களையும் செய்துவரவேண்டும். இன்சான் காமிலில் அவனுக்கிரண்டு வர்ணிப்புகளுண்டு. ஒன்று ஹக்கு, மற்றது கல்கு. இரண்டு பெயர்களுமுண்டு, ஒன்று றப்பு, மற்றது அப்து. இரண்டு முகங்களுண்டு ஒன்று ளாஹிறு, மற்றது பாத்தின். இவ்விதம் கல்கென்பதும் ஹக்கென்பதும் ஒன்றுதானென்று அறியும் இல்முக்கும் ஆலங்கள் வெளியான இல்முக்கும் மறுத்தபாக்களுடைய இல்மென்று சொல்லப்படும். இந்த இல்மைத் தொடங்குமுன் முதலாவது சில தவறான இஃதிகாதுகளை யறிந்து அவைகள் வந்து நுழையாது பேணிக்கொள்ள வேண்டும்.

முதலாவது அல்லாகுத்தஆலாவை கல்கைவிட்டும் வேறாக்கி விசுவாசங் கொள்ளுகிறது. இரண்டாவது கல்கும் ஹக்கும் ஒன்றென்பதால் நானும் ஹக்குதான், நானும் கதீம்தான். ஆலமும் கதீம்தானென்று விசுவாசங்கொள்ளுகிறது. மூன்றாவது ஆலம் வேறு, அவன் வேறு, ஆகிலும் அவன் ஆலத்திற்குள் ளிருக்கிறானென்ற விசுவாசங் கொள்ளுகிறது. இதற்கு ஹுலூல் என்று சொல்லப்படும். நாலாவது, ஆலம் வேறு நான் வேறு, ஆகிலும் அல்லாகுத்தஆலா இந்த ஆலத்தோடு சேர்ந்திருக்கிறானென்ற விசுவாசம் கொள்ளுகிறது. இதற்கு இத்திஹா தென்று சொல்லுகிறது.

இந்த நாலுவிதமான விசுவாசங்களையும் உனக்கு விரித்துக் காட்டுகிறேன். இவைகளின் வித்தியாசங்கள் மிகவும் நுட்பம்போலிருக்கும். ஆனால் நன்றாய் விளங்கிக்கொண்டால் அவைகள் மிகவும் பாரதூரமென்பது விளங்கும்.

## ஹக்குத்தஆலாவை கல்கைவிட்டும் வேறாக்கிற தவறான விசுவாசம்.

இந்த விசுவாசம் மிகுதியான முஸ்லிம்களிடத்து மிருக்கின்றது. கிறிஸ்தவர்களுடைய விசுவாசமும் இவ்விதமே. நாமொரு சட்டியைச் சமைத்தால் மண்ணையுந் தண்ணீரையுஞ் சேர்த்துச் சுட்டுவிடுகிறோம், அதில் நமது நபுசைச் சேர்ந்த தொன்றுமில்லை. அது நமது நாட்டத்தைக்கொண்டும் நமது செயலைக்கொண்டும் வேறு வஸ்துகளைச்சேர்த்து உருவாக்கப்பட்டது. செய்தபின் நாம் வேறு, அந்தப்பானை வேறாயிருப்பது போலவே அல்லாகுத்தஆலா என்று சொன்னவுடன் ஆலங்களுண்டாகிவிட்டன வென்றும், அவனைக்கொண்டு மவைகள் தோன்றினவைகளல்லவென்றும் விசுவாசங்கொண்டிருக்கிறது. இப்படி விசுவாசங்கொண்டிருப்பவர்களுக்கு அல்லாகுத்தஆலாவுடைய ளுஹூர், அல்லது வெளியாகுதலென்ற விசுவாசமில்லை. இது தவறென்பதைக் காட்டுதற்கு எனக்கும் ஒரு கிறிஸ்துப் பாதிரிக்குமிடையே நடந்த சம்பாஷணையைச் சொல்லுகிறேன்.

நானும் ஒரு கிறிஸ்துப் பாதிரியும் றைலில் கொழும்புக்குப் பிரயாணம் போகும்பொழுது என் கையிலிருந்த கித்தாபைப்பார்த்து அது என்ன கித்தாபென்று கேட்டார்; நான் தவ்ஹீது கித்தாபென்று சொன்னேன்.

அவர் சிரித்துவிட்டு எங்கள் கண்ணு க்குத் தெரிகின்றவைகள் சகலதுமி ல்லையென்றும், கடவுளொருவன்தா னிருக்கிறானென்றுஞ் சொல்லுவது மிகவும் புத்திக்குறைவான பேச்சா யிருக்கிறது என்று சொன்னார். அத ற்கு மறுமொழியாக தவ்ஹீதை நீங் கள் விசுவாசித்தில்லாதது நிசந்தான், ஆகிலும் அது உண்மையென்று உங் கள் வேத புத்தகத்தைக் கொண்டே ரூபிக்கிறேன். ஆதிலும் முதன்மை யாகத் தங்களிடம் சில கேள்விகளை க்கேட்கிறேன். அவைகளுக்கு மறு மொழி சொல்லுங்களென்று சொல் லி, கடவு ளெங்கே யிருக்கிறாரென் றுகேட்டேன்; அவர் கடவுளெங்கிரு க்கிறாரென்று சொல்லக்கூடாது, ஆ கிலும் மேன்மைக்காக வானலோக த்திலிருக்கிறாரென்று நாங்கள் சொ ல்லுகிறோமென்று சொன்னார். நான் நல்லது இந்தப் பூமிக்குள் ளிருக்கிறு ராவென்று கேட்டேன், அவர் பூமி க்குள்ளிருக்கிறாரென்று எப்படிச் சொல்லக்கூடும், பூமி ஒரு கண்டிப் பையுடைய சடப் பொருளாயிருக் க, அதற்குள்ளிருக்கிறாரென்று சொ ல்லக்கூடாதென்று சொன்னார். பி ன்பு நானவரிடம் நாங்களிருந்த ஆசனத்தைக்காட்டி இதிலவனிருக் கிறானவென்று கேட்டேன், அவர் சற்று கோபமாகத் தங்கள் பேச்சுத் தெய்வநிந்தையாயிருக்கிறது, இந்தப் பலகைக்கு ளிருக்கிறானென்று கேட் கப்படுமோவென்றுசொன்னார். நான் ந ல்லதுஉங்கள்கடவுள் (Omnipresent) எங்கும் நிறைந்தவன் அல்லது பரிபூ ரணமானவனென்று சொல்லியிருக் கிறதே, பரிபூரணமானவனென்றால் வேறொன்றிருக்க விடமில்லையே, தா ங்கள் சொல்லியது சரியானால் சட ப்பொருள்களில்லாத விடங்களெல் லாம் நிறைந்தவனென்றல்லவா சொ ல்லவேண்டும். இந்த ஆசனத்தில் கடவுளில்லையென்றால் பரிபூரண மென்கிற சொல் வரக்கூடாதே, ஒ ரு அணுவாகுத லவனையன்றி யிருக் குமென்றால் பரிபூரணமென்கிற சிப த்து நீங்கிவிடுகிறதேயென் சொன்று னவுடனே, சற்றுநேரம் பேசாமல் யோசித்துக்கொண்டிருக்கையில் நா னவரைநோக்கி, நீங்கள் பகிடியாகப் பேசிய அறிவு இதுதான். இதற்குத் தான் நாங்கள் தவ்ஹீதென்று சொ ல்லுகிறது, உங்கள் வேதத்திலுமிரு க்கிறது. ஆகிலும் நீங்கள் உலக சம் பத்துகளிலும் இன்பத்திலும் மருண் டிருப்பதால் அதற்கும் உங்களுக்கு ம் பிரித்தலுண்டாகி விட்டதென்று சொன்னபோது, அவர் தாங்கள் சொ ல்லிய பேச்சை நன்றாய்க் கவனிக்க வேண்டிய திருக்கிறது. ஆனால் எங் கள் கண்ணுக்குத் தெரிகின்றவைக ளெல்லா மில்லையென்று எப்படி யுறு திகொள்ளுகிறதென்று கேட்டார், நானதற்கு மறுமொழியாக, நானி வைகளெல்லா மில்லையென்றது ஹ க்கீக்கத்துப்படிக்கு, வெளியிரங்கத் திற்கு இவைகளிருப்பது நிசம், சாஸ் திரப்படிக்கும் நமக்குத் தெரிகிறதெ ல்லாம் தோற்றமே யல்லாமல் சத்து வல்ல, தோற்ற சத்துவின் சிபத்தல் லாமல் ஒரு பொருளல்ல, இந்த சிப த்துகளுக்கெல்லாம் அஸ்லிய்யத்தா ன சத்து அல்லாகுத்தஆலாவின்வு ஜூதென்று சொன்னேன். ஆனால் இந்த அறிவு நிறப்பமாகிறது புத்தக ஙகளை வாசித்தல்ல, நம்மிலுள்ள அசு த்தங்கள் நீங்கி ஞானக்கண் திறபட் டு அல்லாவை யறியவேண்டும். இத ற்குரிய சட்டங்களும் ஒழுங்குகளு ம் நமது வேதத்திலிருக்கின்றது. கிறி ஸ்து வேதத்திலில்லையென்று சொ ன்னேன்.

## இரண்டாவது கல்கும் ஹக்கு மொன்றென்பதால நானும் ஹக்குத்தான், ஆலமும் ஹக்குத்தானென்ற விசுவாசம்.

இந்த ஞானம் இத்தேசங்களிற் பரந்திருக்கின்றது. இதற்குக் காரணம்; இவ்வூர்களில் நசீஹத்துக்கொடுக்கிற செய்குமார்களில் மிகுதியான செய்குமார்களுக்குத் தஸவ்வுபுடைய கித்தாபுகளை வாசித்து விளங்குதற்குப் போதியமட்டு அறபுப்பாஷை தெரியாததும், இரண்டாவது அவர்களுக்கு ஆரிபீன்களுடைய ஆழமான கருத்துகளைத் தெளிவாய் விளங்கிக் கொள்ளுதற்குக் கூர்மையான புத்தியில்லாததும், மூன்ருவது ஞானப் பாட்டுகளென்று கருத்தை மறைத்து நொடிகள் சொல்லுவது போல் பாடியிருக்கிற பிரயோசனமற்ற புத்தகங்களைப் படித்துக்கொண்டும், ஹிந்து ஞானப் புத்தகங்களைப் பாடமிட்டுக்கொண்டும், தமிழ் ஞானத்திற்கும் நமது ஞானத்திற்குமிருக்கிற வித்தியாசந் தெரியாது இந்த இல்மில் காமிலானவர்களென்று தங்களை யெண்ணிக்கொள்ளுவதுமாயிருக்கும். இவ்விதமான தவருன இஃதிக்காதுள்ளவர்கள் அல்லாகுத்தஆலாவில் பணுவானவர்களுடைய நாவால் அனல்ஹக்கென்றும், நான் அல்லாவென்றும், நான் பரிசுத்தமானவனென்றும் வந்த வார்த்தைகளை அத்தாட்சியாகப் பேசுவார்கள். இவர்களோடு பேசினுல் தவ்ஹீதென்பது அல்லாகுத்தஆலா வல்லாமல் வேறென்று மில்லையென்று திட்டப்படுத்துகிறதாயிருக்க, நம்மை ஹக்குத்தாலாவைவிட்டும் வேருக்கினுல் தவ்ஹீ தெங்கே யிருக்கிறதென்று கேட்பார்கள்.

நமது தவ்ஹீது யாவுக்கும் உள்ளமை வேறென்றுமில்லை அல்லாவேயல்லாமலென்றும், ஆலமென்பது தோற்றம், அல்லது வுஜூதுடைய நிழல் அதற்கொரு வுஜூதுமில்லை உள்ளமையு மில்லையென்றுந் திட்டப்படுத்துகிறதாயிருக்கும். நான் ஹக்கு நான் நாயனென்று சொன்னுல் என்னை பணுவாக்குதற்கு வதலாக என்னைத் தரிபடுத்துகிறதா யிருக்கும். அப்படிச் சொல்லுகிறவர்கள் லாயிலாஹ இல்லல்லாகுவென்று சொல்லவே கூடாது. ஆரிபீன்கள் இவ்விதஞ் சொல்லுகிறவர்கள் இணைவைத்து வணங்கிறவர்களிலுங் கெடுதியானவர்களென்றும், ஒரு விதமாகுதல் அப்து றப்பாகிற தில்லையென்றும், றப்பு அப்தாகிற தில்லையென்றும் வெகு தீர்க்கமாகச் சொல்லியிருக்க, சில செய்குமார்கள் ஆரிபீன்களுடைய சொல்லுக்கு மாற்றமாக ஹிந்து ஞானத்தை முரிதீன்களுக்குச் சொல்லிக்கொடுப்பது மிகவும் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. இமாம் அப்துல்வஹ்ஹாபுஷ் ஷஃருனி றகுமகுல்லாகு லத்தாயிபுல் மின்னில் இவ்விதமான இஃதிக்காதுள்ளவர்கள் முஷ்ரிக்கீன்களிலும் கெடுதியானவர்கள், முஷ்ரிக்கீன்கள் விக்கிரகங்களை வணங்கினுலும், நாங்கள் அதை வைத்து வணங்கிறது நாயனை முடுகிறதற்கென்று சொல்வார்கள். இவர்களோ ஆலத்திலுண்டாயிருக்கின்ற வைகளெல்லாம் நாயன்தானென்று உறுதிகொண்டிருக்கிருர்கள். நிரச வஸ்த்து, தாபரவஸ்து, நட்டுவை, பாம்பு, ஜின், மனித

ன், மலக்கு, செய்த்தானுகிய படைப்புகள் சகலசையும் நாயன்தானென்று திட்டமாக்கிக்கொண்டார்கள். படைப்புகளேயும், படைத்தவனேயும் மேன்மையானவைகளேயும், கீழ்மையானவைகளேயும், துரத்தப்பட்டவைகளேயும், முனியப்பட்டவைகளேயும், இபுலீசைத்தானும் ஒன்ருக்கி, அல்லாசுபுஹான கூவத்தாலாவென்று பெலப்படுத்தினுர்கள். இது பைத்தியங் கொண்டவர்களுக்குத் தானும் பொருந்தாத பேச்சாயிருக்குமென்று சொல்லியிருக்கிருர்கள்.

இக்காலத்தி லிந்த ஊர்களில் இவ்விதமான பேச்சுகளேயே சில செய்குமார்கள் முரீதீன்களுக்குச் சொல்லிக்கொடுத்து வழிகேட்டிலாக்கிருர்கள். முரீதீன்களிலொருவன் செய்கிடம்போய் இன்னரிப்படி இன்ன கித்தாபிலிருக்கிறதாகச் சொல்லியிருக்கிருர்களே, அது நீங்கள் சொல்லியதற்கு மாற்றமாயிருக்கிறதேயென்று சொன்னுல், அது நிசந்தான்; ஆரிபீன்கள் சரீஅத்திற்கு விரோதிப்பதைப் பயந்து வெளியிரங்கமாக உள்ளமையைச் சொல்லாமல் அப்படி மறைத்திருக்கிருர்களென்றுசொல்லி ஒரு பைத்தைப்பாடி, அதைத் தமது உபதேசத்துக் கிணக்கமான பொருளேயுங்கொடுத்து அவனேத் திருப்தியடையச்செய்து, மகனே கேள்! என்னுடைய உபதேசங்கள் கித்தாபுகளி லெழுதப்பட்டில்லே, இது செய்குமார் வாயினுல் சொல்லிக்கொடுத்துத் தலைமுறையாய் வருகிறதென்றுசொல்லி முரீதீன்களே வழிகெடுக்கின்ருர்கள். முகியித்தீனிபுனுஅறபி றளியல்லாகு அன்கு அவர்கள் கல்புகள் தடுமாறத் தக்கதும், புத்திகள் மயங்கத்தக்கதுமான ஆழமான ஹக்காயிக்குகளே அவர்களுடைய புசூஸிலும், புத்தூஹாத்துல் மக்கிய்யாவிலும் திறந்துவிட்டார்கள். அதற்காக ளாஹிருடைய உலமாக்களிற் சிலர் அவர்களேக் காபிரென்றும், அவர்கள் கித்தாபைப் பார்ப்பது ஹருமென்றுஞ் சொன்னுர்கள். ஆனுல் பின்னுலுள்ள ஆரிபீன்கள், அவுலியாக்கள், குத்துபுமார்கள் முதலியவர்கள் சகலரும் அவர்களே செய்குல் அக்பறென்றும் ஆரிபீன்களுக்கு சுல்தானென்றும் புகழ்ந்து, அவர்கள் சொல்லியிருப்பவைகளேக் கனமாயெடுப்புக்கொண் டிருக்கிருர்கள். அப்துல் வஹ்ஹாபுஷ்ஷஃருனி றழிமகுல்லாகு அவர்கள் ஒருவன் முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்குஅவர்களுடைய கித்தாபிற் சொல்லியிருப்பதைச் சரியல்லவென்று சொல்வதற்கு நாற்பது இல்மு உடையவனுயிருக்கவேண்டுமென்று சொல்லியருக்க, இவ்விஷயத்தி லவர்கள் சொல்லியிருப்பதைச் சொல்லுகிறேன். முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு புத்தூஹாத்துல் மக்கிய்யாவில் முன்னூற்றுப் பதினலாம் பாடத்தில், இன்சான் தன் இன்சானிய்யாவுடைய தன்மையைவிட்டும் மலாயிக்கத்துகள் மலாயிக்கிய்யாவுடைய தன்மையைவிட்டும் பதவியிலுயர்த்தியாகிப் படைத்தவனுடனே ஒன்ருகிறது சரியாயிருந்தால், ஹக்காயிக்கென்கிற உள்ளமைகளெல்லாம் புரண்டுவிடும். அப்படியாகிறதானுல் அல்லாசுபுஹான கூவத்தாலா நாயனுயிருந்ததை விட்டுநீங்கி, கல்காகி விடுவான், கல்கு ஹக்காகி விடுவான். இவ்விதமொருவரும் விசுவாசங் கொள்ளவில்லே. இல்லாதது உள்ளதென்ருகி உள்ளமைகள் புரண்டுபோவதற்கு ஒரு வழியுமில்லே.

இன்னும் முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு லவாக்கிஉல் அன்வாறு என்கிற கித்தாபில் மஃரிபா, அல்லது அல்லாகுத்த ஆலாவைத் தெரிசித்தலின் நிரப்பமாவது அப்தையும் றப்பையும் பிரிவாய்த் தெரிசித்துக் கொள்ளுதல். றப்பன்றியே தன்னையே தெரிசித்துக்கொள்ளுதலை ஆரிபீன்கள் சகலரும் இல்லாமையான காரியமென்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு மாறுயிருந்தால் அவர் ஆரிபாயிரார், ஒரு ஹாலையுடையவராயிருப்பார். ஹாலையுடையவர் மஸ்துடையவர், மஸ்துடையவருக்கு உண்மை திட்டமில்லையென்றும், ஹல்லாஜிபுனு மன்சூர் றகுமகுல்லாகு அவர்கள் அனல்ஹக்கு என்று சொன்னபோலுள்ள பேச்சகளெல்லம் மஸ்துல் வருகிற பேச்சல்லாமல், உள்ளமையை வெளிப்படுத்துவதல்லவென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு அஸ்ருறுகளுடைய பாடத்தில் புதிதானது புதிதானதா யிருப்பதை விட்டும் ஒழியாது அனாதியானவன் புதிதானவைகளி லிறங்கினனென்று வருமானல், அல்லாகுத்தாலா சரீரத்தையுடையவனென்று வழிசறுகின கூட்டம் சொல்லுகிறசொல் சரியாகிவிடும். ஆகையால் அனாதியானவன் ஒரு பொருளில் வந்திறங்கிறதுமில்லை, ஒருபொருள் அவனி லிறங்குதற்கு இடமாயுமில்லை. ஒருவன் அல்லாகுத்தஆலாவுடனே சேர்மான முள்ளவனென்று வழக்காடுவானேயானல் அதுவே பிரித்தலா யிருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னுமவர்கள் நீ! நீதான், அவன்! அவன்தான். ஆனல் ஆசைகொண்டவனும் நானே, ஆசிக்கப்பட்டவனும் நானேயென்று ஆஷிக்கீன்களாகிய அல்லாகுத்தஆலாவின் மீது ஆசை கொண்டவர்கள் சொல்லுகிறபேச்சை, ஆசையும் அன்புங்கொண்ட நாவாலுரைப்பதன்றி, அறிவைக்கொண்டு உள்ளமையைத்திட்டப்படுத்துகிற பேச்சல்ல, அவனுடைய ஆசையென்கிற மஸ்துத்தெளிந்தால் அப்படிச் சொல்வதைவிட்டும் திரும்பிவிடுவான். ஆகையால் நீ அப்படிச்சொல்லாமலிருக்க உனக்கு அச்சம் பூட்டுகிறேனென்று சொல்லியிருக்கிறார்கள்.

மேலே முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அவர்கள் சொல்லியபடி ஆசித்தவனும் நான் தான், ஆசிக்கப்பட்டவனும் நான் தானென்று சொல்வது சிர்க்காயிருக்கும், தன்னை அல்லாவுக்கு இணையாக்குதலாயிருக்கும். ஆனல் புகழுகிறவனு மவனே, புகழப்பட்டவனுமவனே. ஆசித்தவனுமவனே, ஆசிக்கப்பட்டவனுமவனே யென்றுசொன்னல் அது தவ்ஹீதாயிருக்கும். தன்னை பனவாக்கி அல்லாகுத்தஆலாவைத் தரிபடுத்துகிறதாயிருக்கும். அப்படியல்லாமல் ஆசித்தவனும் நான்தான், ஆசிக்கப்பட்டவனும்நான்தானென்று சொன்னல், அல்லாகுத்தஆலாவை பனவாக்கித் தன்னைத் தரிபடுத்துகிறதாயிருக்கும். அல்லாகுத்த ஆலா குறுஆனில் ஹுவல்அவ்வல், வல்ஆகிர், வள்ளாஹிர், வல்பாத்தின். என்கிற திருவசனப்படிக்கு ளாஹிறு மவன்தான், பாத்தினு மவன்தானென்கிற தவ்ஹீதுதான் உண்மையான தவ்ஹீது.

ஹக்குத்தஆலாவின் மறுத்தபாக்களை நீயறிந்தால் உனக்கு இது நன்றாய்த் தெளிவாகும், ஆகிலும் இப்

பொழுது சாடையா யுனக்கு அறிவி விக்கிறேன். வுசூல் அல்லது சேர் மானம் வஹ்தத்துடைய மறுத்தபா வுக்கே, அஹதிய்யத்துடைய மறுத்த பாக்கல்ல. வஹ்தத்துடைய மறுத் தபாவென்பது ஹக்கின் இல்முடைய மறுத்தபாவாயிருக்கும், இது உனக்கு விளங்குதற்கு ஒரு உதாரணஞ்சொல்லுகிறேன். நானொரு கித்தாபை யெழுதவேண்டுமென்று எண்ணமுண்டானல் அந்த எண்ணம் இன்ன தின்னதென்று பிரிவில்லாது மூடலாயிருக்குந் தன்மைக்கு வஹ்தத்தென்று சொல்லலாம். நான் இன்ன தின்னதென்று எழுதவேண்டுமென்று என் மனதில் சூறத்தானல் அதற்கு வாகிய்யத்தென்றும், அந்த எண்ணம் வெளியானல் அஃயான் காரிஜா வென்றுஞ்சொல்லலாம். என்மனத்திலிருந்தது கடுதாசியிலெழுதப்பட்டபின் அந்தக்கடுதாசியில் கிறப்பட்டிருக்கிற எழுத்தை மனிதனுடைய சரீரத்திற்கும், அந்த எழுத்திலமைந்திருக்கிற பொருள் றூகுக்கும் ஒப்பிடலாம், அந்த எழுத்திலமைந்திருக்கிற கருத்தின் அஸ்லாவது என் மனத்தி லுற்பவித்த இல்மாயிருக்கும். அந்த எழுத்திலமைந்திருக்கிற கருத்திற்குப் பேசக்கூடுமென்று வைத்துக்கொள்வோம். அது எனது உள்ளமையாகிறது வேருென்றுமில்லை, இதை எழுதியவரே என்று சொன்னல், அது உண்மையான பேச்சாயிருக்கும். அப்படியல்லாமல் நானின்னுரில் நின்றும் வெளியானேன், அதனல் நான் அவர்தானென்று சொன்னல் அது தவருயிருக்கும். இதுபோலவே நாம் அல்லாகுத்தஆலாவின் இல்மிலுண்டான சூறத்தே. நமக்கு அஸ்லாவது அவன் ஙாட்டமே, அவனுடைய தாத்தும் நமது தாத்து மொன்ருயிருந்தாலல்லாது நானவன்தானென்று எவ்விதஞ் சொல்லக்கூடும்? இதைப்பற்றி அப்துல்கரீமுல்ஜீலீ றளியல்லாகு அன்கு இன்சான் காமிலில் நீ அவனயிருந்தால் நீயல்லா திருக்கவேண்டும், அவன் நீயாயிருந்தால் அவன் அவனல்லா திருக்கவேண்டும். ஆகையால் நீ! நீதான், அவன் அவன் தானென்று சொல்லியிருக்கிருர்களென்று செய்கு சொன்னர்.

## ஹுலூல் இத்திஹாது.

---

உலூலென்பது இறங்கியிருப்பது, ஆலத்திலுள்ள பொருள்களில் அவனிருக்கிருன் நமக்குள்ளுமிருக்கிருனென்று சொன்னல், ஆலம்முழுதிலுள்ள பொருள்களிலும் நம்மிலுமவன் விடுதிவிட் டிறங்கினது போலாயிருக்கும். யாவும் உள்ளமையில் அவனயிருக்க அவன் வந்திறங்குவதென்று சொல்வதெவ்விதம்? இத்திஹாதென்பது சேர்ந்திருத்தல், ஆலத்தோடல்லது நம்மோடு சேர்ந்திருக்கிருனென்பதும் தவருன எண்ணம். முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு புத்தூஹாத்துல் மக்கிய்யாவில் ஹுலூலையும் இத்திஹாதையும் மறுக்கிறதற்குரிய அத்தாட்சிகளில் மிகவும் திறமான அத்தாட்சியாவது சூரியனிலிருந்து ஒளி சந்திரனிற் பிரகாசிக்கிறதாயிருக்கும். சூரியனிலுள்ள தொன்றும் சந்திரனுக்கு வந்துவிடவுமில்லை, சூரியனின் தாத்து சந்திரனிற் றரித்துவிடவுமில்லை. சூரியனின் பிரகாசத்திற்குச் சந்திரன் தலமா யிருக்கிறதுபோலவே படைத்தவன் படைப்புகளிலிறங்கிவிடவில்லையென்று சொல்லியிருக்கிரு

ர்கள். இந்த அத்தாட்சிகளைக்கொண்டு சூரியனின் பிரகாசம் சந்திரனிற் பிரகாசிப்பதுபோலவே, அல்லாகுத்தஆலாவின் வுஜூது பிரகாசிப்பதற்கு ஆலம் தலமாயிருக்கின்றது. அல்லாகுத்தஆலா கல்குகளி லிறங்கிவிடவுமில்லை, சேர்ந்துவிடவு மில்லையென்பதும் தெளிவாய் விளங்கும். ஆகையால் அல்லாகுத்தஆலாவை யுறுதிகொள்ளும்போது இந்து ஞானிகளுடைய எண்ணங்கள் வந்துவிடாமலும், கிறிஸ்தவர்களைப்போல் அல்லாகுத்தஆலாவை ஆலத்தைவிட்டும் வேறாக்கி நினையாமலும், ஹுலூல் இத்திஹா தென்கிற தவறான விசுவாசங்கள் கொழுகிக்கொள்ளாமலும் பேணி, உள்ளமையில் அல்லா ஒருவனேயன்றி வேறில்லையென்கிற லாயிலாஹ இல்லல்லாஃ வென்கிற திக்றைக் கொண்டு தவ்ஹீது செய்யவேண்டும்.

முரீது, தாங்கள் சொன்னதில் ஹிந்து ஞானத்தைச் சில செய்குமார்களால் போதிக்கப்படுகிறதென்று சொன்னீர்களே நமது ஞானத்திற்கும் ஹிந்து ஞானத்திற்குமுள்ள வித்தியாசமின்னதென்று எனக்கறிய ஆசையாயிருக்கின்றது, கிருபைவைத்து எனக்கறிவிக்க வேண்டுமென்று சொன்னான்.

## ஹிந்து ஞானத்திற்கும் நமது ஞானத்திற்குமுள்ள வித்தியாசம்.

செய்கு, ஹிந்து ஞானத்திற்கும் நமது ஞானத்திற்கும் இவ்விஷயத்திலுள்ள வித்தியாசம் நாம் நமது றூகு படைக்கப்பட்டதென்றும், புதிதானதென்றுஞ் சொல்லுகிறோம். ஹிந்து ஞானிகள் நமது றூகுக்கு ஆத்துமாவென்றும், அது படைக்கப்பட்டதல்லவென்றும், அது அனாதியென்றுஞ் சொல்வார்கள். நமது றூகு அனாதியானபடியால் நாம் பரம், அல்லது நாயனென்று சொல்வார்கள், அவர்களுக்கு இதற்குமேல் மறுத்தபாக் கிடையாது. நாம் ஹக்குத்தாலாவுடைய மறுத்தபாக்களை இரண்டு விரிவாகப்பிரித்திருக்கிறோம், முதலாவது பாத்தின், இரண்டாவது ளாஹிர். றூகு மிதால் அஜ்ஸாம் ஆகியவைகளை ளாஹிறென்றும், அஹதியத்து வஹ்தத்து வாஹிதிய்யத் தாகியவைகளை பாத்தினென்றும் நமது ஆரிபீன்கள் பிரித்திருக்கிறார்கள். குறுஆனிலும் அல்லாகுத்தஆலா பாத்தினென்றும் ளாஹிறென்றும் பிரிவாக்கிச் சொல்லியிருக்கிறான். ஹிந்து ஞானிகள் ஸ்தூலம் சூக்ஷமம் பிராணம் ! காமம் மனம் புத்தி ஆத்துமா வென்கிற மறுத்தபாக்களாய்ப் பிரித்திருக்கிறார்கள். ஆத்துமாவுக்குமேல் மறுத்தபா அவர்களுக்குக் கிடையாது. சில செய்குமார்கள் தமிழ் ஞானிகளுடைய விசுவாசத்தை யொப்புக் கொள்ளுகிறதானால் நமது மஃரிபாவையும் குறுஆனிலுள்ள போதனைகளையும், நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வெளியாக்கிய வேதச் சட்டங்களையுந் தள்ளிவிடவேண்டும். நமது மஃரிபா இன்னதென்பது தன்சீகு தஷ்பீருடைய விளக்கங்களையும், மறுத்தபாக்களுடைய விவரங்களையும் நீயறிந்தா லுனக்குத் தெளிவாகுமென்று அதைச் சொல்லுகிறேன் கேளென்று சொன்னார்.

## தன்சீகும் தஷ்பீகும்.

தன்சீஹாவது ஹக்குத்தஆலாவை ஒப்புவமைகளைவிட்டும் தூய்மையாக்கிறது, தஷ்பீகு ஒப்புவமைகளாயறி

றது. தன்சீகு இரண்டு வகையாயிருக்கும். தன்சீகுல்கதீம் பூர்ப்பமான தன்சீகு, அது அவனுடைய உள்ளமையைப்பற்றி ஒன்றுந் தெரியாததென்றறிதல், நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் அல்லாகுத்தஆலா தன்னுடனே ஒரு வஸ்துவு மில்லாததாயிருந்தான் இப்பொழுதும் அப்பொழு திருந்தபடியே இருக்கிறானென்ற வசனம். அவனை யாவையும் விட்டும் நீக்கித் தூய்மையாக்குகின்றது, இந்த தன்சீகு ஒருவராலும் இவ்விதமென் றறியக்கூடாது. இரண்டாவது தன்சீகு ஒப்புவமைகளை விட்டும் நீக்கிறது, இதற் குதாரணம் அவனொருவரைப் பிறவுமில்லை, அவனை யொருவர் பிறவுமில்லை யென்பதில் ஒரு மனிதன் வேறொருவரில் நின்று உற்பத்தியாகிறது நமது மனத்திற்கு சூறத்தாகி அதைவிட்டும் ஹக்கைநீக்கித் தூய்மையாக்கிறது. தஷ்பீஹாகிறது ஹக்குத்தஆலா ளாஹிறுயிருப்பதனல் அவனுக்கு ஒப்புவமை கொண்டறிகிறது.

ஒருவன் ஹக்குத்தஆலாவை தஷ்பீகில்லாமல் தன்சிஹாக்கினல் அவனை தன் சீஹைக்கொண்டு மட்டுப்படுத்தினதாய்விடும். அவனை தன்சீகில்லாமல் தஷ்பீகாக்கினல் அவனை தஷ்பீகாக மட்டுப்படுத்தின தாய்விடும். இவைகளிரண்டும் தவறுயிருக்கும். அல்லாகுத்தஆலா தானே குறுஆனில் (லைஸக்கமிதிலிஹி) என்கிற ஒரே ஆயத்தில் அவனைப்போலொரு வஸ்துவுமில்லையென்று தன்னை தன்சீகாக்கியும், அவனே கேட்கிறவனும் பார்க்கிறவனு மென்று தஷ்பீஹாக்கியுஞ் சொல்லியிருக்கிறான், புசூசில் முகியித்தீனிபுனு அறபிளியல்லாகு அங்கு சில பைத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

நீ தன்சீஹாகப்பேசினல் நீ கட்டுப்படுத்திவிட்டாய், தஸ்பீஹாகப்பேசினல் மட்டுப்படுத்தி விட்டாய், இரண்டாகவும் நீ பேசினல் சரியான வழியிலாகிவிட்டாய், அறிவாளர்களுக்கு வழிகாட்டுகிற நாயகமாகி விட்டாய். ஹக்குடனே வேறொன்றைத்தரிபடுத்திப் பேசுகிறவன் முஷ்ரிக்காயிருக்கும். அவனைத் தனிமையாகப்பேசினவன் தவ்ஹீதைத் திட்டப்படுத்தினவனு யிருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். ஹக்குத்தஆலா பாத்தினுகவும் ளாஹிறுகவுமிருக்கிறான், ஆசையால் தஷ்பீகைத் தள்ளினவன், அவன் ளாஹிறுயிருக்கிறனென்பதை மறுத்தவனுகவும், தன்சீகைத் தள்ளினல் அவனுடைய பாத்தினை மறுத்தவனுகவு மாகிவிடுகிறான். ஹக்குத்த ஆலாவுடனே வேறொன்றைத் தரிபடுத்தினவன்முஷ்ரிக்கின்களிலாகி விடுகிறான். ஆலமாவது:—ளாஹிறென்கிற இஸ்மால் தோன்றியதா யிருக்கும், அது ஹக்குடைய வெளியாகுதலும் தஜல்லியாத்தும் சிபாத்துகளுமா யிருக்கும். உன்னைக்கவனி, உனது சரீரம் உனக்கு ளாகிறுகவும், உனது றூகு உனக்கு பாத்தினுகவும், இரண்டுஞ்சேர்ந்து மனிதனென்று ஒன்றுக்கிப் பேசுவதுபோல் ளாகிறென்கிற கல்க்கும், பாத்தினென்கிற ஹக்கும் ஒன்றுயிருக்கின்றன. ஆலமாவது:—ஹக்கின் நிழலைப்போலா யிருக்குமென்று செய்குசொன்னர்.

## மறுத்தபாக்கள் வுஜூது

ஹக்கு சுபுஹான கூவத்தஆலாதான் உஜூதாயிருக்கும், ஹக்கென்று சொன்னதின் கருத்து அவனுடைய தாத்து, தாத்தென்பதின் பொருள்

சத்து அல்லது மூலப்பொருள். தமிழ்ஞானிகள் பரப்பொருளென்றுசொல்வார்கள். வுஜூது என்பதின் பொருள் இருக்கின்றது. இந்தச் சொல் இல்லையென்கிற சொல்லுக்கு மாற்றம், இந்த இரண்டு சொற்களின் கருத்தைக் கூர்மையாய்க்கவனி, இருக்கிறதென்றதில் சமஸ்தமும் அமைந்துவிட்டது, இல்லை யென்கிறசொல், சொல்லிலிருக்கின்றதே யல்லாமல் அதற்கு உள்ளமையிலொன்று மில்லை. ஆகையால் உள்ளமைகளெல்லாம் அந்த இருக்கின்றதென்கிற சொல்லி லடங்கிவிட்டன. இந்தச் சொற்களின் பொருளை விளங்கிக்கொண்டால் இனிமேல் அறபுச்சொல்லையே பாவிப்பது இலேசாயிருக்கும். இந்த உஜூதுக்கு ரூபம் மட்டுத்திட்டமொன்றுமில்லை, அதுபோலவே ஹயாத்து இல்முபோலுள்ள அதின் உள்ளமையான சிபாத்துகளுக்கும் மட்டுத்திட்டமில்லை, இது தன் சீருடைய மறுத்தபாவுக்குடையது, அதின் வெளிதோன்றிய தஜல்லியாத்துகளுக்கு ரூபங்களும் மட்டுத்திட்டமுமுண்டு, அவைகளுக்கு அப்படி ரூபம் மட்டுத்திட்ட மிருந்தாலும் அந்த உஜூது பேதகமின்றி இருந்த தன்மையாகவே யிருக்கும். உனக்கு இது எவ்விதமென்று அறிய விருப்பமுண்டாகும், ஆகிலும் உனக்கு எச்சரிக்கையாய்ச் சொல்லுகிறேன், இதை விளங்க உன் கருத்தைச் செலுத்தாதே, அக்கிலைக்கொண்டாவது கஷ்பைக்கொண்டாவது, அவுலியாக்களுக்காவது, நபிமார்களுக்காவது, றசூல்மார்களுக்காவது ஒருபோது மறியக்கூடாது. மஃரிபாவின் கடைசியாவது ஹக்குத்தஆலாவின் உள்ளமை யறியக்கூடாதென்பதே. அபூபக்ருஸ்சித்தீக்கு றளியல்லாகு அன்கு அறியக்கூடாதென் றறிகிறது தான் அறிதலாயிருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். உனக்கு ஹக்குத்தஆலாவின் உள்ளமையை யறியக்கூடாதென்பதைத் திட்டப்படுத்துதற்காக ஒரு உதாரணஞ் சொல்லுகிறேன்; பூமி சந்திரன் நட்சத்திரங்களாகியவைகளெல்லாம் ஆகாசவெளியில் மிகவுஞ் சிறு பொருள்களைப்போல் சுற்றி ஓடிக்கொண்டிருக்கின்றன, சில நட்சத்திரங்கள் பூமியிலிருந்து இலக்ஷம் வருடப் பயணத்துலையிலும் அதிகமாகவும், எங்கள் பார்வைக்கு ஒரு நட்சத்திரம் மறு நட்சத்திரத்திற்கு ஒரு முழம் மட்டுத்துலையி லிருப்பதுபோல் தெரிகிறது. கோடிமைல் துலையிலும் அதிகத் துலையாயிருப்பதையுஞ் சிந்தி, சூரியன் பூமியைப்போல் பதின்மூன்று லக்ஷம்பங்கு பருப்பமுடையது.

ரிஸாலத்துல் ஹமீதீய்யா என்கிற கித்தாபில் சூரியனுடைய பருப்பத்தையும் பூமியின் பருப்பத்தையும் காட்டுதற்காக இரண்டு முழம் அகலமும், இரண்டு முழம் உயரமுமுள்ள ஒருபெட்டியைச்செய்து அதில் மென்மையான மணலை நிறைத்து அதிலொரு மணல் பூமியின் பருப்பத்திற்கும், மற்றதெல்லாம் சேர்ந்து சூரியனின் பருப்பத்திற்குஞ் சரியாயிருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். உனது கண்ணுக்கு மின்மினிப் பூச்சுப்போல் தெரிகின்ற ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியனுயிருக்கும், பூமி முதலிய கிரகங்கள் சூரியனைச் சுற்றிக்கொண்டிருக்கிறதுபோல் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் கிரகங்களும் சந்திரர்களு மிருக்கின்றனவென்று நுஜூம் சாஸ்திரிகள் உத்தேசிக்கிறார்கள். ஆகாச வெளியி

ல் பூமி ஒரு அநுபோலிருக்கும், இப்படிப்பட்ட ஆலங்களையெல்லாம் குன் என்கிற சொல்லைக்கொண்டு வெளியாக்கினவனின் உள்ளமையை மட்டுப்படுத்த நமது அக்கிலால் கூடுமா? இந்தப் படைப்புகளெல்லாம் இந்த ஆகாச வெளியில் மிகவும் சிறு பொருள்கள்போலிருக்கின்றன, இந்த ஆகாச வெளியின் எல்லை உன் புத்திக்கு மட்டுப்படுகிறதா? அது என்ன பொருள்களைக்கொண் டுண்டாகியிருக்கின்றனவென்று விளங்கின்றதா? அதை யொரு பொருளல்லது ஒரு வஸ்தென்று சொல்லசகூடாதென்றும், வெறுமையா யொன்றுமில்லாததா யிருப்பதுதா னென்றும் நீ சொல்லக்கூடும். ஒன்றுமில்லாதது படைப்புகள் யாவையும் உட்கொண்டதாயிருக்கிற தெவ்விதம்? இன்னும் அதற்கு ரூபம் நிறமொன்றுந் தெரியவில்லை, மட்டுத்திட்டமுங் காணவில்லை. சகலதும் அதிலுண்டாகி மறைகிறதா யிருக்கின்றதே இதை மட்டுப்படுத்த உன் புத்தியைக்கொண்டு கூடுமோ? நீ இதற்கு மறுமொழியாக மட்டுப்படுத்தக் கூடாதுதான், ஆகிலும் கண்ணுக்குத் திறவலாயும் நீலையாயும் தெரிகின்றதேயென்று சொல்வாய்; இதுவும் உன் கருத்தின் பிசகு. உனக்குத் தெரிகிறதெல்லாம் வானசோதிகளின் பிரகாச மல்லாது வேறொன்றுமில்லை, வானசோதிகளின் பிரகாசமும் நெருப்பின் பிரகாசமுமில்லாதிருந்தால் ஒரே இருளாயிருக்கும். உனக்கொன்றுந் தெரியாது, உனது சரீரம் உசும்புகிறதற்கு ஏதோ இடங்கொடுக்கிறதுமட்டுந்தான் விளங்கும். அந்த ஏதோ இருக்கிறதென்பது மட்டில்தான் திட்டமாகும். இந்த ஆகாச வெளியை மனிதரின் புத்திக்கு மட்டுப்படுத்தக் கூடாதிருக்க இது ஹக்குத்த ஆலாவில் அமைந்ததாயுமிருக்க, ஹக்குடைய உள்ளமையை நீ எவ்விதம் மட்டுப்படுத்தப் போகிறாய்? ஆகையால் ஹக்குடைய உள்ளமையை யறிவதில் கருத்தைச் செலுத்துவது பலனற்றதாயிருக்கும்.

ஹக்குத்த ஆலாவைக் கஷ்பைக்கொண்டு காண்கிறதென்பது அவனுடைய உள்ளமையாகிய தாத்தைக் காண்பதல்ல, அவனுடைய தஜல்லியாத்துகளைக் காண்பதுதான். இதற்கு உதாரணம் நாம் மனிதனை யல்லது சூரியனைக் காண்கிறோ மென்று சொல்லுகிறோம், ஆனால் நாம் மனிதனுடைய சரீரத்தின் வெளித்தோற்றத்தைக் காண்கிறோமல்லாது, அவனுடைய உள்ளமையைக் காண்கிறோமில்லை. சூரியனில் நின்று வெளியாகிற பிரகாசத்தைக் காண்கிறோமல்லாது, அதின் உள்ளமையை காண்கிறோமில்லை, ஆகையால் அவனின் உள்ளமையை யறியப் பிரயாசமெடுப்பது காலத்தை வீணாக்குவதாயிருக்கு மென்று செய்கு சொன்னார்.

முரீது, வாஜிபுல் உஜூதென்றும், மும்கினுல் உஜூதென்றும் ஆரிபீன்கள் சொல்லுகிறார்களே அச்சொற்களின் பொருளென்னவென் றெனக்கு விளங்கத்தர வேண்டுமென்று கேட்டான்.

செய்கு, ஆலத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் கவனித்துப்பார், ஒன்றாவது தன்னை தான் உண்டாக்கிக்கொண்டதென்று நினைக்கக்கூடுமா? உண்டாகமுந்தி இல்லாமைதானிருக்கும். இல்லாமைக்கு உண்டாகச்செய்வது எவ்விதம்? இன்னும் ஆ

லத்திலுள்ள ஒவ்வொரு பொருள்களும் பேதகமாகியும், அழிகிறதாயும், மறைகிறதாயு மிருப்பதால் இவைகளொன்றும் அனாதியல்ல வென்பதும், புதிதானதென்பதும் விளங்குகின்றது. புதிதானவைக ளுண்டாகுதற்கு வேறொன்றிருக்க வேண்டும், அந்த வேறொன்றுக்குத்தொடக்கமிருந்தால் அதை யுண்டாக்க வேறொன் றிருக்கவேண்டும். இவ்விதம் ஒன்றின்பின் ஒன்றாய்ப் பார்த்துவந்தாலும் கடைசியாக அனாதியான ஒரு உள்ளமை யிருக்கவே வேண்டும். அந்த உள்ளமையில்லாது ஒன்றுமிருக்கக்கூடாது, அதனா லதற்கு வாஜிபுல் வுஜூதென்றும் புதிதானவைகள் இருந்தாலு மில்லாதுபோனாலும் அதைக்கொண்டு ஒரு தேவையில்லாததால் மும்கினுல் உஜூதென்றும் சொல்லப்படும். அந்த உள்ளமை அண்டங்கள்யாவு முண்டாக்கிறதற்குக் காரணமா யிருப்பதால் சர்வ வல்லமையுடைய தென்றும், அண்ட முதல் எறும்பு வரையுமுள்ள ஒவ்வொரு படைப்பையும் படைக்கப்பட்டிருக்கிற யூகம் அந்த உள்ளமை பூரண ஞானமுடைய தென்றும், படைப்புகள் யாவிலும் ஹயாத்துப் பரந்தும், ஓயாது சொரிந்துகொண்டு மிருப்பதால் அந்த உள்ளமை ஹயாத்தை யுடையதென்றுந் திட்டமாயறிவிக்கின்றனவென்று சொன்னார்.

முரீது, தாங்கள் தாத்துக்குப்பொருள் சத்தென்று சொன்னீர்கள், முன் ஐவ்ஹறைக் குறித்துப் பேசும்பொழுது ஐவ்ஹறுக்கும் சத்தென்று சொன்னீர்கள், அவைகளிரண்டுமொன்ரு? வெவ்வேருனதா வென்பதைச் சொல்லவேண்டுமென்று கேட்டான்.

செய்கு, சத்தென்பது மூலப்பொருள், வேறொன்றைக் கொண்டில்லாது தன்னைக்கொண்டுதான் நிற்கின்றது. ஜவ்ஹர் வெளியாயிருக்கின்ற படைக்கப்பட்டவைகளுக் கெல்லாம் சத்தாய் அல்லது மூலப்பொருளாயிருக்கும். வுஜூது வெளியான மறைவான யாவுக்கும் சத்தாயும் மூலப்பொருளாயு மிருக்கின்ற தென்று சொன்னார்.

## அகதிய்யத்து.

இந்த மறுத்தபாவில் அஸ்மாக்கள் சிபாத்துகளொன்றும் வெளியாகிறதில்லை, இதுஉனக்கு விளங்குதற்கு நீ உன் நபுசையே நோட்டமிடு, உனது மனத்தி லொரு எண்ணம் நினைவுயாதொன்று முண்டாகாது, அவைகள் யாவையும்விட்டு நீங்கிய தன்மையாய் நீ உன்னிலே யமிழ்ந்தி வேறொன்றுந் தெரியாத் தன்மையா யுனக்கிருக்கக் கூடுமோனல் அது உனக்கு அஹதிய்யத்துடைய மறுத்தபாவென்று சொல்லலாம். இன்னும் நீ இந்தத் தன்மையிலிருந்தாலும் உன் எண்ணங்கள் கருத்துகளெல்லாம் உன்னிலே பாத்தினாய் வெளிவராம லிருக்கும், இதுபோலவே ஹக்குடைய பல உள்ளமைகளும் தன்னில் மறைந்ததாயிருந்தாலும் இதிலொன்றும் வெளியாகாது. இந்த மறுத்தபாவில் வுஜூது தாத்தாகவே யிருக்கும், இல்மும் இதுபோலவே, இந்த இல்மு மட்டுப்பட்ட இல்மல்ல, வுஜூதி தன்னைத்தானே யறிந்திருக்கிற இல்மு, இது தாத்துக்குப் பிந்தியுண்டான சிபத்தல்ல, அறிவும் அறியப் பட்டவனுமொன்ருயிருக்கும். நூறென்பது மிதுபோலவே, அது தன்னிலேதானே

யப் பிரகாசித்துக்கொண் டிருக்கின்றது. சுஹூது மிதுபோலவே, இவைகளெல்லாம் தாத்தைவிட்டுப்பிரிந்து பின்னுண்டான சிபத்துகளல்ல, இதற்கொருதாரணஞ் சொல்லுகிறேன்; நெருப்புக்குப் பிரகாசம் பின் னுண்டானதென்று சொல்லக்கூடுமோ? அந்த நெருப்பென்கிற உள்ளமை யுடனே பிரகாசமு மொன்ருயிருக்கிறது.

## வ கு த த் து.

வஹ்தத்துடைய மறுத்தபாவுக்கு ஹக்கீக்கத்து முகம்மதிய்யா வென்றும் மறுத்தபத்துத் தஜயுனுல் அவ்வல் அல்லது முதலாவது குறிப்பென்றுஞ் சொல்லப்படும். தன்னுள்ளமைகளை யெல்லாம் தன்னிலேதானே யறிந்ததாயும், அதற்குக் கீழான மறுத்தபாக்களில் வெளியாகிற படைப்புகள் அஸ்மாக்கள் சிபாத்துகள் சகலதையும் பிரிவின்றித் தொகுதியா யறிந்ததாயு மிருக்கிற தன்மைக்கு தஜயுனுல்லவ்வல் அல்லது முதல் குறிப்பென்று சொல்லப்படும். இந்த மறுத்தபாவில் தாத்தின் ஹுப்பு அல்லது தாத்தின் விருப்பமுண்டாயிற்று. குன், ஆகு என்று சொன்னது வேருென்றைப் பார்த்துச் சொன்னதல்ல, வேருென்றுமில்லா திருக்கையில் ஆகுஎன்று இல்லாததை நோக்கி மொழிந்ததுமல்ல, தன் இல்மிலே உண்டாயிருக்கின்ற தோற்றமைதைக் குறித்தே அந்தச்சொல் லுண்டாயிற்று. இவ்விதம் தன் இல்மை முன்னிலையாக்கிப்பேசினதால் அதற்குத் தன்மையல்லது நானென்கிற அன்னிய்யத்துண்டாகிக் கீழ் மறுத்தபாக்களிற் பலதாய்ப் பிரிந்த ஒவ்வொன்றுக்கும் நானென்ற அன்னியயத் துண்டாவதற்குக் காரணமாயிற்று. இந்த மக்காமுக்கு விஜ்தானென்று ஆரிபீன்கள் சொல்வார்கள், நானென்ற எண்ணத்தைப் பெற்றுக்கொண்ட மக்காம். இதுதான் சாலிக்கீன்களுடைய கடைசியான மக்காம், இங்குண்டான அன்னிய்யத்து இங்கு அழியவேண்டும், இந்த விடத்தில் பெற்றுக் கொண்டதை இந்த விடத்திற் கொடுத்துவிட வேண்டும், இதற்கு உயர இன்சானுக்கு மக்காமில்லை. வகுதத்துக்கு ஜலாலியென்றும் ஜமாலியென்றும் இரண்டு சிபத்துகளுண்டாயிருக்கின்றன. ஜலாலி என்கிற சிபத்து கஹர், கீழ்ப்படுத்தலென்கிற இஸ்மோடே கொழுகி மற்ற இஸ்ம் சிபாத்துகள் சகலதையும் அடக்கிஆண்டுகொண்டிருக்கும். ஜமாலென்கிற இஸ்ம் லுத்பு, காருண்ணியமென்கிற இஸ்மைக்கொழுகி சகல சிபாத்துகளிலும் பரந்துநிற்கும். வகுதத்து இந்த இரண்டு சிபத்துகளையும் பொதிந்ததால் கமாலென்கிற பெயருடையதா யிருக்கிறதுஎன்று சொன்னர்.

முரீது, தாங்கள் சொல்லியவைகளெல்லாம் என் மனத்திற்கு விளங்கினுலும் இஸ்மென்பதும் சிபத்தென்பதும் எனக்கு நன்ருய் விளங்கவில்லை, அவைகளை யெனக்குத் தெரியும்படி தயவுவைத்துச் சொல்லுங்களென்று சொன்னன்.

## இஸ்ம் சிபாத்து.

இஸ்மென்பது பெயர், சிபத்தென்பது பண்பு, அல்லது குணம். ஆலமென்கிற சொலவின்பொருள் அடையாளம். ஒரு அடையாளம் அதைப்பண்ணினவ னிருக்கிருனென்று காட்

டும், அதுபோல ஆலம் வெளியாகக் காரணம் அஃயான் தாபித்தாவாயிருக்கும், அஃயான் தாபித்தா அஸ்மாக்களையும் சிபத்துகளையும் அதற்குக் காரணமாகக் காட்டும், அஸ்மாக்களும் சிபாத்துகளும் அவைகளுக்குக் காரணம் தாத்தென்று காட்டும். ஆலமாவது அல்லாவுடைய (மூஜிது) உண்டு பண்ணினவனென்கிற இஸ்மின் அடையாளமாயிருக்கும், அதற்குச் சொந்தமாகிய ரூபம் முரீதென்கிற இஸ்மால் உண்டாயிற்று, அல்லாகுத்தாலாவுடைய காதிறென்கிற இஸ்மால் ஆலம் வெளியாக்கப் பட்டது. அல்லாவுடைய காலிகென்கிற இஸ்மால் மஃலூக்கு படைக்கப் பட்டவைக ளுண்டாயின, இரணங் கொடுக்கப்பட்டவைகளுக்கு ருசிக்கு இரணங் கொடுக்கிறவன் காரணனயிருக்கிறன், இதுபோலவே அல்லாகுத்தஆலாவுடைய தொன்னூற்றென்பது இஸ்முகளும் அதற்குரிய குணங்களையும் தத்துவங்களையும் வெளியாக்கி ஆலம் நடத்தப்பட்டுவருகின்றது. ஒரு மனிதனுக்குக் கொல்லத்துத் தொழில் தெரிந்திருந்தால் அவனுக்கு அந்தத்தொழில் தெரிந்திருக்கிறதற்கு, பன்பல்லது சிபத்தென்றும், அந்த சிபத்துடையவனுக்கு கொல்லனென்ற இஸ்முமிருக்கும். ஹயாத்துடைய தன்மையிருந்தால் ஹயாத்துடையவனென்றும், குதறத்தென்கிற சிபத்திருந்தால் அதையுடையவனுக்குக் காதிறு அல்லது தத்துவ முடையவனென்றும், இல்மென்கிற சிபத்திருந்தால் ஆலிமென்கிற இஸ்மும் பஸர், பார்வையென்கிற சிபத்திருந்தால் (பஸீர்) பார்க்கிறவனென்கிற இஸ்முமிருக்கும். இராஜாங்கஞ் செய்கிற சிபத்திருந்தால் இராஜனென்கிற இஸ்முந்தோன்றும் இன்னும் (கஹ்று) அடக்கியாளுகிறவனென்கிற இஸ்மு வெளியாக அடக்கியாளப் பட்டவைகள் தேவையாயிருக்கும், றப்பென்கிற இஸ்மு வெளியாக மர்பூபு அல்லது அப்து வேண்டியதா யிருக்கும். இது போலவே மற்ற அஸ்மாக்களும்.

நான் சொல்லிய சிபத்து முதலியவைக ளொரு மனிதனுக்கிருந்து, அவன் ஒரு மனிதன்போ லொன்றைச் செய்து அதற்கு ஹயாத்தைக் கொடுத்தால் செய்தவனுக்கு ஹயாத்திருக்கவேண்டும், இல்லாதிருந்தால் எவ்விதம் கொடுப்பான். காரணத்தில்லாதது காரியத்தில் வராது, அவ்விதம் ஹயாத்துக்கொடுத்தவன் தன்னுடைய ஹயாத்துக் குறைந்து பெலவீன முடையவனுகி விடுவான். ஹக்குத்த ஆலாவின் ஹயாத்தைக் கொண்டு படைப்புகள் யாவும் ஹயாத்தை யுடையவைகளா யிருக்கின்றனவென்ற சொல்லின் கருத்து அவனுடைய ஹயாத்தால் படைப்புகளிற் சிலபங்கு வந்திறங்கி விட்டதென்றால் அவனுடைய ஹயாத்துக்குக் குறைவுண்டாக வேண்டும். ஆனல் காரிய மப்படியல்ல, அவனின் ஹயாத்தின் பிரகாசந்தான் படைப்புகளுக்கு ஹயாத்தாயிருக்கும், அந்தப் பிரகாச மென்கிற தஜல்லியாத்தைக்கொண்டு உயிராயிருப்பதன்றி அவனுடைய ஹயாத்து படைப்புகளில் வந்திருப்பதல்ல, ஹக்கு இவ்விஷயத்தில் சூரியனையும் சிபத்துகளுக்கு அதின் பிரகாசத்தையும் உதாரணமாகச் சொல்லலாம். சூரியன் பிரகாசித்தால் அதைவிட்டொன்று நீங்கவுமில்லை, அதற்கொரு குறைவுவரவுமில்லை. பிரகாசிக்கப்பட்ட பொ

ருள்களில் வந்து சேர்ந்துவிடவு மில்லை. ஆலங்களெல்லா மொரு விஸ்தாரமான கண்ணாடியைப்போலாயிருக்கும், அந்தக் கண்ணாடியில் இலாஹிய்யாவின் சிபாத்துகள் தோற்றுகிறதாயிருக்கும். கண்ணாடியி லொரு பொருள் தோற்றினால் அந்தப் பொருளுக்கு அந்தத் தோற்றம் நிழலாயிருக்கும். ஒரு மரத்தின் நிழல் அல்லது ரூபம் தண்ணீரில் தோற்றினாலும், ஒரு கப்பல் ஓடுதற்கு அது தடையாயிருக்குமா? தண்ணீரில் ஒன்று மில்லையென்று சொல்லுவதுபோல்தான் ஆலம் உள்ளமையில் அஃயான் தாபித்தாவின் நிழலென்றும் அஃயான் தாபித்தா அஸ்மா சிபாத்துகளின் நிழலென்றும், அஸ்மா சிபாத்துகள் தாத்தின் நிழலென்றும் ஆரிபீன்கள் சொல்லுகின்றார்கள். இவ்விதம் நமக்கு ஒருஉஜூதுமில்லாது நாம் நிழலுக்கொப்பாயிருக்க, எவ்விதம் நான் ஹக்கென்று சொல்லுகின்றதென்று செய்கு சொல்லி முடித்தபின், நானுனக்கு மூன்றும் மறுத்தபாவாகிய வாஹிதிய்யாவைப் பற்றிச்சொல்லப்போகிறேன் கேளென்று சொன்னார்.

## வாஹி திய்யத்து.

---

செய்கு, வாஹிதிய்யா வென்கிற மறுத்தபாவுக்கு தஜயுன்தானி, இரண்டாவது குறிப்பென்றும். ஆதமுடைய ஹக்கீக்கத்தென்றும், அஃயான் தாபித்தாவென்றுஞ் சொல்லப்படும். இது அல்லாகுத்தஆலா தன் அஸ்மாக்களையும் சிபாத்துகளையும் வெவ்வேறாகப் பிரிவாயறிந்த மறுத்தபா. நீ யொரு காரியத்தை நினைத்தவுடன அது தொகுதியாய் மனத்தி லுற்பத்தியானால் அந்த தன்மைக்கு வகுதத்தென்றும், அந்தக் காரியத்தைச் சேர்ந்தவைகளெல்லாம் விவரமாயும் பிரிவாயும் மனத்தி லுண்டானால் வாஹிதிய்யத் தென்றுஞ் சொல்லலாம். இந்த மறுத்தபாவில் வுஜூது,இல்மு, நூறு, சுஹூது என்கிறநாலுமிருக்கும். உனக்கு முன்சொன்னகருத்துஉனது உள்ளமையிலிருந்து தோன்றியபடிந்த வெளியானால் உனதுஉள்ளமையை வுஜூதுக்கு உவமயாய் வைத்துக்கொள் இன்ன தின்ன தென்கிற அறிவிருப்பதால் இல்மென்றும், அந்த இல்முமனத்திற் பிரகாசித்தலுக்கு நூறென்றும், அது இன்னதென்று தரிசனையாவதற்கு சுஹூதென்றும் உவமை சொல்லலாம். அஃயான் தாபித்தா ஹக்குத்தஆலா தன் இல்மிலே சகல வஸ்துகளையு மறிந்துகொண்டிருக்கும் இல்மா யிருக்கும். இது ஹுப்பு தாத்தி என்கிற விருப்பத்தைக்கொண்டுண்டாகி அதில் நின்றும் வெளியானதால் அந்த வெளியாகுதலல்லது தஜல்லியாத்துக்கு பைளுல் அக்தசென்று சொல்லப்படும். அது தாத்திலிருந்து தோன்றியதாலும் அந்தத் தோன்றுதல் பரிசுத்தத்தில் நின்று வந்ததாலும் பைளுல் அக்தசென்று சொல்லப்படும். இது தோன்றி அது இல்மில் ரூபமாகி இணக்கமான தன்மையிலானவுடனே அவைகளை வெளியாக்குதற்காக தாத்தில் நின்றும் வெளியாகிற தஜல்லிக்கு பைளில் முகத்தசென்று சொல்லப்படும், அந்தத் தஜல்லியும் பரிசுத்தமானவிடமிருந்து வெளியானதால் பைளுல் முகத்தசென்று சொல்லப்படும், இந்த பைளுல் முகத்தசின் பிரகாசம் முன்தரிபாடாயிருந்த இல்மி லுண்டாயிருக்கின்ற மஉலூமாத்துகளென்ற மனத்தில் ரூபமாயிருப்ப

வைகளில் பிரகாசித்தவுடன் பிரதி விம்பமாகி விடுகிறது, பிரதிவிம்பம் ஒரு கண்ணுடியி லொரு வெளிச்சம் பிரகாசித்தவுடனே அந்தக் கண்ணுடியிலிருந்து பிரகாசம் வெளியே வீசுகிறது, அறபில் அக்ஸென்று சொல்லப்படும். அஉயான் தாபித்தாவில் தரிபட் டிருந்த தோற்றங்களில் பைளுல் முகத்தஸென்கிற பிரகாசம் வீசினவுடன் அந்த அஃயான் தாபித்தாவில் நின்று வெளியே வீசின பிரகாசம் அஃயான் காரிஜாவென்றும், ஆலங்களென்றுஞ் சொல்லப்படும். கண்ணுடியிலிருந்து பிரதிவிம்பமாகிற பிரகாசத்திற்கு ஆரிபீன்கள் நிழலென்றுஞ் சொல்வார்கள். பைளுல் அக்தஸென்றும், பைளுல் முகத்தஸென்றும் சொல்லுகிற சொற்களின் கருத்தை நீ நன்கு யறிந்திருந்து கொள்ளவேண்டும், இதுதான் ஸாஹிறுக்கும் பாத்தினுக்கும், ஹக்குக்கும் கல்க்குக்கும் பிரிவுண்டாகிறதலம். நீ யொரு காரியத்தை நினைப்பதற்கு உன்னிலல்லாது உனது உள்ளமையி லொரு விருப்பமுண்டாகிறது. அந்த விருப்பத்தை ஹுப்பு தாத்திற்கு உவமை சொல்லலாம், அந்த விருப்பத்தில் நின்று முனக்குக் கருத்துத் தோன்றுகிறது, அந்தத் தோன்றுதலை பைளுல் அந்தசுக்கு ஒப்புச்சொல்லலாம். அவ்விதம் தோன்றிய கருத்துகள் உன் மனத்திலே வெளிவராம லிருக்கும் வரையும் அஃயான் தாபித்தா வென்று கூறலாம். அந்தக்கருத்துத் தெளிவாய் இணக்கமான தன்மையிலானவுடன் இஸ்திஃதா தென்று சொல்லலாம், அதை வெளியாக்க உனது உள்ளமையில் நின்றுண்டாகிற உதிப்புக்கு பைளுல் முகத்தசென்று சொல்லலாம், அந்த உதிப்பு பார்வை, கேள்வி, பேச்சு ஆகிய சிபத்துகளி லொன்றைக்கொண்டும் வெளிவரவேண்டும், உனது கருத்து வெளிவந்தாலும் உன் மனத்திலிருந்து அங்கில்லாமல் வெளியேவந்து விடுகிறதல்ல, கருத்து மனத்திலிருக்கும் அதின் பிரகாசம்தான் வெளிவரும். ஒரு கருத்து வெளிவந்தவுடன் அது கோடிக்கணக்காய் அதிகப்படவுங் கூடும், உனது கருத்து பேச்சைக்கொண்டு பரந்து கோடிக்கணக்கான பெயர்கள் மனத்திற் பிரகாசிக்கவுங்கூடும், உனது கருத்தை ஒரு புத்தகத்தி லச்சிட்டால் அந்தப் புத்தகத்தை வாசிப்பவர்கள் மனத்திலெல்லாம் அக்கருத்துப் பிரகாசிக்கும், இவ்விதம் அப்புத்தகங்களிருக்கும் வரையும் உன் மனத்தி லுற்பத்தியான கருத்துப் பரந்துகொண்டு போகும். இந்தத் தஜல்லியாத்துகள் ஓயாதுண்டாகிக் கொண்டிருக்கும். நமது மனத்திலே தோற்றமாகிற தோற்றத்திற்கும் ஹக்குத்தஆலாவின் இல்மிலுள்ள தோற்றத்திற்கும் வித்தியாசமாவது:—நாம் சில பொருளைக் கண்டபின் அந்தப்பொருள்கள் நமது மனத்தில் சூறத்தாகும், காணுதபொருள் சூறத்தாகாது. ஹக்குத்தஆலாவின் இல்மிலுண்டான சூறத்துகள் தான் பின்னுல் வெளியாகின்றன. அப்படி வெளியாகிற சூறத்து இல்மிலுண்டாயிருக்கிற சூறத்தின் பிரதிவிம்ப மாயிருக்கும். இந்த மறுத்தபாவில் அறியப்பட்ட மஉலூமாத்துகளின் சூறத்து அஸ்மாக்களும் சிபாத்துகளுமா யிருக்கும். இந்த அஃயான் தாபித்தாவுக்கு இரண்டு புறமிருக்கும், ஒரு புறம் உஜூதைச் சேர்ந்திருக்கும், அது கதீமாயிருக்கும். மறுபுறம் பிரதிவிம்ப மென்கிற மும்கினென்ற படைப்புகளைச் சேர்ந்

ததாயிருக்கும், இதில் இலாஹிய்ய த்தான சிபத்துகள் நாலு. ஹயாத்து, இல்மு, இருதத்து, குறத்து வெளியாகிறதற்கு சிபத்துகள் மூன்று. சம்உ கேள்வி, பஸ்று, பார்வை, கலாம் பேச்சு.

முரீது, தாங்கள் ஆலத்தை அஹ்யான் தாபித்தாவின் நிழலென்று சொன்னீர்கள். இன்னுமதை கியாலென்றுஞ் சொல்லப்படுகிறது இது மன மொப்புக்கொள்ளும்படி ரூபித்துக்காட்ட மன்ருடிக்கேட்டுக் கொள்கிறேனென்று சொன்னான்.

## ஆலம் கியா லென்பது.

---

செய்கு, கண்டிப்பையுடைய கண்டிப்பில்லாத ரூபமுடைய ரூபமில்லாத பொருள்கள் யாவுக்கும் மூலப்பொருள் வுஜுதாயிருக்கும், இதற்குத் தமிழில் சத்தென்று சொல்லலாம். தமிழ் ஞானிகள் பரப்பொருளென்று சொல்வார்கள். ஜவ்ஹறென்பது சடப்பொருள்களுக் கெல்லாம் அஸ்லான பொருள். இதற்கும் தமிழில் சத்தென்று சொல்லப்படும். அர்ளு சடப்பொருளின் கோலமல்லது இலக்ஷணம்.

சடப்பொருளென்பது கண்டிப்பையுடைய கண்ணுக்குத் தெரியும் பொருள்கள் மட்டுமல்ல, மற்றும் இந்திரியங்களுக்குத்தெரிகின்ற பொருள்களெல்லாவற்றுக்கும் சடப்பொருளென்று சொல்லப்படும். காற்று கண்ணுக்குத் தெரியாதுபோனாலும் சரீரத்திற் படுவதால் அதுவும் சடப்பொருள்தான், வாசனை நமது கண்ணுக்குத் தெரியாதுபோனாலும் வாசனை கொடுக்கிற பொருளிலிருந்து சில நுண்மையான வஸ்துகள் வெளியாகி நமது நாசியிற் படுவதால் அதுவும் சடப்பொருள்தான். சூரியனின் பிரகாசந்தானும் கண்டிப்புடையதாக ஹுக்கமாக்கள் சொல்லுகிறார்கள். சூரியனிலிருந்து நுண்மையான பொருள்கள் வெளியாகி பரக்கிறதைக் கொண்டு பிரகாசமுண்டாகிறது, இது நிசமென்பது பொட்டகிருப் படமெடுக்கிறதைக் கொண்டு விளங்கும்.

சடப்பொருள்களில் நமது கண்ணுக்குத் தெரிகின்ற பொருள்களைக் குறித்துக் கவனிப்போம்.

சடப்பொருள், அல்லது கண்டிப்பையுடைய பொருளுக்குப் பல பெயர்களையுங் கொடுத்திருக்கிறோம். ஆனால் நமது கண்ணுக்குத் தெரிகிறது நிறம் நீழம் அகலம் கனமாகியவைகள் மட்டுந்தான். இந்த நீழம் அகலம் கனம் விகாரப்பட்டுப் பல பெயர்களுமுண்டாகும். வட்டம் முக்கோணம் சதுரம் முதலியவைகளெல்லாம் நீழம் அகலம் கன மாகியவைகளில் நின்றும் பிரிந்தவைகள். ஆகையால் நமது கண்ணுக்கு சத்துத் தெரியவில்லை, நிறம் நீழம் அகலம் கனம் மட்டுந்தான் தெரிகின்றன. இதை நன்றாய்க் கருத்தைக்கொண்டு விளங்கிப்பிடித்துக்கொள். உன்முன்னே ஒரு சுவரிருக்கின்றதென்று நினைப்போம், அந்த சுவரைப்பார்! உன் கண்ணுக்கு நிறமும் உயரமும் அகலமும் கனமுந்தான் தெரியும், வேறொன்றுந் தெரியாது. நிற மொரு வஸ்துமல்ல, உயர மொரு வஸ்துமல்ல, கன மொரு வஸ்துமல்ல, அகலம் ஒரு வஸ்துமல்ல. இவைகளந்த வஸ்தல்லது சத்துவின் கோல மல்

லது, லக்ஷணமாயிருக்கும். இந்த சத்துக்கு அறபில் ஜவ்ஹர் என்றும், அந்த ஜவ்ஹறின் குணம்லக்ஷணம் தன்மை யாகிய வைகளுக்கு அருளென்றுஞ் சொல்லப்படும், அந்த சத்து ஒருவர் கண்ணுக்குந் தெரியாது, அறளுதான் தெரியும். நீ சிவரென்று வெளி கோலங்கள் அல்லது சிபத்துகளைப் பார்த்து ஒரு பெயர் வைக்கின்ருய், அதினுள்ளமைப்பொருள் அல்லது சத்து இன்னதென்று உனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை நீ இந்தச் சிவரினுள்ளமைப் பொருளல்லது சத்து மண்ணல்லது கல்லென்று சொல்வாய், அந்த மண்ணை யல்லது கல்லை யெடுத்துப் பார்ப்போம். அவைகள் தூசிகள் சேர்ந்து ஒரு ரூபமாய்த் தெரிகின்றன. அந்த ஒவ்வொரு தூசியையு மெடுத்துப்பார்த்தால் நிறமும் நீழமும் அகலமும் கனமுமல்லாது வேருென்றும் தெரியவில்லை உலகத்திலுள்ள எந்தப்பொருளை யெடுத்துப் பார்த்தாலும் இதுபோலவே வெளிகோலம் தெரிகின்றதல்லாமல் உள்ளமைப்பொருள் தெரியவில்லை, ஆகையால்தான் ஆரிபீன்கள் முதல் ஐரோப்பிய கல்விமான்களும் ஒற்றுமையாக நமக்குப் பொருளின் சத்து இன்னதென்று தெரியாது, அதின் வெளிகோலம் மட்டுந்தான் தெரிகின்றது என்று சொல்லியிருக்கிருர்கள். இந்த வெளிகோலம் நான் முன் சொன்னபடிநிறம் நீழம் அகலம் கனம் ஆகிய வைகளைக் கொண்டு உண்டாகிற தோற்றம், அவைகளொரு பொருளைப்போல் நாம் நினைத்திருந்தாலும் அவைகள் உள்ளமையிலப்படியல்ல, தாத்து இந்தப் பஞ்சேந்திரியங்களுக்குத் தெரியாது, சிபத்துகள் எவ்வேளையும் பேதகமாவதும் வித்தியாசமாவதும் அற்றுப் போவதுமா யிருப்பதால் அது பஞவென்று திட்டமாய் விளங்கும். அவைகளி னுள்ளமையாகிய தாத்திற்குப் பேதகமல்லது அழிவிருக்கக் கூடாதபடியா லதுதரிபாடான தல்லது பக்காவென்பது நன்ருய்த் தெரிகின்றது. நான் சொல்லியவைகளை நன்ருய் பிக்றிட்டு விளங்கி மனதில் தரிபடுத்திக்கொண்டால், சுகூதுக்கு மிகவும் உதவியாயிருக்கும்.

நாம் காண்பதெல்லாம் கியாலல்லது தோற்றமென்பதற்கு இன்னுமொரு அத்தாட்சி காட்டுகிறேன்.

அகலம் நீழம் கனமிருக்கும் சடப்பொருள்களைப் பிரிக்கக்கூடும், உலகத்திலுள்ள பொருள்கள் யாவையும் பொடியாக்கித் தூசிகள்போல் சிறிதாக்கினல் அந்த ஒவ்வொரு தூசிக்கும் நீழம் அகலம் கனமிருக்கும், அப்படியிருக்கும் வரையில் அதைப்பலபங்காய்ப் பிரிக்கலாம், கையாலல்லது சூஸ்த்திரத்தால் பிரிக்கப்படாதுபோனுலும் அந்தத் தூசை யோசனையைக்கொண்டு கோடி கோடிக் கணக்காகப் பிரிக்கலாம். இவ்விதமெவ்வளவு பிரித்தாலும் அகலம் நீழம் கனம் உள்ளதாகவே யிருக்கும், அகலம் நீழம் கனமிருக்கும் வரையும் இன்னமும் பிரிக்கலாம். நீழம் அகலம் கனமில்லாமல் எவ்விதமிருக்கக்கூடுமென்று மனிதர் புத்திக்கு மட்டுப்படாது, ஆகிலும் கல்விமான்களுடைய தீர்ப்பு நமது புத்திக்குக் கடைசியான அல்லது அஸ்லான பொருள் இன்ன சூறத்தாயிருக்குமென்று மட்டுப்படுத்தக் கூடாதுபோனுலும் ஒரு சூறத்திருக்க வேண்டுமென்று எண்ணி அதற்கு அணுவென்று பெயர் கொடுக்கிருர்கள். அ

னுவுக்கு அவர்கள் சொல்லுகிற அர்த்தம் மனிதர்கள் புத்திக்கு மட்டுப்படாத சகல கண்டிப்பையுடைய வஸ்துகளுக்கும் அஸ்லிய்யத்தான பொருள், கல்விமான்கள் புத்திக்கு மட்டுப்படாதவைகளுக்கு அணுவென்று சொல்லி விட்டுவிடுகிறார்கள். ஆரிபீன்கள் அதுதான் அல்லாகுத்த ஆலாவுடைய வுஜூதெனத் திட்டமாக்கிறார்கள். ஆகையால் உலகத்தி லுள்ளவைகள் சகலதையும் பார்க்கும்பொழுது நமது பார்வைக்குத் தெரிகிற தோற்றமேயல்லாது உள்ளமையல்லவென்றும், இவைகளுக்கெல்லாம் உள்ளமை இன்னதென்று புத்திக்கு மட்டுப்படாதென்றும், சூபியாக்களுடைய வழியில் நடந்து திரைகள் நீங்கப்பட்டால் கல்விமான்களுடைய புத்திக்கு மட்டுப்படாதது அல்லாகுத்தஆலாவுடைய வுஜூதென்று விளங்கும், அதுதான் பக்கா தரிபாடானது. அழியாதது நித்தியமானது. மற்றவைகளெல்லாம் தண்ணீரில் விழுகிற வெளிச்சம் போல் நிலையற்றதாயிருக்கும்.

இன்னுமொரு அத்தாட்சி சொல்லுகிறேன்; சாஸ்த்திரப்படிக்கு வஸ்துகள் பலபல மூலப்பொருள்கள் சேர்ந்து சமைந்திருக்கின்றன. அம் மூலப்பொருள்களைப் பிரித்துக் கூறுக்குதற்கு (Chemistry) இரசவாதமென்று சொல்லப்படும். இரசவாதத்தைக்கொண்டு உலகத்திலுள்ள சகல பொருள்களையும் சில ஆவிகளாய்க் கூறுக்கலாம், அந்த ஆவிகளை மூலப்பொருளென்று கல்விமான்கள் தீர்மானித்திருந்தார்கள். காலஞ் செல்லச்செல்ல அவர்கள் மூலப்பொருளென்று நினைத்திருந்த ஆவிகள் வேறு மூலப்பொருள்களாற் சமைந்திருக்கிறதாகக் கண்டு பிடித்தார்கள். அவர்கள் கடைசியாக யாவுக்கும் ஒரே மூலப்பொரு ளிருக்கிறதாக உத்தேசித்தாலும் அது இன்னவிதமானதென்று விளங்கி யறியக்கூடாதென்பதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். முற்காலத்திலிருந்த அபுலாத்தூன் முதலிய பலாசிபாக்கள் யாவுக்கும் அஸ்லான பொருள் ஆகாச நுண்ணணு (Elher) என்று நினைத்திருந்தார்கள். இதற்கு அறபில் **அதீறு** என்று சொல்லப்படும். புத்தரென்கிற சக்கியா முனியிடம் அவருடைய சீஷர்கள் யாவுக்கும் அசில் அல்லது மூலமென்னவென்று கேட்க ஆகாசமென்று சொன்னார், ஆகாசத்திற்கு அஸ்லென்னவென்று கேட்டபொழுது அதைக் கேளாதையுங்களென்று சொல்லிப்போட்டார். அபுலாத்தூன் முதல் இதுவரையுமுள்ள பலாசிபாக்களுடைய ஆராய்வுகளைக் கொண்டும் பரிசோதனைகளைக் கொண்டும் அறிந்திருப்பது யாவுக்கும் அஸ்லாவது புத்திக்கு அல்லது பரீட்சைக்கெட்டாத ஒரு பொருள். இதுதான் மனிதர்களின் புத்தியின் எல்லை, இந்த எல்லையைக்கடக்க ஒரு கல்விமானுக்கும் முடியாது, ஆனால் கல்விமான்களெல்லோரும் நமக்குத் தெரிகிறது யாவும் தோற்றமென்பதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இவைகளுக்கு ஆரிபீன்கள் கியால் என்றும் தமிழ் ஞானிகள் மாயை யென்றுஞ் சொல்வார்கள். இந்த கியாலை அல்லது மாயையை உள்ளமையென்று நினைத்து நடக்கிறோம், கல்விமான்களுடைய புத்திக்கு கியாலென்பது விளங்கினாலும் அவர்கள் கல்பு குருடாயிருப்பதா லது எவ்வேளையும் மனத்திற் றரிபாடா யிருக்கமாட்டாது. அது தரிபாடாகிறது இரண்டுவிதம், முதலாவது நமது ஞா

னக்கண் அல்லது கல்புக்கண் திறபடவேண்டும். கல்பிலுள்ள இருள் நீங்கி ஒளிவு பிரகாசிக்க வேண்டும், இவ்விதம் கல்புக்கண் திறக்கப்பட்டவர்களுக்குத்தான் குதுபு மார்களென்றும், அவுலியா க்களென்றும், ஆரிபீன் களென்றுஞ் சொல்லப்படும். இவர்களுக்குக் காண்பதெல்லாம் மாயையென்பது திட்டப்படுவது மல்லாமல், உள்ளமை இன்னதென்பதும் உறுதிப்படும். இரண்டாவது மவுத்தைக்கொண்டு நமது றூது சரீரத்தைவிட்டும் பிரிந்தவுடனே நாமிது வரையும் மாயை யாகிய தோற்றத்தையல்லவா உள்ளமையென்று நினைத்திருந்தோ மென்பது தெரியவரும். நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மனிதர்க ளுறங்குகிறார்கள் மவுத்தானால் விழிப்பார்களென்று சொன்னது இதற்காகத்தான். இன்சான்காமிலை க்கோர்வைசெய்த அப்துல்கரீமுல்ஜீலி றகுமகுல்லாகு அவர்கள் நாயகமவர்களின் மேற்சொல்லிய வசனத்தை விரித்துரை செய்ததிற் சொல்லுகிறார்கள். இந்த கியாலை விட்டும் மனிதர்கள் மவுத்தானவுடன் விழித்தாலும் அந்த விழிப்புச்சரியான விழிப்பல்ல, பர்ஸகு உடைய ஆலத்திலும் அதாபும் நிஉமத்துமிருக்கும், அவைகளை யனுபவிப்பதும் கியாலாயிருக்கும். பின்பு மஹ்ஷறிலானபொழுது பர்ஸகிலிருக்கும் பொழுதுள்ள விழிப்பிலு மதிகமாயிருக்கும். ஆகிலும் அங்கும் சரியான விழிப்பல்ல, பின்பு நரகமல்லது சொர்க்கத்திற்கானால் முன்னிலும் விழிப்பதிகமாகும். சொர்க்கத்தின் இன்பங்களைச் சுகிப்பதிலும் நரகத்தின் அதாபு படுவதிலும் பராக்காகுவதால் அங்கும் நிரப்பமான விழிப்பிராது. சொர்க்கலோகத்தில் நின்றும் கதீபென்னுமிடத்தில் அல்லாகுத்தாலாவின் தரிசனை யுண்டானபொழுது தான் நிரப்பமான விழிப்புண்டாகும், அப்பொழுது ஆலங்களெல்லாம் துன்யா, பர்ஸகு, மஹ்ஷர், நரகம், சொர்க்கம் சகலதும் கியாலென்பது திட்டமாகும். துன்யாவிலுள்ள மனிதர்கள் சீவனஞ்செய்வதிலும் உலக இன்பங்கள் துன்பங்கள் அனுபவிப்பதிலும் பராக்காயிருப்பார்கள். அந்தப் பராக்கு உள்ளமையை மறைக்கும் திரையாயிருக்கும். இதுபோல்தான் மற்ற ஆலங்களிலும் அல்லாகுத்தாவுடைய தரிசனையை விட்டும் வேறு பராக்கா யிருப்பதெல்லாம் கியாலாயிருக்கும். அவுலியாக்களாகிறவர்கள் துன்யாவிலே விழித்துக்கொண்டவர்கள், ஆனாலவர்கள் விழிப்பு அவரவர்களின் கமாலிய்யத்துக்குத் தக்கதாயிருக்கும். ஆகையால் சகல ஆலங்களுக்கும் அஸ்லாவது கியாலாயிருக்கும், இந்த கியால் நீங்கினவுடனே அல்லாகுத்தஆலாவல்லாமல் வேறொன்றுமில்லை யென்பதைக் காண்பான். சுஹுது செய்கிறது கியாலென்பது தனக்குத் திட்டமாகிறதற்கும், உள்ளமையில் ஹக்குத்தாலா வல்லாமல் வேறொன்றுமில்லையென்பது திட்டமாகிறதற்குமே. திக்றென்பது மிதுதான், லாயிலாஹ என்று சொல்லும் பொழுது சகலதையும் பனுவாக்கி, இல்லல்லாகு வென்று சொல்லும்பொழுது அல்லாகுத்தாலாவைத் தரிபடுத்துவதாயிருக்கும். இவ்விதமாக சுகூதிற் றரிபடுத்தும்பொழுது ஆலங்களெல்லா மற்றுப்போனதாகவும், தன் சரீரந்தானும் அற்றுப்போன தாகவுங் காண்பான். இதைப்பற்றிய விவரம் சுகூதுடைய பேச்சிற் சொல்வேன்.

அல்லாகுத்தாலா ஒருவனிருக்கிறு னென்பதை சாஸ்த்திரப்படிக்கு அத்தாட்சிப்படுத்தப் போகிறேன். சாஸ்த்திரப்படிக்கு வானம் பூமி சகலதிலுமுள்ளவைகளெல்லாம் இரண்டுவகையாயிருக்கும். முதலாவது சடைப்பொருள், இரண்டாவது சத்து அல்லது (Force) தத்துவம், இந்த இரண்டு மிருப்பது எவருக்குந் தெரியும். நமது இந்திரியங்களுக்குத் தெரிகின்றவைகளெல்லாம் சடைப்பொருள், சற்றில்லாது சகலதும் அந்தந்தப் படியே நிற்கும், மண் எப்பொழுதும் மண்ணுகவே யிருக்கும், அதில் மரங்களும் பயிர்களும் முழைக்காது. நம்மிலொரு சத்தில்லாமல் வளரவும் உசும்பவும் நினைக்கவும் மற்றும் வேலைகள் செய்யவுங் கூடாது. பூமி, சந்திரன், சூரியன், நக்ஷத்திரம் ஆகியவைகளெல்லாம் யாதொரு ஆதாரமில்லாமல் அந்தரத்தில் அவையவைகளின் மண்டலங்களிற் சற்றும் பிசகாமல் ஒவ்வொரு மணிநேரத்தில் ஆயிரக்கணக்கான மைல் விரைவில் சுற்றச்செய்யும். தத்துவத்தின் வல்லமையை யோசியுங்கள், இந்த சத்து அண்டத்திலுள்ள ஒவ்வொரு அணுவிலும் பூரணமாய்ப் பரந்திருக்கின்றது, கடவுளில்லை என்பவர்களும் இப்படிப்பட்ட வல்லமையை யுடைய சத்து யிருக்கின்றதை யேற்றுக்கொள்ளுகிறது மல்லால், அந்த சத்திற்கு ரூபமில்லை யென்பதையும் ஏகமும் பரந்திருப்பதையுமேற்றுக் கொள்ளுகிறுர்கள். அந்தஅரூபியான வல்லமையுடைய பரிபூரணமான சத்திற்கு முஸ்லிம்களாகிய நாம் றப்பென்றுஞ் சொல்லுகிறேம். கல்விமான்கள் சத்துவென்றும் நாம் றப்பென்றுஞ் சொல்லுகிற பொருளுக்கு நாம் சொல்லுகிற சிபத்துக ளிருக்கின்றனவா வென்று யோசிப்போம். அந்தச் சத்து ஆதியோ, சடைப்பொருள் ஆதியோவென்று யோசித்தால் சடைப்பொருளொவ்வொரு மணிநேரமும், ஒவ்வொரு நொடியும் அதின் தன்மை பேதகமாகி வேறு ரூபங்களெடுப்பது எங்களுக்குத் தெரிகின்றது. அப்படி பேதகமாக்கச் செய்வது அந்தச் சத்துத்தான். அந்த சத்து பேதகமாகுதென்று நினைப்பதற்கிடமில்லை. அதனுல் நித்தியமான பொருளாகிய அந்த சத்துவே ஆதியானதென்று மனமேற்றுக்கொள்ளுகிறது. ஆதியானதென்பதற்கு அறபில் கிதம் என்று சொல்லப்படும், இந்த சத்திற்குப் பேதகமல்லது குறைவுகளுண்டாகக் கூடாதென்பதையும், அது அற்றுப்போவதற்கு ஒரு வழி யில்லையென்பதையும் நமது புத்தி ஏற்றுக்கொள்ளுவதால் நித்தியமல்லது பக்கா வென்று சொலலுகிறேம். அந்த சத்து சடப்பொருளைப் போல் ரூபம் பேதகமாகுதல் அழியுதல் ஐம்புலனுக்குத் தோற்றுதல் முதலிய குணங்கள் யாதொன்று மில்லாததால் ஒரு விஷயத்திலும் அந்தச் சத்திற்குச் சடைப்பொருள் ஒப்புச்சொல்லக்கூடாதென்று முகாலிபத்துன் லில்ஹவாதிதி என்கிற சிபத்தைக் கொடுக்கிறேம். அந்த சத்து சடப்பொருளின் ஆதாரத்தைக் கொண்டுள்ளதல்ல, சடப்பொருள் அந்த சத்துவின் ஆதாரத்தைக்கொண்டு தரிபட்டிருப்பதால் அதற்கு கியாமுகூபி நபுசிஹீ தன்னைக்கொண்டு தரியாடானதென்கிற சிபத்தைக்கொடுக்கிறேம். அந்த சத்து ஒன்ருயிராமல் பலதாயிருந்தால் ஒன்றுக்கொன்று மாருகிவிடும். அண்டத்தி லுள்ளவைகளை யெல்லா மொழுங்

தாய் நடத்தப்படுவதால ஒரே தத்து வமல்லது வஹ்தானிய்யத் தென்கிற சொல்லைச் சொல்லுகிறேம். இன்னுமொரு சிறு வேலையை ஒரு மனிதன் சமர்த்தாய்ச் செய்வதா லவனுக்குப் புத்தி யுடையவ னென்று சொல்லுகிறேம். அண்டத்திலுள்ள கல்குகளை நோட்டமிட்டால் மனிதனுடைய புத்திக்கு மட்டுப்படாத யூகம் வெளியாகுவதால் இல்மு என்கிற சிபத்தைக் கொடுக்கிறேம். மனிதனுக்கு நாட்டம், சக்தி, கேள்வி, பார்வை, பேச்சு முதலியவைகளெல்லாம் அந்த சத்துவைக் கொண்டே வெளியாயிருப்பதால் இல்மு, இறநத்து, நுதறத்து, சம்உ, பஸறு, கலாம் என்கிற சிபத்துகளை யுடையதென்று சொல்லுகிறேம். கல்விமான்கள் சத்துவென்று சொல்லும் பொருளுக்கு இதம். பக்கா, முகாலிபத்துன் லில்ஹவாதிது, கியாமுகூபி, நபுசி, இல்மு, இறுதத்து, குதறத்து, சம்உ, பஸறு, கலாம் என்கிற சிபத்துகளெல்லா மிருப்பதால் அந்த சத்திற்கு அல்லாஹ் என்னும் இஸ்மைச் சொல்லுகிறேம்.

## ஆலங்கள் படைக்கப் பட்ட விதம்.

---

செய்கு, நானிப்பொழுது ஆலங்கள் படைக்கப்பட்ட விதத்தைச் சொல்லப்போகிறேன். ஜபறூத்துடைய ஆலத்தையும் மலக்கூத்துடைய ஆலத்தையுஞ் சேர்ந்தவைகள், அஜ்ஸாமுடைய ஆலத்தைப்போ லல்ல, பஞ்சேந்திரியங்களைக்கொண்டு தெரிகிற பொருள்களுமல்ல, அதனலவைகள் உன் மனத்தில் சூறத்தாகும்படி விளக்கக்கூடாது, கல்புக் கண்ணல் கஷ்புண்டாகிக் காணவேண்டும். ஆனல் கஷ்பைக்கொண் டறிந்த ஆரிபீன்கள் சொல்லியவைகளை உனக்கு விளங்கத் தக்கதாய்ச் சொல்லுகிறேன், நானுன் மனத்திற்கொரு மட்டுக்கு விளங்கும் பொருட்டு உபமானங்களைச் சொன்னல் எவ்விஷயத்திலு மவைகளைப்போலென்று நினைத்துவிடப்படாது, ஒவ்வொரு வானத்திலும் வெவ்வேறு படைப்புகளாயும் வெவ்வேறு தன்மைகளும் சிபத்துகளு முடையவைகளாயும் படைக்கப்பட்டிருக்கின்றன. வெவ்வேறு யிருந்தாலும் சில விஷயங்களில் நமது ஆலத்திற்குச் சம்பந்தமுடையவைகளாயு மிருக்கின்றன, இவைகளைக் குறித்துப் பேசுமுன் அநேகர் தங்கள் மனத்தில் கண்டிப்பை யுடைய பொருள்களையே பெரிதாயும், கண்டிப்பில்லாதவைகளை மிகவு மிலேசாயும் எண்ணியிருக்கும் தவருன எண்ணம் உன் மனத்தைவிட்டு நீங்கவேண்டும், சரீரம் றூகைச் சுமந்துகொண்டிருக்கிறதென நினைப்பது தவறு. றூகு சரீரத்தைச் சுமந்துகொண்டிருக்கிறது, றூகு நீங்கினல் சரீரம் கீழே மையித்தாய் விழுந்துவிடும், றூகில்லாதுபோனல் பூமியின்மேலொரு பொருளுமிராது, பூமிக்குத் தானும் றூகில்லாதுபோனல் அவைகளின் கட்டுக்குலைந்து தூசாய்க் காணமற்போகும். ஆகையால் சடப்பொருளுக்கு ஒரு தத்துவமும் ஒரு தரிபாடுமில்லை, றூகு ஹயாத்து முதலிய ரூபமற்ற பொருள்களைக் கொண்டே அவைகள் நிலைத்திருக்கின்றன. இந்த அரூபமானவைகளே மிகவுந் தத்துவமும் மகத்துவமு முடையவைகள், இந்த ஆலத்திலுள்ளவைகள் அஞசிறைக்கொண் டுண்டானவைகள்,

அந்த ஆலங்களி லுள்ளவைகள் ஒளி யைக்கொண் டுண்டானவைகள், இவைகளுண்டான விதங்களைச் சொல்லப்போகிறேன் கவனமாய்க்கேள்.

## அமா.

---

நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடம் ஹக்கு, கல்குகளைப் படைக்குமுன் எங்கிருந்தானென்று கேட்டதற்கு அமாவி லிருந்தானென்று சொன்னார்கள், ஹதீது குதுசியில் (குன்துகன்ஸன் மஃபிய்யன் வஅஹ்பப்து அன்உறப்) நான் மறைந்த புதையலாயிருந்தேன், நான் அறியப்படுதற்காகப் பிரியமானேனென்று சொல்லியிருக்கிறது. முகியித்தீனிபுனு அற்பி றளியல்லாகு அன்கு புத்தூஹாத்துல் மக்கிய்யாவில் இவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதைச் சொல்லுகிறேன், ஹக்குத்தஆலாவுக்குத் தானறியப்படுதற்காகப் பிரியமானபொழுது அவனிலிருந்து சுவாசம் வெளியாயிற்று, அந்த சுவாசம் தன்னைக்கொண்டுண்டாகிய றகுமத்தாயிருக்கும். அவனில் நின்றும் வெளியானது வேறொன்று மல்ல, அவனின் றகுமத்துத் தானுயிருக்கும், உண்டாயிருக்கிற ஆலங்கள் இனிமேலுண்டாகிற ஆலங்கள் சகலதையும் அது சூழப்பட்டதா யிருக்கும். அந்த சுவாசம் ஒப்புக்கொண்ட சூறத்திற்கு அமாவென்று சொல்லப்படும், ஹக்குத்தஆலாவின் வுஜூதிற்கு இது ஒரு பாண்டமாகிவிட்டது, இதை குறித்துத்தான் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கல்குகளைப் படைக்குமுன் அமாவிலிருந்தானென்று சொல்லியது. செய்குல் அக்பரவர்கள் தங்கள் கித்தாபை வாசிப்பவர்கள் ஹக்குத்தஆலா ஒன்றிலமைந்துவிட்டானென்று மட்டுப்படுத்தாதபடிக்குச் சில உதாரணங்களைச் சொல்லுகிறார்கள், ஹக்குத்தஆலாவுக்கு அமா எவ்விதமானால் இன்சானில் கல்பு எவ்வித மிருக்கின்றதோ அதுபோலும், மூமீன்களுடைய கல்புகள் ஹக்குக்கு அர்ஷாயிருப்பது போலுமென்று உதாரணங்காட்டி அவனைச் சூழ்ந்தொன்றுமில்லை, அவன்தானே யன்றி வேறொன்றுமில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அமாவாகிறது உள்ளமைகளுக்கெல்லாம் உள்ளமையாயிருக்கும், அதுதான் ஆகாச வெளியின் உள்ளமையாயிருக்கும். சகல படைப்புகளும் வெளியாகிறதும் திரும்ப மறைகிறதும் அதிலாயிருக்கும். இன்சான் காமிலில் அப்துல்கரீமுல்ஜீலி றளியல்லாகு அன்குஅவர்கள் அமாவுக்கு வேறுவிதம் பொருள் சொல்லியிருக்கிறார்கள். நீ வெளியாகுமுன் அதாவது நீ இருக்கிறாயென்று நீ யறியுமுன் உனது தாத்து உனக்குத் தெரியா திருந்திருக்கிறது, அந்தத் தன்மையிலிருப்பது நீ அமாவிலிருக்கிறதா யிருக்கும். இன்னும் நீ வெளியான பின்னும் உனது உள்ளமை ஹக்காயிருக்க, அதைத் தெரியாதிருக்கிற தன்மையும் உனக்கு அமாவாயிருக்கும், இன்னு முனக்கு இலேசான ஒரு உதாரணஞ் சொல்லுகிறேன் நீ யுறங்கிறநேரத்தில் உனது மனமில்லாம லற்றுப்போகவில்லை, அது மறைவாயிருந்து விழித்தவுடன் வெளியாகின்றது, உறக்கத்தி லிருக்கையி லுன் மனம் அமாவில் மறைந்ததுபோலும், படைப்பாய் வெளியானது விழிப்பைக் கொண்டு மனம் பிரகாசித்தது போலுமாயிருக்கும். இந்த உதாரணத்தைக் கொண்டு ஹக்குத்தஆலா அமாவில்

தன்னைத் தெரியாதிருந்த தன்மையி லிருந்தவனென்கிற கருத்தல்ல, அவன் தன் வுஜூதைக்கொண்டே தன்னை யறிந்தவனு யிருக்கிறுன், இந்த விடத்தி லுனக்கொரு காரியத்தை ச்சைக்கினையாய்ச் சொல்லுகிறேன், ஆனல் நீ இதை விளங்கிக்கொள்ளுகிறது மிகவும் வருத்தம், ஒரு மட்டுக்கு நீ யறிந்திருப்பது அவசியம், அல்லாகுத்தஆலா தன்னில்தானே தஜல்லி யானுனென்று சொல்லுவதில் தான் தஜல்லியாகுமுன் மறைவாயிருந்தானென்றும், அவனுக்கு இரண்டு தன்மைகளையும், இரண்டு காலங்களையுந் தெரிவிக்கின்றன, கல்குகள் மட்டில் பிரித்தலும் தொடக்கமு மிருப்பது நிசம், ஹக்குத்த ஆலாவைக் குறித்து காலம், தொடக்கம், கடைசி, முன், பின், பேதகம், மாறுதல் யாதொன்று மில்லை, தொடக்கமும் கடைசியு மவனுய், பாத்தினும் ளாகிறு மவனுயிருப்பதால் அவனைக் காலத்தைக்கொண்டு பிரிக்கக்கூடாது. அல்லாகுத்தஆலா தன்னுடனே ஒன்றுமில்லாத தன்மையா யிருந்தான், இப்பொழுதும் இவ்விதமே இருக்கிறுன், இது புத்தியைத் தடுமாறச் செய்யும் பேச்சு. முகியித்தீனிபுனு அறபிறளியல்லாகு அன்கு புத்தூஹாத்துல் மக்கிய்யாவிலும் அப்துல்கரீ முல்ஜைலீ இன்சான்காமிலிலும் இவ்விதம் காலத்தைக்கொண்டு பேசுகிறது மனிதர்கள் விளங்கிக் கொள்ளுதற்காகவே என்று சொலலியிருக்கிறுர்கள், இதற்கு அதிகம் இந்தப்பேச்சைச் சொல்லக்கூடாது உனக்கு ஹக்கும் கல்குமென்கிற பிரிவற்று தவ்ஹீது திட்டப்பட்டால் இந்த இலமு விளங்கும். ஆலமாவது அமாவின் வெளித்தோற்றமாயிருக்கும். அந்த தோற்றங்கள் மாறிக்கொண்டும் மறைந்து கொண்டு மிருக்கும். இந்தத்தோற்றங்களுக்கெல்லாம் சத்து (ஜவ்ஹர்) அந்த அமாதான கண்ணுடியை அமாவுக்கும் அதில் தெரிகிற பொருள்களை ஆலத்திற்கும் உதாரணம் வைத்துக்கொள்.

## மலாயிக்கத்துல் முஹையிமா.

---

அமாவிலுள்ள மூலப்பொருள் (ஜவ்ஹர்) றூகுடைய சூறத்துகளை யொப்புக்கொண்டது அவைகளுக்கு முஹை யிமாவென்று சொல்லப்படும். அந்த அறுவாகுகளி லொன்றுக்கு றூகென்று சொல்லப்படும். இன்ஸான் காமிலில் அப்துல்கரீமுல் ஜைலி றகுமகுல்லாகு சூபியாக்கள் இந்த மலக்குப் படைக்கப்பட்டவைகளுக்கெல்லாம் ஹக்கென்றும், ஹக்கீக்கத்து முகம்மதிய்யா வென்றுஞ் சொல்லியிருக்கிறுர்கள், அல்லாகுத்தஆலா இந்த மலாயிக்கத்தைத் தன் ஒளியைக்கொண்டு படைத்தான், மற்ற படைப்புகளெல்லாம் அதினுளியைக்கொண்டு படைத்தான், இன்னும் அல்லாகுத்தஆலா தன் அஸ்மாக்களைக்கொண்டு அதின் வழியாய்ப் பார்க்கிறதாக ஆக்கிக்கொண்டான். படைப்புகள் யாவிலும் அதை மேன்மையானதாகவும் முகார்றபீன்களின் நாயகமாகவும் உயர்த்தியாகவு மாக்கினுன். அறுசைச் சுமக்கிற எட்டுமலாயிக்கத்துளையும், இன்னும் இல்லிய்யீன்களென்கிற மலாயிக்கத்துகள் அனுசிர்களைக்கொண்டுண்டாக்கிய மலாயிக்கத்துகளாகிய எல்லா மலாயிக்கத்துகளையும் இந்த

மலாயிக்கத்தைக் கொண்டு படைத்தான், அந்த மலாயிக்கத்தில் நின்றும் படைக்கப்பட்ட மலாயிக்கத்துகள் மழைத்துள்ளிகள் போலிருக்கும். அந்த மலக்கின் கமால் அல்லது நிரப்பம் ஹக்கீக்கத்து முகம்மதிய்யாவில் வெளியாயிற்று, அதனால் தான் நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் மனிதர்களில் உயர்த்தியானவர்களா யிருக்கிறார்கள், இன்னும் அந்த மலாயிக்கத்திற்கு அம்றுல்லாவென்கிற பெயரிருக்கின்றது, அதனாலேதான் அல்லாகுத்தஆலா நபியே! றூஹாகிறது எனது அம்றென்று திருவுளம் பற்றினான். அல்லாகுத்தஆலா இந்த மலக்கை தன் தாத்துக்கோர் கண்ணாடி யாக்கிக்கொண்டான், இந்த மலக்கைக் கொண்டல்லாது அல்லாகுத்தஆலா தன் தாத்தைக்கொண்டு வெளியாகிறதில்லை, படைப்புகளில் வெளியாகிறதெல்லாம் தன் சிபத்துகளைக்கொண்டே. இந்த மலாயிக்கத்துதான் துன்யா, ஆகிறம், சொர்க்கம், நரகம் அனைத்திறகும் குத்துபாயிருக்கிறார், இந்த மலக்குக்கு அந்தந்த நிலைக்குத்தக்க பெயர்களிருக்கின்றன. கலமுல்லஉலா வென்றும், நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய றூஹென்றும், அக்கிலில் அவ்வ வென்றும், றூகுல் இலாஹி யென்றும் பலபெயர்கள் சொல்லப்படும். ஆனால் ஹக்குத்தஆலாவுடைய சமுகத்தில் அந்த மலாயிக்கத்திற்கு றூஹென்கிற பெயராயிருக்குமென்று மொல்லியிருக்கிறார்கள்.

## படைப்புகளைப் படைந்த ஒழுங்கு.

சூபியாக்கள் படைப்புகளைப் படைத்த ஒழுங்குகளைப்பற்றிச் சொல்லியிருப்பவைகளில் சில வித்தியாசங்களிருக்கின்றன, அவைகளை யாராய்ந்து பார்த்தால் சில ரவைகள் வெளியான ஒழுங்கைப் பிடித்துப் பேசியிருக்கிறார்கள், சிலர் அவைகளிருக்கின்ற தலத்தைக்குறித்துப் பேசியிருக்கிறார்கள். சிலர் அவைகளின் பதவியைக்குறித்துப் பேசியிருக்கிறார்கள், முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு அவர்கள் இந்த மூன்று பிரிவுகளையு மெடுத்துக் காட்டுகிறார்கள்; முதலாவது படைப்புகளைப் படைத்த ஒழுங்காவது:—அமாவிலிருந்து முஹய்யிமாவென்கிற அர்வாகுகள், அதன் பின் அக்கிலுல் லவ்வல், அதற்குக் கலமென்றுஞ் சொல்லுகிறது. அதன்பின் நபுசு அதற்கு லவ்குல்மஹ்பூ ளென்றுஞ் சொல்லுகிறது. பின்னால் அர்சும் அது தரிக்கப்பட்டிருக்கிற உறைந்த தண்ணீரும், காற்றும், இருளும், அதன்பின் அர்சுக்குடைய மலாயிக்கத்துகள், அதன்பின் குர்சீ, அதன்பின் அதற்குடைய மலாயிக்கத்துகள், பின்பு வானங்களையும், நட்சத்திரங்கள் சகலதையும் சூழ்ந்த அத்லஸ் மண்டலம், பின்பு அதிலுள்ள மலாயிக்கத்துகள், பின்பு (பலக்குல் மனாசில்) பின்பு சொர்க்கங்களும் அவைகளுக்குரியவைகளும், பின்பு அந்த பலக்குல் மனாசிலைச் சேர்ந்த நட்சத்திரங்கள், பின்பு பூமி, பின்பு தண்ணீர், பின்பு காற்று, பின்பு நெருப்பு, பின்பு புகை, பின்பு அந்தப் புகையைப் பிரிவாக்கி யுண்டாக்கிய ஏழு வானங்கள் அவைகளாவன:—சந்திரனிருக்கிற முதலாம் வானம் (அத்தாரிது) புதனென்கிற கிரகமிருக்கிற இரண்டாம் வானம் சுக்கிரன் (சுஹ்றா) சுக்கிரனிருக்கிற மூன்றாம் வானம் சூரியன் (சம்சு) சூரியனிருக்கிற நாலாம் வானம் (மிர்றீகு) அங்காரகன் இருக்கிற ஐந்தாம் வானம்

(முஷ்தரீ) பிரகஸ்பதி இருக்கிற ஆறும் வானம் (சுஹல்) சனி இருக்கிற ஏழாம் வானம், பின்பு அவைகளிலுள்ள மலாயிக்கத்துகள், பின்பு நெருப்பு, பின்பு தண்ணீர், பின்பு காற்று, பின்பு மண், ஆகியவைகளிலுள்ள மலாயிக்கத்துகள், பின்பு நிரசப்பொருள்கள், பின்பு தாபரவஸ்துகள், பின்பு பிராணிகள், பின்பு மனிதனின் சரீரம். இந்த ஒழுங்காய்ப் படைப்புகள் வெளியாயின. இரண்டாவது தலத்தில் உயர்த்தியும் இழிமையுமாயிருக்கிற ஒழுங்கு. முதலாவது ஜஸ்முல்குல்லி, அதன்பின் அற்சு, குருசி, வானங்களெல்லாஞ் சூழ்ந்த மண்டலங்கள், சொர்க்க லோகங்கள் முன் சொன்ன ஏழு கிரகங்கள், சூடு (அதிர்) மண்டலம், காற்று மண்டலம், நீர் மண்டலம், பூமி. இந்தப் பிரிவில் நபுசு, அக்கிலில் அவ்வல் முதலியவைகளைச் சொல்லாதது, அவைகள் அருவாகுகளானபடியால் அவைகளுக்கு ஸ்தானமில்லை.

மூன்றாவது, பதவிப்படிக்குப் படைப்புகளின் ஒழுங்கு அக்கிலுல் அவ்வல், அர்வாகுல் முஹையிமா, நபுசு, அற்சு, குருசி, வானங்கள் யாவையும் சூழ்ந்த கோளம் (அத்லஸ்) (கதிபு) கியாமத்தில் அல்லாகுத்தஆலாவின் தரிசனையின் தலம் ஏழு சொர்க்கங்கள், பலக்குல் மஞசில், பைத்துல் மஉமூறு, சூரியவானம் சந்திரவானம், பிரகஸ்பதி வானம், சனியின்வானம், சுக்கிரன்வானம், புதனின்வானம், அங்காரகனின் வானம், காற்றுமண்டலம், நீர் மண்டலம், மண் மண்டலம், நெருப்பு மண்டலம், பிராணிகள் தாவர வஸ்துகள் நிரசவஸ்துகள், (மனிதர்களின்பதவி) றசூல்மார்கள் நபிமார்கள், அவுலியாக்கள், மூமீன்கள், முகம்மது சல்லல்லாகு அலைவசல்ல மவர்களின் உம்மத்துகள், மூசாஅலைகிஸ்ஸலா மவர்களின் உம்மத்துகள், அதன்பின் மற்ற றசூல்மார்களின் பதவிக்குத் தக்கதாய் அவரவர்கள் உம்மத்துகள்.

நீ இந்தப் பிரிவுகளை யறிந்திருந்தால் ஆரிபீன்க ளிவ்விஷயத்திற் சொல்லியிருப்பவைகளில் வித்தியாசமிருந்தாலும் இவைகளைக் கவனித்து அவைகள் வித்தியாச மல்லவென்பதை யறிந்துகொள்வாய், இவைகளி லிப்பொழுது உனக்கறியவேண்டிய மட்டிற்குச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

## அ ற் சு .

அற்சாவது வல்லமை வெளியான மஹத்துவத்தையுடைய ஸ்தானமாயிருக்கும், அனு விதற்குத் திசைகளும் கோணங்களுமில்லை, படைக்கப்பட்ட படைப்புகளெல்லா மிதற்குளடங்கி யிருக்கின்றன. படைப்புகளெல்லா மிதி லடங்கியிருப்பதென்பது இன்சானுடைய சரீரத்தில் அவனைச்சேர்ந்த வைகளெல்லா மடங்கியிருக்கின்றதென்பது போல, சில சூபியாக்கள் இதுதான் ஜஸ்முல்குல்லியென்றும், அருசுக்குமேல் றகுமானே யல்லாமல், வேறொன்று மில்லையென்றுஞ்சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி கிலாபுகளிருக்கின்றன. ஜஸ்முல்குல்லி யென்பதின் பொருள் சமஸ்தமான சூக்ஷம தேகம், அருசு சகல படைப்புகளையும் மூடிய வில் மச்சு மண்டபம்போலிருக்கின்றது, இந்த அருசுக்கு னாஹிறும் பாத்தினு மிருக்கின்றன, பாத்தினுவது ஆலமும் குதுசு, அது அல்

லாகுத்த ஆலாவுடைய அஸ்மாக்களும் சிபாத்துகளும் வெளியாகும் ஆலமாயிருக்கும், ளாஹிருவது வெளியான படைப்புகள் சகலதையும் உட்கொண்டதாயிருக்கும். அறுசின் விஸ்தாரத்தைப்பற்றிப் பேசினுல் படைப்புகளெல்லாம் அடங்கிய ஓர் கூடென்று உவமை சொல்லலாம், அதின் வல்லமையைக் குறித்துப் பேசினுல் இராஜாங்கமென்று சொல்லலாம், இராஜாங்கத்துக்குச் சகல உத்தியோகஸ்தர்களு மதிகாரிகளும் பிரசைகளுமடங்கி யிருப்பதுபோல், ஆலமங்களின் இராஜாங்கமென்று அறுசுக்கு ஒப்புச் சொல்லலாம். றகுமான் அறுசில் தரித்தா னென்பது அந்த இராஜாங்கத்திற்கு இராஜன் றகுமானென்றும், அவனே அந்த இராஜாங்கத்தை நடத்துகிறுனென்றுமாயிருக்கும்.

## வானசாஸ்திரமும் ஆரிபீன்கள் சொல்லியிருப்பவைகளும்.

மஃரிபாவுடைய இல்முக்கு அண்டத்திலுள்ள மற்ற உலகங்களை யறிவது மிகவு மவசியம். அதனுல்தான் ஆரிபீன்கள் தஸவ்வுபுடைய கித்தாபுகளில் அவைகளைக்குறித்துச் சொல்லியிருக்கிறுர்கள். வான சோதிகளைக்குறித்து சென்ற இரண்டாயிரம் வருடக்காலத்திலிருந்த கல்விமான்களுடைய பிரயாசத்தைக்கொண்டும், சோதனைகளைக்கொண்டும் தூலயாயிருப்பவைகளைச் சமீபமாக்கிக் காட்டும் தூரதிருஷ்டிக் கண்ணுடியைக்கொண்டும் விளங்கி திட்டமான அறிவுக்கு வான சாஸ்திரமென்று சொல்லப்படும். கிரகங்களைப் பற்றியும் நக்ஷத்திரங்களைப்பற்றியும் நமது ஆரிபீன்கள் கஷ்பு கொண்டறிந்து ஆயிரம் வருடத்திற்குமுன் சொல்லியிருப்பவைகள் வான சாஸ்திரத்திற்குச் சரியாயிருப்பது கஷ்புகொண்டறியும் இல்மின் மேன்மையைக் காட்டுகின்றது, தன் ஊரைவிட்டுப் போகாதிருக்கிற ஒரு மனிதனுடைய அறிவுக்கும் பற்பல தேசங்களையும் சுற்றிப்பார்த்தவனுடைய அறிவிற்குமுள்ள வித்தியாசம் போலவே பூமியை மட்டு மறிந்து வானுலகங்களைப்பற்றிய இல்முகளை யறியாதவனுடைய இல்முக்கும் அவைகளை யறிந்தவனுடைய இல்முக்குமுள்ள வித்தியாசமாயிருக்கும், இந்த இல்மு கல்பை விரிவாக்கும், அல்லாகுத்தஆலாவுடைய வல்லமையை நினைத்து திகைக்கவும், பூமியையும் தன்னையும் ஒரு அணுப்போல் மதிக்கவுஞ் செய்யும், இவைகளைப்பற்றி நான் சொல்வதைக்கேட்டு நீ உன் எண்ணத்தைக்கொண்டு என்னேடு பூமியை விட்டும் வெளியானது போலும், வானங்களைப் பற்றி நான் சொல்வதைப் போய்ப் பார்ப்பது போலும் உன் மனத்தில் சூறத்தாக்கிக் கொள்ளவேண்டும், தூர திருஷ்டிக் கண்ணுடியைக் கொண்டு பார்ப்பதும், இன்னு மிந்த சாஸ்திரத்தைப் பற்றிய புத்தகங்களை வாசிப்பதும் உனக்கு மிகவும் பிரயோசனங் கொடுக்கும், இப்பொழு துனக்கறியத் தேவையான மட்டைச் சொல்லுகிறேன்.

## பூமியும் பூதங்களும்.

பூமியாவது அண்டத்திலொரு சடுகுபோலா யிருக்கும். இது உருண்டை வடிவாயும் ஒன்றிலுந் தரிக்காமல் ஹக்குத்தஆலா தரிப்பித்த சக்கர

த்தில் சூரியனை சுற்றிக்கொண் டிருக்கிறது, பூமியின் சுற்றளவு இருபத்து நாலாயிரம் மைல், அதன் குறுக்களவு ஏழாயிரத்துத் தொழாயிரத்துப் பன்னிரண்டு மைல்.

மூரீது, பூமி உண்டை வடிவாயிருக்கின்றதென்று சொன்னீர்களே, இதை என்புத்தி ஏற்றுக்கொள்ள நியாயங்களிருந்தால் கிருபை புரிந்தெனக்குச் சொல்லவேண்டு மென்று கேட்டான்.

செய்கு, இதற்கு அநேக நியாயங்களிருக்கின்றன. இவைகளில் மூன்று காரியங்களைச் சொல்லுகிறேன்; முதலாவது நீ கடலருகே நின்று தொலையில் வரப்பட்ட கப்பலைப்பார், தொடக்கத்தில் கப்பல் பாய்மரத்தின் நுனி தெரியும், கிரமம் கிரமமாய் ஒரு பள்ளத்திலிருந்து கொஞ்சங் கொஞ்சமாய் ஏறிவருவதாகத் தெரியும் பூமி வட்டமா யில்லாதுபோனால் இவ்வித மிருக்கக் கூடாது. இரண்டாவது உனக்கு விருப்பமானால் புகைக் கப்பலேறிக் கிழக்குத் திசையை நோக்கி மூன்று மாதமட்டும் பிரயாணஞ்செய்தால் மேற்குத்திசையால் நீ பிறப்பட்டவிடத்திற்குப் பூமியைச் சுற்றிக்கொண்டு வந்து விடுவாய்.

மூன்ருவது பூமியில்மறுபுறம் இலங்கைக்குநேரே இருக்கிற ஊர் அமெரிக்கா அதாவது நீ பூமியைத் தோண்டிக்கொண்டு மறுபுறம் வெளியானால் அந்த ஊரைக் காண்பாய், நமக்கு இலங்கையிற் பகல் பன்னிரண்டு மணி நேரமாயிருக்கையில் அந்த ஊரில் இரவு பன்னிரண்டு மணியாயிருக்கும். இதின் உண்மையை யறியவேண்டுமானால் இலங்கையிலிருந்து அந்த ஊருக்கு நேரே தந்தி யடித்தால் சில நொடிக்குள்ளாகத் தந்திச்செய்தி சேரும், அந்தச் செய்தியை பகல் பன்னிரண்டு மணிநேரத்தில் இங்கிருந் தங்கு அனுப்பினால் இரவு பன்னிரண்டு மணிநேரத்தில் சேர்ந்ததாக மறுமொழி வருமென்று சொன்னார்

மூரீது, தாங்கள் சொல்லியது குருவானில் அல்லாகுத்தஆலா மலைகளைப் பூமிக்கு முளைகளாக்கித் தரிபடுத்தினேமென்று சொல்லியதற்கு விரோதம்போ லிருக்கின்றதே என்று சொன்னான்.

செய்கு, அல்லாகுத்தஆலா சொல்லியிருப்பது உண்மை. மலைகளில்லாமல் பூமி முழுதும் தட்டையாயிருந்தால் கடல் சொற்பகாலத்தில் பூமியைமூடி அமிழ்த்திப்போடும், தண்ணீரால் அசைவு சேத முண்டாகாதிருக்க மலைகளை முளையாக்கினேமென்று சொன்னதல்லாமல் மலைகளில் பூமியைத்தரிக்கச் செய்தோமென்று சொல்லவில்லை யென்று சொன்னார்.

மூரீது, தாங்கள் பூமி சுற்றுகிறதென்று சொன்னீர்களே, பல கித்தாபுகளிலும் அது தரிபட்டதா யிருக்கிறதாகச் சொல்லியிருக்கிறதே இதற்கென்ன சொல்லுகிறீர்க ளென்று கேட்டான்.

செய்கு, முற்காலத்திலிருந்த வானசாஸ்திரிகள் பூமியை மத்திமமாக்கி சந்திரன் சூரியன் கிரகங்களாகியவைகளெல்லாம் அதைச் சுற்றுகிறதாக நினைத்திருந்தார்கள். ஆகிலும் பின்னுள்ள வான சாஸ்திரிகள் கல்விமான்கள் சகலரும் சூரியனை மத்திமமாக்கிப் பூமியும் மற்றக்கிரகங்க

ளும் அதைச் சுற்றுகிறதாகத் திட்டமாக்கி யிருக்கிறார்கள். பலகித்தாபுகளிலு மிருப்பது முற்காலத்திலிருந்த வான சாஸ்திரிகளின் கருத்துப்படியே முகியித்தீனிபுனு றளியல்லாகு அன்கு அவர்கள் புத்தூஹாத்துல் மக்கிய்யாவில் பூமி சுற்றுகிறதென்று சொல்லியிருக்கிறார்கள்.

முரீது, நாலு அனாசிர்களைக் கொண்டு துன்யாவி லுள்ளவைகளெல்லாம் சமையப்பட்டிருக்கின்றனவென்று சொல்வதை எனக்கு விளங்கக்கொடுக்க வேண்டுமென்று கேட்டான்.

செய்கு, மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய நாலுக்கும் பூதங்களென்று சொல்வது அவைகள் சேர்ந்து பல வஸ்துக்களும் அமையப்பட்டிருக்கின்றதினாலேயே. அந்த வஸ்துக்கள் அழிந்தவுடனே அந்த பூதங்கள் வெவ்வேறாய்ப் பிரிந்துவிடும், அப்பொருளிற் சேர்ந்திருந்த மண் மண்ணாகவும், தண்ணீர் தண்ணீராகவும், நெருப்பு நெருப்பாகவும், காற்று காற்றாகவு மாகிவிடும். ஒரு விறகுக் கட்டையை நெருப்பிற்போட்டால் பற்றுகிற நெருப்புச் சுவாலையோடு காற்றும் வெளியாகும், அதிலுள்ள தண்ணீர் புகையாகவும், மண் சாம்பராகவு மாகிவிடும். மனிதனின் சரீரம் இந்த நாலு பூதங்களைக் கொண்டுண்டாகி யிருப்பதுமன்றிச் சீவித்திருக்க எவ்வேளையும் தேவையாயிருக்கும், பூமி மனிதனுக்கு ஆகாரத்துக்குத் தேவையான பதார்த்தங்களைக் கொடுக்கின்றது. அவனிருந்தாலும் நடந்தாலும் எவ்வேளையும் சுமந்துகொண்டிருக்கும், இறந்த பின்னும் அவன் சரீரத்தைத் தன் கர்ப்பத்திலே வைத்துப் பதனம்பண்ணிக்கொள்ளும், தண்ணீரில்லாது போனால் மனிதன்முதல் சீவசெந்துகளொன்று மிரா. காற்றும் இது போலவே. மனிதன் பிறந்தவுடன் மூச்செடுப்பதற்கும் மூச்சு விடுகிறதற்கும் காற்றுத்தேவை, ஆகாரமில்லாமல் சிலநாள் உயிராயிருக்கலாம், காற்றைச்சுவாசிக்காமல் சில நொடிநேர மிருக்கக் கூடாது. அக்கினி சரீரத்தில் ஒரு நொடிநேர மில்லாமலிருந்தால் உயிர்போய்விடும், சூட்டைக்கொண்டே இரத்தம் சரீரத்தில் ஓடிக்கொண் டிருக்கிறது. இவ்விதம் இந்தப் பூதங்களைக் கொண்டே சகலமு முண்டாகியும் சீவித்து மிருக்கின்றனவென்று சொன்னார்.

முரீது, இந்த நாலு பூதங்களு மெவ்வித முண்டாயின வென்பதை எனக்குத் தெரியச்சொல்ல வேண்டுமென்று கேட்டான்.

செய்கு, இந்தப் பூதங்கள் தான் அஸ்லிய்யத்தான அல்லது மூலப் பொருளென்று சொன்னாலும் உள்ளமையில் அவைகள் அஸ்லிய்யத்தான பொருள்களல்ல, இவைகளுண்டான விதத்தைப் பற்றி கிலாபுகளிருக்கின்றன. சிலர் நெருப்பிலிருந்து காற்றும் காற்றிலிருந்து தண்ணீரும், தண்ணீரிலிருந்து மண்ணு முண்டானதென்று சொல்லுகிறார்கள். சிலர் இவைகளில் அஸ்லானது தண்ணீரென்றும், சிலர் மண்ணென்றும், சொல்லுகிறார்கள். இவர்கள் என்ன கருத்தைக்கொண்டு சொல்லுகிறார்களென்றும், என்ன தலிலை ஆதாரமாக்கியிருக்கிறார்களென்றுந் தெரியவில்லை. நெருப்பிலிருந்து காற்றுண்டானதென்கிற வார்த்தையின் பொருள் தானும் விளங்கவில்லை, நெருப்பு காற்றாக மாறிவிட்டதோ அல்லது நெருப்பிலிருந்து ஒரு பங்கு காற்றின் சூறத்தை யெ

டுத்துக்கொண்டதோ வென்றும் தெரியவில்லை, அல்லாகுத்தஆலா சகல படைப்புகளுக்கும் சில சட்டங்களை த்திடடப்படுத்தி யிருக்கிறான், அதற்கு தபீயத்தின் ஹாஸக்குமென்றும், அல்லது இயற்கைச் சட்டமென்றுஞ் சொல்லுகிறது, அந்தச் சட்டப்படிக்கு ஒரு தனிமையான பொருள் தானே வேறொரு பொருளாவதற்கு ஒருக்காலுங் கூடாது வேறொரு பொருள் சேர்ந்தாலேயன்றி, இச்சட்டத்தை விளக்குதற்காக முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு ஒரு பொருளுக்கும் வேறொரு பொருளுக்கும் நிக்காகு நடந்து இரண்டுஞ்சேர்ந்து வேறொரு பொருள் உற்பத்தியாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் நெருப்பிலிருந்து காற்றுண்டாகி அந்தக்காற்றிலிருந்து தண்ணீருண்டாகிறதானல் நெருப்பு தண்ணீருக்கும் அசிலா யிருக்கவேண்டும், நெருப்பில் தண்ணீரிருக்க வேண்டும். அவைகளிரண்டும். ஒன்றுக்கொன்று சத்துருவாயிருக்க, எவ்விதம் நெருப்பு மற்ற மூன்றுக்கும் அஸ்லிய்யத்தானதென்று நினைக்கக்கூடும். ஆனல் முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு அவர்களும் அவர்களைப்பின் பற்றியவர்களுக்குச் சொல்லுவது புத்திக்கும் சோதனைக்கும் சரியாயிருக்கின்றது. அவர்கள் சொல்லுகிறதாவது:—இந்த நாலுக்கும் அஸ்லாவது நாலு பொருள். உஷ்ணம் (ஹறாறத்து) குளிர் (புறூதத்து) ஈழிரப்பு (றுத்தூபத்து) உலர்தல் (எபூசத்து) ஆகிய நாலைக்கொண்டும் மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய நாலுமுண்டாயின வென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்சள் சொற்படிக்கு உஷ்ணமும் உலர்தலுஞ் சேர்ந்து நெருப்புண்டாயிற்று, உஷ்ணமும் ஈரழிப்புஞ் சேர்ந்து காற்றாயிற்று, ஈரழிப்புங் குழிருஞ் சேர்ந்து தண்ணீராயிற்று, குழிரு முலர்தலுஞ் சேர்ந்து மண்ணுயிற்றென்று சொன்னார்.

முரீது, முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியிருப்பது சோதனைக்கும் சரியாயிருக்கின்றதென்று சொன்னீர்களே அந்தச் சொல்லின் கருத்தென்னவென்று கேட்டான்.

செய்கு, நான் சோதனையென்று சொன்னது கல்விமான்கள் பரிசோதித் தறிந்திருப்பவைகளுக்கு ஒத்திருப்ப தென்பதே. அறபுப்பாஷையில் கீமியாவென்றும் தமிழில் ரசாயன சாஸ்திரமென்றும் இங்கிலீசில் (Chemistry) என்றுஞ் சொல்லுகிற ஓர் சாஸ்திரமிருக்கின்றது. ஒவ்வொரு வஸ்தும்பல மூலப் பொருள்களைக் கொண்டு சமைந்திருப்பதால் இந்த சாஸ்திரப் படிக்கு அந்த மூலப்பொருள்களை வெவ்வேருக்கப்படும். இந்த இல்மு தொடக்கத்தில் மிஸ்றிலிருந்து பின்பு அறபிகள் இதை விர்த்திசெய்து வந்தார்கள், ஸ்பேன்தேசம் அறபிகளின் ஆளுகையின் கீழிருக்கையில் இந்த சாஸ்திரம் மிகவுந் தேர்ச்சியடைந்திருந்தது, ஜபறென்கிறவர்கள் இதில் மிகவுங் கீர்த்தி பெற்றவர்கள், இக்காலத்தில் கல்வி கற்றுக்கொள்ளுதற்குப் பல தேசங்களி லிருந்து ஈரோப்பாவுக்கு மாணுக்கர்களை யனுப்புவதுபோல் ஸ்பேன் தேசத்துக்கு மாணுக்கர்களை யனுப்பப்பட்டுவந்தது, பின்பு அறபிகள் கல்வியை விடுதற்குப் பல காரணங்களும் நேரிட்டன, ஐரோப்பியர் அறபிக

ளிடங் கற்றுக்கொண்ட இல்முகளை விர்த்தி செய்து வந்து சென்ற நூருண்டுக்குள்ளே ஆச்சரியப்படத் தக்க விதமாய்த் தேர்ச்சியடைந்து விட்டார்கள். தற்காலத்தில் ஐரோப்பியர் மற்றுந் தேசத்தவர்களெல்லோரிலும் நூதனமும் சூழ்ச்சியுமுமான பொருள்களும் வேலைகளுஞ் செய்வதில் மேலிட்டிருப்பது பிரதானமாக இந்த ரசாயன சாஸ்திரத்தைக் கொண்டே. இந்த சாஸ்திரப்படிக்கு தண்ணீரை இரண்டு வாயுகளாய்ப் பிரித்து வேருக்கப் படுகின்றது. பிராணவாய்வு (Oxygen) ஜலவாய்வு (Hydrogen) பிராணவாய்வு தண்ணீரைச் சேர்ந்திருப்பதால் மனிதர்களின் ஹயாத்துக்குத் தேவையாயிருக்கின்றது, அதனுல்தான் அதற்குப்பிராண வாயுவென்று சொல்லுகிறது. ஆரிபீன்கள் புறூதத்திறகுச் சொல்லும் குணமெல்லாம் இந்த வாயுவிலிருக்கின்றன. அல்லாகுத்தஆலா தானும் குறுவானில் ஹயாத்தாகிய சகல வஸ்துகளையும் தண்ணீரைக்கொண்டு படைத்தோமென்று திருவுளம் பற்றியிருக்கிறுன். ஜலவாயு வென்பது றுத்தூபத்து அல்லது ஈரழிப்புக்குச் சரியாயிருக்கிறது, காற்றையும் இரண்டு வாயுவாய்ப் பிரிக்கிருர்கள், முதலாவது நான் முன்சொன்ன பிராணவாயு, இரண்டாவது தாக்கியசமென்கிற வாயு, இவைகளிரண்டும் புறூதத்துக்கும் ஹறூறத்துக்கும் சரியாயிருக்கின்றன. நெருப்பைப் பற்றியும் மண்ணைப்பற்றியும் நமது ஆரிபீன்கள் சொல்வதற்கும் இந்த சாஸ்திரிகள் சொல்வதற்குஞ் சில வித்தியாசங்க ளிருக்கின்றன, ஆனலிந்த சாஸ்திரம் இன்னும் நிரப்பத்திற்கு வந்துவிடவில்லை. ஒரு காலத்தில் சோதனையாகக் கண்டுபிடித்தது பின்னுல் சரியல்லவென்று சொல்லப்படுகிறது, ஆகையால் இந்த சாஸ்திரம் இன்னுமதிகத் தேர்ச்சியடைந்தால் இந்த வித்தியாசமற்று நமது ஆரிபீன்கள் சொல்லியதே சரியென்று திட்டமாவதற்குச் சந்தேகமில்லையென்று சொன்னுர்.

முரீது, உஷ்ணம், குளிர், ஈரழிப்பு உலர்தலாகியவைகளுக்கு அசிலென்னவென்று கேட்டான்.

செய்கு, இந்த நாலுக்கும் ஹயாத்து, இல்மு, இருதத்து, குதுறத் தாகிய நாலுமேயென்று சொன்னுர்.

முரீது, ஹயாத்து, இல்மு, இருதத்து, குதுறத்தாகிய நாலுக்கும் அசிலென்னவென்று கேட்டான்.

செய்கு, இந்த நாலுக்கு மசிலாவது வாஜிபுல் வுஜூதா யிருக்கும், இதைப்பற்றிப் பின்னுல் விவரமாய்ச் சொல்வேன்.

முரீது, தாங்கள் கிரகங்களும் நட்சத்திரங்களு மென்று சொன்னீர்களே, கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் வித்தியாச மிருக்கின்றதாவென்று கேட்டான்.

செய்கு, கிரகங்களாவது தம்மிலே பிரகாச மற்றவைகளாயும், சூரியனைக்கொண்டு ஒளியையும் காங்கையையும் பெற்றவைகளாயும், சூரியனை ஓயாது சுற்றிக்கொண் டிருக்கிறவைகளாயுமிருக்கும். நட்சத்திரங்களாவது வேறு பொருள்களால் பிரகாசம் பெருது சூரியனைப்போல் தம்மிலே பிரகாச முடையவைகள், அவைகள் எழு வானத்திலிருந்தும் கணக்கால் மட்டுப்படுத்தக்கூடாத தூரத்திலிருப்பவைகளென்று சொன்னுர்.

முரீது, நட்சத்திரங்கள் ஏழு வானங்களுக்கு மப்பாலிருக்கின்றதென்று சொன்னீர்களே, வானங்களால் அவைகள் மறைக்கப்படாமலிருக்கிறதெப்படி யென்று கேட்டான்.

செய்கு, ஏழு வானங்களும் ஏழு தட்டுக் கண்ணாடிகள் போலாயிருக்கும், அவைகள் தெளிவாயிருப்பதால் அவைகளுக் கப்பா லிருப்பவைகள் மறையப்படாமல் தெரிகின்றனவென்று சொன்னார்.

முரீது, இந்த ஏழு வானங்களும் பூமிக்குமேல் தட்டையாகவா யிருக்கின்றதேன்று கேட்டான்.

செய்கு, பூமிக்கு மேலென்றும் கீழென்றுஞ் சொல்லுகிற பேச்சுகளை விட்டுவிடு, நமது கண்ணுக்கு உயரவென்று சொன்னாலும் உள்ளமைப்படிக்கு உயர்வென்றும் கீழென்றுஞ் சொல்லக்கூடாது. இது உனக்குப் பின்னால் விளங்கும். இப்பொழுது இந்த மட்டு மறிந்துகொள். பூமியொரு உண்டைபோலிருப்பதை வான சாஸ்திரிகளும் ஆரிபீன்களு மேற்றுக்கொள்ளுகிறார்கள், இந்த உண்டையை வில்வளைவாய் எப்புறமும் சுற்றிவளைந்து ஒரு கூடுபோல முதல் வான மிருக்கின்றது, அந்த வானத்திலிருந்து சந்திரன் பூமியைச் சுற்றிவருகின்றது. இரண்டாம் வானம் முதல் வானத்திலிருந்து வெகு தூரத்தில் சுற்றி ஒரு கூடுபோல் வளைந்திருக்கின்றது. இதுபோலவே ஒவ்வொரு வானமும் அதற்கு மேலுள்ள மண்டலங்களுமிருக்கின்றன. கடைசியாய் அர்சு யாவையும் சுற்றி வளைந்துகொண் டிருக்கின்றதென்று சொன்னார்.

முரீது, இந்த வானங்களைக்குறித்து விவரமாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்டான்.

## முதல் வானமும் சந்திரனும்.

செய்கு, சந்திரன் முதல் வானத்திலிருக்கின்றது, இதின் கனம் இரண்டாயிரத்து நூற்றறுபதுமைல், சந்திரனுக்கும் பூமிக்கும் இரண்டுலக்ஷத்து முப்பத்தேழாயிரம் மைல்தூரம், உனக்கு அங்குபோகக்கூடுமானால் பூமியில் ஐம்பது பங்கு சிறியதாயும் இலங்கைத்தீவைப்போல் இருபது தீவுகள் சேர்ந்த விஸ்தாரமான ஒரு உலகமாயுங் காண்பாய், நான்சொன்ன தூலையிலிருப்பதால் அது சிறியதாய்த்தெரிகின்றது. பூமியிலெங்கிருந்து பார்த்தாலும் அது ஒரே பருப்பமாகத்தெரிகிறதை நீ யோசித்தால் நான் சொன்னது நிசமாயிருக்கக் கூடுமென்று உனக்குத் தோன்றும், பெரிய தூர திருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால் ஒரு வீட்டின் பருப்பமாகக் காண்பாய், அதில் மலைகளும் பள்ளங்களுமிருக்கிறது தெரியும், எங்களுடைய கித்தாபுகளிற் சொல்லியபடி சந்திரன் பூமியை இருபத்தொன்பது நாளில் பதினோராயிரம் வருஷத் தூல சுற்றி வருகின்றது, வான சாஸ்திரிகள் இது அறுபத்தொரு கோடியே எண்பது லக்ஷம் மைலென்று சொல்லுகிறார்கள். சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் நடுவாகவரும்போது பூமிக்கு எதிர்முகமாகயிருக்கிற பக்கம் இருளடைந்திருக்கும், அதுவே அமாவாசி. நாமொரு விளக்குக்கு நேரேயிருந்து ஒரு பொருளை நடுவிற்பிடித்தால் அந்தப் பொருளில் நா

மிருக்கிற பக்கம் இருளாகவும் விளக்கிருக்கிற பக்கம் பிரகாசமாகவும் மிருக்கிறவாறே, அமாவாசி யன்று சந்திரனில் பூமிக்குநேரே யிருக்கிற பக்கம் ஒளியில்லாதிருக்கும், மேலுஞ் சந்திரன் சூரியனுக்குக் கிழக்காக வருகையி லொவ்வொரு நாளும் சூரியனின் வெளிச்சமுள்ள புறம் அதிக மதிகமாகிப் பூமிக்கு நேரே வந்து பூரணசந்திரன் அல்லது பௌரணையாகும். அதன்பின் சந்திரன் சூரியனுக்கு மேற்காய் வரவர ஒளி குறையக் கலையுங் குறைந்துபோகும்.

அல்லாகுத்தஆலா சந்திரனை (ஹய்யு)ஹயாத்தை யுடையவ னென்கிற இசும் வெளியாகும் பொருளாக்கி விட்டான். உண்டாக்கி ஹயாத்தை அதின் மண்டலத்திலாக்கினான், ரூகு சரீரத்திற்கு அதிகாரஞ் செலுத்துவதுபோல் சந்திரனைப் பூமிக் கதிகாரியாக்கினான், இந்த வான மில்லாதிருந்தால் பூமியில் மண் கல்லு போலுள்ள நிரச வஸ்துகளேயன்றி பிராணிகளொன்று மிரா. இன்சான் துன்யாவிலிருக்கும் காலம் வரையும் துன்யாயிருக்கும், ரூகு சரீரத்தை விட்டுப் பிரிந்தவுடன் சரீரம் அழிந்து போகிறதுபோல் இன்சான் துன்யாவை விட்டுப் பிரிந்தவுடன் துன்யாவு மழிந்து போகும். பஞ்சேந்திரியம் புத்தி நினைவு அறிவு நிர்ணயம் எண்ணம் யோசனை முதலிய தத்துவங்களில்லாதசரீரத்தை யலங்கரித்திருப்பதுபோல் வானலோகங்கள் கிரகங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. இதிலுள்ள மலாயிக்கத்துகளுக் கெல்லாம் அதிகாரி இஸ்மாயீலென்கிற மலாயிக்கத்து, அவர்தான் சந்திரனுக்குயிராயிருக்கும்.

## இரண்டாம் வானமும் புதன் கிரகமும்.

வான சாஸ்திரப்படிக்கு இந்த வானத்திற்குரிய கிரகம் சுக்கிரன் (சுஹ்ரு) நமது ஆரிபீன்களின் கித்தாபுகளில் புதன் (அத்தாரிது) என்று சொல்லுகிறார்கள், ஆகிலும் நமது ஆரிபீன்கள் சொல்லியிருக்கிற ஒழுங்கைப்பிடித்தே உனக்குச் சொல்லுகிறேன்; அத்தாரிது பூமியிலிருந்து ஒரு கோடியே முப்பத்தாறு லக்ஷத்துத் தொண்ணூற்று மூவாயிரத்து நூற்றெண்பது காதம் தூரமென்று வான சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இதின் பருப்பம் குறுக்களவில் மூவாயிரத்து நூற்று நாற்பது மைல், சந்திரனை வான சாஸ்திரிகள் சொல்வது போல் கிரகங்களிற் சேர்க்காதுபோனால் கிரகங்களில் புதனே மிகவுஞ் சிறியது, நமது பூமி புதனைப்போல பதினாறு மடங்கு பெரிது, என்றாலும் பூமியில் மிகுதியான விடங்களில் மனிதரில்லாததால் புதன் பூமியிலுள்ள சனங்களிலும் அதிக சனங்கள் குடியிருக்கப்போதும். நமது கித்தாபுகளிற் சொல்லியபடிக்கு புதன் சூரியனை நாலுமாதத்திற் சுற்றிவரும், வான சாஸ்திரிகள் மூன்று மாதமென்று சொல்லுகிறார்கள், அது காலை நேரத்தில் அல்லது மாலை நேரத்தில் பூமிக்குச் சில வேளைகளில் தெரியும், அது ஒரு மணித்தியாரத்திற்குள் தன் அயனத்தில் லக்ஷம் மைல் தூரம் ஓடுகிறது, அதின் தென்புறத்திலிருக்கிற ஒரு மலை பத்தேகால் மைல் உயரமென்றும், அந்தக் கிரகம் ஈயத்தைப்போல் பாரமுள்ள வஸ்துவினாற் சமைந்திருக்கிறதாகவுஞ் சொல்லுகிறார்கள்.

அறபில் புதனுக்கு அத்தாரிதென்றுங் காத்திபென்றுஞ் சொல்லுகிறது, அல்லாகுத்தஆலா தன் கதிறென்கிற இசும் வெளியாகும் பொருளாக்கினன், இந்த வானத்தில் மற்ற வானங்கள் சகலதிலும் அதிகமான மலாயிக்கத்துகளைப் படைத்திருக்கிறான், அப்துல்கரீமுல் ஜீலீ றளியல்லாகுஅன்கு சொல்லுகிறார்கள் நானிந்த வானத்தில் நாகு அலைகிஸ்ஸலாமைக் கண்டேன், மஹத்துவத்தின் ஒளியால் படைத்த சிம்மாசனத்தின் மீது புகழும் சோபனமுங் கூறப்பட்டவர்களாகவு மிருக்கக் கண்டேன். அவர்களுக்கு சலாம்கூற விடைதந்து எழும்பி எனக்கு உபசரணை செய்த பின் அந்த வானத்தின் அஸ்றாறுகளைக்கேட்டேன், அவர்கள் இது அறிவென்னும் இரத்தினங்களாலுள்ள ஆபரணமாயிருக்கும். இதிலிருந்து அறிவுகள் உதயமாகும். இந்த வானத்திலுள்ள மலாயிக்கத்துகள் குதறத்தென்கிற ஒளியால் படைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கல்குகளை உள்ளமையான ஒளியினிடத்தே வழி காட்டுகிறவர்க ளென்று சொன்னார்கள்.

## மூன்றும் வானமும் சுக்கிரனும்

இந்தக் கிரகத்திற்கு அறபில் சுஹறாவென்று சொல்லுகிறது, கிரகங்களெள்ளாவற்றிலும் இதுவே அலங்காரமுடையது, எங்கள் கித்தாபிற் சொல்லியபடி இது மூன்றாவது வானத்திலிருந்து ஒரு சுற்றாகிய பதினையாயிரத்து முப்பத்தாறு வருட தூரத்தை எட்டுமாதமும் இருபது நாளிற் சுற்றிவரும், வான சாஸ்திரப்பிரகாரம் இது சூரியனுக்கு ஆறு கோடியே எண்பது லக்ஷம் மைல் தூரத்தினின்று சூரியனை இருநூற்றிருபத்தைந்து நாளிற் சுற்றுகிறது, இதின் குறுக்களவு எழாயிரத்து எண்ணூறு மைல். ஆகையால் சுக்கிரன் ஏகதேசம் நமது பூமியையொத்த பருப்பமுடையது. அது இருபத்து நாலு மணித்தியாலத்துக்கு ஒரு முறை அதின் அச்சில் சுழலுவதால் பூமிக்குப்போல் இரவும் பகலு முண்டாகும், அது தன்னுடைய அயனத்தின் ஒரு பங்கிலிருக்கும்போது சூரியனுக்கு முந்தி யுதித்து விடிவெள்ளியென்றுங் காலைவெள்ளி யென்றுஞ் சொல்லப்படும், சூரியனுக்குப் பிந்தியுதயமாகி மாலை வெள்ளியென்று அழைக்கப்படும். தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால் சுக்கிரன் வெளிப்புறத்தில் மேடுபள்ளங்களும், பத்துமுதல் இருபது மைல் வரையுயரமுள்ள மலைகளு மிருக்கிறதாகச்சொல்லுகிறார்கள், மேகங்க ளடர்ந்திருப்பதால் ஏரிகளும் நதிகளும் அங்கே உண்டென வான சாஸ்திரிகள் நிதானிக்கிறார்கள், வான சாஸ்திரிகளில் மிகுதியானவர்கள் பூமியிலுள்ள செந்துக்கள், தாவரங்கள் போல அதிலுமிருக்கக் கூடுமென்று நம்புகிறார்கள். சுக்கிரன் பூமிக்கும் சூரியனுக்கு மிடையே வரும்போது அது கரு உண்டைபோ லிருக்கும், அது சுக்கிர கிரகமாயிருக்கும். 1882 ம் ஆண்டு மார்கழி மாதத்திற் கடைசியாக அந்தக் கிராண முண்டாயிற்று. மறுமுறை அவ்விதம் கிராணமுண்டாக நூற்றுப் பதினாறு வருடஞ் செல்லும், அது இரண்டாயிரத்துப் பன்னிரண்டா மாண்டு மார்கழி மாதத்திலேயே சுக்கிரனில் மனிதரைப்

போல் பிராணிகளிருந்து பூமியைப் பார்த்தால் நமக்குச் சுக்கிரன் தெரிகிற பருப்பமாக பூமிதெரியும், சூரியனிலிருந்து விழுகிற ஒளியினால் பூமி அவர்களுக்கு ஒளிவீசுகிற ஒரு கிரகம்போல் தோற்றும்.

அல்லாகுத்தஆலா இந்த கிரகத்தை அலீமென்கிற இஸ்மு வெளியாகும் பொருளாக்கிவிட்டான், இவ்விதமென்று எண்ணக்கூடாத பலவிதமான ரூபங்களையுடைய மலாயிக்கத்துகளை இந்த வானத்திற் படைத்திருக்கிறான், இதிலுள்ள மலாயிக்கத்துகளுக்கெல்லாம் சூரூயீலென்கிற மலக்கை யதிகாரியாக்கி யிருக்கிறான், அவர்தான் இந்தக் கிரகத்திற்கு உயிராயிருக்கிறார், இதிலுள்ள ஒரு கூட்டத்தை மனிதர் நித்திரைசெய்யும்போது பின்வருங் காரியங்களை விளங்கக் கொடுப்பதற்குத் திட்டமாக்கியிருக்கிறான், அவர்கள் சில வேளைகளில் தெளிவாய் விளங்கத்தக்க விதமாய் வெளியாக்குவார்கள், சில வேளைகளில் யோசித்து விளங்கி யெடுப்பதற்கு உவமையாக வெளியாக்குவார்கள், ஒரு கூட்டத்தை குழந்தைகளை வளர்ப்பதற்கும் அவர்களுக்கு சொற்களின் பொருள்கள் விளங்கச் செய்யவும் பேச்சுண்டாவதற்குச் செய்யவுந் திட்டப்படுத்தியிருக்கிறான். இதுபோல் அநேக கூட்டங்களாய்ப் பிரித்து ஒவ்வொரு கூட்டத்துக்கும் வெவ்வேறு வேலைகளை ஆலத்திலும் மனிதனிலும் நடத்துதற்குத் திட்டப்படுத்தி யிருக்கிறான், ஆலத்தில் சகல காரியங்களும் ஒழுங்காய் நடந்து வருவது மலாயிக்கத்துகளால் நடத்தப்பட்டு வருவதினாலேயே. மலாயிக்கத்துகளை நமது சரீரத்திலுள்ள பற்பல தத்துவங்களுக்கும் உதாரணமாய் வைத்துக்கொள், நம்மில் நாட்ட முண்டான அக்ஷணமே நமது பற்பல தத்துவத்திற்குந்தெரிந்து கீழ்ப்பட்டு நடத்துவது போல் ஹக்குத்தஆலாவின் நாட்டம் மலாயிக்கத்துகளால் நடத்தப்பட்டு வருகின்றன. நமது ஒவ்வொரு தத்துவமும் மலாயிக்கத்துகளுடைய தத்துவங்களுக்குக் கீழ்ப்பட்டதா யிருக்கின்றது, இதற் கொருதாரணஞ் சொல்லுகிறேன்; ஒரு இராஜன் தன் உத்தியோகஸ்தர்களை யழைத்துத் திருத்தமற்ற காட்டு மனிதர்களொரு கூட்டத்தையும் திருத்தமுடைய பட்டணத்திலுள்ள மனிதர்களொரு கூட்டத்தைபும் பிடிக்கவும் வெட்டவுஞ் சிறையாக்கவும் கட்டளை கொடுத்து, அவர்க ளதுபோல் செய்த போது அந்தக் காட்டு மனிதருக்கு இவர்கள் இராஜாவின் கட்டளையை நிறைவேற்றுகிறவர்களல்லாது அவர்களிஷ்டப்படிக்குச் செய்த காரியமல்லவென்று தெரியாததால், அந்த உத்தியோகஸ்தர்களின் அநியாயமென்றே நினைப்பார்கள். திருத்தமுடையவர்களுக்கு இராஜாவின் கட்டளையே நடத்தப்பட்ட தென்பதையுந் தெரிந்திருப்பதால் அந்த உத்தியோகரின் செய்கையென்று சொல்லாமல் இராஜா எங்களுக்கு இந்த அநியாயஞ் செய்தானென்று சொல்வார்கள். அந்தக் காட்டு மனிதர்களைப்போலவே அறிவில்லாதவர்கள் நான் செய்தேன் அவன் செய்தானென்று சொல்வார்கள். செயல்களுக்கெல்லாம் ஆதிகாரணன் ஆரென்பதை யறியார்கள், உள்ளமைகளை யறிந்த அறிவாளர்களோ செயல்களுக்கெல்லாம் காரணன் ஹக்குத்தஆலாவேயன்றி வேறொருவரையுங் காணார்கள்.

## நாலாம் வானமும் சூரியனும்.

இந்த வானத்தின் விஸ்தாரத்தையும் சூரியனின் பருப்பத்தையும் சொன்னால், புத்தியைக்கொண்டு மட்டுப்படுத்தக்கூடாது. சென்ற ஆயிரம் வருடத்தில் உலகத்திலுள்ள கல்விமான்கள் சகலரும் முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு தானும் சூரியன் பூமியிலும் மிகவும் பருப்பமுடையதென்று சொல்லியிருக்க, இந்த ஊர்களிலுள்ள முஸ்லிம்களிலிதைச் சந்தேகிப்பவர்களு மிருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்கள் கல்வியினொளி வீசாத இருட்டறையிலிருப்பவர்களா யிருக்கும். சூரியனின் பருப்பத்தை புத்தியைக்கொண்டு சூறத்தாக்கக் கூடாது. பூமியின் குறுக்களவு எழாயிரத்துத் தொழாயிரத்துப் பன்னிரண்டு மைல், சூரியனின் குறுக்களவோ எட்டு லக்ஷத்து எண்பத்திராயிரம் மைல், பூமியைப்போல் பதிமூன்று லக்ஷத்து எண்பத்து நாலாயிரத்து நானூற்று எழுபத்திரண்டு பங்கு பருப்பமுள்ளது. பூமியைப்போல் பதினறு லக்ஷம் பூமிகளை யொன்றாய்ச் சேர்த்தால் சூரியனின் பருப்பமாகும். இதைப்பற்றி ரிஸாலத்துல் ஹமீதிய்யா வென்கிற கித்தாபில் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டரை முளம் நீழமும் இரண்டரை முளம் அகலமுமாக ஒரு பெட்டியைச்செய்து அதில் மணலை நிரப்பி அந்தப் பெட்டியிலுள்ள ஒரு மணல் பூமியின் பருப்பத்திற்கும், மற்ற அதிலுள்ள மணல்களெல்லாஞ் சேர்ந்து சூரியனின் பருப்பத்திற்கு ஒரு நிதானஞ் சொல்லலா மென்று சொல்லி யிருக்கிறது. சூரியன் பூமியிலிருந்து ஒன்பது கோடியே ஐம்பது லக்ஷம் மைல் தூரத்திலிருப்பதால் அது சிறியதாய்ப் பார்வைக்குத் தெரிகின்றது. அப்துல் கரீமுல்ஜீலீ றளியல்லாகு அன்கு இன்சான் காமிலில் அல்லாகுத்தஆலா இந்த வானத்தை கல்பி னொளியைக்கொண்டு படைத்தானென்றும், சூரியனைப் படைப்புகளுடைய கல்புக்குத் தானமாக்கினனென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். அவைகளுக்கெல்லாம் அத்திவாரமாகவும், கிரகங்களெல்லாம் அதின் ஒளியைத் தேடவுமாக்கினன். நாயகத்தனத்தின் வெளியாகுதலுக்குத் தலமாக்கினன், அனுசிர்களைக்கொண் டுண்டான படைப்புக ளெல்லாவற்றுக்கும் அதுவே அசிலாயிருக்கின்றது. ஒளியிறங்குந் தலமாகவும் அஸ்ராறுகளின் சுரங்கமாகவு மிருக்கின்றது, இதிலுள்ள மலாயிக்கத்துகளுக் கெல்லாம் அதிகாரி இஸ்ராபீல் அலைகிஸ்ஸலாமாயிருக்கும். சூரியனுடைய றூஹானிய்யா அவர்களாயிருக்கும். அதின் ஒரு சுற்று பதினேழாயிரத்து இருபத்தொன்பது வருடமும் அறுபதுநாள் தூரமுமாயிருக்கும், அதின் சுற்று முன்னூற் றறுபத்தைந்தேகால் நாளும் மூன்று விநடியி லொரு சுற்று சுற்றிவரும், இதுதான் சூரியவருடம். இந்த வானத்தில் ஈசா அலைகிஸ்ஸலாம், சுலைமான் அலைகிஸ்ஸலாம், தாவூதலைகிஸ்ஸலாம் முதலிய அநேக நபிமார்க ளிருக்கிறார்கள்.

## ஐந்தாம் வானம், செவ்வாய்

செவ்வா யென்கிற கிரகத்துக்கு அறபில் மிர்ரீகு என்று சொல்லப்படும், எங்கள் கித்தாபுகளிற் சொல்லியிருக்கிறபடி இது ஐந்தாம் வா

னத்திலிருந்து ஒரு சுற்ருகிய பத்தொன்பதிஞயிரத்து முப்பது வருடத் தூரத்தை இரண்டரை வருடத்திற் சுற்றிவரும், வான சாஸ்திரிகள் சொற்படிக்கு இது சூரியனிலிருந்து பதிஞறு கோடி மைல் தூரத்திலிருந்து சூரியனைச் சுற்றுகிறது, அது பூமிக்கு அதிகச் சமீபத்தில் நிற்கும் போது அதற்கும் பூமிக்குந் தூரம் ஐந்துகோடி மைல். இவ்வளவு சமீபத்திலிருக்கும்போது ஒருவன் பூமியிலிருந்து நாளொன்றுக்கு இருபத்தைந்து மைல் தூரம் நடந்துசென்ருல் அதற்குப்போய்ச்சேர இருநூற்றெண்பத்தைந்து வருடஞ் செல்லும், அது பூமிக்கு அதிக தூரத்திலிருக்கும்போது அந்தக் கணக்காய் நடந்துபோய்ச்சேர ஆயிரம் வருஷத்துக் கதிகஞ் செல்லும்.

செவ்வாய் சூரியனைச் சுற்றி ஒரு வருடம் வருகிறதற்கு அறுநூற்று எண்பது நாள்செல்லும். ஆகையால் செவ்வாயினெரு வருஷம் நமக்கு இரண்டு வருஷமாயிருக்கும், மிகுந்த துரிதமாய்ப் போகிற பீரங்கிக்குண்டைப் பார்க்கிலும் நூறு மடங்குஅதிக துரிதமாய் செவ்வாய் தன் அயனத்தி லோடுகின்றது, அண்டத்திலிது ஒரு சிறு கிரகமாயிருக்க இதின் விரைவை யோசிக்கும்போது புத்தி மயங்குகிறதே, அல்லாகுத்தஆலாவின் உள்ளமையை எவ்விதம் அறியலாம் மட்டுப்படுத்தலாம்.

செவ்வாயில் நிலமும் நீரும் பிரத்தியட்சமாய்த் தெரிகிறதென்றும், அதன் தேகத்தின் மூன்றத்தொரு பங்கு ஜலம் என்றும், மகா கீர்த்திபெற்ற ஓர் வான சாஸ்திரி சொல்லுகிருர்; தூரதிருஷ்டிக் கண்ணுடியால் பார்த்தால் அதை மேகங்க ளடர்ந்து சூழப்பட்டிருக்கிறது தெரியும், பூமியைப் போலதற்குக் காலவேற்றுமை யிருக்கிறதாக நினைக்கிருர்கள், எப்படியாஞல் மாரிகாலத்தில் அக்கிரகத்தின் வடபாரிசமெல்லாம் உறை மழைபெய்தும், வெள்ளை நிறம்போல் தோன்றுகிறதாயும், கோடைகாலத்திலோ அப்படியொன்றுந் தோன்றுகிற தில்லையென்றும், அது சிவப்புநிறமாய்த் தெரிகிறது, அதின் பூமியின் தன்மையாலென்றுஞ் சொல்லுகிருர்கள், இன்னும் புதிதாக வான சாஸ்திரிகள் அதில் பெரும் வெட்டாறுகள் தெரிகின்றதென்றும், அதஞல் அதில் மனிதரைப்போல் புத்தியுள்ளவர்களுங் கைவேலை செய்கிறவர்களு மிருக்கவேண்டுமென்று நினைத்து அவர்களுக்கு மார்ஷன் என்றும் பெயர் கொடுத்திருக்கிருர்கள் இந்தக் கிரகம் நாயகத்தனத்தின் மகத்துவமும் வேதனை செய்யுந் தத்துவமும் வெளியாகுந் தலமாயிருக்கும், இதில் மலாயிக்கத்துகளின் வணக்கமாவது சிலர் ஈமானின் உறுதியைக் கல்பில் அடித்தாளமாக்கவும், சிலர் நோயாளிகளின் நோய் சொஸ்தப்படுத்தவும், சிலர் ரூகுகளைக் கைப்பற்றவும் படைக்கப்பட் டிருக்கிருர்கள், சிலர் வேதனைகளைச்செய்ய உண்டாக்கப்பட்டிருக்கிருர்கள், இவர்களெல்லோரும் இஸ்ருயில் அலைகிஸ்ஸலாமின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிருர்கள், இவர்க ளிந்தக் கிரகத்தின் ரூஹானிய்யாவா யிருக்கிருர்கள்.

## ஆரும் வானம்

## பிரகஸ்பதி.

இதற்கு வியாழனென்றுஞ் சொல்லுகிறது, அறபில் முஷ்தரீ யென்று சொல்லப்படும், இதின் குறுக்களவு எண்பத்தொண்பதி ஞயிரத்து நூற்

று எழுபது மைல். இது எல்லாக் கிரகங்களிலும் மிகவும் பெரிது, பூமியைப்போல் ஆயிரத் திருநூற்றெண்பத்தொரு மடங்கு பருப்பமுடையது, இது சூரியனிலிருந்து நாற்பத்தொன்பது கோடி மைல் தூரத்திலிருக்கிறது, இன்சான் காமிலில் அப்துல்கரீமுல் ஜீலீ றளியல்லாகு அன்குவின் சொற்படிக்கு இந்த வானத்தின் சுற்று இருபத்தோராயிரத்து அறுபத்தாறு வருடத்துத் தூலை. இந்தக் கிரகம் அந்த ஒரு மணி நேரத்தில் தொழாயிரத்து அறுபது வருடத்துத் தூலையைக் கழித்துப் பன்னிரண்டு வருஷத்திற் சுற்றிவரும் என்று சொல்லுகிறார்கள். வான சாஸ்திரிகளு மதுபோலவே பன்னிரண்டு வருஷத்திற் சுற்றுகிறதென்று சொல்லுகிறார்கள், இந்தக் கிரகத்திற்கு சந்திரன் நாலிருக்கின்றன. அவைகளிற் சிலது நமது சந்திரனுடைய பருப்பமாகவும், சிலது அதற்குக் கொஞ்சம் அதிக பருப்பமாகவு மிருக்கும். இவைகள் கண்ணுக்குத் தெரியா. கீர்த்திபெற்ற கல்லியோ வென்பவர் தூரதிருஷ்டிக் கண்ணாடியைச் செய்து முதலாவது கண்டுபிடித்தது இவைகளையே. இந்த வானம் கையூமென்கிற இஸ்மின் மழுஹருயிருக்கும், அப்துல்கரீமுல் ஜீலீ றளியல்லாகுஅன்கு சொல்லுகிறார்கள்; மூசா அலைகிஸ்ஸலாம் இந்த வானத்தில் அதிகார முடையவர்களாகவும் அவர்கள் பாதங்களை இந்த வானத்தில் வைத்தவர்களாகவும், அவர்கள் வலக்கையினால் சிதுறத்துல் முந்தஹாவைப் பிடித்தவர்களாகவும் றுபூபிய்யத்தெனும் பாணக்கத்தால் மஸ்துக்கொண்டவர்களாகவும், நாயகத் தனத்தின் மகத்துவத்தினால் திகைத்தவர்களாகவும், அவர்களின் இல்மெனுங்கண்ணாடியில் ஆலங்களின் கோலங்கள் பதியப்பட்டதாகவும், இராஜாங்கத்தை யுடைய ஹக்குத்தஆலாவின் தஜல்லியாத்து தன்னில் வெளியானவர்களாகவும், அவர்களின்பார்வை பார்த்தவர்கள் அஞ்சத்தக்கதாகவும், வருகிறவர்கள் போகிறவர்கள் திக்குகிடச் செய்கிறவர்களாகவு மிருக்கக்கண்டு அவர்கள் சமுகத்தில் நின்று அவர்களின் பதவிக்குத்தக்க சலாம் சொன்னேன், அவர்களுடைய நீங்காத மஸ்திலிருந்து தலையையுயர்த்தி உபசரணைசெய்து என்னை யழைத்தார்கள், அப்பொழுது நான் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொல்லிய வார்த்தையைக் குறித்து அவர்களிடங்கேட்க அவர்கள் சொன்னார்கள்; நானென்னுடைய பட்டணத்தை (சரீரத்தை) விட்டு எனக்குரிய ஹக்கீக்கத்தெனும் ஸ்தானத்திற்குச் சென்றபோது என் கல்பென்கிற மலையிலிருந்து என்னையனின்நாவைக்கொண் டழைக்கப்பட்டது, முகத்திசெனும் பள்ளத்திலிருந்த அஹதிய்யத்தென்கிற மரத்தின் புறத்திலிருந்து நானே அல்லாவாயிருக்கும், நானன்றி வேறு நாயனில்லை, என்னை வணங்குவாயாகவென்று கட்டளை சொல்லப்பட நான் என்னை ஏவியபடி வணங்கி அவனுடைய சிபத்துக்கும் அஸ்மாவுக்குந் தக்கபடி புகழ்ந்து துதி கூறினேன், அப்பொழுது நாயகத் தனத்தின் ஒளி பிரகாசித்தது, என்னை விட்டும் நானில்லாமற் போனேன், விக்காவென்னும் மக்காமில் தரிபாடாக யிருக்க நாடினேன். கதீமெனும் பூரப்பமானது வெளியாகையில் புதிதானது தரிக்கக்கூடாது, என்னுடைய அந்தரங்கம் அந்த மேன்மையான காரியத்தைக்குறித்து விளங்கத் தேடிற்

று, நான் அவனிடம் உனது பரிசுத்த சமுகத்திற் சென்று உன்னைப்பார்க்க எனக்கிடந்தா வென்றவுடனே அச்ச முகத்திலிருந்து எனக்கு மறுமொழி வந்தது, நீ யொருபோது மென்னை க்காண மாட்டாய், ஆகிலு மென்னி ன் ஒளிவால் படைக்கப்பட்ட உன் உள்ளமை யென்கிற மலையைப்பார், பூர்ப்பமானவன் அவனுடைய அதி காரத்தைக்கொண்டு வெளியானவே ளையில் அந்த மலை தரிபாடாயிருந்தா ல் நீ அப்பொழுதுதான் என்னைக்கா ண்பாய், அவன் மலையில் தஜல்லியா னபோது என்னுடைய ஹக்கீக்கத்து என்னை இழுத்துக்கொண்டது. பூர் ப்பமானது புதிதானதில் வெளியா னபோது மலை (தன்உள்ளமை) தூசா ய்ப்போயிற்று, மூசா மயங்கிவிழுந் து நினைவற்றுப்போனார், பூர்ப்பம் பூர்ப்பமாகவே தரிபட்டது, மகத்து வமாய் வந்தது அந்த மகத்துவமேதா னென்று சொன்னார்களென்று அப் துல்கரீம் ஜைலீ அவர்கள் சொன்ன ர்கள்.

இந்த வானத்திலுள்ள மலாயிக்க த்துகள் பற்பல பிராணிகளுடைய ரூ பங்களிலும் படைக்கப்பட்டிருக்கிறா ர்கள், சிலர் இறகுகளை யுடைய பட் சிகளைப்போலும், சிலர் மிகவும் பெ றுமதியான குதிரையின் ரூபமாகவு ம், சிலர் கோவேறு கழுதையின் ரூப மாகவும் படைக்கப் பட்டிருக்கிறார்க ள், இன்சானுடைய ரூபமாகவும் ப டைக்கப்பட்டு மிருக்கிறார்கள், அவர் களுடைய பணிவிடையாவது வேத ங்களை ஒழுங்காய் நடத்திவைக்குதல், சிலர் இரத்தினங்களைப் போலும், அ வர்களின் வேலை நோய்களைத் தீர்க் கிறதும் சுகத்தைக் கொடுக்கிறதும், சிலர் தானியங்களின் ரூபங்களாகவு ம், தண்ணீரின் ரூபமாகவும், இன்னு ம் தீன்களின் ரூபமாகவும், குடிக்கும் குடிப்புகளின் ரூபமாகவும் படைக் கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் வேலை பல படைப்புகளுக்கும் இர ணங்களைக் கொடுப்பதாயிருக்கும், சி லர் அரைவாசி நெருப்பாகவும் மற்ற அரைவாசி உறைந்த தண்ணீராகவும் படைக்கப்பட் டிருக்கிறார்கள், ஆகி லும் அவைகளி லொன்றை யொன் று பழுதாக்காது. இந்த வானத்தி ற்கு அதிகாரி மீக்காயீல் அலைகிஸ் ஸலாமாயிருக்கும், அவர்களுடைய அதிகாரம் சிதுறத்துல் முந்தஹா வ ரையிலா யிருக்கும். சிதுறத்துல்மு ந்தஹா வென்பது நட்சத்திர மண் டலங்க ளெல்லாவற்றுமே லிருக்கும். அப்துல்கரீமுல் ஜீலீ றளியல்லாகு அ ன்கு மீக்காயீல் அலைகிஸ்ஸலாமிடம் நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர் கள் ஏறிப்போன புறுக்கு இந்த வா னத்திற் குடையதோ வென்று கேட் க, அவர்களில்லை அது அக்குலுல் அ வ்வலென்கிற ஸ்தானத்தைச் சேர்ந் தது, மற்றும் நபிமார்களும் அவுலியா க்களும் உயர்த்தியான மண்டலங்க ளுக்குப் பிரயாணஞ்செய்வது இந்த வானத்தின் குதிரைகளிலேயே என் று சொன்னதாகச் சொல்லியிருக்கி றார்கள்.

## ஏழாம் வானம் சனி:

---

அப்துல்கரீமுல் ஜீலீ றளியல்லாகு அன்கு இந்த வானம் இரவின் இரு ளைப்போல கருநிறமா யிருக்குமென் றும், அல்லாகுத்தஆலா அக்குலுல் அவ்வலின் ஒளியால் படைத்தானெ ன்றும், இதன்சுற்று இருபத்து நாலா யிரத்து ஐந்நூறு வருஷத் தூரமெ

ன்றும், இந்த வானம் மற்ற அதற்கு க்கீழான வானங்களையும் படைப்புக ளையும் சூழ்ந்துக்கொண் டிருக்கின் றதென்றுஞ் சொல்லியிருக்கிறுர்கள். இந்த வானத்தில் சனியென்கிற கிரக மிருக்கின்றது, இதற்கு அறபில் (ஸுஹல்) என்று சொல்லப்படும், வான சாஸ்திரிகள் இதின் குறுக்களவு எழு பத்தெண்பதிணுயிரத்து அறுநூற்று நாற்பத்திரண்டு மைல், இது சூரிய னிலிருந்து தொண்ணூறு கோடியே அறுபது லக்ஷம் மைல் தூரத்தி லிரு க்கின்றதென்று சொல்லுகிறுர்கள், பூமியைப்போல் தொழாயிரத்துத் தொண்ணூற்று ஐம்பது மடங்கு பரு ப்பமுடையது, தூரதிருஷ்டிக் கண் ணுடியால் பார்த்தால் சந்திரன் ஏழு அதைச் சுற்றி ஓடிக்கொண்டிருப் பது தெரியும், அது சூரியனை ஒரு சுற்றுச் சுற்றிவர இருபத்தொன்பதே கால் எங்கள் வருஷஞ்செல்லும், அது தானதற் கொரு வருஷம். இந்த வானத்திலுள்ள மலாயிக்கத்துகளெ ல்லாம் முகற்றபீன்கள், அவர்களுக்கு அல்லாகுத்தஆலா நியமித்திருக்கி ற அதிகாரத்திற்குத் தக்க பதவியு டையவர்களா யிருக்கிறுர்கள், இதில் இபுருகீம் அலைகிஸ்ஸலா மிருக்கிறுர்கள்.

## நட்சத்திர மண்டலம்.

---

ஏழு வானங்களுக்கு முயர நட்சத்திரங்களின் மண்டலமிருக்கின்றன, நட்சத்திரங்களைப்பற்றி வான சாஸ்திரிகளுக்குத் தீர்க்கமா யொன்றுஞ் சொல்லக்கூடியதாயில்லை, அவைக ளிருக்கின்ற தூரங்களையாவது பரு ப்பங்களையாவது சொல்லக்கூடாது, எப்படிப்பட்ட பெரிய தூரதிருஷ்டிக் கண்ணுடியைக்கொண்டு பார்த்தாலும் நமது கண்ணுக்குத் தெரிகின்ற பருப்பத்திற்குச் சொற்ப அதிகமாய்ச்சில நட்சத்திரங்கள் தெரியுமேயன் றிப் பருப்பமாய்த் தெரியாது, அப்படித் தெரியாதது கணக்காற் சொல்லக்கூடாத தூரத்தி லிருப்பதினுலேயே, நட்சத்திரங்களில் எங்களுக்கு மிகவுஞ் சமீபத்திலிருக்கிற நட்சத்திரத்திற்கு அறபில் (ஷஉறு) வென்றும், தமிழில் அக்கினி நட்சத்திர மென்றுஞ் சொல்லப்படும், இதின் துலை பூமியிலிருந்து பத்தொன்பதிணுயிரத்து அறுநூறு மகாகோடி (1960,000,000,000,000,000) மைல் துலையென்று சொல்லுகிறுர்கள், இந்தத் துலை புத்திக்கு மட்டுப்படுத்தக் கூடாது. தற்காலத்திலிருக்கிற பெரிய தூரதிருஷ்டிக் கண்ணுக்கு கண்ணுக்குத் தெரிகின்ற பருப்பமாகத்தான் தெரியும், அதற்குக் காரணம் அவைகளிருக்கின்ற தூரமே. வான சாஸ்திரிகளுக்கு அந்த நட்சத்திரங்களில் சில நட்சத்திரங்களுக்கு அவர்கள் கொடுத்திருக்கிற பெயர்களையும், அவைக ளின்னராசியிலிருக்கின்ற தென்பதையுந் தெரியுமேயல்லாமல், அவைகளின் பருப்பம் முதலியவைகளொன்றுந்தெரியாது, தற்காலத்திலிருக்கிற தூரதிருஷ்டிக் கண்ணுடியிலும் ஆயிரம் பங்கு பருப்பமுள்ள கண்ணுடிகள் செய்து பார்த்தாலும் கிரகங்களை மட்டுப்படுத்துவதுபோல் மட்டுப்படுத்தக் கூடாதென்பதற்குச் சந்தேகமில்லை. வான சாஸ்திரிகள் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் ஒவ்வொரு சூரியனென்றும், சில நட்சத்திரங்கள் சூரியனிலு மதிக பருப்ப முடையவைக ளென்றுஞ் சொல்லுகிறுர்கள். நமது ஆரிபீன்கள் தானும் நட்சத்திரங்களை

ப்பற்றி விவரங்கள் சொல்லக்காணே ம், ஆனால் தூரதிருஷ்டிக் கண்ணாடி யால் பார்த்தால் கண்ணுக்குத் தெ ரிகின்ற நட்சத்திரங்களல்லாமல் ல க்ஷக்கணக்கான நட்சத்திரங்கள் தெ ரிகின்றன, இவைகளை யோசித்தா ல் புத்தி மயங்கி விடுகின்றது. இ வைகளை யெல்லாம் படைத்து ஒழு ங்காய் நடத்திவருகின்ற அல்லாகுத் தஆலாவின் வல்லமைக் கென்ன சொல்லலாம்! அண்டத்தின் விஸ் தாரத்தையும் அவைகளின் கணக் கில்லாத ஆலங்களையும் நினைத்தவுட ன் புத்தி ஹைறானப் போவதுபோ ல், சிறிய பிராணிகளைப் பார்த்தாலும் புத்தி மயங்கி விடுகின்றது. பழுதா ன ஒரு துளித் தண்ணீரை அணுதரி சினி என்கிற பூதக்கண்ணாடியாற் பா ர்த்தால் இலக்ஷக்கணக்கான பிரா ணிகளைக் காணலாம், ஒவ்வொன்று க்கும் நிரப்பமான ரூபமும் அங்கங்க ளும்அவையவங்களுடையதாய்அவை களுல்லாசமாய்ஓடித்திரிவதையும், அ வைகள் பலுகுவதையுங் காணலாம். நீ! குடிக்கிற தண்ணீரில் ஆயிரக்கா ணக்கான செந்துக ளிருக்கின்றன, உன் சரீரத்திலும் இலக்ஷக்கணக்கா ன பிராணிக ளிருக்கின்றன, அவை களுக் குனது சரீரம் ஆலமாயிருக்கி ன்றது, அதிலே யுண்டாகி அதிலே அழிந்துபோகின்றன. இவைக ளொ வ்வொன்றையும் வெவ்வேறு ரூப மாயும் வெவ்வேறு தன்மை யுடைய தாயும் படைத்து, அண்டத்திலுள்ள பெரிய படைப்புகளைப் பம்பரங்களை ப்போ லாட்டுவதுபோல், இவைக ளையும் ஹக்குத்தஆலா தன் பரிபூர ண ஞானத்தினாலுங் சர்வ வல்லமை யினாலுந் தாபரித்து வருகின்றான். அவனுக்கே புகழ்.

# இராசிகள், புறூஜ்.

---

இராசிகளுக்கு அறபில் புறூஜெ ன்று சொல்லப்படும், முற்காலத்தி லிருந்த வான சாஸ்திரிகள் ஆகாச த்தில் நட்சத்திரங்களைப் பார்த்து அ வைகளிருக்கின்ற மண்டலங்களைப்பன் னிரண்டு பங்காய்ப்பிரித்து, ஒவ்வொ ரு பங்குக்கு ஒவ்வொரு பெயரையுங் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருபி ரிவுக்குஒவ்வொருஇராசியென்றும்அ றபில் புறூஜென்றுஞ்சொல்லப்படும். இன்ன நட்சத்திரம் இன்ன நேரத்தி ல், இன்ன இராசியி லிருக்கின்றதெ ன்றும், இன்ன கிரகம் இன்ன இரா சிக்கு வருமென்றும், முற்காலத்திலு ள்ள கல்விமான்கள் திட்டப்படுத்தி யிருக்கிறார்கள். இந்தப் பன்னிரண் டு இராசிகளுக்கும் அறபுப் பெயர்க ளையும் தமிழ்ப் பெயர்களையுஞ் சொ ல்லுகிறேன், மேடம் (ஹமல்) இட பம் (தவ்று) மிதுனம் (ஜவ்ஸ) கற் கடம் (சறுத்தான்) சிங்கம் (அஸது) கன்னி (சுன்புலா) துலா (மீஸான்) விருட்சி (அக்றபு) தனுசு (ஊத்) அல் லாகுத்தஆலா கிரகங்களையும் நட்சத் திரங்களையும் இந்த புறூஜ்களில்திட் டப்படுத்தி அவைகளொவ்வொன்று க்கு ஒவ்வொரு மலாயிக்கத்தை அதி காரியாக்கி யிருக்கிறான். இவைகளி ல் ஆறு வடபுறத்தி லிருப்பதால் உத் தராயண ராசியென்று சொல்லப் படும். மற்ற ஆறும் தென்புற மிருப் பதால் தக்ஷிணாயன ராசியென்று சொல்லப்படும். முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு இந்தப் பன்னிரண்டு ராசிகளையும் நாலு பிரி வாய்ப் பிரித்திருக்கிறார்கள். சிங்கம், மேடம், தனுசு, ஆகிய மூன்றும் ஒரு பதவி யுடையவைகளென்றும், கன்

ணி, இடபம், மகரம் ஒரு பதவியெ ன்றும், துலா, மிதுனம், கும்பம் ஒரு பதவியென்றும். விருட்சி, கற்கடகம், மீனம் ஒரு பதவியென்றுஞ் சொல்லி யிருக்கிறார்கள். இந்த இராசிகளில் கிரகங்கள் சென்று அதிகாரஞ் செலு த்துஞ் சட்டங்களைக் கொண்டு தான் சோதிட சாஸ்திரம், சாதகமல்லது பிறந்தநா ளிராசி முதலியவற்றின் ப லன் சொல்லுதலாகியவைக ளேற்பா டு செய்திருக்கின்றன. ஆகிலும் இ ந்த சாஸ்திரங்களைப் பார்க்கப்படா தென்று நமது மார்க்கம் விலக்கியி ருப்பதால் இதில் நாம் அதிகம் கரு த்தைச் செலுத்தப்படாது. இந்த சாஸ்திரங்களுக்கு அத்திவார மின் ன்தென்று மட்டுஞ் சொல்லுகிறேன்; இன்சான் சிறு ஆலமென்றும் இந்த சிறு ஆலத்திற்கும் பெரிய ஆலத்திற் கும் சம்பந்த மிருக்கின்றன. நமது றூகு சூரியனுக் கொப்பாயிருக்கின்ற து, சூரியனைக்கொண்டு சகலமும் உயிருடையவைகளா யிருக்கின்றன, சூரியன் அஸ்தமித்தவுடனே இருள் மூடிவிடும், இதுபோலவே றூகு சரீ ரத்திலிருக்கும் வரையும் சகல உறு ப்புகளும் உயிருடையதா யிருக்கும், றூகு நீங்கினவுடனே சரீரத்தில் இ ருள் மூடிவிடும். சந்திரன் அக்கிலு க்கொப்பா யிருக்கின்றது, சந்திரனு க்குப் பிரகாசம் சூரியனைக்கொண் டே யிருக்கிறதுபோல் அக்கில் றூகி ல்நின்றுமே வெளியாகின்றது, இது போலவே நமது பஞ்சேந்திரியங்க ளை மலாயிக்கத்துகளுக்கும், நமது இருதயம் சமுத்திரத்திற்கும், நரம்பு களை ஆறுகளுக்கும், நமது சரீரத்தி லுள்ள தத்துவங்களைக் கிரகங்களுக் கும் ஒப்பாயிருக்கின்றன. இன்னும் நான் முன் சொல்லியபடி பூலோக த்தில் தாவர வஸ்துகளையும், பிரா ணிகளையும், கிரகங்களின் உசும்புத லைக்கொண்டு மலாயிக்கத்துகள் அல் லாகுத்தஆலாவின் நாட்டப்படி நட த்திவருகிறார்கள். ஆலத்திலுள்ள ஒ வ்வொரு படைப்புக்கும் இன்சானுக் கும் சம்பந்த மிருக்கின்றது, இந்த சம்பந்தத்தைக் கஷ்புகொண் டறிந் த பெரியோர்களுக் கல்லாது வே றொருவருக்கு மறியக்கூடாது. ஆகி லும் பெரியோர்கள் சொல்லியிருப்ப வைகளிற் சிலதைக் கல்விமான்கள் பரிசோதனைசெய்து திட்டப்பட்ட வைகளைச் சேர்த்துச் சோதிடசாஸ் திரமாக்கி யிருக்கிறார்கள், அச்சோ தனைகளா லறிந்த அறிவுகளில் தவ றுகளிருப்பதால் சில தருணங்களில் அந்த சாஸ்திரம் சரியாகவும் சிலதரு ணங்களில் சரியில்லாததாகவு மிரு க்கின்றது. ஆகையால் அந்த சாஸ் திரம் கெடுதியை யுடையதா யிருக் கின்றது. வானசோதிகள் பூமியிலு ள்ள படைப்புகளில் பேதகங் களு ண்டாகுவதை அனுபவசித்தியினற் பல தேசத்திலுள்ளவர்களும் அறிந் திருக்கிறார்கள். விதைக்கிறதற்கும், மரங்களுடைய கொப்புகளை வெட்டு தற்கும், இதுபோலுள்ள காரியங்க ளைச் செய்தற்கும் அமாவாசிக்குப் பிற்பாடு பௌரணைவரையும் நல்ல காலமென்று வேளாண்மைக் காரர்க ளறிந்திருக்கிறார்கள், இதற்குக் கார ணம் அமாவாசி காலத்தில் சந்திரன் சூரியன் கிட்டவிருக்கும், அதனுல் உஷ்ணம் பிரகாசம் முதலிய பயிர் களுக்கு நலவானவைகளைக் சந்திரன் அதிகமாய்க் கொடுக்கும். மனிதரு டைய தேகத்திற்கும் மரங்கள் செந் துகள் சகலதுக்கும் அதிகப்பெலன் கொடுக்கும், கடலில் பற்பல சிப்பிக ளும் விர்த்தியாகும், பௌரணைக்கு க் குறைந்துபோகும். எலும்புகளுக்

குண்டாகிய மூளைகளும், நரம்புகளு க்குளுண்டாகிய சிவ அக்கினியும், தாதுகளிலே யுண்டான விரத்தமும் அமாவாசி முதல் விர்த்திக்கும், பௌ ரணிக்குப்பின் குறையும். இன்னும் அமாவாசியுடைய காலத்திலே சரீர த்திலுள்ள விஷ சலங்கள் மிகவும் அதிகரிக்கிறதினுலே சில நோய்களு ங்கடினமாகும், அதனுல் சுதேச வை த்தியர்கள் கடினமான மருந்துகள் கொடுப்பதை நிறுத்துவார்கள், இ வைகளெல்லாம் நான் முன்சொன் ன காரணத்தினுலேயே. சந்திரனின் தத்துவத்தைப் பூமியிற் காட்டுவதை ப்பற்றி ஒரு காரியஞ் சொல்லுகிறே ன், கடலின் பெருக்குக்கும் வற்றுக் குங் காரணம் சந்திரனென்பதைக் க ல்விமான்கள் சகலரும் ஏற்றுக்கொ ள்ளுகிறது மன்றி அதற்காக அவர்க ள் சொல்லுகிற நியாயங்களெல்லாம் சரியாயிருக்கின்றன. சந்திரன் ஒவ் வொரு நாளும் உதயமாகுதற்கு ஐம் பத்தைந்து விஞடி பிந்தும், கடற்பெ ருக்கு மொவ்வொரு நாளும் ஐம்பது விஞடி பிந்தி வரும், சந்திர பூமிக்குநேரே வருகையில் கடலையும் காந்த மிழுக்கிறதுபோல இழுக்கிறதி ஞல் பூமியும் சற்று அதினயனத்தி லிருந்து விலகும். இதற் கின்னும் பல அத்தாட்சிக ளிருக்கின்றன, நம து ஆரிபீன்கள் கிரகங்களுக்கும் பூமி யிலுள்ளவைகளுக்கும் சம்பந்த மிரு க்கின்ற தென்பதை சாஸ்திரப்படிக் கு அநேக நியாயங்களால் காட்டலா மென்று சொன்னுர்.

முரீது, கிரகங்களும் நட்சத்திரங் களு மிருக்கின்ற தூரத்தை வான சா ஸ்திரிகள் எவ்வித மளக்கிருர்கள், இ தை நம்பக்கூடுமோ வென்று கேட் டான்.

செய்கு, முக்கோண சாஸ்திரமெ ன்ருேர் சாஸ்திரமிருக்கின்றது, அந் த சாஸ்திரத்தைக் கற்ருல் ஒரு மலை யின் உயரத்தை அந்த மலைக்குப் போகாமல் அளந்து போடக்கூடும், அளக்கிறவன் நிற்கிற விடத்துக்கும், அந்த மலையின் உச்சத்திற்கும் அதற் குரிய கண்ணுடியால் முக்கோணம் திட்டமாக்கிக்கொண்டு மலையினுயர த்தைச் சொல்லக் கூடும், இந்த முக் கோண சாஸ்திரத்திற்கு அறபில் இல் முல் முதல்லாத என்று சொல்லுகி றது. ஆகாசத்தி லிருப்பவைகள் இவ் விதமே முக்கோணம் பிடித்த கண க்கைக் கொண்டு தூரமறிந்து கொள் ளலாம், இதற்காகச் சில இல்முகள் கற்றிருக்க வேண்டும். கணித சாஸ் திரம் (இல்முல்ரியாளிய்யா) இரே கா கணிதம் (இல்முல்ஹந்தஸா) அள வு சாஸ்திரம் (இல்முல்மஸாஹா) மு க்கோண சாஸ்திரம் (முதல்லாதத்து) இவைகளுடனே நல்ல தூரதிருஷ்டி க்கண்ணுடியும் வேண்டும். ஆனல் நட்சத்திரங்களின் துலே வெளிச்சம் பூமிக்கு வருகிற நேரத்தைக்கொண்டு தூரத்தை யுத்தேசிக்கப் படுகிறது. வெளிச்சம் ஒரு நொடியில் ஒரு ல க்ஷத்துத் தொண்ணூருயிரம் மைல் துலே செல்லுமென்று வான சாஸ்தி ரிகள் திட்டப்படுத்தி யிருக்கிருர்கள், இந்தக் கணக்குப்படிக்கு நானுனக் குச்சொன்ன அக்கினி நட்சத்திரத்தி லிருந்து பூமிக்கு ஒளிவருவதற்குசில வருடங்கள் செல்லும். முகியித்தீ னிபுனு அறபி றளியல்லாகு அன்கு கிரகங்கள் நட்சத்திரங்கள் அவை யவைக ளோடுகிற மண்டலத்தையும் விரைவுகளையும் வான சாஸ்திரிகள் வெகு பேணுதலாய்ச் சோதனைசெய் து திட்டமாக்கி யிருப்பதினுல் கிரா ணங்க ளுண்டாகிற காலங்களை வெ

கு காலத்திற் கேற்கனவே சொல்லக் கூடியதா யிருக்கிறதென்று சொல்லி யிருக்கிறார்களென்று சொன்னார்.

முரீது, தாங்கள் சொல்லியவைகள் எனக்கு அதிசயத்தை யுண்டாக்குகின்றன. நட்சத்திர மண்டலங்களுக்கு மேலே யென்ன விருக்கிறதென் றெனக்குச் சொல்லவேண்டுமென்று கேட்டான்.

## சொர்க்க லோகங்கள்:

செய்கு, நட்சத்திரமண்டலங்களுக்குமேல் ஏழு சொர்க்கங்களிருக்கின்றன. அவைகளின் பெயர்களாவன:— ஜன்னத்துல் அத்னன், ஜன்னத்துல் பிர்தவுஸ், ஜன்னத்துன்னயீம், ஜன்னத்துல்மஉவா, ஜன்னத்துல்குல்து, ஜன்னத்துஸ்ஸலாம், ஜன்னத்துல் மக்காமர்த்துல் வசீலத்து. ஆகிய இந்த சொர்க்கங்களின் வர்ணிப்புகளை நீ வாசித்திருப்பதா லுனக்குச் சொல்லத் தேவையில்லை. திப்ரிய்யு றகுமகுல்லாகு சொல்லுகிறார்கள் சொர்க்கலோகத்தைப் படைத்து அதற்கு அல்லாகுத்தஆலா சொர்க்கமே! நீ விஸ்தாரமாகு வென்று சொன்னான்; அது நாயனே எவ்வளவு விஸ்தாரமாக வென்றுகேட்க, ஒரு லக்ஷ வருடத்தூரம் விஸ்தார மாகு வென்று உத்தரவு பிறந்தது; உடனே அந்தப்படி விஸ்தார முண்டாயிற்று. திரும்பவும் இன்னும் விஸ்தார மாகுவென்று சொல்ல, அந்தக்கணக்காய் விஸ்தாரமாயிற்று. மூன்றாந்தரமும் அவ்விதமே கட்டளை கொடுக்கப்பட்டது; அப்பொழுது சொர்க்கம் என்னுடைய றப்பே எந்தமட்டு விஸ்தார மாகவென்று கேட்க, எனது றகுமத்துக்கொரு எல்லையும் மட்டுமில்லாததுபோலவே விஸ்தாரமாகுவென்று அல்லாகுத்தஆலாவின் ஏவலுண்டாக, அதுபோல எக்காலமும் விஸ்தாரமாகிக் கொண்டே வருகிறதென்று அந்தப் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்க ளென்று செய்கு சொன்னார்.

முரீது, சொர்க்க லோகங்களுக்கு உயர என்ன விருக்கிற தென்று கேட்டான்.

## அத்லஸ் மண்டலம்.

செய்கு, முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு நட்சத்திர மண்டலத்திற்கும், அத்லசென்கிற மண்டலத்திற்கு மிடையே யுள்ள தூரத்தை அல்லாகுத்த ஆலாதா னறிவானென்று சொல்லி யிருக்கிறார்கள். அத்லசுக்கு சித்றத்துல் முன்தஹா வென்றுஞ் சொல்லப்படும், இதுதான் படைக்கப்பட்ட படைப்புகளுக்குச் சொல்லக்கூடிய கடைசியான தலம், ஜிபுரியீல் அலைகிஸ்ஸலாம் எங்கள் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமுடனே மிகுறாஜுக்குச் சென்றபோது சித்றத்துல் முன்தஹா வரையும் போய் ஜிபுரியீல் அலைகிஸ்ஸலாம் நானிதற்குமேல் ஒரு சாண் சென்றால் எரிந்து போவேனென்று சொன்னார்கள். அப்துல்கரீமுல்ஜீலீ றளியல்லாகு அன்கு அவர்கள் சித்றத்துல் முன்தஹாவுக் கப்புறம் கல்லுகள் பொடியாகி நொருங்கி யற்று இல்லாமையாய்ப் போய் விடுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதன் கருத்து இன்சான் தன் றூகைக் கொண்டு ஹக்குத்தஆலாவின் தரிசனையை நாடிச் செல்லும் பிரயாணத்தில்,

ஹக்கென்றும்கல்கென்றுமுள்ளபிரிவு அல்லது பர்க்கு இந்தத் தலம் மட்டுக்கே. இதற்குமேல் கல்கென்கிறது அழிந்துபோகும், அந்த நாமமும் அற்றுப்போகும், ஏகமுமவனுயிருக்கும். அதற்காகத்தான் அது ஹக்குக்கே தனதான தலமென்று சொல்லப்படுகிறது, இதில் எட்டுப் பதவிகளிருக்கின்றன. முதலாவது ஹக்குத்தஆலா தன் ளாஹிறென்கிற இல்மைக்கொண்டு அப்துடைய பாத்திறுய் தஜல்லியாகுதல், இரண்டாவது ஹக்குத்தஆலா பாத்தினென்கிற இல்மைக்கொண்டு அப்துடைய ளாஹிருய் வெளியாகுதல், மூன்ருவது அல்லாவென்கிற இஸ்மைக்கொண்டு அப்துடைய றூஹாய் வெளியாகுதல், நாலாவது றப்பென்கிற சிபத்தைக்கொண்டு அப்துடைய நபுஸாய் வெளியாகுதல், ஐந்தாவது றகுமானென்கிற மறுத்தபாவைக்கொண்டு அப்துடைய அக்கிலாய் வெளியாகுதல், ஆருவது அக்குத்த ஆலா தனது (ஹ-விய்யத்து) தான் தான் என்னும் அறிவைக்கொண்டு அப்தென்கிற இஸ்மாய்த் தஜல்லியாகுதல், ஏழாவது ஹ-விய்யத்தின் மஃரிபா ஹக்கின் தஜல்லி அப்தென்கிற இஸ்மாய்,வெளியாகிஎட்டாவதுஹக்குத்த ஆலாதன்தாத்தின் அறிவைக்கொண்டுவெளியாகுதல் இந்தமக்காமில் தன் கமாலைக்கொண்டு இன்சானின் வெளி ரூபமாயும், இன்சானுடைய பாத்தினுக்குப் பாத்திறுயும், ளாஹிறுக்கு ளாஹிருயும், அவனவனென்பதற்கு அவனுயும், அவன் நானென்பதற்கு நானுயுந் தஜல்லியாகுதல். இதுவே சகலதிலும் உயர்த்தியான பதவி, இதற்குமேல் அகதிய்யத்துடைய பதவி மட்டுந்தான், அது ஹக்குக்குத் தனதானது என்று சொன்ஞர்.

முரீது, அத்லஸ் மண்டலத்துக்கு மேலென்ன விருக்கிறதென்று கேட்டான்.

செய்கு, நான் உயரவென்றும் மேலேயென்றும் சொற்களைப் பாவித்தாலும் வானம் பூமிக்கு மேலென்றும், வானத்துக்கு உயர அத்லசென்றும் நினைக்கப்படாது. உள்ளமையில் உயரவென்றும் பணியவென்றும் நாம் பூமியைக்குறித்துப்பேசும்போது பேசுகிறதேயன்றி, பூமிக்கு வெளியே போய்விட்டால் இந்தச் சொற்களைப் பாவிக்கக்கூடாது. நான் சொல்லியவைகளை யுன் மனதில் சூறத்தாகுதற்கு பூமியை ஓர் உண்டைவடிவாய் நினைத்துக்கொள், அதுதான் மண் மண்டலம், அதைச் சூழ்ந்து காற்று மண்டலம், அதைச்சூழ்ந்து தண்ணீர் மண்டலம், அதைச்சூழ்ந்து அதிர் அல்லது உஷ்ண மண்டலம் ஆகிய இவைகளையெல்லாம் வட்டமாய்ச்சுற்றி முதல் வான மிருக்கின்றது, இது போலவே ஒவ்வொரு வானமும் வட்டமாய்ச் சுற்றியிருக்கிறது, அவைகளை நட்சத்திர மண்டலஞ் சுற்றியும், அவைகளை அத்லசென்கிற மண்டலஞ்சுற்றியு மிருக்கின்றன, இவைகளெல்லாம் குர்சிக்கு ளமைந்திருக்கின்றன.

## குர்சி.

குர்சியாவது நாற் சவுக்கமுடையது, அதற்குள்ளே மேற்சொல்லியவைகளெல்லா மடங்கியிருக்கின்றன. இது சியனுடைய சிபாத்துகள் வெளியான தலமாயிருக்கும், எவல் விலகல் பிரயோசனமானது நஷ்டமான துண்டாகிறதும் அழிகிறதும், இது

போலொன்றுக் கொன்று மாற்றமானவைகள் பிரிவாகிறதும் இதில் நின்றுமே. அதற்காகத்தான் அல்லாகுத்தஆலா தன் பாதங்களை வைத்தானென்று சொல்லியது. குருசி அர்சுக்குளொரு மோதிரம்போ லிருக்கின்றது, இதில் கணக்கில்லாத மலாயிக்கத்துக ளிருக்கிறார்கள், நான் உனக்கு அறுசைப்பற்றி முன் சொல்லியிருக்கிறேன், அதுவும் நாற்சவுக்கமுடையது, நான் சொல்லியவைகள் யாவும் இதற்குளடங்கியிருக்கின்றன.

## கிரகங்களா லுண்டாகிற இராகம்.

முரீது, கிரகங்களின் சுற்றைக்கொண்டு இராகங்களுண்டாகின்றன வென்று சொல்வது நிசமாவென்று கேட்டான்.

செய்கு, நிசம்தான். முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு அவர்கள் புத்தூஹாத்துல் மக்கிய்யாவிலும், மவுலானா அஹ்மதிபுனு அப்துல்லா றகுமகுல்லாகு இஃவானுஸ்ஸபாவிலுஞ் சொல்லியிருக்கிறார்கள். முற்காலங்களிலிருந்த ஞானிகளும் அதுபோலவே சொல்லி யிருக்கிறார்கள். ஏழு கிரகங்களும் அவைகளின் மண்டலங்களில் சுற்றும்போது புதுமைப்படத்தக்க மனிதர் புத்திக்கு இவ்விதமென்று எண்ணக்கூடாத இராகமும் சங்கீதமு முண்டாகும். இந்த அமிர்தமான வாத்தியங்களின் இன்பத்தினால் வானலோகங்களிலுள்ள மலாயிக்கத்துகள் பரிபூரண வோயாத ஆனந்தம் கொண்டாடுகிறவர்களாய் அல்லாகுத்த ஆலாவை தஸ்பீகு செய்துகொண் டிருப்பார்கள். இந்த இராகம் மலாயிக்கத்துகளுக்கு ஆகாரமாயிருக்கும். இந்த இராகம் பூமியிலுள்ளவர்களுக்கு தூலயினால் கேளாது. ஆகிலும் இந்த ஏழு கிரகங்களைக் கொண்டுண்டாகிற இராகத்தினாலேயே பூமியிலும் இராக முண்டாயிருக்கின்றது. இராகங்களெல்லாம் எந்தப்பாஷையில் பாடினாலும், எந்தப்பட்சிகள் கூவினாலும், எந்த வாத்தியங்களை வாசித்தாலும் ஏழு சுரங்களுக்கு அடங்கி யிருக்கின்றன. ( ச. ரி. க. ம. ப. த. நி. ) என்கிற சுரங்களன்றி வேறில்லை. ஐரோப்பியர்களிடத்திலும், சீனரிடத்தும், காப்பிலிகளிடத்தும் இந்த ஏழு சுரங்களல்லாது வேறில்லை. இந்த ஏழுக்குமேல் உச்சமானால் அதிலிருந்து திரும்பவும் சரிகமபதனி யென்றே சுரம் தொடங்கும். சத்தம் உச்சமானாலும் சுரம் அதுபோலவே யிருக்கும். இந்த ஏழு சுரங்கள் அந்த ஏழு கிரகத்தா லுண்டாகின்றன. இவைகளுண்டாகிற விதங்களைப் பெரியோர்கள் கித்தாபுகளில் விவரித்துக் காட்டியிருக்கிறார்களென்று செய்கு சொன்னார்.

முரீது, தாங்களிட மொருகேள்வி கேட்கப்போகிறேன், தாங்கள் அதற்காக மன்னித்து எனக்கு மறுமொழி சொல்ல மன்றாடுகிறேன். தாங்களென்னிடம் தாவரவஸ்துகளுக்கு ஏழு தத்துவங்களிருக்கின்றனவென்று சொல்லி, அவைகளை விவரித்துக் காட்டினீர்கள். நானதை ஒரு ஆலிம்சாகிபவர்களிடஞ் சொன்னவேளையில் தாங்கள் மறதியாகச் சொல்லியிருக்கவேண்டும். அந்தத் தத்துவங்கள் பிராணிகளுக் குடையவைகளல்லாமல், தாவரவஸ்துகளுக்கில்லையென்று சொன்னார்கள். தாங்கள் சொல்லி

யது சரியோ அல்லது தவருேவென் பதை யெனக்குத் தெரியச் சொல்ல வேண்டுமென்று கேட்டான்.

செய்கு, நீ இதை என்னிடஞ்சொன்னது எனக்கு மிகவுஞ் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. நான் சொல்லியது சரியென்று ரூபித்துக் காட்டுதற்கு இடங்கிடைத்ததற்காக அந்த ஆலிம்சாகிபுக்கு நான் நன்றியுள்ளவஞ யிருக்கவேண்டும். கித்தாபுகளில் இந்த ஏழு தத்துவங்களும் பிராணிகளுக் கிருக்கின்றன வென்று சொல்லியிருப்பதால் அவைகள் பிராணிகளுக்குத் தனதென்றும், தாவரவஸ்துகளுக்கில்லை யென்றும் நினைத்து, அவர்களவ்விதஞ் சொல்லியிருப்பதாக நினைக்கிறேன். ஆனல் இந்த ஏழு தத்துவங்களும் தாவரவஸ்துகளுக்கு மிருக்கின்றனவென்று பல கித்தாபுகளிலுஞ் சொல்லி யிருக்கின்றது. இமாம் மஸ்கவி றகுமதுல்லாகு அவர்களுடைய தஃதீபுல் அஃலாக்கு என்கிற கித்தாபில் நான் சொல்லியபடியே சொல்லியிருக்கிறது. இஃவானுஸ்ஸபா வென்கிற கித்தாபில் தாவரவஸ்துகளுக்கு இந்த ஏழு தத்துவங்களுமல்லாமல் சந்தோஷம், பூரிப்பு ஆகிய குணங்களு மிருக்கின்றனவாகவுஞ்சொல்லியிருக்கின்றது. ஒருவர் சொல்லுவதை யல்லது ஒரு கித்தாபி லெழுதியிருப்பதைச் சரியல்லவென்று சொல்லுமுன் அப்படி மறுக்கப்போகிற பேச்சு குறுவானிலுள்ள சுன்னத்து ஜமாஅத்துகளேற்றுக் கொள்ளப்பட்ட இஜ்மாஆன விளக்கத்துக்கு மாறுயிருக்கின்றதா? அல்லது சஹீஹான ஹதீதுகளுக்கு விரோதிக்கின்றதா வென்று விளங்கி அப்படி விரோதித்தால் மறுத்துப் பேசுவது நியாயந்தான். அப்படியன்றி மறுக்கப்போகிற பேச்சு இல்முல்கலாம், இல்முத்தபீயத்து, இல்முந்நுஜூம் முதலிய இல்முகளைச் சேர்ந்த பேச்சாயிருந்தால் இந்த இல்முகள் காலத்திற்குக் காலம் வித்தியாசப்பட்டும் தேர்ச்சியடைந்தும் வருவதை மனத்திலிருத்திக் கொள்ளவேண்டும். முற்காலங்களி லெழுதப்பட்ட கித்தாபுகளைப் பார்த்துவிட்டு அவைகளைப் பிற்காலத்தில் தவறென் றெழுதியிருக்கிற கித்தாபுகளைப் பாராமல் தர்க்கங்களிற் பிரவேசிக்காமல் பேணிக்கொள்ள வேண்டும். இந்த இல்முகளெல்லாம் புத்திமான்களுடைய புத்தியைக்கொண்டும், சோதனைகளைக்கொண்டுங் கோர்வைசெய்திருப்பதால் அவைகள் நமது புத்திக்கும் சோதனைக்கும் சரியாயிருக்கின்றனவாவென்று விளங்கி அதின் பின் அவைகளை யாதாரமா யெடுத்துப் பேசவேண்டும். அநேகர் இவைகளொன்றையுங் கவனிக்காமல் அறபுப் பாஷையில் எழுதிய கித்தாபுகளி லொன்றிலிருந்தால் அதைப் பிடித்துக்கொண்டு கச்சை கட்டிபோருக்கு முன்வந்து விடுகிருர்கள். எத்தனையோ அறபுக்கித்தாபுகளிருக்கின்றன. அவைகளி லெழுதியிருக்கின்ற மூடத்தனமான பேச்சுகளையும் பொய்களையும் பார்க்கும்போது வெட்கமுண்டாகின்றது. இவைகளைக் கவனிக்காமல் எத்தனையோ மனிதர்கள் வீண் தர்க்கங்களிற் றலையிட்டு காலத்தை வீணுக்கிருர்கள். நான் இப்போது சொல்லியவைகள் அந்த ஆலிம்சாகிபு சொல்லிய தர்க்கத்தைக் குறித்தல்ல, அந்த ஆலிம்சாகிபோ நான் மிகவும் கனமாய்க் கொண்டாடப்பட்டவர்கள், எனக்கு மிகவும் இஷ்டமான நேசர், அவர்களின் நேசம் எனக்கோர் பாக்கியமாயிருக்கின்

றது. ஆனால் மறுபெயர்கள் தற்கங்களிற் பிரவேசிக்குமுன் யோசித்துக்கொள்ள வேண்டிய காரியங்களையுனக்கறிவித்தேன்.

மார்க்க விஷயங்களைக் குறித்தல்லாத மற்ற இல்முகளைப்பற்றி இந்த ஊர்களில் முற்காலத்தில் அறபுப்பாஷையி லெழுதப்பட்டிருக்கிற இல்முகளையே இப்பொழுதும் மதுரஸாக்களில் கற்றுக் கொடுக்கின்றார்கள். (மந்திக்கு) தற்க சாஸ்திரத்துடைய இல்மு யூனானிகளிலிருந்து அறபிகளெடுத்து அதைத் தேர்ச்சிசெய்து வந்தார்கள். ஆகிலும் ஐரோப்பியர்கள் அறபிகளிலிருந்து கற்று, பின்பு அவைகளிலுள்ள தவறுகளைக்காட்டித் திருத்தி இப்பொழுது முன் அறபிகளிலிருந்த மந்திருடைய இல்முக்கும் ஐரோப்பியர்களுடைய மந்திகுக்கும் வெகு வித்தியாசங்க ளிருக்கின்றன. இதுபோலவே இல்முல்கலாம், இல்முத்தபீஆ, இல்முல்பலக்கு, இல்முல்ஹிக்கம் முதலியவைக ளெல்லாம் தேர்ச்சியடைந்திருக்கின்றன. மதுறஸாக்களை நடத்துகிறவர்களும் உலமாக்களும் இவைகளைக் கவனிக்க வேண்டும். மிஸ்று துருக்கி முதலிய தேசங்களிலுள்ள மதுறஸாக்களில் புதிதாகக் கற்றுக்கொடுக்கப்படுகிற கித்தாபுகளை வரவழைத்து கற்றுக்கொடுக்கவேண்டும்.

நான் தாவரவஸ்துகளுக்கு இந்த ஏழு தத்துவங்களு மிருக்கின்றனவென்பதை உன் புத்தி ஏற்றுக்கொள்ளும்படி நியாயங் காட்டுகிறேன். முதலாவது (ஜாதிபா) வெளியேயுள்ள உணவுகளை யுள்ளே இழுத்தெடுக்கும் தத்துவம். இந்தத் தத்துவமில்லாதுபோனல் எவ்விதம் வெளியேயுள்ள பல ஆகாரமான பதார்த்தங்கள் மரத்திற்குச் செல்லும். இரண்டாவது இவ்விதம் மரத்திலவைகள் சென்றபின் அவைகளைப் பற்றிப்பிடித்துக்கொள்ளாது போனல் மரத்தில் நிற்காது கீழே வந்துவிடும். அவ்விதம் பற்றிப்பிடித்துக் கொள்ளுந் தத்துவத்திற்கு (மாஸிக்கா) வென்று சொல்லப்படும். மூன்றாவது அந்த ஆகாரங்கள் ஜீரணமாகாதுபோனல் மரத்திற்கு அவைகள் உபயோகமாக மாட்டா. அதனால் (ஹாளிமா) வெங்கிற ஜீரணிக்குந் தத்துவமிருக்கின்றது. நாலாவது ஜீரணித்தபின் பல உறுப்புகளுக்கும் கூறுக்கிப்பிரிக்குந் தத்துவ மிருக்கவேண்டும், அதற்கு (முமய்யிஸா) வென்று சொல்லப்படும். ஐந்தாவது அவைகளைக் கூறுக்கிப்பிரித்தபின் கொப்பாகவும் காயாகவும், இலையாகவும் ரூபமாக்குந் தத்துவத்திற்கு (முஸவ்விரு) யென்று சொல்லப்படும். ஆறுவது (தாபிஆ) தேவை யற்றவைகளை வெளியே தள்ளுந் தத்துவம். மரத்தின் ஒவ்வொரு இலையும் அதற்கு நுரையீரலைப்போ லிருக்கின்றது. காற்றை யுறுஞ்சி சில பங்கை யுபயோகப்படுத்தி தீதான ஆவியை வெளியே தள்ளும். ஏழாவது பலுகச்செய்யுந் தத்துவம் விதைகளைக்கொண்டு வேறு மரங்களுண்டாவதற்கு (முவல்லிதா) என்று சொல்லப்படும். இந்தத் தத்துவங்கள் ஹைவானுக்கு மிருக்கின்றனவென்று செய்கு சொன்னர்.

## தவ்ஹீது.

---

செய்கு, எனது கிருபையான மகனே! லாயிலாஹ இல்லல்லாகூ வென்கிற திக்றை மொழிவதை நாலு மறுத்தபாக்களாகப் பேசலாம். அந்த

நாலேயும் ஒரு கனிக்குரிய மேல்தோ லுக்கும் உள்தோலுக்கும் விதைக்கு ம் உள் விதைக்கும் ஒப்புச் சொல் லலாம்.

முதலாம் மறுத்தபாவாகிறது மனி தன் நாவினல் லாயிலாஹ இல்லல் லாவென்று மொழிகிறது, அவனுடை ய கல்போ வேறு பராக்கிலிருக்கும், அல்லது அதை விசுவாசங்கொள்ளா திருக்கும். இப்படிச் சொல்லுகிறவ ர்கள் துன்யாவின் வாளேவிட்டும் நாவைவிட்டும் கார்மானம் பெறறு க்கொள்வார்கள், வேறு புரோசனங் கிடையாது. இது அந்தக் கனியின் வெளித் தோலேப்போல் கனியைக் கார்மானஞ் செய்யும் வேறு புரோச னஞ் செய்யாது. இரண்டாம் மறு த்தபாவாவது அந்த திக்றைச் சொ ல்லுகிறவர்கள் அச்சொற்களே விள ங்கி உறுதிகொண்டு சொல்லுதல், அவர்களுடைய விசுவாசம் வணக்க த்திற்குத் தகுதியான நாயன் வேறி ல்லே அல்லாவையன்றி என்பதுவே. இவர்கள் அல்லாகுத்தாலாவை றப் பென்கிற இஸ்மைக்கொண்டு வண ங்குவார்கள். அல்லாகுத்தாலா நம் மைப் படைத்தவன், நம்மை ஆதரி க்கிறவன், நமக்கு நிஉமத்தைத் தரு கிறவன், அதாபு செய்கிறவன் முத லிய தத்துவங்களேக்கொண்டு அவ னே யுறுதிகொண்டு அவனெருவன், அவனுக்கு இணே துணேயில்லே யெ ன்று தவ்ஹீது செய்வார்கள், இதற் கு வெளியிரங்கமான தவ்ஹீதென் று சொல்லப்படும். ஒரு தேசத்திற் கு இரண்டு இராஜர்களிருந்தால் அந் த இராஜாங்கம் நிலேக்காதென்னுங் கருத்தைப்போல் நாயன் ஒருவனு க் கதிகமிருக்கக் கூடாதென்ற யுறு தி கொண்டவர்களா யிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் அந்த உறுதி யுடன் மவுத்தானுல் ஆகிறத்தின் அ தாபுகளேவிட்டும் சலாமத்துப் பெற் றவர்களா யிருப்பார்கள். ஆகிலும் அவர்கள் உறுதியைக்கொண்டு கல் பு மலராது, இன்னுஞ் சில வேளே பெலக்குறைவாகிறதும் பித்அத்தெ ன்கிற நூதனமான கருத்துகள் நு ழைகிறதுமுண்டு. அவர்கள் கல்பி லுறுதி யுண்டாவதற்கும் அந்த பித் அத்துகளே நீக்குதற்கும் இல்முல்க லாம் அல்லது தத்துவஞானம் உப யோகமாயிருக்கும், அந்த ஞான மறி ந்தவர்களுக்கு முத்தகல்லிமீன்களெ ன்று சொல்லப்படும். ஆனல் இவர் களின் இல்மு புத்தியின் எல்லேக்கு மட்டுந்தானிருக்கும், கஷ்பைக்கொ ண்டுள்ளவைகளல்ல, இந்த மறுத் தபா உள்தோலுக் கொப்பாயிருக்கு ம். இது அந்த விதையை யடுத்திரு ப்பதால் அதைக் காப்பாற்றுதற்கு மிகவும் புரோசன முடையதாயிருக் கும். மூன்ருவது மறுத்தபாவாவது லாபாயில இல்லல்லா வென்கிற தி க்றில் தரிபட்டவனுய் நிலேத்துச்செ ய்கிறவன் வேறில்லே அவனே யென் றுறுதி கொண்டவர்களா யிருத்தல். இவர்கள் விதையின் மேல்பாகம் போலா யிருக்கும், இவர்களின் தவ் ஹீது உள்ளமையான தவ்ஹீது, இந் த மறுத்தபாவுக்குத் தான் தவக்கல், ரிளா, ஹுப்பு, இஷ்கு ஆகிய மக்கா ம்கள் சேர்ந்தவைகளாயிருக்கும். இ ந்த மக்காமுக் குடையவர்களுக்கு மு கர்றபீன்களென்று சொல்லப்படும். நாலாவது மறுத்தபாவைச் சேர்ந்த வர்கள் அல்லா அல்லாமல் வேருெ ன்றுங் காணுர்கள், பலதாயிருப்பவை களெல்லாவற்றையும் ஒன்ருய்க் கா ண்பார்கள், நிரப்பமான தவ்ஹீதை யுடையவர்கள், பனவுடைய மக்கா மைச் சேர்ந்தவர்கள், இவர்களுக்கு

முஹக்கிகீன்கள் என்று சொல்லப்படு
ம். இவர்கள் எண்ணை யுண்டாயிருக்
கிறஉள்விதைக் கொப்பா யிருக்கு
மென்று செய்கு சொன்னார்.

முரீது, தாங்கள் தவக்கல் மூன்
ரும் மறுத்தபாவுக் குரியது என்று
சொன்னீர்களே அதை எனக்கு வி
ளங்கச் செய்யவேண்டுமென்று சொ
ன்னான்.

செய்கு: தவக்கலென்கிற சொல்லி
ன்பொருள் ஒருவன் தனக்கு முக்கி
யமான கருமங்களை நம்பிக்கை யுடை
யவனுக்கு வக்கீலாகப் பொறுப்புச்
சாட்டுதல். இதற்கு ஒரு உதாரண
ம், ஒருவனுடைய உயிரைப்பற்றிய
அல்லது பொருளைப்பற்றிய ஒரு வி
யாச்சியம் நியாயஸ்தலத்தி லுண்டா
னால் அந்த வியாச்சியத்தை நடத்து
தற்குத் தக்க கல்வியும் யூகமும் சா
மார்த்தியமுமுடைய ஒரு வக்கிலைத்
தெரிந்து சகலத்தையும் அவனுக்
கொப்புவித்து மனக்கலக்கமில்லாது
நம்பிக்கையா யிருப்பதுபோல் நமக்
குரியவைகளெல்லாம் அல்லாகுத்தா
லாவுக்குப் பொறுப்புச்சாட்டி மனக்
கலக்கமில்லாதிருப்பதற்கு அல்லாகுத்
தாலாவை உறுதியாக ஈமான்கொண்
டவனாகவும், பூரண அறிவும் தத்துவ
மும் கிருபைய முடையவனென்று ய
க்கீன் கொண்டவனாகவு மிருக்கவே
ண்டும். இதற்குத்தான் தவக்கலெ
ன்று சொல்லுகிறது. ஆகிலும் தவ
க்கலுக்கு மூன்று பதவிகளிருக்கின்
றன. முதலாவது நமது காரியங்க
ளைத் தகுதியானவனைத் தெரிந்து
பொறுப்புச் சாட்டுதல்போலா யிருக்
கும், இரண்டாவது குழந்தை தா
யோடிருக்கிற ஹால் போலாயிருக்
கும், அதற்கு வேறொருவரையுந்
தெரியாது, எவ்வேளையும் முகமும்
கல்பும் கண்ணும் தாயின் புறமே
யிருக்கும், தாயை ஆவிக் கட்டிக்
கொள்வதும் பிடவையைப் பற்றிப்
பிடித்துக்கொள்வதும் வருகிற சத்த
மெல்லாம் உம்மாவென்றும் அம்மா
வென்று மல்லாமல் வேறொன்றுமி
ல்லா திருப்பதுபோலவே அல்லாகு
த்தாலாவின் பேரில் தவக்கல் வைக்
கிறது. மூன்றாவது மையித்து குழிப்
பாட்டுகிறவனுக்கு இடங்கொடுத்திரு
ப்பதுபோலவே தனக்கு ஒரு அறிவும்
ஒரு தத்துவமும் நாட்டமுமில்லாதவ
னாய்ச் சகல இல்மும் தத்துவமும்
நாட்டமுஞ்செயலும்அல்லாவுக்கே எ
ன்ற தன்மையாய்த் தன்னைத்தானும்
தனக்குத் தெரியாதவனாயிருப்பான்.
நான் சொல்லிய முதலாம் மக்காமி
லுள்ளவர்களுக்கு துஆயிருக்கும், ஆ
னால் கேட்பதெல்லாம் அல்லாவிடம
ல்லாது பிறரிடம் கேட்க மாட்டார்க
ள், யார்கொடுத்தாலும் அல்லாகொடு
த்ததாக நினைப்பார்கள், இரண்டாம்
மக்காமில் குழந்தைகள் அழுது சத்
தமிட்டுப் பால் கேட்பதுமுண்டு, தா
யைத் தாவிக்கட்டித் தூக்கும்படி
செய்விக்கிறதுமுண்டு, தாய் பிள்ளை
பால் கேளாது போனாலும் எடுத்துப்
பால் கொடுப்பதுமுண்டு, அதுபோல்
அல்லாகுத்தாலாவிடம் துஆக் கேட்
பது மிருக்கும், அவனைக் கேளாமல்
அவனாக தன் கிருபையால் கொடு
ப்பது மிருக்கும். மூன்றாம் மக்கா
மில் துஆவுங் கிடையாது, சுவாலுங்
கிடையாது, இன்னும் முந்தின மக்
காமிலுள்ளவர்கள் நாமொரு வக்கிலை
நியமித் தேற்படுத்தி அவனுக்கு நமது
காரியங்களை யொப்புவித்திருந்தாலு
ம், அவன் நாம் செய்யவேண்டியது
இன்னதென்று சொன்னால் நாமத
ற்கு மாறு செய்யாததுபோலவே அ
ல்லாகுத்தாலாவில் இந்த மக்காமி

ளுள்ளவர்கள் தவக்கல் வைத்திருந் தாலும் அவனின் கட்டளையாகிய மார்க்கச் சட்டங்களுக்கும், நல்லவ ழுக்கங்களுக்கும் விரோதிக்காது நட ப்பார்கள். இரண்டாவது மறுத்த பா நாமவளில் சகலதையும் பொறு ப்பாக்கி வைத்தாலும் அவனை முடு கத்தேடுவதும், அவன் செய்வதற்கு ப்பொருந்துவதும், அவனின் சித்த ப்படிக்கு நடக்கவிரும்புவது மிருக் கும். மூன்றும் மக்காமில் மயக்கம் கொண்டு அறிவற்றவனின் தன்மை யாயிருந்தாலும் தன் செயலெல்லா ம் அவனின் செயலாகவும், தன் நா ட்டமெல்லாம் அவன் நாட்டமாக வுங் காண்பான், அவன் நாட்டமா கவும் அவன் செயலாகவு மிருந்தா லும் அவனோடு சேருதற்கு அவனு டைய சித்தப்படிக்கு நடக்கிற சட் டங்களுக் கிணங்கி நடக்கிறவனா யி ருப்பானென்று செய்கு சொன்னார்.

முரீது, தாங்கள் சொல்லியவைக ளெல்லாம் என் கருத்திலமைத்துக் கொண்டேன், ஆகிலும் நமக்கு ஒரு காரியத்தைச் செய்யவும் செய்யாதி ருக்கவுங் கூடிய தத்துவ மிருக்கின் றதென்று விளங்கின்றதே அப்படி யிருக்க, சகலமும் அல்லாகுத்தாலா தான் செய்கிறானென்று திட்டப் படுத்துவ தெவ்விதமென்று கேட் டான்.

செய்கு, றப்பை றப்பைக்கொண் டறியக்கூடும், கல்கைக்கொண்டும் றப்பை யறியக்கூடும். நீ அதோ வி ருக்கின்றதே ஆலாவிருட்சத்தி னிட த்தேபோய் அதனிடம் தவ்ஹீது டைய இல்மைப்பற்றிக்கேள், அது உனக்குச்சொல்லும் உபதேசங்களை யெல்லாங் கேட்டுக்கொண்டு என்னி டம் வாவென்று சொன்னார்.

## முரீதுக்கும் விருட்சத்திற் கும் தவ்ஹீதைப் பற்றிய சம்பாஷணை

முரீது, அந்த விருக்ஷத்தை நெரு ங்கி சிறப்பையும் அழகையுமுடைய விருக்ஷமே! உனக்கு சலாமென்று சொன்னான்.

விருக்ஷம், சலாத்திற்கு மறுமொ ழிசொல்லி மனிதனே நீ என்னிட ம் வந்த நோக்கமென்ன சொல்லெ ன்று கேட்டது.

முரீது, தங்களிடம் தவ்ஹீதுடை ய இல்மைக் கற்றுக்கொள்ள வந்திரு க்கிறேன், தாங்கள் கிருபைகூர்ந்து எனக்குச் சொல்லவேண்டு மென்று சொன்னான்.

விருக்ஷம், மனிதனே கேள்; ஆத முடைய மக்களெல்லாம் அநியாய காரர்கள், நன்றியற்றவர்கள், எனது நிழலிலிருந்து சௌக்கியம் பெறும் வேளையிலே என்னைவெட்டி நாச மாக்க யோசிப்பீர்கள், உங்கள் பார் வை விழுந்தவைகளெல்லாம் பாழ், காட்டிலுள்ள எந்த நல்ல மரம் உங் கள் ஆவலுக் கிரையாகா திருக்கும், எந்த மிருகத்தை நீங்கள் ருசிபார்க்கா து விட்டு விடுகிறீர்கள், சமுத்திரத்தி லிருக்கிற எந்த மீன் உங்கள் வயிற் றுக்குத் தப்பும், நீங்கள் துன்யாவில் அல்லாகுத்தாலாவுடைய கலீபாவெ ன பெருமை பேசுகிறீர்கள் அது நிச ந்தான், அவனின் கலீபாவாயிருப் பதற்கு அவனின் திவ்விய குணங்க ளிருக்கவேண்டுமே, அவனின் பரி பூரண தயாபரம் கல்குகள் சகலதி லும் பூரணமாயிருக்கின்றதே, உங் களில் அக்குண மிருக்கின்றதா? நீங்

கள் உங்களுக்குக் கீழான படைப்புக
ளுக்குச் சத்துருவாயும், ஒருவருக்
கொருவர் பகைவர்களாயும், அல்
லாகுத்தாலாவுக்குத் தானும் விரோ
திகளாயு மிருக்கிறீர்கள். இப்படியி
ருக்க உங்களுக்கென்ன உயர்த்தி
யான பதவியிருக்கிறது? உங்களைக்
கீழான மிருகங்களுக்காவது ஒப்பி
டலாமா? மாடு அதின் சுபாவகுணப்
படிக்கு நடக்கின்றது அதற் கிணங்கி
ய தீனைத் தின்னுகிறது, பலுகிறதற்
குக் கொடுக்கப்பட்டிருக்கிற தத்து
வத்தை நிறைவேற்றுகிறது, புலி மா
மிசத்தைத் தின்று சீவிக்கும்படி ப
டைக்கப்பட்டிருப்பதால் அதின் சீவி
யத்திற்காக மறுமிருகங்களைப் புசிக்
கிறது, நீயோ உயர்த்தியான படை
ப்பாகவும், உயர்த்தியான குணங்க
ள் தந்தருளப் பட்டவனாகவு மிருந்து
இந்த மிருங்களைப்போல உனது ந
ஜீசுவரும் உறுப்புக்கும், தீன் ஜீரண
மாகும் குடலுக்குமே அடிமையாகிப்
போயிருக்கிறாய், உன் குணம் இந்த
மட்டிலிருந்தால் மிருகங்களுக்கு ஒ
ப்பிடலாம், மிருகங்கள் பசியுண்டா
னால் தீனைத்தின்னும், இச்சையுண்
டானா லதைத் தீர்த்துக் கொள்ளும்,
நாளைக்கு வேண்டுமென்று நினையாது
மனரம்மியமாய் அல்லாகுத்தாலாவை
ச் சுக்றுசெய்துக்கொண் டிருக்கும்,
உனது ஆவலுக்கோ மட்டில்லை, உ
னக் கெவ்வளவிருந்தாலும் அதிகமா
கச் சேர்த்துக் குவித்து வைக்கவே
ண்டுமென்ற ஆவல் கொள்வாய், பசி
குறைந்தால் பசி அதிகமாக்கத் தே
ண்டிப்பாய், மோகங் குறைந்தால்
அதிகமாக்க மருந்துதின்பாய், மிரு
கங்கள் சுபாவப்படி மோகத்தைத்
தீர்த்துக் கொள்ளும், உங்களிலோ
சுபாவத்திற்குமாறாய்த் தீர்த்துக்கொ
ள்பவர்களு மிருக்கிறார்கள், இவ்வித
ம் மிருகங்களிலுங் கீழாய் நடப்பதி
னாலேயே உங்களைக் கீழ்மையிலும்
அதிகக் கீழ்மையா யிருக்கிறீர்களெ
ன்று அல்லாகுத்தாலா சொல்லியி
ருக்கிறான், உங்களை எவ்வளவோ
உயர்த்தியாய்ப் படைத்தான், உங்க
ளை யொரு சிறு அலமாய்ப் படைத்
தான், அவனை விசுவாசித்தவர்களி
ன் கல்பை அவனின் அறுஷாக்கினா
ன், எவ்வளவோ தத்துவங்களைத் தந்
திருக்கிறான், அவைகளைக் கொண்டு
உயர்ந்த பதவிகளைப் பெறும்வழிக
ளைத் தூதர்களை யனுப்பி யறிவித்தி
ருக்கிறான், இவைகளையெல்லாம் த
ள்ளிவிட்டு நபுசானிய்யா வென்கிற
நஜீசில் புரண்டு புரண்டிருக்கிற நீசர்
களுக்கு என்ன உபதேசம், அளவற்
ற நிஉமத்தைத் தந்தருளிய றகுமா
னுக்கு மாறுசெய்கிறவர்களாகவும்,
உலகத்திலுள்ள மற்றப் படைப்புக
ளுக்கெல்லாம் லஉனத்தாகவுந் தோ
ன்றி யிருப்பவர்களுக்கு என்ன ஞா
னம், இந்த விடத்தைவிட் டகன்று
விடு என்று விருக்ஷம் சொல்லிற்று.

முரீது, அறிவின் தாகமாய் தங்க
ளிடம் நான்வர, என் பெயரில் இ
வ்வளவு கோபமாய்ப் பேசுவது நியா
யமா வென்று சொன்னான்.

விருக்ஷம், கோபம் குரோதம் வை
ராக்கியமாகிய துற்குணங்களெல்லா
ம் மனுக்களுக்குச் சொந்தமாயிருப்
பதேயன்றி எங்களுக்குக் கிடையாது.
எங்களை வெட்டித் தறித்துப் பிளந்
தெரிந்து ரூபத்தை மாற்றினவர்களு
க்குத் தானும் நாங்கள் உபகாரஞ்செ
ய்கிறவர்களா யிருக்கிறோம், வீடுகள்
கட்டிக்கொள்ளவும், சாமான்கள் செ
ய்துக்கொள்ளவும் உபயோகப் படுகி
றோம். தவ்ஹீதுடைய இல்மை நா
டுகிறவன் எங்களைப்போல் தருமசி

ர்மையும் தயாளகுணமும் உடைய
வராயிருக்க வேண்டும். பார்! என்
னிலுண்டாகிற கனிகளை என்னிட
த்தே வருபவர்களுக் கெல்லாம் சொ
ரிக்கிறேன், எத்தனையோ பட்சிகள்
எத்தனையோ பிராணிகள் அவைக
ளைத்தின்று ஜீவிக்கச் செய்கிறேன்,
எனது ஒவ்வொரு இலையிலும் எத்த
னையோ பிராணிகளிருந்து தின்று
வாழ்ந்துகொண் டிருக்க இடங்கொ
டுத்திருக்கிறேன், உயிரோடிருக்கை
யில் செய்யுந் தருமம்போலவே இற
ந்து போனாலும் எங்கள் கட்டைகளை
ப்பற்பல சாமான்களாகவும் விறகா
கவும் பிரயோசனமாகச் செய்கிறோ
ம், உங்களில் இந்த நற்குணங்களி
ருக்கின்றனவா? எவ்வளவு பொரு
ளிருந்தாலும் இல்லாமல் வருந்தும்
ஏழைகளுக்குக் கொடுத்துதவ உங்க
ள் மன மிடங்கொடாது, கொடுத்தா
லும் பெருமையை நாடிக்கொடுப்பீர்
கள். இப்படிப்பட்ட உலோபிகளுக்
குத் தவ்ஹீதுடைய பதவி எவ்வித
முண்டாகப் போகிறது. இன்னும்
உங்களின் பெருமைக் கென்னசொ
ல்வேன், பெலத்தின் பெருமையை
க்காட்டுகிறீர்கள், கரையி லெத்தனை
யோ படைப்புகள் கடலி லெத்தனை
யோ படைப்புகள் உங்களிலும் அதி
க பராக்கிரம முடையவைக ளிருக்கி
ன்றனவென்று நினைக்கிறீர்களில்லை,
உங்களுக்குக் குளிர்ந்த காற்றுப் பட்
டால் நோயுண்டாகிவிடும், ஒரு ஈ
அல்லது எறும்பு காதினுள் அல்ல
து நாசியினுள் புகுந்தால் உயிர்போ
ய்விடும், ஒரு ஊசி நுனி குற்றினால்
மரணமுண்டாகிவிடும், இப்படிப்பட்
ட பெலவீன சரீரத்தை யுடையவர்
களாயிருந்து பராக்கிரமமுடையவர்
களென்று அகங்காரங் கொள்ளுகிறீ
ர்கள், பணத்தின் பெருமையைக்
காட்டுகிறீர்கள், உங்கள் நாலு அங்
குலமுள்ள வயிற்றிற்கு உழைப்பதற்
கு உங்கள் காலம் முழுவதும் போ
க்குகிறீர்கள். என்னைப்பார்! உங்க
ளில் ஆயிரம் பெயர்களை யொன்று
ய்ச் சேர்த்தாலும் எனது பருப்பத்தி
ற்கு நெருங்காத மஹா பருப்பத்தை
யுடைய நான் படைத்த படைப்பு
களுக்கு இரணங் கொடுப்பானென்
று தவக்கல் வைத்தவனாய் அசையா
து நிற்க, றுஸிக்காகிய நாயன் என
து இரணத்தை நானூறு வருடமாக
த் தந்தருளி வருவதைப்பார்! இன்
னும் நீங்கள் வமிஷப்பெருமையும்
பேசிக் கொள்ளுகிறீர்கள், இந்தப்
பெருமை பேசுகிறவர்களே உங்கள்
தந்தையர்கள் ஹறாமாய்ச் சம்பாதித்
த ஹறாமான நீன் இரத்தமாகி நுத்
பாவாய்ச் சமைந்து நீங்க ளுற்பத்தி
யானவர்க ளல்லவென்று சொல்லுவீ
ர்களா? நஜீஸ்வருந் துவாரத்தால் இ
ன்னுமொரு நஜீசுவருந் துவாரத்தி
ற்குட்சென்று அசுத்த இரத்தங்களா
ற் சமைந்து திரும்பவும் நஜீஸ்வருந்
துவாரத்தால் வெளியான நீசர்க
ளே! நீங்களா வமிசப் பெருமை பே
சக்கூடியவர்கள்? எனது பிதா ஒரு
ஆற்றின் கரையில் முளைத்துப் பூமியி
லிருந்து துப்புரவான ஆகாரங்களை
யருந்தித் தன் இலைகளால் காற்றின்
வாயுகளைக் குடித்துச் சமைந்த வி
தையி லுற்பத்தியான துப்புரவையு
டைய நான் தானும் குலத்தின் பெ
ருமை பேசவில்லையே, தகப்பனின்
நீரில்வரும் புழுக்களுக்கும் உங்களு
க்குமென்ன வித்தியாசம்? அருவரு
க்கத்தக்க மலஞ் சலங்களைச் சுமந்து
ஒரு மென்மையான தோலால் மூடி
க்கொண்டிருக்கிற துப்புரவற்றவர்க
ளுக்கென்ன அகங்காரம்? நாங்க
ளோ உயிரோ டிருக்கையிலும் துப்பு

ரவாயிருக்கிறோம், இறந்த பின்னும் அப்புரவாயிருக்கிறோம். எங்களை யலங்காரமாக்கிச் சிங்காரித்து இராஜாக்களின் சிம்மாசனமாக்கிக் கொள்ளப்படும், சிரசுக்கு மேலாகவும் வைத்துக் கொள்ளப்படும். உங்கள் ஆவி வெளியானவுடன் பிணத்தைச் சுணக்கிவைத்தால் கொள்ளைநோயுண்டாகிவிடுமென்று விரைவிற்கொண்டுபோய்க் குழியிற்றள்ளி மண்ணைப்போட்டு மூடப்படும், சொற்ப நாளையிலழுகிப்புழுத்துத் துற்கந்தம் வீசி மண்ணாய்ப்போகிற சரீரமுடையவர்களுக்கா இந்தக் கம்பீரம்? ஹக்குத்தஆலாவின் களா கதறுக்குப்பொருந்தி அவன்மீது தவக்கல்வைத்து அவனின் காருண்யத்திற்குத் துதி கூறிக்கொண்டிருக்கும் படைப்புகளுக்கு முங்களுக்கும் சகவாசம் வேண்டியதில்லை, இக்ஷணமே இவ்விடத்தைவிட்டு நீங்கென்று விருக்ஷம் சொல்லிற்று

முரீது, தாங்கள் சொல்வதெல்லாம் நிசந்தான், ஆகிலும் தங்கள் பேச்சு மிகவுங் கடுமையா யிருக்கின்றதே யென்று சொன்னான்.

விருக்ஷம், நல்லது சாந்தமாயுனக்குச் சில சங்கதிகளைச் சொல்லுகிறேன்.

அல்லாகுத்தஆலாவுக்கு உவப்பான சாலிஹீன்க ளல்லாதவர்கள் நான் மற்றப்படைப்புகளிலும் உயர்த்தியானவர்களென்று பேசக்கூடாது. நரகத்தி லெவ்வளவோ பெயர்கள் நாங்கள் மரமாயிருந்தோ மில்லையே மண்ணாயிருந்தோ மில்லையே என்று கதறுவார்கள், இன்னும் நாங்கள் தான் நபுசுன்னுத்திக்கா பேச்சையுடையவர்கள், மற்றப்படைப்புகளுக்கு பேச்சில்லையென்று நினைத்திருக்கிறீர்கள், இது உங்களின் அறியாமையைக்கொண்டு நினைத்திருக்கிறீர்கள், கஷ்புண்டானால் சகல படைப்புகளுக்கும் மண்கல்லுக்குத்தானும்பேச்சிருப்பது தெரியும் இன்னும்நீங்கள் மிருகசாதிகளிலும் ஒரு விஷயத்திற் குறைவுள்ளவர்களா யிருக்கிறீர்கள், நீங்கள் அறிவுகளைத் தேடிக்கொள்ள வேண்டும், சுபாவ உணர்வு அல்லது அறிவு உங்களில் மிகவு மற்பம், ஹக்குத்தஆலாவில் நின்றும் நேரே உங்கள் கல்புக்குண்டாகிற அறிவுக்கு இல்ஹாமென்று சொல்லப்படும், இந்த அறிவுண்டாகுதற்கு உங்கள் கல்பு சுத்தப்பட்டு உயர்ந்த மறுத்தபாவுக்குச் செல்லவேண்டும். மிருகங்களுக்கு அல்லாகுத்தஆலா தேவையான மட்டு அறிவுகளை சுபாவத்தில் கொடுத்திருக்கிறான், உங்களில் பிள்ளை பிறந்தால் குழந்தைகளுக்குத் தாயின் மார்பைத்தேட பால்குடிக்க அறிவில்லை, தாய் சிலகாலம் வரையும் கொடுத்துப் பழக்கிவர வேண்டும், ஒவ்வொரு அறிவும் கண்டும் கேட்டும் படித்தும் உண்டாக வேண்டும். மிருகங்கள் குட்டி யீன்றவுடனே தாயிடம்போய்ப் பால்குடிக்கும், தீனில் இது நல்லது இது நஞ்சென்று ஒருவருங் காட்டாமல் அறிந்துகொள்ளும், ஒருக்காலுங் காணாதிருந்த தன் சத்துருவைக் கண்டால் பயந்தோடும், ஆடு யானையை முதன்மையாய்க் கண்டாலும் தனக்குச் சத்துருவல்லவென் றறிந்து சமீபத்தில் மேய்ந்துகொண்டிருக்கும், புலியைமுன் கண்டில்லாதுபோனாலும் கண்டவுடனே பயந்தோடும், பட்சிகள் ஒருவர் காட்டாமலும் ஒரு மாதிரியைக் காணாமலும் விசித்திரமான கூடுகளைக்கட்டும். இதுபோல் மனிதரைத்

தவிர மற்ற சகல பிராணிகளுக்கும் அவைகள் ஜீவித்திருப்பதற்குத் தேவையான அறிவுகளெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன, மனிதன் ஒவ்வொன்றைப் பார்த்தும் சேட்டும் படித்துப் பெற்றுக் கொள்ளவேண்டும். இன்னும் நாயகம் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுடைய நுபுவ்வத்தைச் சகல படைப்புகளும் கல்லு மரம் மிருகங்கள் சகலதும் அறிந்து அன்புவைத் திருந்தன. நானுனக்கொரு கதை சொல்லுகிறேன் கேள்; மூசாஸர்தானீ யென்றொரு பெரியோர்க ளிருந்தார்கள் அவர்கள் அப்தால்களி லுள்ளவர்கள், அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் பூமியைச்சுற்றி சமுத்திர மிருக்கின்றது, அந்த சமுத்திரத்தை வளைந்து காபென்கிற ஓர் மலை யிருக்கின்றது, அந்தச் சமுத்திரத்திற்கும் மலைக்குமிடையே ஓர் பாம்பு வளைந்து சுற்றி அதின் தலையும் வாலும் ஓரிடத்திற் சேர்ந்திருக்கிறது, நானதைக் கண்டு சலாம் சொன்னேன் அது எனக்கு வதல் சலாம் சொல்லிவிட்டு செய்கு அபீமதனீ அவர்கள் சுகமே இருக்கிறார்களா வென்று கேட்டது, நான் அதிசயமாகி உனக்கு அவர்களை யெவ்விதந் தெரியுமென்று கேட்டேன் அது மறுமொழியாக அல்லாகுத்தஆலா ஒருவரை ஒலியாக்கினால் அவர்கள் பெயரில் அன்பு கல்லு, மரம், மண், மிருகம் முதலிய சகல படைப்புகளுக்கு முண்டாகிவிடும், அவர்களை யறியாத படைப்புகளிராவென்று சொல்ல, நான் அல்லாவினுடைய துன்யாவில் அவர்களை மனிதர்கள் கொன்றுபோட நாடியிருக்கிறார்களென்று சொன்னேனென்று சொன்னார்கள். இந்தக் கதை நான் சோடித்துக் கொண்டதல்ல, உங்கள் ஆரிபீன்களுடைய கித்தாபுகளிற் காண்பாய்; அதனாலேதான் அவுலியாக்களைக் கண்டால் துஷ்டமிருகங்களெல்லாம் சாட்டாங்கஞ் செய்கிறதும், அவர்களுக்குக் கீழ்ப்படுகிறதுமாயிருக்கும். இவ்விதம் சகல படைப்புகளும் ஒலிமார்களையும் நபிமார்களையும் அறிந்தும் அன்புவைத்து மிருக்க, நாயகம் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் நடக்கையிலுந் தூய்மையான வர்களாகவும், அவர்கள்வெளியாக்கின வேதம் பரிசுத்தமானதாகவு மிருக்க, அவர்கள் நபி யென்பதற்கு அத்தாட்சியாக அற்புதங்கள் காட்டியுமிருக்க, கற்களையும் மரங்களையும் சூரியனையும் நெருப்பையும் வணங்கின அசுத்தமான இருளையுடைய மார்க்கத்தவர்கள் அவர்களை வஞ்சகனென்றும் புரட்டனென்றும் சொல்லி யுத்தங்கள் செய்து எவ்வளவு கஷ்டப்படுத்தி யிருக்கிறார்கள்? எத்தனை அவுலியாக்கள் உலமாக்கள் முஸ்லிம்களால் கொல்லப்பட்டும் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு மிருக்கிறார்கள். இதனால் மனிதனுக்கும் மற்றப் படைப்புகளுக்கும் உள்ள வித்தியாசம் விளங்கும், நான் மற்றபடைப்புகளென்று சொன்னதில் இபுலீசை நீக்காது சொல்லிவிட்டேன், ஆகிலும் இபுலீசிலுங் கொடியவர்கள் மனிதர்களி லிருக்கிறார்கள், இபுலீஸ் நான் நெருப்பினால் படைக்கப்பட்டவன், ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர் அவருக்கு சுஜூது செய்யமாட்டே னென்று சொன்னதல்லாமல் நான் நாயனென்று சொல்லவில்லை. மனிதர்களில் பிர்அவ்னைப்போல் நான் நாயனென்று சொல்லுகிறவர்க ளிருக்கிறார்கள், ஆனால் அப்படிச்சொல்லுகிறவர்கள் கொஞ்சமா யிருந்தாலும் அவனின்

குணம் மனிதரில் மிகுதம் பரந்திருக்கின்றது. நானின்னவேலை செய்வேன், இன்னானுனக்கு இந்த உபகாரஞ் செய்வான், நான் இன்ன காரியஞ் செய்யத் தத்துவ முடையவனென்று சொல்வதெல்லாம் ஹக்குத்த ஆலாவின் குதறத்துத் தனக்கிருக்கின்றதென்று உறுதி சொல்லுகிறதா யிருக்குமென்று விருக்ஷம் சொல்லிற்று.

முரீது, தேவரீர் தாங்கள் யாவருக்கும் தருமஞ்செய்கிறவர்களா யிருப்பதால் ஏழையின்மீது மனமிரங்கி என்னைத்துரத்திவிடாமல் எனது மனதைச் சந்தோஷமாக்கிவைக்க வேணடுமென்று சொன்னான்.

விருக்ஷம், ஆதமுடைய மக்களுக்கு வேண்டிய அறிவு ஒன்றுதான். அதாவது:—தங்கள் ஐபுகளை யறிகிறது. அவனுக்கு வேண்டிய அமல்களெல்லா மொன்றுதான். அதாவது:—அந்த ஐபுகளை நீக்குகிறது. அவ்விதம் நீக்கினால் அவன் தனது அஸ்லிய்யத்தாகிய உயர்த்தியான பதயிற் சேர்வான். அதற்காகத்தான் உங்கள் ஐபுகளைத் தெரிவித்தேன். அவைகளை யெவ்வேளையுஞ் சிந்திக்கவேண்டும், அவை நீங்கும்படி தெண்டிக்கவேண்டும், அவை நீங்கிவரும் வேளையில் தவ்ஹீதின் இல்மு வெளியாகுமென்று விருக்ஷம் சொல்லிற்று.

முரீது, தவ்ஹீதுடைய இல்மை கித்தாபுகளில் வாசித்துப் பார்த்தேன் தெளிவாய் விளங்கவில்லை, எனது செய்கிடங் கேட்டேன் அவர்கள் கொஞ்சஞ் சொல்லிவிட்டுத் தங்களிடம் வரும்படி சொன்னார்கள்; ஆகையால் தங்களிடம் வந்தேன் என் மனம் திருப்தியடையச் செய்யவேண்டுமென்று சொன்னான்.

விருக்ஷம், தவ்ஹீதாவது கரைகாணாச் சமுத்திரம், வாசித்தல்லது கேட்டு மறியக்கூடாது, தானாய்க் காணவேண்டும், தானாய் சகிக்கவேண்டும், ஆகிலுமெனக்குத் தெரிந்த மட்டைச் சொல்லுகிறேன்.

முதலாவது, எனக்கு விருக்ஷமென்றழைத்தாய், இந்தப் பெயரையெங்களுக்குச் சொல்லுவதும் எங்களுக்கொரு உஜூ திருக்கிறதென்று நினைப்பதும் மனிதனே. எங்களுக்கு அப்படி ஒரு பெயருமில்லை வுஜூது மில்லை, நோட்டமிட்டுப்பார் நானென்று சொல்ல எனக்குச் சொந்தமாக என்னவிருக்கின்றது? நானில்லாமலிருந்துண்டானேன், எனக்கு என்னையுண்டாக்கிக்கொள்ளத் தத்துவமிருக்கின்றதா? என்னை நானே வளர்க்கவும், என்னிலிந்த அழகான இலைகளும் மதுரமான கனிகளுமுண்டாகச் செய்யவும் எனக்கறிவும் நாட்டமும் தத்துவமுமிருக்கின்றனவா? உலகத்திலுள்ள சாமார்த்தியமுடைய மனிதர்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து என்னுடைய ஒரு இலையைப்போலுயிரையுடைய ஒரு இலையைச் செய்வார்களா? இந்தத் தோட்டத்தைச் சுற்றிப்பார் எத்தனை விதமான மரங்களும் பிராணிகளு மிதிற் சஞ்சரிக்கின்றன, அவைகளோவ் வொன்றின் குணங்களுக்கும் தன்மைக்குத் தக்க நிரப்பமான வடிவும் இலக்ஷணமுமுடையனவா யிருக்கின்ற அதிசயத்தைச் சிந்தி, உலகத்திலுள்ள அறிவாளர்களெல்லாம் சேர்ந்து ஒரு மரத்தையாவது ஒரு பூண்டையாவது ஒரு பிராணியாவது அவைகளின் தபீயத்துக்கு மாறுதலில்லாமல் வேறு விதமாக மாற்ற அல்லது திருத்தலாமென்று சொல்வார்களா? ஆகாயத்தை எறிட்டுப்பார் பூமியிலும் மிகவும்

பெரிய சூரியனும் கிரகங்களும் நட்சத்திரங்களும் அவைகளைத் தரிபடுத்திய புறாஜ்களில் ஒரு மணிநேரத்தில் ஆயிரக்கணக்கான மைலோடிச்சுற்றுவதைப்பார், அவைகளோடும் வழியில் கொஞ்சஞ் சறுகினுல் அவைகளெல்லாம் மோதித் தூசாய்க் காணுமற்போகும். அண்டத்திலுள்ளவைகளெல்லாம் பூமியுள்பட அந்த மறைவான வல்லமையுடைய தத்துவம் இட்டமாக்கிய சட்டத்துக்குக் கீழ்ப்பட்டவர்களாயிருக்கின்றன, துன்யாவிலுள்ள மனிதர்களெவ்வொருவர் முகமும் வெவ்வேறு ரூபமாயிருக்கின்ற அதிசயம்போலவே ஒவ்வொரு வஸ்துவுச்கும் வெவ்வேறு குணமும் வெவ்வேறு தன்மையுமாய்ப் படைக்கப்பட் டிருக்கின்றன. நெருப்பு சுடுந்தத்துவ முடையதாயும், தண்ணீர் குளிர்ச்சியை யுண்டாக்கும் தத்துவ முடையதாயும், சில வஸ்துகள் தித்திப்பாயும், சில வஸ்துகள் கசப்பாயும், ஒவ்வொன்றுக்குந் தனதான குணங்களும் தன்மைகளுங்கொடுக்கப்பட்டு, சிலது சிலதிற்குச்சத்துருவாயும், சிலதுக்குச் சம்பந்தமாயு மிருப்பதற்கு அறபுப் பாஷையில் கத்று என்றும், இவைகளெல்லாம் ஒழுங்காய் நடத்தப்படுதற்குக் களாவென்றுஞ் சொல்லப்படும். அண்டத்திலுள்ளவைகளெல்லாம் இந்த களா கத்றுக்குக் கீழ்ப்பட்டவைகளாயிருந்தாலும் மனிதனொருவனே இதைச் சந்தேகிக்கிருன். எனக்கொரு வுஜூதிருக்கின்றது, செய்கிறவன் நான்தான், நினைக்கிறவன் நான்தான் என்று சொல்லுகிருன். உன்னைச்சோதிப்போம் நீ உனது தகப்பனின் சரீரத்தில் விந்தாகச் செய்தது நீயா? அல்லது உன் தகப்பனு? அந்த விந்து தாய்வயிற்றிற்சென்றபின் அந்த இருட்டறையில் ஆயிரக்கணக்கான யந்திரங்களைக் கொண்டும் செய்யக்கூடாத அங்கங்களும் உறுப்புகளும் நரம்புகளும் அவைகளுக்குத் தத்துவங்களு முண்டாகச் செய்தது நீயா? உன் தாயா? தாய் வயிற்றிலிருந்து வெளியானவுடன் நீ மிகவும் பெலவீனமாயிருக்கையில் உன் தாயின் மார்பில் உனக்கு ஆகாரமும், அவள் கல்பில் இரக்கமு முண்டாக்கியதார்? இவைகளெல்லாம் நானல்ல அது மறைவான ஓர் தத்துவந்தானென்று ஏற்றுக்கொள்வாய், நீ வாயில் தினைப்போடுகிருய் உன் நாட்டமில்லாமல் நாவு அந்தத் தினைச் சேர்த்துத் தறிக்கவேண்டிய தினைத் தறிக்கும் பற்களுக்கும், கசக்க வேண்டியவைகளைக் கசக்கும் பற்களுக்கும் கொண்டுபோய்த் தறிக்கப்பட்டும் கசக்கப்பட்டும் வரும்போது உமிழ் நீரிறங்கிச் சேர்ந்து பதமாகி விழுங்கப்பட்டு ஜீரணக்குடலிற் செல்லும்வேளையில் ஜீரணநீர் குடல் சுற்றிலு மிருந்திறங்கி ஜீரணமாகுவதும், பின்பு கருவீரலுக்குச் செல்லுவதும் அங்கு இரத்தமாகுவதும், அதில் நின்று இருதயத்திற்குப் போவதும், நுரைஈரலால் வரும் காற்றைக்கொண்டு இரத்தம் சுத்தமாகுவதும், ஒவ்வொரு உறுப்பிற்குஞ்சென்று அங்கு அவைகள் தரித்து அந்தந்த உறுப்புகளுக்குத் தேவையானவைகளாய் உருவாகிறதுமாகிய வேலைகளை நீயாசெய்கிருய்? அல்லது நீயா செய்விக்கிருய், நீ படுத்து மிருகங்களைப்போல உறங்கும்பொழுது இந்த வேலைகளும், இதுபோல் ஆயிரக்கணக்கான வேலைகளும் உன் சரீரத்திற்குள் நடக்கின்றனவே, இவைகளெல்லாம் அல்லாகுத்தாலா திட்டப்படுத்திய சட்டப்படிக்கே நடக்

கின்றனவென்று விருக்ஷம் சொல்விற்று.

முரீது, அண்டத்திலுள்ளவைகளும் என் சரீரத்தில் நடக்கின்றவைகளும் அல்லாகுத்தாலாவின் நாட்டப்படியும் தத்துவப்படியும் நடக்கின்றனவென்றும், லாஹவ்ல வலாக்குவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அளீமென்பது என் மனத்திலுறுதியாகிவிட்டது. ஆகிலும் நாம் ஒரு காரியத்தை யோசிக்கவும் யோசித்து அதைச்செய்ய அல்லது செய்யாமலிருக்கத் தீர்மானிக்கவுங் கூடியதாயிருக்கின்றதென்பது நிச்சயமாயிருக்கின்றதே, இதுவும் அல்லாகுத்தாலாதான் செய்திருக்கிறானென்று எப்படிச் சொல்லக்கூடுமென்று கேட்டான்.

விருக்ஷம், இதைப்பற்றி முதலாவது நீ நானென்று சொல்லுகிற அன்னிய்யத்து எவ்வித முண்டாயிருக்கிறது. இது உள்ளமையில் நிசமா? அல்லது மயக்கமாவென்றும் உனக்கு யோசினை அக்கில் ஞயாத்து ஆகியவைகள் எவ்விதம் வந்திருக்கின்றனவென்றும் நீ ஆராய வேண்டும், இவைகளைப் புத்தியைக்கொண்டறியக்கூடாது, கஷ்பைக்கொண்டறியவேண்டும், நீ கஷ்பை யுடையவர்களிடஞ் சென்று இவைகளைக் கேட்டறிந்து கொள்ளென்று சொல்விற்று.

முரீது, விருக்ஷத்திடம் விடைபெற்றுக்கொண்டு செய்கிடம் சென்று விருக்ஷம் சொல்லியவைகளை யெல்லாஞ் சொல்லி கடைசியாகக் கேட்ட கேள்விக்குக் கஷ்பையுடையவர்களிடங் கேட்டறிந்து கொள்ளும்படி சொல்விற்றென்று சொன்னான்.

செய்கு, விருக்ஷம் சொல்லியவைகளெல்லாம் உண்மைதான், நீ அந்த மலையிலோர் பொதும்பில் ஒரு ஆபிதிருக்கிறார் அவரிடம்போய் இவைகளைப்பற்றிக்கேள், அவருனக்கு அறிவித்துத் தருவாரென்று சொன்னார்.

முரீது, செய்கு குறித்த மலைக்குப் போய் அதிலிருக்கிற ஓர் பொதும்பில் துறவியாக விருக்கிற ஒரு ஆபிதைக் கண்டு அவரிடம் தான் வந்த நோக்கத்தைச் சொல்லி என் மனத்தின் சந்தேகம் நிவிர்த்தியாவதற்கு அடியேன் பெயரில் கருணைவைத்து இந்த இல்மை யறிவித்துத் தரவேண்டுமென்று சொன்னான்.

ஆபிது, இந்த இல்மு உனக்கு நன்றாய் விளங்குதற்கு உவமையாகச் சில காரியங்களைச் சொல்லுகிறேன் கேள்.

செய்கிறவன் யாருமில்லை அல்லாவையன்றி என்பதை நான் பிக்றிட்டுக் கொண்டிருக்கையில் வெள்ளைக் கடுதாசியிடம் நானுன்னை மிகவும் தெளிவாயிருக்கக் கண்டிருந்தேன், இப்பொழுது உன் முகமெல்லாம் கரு நிறமாயும் அலங்கோலமாயுமிருக்கின்றதே இதற்குக் காரணமென்னவென்று கேட்டேன், கடுதாசி நான் என் முகத்தை இவ்விதஞ் செய்துக்கொள்ளவில்லை, அநியாயமாய்த் தீந்தை தானிருந்த விடத்தை விட்டுவந்து என்னை இவ்விதம் அவலக்ஷணமாக்கிவிட்டது அதைக் கேளுங்களென்று சொல்விற்று. நான் தீந்தையிடம் என் கடுதாசிக்கு இந்த அநியாயஞ் செய்தாயென்று கேட்க, நானொரு குற்றமுஞ் செய்யவில்லை, நான் எனது கூட்டத்தவர்களோடு சௌக்கியமாய் ஒரு கூட்டிலிருந்தே

ன், கலமென்கிற நாமமுடைய கொடியவன் என் இனத்தவர்களை விட்டும் பிரித்து என்னைத் தூக்கி இவ்விடத்திற்போட்ட நியாயத்தை யாரிடம் முறையிடுவே னென்றிருக்கையில், தாங்க ளென்பெயரில் குற்றஞ் சுமத்த வந்தீர்கள், கலமிடம்போய்க் கேளுங்களென்று தீந்தை சொல்ல, கலமிடத்தேபோய் நீ ஏனிந்தக் கொடுமையைத் தீந்தைக்குச் செய்தாயென்று கேட்டேன், கலம் நானொரு ஆற்றங்கரையில் ஒரு மரத்தின் கொப்பா யுல்லாசமா யாடிக்கொண்டிருந்தேன், கையென்கிற சண்டாளன் ஒரு கத்தியைக்கொண்டு வெட்டித்தறித்து என் உடைகளைக் கீறிக்கிழித்து என் ரூபத்தைமாற்றி என் தலையைப்பிழந்து கசப்புப் பொருந்திய தீந்தையில் முக்கி அதின் இஷ்டம்போல நடத்தியிருக்க, எனக்குச் செய்த நிஷ்டூரத்தைக்கேட்க யாருமில்லையேயென்று பரதபித்துக்கொண்டிருக்கிறேனென்று சொல்லிற்று. நான் கையிடம் நீ இந்தக் குரூரமான வேலைகளை யேன் செய்தாயென்று கேட்க, கை சதைக்கும் முள்ளுக்கும் நரம்புக்கும் என்ன செய்யக்கூடும், நாங்கள் தத்துவத்தின் வாகனமாயிருக்கும், நாங்கள் கல்லைப் போலும் மரத்தைப்போலு மல்லாமல் எங்களாலொன்றுஞ் செய்யக்கூடாது, தத்துவத்தின் இஷ்டத்திற்குக் கீழ்ப்பட்டு நடத்தப்பட்டு வருகிறோமென்று சொல்ல, தத்துவத்தினிடம்போய்க் கேட்டேன், நீ இவ்விதம் கையைக்கொண்டு ஏனிந்தக் கொடுமைகளைச் செய்தா யெனறு கேட்க, தத்துவம் எனக்குப் பெயர் மட்டும் பெரிய பெயரிருக்கிறது, நானோ எவ்வேளையும் உறங்கினவனாயும், நானிருக்கிறேனென்றும் இல்லையென்றுஞ் சொல்லக்கூடாத தன்மையாயுமிருக்கையில் நாட்டம் என்னை எழுப்பிவிடும், அந்த நாட்டத்தின் ஏவலைச்செய்யும் அடிமையாயிருக்கின்ற ஏழையின் பெயரில் குற்றஞ்சாட்ட வந்தீர்கள், நாட்டத்திடம் போய்க் கேளுங்களென்று சொல்லிற்று. நான் நாட்டத்திடம்போய் ஓ நாட்டமே நீ இவ்விதமான துஷ்ட கருமங்களை ஏன் செய்விக்கிறாயென்று கேட்டேன், நாட்டம் ஒன்றைத் திரவிளங்காது ஒருவரைக் குற்றமாய்ப் பேசுவது நியாயமல்ல, நான் இல்முக்கு ஏவல்காறனா யிருக்கிறேன், நானோ ஒரு மிஸ்க்கீன், இல்மு நலவை விரும்பினாலும் தீமையை விரும்பினாலும் நானதை நடத்தும் ஊழியனாயிருக்கிறே னென்றுசொல்லி, தாங்கள் இல்மிடமும் கல்பிடமும் அக்கிலிடமும் போய் விளங்கினால் யாரிவைகளுக் கெல்லாம் அதிகாரி யென்பது உனக்கு விளங்குமென்று நாட்டஞ்சொல்ல, நான் அக்கிலிடம் போய் நீதான் இவைகளுக்கெல்லாம் அதிகாரியா யிருக்கிறாய், நீயேன்இந்த அநியாயங்களை நடத்துகிறாயென்றுகேட்டேன், அக்கில் நானோஒரு தீபம்போலாயிருக்கும், ஒருதீபத்தைப் பற்றவைக்காமல் அதற்குத்தானாகப் பற்றச்செய்துக்கொள்ளக்கூடுமாவென்று சொல்லிற்று. கல்புநானொரு பலகையாயிருக்கிறேன், நான்இல்முக்கு ஸ்தலமாயிருக்கிறேன், என்னிலொரு தத்துவமு மில்லையென்று சொல்லிற்று. இல்மிடங்கேட்க இல்மு நான் கல்பி லெழுதப்பட்ட எழுத்தாயிருக்கிறேன், என்னில் அக்கிலின் பிரகாசம் பிரகாசிக்கும் பொழுது கல்பிலெழுதப்பட்ட எழுத்தாய்த் தோற்றப்படுகிறே னென்று சொல்லிற்று. இந்த மறுமொழிகள் என்

மனத்திற்கு மயக்கத்தைக் கொடுத்தது. கல்பு பலகை யென்றும், இல்மு எழுத்தென்றும், அக்கில் தீபமென்றும், கலமென்றும் சொல்லுகிறது என் புத்தியைத் தடுமாறச்செய்தது, அப்பொழுது இல்மு என்னை நோக்கிச் சொன்னதாவது:—இந்தப் பாதையில் வந்தவர்களனேகர் மோசம்போயிருக்கிறார்கள், நீ இந்தப் பிரயாணத்திற்குத் தக்க ஆயத்த முடையவனாய் வரவேண்டும். ஆரிபீன்களின் சுல்தானாகிய செய்குல் அக்பறென்ற பட்டம்பெற்ற முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு (தல்ஸம்) அல்லது வசியம் பண்ணுகிற வித்தையைக் குறித்துப் பேசும்பொழுது மூன்று வசியங்களைச்சொல்லியிருக்கின்றார்கள். முதலாவது மனிதனின் யோசனை தன்னை வசப்படுத்திக்கொள்ளும், அவ்விதம் வசியப்பட்டவனுக்கு எவ்விதமான அறிவுகளும் தன் யோசனைக்கு இணங்கவேண்டும், அப்படி இணங்கினால் அவைகளை மிகவும் சந்தோஷமாயும் இனபமாயும் ஒப்புக்கொள்வான். அல்லாகுத்தாலாவுடைய தாத்து சிபாத்து அஸ்மா அபுஆல் முதலியவைகளெல்லாம் புத்திக்கும் யோசனைக்கும் எட்டாதவைகளா யிருந்தும் அவைகளை யோசனையைக் கொண்டு மட்டுப்படுத்தத் தெண்டிப்பதில் தன் ஹயாத்தைப் போக்கிவிடுவான், இவைகளெல்லாம் தொடக்கம் ஈமானின் ஒளிவைக்கொண்டு அறியவேண்டும், பின்னால் கஷ்பைக்கொண்டு அறியவேண்டும். ஈமானும் கஷ்பும் அல்லாகுத்தாலாவின் அருளாயிருக்கும், ஹக்குத்தாலாவின் திருவசனத்தைக் கொண்டும், நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய போதனையைக்கொண்டும், அவைகளைக் கண்டறிந்த ஆரிபீன்களின் விளக்கங்களைக் கொண்டும், ஈமான் தரிபட்டு அமலைக்கொண்டு கஷ்புண்டாகவேண்டும், இரண்டாவது கியால் வசியப்படுத்திக் கொள்ளுகிறது, அநேகர் தங்களுக்கு மறைவான ஆலங்களிலுள்ள வைகளெல்லாம் இந்த ஆலத்தில் கண்டிருப்பவைகளைப்போல் ரூபங்களுடையவைகளாக எண்ணுவதே யல்லாமல் வேறு விதமாயிருக்கக் கூடுமென்று அவர்களுக்கு நினைக்கக்கூடாது, சகலதும் அவர்களுக்கு ரூறத்தாக வேண்டும், அல்லாகுத்தாலா தொடக்கமாக, கலத்தைப் படைத்தானென்பதைத் தாங்க ளெழுதுகிற கலத்தைப்போலொரு பெரிய கலமா யிருக்குமென்று நினைப்பார்கள், அறுசென்றால் ஒரு சிறந்த சிம்மாசன மல்லது மேடையென்பதுபோல் ரூறத்தாக்கிக் கொள்வார்கள், மலாயிக்கத்துகளென்றால் இன்சானுடைய ரூபத்துடனே இறகுகளையுஞ் சேர்த்து ரூறத்தாக்கிக் கொள்வார்கள், லவ்குல்மகுபூளென்றால் மரத்தினால்செய்த பலகையைப்போல் ரூபமாக்கிக் கொள்வார்கள், நன்மை தின்மை நிறுக்கிற மீஸானென்றால் சாமான்கள் நிறுக்கிற தராசுபோல் ஒருபெரியதராசென்று எண்ணிக்கொள்வார்கள். இதுபோல் மறைவான ஆலங்களுக் குரியவைகளை யெல்லாம் இந்தப்பூமியிலுள்ள பொருள்களுக் கொப்பாக நினைப்பார்கள். இவர்கள் தங்கள் கியாலுக்கு வசியப்பட்டுப் போயிருப்பவர்களா யிருக்கும். இன்னுமநேகர் தங்கள் வழக்கங்களுக்கும் பரிசனையாகிய பழக்கங்களுக்கும் வசியப்பட் டிருக்கிறார்கள், தங்கள் வழக்கங்களுக்கும் சுபாவ நடக்கைகளுக்கும் மாறாக நடக்கிறவர்களுக்

கே அற்புதங்கள் செய்யக்கூடும், அற்புதமாவது சுபாவத்திற்கு மாற்றமானதாயிருக்கும், ஊணுறக்கம் நடக்கை முதலியவைகளுக்குமாறாக நடந்து நற்பழங்கங்களையெடுக்காதவர்களுக்கு அற்புதங்களுண்டாகமாட்டா. ஆகையால் மேலான பதவியை ஆசித்தவர்கள் இம்மூன்றுக்கும் வசியமாயிருப்பதைவிட்டும் நீங்கித் தங்கள் கல்புக்கண் திறப்பதற்குறிய காரியங்களைச் செய்துவரவேண்டும். நான் சொல்லிய உபதேசப்படிக்கு நீ நடந்து வந்தால் மேலான ஆலங்களைச் சேர்ந்த அறிவுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடுமென்று இல்மு சொல்லிற்று. இதைக்கேட்டபின் இல்மின் உபதேசப்படி நான் நடந்து வருகையில் யோசனைக்கும் கியாலுக்கும் ஆதத்திற்கும் அடிமையாயிருந்த தன்மையை விட்டும் நீங்கி, அகக்கண் பார்வை துலங்குதற்காயிற்று. அப்பொழுது கல்பு பலகையுமல்ல, இல்மு எழுத்துமல்ல, அக்கில் தீபமுமல்ல, கலம் எழுதும் கலம்போலுமல்லவென்றும் அவைகளெல்லாம் ரூபமற்றவைகளென்றும், மனிதர்களுக்கு விளங்கும் பொருட்டு அவைகளின் குணத்திற்காக அச்சொற்களைப் பாவிக்கப் படுகிறதென்றும் தெரியவந்து, கலமிடம் ஓ கலமே! நீயேன் இவ்விதமான தீதான காரியங்களைச் செய்விக்கிறாயென்று கேட்க; அது நீ ஆலம் ஷஹாதாவில் கலஞ்சொன்ன வார்த்தைகளை மறந்துவிட்டயோ? அது சொன்ன மறுமொழிதான் எனது மறுமொழியும், நானொரு மலாயிக்கத்தின் கையைக்கொண்டு பிடிக்கப்பட்டு அவர் கருத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கிறேன், எனக்கும் அந்த கலத்துக்கும் வித்தியாசம் ரூபமட்டில்தானென்று சொல்லிற்று, மலாயிக்கத்திடம் நான் போனபொழுது அவர் புதுமைப்படத் தக்கவராகவும், அஞ்சத்தக்கவராகவுமிருந்தார், அவரை வர்ணித்துச்சொல்ல என்னால் குதறத்தில்லை. அவரிடம்கேட்க ஆலம் ஷஹாதாவில் கைசொன்ன மறுமொழிதான் எனக்கு மிருக்கின்றது, கை தத்துவத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பது போல நானும் குதறத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிறேனென்று சொல்ல, நான் குதறத்துடைய ஆலத்திற்குச் சென்றேன், அங்குள்ள அதிசயங்களைச்சொல்லக் கூடாது. குதறத்திடங்கேட்க குதறத் தாவது காதிறு அல்லது தத்துவமுடையவனின் சிபத்தாய் நானிருக்க என்னிலென்ன விருக்கிறது, தத்துவத்தையுடையவனைக் கேளென்று சொல்லவே, நான் தத்துவத்தை யுடையவனைக் கேட்க நாவெடுக்கையில் நாவு தடுக்கப்பட்டது, மறைவில் நின்றும் அவன் செய்வது ஒருவராலும் கேட்கப்படமாட்டாது, அவர்கள் கேட்கப்படுவார்களென்ற சத்தம் வந்தவுடனே நான் அறிவற்றுக் கீழே விழுந்தேன், என் சரீரம் அச்சத்தில் துடிக்கவாயிற்று, எனக்கு அறிவுண்டானபொழுது பரிசுத்த மானவனே! வல்லமை யுடையவனே! நீயே யாவையும் அடக்கியாள்பவன், உனது கிருபையைக்கொண் டெனக்கு மன்னிப்பருளவேண்டும், உன்னை யறிய என் கல்பை யொளிவாக்கவேண்டும், உனது புகழை ஓயாதுமொழிய என் நாவின் கட்டைத்தறிக்க வேண்டுமென்று சொல்ல, மறைவிலிருந்து ஒரு சத்தம் அச்சமாயிருந்து கொள், நபிமார்களுக்கெல்லாம் நாயகமாகியவர்களைப் பின்றொடர்ந்துகொள், சித்திக்கில் அக்பரவர்கள் அறியக் கூ-

டாதென்றறிகிறது தான் அறிவென்ற வாக்கியத்தைப் பற்றிப்பிடித்துக்கொள், நீ எங்கள் சமுகத்தை விட்டும் விலக்கப்பட்டவனென்றும், ஜலாலையும் ஜமாலையும் தரிசிக்கக் கூடாதவனென்றும் அறிந்துகொள்ளென்ற சத்தம் வெளியானது, நானதுமுதல் எங்கள் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் காட்டிய வழியே நடக்கிறேனென்று ஆபிது சொன்னார்.

முரீது, தாங்கள் சொல்லியவைகளால் என் கல்பு துலக்கமாகிவிட்டது, ஹக்குத்தாலாவுடைய நாட்டப்படிக்கே சகலதும் நடக்கின்றமையால் அவனுடைய ஏவலுக்கு மாற்றமான நடக்கைகளெவ்வித மிருக்கலாம்? இது என் மனத்திற்குத் தெளிவுபடச் செய்யவேண்டுமென்று சொன்னான்.

ஆபிது, நீ கேட்கின்றகேள்வி ஹக்குத்தாலா ஆலத்தை நடத்துகின்ற சட்டத்தைச் சேர்ந்தவைகள், அச்சட்டத்தி னுள்ளமைகளை யறிய நீ இப்போது கூடியவனல்ல, அதற்கு நீ இன்னும் அதிக உயர்த்தியான மறுத்தபாக்களுக்குச் செல்லவேண்டும், இப்பொழுதுனக்குச் சாடையா யொரு குறிப்புக் காட்டுகிறேன். உன் சரீரத்தை நடத்துகிறது உனது றூகென்பதையும், அந்த றூகுதான் நீ என்பதையும் நீ யறிந்திருக்கிறாய், ஆகையால் உனது நாட்டத்திற்கு உன் சரீரம் வழிப்படவேண்டும், உனது கண்ணுக்கு ஒரு வருத்தமுண்டாயிருக்கின்றதென்று நினைப்போம், அதற்காக ஒரு துழி மருந்தை யூற்றவேண்டுமென்று நாடி கண்ணைத்திறக்கச் சேய்யும்பொழுது கண்திறக்காமல் மூடிக்கொள்ளுகிறதே, நீ திறக்கத் தெண்டிக்கிறாய்; வேறொரு தத்துவம் அதற்கு விரோதமாகத் திறக்கவிடாதிருக்கச் செய்கிறது. இதற்காக நம்மில் இரண்டு றூகுகளிருக்கின்றனவென்றும் ஒன்றுக்கொன்று விரோதமா யிருக்கின்ற தென்றுஞ் சொல்லலாமா? திறக்க நாடுகிற தத்துவமும் திறக்காமலிருக்கக் கண்ணைமூடச் செய்கிற தத்துவமும் அந்த றூகுக்கே யுரியவைகள். ஆகிலும் நலவை நாடுகிற குணம் றப்பானிய்யாவின் குணமாகவும், பயத்தைக்கொண்டு கண்ணை மூடச்செய்யும் குணம் நபுசானிய்யாவின் குணமாகவும், இவைகளொன்றுக்கொன்று விரோதம்போலிருந்தாலும் இரண்டும் றூகின் தத்துவதைக் கொண்டே நடத்தப்படுகின்றதா யிருக்கும். இதுபோலவே ஹக்குத்தாலாவின் நாட்டத்தைக் கொண்டே நன்மைதின்மை சகலதும் நடக்கின்றனவென்றறிந்துகொள், மருந்தைக் கண்ணில் செலுத்தவேண்டுமென்கிற நாட்டம் ஹிம்மத்தைக் கொண்டு பெலமான மட்டிற்குக் கண்ணும் பொருந்தி விடும், இதுபோல் ஹக்குத்தாலாவின் நாட்டத்திற்கு இடங்கொடுபபதற்கும் பொருந்திக் கொள்வதற்கு தவக்கலென்றும், ரிளாவென்றுஞ் சொல்லப்படும். இன்னும் ஹக்கென்றும் கல்கென்றும் பிரிவிருக்கும் வரையும் நன்மை தின்மை யென்ற பிரிவுமிருக்கும். அந்தப் பிரிவற்று ஹக்கும் கல்க்கு மொன்றெனறான மறுத்தபாவில் நன்மையென்றும், தின்மையென்றும், கீழானதென்றும், மேலானதென்றும் வித்தியாசமிரா. ஆனலிது புத்திக்கு மட்டுப்படாது. கஷ்புண்டாகி உயர்ந்த மறுத்தபாவுக்கேறினல் விளங்குமென்று சொன்னார்.

முரீது, நானிருக்கிறேன் செய்கி றேனென்ற எண்ணம் நம்மிலிருக் கின்றதே இது தவறென்று சொ ல்லப்படுகிறதே, இந்தத் தவருன எ ண்ணம் நமக்கெவ்வித முண்டாயிரு க்கிறது. இதை விவரித்துச் சொ ல்லவேண்டுமென்று கேட்டான்.

ஆபிது, நானிருக்கிறேன் என்கிற எண்ணத்திற்குத் தான் அறபில் அ ன்னிய்யத்தென்று சொல்லுகிறது, அவனிருக்கிருன், அது இருக்கிறது என்று பலது மிருக்கிறதாகக் காண் பதற்கு, கைரிய்யத்து என்று சொ ல்லுகிறது, இந்த எண்ணம் நம் மைவிட்டு அற்றுப்போனுல் அல்லா வல்லாமல் நானுமில்லை வேருென் றுமில்லையென்றும் தவ்ஹீது திட்ட மாகும். மஃரிபா வென்பது இந்த அன்னிய்யத்தும் கைரிய்யத்தும் இல் லையென்பது திட்டமாகிறது, அலலா வில் பனுவென்பது அந்தத்திட்ட மே நம்முடைய ஹாலாகி நாமிருக்கி ருேமென்ற எண்ணம் ஹக்கென்னும் சமுத்திரத்தில் அழிந்து போகிறது ஆனுல் இந்த அறிவுனக்குக் கொஞ் சங் கொஞ்சமா யுண்டாக வேண் டும். ஸிபா ஹுஃப்பு இஷ்கு முதலி ய குணங்கள் தரிபடவேண்டும். ஹக் குத்தாலாவின் மறுத்தபாக்களை யறி யவேண்டும், ஆலங்களென்பது என்ன? அவைகளைப்படைத்த தெ வ்வித மென்றும், அறிந்து இக் று முஷாஹிதா முருக்கிபா ஆகிய வைகளில் தரிபடவேண்டும், இந்த மக்காம்களிற் செல்லும்பொழுது அ ன்னிய்யத் தின்னதென்று தெரிய வரும், அதுவரையும் அது தவறெ ன்பது உனக்கு விளங்கமாட்டாது, லாயிலாஹ இல்லல்லாகு வென்கிற திக்றின் உள்ளமை யுனக்கு ஹாஸி லாகமாட்டாது. ஆகையால் நீஉ ன் செய்கிடம்சென்று நான் குறித்த இல்முகளைக்கேட்டு அமல்செய்து வ ருகையில் என்னிடம் வந்தால் அஸ் மாக்களின் தஜல்லியாத்துகளையும் சிபாத்துகளின் தஜல்லியாத்துகளை யும், தாத்தின் தஜல்லியாத்துகளை யும் உனக்கறிவித்துத் தருகிறேன். அல்லாகுத்தாலா உனக்கு றகுமத்து ச்செய்வாஞகவென்று சொன்னுர்.

முரீது, அந்த ஆபிதிடம் விடை பெற்றுக்கொண்டு செய்கிடம் வந்து ஆபிதுக்கும் தனக்கும் நடந்த சம் பாஷனையைச் சொன்னபொழுது செய்கு ஆபிதவர்கள் சொல்லிக் கா ட்டிய இல்முகளை யுனக்குப் போ தித்துக் காட்டுகிறேன் கேளென்று சொன்னுர்.

## அல்லாகுத்தாலாவின் மீது அன்பு வைத்தல்:

சுலூக்கிலுள்ள அமல்கள் யாவுக் கும் றூஹாவது அல்லாகுத்தாலாவி ன்மீது அன்பும் ஆசையுமாயிருக்கு ம், நாயகம் சல்லல்லாகு அலைகிவ சல்லம் அல்லாகுத்தாலாவின் மீது அன்புண்டாகுதல் ஈமானுக்கோர் ஷறுத்தென்று சொல்லியிருக்கிருர் கள், இமாம்களெல்லோரும் ஒற்று மையாக அல்லாகுத்தாலாவை உவ ப்பது பறுளென்று சொல்லியிருக் கிருர்கள். அல்லாவுக்குக் கீழ்ப்பட் டு நடக்கவும், அவனை யெவ்வேளை யும் திக்றுசெய்யவும், அவன் பெய ரிலன்புடையவஞ யிருத்தல்வேண்டு ம். ஆகையால் ளாஹிறுடைய அம ல்களுக்கும் பாத்தினுடைய அமல் களுக்கும் இது முககியமானதாயிரு

க்கின்றது, அல்லாகுத்தாலாவின் ஆக்கினைக்குப் பயந்து வணங்குவது கீழ்மையான அடிமையின் தன்மை யாயிருக்கும், சொர்க்கத்தின் இன் பங்களுக்காக இபாதத்துச்செய்வது கூலிக்குப் பணிவிடை செய்பவனி ன் தன்மையாயிருக்கும். அவன் பெயரி லன்பு வைப்பதும் ஆசை கொள்வதும், நேசனின் தன்மை யாயிருக்கும்.

அன்புண்டாவதற்கும் ஆசையுண் டாவதற்கும் அவனை நாம் முத லாவது அறியவேண்டும். அவனை யறிதற்கு வேண்டிய இல்முவேண் டும். இதை யுனக்கு விவரித்துச் சொல்லுகிறேண். மனிதனுக்கு அ ன்புண்டாவதற்குக் காரணம் முத லாவது தன்பெயரில் தனக்கிருக்கி ன்ற அன்பே. அந்த அன்பினுல் நீடியகாலம் சிவித்திருக்க ஆசிப்பா ன், மவுத்தை வெறுப்பான், சுகத் தை விரும்புவான், நோய்க்கிப் பய ப்படுவான், மனைவி மக்கள் உறவி னர்கள் நேசர்கள் முதலியவர்கள் மீதுண்டாகிற அன்பெல்லாம் தன் பெயரிலுள்ள அன்பைக் கொழுகியி ருக்கும். இரண்டாவது உபகாரஞ் செய்தவர்கள் பெயரி லுண்டாகும் அன்பு. மூன்ருவது சற்குணம் இ ல்மு வீரியம் முதலிய உத்தம குண ங்களும் அன்புண்டாகச் செய்யும். நாம் காணுதவர்களா யிருந்தாலும் இறந்துபோனவர்களா யிருந்தாலும் மேலான குணங்களை யுடையவர்க ளென்று அறிந்தால் அவர்கள்மீ த ன்புண்டாகும். நாயகம் சல்லல்லா கு அலைகிவசல்ல மவர்களின் திவ் விய குணங்களை யறிந்து அவர்கள் மீது பட்சமுண்டாகி விடுகிறது, அ ஸ்ஹாபி மார்களின் சற்குணங்கள் தெரியவந்து அவர்களை நேசித்து அ வர்களுக்கு எவ்வேளையும் துஆக்கே ட்கப்படுகிறது. காலிது ளியல்லா கு அன்கு அவர்களின் வீரியங்களை வாசிக்கும்பொழுது கல்பு பூரிக்கா தவர்களெவர், இப்படிப்பட்ட பெரி யோர்கள் பெயரிலுள்ள அன்பினுல் ஒருவரவர்களைத் தூசித்தால் இரத் தம் சிந்தும்படி நேரிடுகிறது, இவ ர்கள் சரீரமெல்லாம் மண்ணேடுசே ர்ந்து ஆயிரக்கணக்கான வருடங்க ளாகியும் அவர்களின் சற்குணங்க ளும், உத்தமமான நடக்கைகளும் எந்த ஸமானிலும் எவர் மனத்திலு ம் அன்பை யெழுப்பிக்கொண்டிருக் கும், ஒருவனுக்கு ஒரு மகன் சௌ ந்தரியமும் நிரப்பமான இல்மும், புகழத்தக்க சற்குணமும் தயாள சீல மூமாகிய நற்குணங்களிருந்தால் அ வன் பெயரிலெவ்வளவு அன்பாயிரு ப்பான். நான் சொல்லிய அன்புண் டாகச்செய்யுங் குணங்களெல்லாம் அல்லாகுத்தாலாவில் பரிபூரணமா யிருக்கின்றன. மனிதன் தன் பெ யரிலுள்ள அன்பே மற்றெவர்கள் பெயரிலுள்ள அன்பிலும் அதிகமெ ன்று சொன்னேன், அவன் மவுத்தை வெறுக்கிறதும் சுகத்தைப் பேணுகி றதும் பொருளைத் தேடுகிறதும் தா ன் நீடியகாலம் சீவித்திருக்க வேண் டுமென்கிற ஆசையினு லென்றுஞ் சொன்னேன். நீ உன்னைச்சிந்தி நீ இல்லாமலிருந்தாய், ஹக்குத்தாலா உன்னைப்படைக்க நாடாதிருந்தால் இன்னமும் நீ இல்லாதேயிருப்பாய், உன்னைப் படைக்க நாடினவனுமவ னே, அவன் சித்தத்தைக் கொண்டு நீ யுண்டாகி நிலைத்திருக்கிருய், உன து உஜூதல்லது உள்ளமை அவன் வுஜூதா யவனின் ஹயாத்து உன து ஹயாத்தாய், அவன் நாட்டமே

உனது நாட்டமாய், அவனுடைய அறிவே உனது அறிவாய், உனதூரகும் உனது தத்துவங்களும் உனது சரீரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பும் ஒவ்வொரு நரம்பும் அவனுக்குடையதாயிருக்க, நீ உனக்குச் சொந்தமென்று எதைச்சொல்வாய்? நீ சொந்தம் பாராட்ட எதைச்சம்பாதித்திருக்கிறாய்? இவைகளைச் சிந்தித்தால் நீ! நிழலைப்போலும், நிழலைக் கொடுக்கிற மரம் ஹக்கைப் போலுமென்பதை யறிவாய். அந்த நிழல் மரமில்லாமலிருக்குமா? ஆகையால் நீயுன் பெயரில் வைக்கும் அன்பு ஹக்கின் பெயரிலா யிருக்கவேண்டும்.

இரண்டாவது ஒருவன் உனக்கு உதவிசெய்தால் அவன் பெயரிலன்புஉனக்குண்டாகிறது, ஒருவன் பணத்தைக்கொண்டு உபகாரஞ் செய்தால் அவனைப் புகழுகிறாய் அவனை நேசிக்கிறாய், உள்ளமையை யறிந்தால் அவனைப் புகழ்வதற்கும் நேசிப்பதற்கும் பதலாக ஹக்குத்தாலாவையே புகழவும் நேசிக்கவும் வேண்டும், அப்பொருளைப் படைத்தவனும் அவனே, அப்பொருளைத் தந்தவனைப் படைத்தவனுமவனே, அவனுக்குத் தரும்படி நாட்டத்தைக் கொடுத்தவனுமவனே, அவன்முகத்தை யுன்புறந் திருப்பினவனுமவனே, உனக்குத்தரச் செய்தவனுமவனே, இன்னுமுனக்குப் பொருளைத் தருகிறவர்கள் தவாபை நாடி அல்லது புகழை நாடி அல்லது கீர்த்தியை நாடித் தருவார்கள். அல்லாகுத்தாலாவோ ஆலத்தைவிட்டுந் தேவையற்றவன், அவனுடைய கிருபை கடாக்ஷத்தால் சகல நிஉமத்துகளையும் சொரிந்துகொண் டிருக்கிறான், எவன் தந்தாலும் எவ்விதம் வந்தாலும் சகலதுக்கும் அவனே புகழுக்குரியவன், அவனே நன்றிக் குரியவன், அவனே யன்புக்குரியவன்.

மூன்றாவது பெரியோர்களின் சற்குணங்களுக்கும் உத்தமநடக்கைகளுக்கும் அவர்களை நேசிக்கிறோம், அவர்களை நேசிப்பது அல்லாகுத்தாலாவை நேசிப்பதாயிருக்கும். நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் என்னை நேசிப்பது நாயனை நேசிப்பதா யிருக்குமென்று சொல்லி யிருக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் அல்லாகுத்தாலாவின் நேசராயிருப்பதினாலேயே. நமது நேசரின் நேசர் நமது நேசராயிருக்கும், நாம் இல்முக்காகச் சிலர் பெயரிலன்பு வைக்கிறோம், துன்யாவிலிருந்தவர்கள் இனிமேலிருப்பவர்கள் சகலருடைய இல்முகளையெல்லாம் ஹக்குத்தாலாவுடைய இல்முக்கு ஒப்பிட்டால் சமுத்திரத்தினொருதுழி மட்டிலாவதிராதே, மனிதனின் அற்பஇல்முக்கு அவன் பெயரில் அன்புண்டாகவும் மட்டிலடங்சாத அல்லாகுத்தாலாவின் இல்முக்காக அன்புண்டாகா திருக்கவும் என்ன நியாயமிருக்கின்றது? மனிதனின் வீரியத்திற்காக அவனைப்புகழுகிறோம். அவன்மீது அன்புவைக்கிறோம், அண்டங்களை யெல்லாமுண்டாக்கி நடத்திவருகிற வல்லமையையும் குதறத்தையும் பார்த்து அவனைப் புகழாமலும் அவன் பெயரிலன்புவையாமலு மிருக்கக்கூடுமோ? மனைவிமக்கள் நேசர்கள் முதலியவர்களுடைய அன்பெல்லாம் சொற்பநாளி லில்லாதுபோனால் மறந்துபோகும், ஹக்குத்தாலாவோ நாமொருதுழி நீராயிருக்கையிலும், நாம் பாலகனாய்ப் பெலனில்லாதிருக்கை

யிலும், நாமுறங்கையிலும் விழித்திருக்கையிலும் அவனின் கருணையெனும் மாரியைச் சொரிந்துகொண்டிருக்கிருன், ஒரு எறும்பைப் பார்த்தாலும் அதிலவனின் மட்டிலடங்காத வல்லமை சூரியனின் பிரகாசம்போல் பிரகாசித்துக் கொண்டிருக்க, இது மனிதரில் மிகுதியானவர்களுக்குத் தோற்ருதிருப்பதற்குக் காரணமென்ன? ஆரிபீன்க ளிதற்கோ ருவமை சொல்லுகிருர்கள். சூரியனின் பிரகாசத்தைப் பார்க்கக்கூடாது குருடாயிருக்கின்ற வெளவாலைப்போல் நபுசுக்கிடங்கொடுத்த மனிதர்களின் பார்வை குருடாய்ப் போயிருப்பதால் ஹக்குத்தாலாவின் வல்லமையும் குதறத்தும் ஞானமும் படைப்புகளில் பிரகாசித்துக்கொண்டிருப்பதைக் காண்கிருர்களில்லை, இவைகளைச் சிந்தித்தால் புகழுக்குரியவனும் அன்புக்குரியவனும் அல்லாகுத்தாலாவே யன்றி வேறில்லையென்று திட்டமாகும், பெரியோர்களிவைகளையறிந்து ஹக்குத்தாலாவின் அன்பிலேமூழ்கி மற்றயாவையும் வெறுத்துவிடுவார்கள்.

## இஷ்க்கு ஆசை.

---

செய்கு, கல்பிலன்புண்டாகி அன்பானவர்கள் மறைந்திருந்தால் அவர்களைக் காணும் ஆசையுண்டாகும், இதுபோல் அல்லாகுத்தாலாவி லன்புண்டானுல் அவனைத்தரிசிக்கும் ஆசையுண்டாகும், ஒருவன் ஒரு பெண்ணைக்காண ஆசைகொண்டு அவள் மறைந்திருந்தால் அவளுடைய ரூபம் தன் கல்பில் தோற்றப்பட்டதாய் அவளைக்காணும் ஆசையுண்டாகிவிடும், அவளைக் கண்டவுடன் அந்த ஆசை நீங்கி அவள்பெயரில் அன்பு தரித்துவிடும். ஹக்குத்தாலாவின் விஷயத்திலோ துன்யாவிலும் ஆகிறத்திலும் அந்த ஆசை தீருதற்கு வழியில்லை, துன்யாவில் அவுலியாக்களுக் குண்டாகிற தெளிவான தரிசனைதானும் மென்மையான ஒரு திரையின் பின்னிருந்து காண்பதுபோலாயிருக்கும். ஆகையால்தான் அவுலியாக்கள் தரிசனை நிரப்பமாவதற்கு மவுத்தையாசிப்பார்கள், நிரப்பமான தரிசனை ஆகிறத்திலாயிருக்கும், நிரப்பமான தரிசனையென்று சொல்வது மறைவில்லாத தரிசனைக்காயிருக்கும், ஆகிலும் ஹக்குத்தாலாவின் தஜல்லியாத்துக்கு ஒரு முடிவில்லை, ஒரு தஜல்லியாத்தின் ஆனந்தத்திலிருக்கும்பொழுது அதற்குமேலான தஜல்லியாத்துகளைத் தரிசிக்கும் ஆசையுண்டாகி விடும், இவ்விதம் இந்த தஜல்லியாத்துகளின் தரிசனை யொன்றுக்கொன்று அதிகமாகி, ஆனந்தமும் இன்பமும் அதிக மதிகமாகிவரும், இதுபோலவே அல்லாகுத்தாலாவின் தஜல்லியாத்து ஒவ்வொருவருக்கும் வெவ்வேருயிருக்கும், அவனின் சிபத்துக ளொவ்வொன்றுக்கும் மட்டில்லாததுபோலவே அவனின் தஜல்லியாத்திற்கும் மட்டுமில்லை முடிவுமில்லை, அல்லாகுத்தாலாவின் தரிசனையை எங்களுக்குத் தந்தருள்வாஞக.

## அல்லாகுத்தாலாவுடனே மருவுதலாயிருக்கிறது.

---

அறபுப் பாஷையில் (ஆனஸ) என்றும், தமிழில் அன்யோன்யமாயிருத்தல் அல்லது மருவுதலாயிருத்தல். இந்தச் சொல்லின் கருத்து ஒருவரோடு பிரியமாய் நேரம்போக்

குதல் அல்லாகுத்தாலாவின் பேரில் ஆசையாயிருக்கையில் மறைவுநீங்கி தன் மஉருக்கின் திவ்யஅழகு பிரகாசித்து கல்பு மகிழ்ச்சிபொங்கி அந்தக் காட்சியின் பராக்கில் மற்றவைகளெல்லாம் மறந்து மனக்கலக்கங்களெல்லாமற்று மனப்பூரணமாயிருக்கும் மக்காமுக்கு ஆனஸ யென்கிற சொல்லை ஆரிபீன்கள் பாவிப்பார்கள், ஆகிலு மந்தக்காட்சி மறைந்துவிடுமோ வென்கிற பயமும் இடைக்கிடையுண்டாகும், அது மறைந்தவுடனே திரும்ப காணும் ஆசையுண்டாகிவிடும், இவ்விதம் ஆசையும் மருவுதலும் பயமும் ஒவ்வொன்றும் வருகிறதும் போகிறதுமாயிருக்கும். ஆபிது உனக்கு தஜல்லியாத்துகளைச் சொல்லும்பொழுது விவரித்துச்சொல்வார்கள், இவ்விதம் அல்லாகுத்தாலாவுடனே மருவுதலாயிருப்பவர்களின் அடையாளம் சில்லாவையல்லது தனித்திருப்பதையே தேடுவது. அப்துல்வாஹிது றகிமகுல்லாகு சொல்லுகிருர்கள்; ஒருநாள் துறவர்களிலொருவரிருக்கிற விடத்துக்கருகாய்ப் போகும்வேளையில் ஓ துறவியே! தாங்கள் தனித்தவர்களாய் எப்போதுமிருப்பது எனக் காச்சரியமாயிருக்கின்றதென்று சொன்னேன், அவர் ஓ மனிதனே! நீ தனித்திருப்பதின் இன்பத்தைச் சுகித்திருந்தால் நீ தனித்தவனுகவே யிருப்பாய், தனித்திருப்பது இபாதத்துகளுக்குச் சிரசாயிருக்கு மென்று சொன்னுர், நானவரிடம் தனித்திருப்பதிலுள்ள பிரயோசனங்களில் மிகவுங்குறைவானதென்னவென்று கேட்டேன் அவர்கள் மனிதர்களின் தொந்தரவுகளை விட்டும் ஆற்றல் பெறுவதும், அவர்கள் தீங்குகளைவிட்டும் சலாமத்துப் பெறுகிறதாயு மிருக்குமென்று சொன்னுர். அல்லாகுத்தாலாவின் மருவுதலினின்பம் எப்போதுண்டாகுமென்று கேட்டேன், துறவி அன்பு சுத்தமாகி அமல்கள் நீங்கும்போதென்று சொன்னுர். அன்பு சுத்தமாகிறது அன்பும் கவனமு மொன்ருகி வழிப்பட்டிருப்பதே யென்றுசொன்னுர். ருவியத்துல் பதவிய்யா றளியல்லாகு அன்கா அவர்களிடம் நீங்களிந்தப்பதவியை எவ்விதம் பெற்றுக்கொண்டீர்களென்று கேட்க, அவர்களெனக்கு உதவாதவர்களை விட்டுவிட்டேன், என்னைவிட்டு பிரியாதவனேடு மருவுதலாகி விட்டேனென்று சொன்னுர்கள். ஜுனைது றகிமகுல்லாகு அல்லாகுத்தாலாவோடு மருவுதலாயிருப்பவர்களால் முனுஜாத்திலும் கல்வத்திலும் வருகிற பேச்சுகள் குபுரிய்யத்தானவைகள் போலிருக்கும், ஆனுல் அவைகள் அவர்களுடைய பதவிக்குச் சரியாயிருக்குமென்று சொல்லியிருக்கிருர்கள்.

## ரிளா,

---

ரிளா வென்பது அல்லாகுத்தாலாவின் செயலுக்குப் பொருந்தியிருப்பது. இது அல்லாகுத்தாலாவின் பெயரிலுள்ள அன்பினுலுண்டாகும், முகர்றபீன்களுடைய உயர்த்தியான மக்காமா யிருக்கும், இது இரண்டுவிதமாயிருக்கும். முதலாவது தன்சரீரத்திற்கு ஒரு வருத்தமுண்டானுலும் ஒரு இடையூறுண்டானுலும், அவைகள் உணர்வுண்டாகாதிருக்கிறது. யுத்தஞ்செய்யும்பொழுது காயங்களுண்டானுலும் வேதனை தெரியாமலிருந்து இரத்தத்தைக் கண்டபின் காயமுண்டானது தெரியவரும், அல்லாகுத்தாலாவின் அன்பிலு மாசை

யிலும் மூழ்கியிருக்கையில் தன் சரீரத்துக் குண்டாகிற ஒருவருத்தமும் தெரியாது. இரண்டாவது அந்த வருத்தங்கள் தெரிந்தாலும் அவைகள் மஃசூபின் செய்கையா யிருத்தலால் அது பிரியமும் இஷ்டமுமா யிருக்கும். ஒரு அழகான பெண்ணின் பெயரிலாசை கொண்டவன் எவ்வளவு துன்பங்களை யனுபவிப்பான், எவ்வளவு கஷ்டங்களைச் சகிப்பான், அந்தப் பெண்ணின் அழகுதோலும் இரத்தமுஞ் சதையுஞ் சேர்ந்து தோற்றுவதாயிருக்கும், உள்ளே பலவித அசங்கீதமும் நஜீசுமாயிருக்கும். அதற்குத் தொடக்கம் நஜீசுவருந் துவாரத்தால் வந்தநீர், அதின்முடிவு அழுகி நாறும் பிணம். இதற்காக இவ்வளவு துன்பமும் கஷ்டமுமனுபவித்தால் ஹக்குத்தாலாவின் ஐமாலினழகோ பரிபூரணமானது ஒப்பில்லாதது முடிவற்றது, இந்த அழகின் ஆனந்தத்தில் மயங்கி யிருப்பவர்களுக்குத் துன்பங்கள் வந்தால் அதற்குப் பொருந்தா திருப்பார்களா? இப்படிப்பட்ட பெயர்களைக் குறித்துத்தான் அல்லாகுத்தாலா புகழாக, அல்லா அவர்களைப் பொருந்திக்கொண்டான், அவர்களவனைப் பொருந்திக்கொண்டார்களென்று சொல்லியிருக்கிறுனென்று செய்கு சொல்லியபின், முருக்கிபாவைப் பற்றிச் சொல்லுகிறேன் கேளென்று சொன்னார்.

## முருக்கிபா,

முருக்கிபாவாகிறது அல்லாகுத்தாலாவிலே எவ்வேளையும் இடைவிடாத சிந்தனையும் கவனமுமாயிருத்தல், இதற்கு அடித்தளம் அல்லாகுத்தாலா தன்னைப்பார்த்திருக்கிறுன், மனிதர் வெளிச்சரீரத்தைக் காண்பதுபோல் அவன் தன்கல்பையும் கல்பிலுண்டாகிற உதிப்பு எண்ணம் சகலதையும், கல்பிலுள்ள அந்தரங்கங்களையும் பார்த்துக்கொண் டிருக்கிறுனென்ற ஈமானுயிருக்கும். இவ்விதம் அல்லாகுத்தாலாவுக்கு மறைவாக நமது கல்பிலும் நமது சிர்ரிலுமொன்று மில்லையென்று சக்குச் சந்தாபமில்லாது திட்டப்பட்டால், அவனின் எண்ணமும் சிந்தனையும் அல்லாவின் பேரிலாகிவிடும். முருக்கிபாவில் உயர்த்தியான பதவியிலிருப்பவர்களுக்கு முகர்ரபீன்களென்றும், சித்தீக்கீன்களென்றும், அதற்குக்கீழான பதவியிலிருப்பவர்களுக்கு அஸ்ஹாபுல் யமீனென்றுஞ் சொல்லப்படும். முகர்ரபீன்களுடையவும் சித்தீக்கீன்களுடையவும் முருக்கிபாவாகிறது, அல்லாகுத்தாலாவுடைய மகத்துவத்தையும் அவனுடைய வல்லமையையும் சிந்திக்கிறதிலேயே அமிழ்ந்தி திகிலடைந்தவர்களாயிருப்பது. அவர்கள் கல்பு வேறொன்றிலுந்திரும்பாது, அவர்கள் வணக்கமெல்லாம் கல்பைக் கொண்டாயிருக்கும், அவர்களின் பறுளான வணக்கங்களை வழக்கப்படிக்குச் செய்வதற்குவரும். ஆகிலும் யோசித்தும் தரிபாடாகவுஞ் செய்வதற்குவராது, அவர்களின் கருத்தும் எண்ணமும் அவனைவிட்டு நீங்காது, இவர்கள் கண்ணைத்திறந்து கொண்டிருக்கையில் தாங்களிருக்குமிடத்தில் மனிதர்களிருந்தாலும் அவர்களைக் காணுர்கள், மனிதர்கள் பேசினுலும் காதுக்குக்கேளாது, இந்த ஹாலிலிருக்கையில் மனிதர்களிவர்களைப் பைத்தியக்காரர்களென்றும் நினைப்பார்கள். அவுலியாக்களுடைய சரித்திரங்களை நீ வாசித்தால் இந்த ஹாலையுடைய

வர்களின் சங்கதிகள் தெரியும், மு ரூக்கிபாவில் அஸ்ஹாபுல் யமீன்க ளுடைய முரூக்கிபாவாகிறது அல் லாகுத்தாலா தங்கள் ளாஹிறையும் பாத்தினையும் பார்த்திருக்கிறனென் கிற உறுதி யவர்களுக்கு மிருக்கும், ஆகிலு மவர்களின் முரூக்கிபாவில் திடுக்கமும் மயக்கமுமிராது. அம ல்களை யொழுங்குபோல் செய்வா ர்கள், அல்லாகுத்தாலாவின்மீது சிந் தனையும் விடார்கள், கியாமத்தில் பழிப்புக்குரிய காரியங்கள் சகலதை விட்டும் விலகிக்கொள்வார்கள், மனி தர்க ளவர்களிடத்தில் வந்தால் அவ ர்களோடு பேசுவார்கள், ஆகிலுமவர் களைக் கொண்டுள்ள பராக்கு அவர் களுக்குப் பிரியவீனமாயிருக்கும், இ வர்கள் தங்களுடைய அமல்களைப் பரிசோதித்தவர்களா யிருப்பார்கள், நிய்யத்துகளிற் பிசகுக ளுண்டாயிற் று? சைத்தானுடைய மருட்டுதல்க ளுண்டாயிற்றுவென்று ஆராய்வார் கள், அல்லாகுத்தாலாவுக்குத் தங்கள் அமல்களில் குறைவுகள் வந்துவிடு மோவென்று வெட்கமுடையவர்க ளாயிருப்பார்கள், அல்லாகுத்தாலா பார்த்திருப்பதால் நமது அமல்களெ ல்லாம் திருத்தமாயும் அல்லாகுத் தாலா ஏற்றுக்கொள்ளத்தக்கதாயு மி ருக்க வேண்டுமென்று அல்லாகுத் தாலாவுடைய சமுகத்தில் கூச்சமு டையவர்களா யிருப்பார்கள், ஒரு இ ராஜனுடைய பெரிய சபையில் ஒரு வேலையை யொருவன் செய்வதற்கு ப்போனல் அவனுக்கு எவ்வளவு கூ ச்சமும் வெட்கமுமிருக்கும்? இரா ஜாக்களுக் கெல்லா மிராஜன் பார் த்திருக்கிறனென் றறிந்திருக்கிறவ ன் எவ்வளவு கூச்சமும் வெட்கமு மாயிருப்பான். இந்த மக்காமிலிரு ந்து அல்லாகுத்தாலாவிஞெளிவு பி ரகாசித்து முகர்ரபீன்களுடைய ம றுத்தபாவுக்குச் சேரவேண்டும்.

மனிதர்கள் சிந்திக்குதல் பலவித மாயிருக்கும், சிலர் அல்லாகுத்தா லா படைத்திருக்கிற படைப்புகளில் ஒவ்வொரு படைப்பிலும் வெளியா கிற அவனின் குதறத்தைப் பார்த்து ஆச்சரியமும் மகிழ்ச்சியுங் கொள்வா ர்கள். சிலர் உலக மனிதரைமருட் டி மோசத்திலாக்குவதை நினைத்து அவைகளை வெறுத்து விடுவார்கள், இவர்கள் சுஹதாக்களாயிருக்கும். இ ன்னுஞ் சிலர் படைப்புகளை அல்லா குத்தாலாவுடைய சிபாத்துகளாய்க் காண்பார்கள், இவர்கள் ஆரிபீன்க ளும் அல்லாபெயரி லன்புள்ளவர்க ளுமாயிருக்கும். ஒருவன் தன் கிரு பையான சிநேகிதனின் கைவேலை யை அல்லது எழுத்தைக் கண்டால் எவ்வளவு சந்தோஷங் கொள்வான், அதிலெவ்வளவு பிரியங்கொள்வான். அதுபோலவே அல்லாகுத்தாலாவின் வேலையைப் பார்க்கும்போதெல்லாம் அல்லாகுத்தாலாவையே நினைப்பார் கள், அப்பொழு தவர்களுக்கு மலக் கூத்துடைய ஆலம் திறபட்டுவிடும்.

## திக்று

### சித்தம், சித்தி, வாசிலாத்து.

---

முரீது, திக்று என்று சொல்வதி ன் பொருளென்ன வென்று கேட் டான்.

செய்கு, திக்றுவது மறைவான ஆலம்களைத் திறக்குந் திறவுகோலா யிருக்கும், அதைக்கொண்டே அல் லாகுத்தஆலாவின் சேர்மான முண் டாவதுமா யிருக்கும். திக்றுக்குத் தமிழில் தியானமென்று சொல்லப்

படும், திக்ரு செய்வது சித்தத்தைக் கொண்டே. அதனுல் சித்தத்தின் தத்துவத்தை யுனக் கறிவிக்கிறேன் கேள்.

அல்லாகுத்தஆலா இன்சானுக்குத் தன் சிபத்துகளால் ஏழு சிபத்துகளை க்கொடுத் திருக்கிறுன். ஹயாத்து, அறிவு, சித்தம், தத்துவம், சேள்வி, பார்வை, பேச்சு ஆகியவைகளே. இந்த ஏழிலும் ஹயாத்தே பிரதான மானது. ஹயாத்தில்லாதுபோனுல் மற்ற சிபத்துகளைந்துமிருக்கக் கூடாது, மற்ற சிபத்துகளாறு மில்லாமல் ஹயாத் திருக்கக்கூடும். ஹயாத்து, இல்மு, குதறத்தாகிய மூன்றுமிருந்து இருதத் தில்லாதுபோனுல் ஒரு செய்கையும் வெளியாகாது. ஆகையால் சகல செயல்களையும் நடத்துகிறதும் ஒழுங்குப்படுத்துகிறதும் இருதத்தல்லது சித்தமே. இந்த சித்தம் அது சுயத்தில் மிகவுந் தத்துவத்தையுடையது, மனிதனிலிருக்கிற ஆசை கோபம் நற்குணம் துற்குணம் முதலியவைகளை யெல்லாமொழுங்காய் நடத்துகிறது சித்தமே. அது இவைகளுக்கெல்லாம் இராஜனுயிருக்கும், அறிவு அதற்கு மந்திரியாயிருக்கும், அந்த மந்திரியின் கருத்துப்படி நடத்திவந்தால் சாலிஹான மனிதனுயிருப்பான். இல்மு மார்க்கச் சட்டப்படி நடத்திவர வேண்டுமென்று சொல்லி அதுபோல் சித்தம் நடத்திவந்தால் ஆசை கோபம் முதலியவைகளை யெல்லாமடக்கித் தீய செய்கைகளிற் றிரும்பாமல் நடத்திவரும். ஆனுல் பெண்ணுசை யல்லது பொருளாசை யல்லது கோபம் அந்த சித்தத்தை மிகைத்து அதின் அதிகாரத்தைக் கீழ்ப்படுத்தி அவைகளே அரசாட்சிசெய்வதற் காகிவிட்டால், சித்தம் அவைகளுக் கடிமையாகிவிடும். நலவுசெய்ய சித்தமுண்டானுலும் அந்தத் துற்குணங் களிடங்கொடா. இவ்விதம் சித்தம் கீழ்ப்பட்டு இச்சைமேலிடச் செய்பவர்களுக்குப் பாவிகளென்றும் கெட்டவர்களென்றுஞ் சொல்லப்படும். இன்னுமொரு கூட்டத்தார் சரீரத்தின் இச்சை கோபம் முதலியவைகளை மட்டுமல்ல, சரீரத்தின் இயற்கைத் தேட்டங்களையும் சித்தத்துக்குக் கீழ்ப்படுத்திக் கொள்வார்கள். பசி உறக்கம் முதலியவைகளுஞ் சித்தத்திற்கு அடங்கிவிடும். இவ்விதம் பழகி வருகையில் சித்தம் மிகத்துவமுடையதாகி விடும், தன்னை யடக்குவதுபோல் பிறர் மனத்தையும் கீழ்ப்படுத்தக் கூடியதாகிவிடும். பிறரை வசப்படுத்துகிறது இந்த சித்தத்தின் தத்துவமே. பற்பல வித்தைகளும் தல்ஸமாக்களும் சித்திகளு மிதின் தத்துவத்தைக் கொண்டே யுண்டாகின்றன, இதற்குக் காரணமாவது உள்ளமையில் சகலமுமொன்ருயிருக்கின்றது. பற்பல சடலங்களைக்கொண்டு பிரிந்திருக்கின்றன. சரீரத்தின் குணங்களொடுங்கி றாகின் குணங்களும், சித்தத்தின் தத்துவமும் அதிகமாக மற்றவஸ்துகள் வேறென்றிருக்குந் தன்மை குறைந்து குறைந்துவரும். நமக்குமவைகளுக்குஞ் சம்பந்தமும் பற்றுமுண்டாகிவிடும், நமது சித்தத்தைப்பிறர் மனத்திற் செலுத்தினுல் அவர்கள் மனத்திலுண்டாகிற எண்ணங்கள் நமது மனத்தி லுதிப்பதுபோலிருக்கும். ஐரோப்பிய கல்விமான்களுக்கு இந்த உள்ளமை தெரியாததால் நமது சித்தத்தைப் பிறரிற் செலுத்தினுல் நமது மனத்திற்கும் பிறர் மனத்திற்கும் பிராணகாந்தமென்கிற காந்தம் கொழுகச்

செய்யுமென்று சொல்லுகிருர்கள். ஆகிலும் அவர்களிடத்தே தவ்ஹீதையுடைய இல்மில்லாததால் இவ்விதஞ்சொல்லுகிருர்கள், நாமொரு பொருளை மிகவும் விரும்பி வேறெண்ணங்களிற் சித்தம் திரும்பாது நிலக்கச் செய்துகொண்டால் அப்பொருளுடனே சேர்மான முண்டாகிவிடும், இதற்கு சித்தி யென்று தமிழிலும் வாசிலாத்து என்று அறபிலுஞ் சொல்லப்படும். ஒரு ஜின்னை விரும்பி சித்தத்தை யதிற் றரிபடுத்தினல் அது தனக்கு வசப்படும், தண்ணீரில் சித்தத்தைச் செலுத்தினல் நமது றூகுக்கும் அதின் றூகுக்கும் சம்பந்தமுண்டாகிவிடும், தண்ணீரின்மேல் நடப்பதற்குக் கூடியதாகிவிடும். நானுனக்கு முன்சொல்லிய ஆச்சரியமான வித்தைகளைச் செய்வது இந்த சித்தத்தின தத்துவமே, இந்த வாசிலாத்துகளுக்கும் சில ஷர்த்துக ளிருக்கின்றதால் சில அஸ்மாக்களையும் ஓதல்களையும் அவைகளிற் றேர்ச்சியடைந்தவர்கள் சொல்லியபடி செய்துவர வேண்டும். ஹிந்துக்கள் சில மந்திரங்களைச் சொல்லுவார்கள், நாகூர் ஹளறத்து சாவுல்ஹமீது ஆண்டவர்கள் கமாலிய்யத்தையுடைய குத்பா யிருந்ததுமல்லாமல் ஹீமியா, சீமியா, றீமியா வென்கிற சித்திகளெல்லா மறிந்திருந்தார்கள். அவர்களுடைய உஸ்தாது முகம்மதுகவ்து றளிலல்லாகூ அன்கு தங்களுடைய ஜவாஹிறுல் கம்சா வென்கிற கித்தாபில் இவைகளைப்பற்றி மிகவும் விரிவாய்ச்சொல்லியிருக்கிருர்கள். சித்திகளைப்பற்றி நீ யறியவேண்டுமாஞல் பதஞ்ஜாலியா வென்கிற றிசி யோகத்தைப் பற்றி எழுதிய புத்தகத்தைப் பார்த்தால் அறியலாம். ஆனுலிவைகளிலுன்கருத்தைச் செலுத்தாது அல்லாகுத்தாலாவுடனே சேர்மானத்தையல்லது வுசூலைப் பெற்றுக்கொள்ளுதற்குரிய அமல்களையே பற்றிப் பிடிக்கவேண்டும், இந்த வாசிலாத்துகளிலும் சித்திகளிலும் கருத்துச் செலுத்துகிறவர்கள் அவைகளுக்காகவே பிரையாசப்படுகிறவர்களல்ல, அவைக ளுயர்த்தியான வுசூலுடைய மறுத்தபாவுக் கேறுதற்கு உதவியாயிருக்கு மென்றே நானென்கிற உணர்வு அல்லது அன்னிய்யத்து அற்றுப்போகவேண்டும், மனத்தில் ஒரு எண்ணமும் நானிருக்கிறேனென்ற உணர்வும் வராமலிருக்கும் தன்மைவருவது மிகவும் வருத்தம். நமது ஆரிபீன்கள் இவ்விதஞ்சொல்வதமல்லாமல் ஹிந்து ஞானிகள் தாமும் சித்திகளை அற்பமாகவும், சமாதியைப் பெற்றுக்கொள்வது மிகவும் வருத்தமென்றுஞ் சொல்லுகிருர்கள். தமிழ் ஞானிகளி லொருவராகிய தாயுமான சுவாமி என்பவர் சொல்லியிருக்கிறதைச் சொல்லுகிறேன்.

"கந்துகமதக்கரியை வாசமாநடத்தலாங், கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாமொருசிங்க முதுகின்மேற்கொள்ளலாம், கட்செவியெடுத்தாடலாம்
வெந்தழலி நிரம்வைத்தைந்து லோகத்தையும், வேதித்துவிற்றுண்ணலாம்
வேறொருவர்காணுமை வுலகத்துலாவலாம், விண்ணவரையேவல்கொளலாஞ்
சந்ததமுமிளமையோடிருக்கலா மற்றொரு, சரீரத்திலும்புகுதலாஞ்
சலமேனடக்கலாங் கனன்மேலிருக்கலாந், தன்னிகரில்சித்திபெறலாஞ்
சிந்தையையடக்கியே சும்மாவிருக்கின்ற, திறமரிது சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே, தேஜோமயானந்தமே."

முரீது, நமது சுலூக்குக்கும் ஹிந்துக்களின் யோகத்திற்குமுள்ள வித்தியாசத்தையும் அவர்களின் யோகத்தையும் அறிய விருப்பமாயிருக்கிறேனென்று சொன்னான்.

## அஷ்டாங்க யோகம்.

---

செய்கு, நமது சுலூக்குடைய பாதை மிகவும் திறமென்று நீயறிந்துகொள்ளுதற்காக ஹிந்துக்களின் அஷ்டாங்க யோகத்தைக் குறித்துச் சொல்லுகிறேன்; அவர்களின் யோக விதிகள் பல பிரிவுகளாயிருக்கின்றன. பிரதானமான பிரிவுகளிரண்டு. இராஜயோகம், சத்யோகம். இவைகளின் விவரங்கள் மிகுதமிருக்கின்றன. இவைகளெல்லாம் அஷ்டாங்க யோகத்தில் நின்று பிரிந்தவைகளாயிருப்பதால், அவ்வஷ்டாங்க யோகத்தைக் குறித்துச் சொல்லுகிறேன். இவைகளில் முதலாவது இயமம், அதாவது:—கொல்லாமை, ஒரு உயிரையுங் கொல்லாதிருத்தல். மெய்மைகூறல், உண்மையே பேசுதல். கள்ளாமை, களவு செய்யாதிருத்தல். பிறர்பொருளிச்சியாமை, பிறருடைய பொருளைப் பார்த்து ஆசை கொள்ளாதிருத்தல். இந்திரிய மடக்கல், பஞ்சேந்திரியங்களா லுண்டாகிற இச்சை தேட்டம் யாவையும் அடக்குதல். இரண்டாவது நியமம், அதாவது:—தவம் விரதம் போலுள்ள தபஞ்செய்தல். தூய்மை, சரீரத்தையும் மனத்தையும் துப்பரவாய் வைத்துக் கொள்ளல். தத்துவ நூலோதல், தத்துவசாஸ்திரத்தை நன்றாயறிதல். மனமுவந்திருத்தல், மனத்தில் கலக்கங்களில்லாது சந்தோஷமாயிருத்தல். தெய்வம் வழிபடல், தெய்வ சித்தத்திற்கு அமைதல். மூன்றாவது ஆதனம், அதாவது யோகிகளிருக்கவேண்டிய இருப்புத் தரிப்புகள். சுவத்திகம், நிமிர்ந்திருந்து இரண்டு உள்ளங் கால்களையும் துடைகளுக்கும் முழங்கால்களுக்குமிடையே தரிக்கச்செய்தல். கோமுகம், இரண்டு கணுக்காலையுங் குறுக்கே சகனத்தின் கீழ் வைத்து இரண்டு கால் பெருவிரல்களையும் நன்றாய்ப் பிடித்துக்கொண்டிருத்தல். பதுமம், உள்ளங்கால்களிரண்டையும் முறுக்கினதுபோல் துடையில் தரிக்கச்செய் திருத்தல் வீரம், இடது கணுக்காலை வலது துடையில் வைத்து நேரே யிருத்தல். கேசரி, இடது கணுக்காலை அபானத்தின் கீழ்வைத்து இடது முழங்கையை முழங்காலில் தரித்து விரல்களை நீட்டி பார்வையை மூக்கில் தரித்துக்கொண்டிருத்தல். முத்தம், இடது கணுக்காலை அபானத்தில் அழுத்தி வலது கணுக்காலை அதின்கீழ் வைத்திருத்தல். மயூரம், இரண்டு முழங்கைகளையும் நாபியிலழுத்தி நிலத்தில் கைகள் தரிக்கச்செய்து கால்களை நீட்டித் தலையை யுயர்த்தியிருத்தல். சுகம், பெலத்திற்கும் சுகத்திற்குந் தக்கதாயிருத்தல். நாலாவது பிராணாயாமம், அதாவது பிராணவாயுவை இரேசகபூரக் கும்பகஞ் செய்தல். 1, இரேசகஞ் செய்தல் ஒரு நாசியால் சுவாசம் விடுதல், 2, பூரகஞ்செய்தல் மற்றநாசியால் சுவாசம் வாங்கல். 3, கும்பகஞ்செய்தல் சுவாசம் விடுவதையும் வாங்குவதையும் அடக்குதல். ஐந்தாவது உபாதியைநீக்கி யுண்ணோக்கல், அதாவது:—வருத்தங்கள் சகலத்தையுங் கீழ்ப்படுத்தி யவைகளை யுணர்வில்லாது சிந்தனையில் அமிழ்

ந்தியிருத்தல். ஆருவது தாரணை, இந்த ஐந்திலொன்றில் சிந்தையைத்தரிக்கச் செய்தல். கண்டம், இதையம், நெற்றி, கபாலம், நாபி ஆகியவைகளே. ஏழாவது தியானம் ஐம்புலனை யடக்கி சிவயோகஞ் செய்தல். பஞ்சேந்திரியங்களா லறியப்படுகிறவனைத்தையும் மறந்து சிவனிலேமனத்தை நிறுத்திவைத்தல். எட்டாவது சமாதி, சரீரத்திலிருந்தாலும் அதின் பற்றில்லாது ஆன்மாவாகிய தன்னைத்தான் காண்கிற தன்மையிலிருத்தல். ஆகிய இந்த எட்டுக்கும் அஷ்டாங்க யோகமென்று ஹிந்துஞானிகள் சொல்லுகிருர்கள்.

மூரீமு, நமது சுலூக்கில் சுவாசத்தை யடக்கிற துண்டாவென்று கேட்டான்.

செய்கு, மிகுதியான தரீக்குகளில் சுவாசத்தை யடக்குதற்குப் பழக்கவேண்டுமென்றில்லை, ஆகிலுஞ்சில தரீக்குகளிலிருக்கின்றது. சுவாசத்தை யடக்கப் பழக்கிக்கொள்வது பல வாசிலாத்துகளுக்கும் திக்றுக்கும் மிகவு முதவியென்பதற்குச் சந்தேகமில்லை. இது உன் மனத்திற்கே விளங்கும், நீ யொரு காரியத்தில் மனத்தைத் தரிக்கச்செய்யும்போது உன் சுவாசம் போகிறதும் வருகிறதும் நிதானமாகிவிடும். சுவாசத்தைச் சுபாவம்போல் போகவும் வரவும் விட்டால் சிந்தை யொன்றில் நிலைத்திராது, அதனுல்தான் ஹிந்து ஞானிகள் முதலாவது சுவாசத்தை யடக்குதற்குப்பழகிவருவார்கள், அவர்தள் சொல்லுகிறதாவது ஒரு மனிதன் ஒரு நாளையில் 21,600 மூச்சுவிடுவான். ஒவ்வொரு நாளும் இரண்டுமூன்று மூச்சைக் குறைத்துவந்து சிலகாலஞ் செல்லும்போது வெகு நேரம்வரையும் சுவாசம் அடக்கக்கூடியதாகிவிடும், இதிற் றேர்ச்சியடைந்தால் அஷ்டமாசித்தி அல்லது அஷ்ட பாக்கியம் கிடைக்கும், இந்த சித்திகளைப்பற்றி முன்சொல்லியிருக்கிறேன். இவ்விதம் சுவாசத்தை யடக்கிக் கொண்டுதான் அவர்கள் தியானத்திற் றரிபடுத்துகிறது, அவர்கள் தியானஞ்செய்யும் முறையாவது.

ஐம்பொறி யடக்கி மூலவாயுவை யெழுப்பி இடைபிங்கலை வழியை யடைத்துச் சுழிமுனை வழியைத் திறந்து பிரணவ நாதத்தோடுபோய் ஐந்தெழுத்தும் பிரணவ ரூபமான தன்மைகண்டு சிதாகாசத்தில் கலத்தல் இதின் கருத்தாவது:—பஞ்சேந்திரியங்களை யடக்கி வயிற்றிலிருந்து மூலவாயுவை யெழுப்பி சிரசிலிருக்கிற தொழை யறைகளைத் திறக்கச்செய்தால் ஓர் தெய்வீக நாதமுண்டாகும், (இந்த நாதத்திற்கு நமது சூபியாக்கள் சல்சலத்தில் ஜிரஸ் என்று சொல்லுவார்கள்.) பரிசுத்த ஐந்தெழுத்துகளையுங் காண்பான், ஏகமாயிருக்கின்ற பரத்தோடு சேர்ந்துவிடுவா னென்பதே.

இன்னும் தமிழ் ஞானிகளுக்குள் இவ்விதம் சுவாசத்தை யடக்கி, சிந்தையைக் கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி யாகியவைகளிலொவ்வொன்றிலுந் தரிக்கச்செய்து வரும்போது பிராணவாயு தன் சித்தப்படிக்குச் சரீரத்தில் வேண்டிய தலத்துற்குக் கொண்டு போகவும், அமைத்துவைக்கவுங் கூடியதாகிவரும், அப்படிச் செய்யக்கூடியவர்கள் உயிரைச் சரீரத்திலோர்தலத்தில் வைத்துவிட்டுத் தனது ஆன்மாவின் பற்று நீங்கி சமாதியிலிருக்கச் செய்துகொள்வார்கள் என்று சொல்லு

றார்கள். அவர்கள் சமாதியென்பது சேர்மானத்தின் பதவி. நானென்கிற பதிவில்லாது ஏகமாகிய ஆன்மாவில் சேர்ந்த தன்மையிலிருப்பது நமது ஸூபியாக்களிலும் இவைகளிருக்கின்றதென்பதற்கு அத்தாட்சி நானுனக்கு முன் சொல்லியிருக்கிற பன்சாப் தேசத்தில் சீக்குடைய இராஜாவிடத்திற்போய் நாற்பது நாள் புதைக்கப்பட்டிருந்து உயிரா யெழும்பின சரித்திரமே யென்று செய்கு சொன்னார்.

முரீது, தங்களுடைய பேச்சைக் கொண்டு மூச்சையடக்கிப் பழக்குவது நல்லதென்று தெரிகின்றதே யென்று கேட்டான்.

செய்கு, என்னுடைய கருத்தை நன்றாயறிந்துகொள். நானுனக்கு மூச்சை யடக்குவதனாலுள்ள பிரயோசனத்தைக் காட்டினேன், அதை இகழ்ந்து பேசமாட்டேன். ஆனாலதில் மிகவும் வருத்தங்களிருக்கின்றன, அநேகரிதைப் பழகப் பிரயாசமெடுத்து உயிரிழந்திருக்கிறார்கள். அநேகர் நோயாளிகளாய்ப் போயிருக்கிறார்கள், இன்னுமநேகர் பைத்தியக் காரர்களாயும் போயிருக்கிறார்கள். இதில் மிகுதியான இடையூறுகளிருக்கின்றன, நமக்கு இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதில்லை; மஷ்ஹூரான தரீக்குகளை யுடைய இமாம்களேற்படுத்திய சுலூக்குடைய ஏற்பாடுகளைப் பற்றிப்பிடிப்பதே உத்தமம். நமது சுலூக்குக்கும், ஹிந்துகளுடைய சுலூக்குக்கும் இரண்டு பாரதூரமான வித்தியாசங்க ளிருக்கின்றன. நாம் சரீயத்திலிருந்து படிப்படியாய் ஏறுகிறோம், நாமேறினமட்டிற்குப் பிரயோசனங்கிடைக்கும். முகியித்தீனிபுனு அறபி றலியல்லாகு அன்கு அவர்களுடைய சொற்படி மறுஞானிகள் லாயிலாஹ இல்லல்லா வென்னும் தஹ்லீலில் முவஹ்ஹிதீன்களானால் நரகத்தைவிட்டும் கார்மானம் பெறுவார்களென்று வைத்துக் கொண்டபோதிலும், கீழ் மறுத்தபாக்களில் அவர்களுக்கு சலாமத்தில்லை. அவர்க ளாகாசத்திற் பறக்கவும், தண்ணீரில் நடக்கவுங்கூடிய பதவிகளைப் பெற்றாலும் அவர்களுக்கு சலாமத்திற்கு இடமில்லை. இன்னும் நமது சுலூக்கில் மிகவும் பிரதானமாவது ஹக்குத்த ஆலாவின் மீது அன்பும் ஆசையும் வைக்குதல். அந்த அன்பும் ஆசையும் அவனுடனே விரைவிற் சேர்த்துவிடும், ஹிந்துக்களிடத்தே அவைகளில்லை. அவர்கள் இல்மைக்கொண்டும் பிரயாசத்தைக் கொண்டுமே ஏறவேண்டும். நாம் இல்மைக்கொண்டும் பிரயாசத்தைக்கொண்டும் அவன் பெயரிலுள்ள அன்பைக்கொண்டும் ஆசையைக்கொண்டும் சரீயத்தில் ஆதாரமாக ஏறுகிறோம். ஹக்குத்த ஆலாவின்பேரில் ஆசைகொண்டால் வேறு எண்ணங்களெல்லாம் மாறிவிடும், அவனோடு சேர்மான முண்டாக்கிவிடும். ஆகையால் நமது சுலூக்கின் வழியே உத்தமமென்பது நிச்சயமென்று சொன்னார்.

முரீது, தரீக்குகளெத்தனை யிருக்கின்றன வென்று கேட்டான்.

## நாற்பது தரீக்குகள்.

செய்கு, ஜாமிஉல் ஹுகூலென்கிற கித்தாபில் நாற்பது தரீக்குகளிருக்கின்றதாகச் சொல்லி யிருக்கிறது. அவைகளாவன:—காதிரிய்யா, சாதுலிய்யா, நக்ஷபந்திய்யா, றபாயிய்

யா, அஹ்மதிய்யா, தஜூக்கிய்யா, அக்பரிய்யா, மௌலவிய்யா, சஹ்றுவர்திய்யா, கபறவிய்யா, கல்வத்திய்யா, ஜல்வத்திய்யா, பஃதாசிய்யா, கஸ்ஸாலிய்யா, றூமிய்யா, ஸஉதிய்யா, ஜிஷ்திய்யா, ஷஉபானிய்யா. கல்ஸனிய்யா, ஹம்ஸவிய்யா, பைறூமிய்யா, இஷாக்கிய்யா, பக்கீரிய்யா, உமரிய்யா, உதுமானிய்யா, அலவிய்யா, அப்பாஸிய்யா, சைனபிய்யா, ஈஸவிய்யா, மஃறபிய்யா, புஹாரிய்யா, ஹத்தாதிய்யா, கைபிய்யா, கிழிரிய்யா, ஷத்தாரிய்யா, பையூமிய்யா, மலாமிய்யா, ஐதறூஸிய்யா, மத்பூலிய்யா, சுன்புலிய்யா, உவைஸிய்யா வாகியவைகளே யென்று சொன்னார்.

முரீது, நாயகமே இந்தத் தரீக்குகளல்லாமல் வேறு தரீக்குகளில்லையாவென்று கேட்டான்.

செய்கு, மிகுதமிருக்கின்றன. ஹிந்துஸ்தான், ஹீறுன், திஹ்றுன், குறுஸான் முதலிய தேசங்களில் சூபிய்யாக்களுடைய வழியைச் சேர்ந்தவர்கள் பல பிரிவுகளிருக்கின்றன. அவர்களுக்கு பக்கீரென்றும், அவர்கள் தரீக்குக்குத் தலைமையானவர்களுக்குப் பீரென்றுஞ் சொல்லப்படும். இவர்களில் மிகுதியான கூட்டங்கள் அலிறளியல்லாகு அன்கு அவர்களில் நின்றும் சில்சிலா பிடிக்கிறார்கள், சிலர் அபூபக்றுஸ் ஸித்தீக்கு றளியல்லாகு அன்குவில் நின்றும் சில்சிலா எடுக்கின்றார்கள், அவர்கள் கூட்டத்திற்கு ஒவ்வொரு பீருண்டு. பீர் குவாஜா, ஹசன்குவாஜா, ஹசன்பஸரியில் நின்றும் ஒன்பது கூட்டங்கள் பிரிந்திருக்கின்றன. தைபூரிய்யா அவர்கள் அபாயசீதுல் பிஸ்தாமி றகுமகுல்லாகு அவர்களுடைய தரீக்கைச் சேர்ந்தவர்கள், கர்கிய்யாக்கள் செய்கு மஉரூபுல் கர்கீ றகுமகுல்லாகு அவர்களின் தரீக்கு, ஜூனைதிய்யாக்கள் ஜூனைதுல் பஃதாதி றகுமகுல்லாகுவின் தரீக்கு, சிர்ரிஸ்சிந்திய்யாக்கள் சிர்ரிஸ்சிக்தி றகுமகுல்லாகு அவர்களுடைய தரீக்கு, கஸ்றூனிய்யாக்கள் இவர்கள் ஹனீபா கஸ்றூனி றகுமகுல்லாகு அவர்களுடைய தரீக்கு, தர்தூசிய்யாக்கள் இவர்கள் அப்துல்பாரு தர்தூசி றகுமகுல்லாகு அவர்கள் தரீக்கு இவர்களுக்குப் பொதுவாய் காதிரிய்யா பக்கீரென்று சொல்லப்படும். இன்னும் பிர்தூசி நிஜாமுத்தீன் பிர்தூசி றகுமகுல்லாகு அவர்களுடைய தரீக்கு, ஷஹ்றவர்திய்யாக்கள் அபூநஜீப் ஷஹ்றவர்தீ றகுமகுல்லாகு அவர்களுடைய தரீக்கு இவர்களுக்குப் பொதுவாய் ஷஹறவர்தீ பக்கீர்களென்று சொல்லப்படும். இன்னும் பீர்அப்துல் வாஹிது இபுனுசெய்யிது கூபி றகுமகுல்லாகு அவர்களால் சில கூட்டங்கள் பிரிந்தார்கள், ஈசிய்யாக்கள் அவர்கள் பூசில் இபுனு ஈசா றகுமகுல்லாகுடைய தரீக்கு, அத்ஹமிய்யாக்கள் அவர்கள் பீர் இபுறுகீமிபுனு அத்ஹம் றகுமகுல்லாகு, சித்தீக்கிய்யாக்கள் அவர்கள் பீர் செய்கு அபூ இஸ்ஹாக்குஸ் சித்தீக்கு றகுமகுல்லாகு இவர்களுக்கெல்லாம் ஜிஷ்தீ பக்கீரென்று சொல்லப்படும். இன்னும் இவைகளல்லாமல் வேறு கூட்டங்களு மிருக்கிறார்கள்.

முரீது, இந்தத் தரீக்குகளி லெந்தத் தரீக்கு உயர்த்தியான தென்று கேட்டான்.

செய்கு, இன்ன தரீக்கு உயர்த்தியென்றும் சொல்லக்கூடாது. ஒவ்வொரு தரீக்குடைய இமாம்களும்

நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய தரீக்கைத்தான் பின்பற்றினவர்கள். வித்தியாசமெல்லாம் ஒவ்வொருவரும் கல்பு பல பராக்குகளிலுஞ் செல்லாது ஹக்கில் தரிபடுத்துதற்கு நடக்கவேண்டிய முறைகளைப்பற்றி அவரவர்கள் ஐயம்பெற்ற வழியைக் காட்டி யிருக்கிறார்கள். இவர்களில் இந்தத் தேசங்களில் காதிரிய்யா, சாதுலிய்யா, நக்ஷிய்யா வாகிய தரீக்குகள் தான் மிகுதம் என்று சொன்னார்.

முரீது, சிலர் செய்கு அப்துல்காதிறு ஜீலானி றளியல்லாகு அன்கு அவர்கள் பதவியி லுயர்ந்தவர்களென்றும், சிலர் அபுல்ஹசன் அலிய்யிஷ் ஷாதுலிய்யி றளியல்லாகு அன்கு அவர்கள் உயர்ந்த பதவியென்றுஞ்சொல்லுகிறார்களே, இதைப்பற்றித் தாங்கள் என்ன சொல்லுகின்றீர்களென்று கேட்டான்.

செய்கு, சில கித்தாபுகளில் அபுல்ஹசன் ஷாதுலிய்யி றளியல்லாகு அன்கு பதவியி லுயர்ந்தவர்களென்றும், வேறு கித்தாபுகளில் செய்கு அப்துல்காதிறு ஜீலானி றளியல்லாகு அன்கு பதவியிலுயர்ந்தவர்களென்றுஞ் சொல்லப் பட்டிருக்கின்றது நிசம். ஆயினும் அவர்கள் பதவிகளை மட்டுப்படுத்துதற்கு அல்லாகுத்தஆலா வல்லாமல் வேறொருவராலுங் கூடாது. அவர்களொவ்வொருவரையும் பின்பற்றி அவுலியாக்களாகவும், குத்புமார்களாகவுமாகியிருப்பவர்கள் கணக்கிலுண்டா? ஆகையால் நீ எந்தத் தரீக்கிலிருந்தாலும் அவர்களிருவரி லொருவரையுங் கீழாக்கிப் பேசாமல் அவர்களிருவருடைய பறக்கத்தையும் உதவியையும் பெற்றுக்கொள்ள ஆசைவை. ஆனால் ஒவ்வொரு குத்துபுமார்களுக்கும் நபிமார்களுக்குப்போலவே தனதாயச் சில அருள்களை அல்லாகுத்தஆலா கொடுத்திருக்கிறான். ஆலத்தில் அதிகாரத்தை நடத்துந் தத்துவமும், உதவி செய்யுந் தத்துவமும் செய்கு அப்துல்காதிறு ஜீலானி றளியல்லாகு அன்கு அவர்களுக் கதிகமாய் அல்லாகுத்தஆலா கொடுத்திருக்கிறானென்றும், இல்மின் தத்துவமும், அல்லாகுத்தஆலாவுடைய அருளின் தத்துவமும் அபுல்ஹசன் ஷாதுலிய்யி றளியல்லாகு அன்கு அவர்களுக்கு அல்லாகுத்தஆலா அதிகமாய்க் கொடுத்திருக்கிறானென்றும், நக்ஷபந்தீ முகம்மது பஹாவுத்தீன் றளியல்லாகு அன்கு அவர்களுக்கு வஹ்தத்தென்கிற சமுத்திரத்தில் அமிழ்ந்துந் தத்துவத்தை யதிகமாய்க் கொடுக்கப்பட் டிருக்கின்றன வென்றும், முகியித்தீனிபுனு அறபிறளியல்லாகு அன்கு அவர்களுக்கு மஃரிபாவுடைய இல்மையும் நிரப்பத்தையு மதிகமாயும் அஹ்மதுல் பதவி றளியல்லாகு அன்கு அவர்களுக்குக் கருணையும் இரக்கமும் அதிகமாயும், மவுலானா றூமி றளியல்லாகு அன்கு அவர்களுக்கு அன்பு மாசையும், செய்யிது அஹ்மதுக பீறுர்றபாயி றகுமகுல்லா அவகளுக்கு அற்புதமும் உதாரகுணமும் அதிகமாயுங் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று ஜாமிஉல் உசூலில் சொல்லப்பட் டிருக்கின்றது. அல்லாகுத்தஆலா அறிவானென்று செய்கு சொன்னார்.

முரீது, திக்றைப்பற்றிய விவரங்களைத் தாங்கள் கிருபை கூர்ந்து சொல்லித்தர வேண்டுமென்று கேட்டான்.

செய்கு, திக்றைப்பற்றிய அறிவுகளை ஒவ்வொரு மக்காமிலும் அந்தந்த மக்காமுக்குடைய திக்றை நான் சொல்லித்தர வேண்டும், ஆகிலும் ஒரே முறையில் விரிவாய்ச் சொல்லுவது நல்லதென்று நிறுத்தினேன். இந்த அறிவுகள் என்னிலு மதிகம் அறிந்தவராகிய அந்தப் பொதும்பிலிருக்கிற ஆபிதிடம்போய் என் சலாம் சொல்லி திக்றைப்பற்றிய அறிவுகளையும், நபுசு முத்மயின்ன, முளிய்யா, மறுளிய்யா, கமாலிய்யா வாகிய மக்காம்களின் அறிவுகளையும், முலஹிமாவென்கிற மக்காமைப்பற்றிய இல்ஹாமுடைய அறிவுகளையும் சொல்லித்தரும்படி கேள், அவர்கள் சொல்லித் தருவார்களென்று சொன்னார்.

## முத்மயின்ன, முளிய்யா, மறுளிய்யா, கமாலிய்யா.

முரீது, ஆபிதிடத்தே சென்று நாயகமே! எனது உஸ்தாதவர்கள் என்னைத் தங்களிடத்தே வந்து தங்கள் கிருபைக் கண்ணை லென்னைப் பார்க்குந் தயவைக் கோரவும், தங்கள் கருணையால் முத்மயின்ன, முளிய்யா, மறுளிய்யா, காமிலாவாகிய மக்காம்களின் அறிவுகளால் எனது கல்பு துலங்கச்செய்யவுந் தங்களை வணங்கி நிற்கும்படி சொன்னார்கள்; தாங்களென்னைத் தங்களின் அடிமையாக்கிக் கொள்ள வேண்டு மென்று சொன்னான்.

ஆபிது, எனது பிரியமுள்ள மகனே இந்த மக்காம்கள் ஒளியை யுடைய தவ்ஹீதெனும் சமுத்திரமாயிருக்கும், இந்தப்பதவியை யுடையவர்கள் ஐயம்பெற்றவர்கள், மனுச்சரீர முடையவர்களா யிருந்தாலும் மலாயிக்கத்துகளின் தன்மை யுடையவர்கள்.

நீ என்னிடங்கேட்ட இல்முகளைப் பற்றி நான் உபதேசிக்குமுன் என்னுடைய சரித்திரத்திற் கொஞ்சம் சொல்லுகிறேன் கேள்.

## ஆபிதுடைய சரித்திரம்.

நான் சிறுபராயமா யிருக்கையில் இல்மிலாசைகொண்டு மிகு ஆவலாய்ப் படித்தேன், வாலிபமானபோது உலகத்தின் ஆசை குறைந்தும் இபாதத்தில் ஆசை யதிகமாகிக் கொண்டும் வந்தது. அவ்வித மிருக்கையில் துன்யா என்னைப்பார்த்துச் சொல்லிற்று; எனது பிரியமான பிள்ளையே நீ விவாகஞ்செய்யா திருப்பதேன், அல்லாகுத்தஆலா ஆணும் பெண்ணுமாய்ப் படைத்து இஷ்கையும் கொடுத்து அதைத் தீர்த்து இன்பங்கொண்டாடுதற் குரிய உறுப்புகளையுந்தந்து நீங்கள் பலுகி துன்யாவைச் சிறப்பிக்கச் செய்திருக்க, நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நிக்காகுசெய்து கொள்ளுங்கள், பிள்ளைகள் பெற்றுக் கொள்ளுங்கள், நிக்காகு செய்து என் தீனி லரைவாசை நிறைவேற்றிக் கொள்ளுங்களென்று சொல்லியிருக்க, சுபாவத்திற்கு மாறாகவும், ஹக்குத்த ஆலாவின் சித்தத்திற் கிணங்காமலும், நாயகமவர்களின் ஏவலுக்கு விரோதமாகவும் நடப்பது புத்தியோ, மனைவியைச் சமரக்ஷணை செய்வதால்

கிடைக்கிற தவாபையும், பிள்ளைகள் வளர்த்து இல்மு கற்றுக்கொடுப்பதா லுள்ள பேறுகளையும் சிந்தி, உனது ஒருதுளி இந்திரியத்தால் ஆயிரம் வருடத்திற்குள்ளாக இலக்ஷக்கணக்கான முஸ்லிம்கள் பலுகி துன்யாவைச் சிறப்பாக்கவும், அவர்களி லெத்தனை பெரியோர்கள் அவுலியாக்க ளுண்டாகவுங் கூடுமென்பதை யோசித்துப்பார், அதனுலெவ்வளவு பேறு கிடைக்கு மென்பதையும் யோசி என்று பல நியாயங்களைச் சொன்ன போது விவாகஞ்செய்வதில் என்மனந்திரும்பி ஒரு அழகான பெண்ணை நிக்காகு செய்தேன். ஒரு மாதம் வரையும் சொர்க்கத்தி லின்பம் அனுபவிப்பதுபோல் ஆனந்தமாயிருந்தது, ஒரு மாசஞ்சென்றபின் ஒரு நாள் என் மனைவி ஒரு விருந்துக்குப்போய் வந்து முகம் வாடிச் சலித்தவளாக இன்னாரின் மனைவி பொன்காய்த்த மரமாகவும், இன்னாரின் மனைவி இரத்தினங்களணிந்து அந்த வீட்டைப் பிரகாசிக்கச் செய்கிறவளாகவு மிருந்தார்கள், நானொரு இரப்பானின் மனைவியைப்போ லிருந்தேன். மறுபெயர்கள் கலியாணம் முடிப்பதற்கு நானும் முடித்தேன் என் தலைவிதிக் கென்செய்வேனென்று பெருமூச்சு விட்டா,ள் அந்தப் பெருமூச்சு என் மனத்தைக் கலக்கிவிட்டது, அது வரையும் என் கல்பிலிருந்த நல்ல எண்ணங்கள் பறந்துவிட்டன. பொருள் சம்பாதிக்க வேண்டும் மனைவியின் மனத்தைச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்கிற நாட்டமே குடிகொண்டு விட்டது. வணக்கத்தையும் விட்டுவிட்டேன், என் மனைவியி னூழியனுகிவிட்டேன், ஆகிலு மெனது சிறு பராயத்தில் மனதிலுண்டான அறிவு ஹரூமாய்ச் சம்பாதிக்காத மட்டிற்குக் காப்பாற்றிக் கொண்டது. இப்படியிருக்கையில் ஒரு நாளிரவு சொப்பனத்தில் நான் சக்ருத்துடைய ஹாலாயிருக்கவும், என் முன்னே பயங்கரப்படத்தக்க ரூபமுடைய ஒரு செய்தான் நிற்கவுங் கண்டேன். அந்த செய்த்தான் என்னை நோக்கி நான் தான் உன்னை வழிகெடுத்த உனது மனைவியென்று சொல்லிற்று. நான் பதறி விழித்து தொடக்கத்தில் தக்வாவுடையவனு யிருந்ததையும், இந்த விவாகஞ்செய்ததால் நான் பாவியாய் நரகத்திற்குப் பாத்திர முடையவனு யிருப்பதையும் நினைத்து அழுதுகொண் டிருக்கையில் துன்யா மகனே! என் சலிக்கிறுயென்று கேட்டது. நான் அடா முனிவு பெற்றவனே உனது உபதேசத்தைக் கேட்டுப் பெண்ணுக்கு அடிமையானேன், அல்லாகுத்தஆலாவுக்குப் பகையனுனேன், நரகத்திற்கு விறகானேன், இதிலு மதிக மோசத்தி லென்னை இறக்கவா திரும்பவும் தோன்றியிருக்கிறு யென்று சொன்னேன். துன்யா அதற்கு மறுமொழியாக ஆதமுடைய மக்கள் நன்றியற்றவர்கள், அல்லாகுத்த ஆலா இந்த சீவியத்தில் இன்சானுக்குக் கொடுக்கவேண்டிய நிஉமத்துகளனைத்தையும் என்னிலமைத்து வைத்திருக்கிறுன், விரும்பினவர்களுக்கெல்லாம் தாராளமாய்க் கொடுக்கிறேன். அவர்களுக்குச் சுகிக்கும் முறை தெரியாமலும் என்னிலிவைகளை யெல்லாம் அமைத்துவைத்த றகுமானை சுக்று செய்யாமலும் தவறுய் நடந்துவிட்டு கடைசியாய் என்னை நிந்திக்கிறவர்களா யிருக்கிறுர்கள். ஆனு லிப்பொழு தினக்கொரு உபதேசஞ் சொல்லுகிறேன் உனக்

குப் பிரியமானால் அதின்படி நடக்கலாம், நீ பல சிக்குகளிலுஞ் சிக்கிக்கொண்டிருக்கிறாய் அவைகளை விட்டுங் களர உனக்கொரு வழியுமில்லை, நீ மிகவும் பிரயாசப்பட்டு எவ்விதமும் விரைவில் பொருளைச் சம்பாதிக்கவேண்டும், பொருளைக்கொண்டே உனது கஷ்டங்களெல்லாம் நீங்கவேண்டும், உனது மனைவி மக்களுக்கெல்லாம் தேவையானமட்டு வைத்துவிடவேண்டும், சகலரையும்விட்டு நீங்கவேண்டும், இவ்விதமல்லாது உன் சலாமத்துக்கு வேறு வழியில்லையென்று சொல்லிற்று. நானதன்பின் அதிகமாய் யோசித்துப்பார்த்தேன், துன்யா எனக்குச் சத்துருவாயிருந்தாலும் அதுகாட்டிய வழியே யல்லாது வேறொரு வழியுந் தெரியவில்லை. அதுமுதல் பண மதிகமாயும் விரைவாயுஞ் சம்பாதிக்கவேண்டுமென்கிற ஆவலுண்டாகிவிட்டது. பொய் மாறுபாடு வஞ்சகம் முதலிய தீமைகளைச் செய்தாவது, ஒருவரைக் கெடுத்தாவது சம்பாதிப்பதற்கு மனம் பின்செல்லவில்லை, நன்மை தீமை யென்று முணர்வற்றுப்போயிற்று, பாவக்கடலில் மூழ்கிவிட்டேன். ஒரு நாளொரு ஆலிம் வஉழு சொல்வதைக் கேட்டிருந்தேன் உறங்கி விழித்தவனைப்போல் சில நேரம்வரையும் எனது தொடக்கத்தின் ஹாலையும் இப்பொழு திருக்கிற ஹாலையும் சிந்தித்து என் கதியை நினைத்துக் கவலையாயிருக்கையில் துன்யா என் முன்னேதோன்றி என்னிடம் ஏன் சவிக்கின்றாயென்று கேட்க, நான் அடா அல்லாகுத்தாஆலாவின் லஉனத்துப்பெற்ற மூதேவியே, விவாகஞ்செய்யாது அல்லாகுத்தஆலாவின் இபாதத்தில் எனது காலத்தைப்போக்க நினைத்திருந்தவனைத் தந்திரமான பேச்சுகளால் மருட்டி விவாகஞ் செய்யச் செய்வித்தாய், அவளாலுண்டாயிருக்கிற கஷ்டங்களை யென்னென்று சொல்வேன், மோகத்தை யெழுப்பி இன்பத்தைத் தந்து வசமாக்கிக்கொண்டாள், கோபத்தைக் காட்டி அஞ்சச் செய்தாள், அழுது கண்ணீர்விட்டு மனத்தை யுருக்கிக் கீழ்ப்படுத்தினாள், உனது மாயவஞ் சகங்களை நிறைவேற்றும் இஷ்டப் பணிவிடைக் காரியா யிருக்கிறாள். செய்த்தானை வெல்லுவேன், இவளைவெல்ல வொண்ணாது (அஊதுபில்லாஹிமினஷ் ஷைத்தானிர்றஜீம்) என்று சொன்னால் செய்த்தான் விரண்டோடி விடுவான், குறுவான் முழுவதையும் ஓதி யூதினாலும் அவளின் கொடிய நாவையாவது தடுக்கக்கூடாது. இவளாலுண்டான துன்பங்கள் போதாதென்று பொருளை விரைவாய்ச் சம்பாதித்து வைத்துவிட்டு துறவனாகலாம், இபாதத்துச் செய்யலாமென்று போதித்தாய் ப்பாதகா! இந்தப் போதனையா லெத்தனையெத்தனை கோடிச் சனங்களை ஹலாக் காக்கிவிட்டாய், பதறிப்பதறித் தேடியவைகளெல்லாம் சக்றாத்தில் நெருப்பாகவும் பாம்புகளாகவும் நரகமாகவும் தோன்றி அதாபு செய்வதற்காக்கிவிட்டாய்? எவ்வளவு சனங்களை நாசமாக்கினாய்? உனக்கொரு நாசமில்லையே, குரூர நெஞ்சையுடைய கொடியவனே. எனக்குச் செய்த நிஷ்டூரங்கள் போதாதென்று திரும்பவும் என்முன்னே என்னைக்கெடுக்க வந்திருக்கிறாயென்று சொன்னேன். துன்யா புத்திகெட்டவனே நான் அவளை மனைவியாக்கச் சொன்னதல்லாது அவளுக்கு அடிமையாகிப் போகச் சொல்

லவில்லையே, நீ துன்யாவில் செல்வமும் ஆகிறத்தின் பாக்கியமும் பெற நாடினால் சற்குண முடையவளாகவும், இல்மை யுடையவளாகவும் சாலிஹான நடக்கையுள்ளவளாகவும் ஒரு பெண்ணைத் தெரிந்துகொள்ள வேண்டும். நீ அழகையுங்குலத்தையும் பொருளையும் தெரிந்துகொண்டாய், தாய் தந்தையர்கள் தங்களின் பெண் பிள்ளைகளுக்கு இல்மும் சற்குணமும் பயிற்றாது மிருகங்களைப்போல் வளர்த்து அவளுக்கு அநியாயஞ்செய்வது மல்லாமல், அவளும் அவளை விவாகஞ்செய்கிற புருஷனும் அவள் பெறும் பிள்ளைகளும் ஹலாக்காய்ப் போகச் செய்கிறார்கள். உனது மனைவி விருந்து வீட்டுக்குப் போனவுடனே அவளில் நபுசானிய்யாவின் இரண்டு தீயகுணங்கள் உற்பத்தியாகி விட்டன. மறு பெண்களில் பொறாமையும், அழகான உடைகளும் ஆபரணங்களுமணியும் ஆசையும் வெகு மும்முரமாய்க் கிழம்பின வேளையில் நீ நற்போதனைகளைக் கொண்டும், அல்லாகுத்தஆலாவின் திருவசனத்தைக்கொண்டும், நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய ஹதீதுகளைக்கொண்டும் போதித்து அத்தீயகுணங்களை யடக்க வேண்டும், அப்படிச்செய்யாது அவளின் நபுசானிய்யாவின் குணங்களுக்கு வசியமாகிவிட்டாய். அற்பநேரம் நஜீசுவரும்உறுப்புகளைச் சேர்த்து உசுப்பும் நீசவேலைக்கு இம்மையின் செல்வத்தையும், மறுமையின் நீடித்த வாழ்வையும் விற்றுவிட்டாய், இவ்விதம் குற்றமெல்லாம் உன்னிலிருக்க என்னை நிந்திப்பதும் திட்டுவதும் நியாயமா? ஆகிலும் பொருள் கெட்டதுமல்ல, பொருள் சம்பாதிப்பது கெடுதியுமல்ல. பொருளைப் பாவிப்பதில் நலவும் இடருமுண்டு, பொருளைக்கொண்டு மிகுதியான நல்ல அமல்கள் செய்யவுங் கூடியதாயிருக்கிறது. ஆகையால் நான் கடைசியாய் உனக்குச் சொல்லும் உபதேசத்தைக்கேள்; நீ துன்யாவை விட்டு நீங்க வேண்டியதுமில்லை, ஆகிறத்தை மறக்கவேண்டியதுமில்லை, வெளிச்செயல்கள் துன்யாவைச்சேர்ந்தவைகளாயிருக்க, உனது கல்பை அல்லாகுத்தஆலாவுக்கு ஒப்புக்கொடுத்துவிடு. இதற்காக இந்த ஊர்களில் செய்குமார்கள் வருகிறார்கள், அவர்களி லொருவரிடம் நசீஹத்துப் பெற்றுக்கொண்டு அவர்கள் சொல்லுகிறபடி கல்பை ஹக்குத்த ஆலாவின் திகிறில் தரிபடுத்திக்கொள், உலகவேலைகளையும் விடாது பிடித்துக்கொள், நபிமார்கள் விவாகஞ்செய்யவில்லையா? இராஜாங்கஞ் செய்யவில்லையா? மனத்தை இழைக்கவிடாது தைரியமாயிருந்துகொள்ளென்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டது. இந்த உபதேசம் என் கல்பைக்குழிரச்செய்தது, மிகவுஞ் சந்தோஷத்துடனே ஒரு செய்கிடம்போய் எனக்கு நசீஹத்துத் தரவேண்டுமென்று கேட்டேன். அவரென்னை நெருங்க வழைத்து சில அறிவுகளைச் சொல்லித்தந்தார், தவ்ஹீதுடைய இல்மு தெரியாதவர்கள் துன்யாவென்றும் ஆகிறமென்றும் றப்பென்றும் அப்தென்றும் நீயென்றும் நானென்றும் நன்மையென்றும் தின்மையென்றும் பிரித்துப் பிரித்துப் பேசுவார்கள். சகலதையும் ஐம்உ செய்யவேண்டும். நீவேறு அவன்வேறு என்பதில் தவ்ஹீதில்லை, அவன்தான் நீ, நீதானவன். இதை நீ எவ்வேளையும் சிந்திக்கவேண்டும். (அன

ஹு) நானவன் என்கிற திக்றுதான்
சரியான தவ்ஹீதுடைய திக்று, இ
தை ரூபித்துக்காட்ட ஆரிபீன்களு
டைய வசனங்களும் பைத்துகளும்
மிகுத மிருக்கின்றன. செய்குமார்க
ள் தெரியாமலும் சிலர் தெரிந்தும்,
சொல்லப்பயந்து சொல்லாமலும்,மு
ரீதீன்களுக்குத் தெரிவிக்கிறார்களில்
லை. ளாஹிறுடைய அமல்களை விட்
டுவிடப்படாது, ஆகிலும் நான் சொ
ல்லியபடி தவ்ஹீது திட்டப்பட்டா
ல் வணங்கிறவனும் வணங்கப்பட்ட
வனு மொன்ருயிருப்பதால் வணக்
கத்துக் கிடமில்லாத தாகிவிடுமென்
று சொன்னார். நானிந்த அறிவை
க்கேட்டநேரமுதல் அச்சம் என்
மனத்தைவிட்டு நீங்கிவிட்டது, என
து செய்கு திக்று செய்து கொண்டு
மனம்போல் உலக வேலைகளைச் செ
ய்யலாமென்று சொன்ன படியே
செய்துவந்தேன். எனது செய்குக்கு
ப்பொருளாசை யற்பமாகிலுமில்லை,
பொருளாசையாலுண்டாகிற தீமை
களை எவ்வேளையு மெடுத்துக் காட்டி
வந்தார். ஆனல் கொடுப்பதினலு
ண்டாகிறபலனையும் பள்ளிவாசல்கள்
தைக்காக்கள் கட்டுவதால் கிடைக்கி
ற தபாபுகளையும் எங்கள் கல்பில்
நன்ருய்ப் பதியச் செய்து வந்தா
ர். எங்கள் செய்குக்குச் சொந்தக்
குமர்களும் இனத்திலுள்ள குமர்க
ளும் கணக்கில்லை, பள்ளிவாசல்கள்
தைக்காக்கள் கட்டப்படுகிறதும் எ
ண்ணிக்கையி லில்லை. ஒவ்வொரு
வருடத்திலும் மிஸ்கீன்களாகிய மு
ரீதீன்களும் அந்த தவாபுகளைப் பெ
ற்றுக்கொள்ளுதற்காகப் பணஞ்சேர்
க்கும் முயற்சிக்குங் குறைவில்லை. இ
வ்விதமாக சில வருடங்களாய் நடந்
து வந்தது நான் எனது செய்குசொ
ல்லியபடி செய்துவந்தும் ஒரு பல
னுமெனக்குத் தெரியவில்லை, இந்த
வழியில் பலனிருப்பதென்பது தா
னும் எனக்குச் சந்தேகமாயிற்று, சரீ
அத்துடைய அமல்களெல்லாம் அறி
விற்குறைவானவர்களுக்கே யல்லாது
என்னைப்போலுள்ள அறிவாளர்களு
க்கல்லவென்று மனத்திற் பெருமை
யுண்டாகிவிட்டது. நான் ஹக்கு எ
ன்கிற எண்ணம் அச்சத்தை நீக்கி
விட்டது, தாழ்மையைப் போக்கிவி
ட்டது, இவ்விதமாயிருக்கையில் ஒ
ருநாள் தஸவ்வுபுடைய கித்தாபொ
ன்றை நான் வாசித்துப் பார்க்கையி
ல் வழிசறுகிய கூட்டத்திலுள்ளவர்
களுடைய விசுவாசத்தைச் சொல்
லியிருந்தது, அந்த விசுவாசமும் எ
ன் விசுவாசமும் சரியாயிருப்பதை ய
றிந்து திடுக்கிட்டு நெஞ்சிலறைந்து
ஓ கைசேதமே செய்தான் செய்கின்
ருபமாய் வந்து என்னைக் குபிரிலா
க்கிவிட்டானே, நானென்ன செய்
வேன், நானெவ்விதம் மீட்சி பெறு
வேனென்று சத்தமிட்டு அழுதேன்,
அப்படி யழுதுகொண் டிருக்கையில்
துன்யா என்முன்னே தோற்றிற்று.
நானதைக்கண்டு பயந்து ஓடவேண்
டுமென்று துணியும்போது அது எ
ன்னைப்பிடித்து அஞ்சாதே கவலை
கொள்ளாதே உன் ஹாலை எனக்கு
விளங்கச்செய் என்று சொல்ல, நா
னுன்னைக் காணும்போது என் சரீர
மெல்லாம் நடுங்குகிறது, என்னை
நரகத்திலமிழ்த்திவிட்டாய், என்னை
விட்டு நீங்கிவிடென்று சொன்னே
னதற்கு அது மறுமொழியாக நான்
சொல்வதைச் சிந்தித்துப்பார், நானு
னக்கொரு செய்கிடம் 'நசீஹத்துப்
பெறச் சொன்னது நிசம், நீ நிரப்ப
மான இல்மும் கமாலிய்யத்து மு
டைய ஒரு செய்கைப் பின்பற்றவே
ண்டியதாயிருக்க, ஒன்றையும் யோ

சியாமல் அறிவிற் குறைவானவர்களுக்கு நசீஹத்தை விற்றுத்திரிகிற ஒருவரைப் பிடித்தாய் (அனஹூ) (அனல்ஹக்கு) என்பது அவுலியாக்களுக்குச் சில மக்காம்களிலுண்டாகிற பேச்சென்பது அந்த மனிதனுக்குத் தெரியாது அதை யுனக்கு திக்ருகச் சொல்லித்தந்துவிட்டார். இரும்பு நெருப்பின் குணமுண்டான வேளையில் நான் நெருப்பென்று சொல்லுவதுபோல் ஹக்குத்தஆலாவின் பேச்சு சில மக்காம்களில் அவுலியாக்களுடைய நாவுகளால் வெளியாகுமென்பதைத் தெரியாது தவறுன உபதேசத்தை யுனக்குச் சொல்லித் தந்துவிட்டார். ஆகையால் நானுனக்குச் சொல்லும் கடைசியான உபதேசமாவது:—நீ இந்த ஊரைவிட்டு வேறொருருக்குப்போய்ப் பள்ளிவாசலி லிருந்துகொண்டு ளாஹிறுடைய அமல்களை ஓயாது செய்துகொண்டிரு என்று சொல்ல, இதைக்கேட்டவுடன் நான் என் ஊரைவிட்டோடி தூலயான ஒரு ஊரின் பள்ளிவாசலிலிருந்து ஓயாமல் என் பாவங்களை நினைத்து அழுவதிலும், தவ்பாச் செய்வதிலுந் தொழுவதிலும் நாளைப்போக்கிவந்தேன். அந்தப் பள்ளிவாசலுக்கு வருகிற முஸ்லிம்கள் என் சாலிஹான நடக்கையைக் கண்டு என்னைக் கனஞ்செய்கிறவர்களாகவும், என்னை வலியுல்லாவென்று அழைக்கிறவர்களாகவு மாகிவிட்டார்கள். எனது கீர்த்தி சுற்றிலுள்ள ஊர்களெல்லாம் பரந்து என்னால் பறக்கத்துப்பெற பற்பல ஊர்களிலிருந்தும் சனங்கள் வருவதற்காயிற்று. இது எனக்குமிகவும் சந்தோஷத்தையும்இன்பத்தையுங் கொடுத்தது,நான் அவுலியாக்களி லொருவனென்கிற பெருமை யுண்டாகிவிட்டது. இவ்விதமாயிருக்கையி லொருநாள் அல்லாகுத்தஆலா என் கல்பில் நற்புத்தியுண்டாகச் செய்தான், எனது வணக்கத்தைப் பெருமைக்கும் சந்தோஷத்திற்கும் உபயோகப்படுத்தி வருவது நான் மனைவி மக்களோடிருந்து செய்த பாவங்களிலும் கொடியதென்று விளங்கச் செய்தான். இதுவும் துன்யா என்னைத் தப்பவிடாமல் ஹலாக்காவதற்குச் செய்யும் உபாயமென்று மனிதர்களை முற்றிலும் விட்டுநீங்க வேண்டுமென்று காடுகளிலும் மலைகளிலும் திரிந்துகொண்டிருந்தேன், அவ்விதந் திரிந்துகொண்டு போகையில் ஒரு நாளொரு வியாபாரியைப் போலொரு மனிதனைக் கண்டேன், நாங்கள் சலாம் சொல்லிக்கொண்டபின் அவரென்னை ஓர் மரத்தின் கீழிருக்கச்சொல்லிச் சொன்னார்; எனது சகோதரனே! உன் ஹா லெனக்குத் தெரிந்திருக்கிறது, அல்லாகுத்தஆலா உனக்கு நேர்வழியைக் காட்டுவானாக. நீ மனிதர்களை விட்டு நீங்கினது உனது சலாமத்திற் கிடமாயிருக்கிறது, மனிதர்களைவிட்டு நீங்கியிருக்க வேண்டிய மக்காம்களும் காலங்களுமிருக்கின்றன. தன் ஊரையும் மனைவிமக்களையும்விட்டு நீங்காமல் அல்லாகுத்தஆலாவுடைய உகூலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகளுமிருக்கின்றன. இவைகளுனக்கு விளங்கும்பொருட்டு என் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேள்.

## வியாபாரியின் சரித்திரம்.

என்னுடைய தகப்பன் கடைகளி

லும் சந்தைகளிலும் சுமைதூக்கிப் பிழைக்கிறவர், அவர் இல்மில்லாத வராயிருந்தும் உறுதியான ஈமானு டையவர், தொழுகை முதலிய வண க்கங்களைச் செய்தும் விலக்கப்பட்ட வைகளைச் செய்யாமலும் பயபக்தி யாய் நடக்கிறவர், அவரொரு பக்கீ ரின் மகளை விவாகஞ் செய்தார். அ வள் இலக்ஷண மில்லாதவளா யிருந் தாலும் சாலிஹான நடக்கையுள்ள வள், புருஷன் பெயரிலன்பும் அவர் மனத்தைச் சந்தோஷப்படுத்தும் வி ருப்பமுமுடையவள், சாந்தகுணமும் இ னிய பேச்சும் யாவர் பேரிலு மிரக்க முமுடையவள், அவர் சம்பாத்தியம் சொற்பமா யிருந்தாலும் கொஞ்சத் தைக்கொண்டு மனரம்மிய மடைந்த வளாய் மீதியுள்ளதை மிஸ்கீன்களு க்குக் கொடுப்பது அவர்களுக்கு மி கவுஞ் சந்தோஷமாயிருந்தது. அவ ர்களுக்கு நான் தலைமகன், நான் சிறுபிள்ளையா யிருக்கையில் அயல் வீட்டிலுள்ள ஒரு சாலிஹான பிள் ளையோடு பேசவும் விளையாடவும் வி ட்டதல்லாமல் வேறொருவரோடும் சேராமல் காப்பாற்றி வந்தார்கள். நானென்னுடைய தாய் தந்தையர்க ளின் நல்ல நடக்கைகளையும் நல்ல பேச்சுகளையுங் கேட்டதல்லாமல் வே றொன்றையுங் கேளாததா லவர்கள் நடக்கைகளையும் குணங்களையும் வ ணக்கங்களையும் பின்பற்றினேன், நா ன் சிறுபராயமாயிருக்கையிலே என க்குத் தாய் தகப்பன் சொல்லிவந்தா ர்கள், இப்பொழுது மறைவாயிருக் கிற ஒரு தேசத்துக்கு நாங்க ளொவ் வொருவராய்ப்போவோம், எங்களை ப்படைத்த நாயன் சொல்லிய கட் டளைப்படிக்கு நடந்தால் நாங்களெ ல்லோரும் அந்தத் தேசத்திற் சேர்ந் து சந்தோஷமாயிருப்போம், நீ அ வன் கட்டளைப்படிக்கு நடக்காமல் அந்தத் தேசத்திற்குப்போனால் உன் னைச் சில பசாசுகள் பிடித்துக்கொ ண்டு ஒரு நெருப்புக்குழியிற் போடு மென்று சொல்வார்கள். அது என்கல் பில் பதிவாகிவிட்டது, பின்னால் என து புத்தி அதிகப்பட அதிகப்படப்படை த்தவன் இப்படிப்பட்டவன், மறை வானதேச மின்னது பிசாசுகளென்ப தின்ன மாதிரியானவைக ளென்று சொல்லிவந்தார்கள். இவ்விதம் நல வின் பெயரிலாசையும் தீமையின் பெயரிற் பயமும், அல்லாகுத்தஆலா வின் ஏவலுக்கு அடக்கமும் சிறு ப ராயத்திலே யுண்டாகிவிட்டது, எங் கள் வீடு எழுமையானவர்கள் வீடா யிருந்தாலும் அல்லாகுத்தஆலாவுடை ய றகுமத்திறங்குந் தலமாகவும், மலா யிக்கத்துகள் வந்திறங்கி துஆக்கே ட்கவு மாகிவிட்டன. எனக்கு ஆறு வயதானபோது பள்ளிக்கூடங்களுக் கனுப்பினால் மற்றைப் பிள்ளைகளின் தீய குணங்களாலும், பேச்சுகளாலும் எனக்குத் தீங் குண்டாகுமென்று பய ந்து இல்மும் தக்வாவு முடைய ஒரு ஆலிமிடம் இல்மு படிப்பதற்கு ஒப் புவித்தார்கள். என் உஸ்தாது என து நற்குணங்களைப் பார்த்துக் கிரு பைகொண்டு நல்லொழுக்கம் இபா தத்து குறுவான் தபுசீர் ஹதீது தஸ வ்வுபு முதலிய இல்முகளைக் கற்றுத் தந்தார். நானிவைகளெல்லாம் கற் றுவரும்போது அவுலியாக்களுடைய சரித்திரங்களை வாசித்தேன், எனக் கு துன்யாவைவிட்டு அவர்களுடை ய பாதையிற் செல்லவேண்டுமென் கிற ஆசை யுண்டாகிவிட்டது. இந் தக் கருத்தை நான் எனது உஸ்தாதி டம் அறிவிக்க, அவரெனக்குச் சொ ன்னதாவது:—என் கிருபையான ம கனே! மனிதர்களை விட்டு நீங்கித்

தனித்திருந்து இபாதத்துச் செய்வதிலுள்ள பலன்களையும், மனிதர்களோடே சேர்ந்திருந்து இபாதத்துச் செய்வதின் பலன்களையுஞ் சொல்லுகிறேன்.

மனிதரை விட்டு நீங்குவதா லுண்டாகிற பலன்களாவன:--முதலாவது, அல்லாகுத்தஆலாவுடைய இபாதத்திலும் பிக்றிலு மிருப்பதற்கும் அவனை முனாஜாத்துச் செய்கிறதற்கும், மறைவான ஆலங்களின் அஸ்றூறு வெளியாகிறதற்கும் வேறு பராக்குகளில்லாதிருக்க வேண்டியதால் மனிதரைவிட்டு நீங்குவது நலமாயிருக்கும். இரண்டாவது மனிதர்களோடு சேர்ந்திருப்பதால் புறங்கூறல், கோள், பொருமை முதலிய தீமைகளை விட்டுங் கார்மானங் கிடைக்கும், வணக்கங்களைப் பிறர்கண்டு மெச்சுவதாலுண்டாகிற பெருமைக்கிடம் வராதிருக்கும், மனிதர்களின் குரோதம் பொய் வஞ்சகம் மாறுபாடுகளா லுண்டாகிற கஷ்டங்களைவிட்டும் சலாமத்துக் கிடைக்கும், மனிதர்களின் ஆவல்களையும் கெடுதிகளையும் பார்த்து நமது மனமும் அவைகளிற் றிரும்பாது பேணுத லுண்டாகும், கெட்டவர்கள் மடையர்கள் வீணர்களாகியவர்களா லுண்டாகிற தொந்தரவுகளில்லாது போய்விடும்; மனிதர்களோடு சேர்ந்திருந்தா லநேக நலவுகளிருக்கின்றன ; இல்முபடிப்பதற்கும் படித்துக்கொடுப்பதற்கும் மனிதர்களோடு சேர்ந்துறவாட வேண்டும், இல்முதீனுக்கு வேராயிருக்கும், மனிதர்களா லுண்டாகிற வருத்தங்களைச் சகித்து சபூர் செய்வதும், சரீர இச்சைகளுண்டாவதற் கிடமிருந்தும் அவைகளைக் கீழ்ப்படுத்துகிறதும், ஜனசாக்களுடனே போகிறதும், நோயாளிகளைச் சந்தித்து மனமாற்றுகிறதும், ஜமாஅத்துகளோடு தொழுகிறதும், பெரியோர்களைச் சந்திக்கிறதும், தருமங்கள் செய்வதும், மனைவிமக்களைச் சமரக்ஷணை செய்வதும், இனத்தவர்கள் அயலார்கள் முதலியவர்களுக்கு உபகாரஞ் செய்வதுமாகிய நல்ல அமல்களா லுண்டாகிற தவாபுகள் கிடைப்பதற் கிடமாகும். இவைகளிலெதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்குச் சில நியாயங்களைச் சொல்லுகிறேன்; சிலர் துன்யாவி லமிழ்ந்து பாவத்தில் மூழ்கியிருக்கையில் துன்யாவைவிட்டு நீங்குதலல்லாது வேறுவழி யில்லையென்று கம்பிளியைப் போட்டுக்கொண்டு மனிதர்களைவிட்டு நீங்குவதே நலமென்று ளாஹிறுடைய அமல்களை யெடுக்காமலும் சரியான இல்மில்லாமலும் பக்கீர்களாகவும் மஸ்தான்களாகவு மாகிவிடுகிறார்கள். ஒரு மனிதன் பாவங்களைச் செய்து தன் கல்பு நஜீசாகியிருக்கையில் அந்த நஜீசுடனே எவ்வளவுகாலம் தனித்திருந்து அல்லாகுத்தஆலாவை திக்று செய்தாலும், அது நாவுடைய திக்றல்லாமல் கல்புடைய திக்ருக மாட்டாது, கல்பில் திக்றைக்கொண்டொரு இன்பமும் தெரியாது, கல்புக்கண் திறபடாது, அதற்காக அல்லாகுத்தஆலா சொல்லியபடி நடக்கவேண்டும். நபுசைச் சுத்தப்படுத்தினவன் ஜயமடைந்தான், அசுத்தமாக்கினவன் கைசேத மடைந்தானென்று குறுவானில் சொல்லிய ஏவலுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும், அவ்விதம் நபுசைச் சுத்தப்படுத்துதற்குச் செய்யவேண்டிய கடமைகளை எங்கள் நாயகம் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களை யனுப்பி வெளியாக்கினான், அந்தக் கடமைக

ளுக்குத்தான் சரீஅத்தென்று சொல்லுகிறது, அதைக்கொண்டல்லாமல் ஒரு போதுஞ் சுத்தப்படாது. ஒரு மனிதன் செய்துவந்த பாவங்களின் வேர்கள் கல்பிலிருந்து பிடுங்கப்படவேண்டும், அதற்கு றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொல்லிய விதமே செய்யவேண்டும். இன்னுந் தனித்திருந்து அமல் செய்வதற்குப் போதிய இல்மிருக்கவேண்டும். இமாம் கஸ்ஸாலி றகுமகுல்லா அவர்கள் அவாம்களும் மடையர்களும் கல்வத்தில் இபாதத்துச் செய்யும் முறைகளைத் தெரியாமல் மனிதர்களைவிட்டு நீங்குவதாலொருபலனுமில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி துன்யாவைச் சடுதியாய் நீங்கினவர்களுக்குக் கமாலையுடையவர்கள் நசீஹத்துக் கொடுத்தாலும் ளாஹிறுடைய அமல்களைக்கொண்டு தங்கள் நபுசு சுத்தமாகிப் படிப்படியாய் ஏறும் முறைகளையே காட்டிக் கொடுப்பார்கள். இப்படி துன்யாவை விட்டு நல்ல நாட்டத்தைக்கொண்டு நீங்கினவர்கள் ளாஹிறுடைய அமல்களைக்கொண்டு தங்கள் கல்பைத் துய்தாக்காமலும், சற்குணங் கொள்ளாமலும் சிலகாலந் தனித்து திக்று செய்துகொண்டு ஒரு இன்பமும், ஆரிபீன்கள் சொல்லியபடி ஒரு கஷ்புந்தெரியாமல் அதையும் ளாஹிறுடைய அமல்களையும் விட்டுவிட்டு பக்கீர்களென்றும் மஸ்த்தான்களென்றுஞ் சொல்லிக்கொண்டும் மஸ்த்துகளைப் பாவித்துக்கொண்டும் இரு லோகத்துப் பிரயோசனத்திற்கு மிடமில்லாமல் இரந்து திரிந்து காலத்தை வீணாய்ப் போக்கிறார்கள். சரீஅத்துடைய வணக்கங்களையே அடித்தாளமாக்க வேண்டுமென்பதற்கு உன்னிலே அத்தாட்சி யிருக்கின்றது, உனது தாய் தந்தையர்கள் சரீஅத்துடைய அமல்களை எடுத்து நடந்தும் அதின் பிரமாணப்படி உன்னை வளர்த்ததால் உன்னில் நபுசு அம்மாறுவின் குணமொடுங்கி, உனது கல்பு சலாமத்துடைய நிலைபரத்திலிருக்கின்றது. நானிப்பொழுது சொல்லுமுபதேசமாவது நீ மனிதரைவிட்டு நீங்காமல் மனிதர்களோடு சேர்ந்து தேடக்கூடிய தவாபுகளைத் தேடிக்கொள்ளவேண்டும், நீ எந்தத் தொழில் செய்தாலும் அல்லாகுத்தஆலாவுக்காகச் செய்கிறேனென்று நிய்யத்துவைத்துக்கொள், விவாகஞ்செய்து இச்சையைத் தீர்த்துக்கொள்ள நாடாமல் இபாதத்திற் குனக் குதவிக்காகச் செய்கிறேனென்று நாட்டம் வைத்துக்கொள், சமுசாரத்தை நடப்பிக்கும் முறைகளில் வழக்கங்களைத்தள்ளி மார்க்கப் பிரமாணங்களை எடுத்துக்கொள், பொருள் சம்பாதிப்பது உனது சீவனத்திற்கும் உனது தாய் தந்தையர்கள் உறவினர்கள் அயலார்கள் மிஸ்கீன்கள் முதலியவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றுதற்கு மென்ற எண்ணத்தைத் தரிபாடாக்கிக் கொள், நமதுசறஹின் பிறமாணத்திற்குக் கீழ்ப்படுத்தித் தொழிலை நடத்திக் கொள். இவ்விதம் நீ செய்து வந்தால் துன்யாவிற் செய்கிற வேலைகளெல்லாம் இபாதத்தாகிவிடும், நீ இப்பொழுது செய்துவருகிற ளாஹிறுடைய அமல்களின் அஸ்றாறுகளைச் சொல்லித் தருகிறேன், அவைகளை யறிந்து உனது அமல்களைச்செய், அப்பொழுது உனக்கு இல்ஹாமுடைய மக்காம் வந்துவிடும், செய்கில்லாமல் உயர்த்தியான மக்காம்களுக்குச் செல்லக் கூடாது. அபூஎசிது றகுமகுல்லாகு அன்கு அ

வர்கள் ஒருவனுக்கு செய்கில்லாது போனால் அவனுக்கு செய்கு சைத்தானயிருப்பானென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனலொருவன் கல்பை அல்லாவிடத்தே நோக்கினவனயும் தனக்கு ஒரு முர்ஷிது தேவையாயுமிருக்கையில் அல்லாகுத்தஆலா ஒருவரை யனுப்பிவைப்பான், ஒவ்வொரு ஸமானிலும் குத்துபுமார்களிருக்கிறார்கள், அவர்கள் சாலிக்கீன்களின் கல்புகளை நோட்டமிட்டவர்களாயிருக்கிறார்கள், முர்ஷிதின் உதவிதேவையென்ற தருணத்தில் கமாலியத்தையுடைய ஒருவரை யனுப்பிவைப்பார்கள். முர்ஷிதுகளாகிறவர்கள் வைத்தியர்கள் போலாயிருக்கும், வைத்தியன் ஒவ்வொருவனுடைய நோயையுமறிந்து அந்தந்த நோய்க்குத் தக்க மருந்து கொடுப்பதுபோல் முர்ஷிதுகள் முரீதீன்களின் கல்பின் நோய்களையும் நற்குணங்களையும் துர்க்குணங்களையும் ஆராய்ந்து பார்த்து அவைகளுக்குத் தக்க மருந்துகளாகிய அறிவுகளையும் அமல்களையுங் கற்பிப்பதும், அவைகளின் பத்தியங்களைத் திட்டப்படுத்துவதும் வைத்தியன் தான் கொடுத்த மருந்தின் குணத்தை நாடோறும் பார்த்து வருவதுபோல், முரீதீன்களுக்குத் தாங்கள் கற்பித்த அமல்களா லுண்டாகிற குணத்தையும் அவர்களிருக்கின்ற மக்காம்களையும் அறிந்து அவைகளுக்குத்தக்க உபதேசங்களையுஞ் சொல்லி வருவார்கள். முரீதீன்களுக்குண்டாகிற தரிசனைகள் நபுசானிய்யாவைக் கொண்டா? ஷைத்தானிய்யாவைக் கொண்டா? மலக்கானிய்யாவைக் கொண்டா? றப்பானிய்யாவைக்கொண்டாவென்று அறிந்து அவை யவைகளுக்குத்தக்க புத்திகளை யறிவித்துக் கொடுப்பார்கள். இந்த வழியிலிருக்கிற ஆபத்துகளும் இடையூறுகளும் அவர் அநுபோகத்தி லறிந்தவராயிருப்பதால் அவைகளை மாற்றுதற்குரிய காரியங்களைச் செய்துவருவார். இதற்கொரு உதாரணமாக ஒரு காரியத்தைச் சொல்லுகிறேன்; சந்தேகமின்றி ஆரிபீன்களெல்லோரும் லாயிலாஹ இல்லல்லாகு வென்கிற திக்றும, அல்லா வென்கிற இஸ்முல் அஉளமுமே மறைவான ஆலங்களைத் திறக்கவும் உகூலைப்பெறவுமுரிய திக்றென்று ஏற்றிருக்கிறார்கள். ஆகிலும் அல்லாகுத்தஆலாவுடைய அஸ்மாஉல் ஹுஸ்னு வென்கிற தொண்ணூற்றென்பது இசும்களில் ஒவ்வொருவருக்கும் தனதாயொரு இஸ்மிருக்கும், அதையறிந்து கொள்வதற்காகச் செய்கு முரீதை நோட்டமிட்டுக்கொண்டு அந்த அஸ்மாவுல் ஹுஸ்னவை யோதிவருகையில் அவனுக்குத் தனதான இஸ்மைச் சொல்லுகையில் கல்பிலாசையுண்டாகிச் சரீரந் திடுக்கிடும், இதைக் கண்டவுன் செய்கு அந்த இஸ்மைப் பிடித்துக்கொள்ளும்படி திட்டப்படுத்துவார். சிறு பராயத்தி லொருவனொரு இல்மில் அல்லது ஒரு தொழிலில் அதிகப்பிரியம் வைத்தால் அதையே பயிற்றிக்கொடுக்க உபாத்தியாயர் நாடுவதுபோல் செய்குமார்கள் செய்வார்கள். வைத்தியர்கள் சகல நோய்களுக்கும் ஒரு மருந்தையே கொடுங்களென்று சொல்லுவதுபோல் திக்றுகளைச் சொல்லிக்கொடுத்துவிட்டு தங்கள் கடமை முடிந்துவிட்டதென்று போய்விடுவது சூபியாக்களுடை வழியிலுள்ள தல்ல, முரீதீன்களைத் தங்களுடனே வைத்து நற்பாதையில் வளர்க்கவேண்டும். உனக்குக் கஷ்டையுடைய மக்காமும், சுகூதுடைய மக்காமும் திற

ப்பதற்குத் தேவையான வேளையில் அல்லாகுத்தஆலா ஒரு முர்ஷிதை யனுப்பிவைப்பான். தனித்திருக்க வேண்டிய மக்காம்களும், சில்லாவி லிருக்கவேண்டிய மக்காம்களு மிரு க்கின்றன. உனது செய்கு அவைக ளைத் இட்டப்படுத்துவார்.

துன்யாவை விட்டு நீங்காமல் கச்சவடங்கள் செய்து கொண்டும், மனைவிமக்களோ டிருந்துகொண்டும், கருமத்துகளை வெளியாக்காமலும், பிறருக்குத் தங்களின் பதவிகளை விளங்கக் கொடுக்காமலு முள்ள பெ ரியோர்களு மிருக்கிறார்கள். அவர் களுக்கு மலாமியாக்களென்று சொல் லப்படும். இவர்கள் அவுலியாக்களி லுயர்ந்த பதவியை யுடையவர்க ளென்று சொல்லி, ளாஹிறு டைய வணக்கங்களின் அஸ்றாறு களை எனக்கு சொல்லித்தந்தார். நானவைகளைக் கேட்டவுடன் வே றொரு ஆலத்திற்குப் போனவன் போ லாகிவிட்டேன், என் உஸ்தாது சொல்லியபடி நடந்துவந்து விவாக ஞ்செய்தேன், சாப்புந் திறந்து வியா பாரமுஞ் செய்துவந்தேன், நான் எங்குபோனாலும் எந்த வேலையைச் செய்தாலும் கல்பை அல்லாகுத்த ஆலாவின் எண்ணத்திலே வைத்தவ னாய் நடந்துவந்தேன், எனது சாப்பி லுள்ள சாமான்கள் ஒவ்வொன்றி லும் சொற்பநயம் வைத்து விலையை எழுதிவைத்துவிட்டபடியால் வாங்க வருகிறவர்கள் விலையைப் பார்த்துக் கிரையத்தைத் தந்து சாமான்களைக் கொண்டுபோய் விடுவார்கள். உண் மைப்படிக்கு என் சாப்பில் வியாபா ரம் நடத்தப்படுகிறதென்று எங்கும் பிரபலமாகி என் சாப்புக்கே எவரு ம் வருகிறதாயிற்று. நம்பிக்கையுடை ய காரியக்காரர்களை வைத்து வியா பாரத்தை நடத்தவும் ஒவ்வொரு வருடத்திலும் நயத்தைக் கணக்குப் பார்த்து நயம் முழுவதையும் என் சீவனத்திற்குத் தேவையான மட்டுப் போக மீதியுள்ளவைகளை யெல்லாம் சதக்காக் கொடுத்துவந்தேன், காரி யகாரர்களைக்கொண்டு வியாபாரம் நடத்தப்பட்டு வந்ததால், பெரியோ கள் கபுறுஸ்தான்களை சியாறத்துச் செய்யவும், அவுலியாக்கள் சாலிஹீ ன்களைத் தரிசனைசெய்து அவர்க ளால் இல்மும் பறக்கத்தும் பெற் றுக்கொள்ளவுங் கூடியதாய் வந்தது. பின்பொரு முறுசிதிடம் நஸீஹத்து ப்பெற்று அவர்கள் காட்டியவழி யே நடந்தேன், அல்லாகுத்தஆலா தனது றகுமத்தென்னும் வாசலைத் திறந்துவிட்டான், இதற்கதிக மென து சொந்தச் சரித்திரத்தைச் சொ ல்லக்கூடாது. அல்லாகுத்த ஆலா உன்னிடம்வந்து உனக்கு நேர்வழி யைக் காட்டும்படி நாட்டத்தைக் கொடுத்தான், நானுனக்குச் சொல் லுகிற நசீஹத்தை மனத்திலிருத்தி க்கொள், நாங்களிருவரும் சிலகால ம்வரையும் ஒன்றாயிருக்கவேண்டும், நாங்கள் றூஹானிய்யாவாகச் சந்தித் துக்கொள்ளக் கூடிய காலத்தில் நா ங்கள் சரீரத்துடனே ஒரு விடத்தி ற்குவரத் தேவையில்லையென்று சொ ல்லி எனக்கு நசீஹத்துத் தந்தார்க ளென்று அந்த ஆபிது சொல்லி, இ ன்னுஞ் சொன்னார்கள்; நான் எனது செய்கோடு சில வருடங்களாயிருந்து இப்பொழுது இங்கு வந்திருக்கிறே ன், நான் என் ஊரைவிட்டு ஓடிவந் தபின் என் மனைவிமக்களைச் சந்திக் கவில்லையென்று சொல்லி முரீதை நெருங்க அழைத்துச் சொன்னார்கள்.

## சாலிக்கீன்கள் கொள்ள வேண்டிய குணங்கள்.

கஷ்புடைய மக்காமையும், சுஹூது டைய மக்காமையும் சேர நாடுகிறவன் அல்லாகுத்தஆலாவின் மீது தூய்மையும் சுத்தமுமான அன்புடையவனுயிருக்கவேண்டும். அவனையன்றி வேறொன்றிலும் அன்பு வையாமலும், கஷ்புகளையும் கருமத்துகளையும் விரும்பாமலும், கல்வி சாஸ்திரங்களில் மனத்தைச் செலுத்தாமலும், அல்லாகுத்த ஆலாவின் தாத்தொன்றையே ஆசித்தவனாகவுமிருக்கவேண்டும். தன் சரீரத்தின் கொழுகுதல் தறிபட்டு தன்து சொந்த ஆலமாகிய அறுவாகுடைய ஆலத்தையும், ஆலம் குதுசையும் முன்னோக்கினவனுயிருக்கவேண்டும், சரீரத்தின் இச்சைகளும் ஆசைகளும் ஒடுங்கி சுபாவ சரீரத் தோற்றங்களடங்கி மலாயிக்கத்துகளின் குணங்கொள்ளவேண்டும், துன்யாவைவிட்டு நீங்கவேண்டும், அதிலுள்ளவைகளைப் பார்க்கும்போது அவைகளெல்லாம் பனுவென்றும், அவைகளில் லையென்றும் எண்ணிய பார்வையாய்ப் பார்க்கவேண்டும், அழகானவைகள் இன்பம் கொடுப்பவைகள் யாவையும் விட்டும் முகத்தைத் திருப்பி அல்லாகுத்தஆலாவை திக்று செய்து தவ்ஹீது செயயவேண்டும். மனிதரைவிட்டுந் தனித்தவனாகவும், பசி தாகத்தைச் சகித்தவனாகவும், கற்பு நிலை தவறாதவனும், மனத்தின் வாஞ்சைக் கிடங் கொடாதவனாகவும், ஹக்குத்தஆலாவினுசையால் மஸ்துக்கொள்ளவேண்டும், மவுத்துக்கு முன் மவுத்தாகவேண்டும், கீழான நபுசின் குணங்களிறக்க இல்லைமையுடைய ஹக்கீக்கிய்யாவான ஹயாத்துண்டாகிவிடும், அப்பொழுது ஆலமறுவாகும் ஆலம் குதுசும் தாத்தின் தரிபாடான ஹயாத்தும் ஒளியுமே தன் இன்பத்திற்கும் அன்பிற்கு முரியவைகளாகிவிடும்.

## அள்ளாஹ் என்கிற இஸ்மை உச்சரிக்கும் விதம்.

அள்ளாஹ் என்கிற இஸ்மை உச்சரிக்கவேண்டிய விதத்தைப்பற்றி முகியித்தீனிபுனு அறபி றளியள்ளாகு அன்கு நத்தாயிபுல் அன்வாறென்கிற கித்தாபில் ஜலாலுடைய இஸ்மைக்கொண்டு அல்லாகுத்த ஆலாவை திக்று செய்கிறவன் அலிபுடைய சத்தம் (அ) வென்று நீர்க்கமாயும், கடைசி எழுத்தாகிய ஹேய்க்கு சுக்னும்வைத்து (அல்லாஹ்) வென்று முடியவேண்டும். இவ்விதஞ் சொல்லாமல் சுறுக்கில் திக்றுசெய்யும் வேளையில் ஹல்லாவென்று உச்சரிக்கப்பட்டால் அந்த திக்றுக்குடைய ஒரு பலனுங்கிடையாது. ஹல்லாவென்பது ஹக்குத்தஆலாவுடைய இஸ்மல்ல, ஹல்லா வென்பதற்கு இல்லையாவென்ற பொருளாயிருக்கும். ஆகையால் அல்லாஹ்வென்று அவன் மூச்சில் முடியச்செய்வது நல்லதென்று சொல்லியிருக்கிறார்கள். அநேகர் சத்தமிட்டும் விரைவாயும் திக்று செய்யும்போது இவ்விதம் ஹல்லாவென்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

## திக்றின் பிரிவுகள்.

திக்று நாலுவகை யென்றும், சிலர் ஐந்து வகை யென்றுஞ் சொல்லுகிறார்கள். முதலாவது நாவுடைய திக்று இதற்கு ஜல்லி யென்றுஞ் சொல்லுகிறது. இரண்டாவது கல்புடைய திக்று, மூன்றாவது றூகுடைய திக்று, நாலாவது சிர்றுடைய திக்று. இந்த நாலில் நாவுடைய திக்றில் நின்றும் கல்புடைய திக்று பிறக்கும், கல்புடைய திக்றில் நின்றும் றூகுடைய திக்று பிறக்கும், றூகுடைய திக்றில் நின்றும் சிர்றுடைய திக்று பிறக்கும். கல்புடைய திக்றுக்கு அடையாளமாவது, அவனுடைய கல்பு திக்றைவிட்டும் ஒழியாது, திக்றைவிட்டு மொழிந்தால் கல்பு துடிக்கும். தாயிடம் பாலகன் பால் தேடுவதுபோல் கல்பும் திக்றைத்தேடும், திரும்ப திக்றில் கல்பை யமிழ்த்தினுல் கல்பு பூரண மடைந்ததுபோல் தெரியும். இவ்விதம் கல்பு மூழ்கியிருக்கையில் றூகுடைய திக்று பிறக்கும், அதற்கடையாளமாகிறது திக்றையும் திக்று செய்கிறவன் தன்னையு முணர்வற்றவனுய் திக்று செய்யப்பட்டவனே மட்டுமே உணர்வுடையவனு யாழ்ந்துவிடுவான். இவ்விதம் ஒரு வஸ்துவையுந் தெரியாது ஹக்கின் சமுத்திரத்தில் ஆழ்ந்த தன்மைக்கு ஆரிபீன்கள் நபுசைவிட்டும் பனுவாகுதலென்று சொல்வார்கள். அந்த திக்றுடைய நேரத்தில் அவன் முன்புறத்திலல்லது வலப்புறத்தில் நக்ஷத்திரம் போலொன்றைக் காண்பான், அல்லது தொழுகிற நேரத்தில் அவிபைப்போலொரு ஒளியைத்தெரிசிப்பான், பின்பு அல்லாகுத்தஆலாநாடிய தஜல்லியாத்துகள் வெளியாகும். தூர்றத்துல் மர்ளிய்யாவென்கிற கித்தாபில் சொல்லி யிருக்கிறதாவது:—இந்த மக்காமிற் சிலநேரம் பொழுதுடைய வட்டமாகவும் கடுஞ்சூடாகவுந் தன் முகத்திற்குமுன்னே ஒளியினுலொரு சடலந்தெரியும், சூரியன் தொட்டிலில் ஆடுவதுபோல் சூரியன் அச்சடலத்திலிருந்து வருகிறதுபோலும் போகிறதுபோலு மிருக்கும். அச்சடலம் அவன் தானுயிருக்கும், சூரியன் தன் றூஹாயிருக்கும். ஆகிலும் தனக்கு வெளியானதைப்பார்ப்பதில் பராக்காகாமல் தன் திக்றில் பராக்கா யிருப்பான். செய்குக்குத் தன் காட்சியை யறிவிக்கிறதற்கு வேண்டிய மட்டுக்குப் பார்த்துக் கொள்வான், தன் செய்கிடம் தான் கண்டதைச் சொல்லாதிருந்தால் அநியாயஞ் செய்தவனுகிவிடுவானென்று சொல்லி யிருக்கிறது. இன்னும் ஸித்தீக்குஷ் ஷாதுலிய்யி றளியல்லாகு அன்கு அவர்கள் ஜவாஹிறென்றுங் கித்தாபிற் சொல்லியிருக்கிறார்கள்; இந்த மக்காமையுடையவர்களுக்கு இரண்டு அடையாளங்களிருக்கும். முதலாவது படைக்கப்பட்ட மவுஜூதாத்துகளிலொவ்வொன்றுக்குந் தனதான தஸ்பீஹைக் கேட்பான், அவன் கேட்கிற தஸ்பீகுகளையும் விளங்கிக் கொள்வான். இரண்டாவது அடையாளமாகிறது இந்த மக்காமில் தனக்கும் மற்ற மவுஜூதாத்துக ளனைத்திற்கும் யாதொரு சுயசெயலில்லையென்றும், சகல செயலும் அல்லாவைக்கொண்டென்பதையுங் காண்பான். இன்னும் படைப்புகளில் எந்தப் படைப்பருகே போனுலுமவைகள் நிரசப்பொருளாயிருந்தாலும், உயிருள்ளபொருளாயிருந்தாலும் அவைகளில் அல்

லாகுத்தஆலா அமைத்துவைத்திருக்கிற அஸ்ருறுகளை யவைக ளறிவிக்காமலிராவென்று அந்தப் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஹுகுடைய திக்றில் நின்றும் சிர்ருடைய திக்று பிறக்கும், இந்த மக்காமில் தன் உறுப்புகளெல்லாவற்றிலுமிருந்து திக்றுண்டாவது தனக்கு விளங்கும். தன்னிலிருந்து ஒளி ஏறுகிறதையும் தன்னில் ஒளியிறங்குகிறதையும் காண்பான். ஏறுகிற ஒளி தன் திக்றின் ஒளியாயிருக்கும், இறங்கிற ஒளி தனக்குக் கூலியின் ஒளியாயிருக்குமென்றுசெய்குசொன்னார்.

## திக்றுசெய்யும் முறையும் இருப்புத் தரிப்புகளும.

## திக்றுல் கல்பீ.

சகல தரீக்குகளிலும் திக்று ஜல்வி செய்யும் முறைகளில் தான் வித்தியாசங்க ளிருக்கின்றன. திக்று கல்பீக்குச் சென்றுவிருக்கிற வித்தியாசங்கள் மிகவும் அற்பம், நானுனக்கு திக்று கல்பீ தனித்திருந்து செய்யும் ஒரு முறையைச் சொல்லுகிறேன்.

உனது சரீரந் துப்பரவா யிருக்க வேண்டும், ஒழுச்செய்து இரண்டு ரக்ஆத்துத் தொழுதுகொண்டு (குல் யா ஐயுஹல் காபிறூன்) என்கிற சூறதையும், (குல்குவல்லாகு அஹது. குல்அஊது பிறப்பில் பலக்கு. குல்அஊது பிறப்பின்னாஸ்) ஆகிய சூறத்துகளை யோதியபின் தொழுகைக்குடைய இருப்பிலிருந்து கிபுலாவை முன்னோக்கி சகல பராக்குகளையும் எண்ணங்களையும் விட்டொழிந்து இஸ்திஃபாறு நூறுதரம் ஓதி நாயனே லாயிலாஹ இல்லல்லாகு வென்கிற திக்றின் இல்மை இலேசாககித் தந்தருளென்று துஆவோதி பாத்திஹாவையும் சூறத்துல் இஃலாசையும் சில்சிலாவிலுள்ள பெரியோர்களுக்கு நன்கொடை செய்துவிட்டு, நாயனே எனக்குத் தஞ்சம் நீயேயன்றி வேறில்லையென்று சொல்லி உனது முர்சிது அல்லாவினிடத்தே மீட்சிபெற்றுத் தருவார்களென்ற நம்பிக்கை யுடையவனாய்க் கண்ணைப் பொத்தி, நான் மவுத்தாகிச் சாரத்தைவிட்டும் நீங்கி ஹக்குத்தஆலாவின் சமுகத்தி லிருக்கிறேனென்று எண்ணவேண்டும். பஞ்சேந்திரியங்களின் தத்துவங்களை யெல்லாம் சேர்த்து கல்பின் மத்தியினுழத்தில் நிறுத்தி, கல்பின் தத்துவங்களையெல்லாம் ஒன்றாக்கிச் சகல சிபத்துகளுஞ்சேர்ந்த அல்லாவெனும் தாத்தாகிய பொருளை நோக்கி யதிலுண்டிக் கால்மணி நேரத்திற்குக் குறையாம லிருக்கவேண்டும். அப்பொழுது அல்லாகுத்தஆலாவின் முடுகுத லுண்டாகும் மறுநேரங்களிலும் இருக்கையிலும், நிற்கையிலும், ஜலபாதைக்குப்போன வேளையிலும், ஜிமாஉ செய்யும் நேரத்திலும் திக்றைவிட்டும் கல்பு நீங்காதிருக்கச் செய்துகொள்ள வேண்டும். நான் சொல்லியபடி பல எண்ணங்களும் வராது கல்பைத் தரிபடுத்துதற்கு கல்பு டேலமிருக்க வேண்டும், பெ[illegible]ளவர்களுக்குப் பலவெண்ண[illegible] வந்துவிடும், அவ்விதம் எண்[illegible]ள் வரும்போதெல்லாம் இஸ்திஃபாறு செய்யவேண்டும், அந்த எண்ணங்களை நீக்கக் கூடாதுபோனால் உ

டனே குழிப்பதும் அல்லது ஒழுச் செய்வதும், தவ்பாத் தொழுகை தொழுவதும் அழுது சலித்து அல்லாவிடத்தே உதவி கேட்பதும் நலவாயிருக்கும். இப்படி திக்று செய்யும்போது கல்பிலிருந்து ஒளி வெளியாகி புயத்துக்குமுன்னேதெரியும், கல்பு கடிமையாய்த் துடிக்கும், கல்பு திக்றைவிட்டும் நீங்கினுல் அதற்கு றூஹில்லாதது போலிருக்கும். சில செய்குமார்கள் திக்றி விருக்கையில் நாவை உயரவாயில் தரிக்கச்செய்து பற்களையும் உதடுகளையுஞ் சேர்த்துக் கொண்டு சுவாசத்தை யடக்கிக் கொள்ளச் செய்விப்பார்கள். ஆனுல் சுவாசத்தை யடக்குவது வருத்தமுண்டாகிற மட்டுக்கல்ல. பின்பு றூகுடைய திக்றுண்டாகும், அதற்கு ஸ்தானம் வலது மார்புக்கு இரண்டு விரலுக்குக்கீழ் கல்பையும் அந்த ஸ்தானத்தையும் ஒரு பார்வையைக் கொண்டு பார்ப்பதுபோல தரிக்கச் செய்யவேண்டும். பின்பு சிர்றுடைய திக்று அதற்கு ஸ்தானம் இடது மார்புக்கு இரண்டு விரலுக்குமேல், பின்பு கபீயுடைய திக்று அதற்கு ஸ்தானம் வலது மார்புக்கு இரண்டு விரலுக்கு உயரவும், பின்பு திக்று அஃபா இது நெஞ்சின் மத்தியிலும், பின்பு நபுசின் சூக்ஷும சரீரத்தின் திக்று இது இரண்டு கண்களுக்கும் புருவங்களுக்கும் மத்தியிலும், பின்பு சரீபத்தின் சூக்ஷுமத்திலும் நிறுத்தவேண்டும். இவ்விதஞ் செய்து வரும்பொழுது சரீரத்தினுெவ்வொரு உறுப்பிலிருந்தும் ஒவ்வொரு உரோமத்திலிருந்தும் திக்று வெளியாகும். ஒவ்வொருநாளும் அல்லாவென்கிற திக்றைச் செய்வது குறைந்தது ஐயாயிரந்தரம். ஒரேமுறையில் கூடாதுபோனுல் ஒரு நாளையில் மூன்று இருப்புகளில் செய்து முடிக்கவேண்டும். திக்றிலிருக்கையில் பல எண்ணங்கள் வரும் பொழுது வயிற்றிலிருந்து மூச்சை உரமாயெடுத்து நாசால் வெளியாக்கி விட்டு உடனே மூச்சை நிதானமா யடக்குவது உபயோகமாயிருக்கும். நக்ஷபந்திய்யாத் தரீக்குக காரர்கள் திக்றி னெழுத்துகள் தன் சரீரத்தில் கொத்தப்பட் டிருப்பதுபோல எண்ணத்தைக் கொண்டாக்கி அதின் பொருளில் கல்பைத் தரிபடுத்தி திக்று செய்வார்கள்.

திக்றிலும் இபாதத்திலு மிருக்கையில் நான் அல்லாகுத்த ஆலாவின் சமுகத்திலிருக்கிறேனென்ற எண்ணமிருக்கவேண்டும். எங்கள் நாயகமவர்கள் அல்லாகுத்தஆலாவை நீ காண்கிறதுபோலாக வணங்கு, நீ காணுது போனுலும் அவனுன்னைப் பார்த்தவனுயிருக்கிறுனென்று சொல்லியிருக்கிறுர்கள். நீ அவனின் பார்வையின் மத்தியி லிருக்கிறதாகவும் அவன் பார்வை உன்னைச் சூழ்ந்திருப்பதாகவும் நினைக்க நினைக்க நீ யுருகி சிறிதாகி, உனது வுஜூதற்றுப் பங்கு பிரிவில்லாக தனிமையான றப்புடைய ஒளிவிலமைந்து அந்த ஒளி கண்டிப்புள்ள கண்டிப்பில்லாத படைப்புகளனைத்தையும் சூழ்ந்ததாய்த் தெரியும், இது முதலாம் மக்காம். இரண்டாம் மக்காமுக்கு அஹதிய்யத்துடைய மக்காமென்று சொல்லப்படும். அல்லாகுத்தஆலா ஒருவனென்று நிச்சயப்படும் மக்காம். மூன்றும் மக்காமுக்கு அக்றபிய்யாவென்று சொல்லப்படும், அதாவது:—உனது இரு விலாக்களுக்கு மிடையேயிருக்கின்ற நபுசிலும் உனக்குச் சமீபமாயிருக்கிறே னென்ற திருவசனம் நிக்ஷயப்படும் மக்காம். நாலாம்

மக்காம் பஸரிய்யா உனது உசும்புதலும் உசும்பாதிருத்தலும் உனக்கு விதித்திருப்பவைகளும் ஹக்குத்த ஆலாவின் பார்வையைக்கொண்டே நடக்கின்றதென்பதின் உள்ளமை நிச்சயப்படும் மக்காம். ஐந்தாவது மக்காம் இல்மிய்யா, கல்பிலிருப்பவைகளை யெல்லாம் அறிவானென்கிற உள்ளமையைத் திட்டமாகி கல்பு தீதான எண்ணங்களைவிட்டும் கார்மானம் பெறும் மக்காம். ஆருவது மக்காம் பாயிலிய்யா; உனது உள்ளமையும் செயலும் ஹக்குடைய உள்ளமை யென்றும் செயலென்றும உறுதிப்படுகிற மக்காம். முல்கிய்யா அதாவது நீயும் உன்னுடையவைகள் சகலதும் ஹக்குடைய தென்று உன்னையும் உன் செலவ்களையும் அவனிடத்தே பாரஞ் சாட்டி நிற்கும் மக்காம். எட்டாம் மக்காம் ஹயாத்திய்யா, உனது சிபாத்து ஹக்குடைய சிபாத்திலும், உன்னுடைய தாத்து அவனுடைய தாத்திலும் பனுவாகி நீ இல்லாதவனுகிவிடுகிறது. ஹயாத்தை யுடையவனும் தரிபாடானவனு மவனே. மற்றவைகளெல்லாம் இல்லையென்ருகிவிடுகிறது. ஒன்பதாவது மஃரூபிய்யா, நபாவில்களின் அமல்களைக்கொண்டு ஹக்குத்த ஆலாவின் மஃரூபாகி விடுகிறது. பத்தாவது தவ்ஹீது சுஹூது, எங்குபரர்த்தாலும் எதைப்பார்த்தாலும் அல்லாகுத்தஆலா வல்லாமல் வேருென்றையும் காணுததா யிருக்கிறது. திக்று சரியாகச் செய்துவரும் பொழுது இன்பந்தெரியும், அந்த இன்பந் தெரியும்போது ஆசை யதிகமாகும். மிகுந்த தாழ்மையும் கண்ணீர்சொரிதலும், திக்றின் சூட்டினுல் கல்பின் பற்பல எண்ணங்களெரிந்துபோவதும்; ஹக்குத்தஆலாவின் எண்ணத்திலமிழ்ந்திருப்பதும் உயர்ந்த வாசல் திறப்பதற்கு அடையாளமாயிருக்கும். இவ்விதம் திக்றில் தரிபாடாகிவந்தால் புதுமைகளும் அதிசயங்களும் வெளியாகிறதாகிவிடும். அப்பொழுது நாவு திக்றைக் கொண்டு உசும்பாது, பிக்றுமட்டுமிருக்கும். சிலரிந்த மக்காம்களில் மற்றும் இபாத்துகளை விட்டவர்களாகவும் அல்லாகுத்தஆலாவை திக்றைக்கொண்டே நோக்கினவர்களாகவு மிருப்பார்கள். அவர்க ளந்தப் பதவியிலே தரித்துவிடுவார்சள். இன்னும் ஒழுங்குப்படி பயிற்சியும் இபாதத்து முடையவர்களுமாய் அல்லாகுத்தஆலாவை முன்னேக்குவார்கள், இவர்கள் மிகவுஞ் சுறுதியாய் நிரப்பமான பதவியை யடைவார்கள்

கல்வத்தில் தனித்திருந்து ஹிம்மத்தும் அறிவும் துய்தான கல்புமுடைய சாலிக்கீன்கள் நான்சொல்லிய ஷர்த்துகளைப்பேணி ஒருநேரமாவது திக்றைவிடாது செய்துவந்தால் திக்று தன்னில் தரிபாடாகிவிடும், தான் நாடாமல் அந்த திக்று தன்னில் நடந்துவரும். சரீரத்தில் இரத்தம் நாம் நாடாது ஒடுவதுபோலாகும். இந்த ஹாலாகும்பொழுது அவனுக்கு ஹக்குத்தஆலாவின் மைதான் விஸ்தாரமாகிவிடும். ஹக்குத்தஆலாவின் ஒளியும் அந்தரங்கமுமானவைகள் வெளியாவதற்காகிவிடும், தன்னுடைய கல்பு கண்ணுடிபோலும் அதிற் பற்பல காட்சிகளும் வெளியாகத் தொடங்கிவிடும்: இக்காட்சிகளின் அதிசயங்களால் மயங்காது அவனின் சேர்மானத்தையே நாடவேண்டும். இன்னு மிதைப்பற்றி அதிக விவரம் சில்லாவைப்பற்றிப் பேசும்போது விளங்கப்படுத்துவேன்.

## சில்லா யிருக்கிறதற்குத் தலமும் ஒழுங்கும்

சில்லாஇருப்பதற்குத் தலம்வேறு பராக்குள் வராமலிருக்கவும்,றப்புடைய எண்ணமல்லாது வேறெண்ணங்களுண்டாகாமலிருக்கவும் மனிதர்களின் சத்தங்கள் பேச்சுகள் கேளாமலிருக்கவும் தக்க இடமாயிருக்கவேண்டும். மனிதர்களுக்குத் தெரியாதவிடமாகவும், சில்லாவிலிருக்கிறுனென்பது பிரசித்தமாகாமலிருக்கவுங் கூடிய விடமாகவுந் தெரிந்துகொள்ளவேண்டும். சில்லாவிலிருப்பதில் நலவும் ஆபத்துமிருக்கின்றன. அவுலியாக்கள் சில்லாவிலிருந்து உயர்ந்த பதவியிற்சேர்ந்தார்கள், அற்புதங்கள் செய்திருக்கிறுர்கள், நாமு மதுபோ விருப்போமென்று அதற்கு வேண்டிய சர்த்துகளை யனுசரிக்காமலும் அவ்விதமிருந்து ஐயமடைந்த முர்சிதின் உதவியில்லாமலும் அதிலிருந்தால் சைத்தான்வந்து பற்பல மோசங்களி விழுத்துவிடுவான். இஞ்ஜீல்வேதத்தைச் சேர்ந்த துறவர்களும் ஹிந்துக்களில் சன்னியாசிகளும் பலாசிபாக்களில் சில கூட்டத்தார்களும் இந்த சர்த்துகளில்லாமல் மனிதர்களைவிட்டு நீங்கி தியானஞ்செய்து அவர்கள் சில சித்திகளைப் பெற்றுக்கொண்டாலும், அவர்களுக்கு வாசிலீன்களல்லது முவஹ்ஹிதீன்களுடைய பதவி கிடைக்கக் கூடாது முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு புத்தூஹாத்துல் மக்கிய்யாவில் ஆராகிலு மொருவன் வழிதவறிப் போகாதிருக்க நபடினல் க்ஷணப்பொழுதாவது சரீஅத்தின் ளாஹிறுடைய தராசை எறிந்துவிடாது முஜ்தஹிதீன்களும் அவர்களைப் பின்பற்றியவர்களு மிருந்த நிலையைப் பற்றிப்பிடித்து அவைகளல்லாதவைகளைத் தள்ளிவிடவேண்டுமென்று சொல்லியிருக்கிறுர்கள். ஆகையால் சில்லாவுக்குரிய சறுத்துகளைப்பற்றிப் பிடித்துக்கொள்ளவேண்டும். இன்னும் முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு ரிசாலத்துல் அன்வாறென்கிற கித்தாபில் நீ சில்லாவில் செல்லுகிறநேரம் அல்லாகுத்த ஆலாவுக்கு ஒப்புவமையாயொன்று மில்லையென்ற விசுவாசமுடையவனுகவும், நீ சில்லாவில் காண்கிற காட்சிகளைவிட்டும் திரும்பிக்கொள்ளுகிறனுகவும் ஒயாது திக்றில் தரிபட்டவனுகவு மிருந்துகொள், இது முதலாவது கட்டுப்பாடாயிருக்கும். இரண்டாவது சில்லாவில் அல்லாவல்லாமல் வேறென்றையும் தேடாதே, உனது தேட்டம் அவனல்லாதவொன்றையுங் கொழுகவிடாதே, ஆலத்திலுள்ளவைகளெல்லாம் உனக்கு வெளியாயிட்டாலும் அவைகளை யெடுத்துக்கொள். ஆனு லவைகளிற் றரிபடாதே. ஏனெனில் அவைகளுன்னை மருட்டுகிறவைகளாயிருக்கும். இந்த வெளியானவைகளில் நீ தரிபட்டால் மேலைக்குக் கிடைப்பவைகள் கிடைக்காதுபோகும், நீ அவனிடத்தே தேடினல் ஒன்றுந் தப்பிப்போகாதென்று சொல்லியிருக்குறுர்கள்.

## ஷைத்தானிய்யா, நபுசானிய்யா, மலக்கானிய்யா, றப்பானிய்யா,

இன்சானுக் குண்டாகிற எண்ணங்களும் கருத்துகளும் விருப்பங்களும் தோற்றங்களும் குணங்களும் இந்த

நாலுவகையாயிருக்கும். இவைகளை முரீதீன்களுக்கு அந்தந்த நேரத்தில் செய்குமார்கள் குறித்துக்காட்டி அவைகளுக்குரிய அமல்களைக் கற்பித்துவருவார்கள். ஆகிலும் பொதுவாக அவைகளைப் பிரித்தறிதற்குச் சில அடையாளங்களைச் சொல்லுகிறேன்.

ஷைத்தானிய்யா, விலக்கப்பட்டவைகளுக்கு வழிகாட்டும் வறுமையை யஞ்சச்செய்யும் தீமைகளைச் செய்யத் தூண்டும், குபுரிய்யத்தி லிழுத்துவிடும். நபுசானிய்யா சரீர இச்சைகளையும் கோபம்முதலிய தீயகுணங்களையுமெழுப்பிவிடும். ஐஃனது றகுமகுல்லாகு ஷைத்தானிய்யாவின் குணத்திற்கும் நபுசானிய்யாவின் குணத்திற்கும் வித்தியாசம் நபுசானிய்யா ஒரு பொருளை விரும்பினுல் அதைப் பெற்றுக்கொள்ளும் வரையும் அதிலே மனம் திரும்பிவிடும், பெற்றுக் கொண்டாலும் இன்னும் வேறு பொருளில் ஆசை அதிகமாகிக்கொண்டுவரும். ஆனுல் சாலிக்கீன்கள் மனத்திடனுடன் பிரயாசைப்பட்டால் அக்குணங்களை யடக்கக்கூடியதாகும், ஷைத்தானிய்யாவோ ஒன்றில் கால் சறுகினுல் ஒன்றின்பின் ஒன்ருய்க் கெடுதியிலும் பாவங்களிலும் விழச்செய்து தாழ்த்திவிடும். மலாயிக்கத்துகள் நலவுசெய்ய மனத்தைத் தூண்டுவதும்’ பாவங்களை வெறுக்கச்செய்வதும் மேன்மையானவைகளுக்கு ஆசை யுண்டாக்குவதுமாகியவைகளுககுத் தனக்கு உஸ்தாதுபோலாயிருப்பார்கள். றப்பானிய்யாவைக்கொண்டு கஷ்புகளுண்டாகுதல், ஜலால், ஜமால், கமாலாகிய அஸ்மாக்களைக்கொண்டு தஜல்லியாத்துக ளுண்டாகுதலுமாயிருக்கும். றப்பானிய்யா றூகையும், மலக்கியயா அக்கிலையும், நபுசானிய்யா கல்பையும், ஷைத்தானிய்யா இயற்க்கை குணத்தையும் நடத்தும். றப்பானிய்யாவைக்கொண்டு மறைவான ஆலங்களிற் செல்லவும் கருமத்துகள் செய்யவுங் கூடியதாயிருக்கும் நபுசானிய்யா பெருமை கோபம் தீயர்களோ டுறவாடல் தர்க்கங்க ளாடுதலாகிய துற்குணங்களையுண்டாக்கும். ஷைத்தானிய்யா மார்க்கச் சட்டங்களுக்கு மாருய் நடக்குதல் பாவமான காரியங்களைச் செய்யப் பிரியங் கொள்ளுதலாகிய குணங்களாயிருக்கும். றப்பானியாவைக்கொண்டு முன்னுள்ளவர்கள் பின்னுள்ளவர்களுடைய இல்முகளுண்டாகுதல் முகற்றபீன்களின் பதவியிலாகுதல். மலக்கிய்யா சற்குணமுண்டாக்குதல் சாலிகீன்களுடைய பதவியிலாகுதலாயிருக்கும்.

---

## சொப்பனம்

சொப்பனம் மூன்று வகையாயிருக்கும். முதலாவது சாலிஹானவர்களுக்கு அல்லாகுத்தஆலாவில் நின்று முண்டாகிற நல்மாராயம், இதற்கு (புஷ்றா) வென்று சொல்லப்படும். இரண்டாவது தன் நபுசைக் கொண்டு உண்டாகிற சொப்பனம். மூன்ருவது சைத்தானைக்கொண் டுண்டாகிற சொப்பனம். சாலிஹானவர்களுக்குத் தெரிகிற சொப்பனத்தைக் குறித்து நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நுபுவ்வத்தில் நாற்பத்தாறி லொருபங்கென்று சொல்லியிருக்கிருர்கள். அல்லாகுத்தஆலா கனவுக்காக ஒரு மலாயிக்கத்தைத் திட்டப்படுத்தியிருக்கிருன் அவருடைய பெயர் றூஹ௦ அவர்

இழ்வானத்துக்குடையவர். உறங்குகிறவர்களுக்குத் தெரிகிற ரூபங்களெல்லா மவர்கையிலிருக்கும். ஒரு மனிதன் உறங்கினால் அல்லது உறங்காமல் தன்னை மறந்தவனாக யிருந்தால் அல்லது பனாவின் ஹாலாயிருந்தால் அந்த மலாயிக்கத்து காட்டுகிறவைகள் விழித்தவுடன் ஞாபகத்திலிருக்கும், ஒரு மனிதனின் பஞ்சேந்திரியங்களின் தத்துவங்கள் உறங்கும்போது தன் எண்ணமென்கிற கஸானாவி லமைந்து நிற்கும், அது மூளையின்முன் புறமாயிருக்கும். அந்த மலாயிக்கத்து அறிவிக்கவேண்டியவைகளைப் பல சூறத்துகளாகக் காட்டினால் உறங்குகிறவனுக்கு விளங்கும், இதில் மூன்று பதவிகளிருக்கின்றன. முதலாவது அவனுக்குத் தானிருக்கிற மக்காமையும் தன்னுடைய சிபத்தையுந் தெரிவிக்கிற கனவுகள், இரண்டாவது அவனுடைய ஹாலைத் தெரிவிக்கிற மனாம்கள், மூன்றாவது மார்க்கத்தைச்சேர்ந்த இல்முகள் தெரிவிக்கிற மனாம்கள். இவைகளில் நிரப்பமான அழகுடைய சூறத்தாகத் தெரிந்து தன்னுடனே பேசவும் தானதற்குச் சங்கைபாராட்டி வணக்கமாயிருக்கவுங் கண்டால் அது உண்மையான முபஸ்ஷிறாத்தா யிருக்கும். அந்த மலாயிக்கத்து, தெரியப்படுகிறது முண்டு, தெரியப்படாமலிருக்கிறது முண்டு. அழகிய சூறத்துகளையும் அவலக்ஷணமான சூறத்துகளையுங் கண்டால் அது தன் ஆலை வெளியாக்கிற மனாமாயிருக்கும். தனக்கு முன்நடந்த காரியங்களைச் சேர்ந்த கருமங்கள் தெரிந்தால் தன் நபுசைக்கொண்டுள்ள மனாம்களாயிருக்கும், அவைகள் ஞாபகத்தி லமைந்திருந்தவைகள் தனக்குத் தோற்றுகின்றனவா யிருக்கும், பயங்கரப்படத்தக்கவைகளும் வெறுக்கப்பட்டவைகளும் தெரிந்தால் ஷைத்தானைக்கொண் டுண்டாகிற வைகளென்று அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட மனாமைக்கண்டு விழித்தவன் எழும்பி இடதுபுறந் திரும்பி மூன்றுமுறை துப்பி அல்லாகுத்தஆலாவிடம் அதின் தீங்கைவிட்டும் கார்மானங் கேட்கும்படிக்கும், அப்படிச் செய்தால் ஒரு தீங்கும் வராதென்றும் நாயகமவர்கள் சொல்லியிருக்கிறார்கள் ஒரு மனிதன் கெட்ட கனவுகண்டால் பிறரிடஞ்சொல்லப்படாது, சொன்னால் அந்தப்படியே நடக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவன் கனவு காணாமல் நான் இன்னவிதங் கண்டேனென்று பொய்யாகச் சொன்னால் கேட்கிறவனுடைய எண்ணத்தில் இவனுக்கு நடக்கப்போகிற காரியம் உற்பத்தியாகி அவன் சொல்லுகிறபடி நடக்கும். இதற்கொரு அத்தாட்சியாவது:—யூசுபு அலைகிஸ்ஸலாமவர்களிடம் இரண்டு பெயர்கள் தாங்கள் கனவு காணாமல் இன்னவிதமாக நாங்கள் கண்டோமென்று சொன்னபொழுது அவர்களுடைய எண்ணத்தில் அவர்களுக்கு நடக்கப்போகிற காரியங்களுற்பத்தியாகி அவர்களிடமதை விளக்கிச் சொன்னார்கள், அவர்கள் நாங்களப்படி கனவுகாணவில்லை தங்களைச் சோதிப்பதற்காகச் சொன்னோமென்று சொல்ல, யூசுபு அலைகிஸ்ஸலாமவர்கள் நீங்கள் வருவதை யுரைக்கக் கேட்டதால் கருமம் தீர்ப்பிடப்பட்டுப் போய்விட்டதென்று சொன்னார்கள், யூசுபு அலைகிஸ்ஸலாமவர்கள் சொன்னபடியே அவர்களுக்குச் சம்பவித்தது. முஹியித்தீனுபுனு அறபி ரளியல்லாகு அன்கு ஒரு மனிதன் தனக்கொரு பிள்

ளை பிறக்கக் கனவுகண்டால் அந்தக் கனவைக்கொண்டு தன் முள்ளந்தண்டில் அந்தப்பிள்ளையின் சூறத்தாயொருபிள்ளை சமைந்து அது தாயின் வயிற்றிற் றரித்துப்பிறந்தால் அந்தப்பிள்ளை தன் சொற்பனத்திற் குரிய பிள்ளையாயிருக்கும், அந்தப் பிள்ளைக்கும் மற்றைப் பிள்ளைக்கும் வித்தியாசமிருக்கும், இந்தப்பிள்ளை றூஹானிய்யாவின் குணமுடையதாயிருக்கும். இதற் கத்தாட்சி எங்கள் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உற்பத்தியைப் பற்றி நாயகி ஆமினு றளியல்லாகு அன்ஹா அவர்கள் கண்ட கனவே. இவைகளெல்லாம் அல்லாகுத்தஆலா கல்குகளைப் படைக்கிற அஸ்ருறுகளிலுள்ளது. கியாலென்கிற எண்ணத்தைக்கொண்டு இவ்விதமான காரியங்கள் நடக்கக்கூடுமென்பது தபீயத்திலும் அல்லது இயற்கையிலும் நடக்கிற காரியங்களைக்கொண்டு அத்தாட்சிப்படுகின்றது. ஒரு பெண் புருஷனோடு கூடும்வேளையில் வேறொருவனை யெண்ணினுல் உண்டாகிற பிள்ளை அந்த எண்ணப்படுகிறவனின் வடிவாய்ப் பிறக்கும், அதற்காகப் பெண்கள் அந்தநேரத்தில் பெரியோர்களுடைய சூறத்தை மனத்தில் தோற்றச்செய்துகொண்டால் பிள்ளை அதுபோல் பிறக்குமென்று ஹுக்கமாக்களின் கருத்தென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனல் சொப்பனத்தைப் பற்றிய அறிவுகள் மிகுத மிருக்கின்றன. நான் இந்த மட்டில் நிறுத்துகிறேன்.

## சாலிக்கீன்களுக்குத் தோற்றுகிற தோற்றங்கள்

சாலிக்கீன்கள் நபுசின் தீய குணங்களை யடக்கி, கல்பின் அசுத்தங்களை நீக்கிவருகையில் திக்றில் மனத்தைத் தரிபடுத்தினுல் இந்த ஆலம் முல்கிலும் மலக்கூத்திலும் தங்கள் அடிமைத்தனம் திட்டமாகும். அதைக்கொண்டு தங்கள் நபுசிருக்கிற தன்மையையும் பதவியையும் தன் குணங்களையு மறிந்து கொள்வார்கள் தங்கள் நபுசு நபுசானிய்யாவின் குணத்திலோ மிருகங்களின் குணத்திலோ, துஷ்டமிருகங்களின் குணத்திலோ? கஷ்பின் பதவியிலோ? றூகின் தன்மையிலோ? மலாயிக்கத்துகளின் மறுத்தபாவிலோ? றகுமானின் குணத்திலோ இருக்கின்றதென்று வெளியாகும். ஆவல், உலோபம், பெருமை, கோபம் முதலிய தீயகுணங்களிருந்தால் அந்தக் குணங்களுடைய மிருகங்கள் தோற்றும், ஆவலதிகமாயிருந்தால் பெருச்சாளியல்லது எறும்பு தோற்றும், குரோதம் மிகைத்திருந்தால் நட்டுவையின் ரூபம் அல்லது பாம்பின் ரூபந் தெரியும், பெருமை யதிகரித்திருந்தால் குதிரையின் ரூபம் வெளியாகும், தீனி லதிகப் பிரியமுடையவனுயிருந்தால் ஆடுமாடுபோலுள்ள மிருகங்கள் தெரியும், இச்சை யதிகமாயிருந்தால் கழுதையும், உபாயதந்திர மதிகமாயிருந்தால் நரிபோலுள்ள மிருகங்களும், துஷ்ட குணங்களிருந்தால் துஷ்ட மிருகங்களும், ஷைத்தானிய்யாவின் குண மதிகமாயிருந்தால் சைத்தானல்லது இபுலிஸ் அல்லது பிசாசு தரிசனையாகும், இவைகளைக்கொண்டு தன் நபுசிருக்கின்ற தன்மை நிச்சயப்படும், தெளிவான ஆறு ஓடக்கண்டால் கிரகம் சந்திரன் வானம் ஆகியவைகளைக் கண்டால் அது கல்பிய்யாவின் மக்காமென்றறிந்து கொள்ளலாம். ஒ

ளிவு ஏறுவதும் பூமியி லிறங்குவதும் வானத்திற்குப் போவதும் (லதுன்னீ) யென்கிற இல்மூண்டாகிறதும், எவ்விதம் வந்ததென்று சொல்லக்கூடாமல் தெரியாதிருந்த இல்மூக ளுண்டாகிறதும் ஆகியவைகள் றூகின் மக்காமென்று நிச்சயிக்கலாம். மறைவான ஒளிவு நாயகத்தனத்தின் சிபாத்துகளின் கஷ்புகள், இல்ஹாம், வஹீ றப்பானிய்யாவின் தஜல்லியாத்துகளாகியவைகள் றகுமானின் குணங்களென்று விளங்கிக் கொள்ளலாம். சாலிக்கீன்கள் தாங்களிருக்கின்ற மக்காம் இன்னதென்று தெரியாது றூகுடைய மக்காமைச் சேர்ந்தால் விலாயத்தையுடைய செய்கில்லாமல் அந்த மக்காமைக் கடக்கக்கூடாது. கல்புடைய மக்காமிலும் மலக்கிய்யாவுடைய மக்காமிலும் இவ்விதமென்று சொல்லக்கூடாத இன்பமும் ஆனந்தமும் மஸ்துமுண்டாகி கல்குகளையும், துன்யாவின் இன்பங்களையும் விட்டு நீங்கச்செய்யும். மறைவான ஆலங்களிலுள்ளவைகளோடும், அறுவாகுடைய ஆலத்தைச் சேர்ந்தவைகளோடும் உறவாடி வாழுதற்கே ஆசை யுண்டாகிவிடும். திக்றி லிருக்கையில் தன் பஞ்சேந்திரியங்களின் உணர்வற்றுப் பரவசமாகி அக்கில் மட்டுமிருந்து அந்தநேரத்தில் அக்கிலுக்குத் தெரியவந்தவைகள் திரும்ப பஞ்சேந்திரியங்களின் குணங்களுண்டாகி உணர்வுவந்த வேளையில் அறிவிருந்தால் அவைகள் அல்லாகுத்தஆலாவின் அருளாயிருக்கும், அப்பொழுது கல்பு சந்தோஷத்தில் மலர்ந்திருக்கும். ஆனால் நினைவுண்டானபொழுது தான் நினைவற்றிருந்த வேளையில் தனக்குண்டான அறிவுகளொன்றுந் தெரியாதிருந்தால் அதிலதிகம் பலனில்லை. திக்றைக்கொண்டு கல்பில் சூடுண்டாகி ஆவி மூளைக்கேறி அக்கிலையும் றூகுல் ஹைவானையும் தடுத்து, போதமற்று விழுகிறதாயிருக்கும். இந்த ஹாலில் மேகம், தோட்டம், கிணறு, கடல்போலுள்ளவைகள் தோற்றுவதுமுண்டு; அவைகள் அந்த ஆவியாலுண்டாகிறவைகள். ஷைத்தானுக்கு உனது பஞ்சேந்திர அறிவுகளை இல்லாமலாக்கி உனது அக்கிலில் அறிவுகள் வரச்செய்யத் தத்துவமில்லை. உனது ஐயறிவிருக்கையில் சைத்தான் எனது அடியானே நான் உனது றப்பு, என்னையல்லாது நீ வேறொன்றையும் பாராதே, நீ உன்னைத்தான் பார்த்தியேயானால் நீ இணைவைக்கிறவனாகி விடுவாய். நானே பார்க்கிறவனும், நானே பார்க்கப்பட்டவனும், நானே சுஜூதுசெய்கிறவனும், சுஜூது செய்யப்பட்டவனும், நானே திக்று செய்கிறவனும் திக்று செய்யப்பட்டவனும் என்பதுபோலுள்ள பேச்சுகளைச் சொல்லுவான். இபுலீஸ் இது அல்லாகுத்தஆலாவின் நின்று மென்று விசுவாசங் கொள்ளுதற்குச் செய்விப்பான், இவைகளால் மருண்டு விடப்படாது. ஹக்குத்தஅலாவின் பேச்சு பஞ்சேந்திரியங்களுக்கு அல்லது மனத்திற்கு அல்லது எண்ணத்திற்குக் கேட்க அல்லது விளங்கப்படுகிறதில்லையென்றறிந்து, உனது செய்கிடம் அறிவித்து இது செய்த்தானைக்கொண் டுண்டாயிருப்பதென்று திட்டமாக்கிக்கொண்டு திக்றையும், ஆயத்துக்குர்ஸி, இரண்டு அஊதுகளாகிய சூறத்துகளையும், இஸ்திஃபாறையும் அதிகமாக்கிக் கொள்ளவேண்டும் றப்பானிய்யாவில் கடாக்ஷம் (றகுமத்து) மகத்துவம் (அழுமத்து) ஞானம் (ஹிம்மத்து) ஆகியவை

கள் வெளியாகும். கடாக்ஷம் வெளியானால் ஹக்குத்தஆலாவுடனே சகவாசம் (ஆனசு) உண்டாகும், மகத்துவம் வெளியானால் கல்பில் வணக்கமான குணம் தரிபடும், ஞானம் வெளியானால் கல்பு சாந்தமாகும் மலக்கிய்யாவால் சோபனம் கூறப்படுதலும், எச்சரிக்கை யுண்டாகுதலும், உணர்ச்சி யுண்டாகுதலு முண்டாகும். சோபனங் கூறப்பட்டால் கல்பு மலர்ந்திருக்கும், எச்சரிக்கை யுண்டானால் கல்பு சுருங்கப்பட்டதாயிருக்கும், உணர்ச்சியுண்டானால் கல்பு அறிவுடையதாயிருக்கும். நபுசானிய்யா இச்சையையும் துற்குணங்களையும் உண்டாக்கும், ஷைத்தானிய்யா பாவங்களில் விருப்பமும் எழிமையைப் பயப்படுதலும், கெடுதி குபுரிய்யத்து முதலிய தீமைகளில் பிரியமுண்டாக்குதலுமா யிருக்கும்.

## வஹீ, இல்ஹாம், இல்முல் லதுன்னீ, றூயா ஆகியவைகள்.

---

வஹீயாவது, நபிமார்களுக்கு அல்லாகுத்தஆலாவால் அருளப்பட்ட ஞான அருட்சியாயிருக்கும். இதற்கு அல்லாகுத்தஆலாவின் பேச்சென்றுஞ் சொல்லப்படும், இது மூன்றுவிதமாக வரும். முதலாவது நபிமார்களின் கல்புகளில் அல்லாகுத்தஆலாவில் நின்றும் வரும், இரண்டாவது ஒரு மறைவுக்குப் பின்னிருந்து பேச்சாகவும் வரும், மூசா அலைகிஸ்ஸலாமுக்கு மரத்திலிருந்து பேச்சு வெளியானதுபோல், மூன்றுவது மலாயிக்கத்துகள் வழியாகவும் வரும். குறுஆன் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கல்பில் மலாயிக்கத்துகளால் வெளியாக்கப்பட்டதுபோல். இல்ஹாமாவது ஹக்குத்தஆலாவால் நபுசுக்கு நேரே உண்டாகிற அறிவுகள். கல்பு எந்தமட்டுக்கு சுத்தமாகவும் துப்பரவாகவுமிருக்குமோ அந்தமட்டு ஹக்குத்தஆலாவின் ஒளி பிரகாசிக்கும் அக்கில் அவ்வலில் நின்றும் வஹீவரும், நபுசல் குல்லியிலிருந்து இல்ஹாம்வரும். வஹியாவது அன்பியாக்களுடையவும் றசூல்மார்களுடையவும் ஆபரணமாயிருக்கும், இல்ஹாம் ஒலிமார்களுடைய பதவியாயிருக்கும், இல்முல்லதுன்னீ நபிமார்களுக்கும் ஒலிமார்களுக்கும் உண்டாகும், அது ஹக்குத்தஆலாவில் நின்றும் நேரே அவர்கள் கல்புக்குண்டாகும் அறிவுகள். நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கொண்டு வஹியுடைய வாசலடைக்கப்பட்டுவிட்டது, இல்ஹாம் நபுசுல்குல்லியில் நின்று தகுதியுடையவர்களுக்கு எக்காலமு முண்டாகும்.

வஹீ தொடக்கத்தில் சொப்பனத்தில் வெளியாகும், அவ்விதம் வந்தால் அதற்கு றூயாவென்று சொல்லப்படும். மலாயிக்கத்துகள் வஹியை மனுரூபமாய்வந்து வெளியாக்கிறது முண்டு, நபிமார்களுடைய கல்பில் சென்று தெரிவிக்கிறது முண்டு. அந்த நேரத்திலவர்கள் சுபாவதன்மைக்கு அதை ஏற்றுக்கொள்ளத் தகுதியிராது. வஹீ மார்க்கச் சட்டங்களையும், ஹலாலாக்கப்பட்டவைகளிவை, ஹறாமாக்கப் பட்டவைகளிவையென்றும் வெளியாக்கும். இல்ஹாம் மார்க்கத்திலுள்ளவைகளுக்கு விரோதிக்காத விளக்கங்களைத் தெரிவிக்கும். இதற்கொரு உதாரணஞ் சொல்லுகிறேன், முற்கா

லத்திலிருந்த உலமாக்கள் ஹதீதுகளை ஆராய்ந்து அத்தாட்சிகள் தேடி யோசனையைக் கொண்டு உண்மையானவைகளிவை, பெலவீனமானவைகளிவையென்று தீர்ப்பிட்டிருந்தாலும் ஒலிமார்களுக்கு அல்லாகுத்தஆலா அருளிய அறிவைக்கொண்டு உண்மையென்பவைகளிற் சிலது பெலவீனமென்றும், பெலவீனமென்பவைகளிற் சிலது உண்மையென்றும் உலமாக்கள் யோசனையைக்கொண்டு தீர்மாணித்த தீர்ப்பைவிட்டு தங்களுக்கு இல்ஹாம் தெரிபவந்ததை யேற்றுக்கொள்வார்கள் ஒலிமார்கள் நாயகம் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களின் சுதந்தரர்கள். அவர்கள் சுதந்திரம் பெறுகிற பொருள் அந்த மார்க்கமே. அதைத் தெளிவாய் விளங்கிக் கொள்ளுகிறதற்கு அல்லாகுத்தஆலாவால் அனுக்கிரகம் பெறுகிறதே, அதற்கு மாற்றமாயொன்றும் வராது. ஒலிமார்கள் மார்க்கத்தைத் தெளிவாக்கிக் காட்டுகிறவர்களும் எச்சரிக்கிறவர்களுமாயிருக்கும். குறுவானுக்கும் ஹதீதுக்கும் இஜ்மாஉக்கும் விரோதிக்காத ஒலிமார்களுடைய பேச்சுகளைக்கொண்டு முஸ்லிம்கள் அமல் செய்யவுமாகும், செய்யாமலிருக்கவுமாகும். தஸவ்வுபுடைய இல்மாகிறது குறுவானைக்கொண்டும் ஹதீதைக்கொண்டும் அமல்செய்து வருகையில் கல்பில் ஒளி பிரகாசித்து உண்டாகிற அறிவுகளாயிருக்கும், ஆகையால் அவைகள் விரோதிக்கக்கூடாது தஸவ்வுபாகிறது மார்க்கச்சட்டமென்கிற பாலிலுள்ள வெண்ணையாயிருக்கும், 'பாலில்லாமல் வெண்ணை யுண்டாகாததுபோல் சரீஅத்தின் சட்டங்களில்லாமல் தஸவ்வுபுடைய இல்மில்லை. நாயகம் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுக்குப் பின் ரிசாலத்தும் நுபுவ்வத்து மில்லாதுபோனாலும் இல்ஹாமும் முபஷ்ஷிருத்து முண்டு.

## முக்காஷபா.

முக்காஷபா வென்பது உனக்கு விளங்கும்பொருட்டு சில காரியங்களைச் சொல்லுகிறேன். இது மிகவும் பிரயோசனமுடைய இல்மாகையால் கூர்மையான புத்தியைக் கொண்டு தெண்டித்து விளங்கிக்கொள், இது மஉரிபாவுடைய இல்முக்கு ஒரு திறவுகோலாயிருப்பதால் கூடியமட்டிலும் தெளிவாக்கிக் காட்டுகிறேன். இந்த ஆலம்ஷஹாதா நமது பஞ்சேந்திரியங்களைக் கொண்டு தெரிகிறபடிதான் இருக்கிறதென்று நிக்ஷயித்திருக்கிறோம், இந்த நிக்ஷயமெவ்வித முண்டாகிறதென்பதை யாராய்வோம். நமக்குப் பஞ்சேந்திரியங்களில்லாமல் உயிர்மட்டு மிருந்தால் மரஞ் செடிகளின் தன்மையாயிருப்போம், நமக்கு இந்த இந்திரியங்களிலொன்று குறைந்திருந்தால் அந்த இந்திரியத்தால் நாமிந்த ஆலத்திலிருக்கிறதென்று நிச்சயிக்கிற தன்மை ஆலத்துக்கில்லாததுபோலாகி விடும். காதில்லாமற் படைத்தால் சத்தம் இராகமொன்றும் இந்த ஆலத்துக்கில்லாததுபோலாகிவிடும், மனிதரைக் கண்ணில்லாமற் படைத்தால் ரூபம் நிறமொன்றும் துன்யாவிலில்லாமல் இருளாய் எங்களுக்கிருக்கும். நமது இந்திரியங்கள் நமக்கிருப்பதிலும் அதிகக் கூர்மையாக அல்லது அதிகத் தத்துவமுடையனவாகப் படைக்கப்பட்டிருந்தால் ஆலம் வேறு விதமாகத் தெரியும், நமது கண்ணு

க்குத் தெரிகிற பொருள்களை நூறு
பங்கு அதிகப் பருப்பமாக்கிக் காட்டு
கிற கண்ணுடியின் தத்துவம் எங்கள்
கண்ணுக்கிருந்தால் ஒவ்வொரு பொ
ருளும் இப்பொழுது நாங்கள் காண்
கிற பருப்பத்திற்கு நூறுபங்கு அதி
கப்பருப்பமாய்த் தெரியும், ஒரு துளி
தண்ணீரில் ஆயிரக்கணக்கான செ
ந்துகள் ஓடித்திரியக் காண்போம்,
ஒவ்வொரு கனியிலும் லக்ஷக்கணக்
கான பிராணிகள் இருக்கின்றனவெ
ன்றறிவோம். அழகான முகமாக
நாங்களிப்பொழுது காண்கிற முக
த்தில் ஆயிரக்கணக்கான குழிகளும்
மேடுகளும் பழுதுகளு மிருப்பனவா
ய்த் தெரியும், இவ்விதம் ஆலம் வே
றுவிதமாக எங்களுக்குத் தோற்றும்.
எங்களெல்லோரையுங் குருடராய்ப்
படைத்திருந்து திடுகூருய்ப் பார்
வையுண்டானுல் குருடாயிருந்த வே
ளையில் எங்களுக்குத தெரிந்திருந்த
ஆலமல்ல, இது வேருெரு ஆலமெ
ன்று நினைப்போம். இந்த இந்திரி
யங்களல்லாமல் வேறுவிதமான இந்
திரியங்களைக்கொண்டு எங்களைப் ப
டைத்தால் இந்த ஆலம் வேறுவித
மாயிருக்கும். ஆகையால் திட்டமா
யறிந்துகொள், ஆலம் சுயமாயிருக்கி
ன்ற தன்மை எங்களுக்குத் தெரிய
வில்லை. பஞ்சேந்திரியங்களைக்கொ
ண்டு மனத்திலுண்டாகிற சூறத்தை
த்தான் நாம் ஆலமென்று நிச்சயிக்
கிறேம். உள்ளமையாவது நமக்கு
ஆலம் தெரியவில்லை, பஞ்சேந்திரிய
ங்களைக்கொண்டு நமது கியாலல்லது
எண்ணத்தில் தோற்றுகிற சூறத்து
த்தான் நமக்குத் தெரிகின்றது, இ
தின் வித்தியாசத்தைக் கூர்மையா
ய்யோசித்து விளங்கிக்கொள். உன
க்கு இலேசான ஒரு உதாரணஞ்
சொல்லுகிறேன்; இரண்டு மனிதர்
கள் ஒருவன் சீமான், ஒருவன் பக்
கீர் அந்த சீமான் பக்கீருடைய உ
டையையும், அந்த பக்கீர் சீமானு
டைய உடையையும் உடுத்துவந்தா
ல் நீ உடையைக்கொண்டு சீமானை
பக்கீராகவும், பக்கீரைச் சீமானுகவு
ம் நினைத்துக்கொள்வாய். உன் மட்
டுக்கு நீ நினைத்துக்கொண்டது சரி
தான், உள்ளமையோ வேறு விதமா
யிருக்கின்றது. அந்த உடையைக்
கொண்டு உள்ளமை வேறுவிதமா
யுனக்குத் தெரிந்தது. அந்த உடை
உள்ளமையை மறைக்குந் திரையா
யிருந்தது, அந்த உடை நீக்கப்பட்
டால் உள்ளமையை யறிவாய், ஒவ்
வொருவருக்கும் அவரவர்களுடைய
இல்முக்குத்தக்க விசுவாசமுண்டா
கும். ஒரு புத்தகத்தை ஒரு காட்டு
மனிதனிடம் காட்டினுல் அவன்
புத்தகங்களை யதற்குமுன் கண்டில்
லாததால் வெள்ளையில் கறுப்பால்
கீறியிருக்கிறதென்று சொல்வான்.
புத்தகங்களைக் கண்டவன் ஆகிலும்
கல்வியில்லாதவன் கண்டால் இது
எழுத்தென்று சொல்வான், வாசிக்
கிறவன் கண்டால் வாசிப்பான், அ
றிவை யுடையவன் அதிலுள்ளவை
களை விளங்கிக்கொள்வான். ஹக்கு
த்தஆலாவைப் பற்றிய விசுவாசம்
ஒவ்வொருவரும் அவரவர் இல்முக்
குத் தக்கபடியும் அவர்களுக்குண்டா
கிற கஷ்புக்குத் தக்கபடியும் விசுவா
சம் வைத்திருப்பார்கள், அறிவுக்கும்
கஷ்புக்கும் மட்டில்லை. உள்ளமை
யாவது ஹக்குத்தஆலாவின் தாத்
தையாவது அவனின் சிபத்துகளின்
தீர்ச்சையாவது ஒலிமார்களுக்காவ
து நபிமார்க்ளுக்காவது திட்டப்படா
து, அவரவர்களுக்கு ஹக்குத்தஆலா
கொடுத்தருளிய அறிவின் மட்டிற்
கே அறிவார்கள். இந்தக் கருத்தை

க்கொண்டுதான் முஃகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு அவர்கள் மனிதரொவ்வொருவரும் அல்லாகுத் தஆலாவை வணங்கவில்லை, அவரவர் தங்கள் விசுவாசத்தை (இஉத்திகாதை) வணங்கிறார்களென்று சொல்லியிருக்கிறார்கள். இவர்களின் கருத்தை விளங்காமல் சில மூடத்தனமான செய்குமார்கள் ஒவ்வொருவனும் தன்னைத்தான் வணங்கவேண்டுமென்று தன் முரீதீன்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

கஷ்பென்கிற சொல்லின் பொருள் மறை வல்லது திரை நீங்குதல், சூபியாக்கள் அச்சொல்லை மறைவாயிருக்கின்ற அந்தரங்கமான உள்ளமைகள் மறைவு நீங்கி வெளியாகிறதற்குப் பாவிப்பார்கள். இந்தத் தரிசனைகள் இரண்டு வகையாயிருக்கும்: முதலாவது (சூரிய்யுன்) ரூப தரிசனம், பஞ்சேந்திரியங்களைக் கொண்டுண்டாகும் தரிசனைகள். இரண்டாவது (மஉனவிய்யுன்) ஆத்ம தரிசனை, அரூபியானவைகளா லுண்டாகிற அறிவுகள். ரூபதரிசனம் பல வகையாயிருக்கும். முதலாவது இந்திரியங்களைக்கொண்டு ஆலம் மிதாலி லுள்ளவைகளைக் காணுதல். கஷ்பில் அறுவாகுகள் சரீரமெடுத்துத்தோற்றுதல், றூஹானிய்யாக்களின் ஒளிகள் தெரிதல் முதலியவைகளே. இரண்டாவது காதால் கேட்குதல் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு வஹி கவி போன்ற பேச்சுகளாலிறங்கி அவர்களுக்குக் கேட்கப்பட்டதும், சல்சலத்துல் ஜர்சென்கிற தெய்வீக நாதம் கேட்கப்படுகிறதும், தேனீக் கூட்டங்களின் இரைச்சல்போல் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குக் கேட்டு விளங்கிக்கொண்டதுபோ லுள்ளவைகளும் இந்த வகையா யிருக்கும். மூன்றாவது தொட்டறிவு வழியாலுண்டாகும் கஷ்பு, நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எனது றப்பு தன்புயங்களை யென் புயத்தில் வைத்தபோது என் மார்பில் குளிர்ச்சியுண்டாகி வானலோகத்திலும் பூலோகத்திலுமுள்ளவைகளெல்லாம் அறிந்துகொண்டேனென்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோலுள்ள கஷ்புகள் இந்த வகையாயிருக்கும். நாலாவது சுவையைக்கொண்டு வெளியாகுதல் நாயகமவர்கள் பால்குடிப்பதாகக கண்டேன் எனது தாகம் நகங்களால் போய்விட்டதென்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோலுள்ளவைகளிந்த வகையாயிருக்கும்.

ரூபதரிசனையான கஷ்புகள். இந்த துன்யாவைச் சேர்ந்தவைகளு மிருக்கின்றன. ஒரு தூலையான விடத்திலொரு மனிதன் இன்னது சொல்லுகிறான், இன்னது செய்கிறானென்று அவனைக் காணாமல் கஷ்புகொண்டறிகிறது. இப்படிப்பட்ட கஷ்புகளை அவுலியாக்கள் கீழ்மையாய்ப் பேசுவார்கள். இவைகள் துன்யாவைச் சேர்ந்தவைகளான படியால் சன்னியாசிகளுக் குடையவைகளென்று சொல்வார்கள், உயர்த்தியான பதவியைத் தேடுகிறவர்கள் இவைகள் வேறு பராக்கி லிருந்து விடுமென்று நாடமாட்டார்கள். ஆரிபீன்கள் துன்யாவைச் சேர்ந்த கஷ்புகளையும், ஆகிறத்தைச்சேர்ந்த கஷ்புகளையுந் தள்ளிவிட்டு அல்லாவில் பனாவாகவும் அவனிற் றரிபடவுமே அவர்கள் நோக்கமெல்லாமிருக்கும். நிரப்பமான முஹக்கிக்கீன்கள் மறை

வானதும் அவன்தான், வெளியானதும் அவன்தானென்று நிச்சயப்படுத்தி அவனுடனே சகலதையுமொன்ருய்க்கண்டு அவனையல்லது வேறொன்றையுங் காணூர்கள். ஆத்மதரிசனையாவது நாயனின் இல்மின் சமூகமாகிய அஉயான் தாபித்தாவின் தரிசனை, அக்கிலுல் அவ்வலின் தரிசனை, லவ்ஹுல் மஹ்பூளின் தரிசனை முதலிய அறுவாகுகளின் தரிசனைகளாயிருக்கும். இவைகளைப் பின்னல் விவரித்துச் சொல்லுகிறேன். இந்தக் கஷ்புகளெல்லாம் கல்பைக்கொண்டே தரிசிக்கப்படும்; கல்புக்குப் பார்வை கேள்வி முதலிய ஞான இந்திரியங்க ளிருக்கின்றன. இந்த கல்பிலுள்ள இந்திரியங்கள் தான் வெளி இந்திரியங்களுக்குத் தத்துவங் கொடுக்கின்றன. ஆகிலும் இந்த வெளி இந்திரியங்களுக்கும், றூகின் இந்திரியங்களுக்குமிடையே ஒரு அடைப்புண்டாயிருக்கின்றது, அந்த அடைப்பு நீங்கினல் வெளி இந்திரியங்களும் றூகின் இந்திரியங்களுஞ் சேர்ந்து வெளிக்கண்ணுல் பார்ப்பது றூகின் கண்ணுல் பார்ப்பதாயிருக்கும், அரூபமானவைகளுந்தெரியும்.

## சாலிக்கீன்கள்.

சாலிக்கீன்கள் திக்றைக்கொண்டு கல்பென்கிற கண்ணுடியிலுள்ள ஊத்தைகளைச் சுத்தப்படுத்திவருகையில் மறைவான ஒளிகள் கல்பின் தெளிவுக்குத் தக்கதாய் வெளியாகும். தொடக்கத்தில் மின்னலைப்போல் தெரிந்து மறைந்துவிடும், பின் அந்த மின்னல் சற்று சுணங்கும். பின்பு பந்த ஒளிபோலும் விளக்குப்போலும், நக்ஷத்திரங்களைப்போலும் வளர் பிறையைப்போலும், பூரணசந்திரனைப்போலும் வெளியாகும். இவைகள் தஜல்லியாத்துகளின் நூதர்களென்று நினைத்து மகத்துவமும் மேன்மையுமுடைய தரிசனைக்குத் தக்க ஆயத்தமுடையவனுகிக்கொள். இவைகள்தான் ஹக்குத்தஆலாவின் தரிசனையென்று மருண்டுவிடப்படாது. ஹக்குத்தஆலாவுக்கும் அப்துக்குமிடையே ஒளிவால் எழுபது திரைகளிருக்கின்றன. இதை யறிவிக்கிறதற்குத்தான் அல்லாகுத்தஆலா இபுருஹீம் அலைகிஸ்ஸலாமுடைய செய்தியைக் குறுஆனில் திருவுளம் பற்றியிருக்கிருன். இரவானபோது இபுருகீம் அலைகிஸ்ஸலாம் நக்ஷத்திரத்தைக்கண்டு இது என்னுடைய றப்பென்று சொன்னூர்கள், ஆனுல் இது வானத்திற் பிரகாசிக்கிற கண்டிப்பையுடைய நக்ஷத்திரமல்ல, ஏனுல் சிறுபராயத்திலே வானத்திற் பிரகாசிக்கிற நக்ஷத்திரங்களை யவர்கள் கண்டிருப்பதால் அவைகள் நாயனல்லவென்று அவர்களுக்குத் தெரியும். இன்னும் நக்ஷத்திரங்கள் வானத்தில் தெரிகிறது ஒன்றல்ல, அதனுலிது என்னுயனென்று சொல்லவரமாட்டாது. இன்னும் எந்த மடையர்களுக்கும் நக்ஷத்திரங்கள் நாயனல்லவென்று தெரிந்திருக்க, இபுருகீம் அலைகிஸ்ஸலாம் வானத்திலிருக்கிற நக்ஷத்திரத்தைப் பார்த்து அது தன் நாயனென்று சொன்னூர்களேயென்று நினைப்பது தவறு. இவைகள் வெளிக் கண்ணைக்கொண்டு உண்டாகிற காட்சிகளல்ல, கஷ்பைக் கொண்டுண்டாகிற காட்சிகள். இவ்விதமே இமாம்கஸ்ஸாலிறகுமதுல்லாகு குறுஆனிலுள்ள நான் சொன்னவசனத்தின் கருத்தென்று சொல்லியிருக்கிருர்கள்.

சாலிக்கீன்களில் தங்களுக்கு வெ
ளியாகிற திரைகளைக்கொண்டு மரு
ண்டு அதில் தரித்துவிடுகிறவர்களு
மிருக்கிறார்கள். சிலர் முதலாம் தி
ரையிலேயே மயங்கி விடுவார்கள்,
ஹக்குத்த ஆலாவுக்கும் அப்துக்குமி
டையேயுள்ள திரைகளில் முதலா
வது தன் நபுசு தானாயிருக்கும், அ
து அல்லாகுத்தாலாவின் கருமத்தி
லுள்ளதானபடியால் அதுவும் ஹக்
குத்தஆலாவின் ஒளியினாலொரு ஒ
ளியாயிருக்கும், அதுதான் கல்பின்
சிறு. ஹக்குடைய உள்ளமைகளெ
ல்லாம் அதிலேதான் தஜல்லியாக
வேண்டும், அப்படி தஜல்லியானால்
அது ஆலம்களெல்லாவற்றிலும் விரி
ந்து அவைகளையெல்லாம் வளைந்து
விடும், சமஸ்தமும் ஒன்றாய் வெளி
யாகும். மகத்துவத்தையுடைய ஒளி
பிரகாசித்துவிடும், சகல படைப்பு
களின் நிலைபரம் தனக்கு வெளியா
கும், இது முதலாவது ஒளியின்
திரையாயிருக்கும். ஹக்குத்த ஆலா
வின் ஒளி பிரகாசித்த கல்பு உன்ன
தமான அழகைக்கண்டு அதிசயித்
துத் திகைத்து சில வேளைகளில் நா
வால் அனல்ஹக்கென்று வெளியா
கிவிடும். அதன்பின் வெளியாகிற
வைகளைக்கொண்டு அந்தத் தவமுள
எண்ணம் நீங்காமல் அந்த எண்ண
த்தில் தரித்துவிட்டால் அவன் ஹ
லாக்காகிவிடுவான். கண்ணாடியிலல்
லது தண்ணீரிற் காண்கிற சந்திர
னை யல்லது நக்ஷத்திரத்தை சந்திர
னென்றும் நக்ஷத்திரமென்றும் நினை
ப்பதுபோலாயிருக்கும். ஒரு கண்
ணாடிக்குப்பி யல்லது போத்தளி லி
ருக்கிற பொருளின் நிறத்தைக்கொ
ண்டு அந்த போததள் அந்த நிறமெ
ன்று சொல்லுவதுபோல், கல்பெ
ன்கிற கண்ணாடியில் தஜல்லியாத்
துப் பிரகாசித்தவுடன் அந்தப் பிர
காசம் அந்த கல்பென்கிற கண்ணா
டிதான், அது நாம்தானென்று நி
னைப்பதாயிருக்கும்.

## ஆலம் ஷஹாதாவைச் சேர்ந்த கஷ்புகள்.

முதலாவது சாலிக்கீன்களுக்குண்
டாகிற கஷ்பு, இந்த ஆலத்தைச்
சேர்ந்த மறைவானவைகளா யிருக்
கும். மனிதர்கள் தங்கள் வீட்டினு
ள்ளே யல்லது இருட்டிலே யல்லது
தொலையான விடத்திலே யிருந்து செ
ய்கிற செயல்களெல்லாம் தெரியும்.
இதை அல்லாகுத்தஆலா உன்னைச்
சோதிப்பதற்காக வெளியாக்குவான்,
நீ (ஸத்தாறு) அந்தரங்கங்களை ம
றைக்கிறவனென்கிற இஸ்முக்குக் கீ
ழ்ப்பட்டவனாயிருந்து இரகசியங்களை
வெளிவிடாது பேணிக்கொள்ளவே
ண்டும். நீயறிந்த இரகசியங்களை யு
டைய மனிதன் உன்னிடம் வந்தா
ல் நீயுமவனும் தெரிவதற்கு உபதே
சஞ் சொல்லுவதே யல்லாமல், அவ
னுக்கு வெட்கமுண்டாவதற் காவது
உனது கஷ்பை வெளியாக்கிறதற்கா
வது பேசப்படாது. இன்னும் நீ கூ
டிய மட்டிலும் இந்தக் கஷ்பைவிட்
டும் திரும்பிக்கொள், திக்றின் பரா
க்கிலிருந்துகொள், அதன்பின் பூமி
யில் விளைகின்ற கற்கள் இரத்தின
ங்கள் புதையல்களுனக்கு வெளியா
கும், நீயவைகளில் ஆசைகொண்டா
ல் ஒருவேளை அந்த மக்காமில் தரி
பட்டவனாகிவிடுவாய், அல்லது அந்
த மக்காமை விட்டுந் தூரத்தப்பட்ட
வனாகிவிடுவாய். அது வரையும் உ
னக்குண்டான இல்முகளெல்லாம்

உன்னைவிட்டும் அகன்றுவிடும், நீ இவைகளின் மருட்டுதல்களை விட்டும் அல்லாகுத்தாலா விடம் தஞ்சந் தேடுகிறவனு யிருந்துகொள். அதன்பின் தாவரவஸ்துகளின் அஸ்ரூறுகள் வெளியாகும், ஒவ்வொரு மரத்திலும் ஒவ்வொரு செடியிலும் அவை யவைகளின் இலைகளிலும் பட்டைகளிலும் வேர்களிலுமுள்ள பிரயோசங்களும் அவைகளின் கெடுதிகளுந் தெரியவரும். ஆனுல் இவைகளின் பராக்கி லுன்மனத்தைச் செலுத்தாது திக்றில் தரிப்பாயிருந்துகொள், அதன்பின் மிருகங்களின் அஸ்ரூறுகள் வெளியாகும், மிருகங்கள் உனக்கு சலாம்சொல்லி உன்னுடனே பேசும். ஆலம்முழுவதிலுமுள்ளவைகள் செய்யுந் தஸ்பீகும் உனக்குத்தெரியவரும், இந்த விடத்தி லுன்னுடைய கஷ்பு கியாலைக் கொண்டிருக்கிறதா ? அல்லது சரியானதாவென்று பிரித்தறிகிறதற்கு ஒரு குறிப்புச் சொல்லுகிறேன். நீ செய்யும் திக்றையே நீ காண்கிற படைப்புகளெல்லாம் செய்கிறதாகக் கண்டால் உன்னுடைய கஷ்பு கியாலைக்கொண் டுண்டாயிருப்பதென்று திட்டமாக்கிக்கொள், ஒவ்வொரு படைப்பும் அதற்குத் தனதான திக்றிலிருக்கக் கண்டால் உனது கஷ்பு சரியானதென்று நிச்சயித்துக்கொள்.

## அஸ்மாக்களின் தஜல்லியாத்து.

---

அல்லாகுத்தஆலா தன் இஸ்முகளிலொரு இஸ்மைக்கொண்டு அப்தில் தஜல்லியானுல் அந்த இஸ்மின் ஒளியினுல் அவன் சன்னதமாகிவிடுவான், நீ ஒரு இஸ்மைச் சொல்லி அல்லாகுத்தஆலாவை யழைத்தால் அந்த இஸ்மின் தஜல்லியாத்து அவனிலிருந்தால் அவன் மறுமொழி சொல்வான், இந்த தஜல்லியாத்துகளில் முதலாவது மவ்ஜூதென்கிற இஸ்மைக்கொண் டுண்டாகிற தஜல்லியாத்து இதற்கு உயர்த்தியானது வாஹிதென்கிற இஸ்மின் தஜல்லியாத்து. அதிலு முயர்த்தியானது அல்லாவென்கிற இஸ்மைக்கொண் டுண்டாகிற தஜல்லியாத்து, அந்த தஜல்லியாத்து உண்டானுல் அப்தென்கிற சமைவு அற்று அல்லாவென்கிற இஸ்மு தரிபட்டவனுகி விடுவான். அந்த நேரத்தில் அவனின் உள்ளமையின் வழியாய் நான்தான் அல்லாவென்று சொல்வான், ஹக்கு அப்தென்கிற இஸ்மை யழித்து அப்தென்கிற இஸ்முக்கு வதல் அல்லாவென்கிற இஸ்மைத் தரிபடுத்துவான், இந்த ஹால் தரிபட்டிருந்து தெளிவானபின் அந்த அப்திடம் யாராகிலு மொருவன் ஏதாகிலுங்கேட்டால் அல்லாகுத்தஆலா மறுமொழி சொல்வான். நீ ஹக்குத்தஆலாவை நோக்கி யா அல்லாவென்று அழைத்தால் அவன் நான் அடிபணிந்தேன், சோபனங்கூறுகிறேனென்று மறுமொழி சொல்வான், ஆனுல் நீ இதைக்கொண்டு அப்து றப்பாகி விட்டானென்று நினைத்து விடாதே, இது அப்தின் குணமற்று றப்பின் குணமுண்டான தன்மையென் றறிந்துகொள். அதன்பின் றகுமான், றப்பு, மலிக்கு முதலிய இஸ்முகளைக்கொண்டு அவனுக்கு வெளியாகப்படும். இந்த அஸ்மாக்களின் தஜல்லியாத்துகளிலுள்ள புதுமையானது அஸ்மாக்களின் தாத்துத் தெரியுமல்லாது அஸ்மாக்கள்

தெரியாது. ஆனால் இன்ன அஸ்
மாக்களைக்கொண் டுண்டாயிருக்கிற
தென்பது விளங்கும். பூர்ப்பம்
(கதீம்) என்கிற இஸ்மின் தஜல்லி
வெளியானால் கல்குகளைப் படைக்
குமுன் ஹக்குத்தஆலாவின் இல்மி
லேதானிருந்தது வெளியாகும், ஹ
க்குத்தஆலாவின் அறிவு பூர்ப்பமா
னதாலும் அந்த அறிவி லறியப்பட்
டதும் பூர்ப்பமானதாகவே இருக்க
வேண்டும், இந்த தஜல்லியுண்டான
வேளையில் புதிதென்னும் சிபத்தழி
ந்து கதீமென்கிற சிபத்துடையவனா
ய்த் தரிபடுவான். ஹக்கென்கிற இ
ஸ்மைக்கொண்டு தஜல்லியானால்
ஹக்கீக்கத்தின் அந்தரங்கம் வெளி
யாகும், கல்கென்பது பனாவாகி சி
பத்துகளைவிட்டும் நீக்கப்பட்டு தாத்
தொன்றே மீதமாயிருக்கும். வாஹி
தென்கிற இஸ்மைக்கொண்டு ஹக்
குத்தஆலா வெளியானால் ஆலங்க
ள் அலைபோலும், ஹக்கு கடல்போ
லுமாயிருப்பதும், பலதாய்த் தோற்
றுவ தொன்றென்பதுந் திட்டமாகி
ப்பலதுங்காணாமல் ஒன்றைமட்டுமே
காண்பான். படைப்புகள் படைக்
கப்படாததாகவும் ஹக்கொருவனே
யன்றி வேறொன்று மில்லாததாகவு
ந்தெரியும், குத்தூஸென்கிற இஸ்
மைக்கொண்டு தஜல்லியானால் என
து ரூகில் நின்றும் அவனி லூதினே
மென்கிற திரு வசனத்தின் உள்ள
மை தெரியவரும். அவனுடைய
ரூஹாகிறது அவன்தான் வேறொ
ருவருமல்ல, வேறொன் றுமல்லவெ
ன்றும் அல்லாகுத்தஆலாவுடைய ரூ
கு பரிசுத்தமானதென் றும்ஒப்புவமை
களைவிட்டும் தூய்மையானதென்பது
வெளியாகும். இந்த தஜல்லி யுண்
டானபோது படைப்புக்குரிய குறை
வுகள் நீங்கி அசுத்தமான சிபத்துகள்
அற்றுவிடும், ளாஹிறென்கிற இஸ்
மு தஜல்லியானால் நாயனின் ஒளி
கண்டிப்பான படைப்புகளில் வெ
ளியான உள்ளமை இவ்விதமென்
று தெரியவரும். அல்லாகுத்தஆலா
தான் வெளியாயிருக்கிறானென்ற ம
ஃரிபா விளங்கும், இந்த தஜல்லியு
ண்டானபோது அப்தின் உள்ளமை
ஹக்குடைய ளாஹிராய்ப் புரண்டு
விடும், அப்தின் ளாஹிர் ஹக்கில்
வெளியான வுஜூதிலும் பனாவாகி
மறைந்து விடும். பாத்தினென்ற இ
ஸ்மைக்கொண்டு வெளியானால் ச
கல வஸ்தும் ஹக்குத்தஆலாவின்
பாத்தினைக் கொண்டு நிற்கின்றன
வென்பதைக் காண்பான், இந்த த
ஜல்லியைக் கொண்டு ஹக்குடைய
ஒளியில் தன் ளாஹிர் அற்றுப்போ
கும், ஹக்குத்தஆலா அல்லாவென்
கிற இஸ்மைக்கொண்டு தஜல்லியா
னால் படைப்பென்கிற சிறையில்
அகப்பட்டிருந்ததைவிட்டும் களண்
டு தன் நபுசு பனாவாகி தன்னைக்கா
ணாமல் தனக்குவதலாய் ஹக்கைக்
காண்பான். அவன் தாத்தின் புற
த்தால் அஹதிய்யத்தாகவும், சிபத்
தின் புறத்தால் வாஹிதிய்யத்தாகவும்
ஒருவன் அல்லாகுத்தஆலாவை நினை
த்தால் தன்னை நினைக்கிறதாகவும்,
அல்லாகுத்தஆலாவைப் பார்த்தால்
தன்னைப் பார்க்கிறதாகவுங் காண்பா
ன். இதுபோல் ஹக்குத்தஆலா ற
குமானென்கிற இஸ்மைக்கொண்டு
தஜல்லியாவான். பின்பு றப்பு அ
லீம், கதீம், மலிக்கு என்கிற அஸ்
மாக்களைக்கொண்டு தஜல்லியானால்
அந்த இஸ்முக்குடைய குணங்களு
ண்டாகிக் கடைசியாகக் கையூமென்
கிற இஸ்மின் தஜல்லியுண்டாகும்,
அதன்பின் சிபத்துகளின் தஜல்லி
யாத்துக ளுண்டாகும், அந்த தஜல்
லியாத்துகளைச் சொல்லுகிறேன்.

## சிபத்துகளின் தஜல்லியாத்து.

சிபத்தின் தஜல்லியாத்தென்பது அப்துடைய தாத்து றப்புடைய சிபாத்தை யொப்புக்கொள்ளுதல், ஹக்குத்தஆலா தன் அப்தில் தன் இஸ்மைக் கொண்டல்லது சிபத்தைக் கொண்டு தஜல்லியாக நாடினல் அப்பொழுது அப்து பனவாகிவிடுவான். அப்துடைய ஒளியும் கல்குடைய றூகும் பனவானல் அப்துடைய ரூபத்தில் ஹக்கிருப்பதாயிருக்கும், ஆனல் ஹக்கு இவன் சரீரத்தில் வந்திறங்கிறதுமல்ல, ஹக்கு தன்னைவிட்டும் பிரிந்து அப்துடனே சேருகிறதுமல்ல, அந்த அப்தில் நின்றும் உரியப்பட்டதற்கு வதலாய் தாத்தின் குசூமத்தின் அதிகாரமுண்டாகுதலா யிருக்கும். இந்த தாத்தின் குசூமத்திற்கு றூஹால் குதுசென்று சொல்லப்படும், அப்தில்லாதுபோனல் றப்புமில்லை, றப்பென்கிற சொல்லின் பொருள் வளர்க்கிறவன் ஆதரிக்கிறவன். வளர்க்கிறதற்கும் ஆதரிக்கிறதற்கு மொருவரு மில்லாதிருந்தால் வளர்க்கிறவன் ஆதரிக்கிறவன் என்கிற பெயரிருக்கக்கூடாது. இதற்கொரு உதாரணம் ஒருவனுக்குத் தகப்பனென்கிற பெயர் பிள்ளையிருந்தால்தா னிருக்க்கும், பிள்ளை இல்லாதவனுக்குத் தகப்பனென்கிற பெயரிருக்கக் கூடாது. அப்து அற்றபோது றப்பும் அற்றுப்போய்விடும் என்கிற சொல்லின் கருத்து றப்பென்கிற இஸ்மைப் பொருந்தியவன் இல்லாமற் போகிறதல்ல, ஒருவனை யொரு ஊருக்கு அதிகாரியாக நியமித்த பின்பு ஊரிலொருவரு மில்லாதும்போனல் அவனுக்கு அதிகாரஞ்செய்ய ஒருவருமில்லை, அதிகார மற்றவன் அதிகாரி என்கிற பெயரை இழந்துவிடுவான். இது தான் அப்தில்லாதுபோனல் றப்பில்லையென்பது, அப்து பனவானவுடனே றூஹுக்கு தசு அதற்கு வதலாகிவிட்டது ஹக்குத்தஆலாவின் தஜல்லியாத்து றூஹுல் குதுசிலேயே விளங்கிக் கொள்ளுதற்குப் பிரித்துப்பேசினலும் உள்ளன்மையில் ஹக்குத்தஆலா தன்னில்தானே தஜல்லியாகிறன், பனவென்பது அவனில்லாதிருந்தானே அதுபோலவே இல்லாதிருத்தல். ஹக்கின் தரிபடாதது அவன் நித்தியமா யிருக்கிறதுபோலவே இருத்தல், கடல் ஹக்குப்போலும் அலை கல்குப்போலும், அலைக்கு ஒருவுஜூதுமில்லை, ஒரு உள்ளமையுமில்லை. கடலின் நீர் கிழப்பிப் பரண்டுவருந் தன்மைக்கு அலையென்று பெயர்சொன்னல் அது அமர்ந்து டனிந்தவுடன் கடலோடுசேர்ந்துவிடுகிறது. மனிதன் கடலென்றும் அலையென்றும் பிரித்துப் பெயர்வையாது போனல் கடலென்கிறஒரு பெயர்தானிருக்கும அதுபோலவே உள்ளமை நமக்குத்தெரியாதிருக்கும்வரைக்கும் கல்கென்றும் ஹக்கென்றும் பிரித்துப்பேசுவோம். மஃரிபா என்கிற சூரியனுதயமானல்கல்கில் ஹக்கைத்தான்காண்போம். கல்கென்னும் அலை ஹக்கென்னும் சமுத்திரத்தில் பனவாகிவிடும். தஜல்லியாத்துகளெல்லாம் அவரவர்கள் கல்பின் சுத்தத்துக்கும் இல்மின் மட்டுக்கும் ஹக்குத்தஆலாவோடு சேருதற்காக விருக்கிற ஆசைக்குந் தக்கதாயிருக்கும். ஹக்குத்தஆலா தன் ஹயாத்தென்கிற சிபத்தைக்கொண்டு ஒரு அப்தில் த

ஜல்லியானால் அந்த அப்து, தான் ஆலம் முழுவதற்கும் ஹயாத்தாயிருப்பதைக் காண்பான், தன் ஹயாத்து மற்றப்படைப்புகள் அனைத்திலும் பரக்கிறதையும் படைப்புகளின் றூஹானிய்யாவாகிய படைப்புகளுங் கண்டிப்பான சரீரமுடைய படைப்புகளும் தன் ஹயாத்தைக் கொண்டு நிலைத்திருப்பதாகவுங் காண்பான். அப்துல்கரீமுல்ஜீலி றளியல்லாகு அன்கு நானிந்த தஜல்லியத்தில் சில காலமிருந்தேன், படைப்புகளின் ஹயாத்துகளெல்லாம் என்னைக்கொண்டிருக்கவும் ஸமஸ்தமான ஹயாத்தில் நான் பிரிக்கக்கூடாததாயிருப்பதையும் கண்டுகொண்டிருக்கையில் ஹக்குத்தஆலாவின் வேறு தஜல்லியாத்துகளுண்டாயினவென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஹக்குத்தஆலாவின இல்மென்கிற சிபத்து தஜல்லியாகிறதுமுண்டு, அதுவுண்டானால் சகல ஆலங்களையுமறிவான், அவைகளின் தொடக்கம் அவைகளின் முடிவு சகல வஸ்துகளும் எவ்விதமிருந்தன, எவ்விதமிருக்கின்றன, எவ்விதமிருக்கும் உண்டாகாதவைகளவை, அவைகளுண்டாகாமலிருக்கக் காரணமென்ன? உண்டாகாமலிருப்பவைகளுண்டானால் எவ்விதமிருக்குமென்கிற இல்முகளெல்லாமுடையவனாயிருப்பான். இன்னும் ஹக்குத்தஆலா கேள்வி (சமஉ) யென்கிற தன் சிபத்தைக்கொண்டு வெளியானால் மிருகங்கள் தாவரவஸ்துகள் நிரசவஸ்துகள் மலாயிக்கத்துகள் ஆகியவைகளுடைய பேச்சுகளும் கேட்கும், பல பாஷைகளும் விளங்கும், இந்த தஜல்லியைக்கொண்டு றகுமானில் நின்று றகுமானிய்யாவின் இல்மு கேட்கும். இன்னும் பேச்சென்கிற சிபத்தைக்கொண்டு வெளியானால் அல்லாகுத்தஆலாவின் பேச்சுகேட்கும், அதாவது தன் நபுசின் தாத்தின் ஹக்கீக்கத்துடனே முனாஜாத்துச் செய்யும்வேளையில் கேட்கும், அந்தப் பேச்சு ஒரு புறத்திலிருந்து வருவதுமல்ல, காதுக்குக் கேட்கிறதுமல்ல, இன்னுஞ் சிலர் இந்த தஜல்லியாத்தில் தங்கள் கல்பிலே பேச்சுவெளியாகப் படுகிறவர்களும், றூகைக் கொண்டு முதலாம் வானம் முதல் சிதுறத்துல் முன்தஹாவரையும் ஏறுகிறவர்களுமிருக்கிறார்கள், அங்கு அவர்களோடு பேசப்படும். ஹக்குத்தஆலாவின் பேச்சு ஹக்காயிக்கில் எவ்வளவு நுழைந்தார்களோ அந்த மட்டுக்காயிருக்கும், அவர்களுக்காகக் கூடாரமடிக்கப்படுவதும், ஒளியினால் சிமமாசனம் வைக்கப்படுகிறதும், தங்கள் பாதத்தினில் ஒளி தெரிகிறதும், அந்த ஒளியின் புறத்தால் பேச்சுவருகிறதும், ஒளிகள் வட்டமானதாகவும் நீழமானதாகவும் காணப்படுகிறதுமுண்டு. இவ்விதம் ஹக்குத்தஆலாவின் பேச்சு கேட்பவர்கள் கருமத்தை விரும்பினால் அல்லாகுத்தஆலா கொடுத்தருளுவான், உணர்வுண்டானபின் அந்த கருமத்துகள் செய்யக்கூடியதாயிருக்கும். இதைக்கொண்டு தனக்கு உணர்வற்று தஜல்லியாத்தில் மூழ்கியிருக்கையில் கண்டகாட்சிகளும் கேட்ட பேச்சுகளும் உண்மையென்று உணர்வுண்டானபோது அறிவான். இன்னும் ஹக்குத்தஆலாவின் நாட்டமென்கிற சிபத்து பிரகாசித்தால் சகல படைப்புகளும் தன் நாட்டப்படிக்கு நடக்கின்றனவென்பதாக அறிவான். அப்துல்கரீமுல்ஜீலி றளியல்லாகு அன்கு அவர்கள் இந்தவிதமான சுஹூதைப் பெற்றுக்கொண்டவர்களில் அநேகர் தங்களுக்கு

உணர்வுண்டாகி ஆலம்ஹூறா தாவுக்குத் திரும்பியவேளையில் தங்களில் அந்தக்குணம் அல்லது தத்துவமில்லாததைக் கொண்டு தங்கள் தஜல்லியாத்து ஹக்கைக்கொண் டல்லவென்று நினைப்பார்கள், இப்படி நினைப்பவர்கள் அவைகளை விட்டும் துலையாகிவிடுவார்களென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஹக்குத்தஆலாவின் குதறத்தென்கிற சிபத்து வெளியானால் தெய்வநாதங் கேட்கும். (ஸல்ஸலத்துஜர்சு) இந்த நாதமாவது மிகவும் அச்சத்தைக் கொடுத்துத் தன் வுஜூதை யுடைத்துத் தூசாக்கிவிடும். இந்த நாதத்தின் மகத்துவத்தைக்குறித்து அப்துல்கரீமுல்ஜீலி றளியல்லாகுஅன்கு அவர்கள் குறுவானிலுள்ள வசனத்தைக்கொண்டு சொல்லுகிறார்கள். இந்த நாதங் கேட்டபோது அச்சத்தால் எனது தத்துவமற்று எனது சேர்மானங்குலைந்து நான் அழிந்து அற்றுப்போனேன், நக்ஷத்திரமேகம் பிறிட்டுக் கொப்பழிப்பதும், நெருப்பின் வெள்ளம் பெருகுவது மல்லாமல் வேறொன்றையுங் காணவில்லை. நான் தாத்தென்கிற இருளான புகையிற்குள்ளாகிவிட்டேன், அந்த இருள் ஒன்றின்மே லொன்றாய் அடையவளைந்துவிட்டது, வானத்திலொரு படைப்புமில்லை, பூமியிலொன்று மில்லை, மலைகளெல்லாம் சரிந்துவிட்டனவென்று விரிவாய் இன்சான் காமிலென்கிற கித்தாபிற் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த தஜல்லியாத்தில் கியாலுடைய ஆலம் தோற்றுகிறதும் அற்புதங்கள் வெளியாகிறதும் சித்திகளும் சிஹ்றுகளு முண்டாகிறதும், தண்ணீரின்மேல் நடக்கிறதும் ஆகாசத்தின்மேல்பறக்குகிறதும்போலுள்ளவைகள் எல்லாமுண்டாகும் இன்னும் முஹியித்தீனிபுனு அறபி றளியல்லாகுஅன்கு புத்தூஹாத்தில் மக்கியாவில் ஆதமலைகிஸ்ஸலாமைப் படைத்து மீதியாயிருந்த மண்ணைக் கொண்டு வல்லபத்தையுடைய நாயன் படைத்த அவுலியாக்களுக்கும் குத்துபுமார்களுக்கும் வெளியாகிற அதிசயமான பூமி இந்த தஜல்லியைய சகொண்டு வெளியாகுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பூமியைக்குறித்துச் சொல்லியிருப்பதிற் சில விவரங்களைச் சொல்லுகிறேன்

இந்தப்பூமியின் விஸ்தாரத்தையும் மகத்துவத்தையும் அதிலுள்ள படைப்புகளின் புதுமைகளையுஞ் சொன்னால் புத்தி திகைத்துவிடும். வானங்கள் பூமி, அர்சு, குர்சு, சொர்க்கம், நரகமாகியவைகள் சகலத்தையும் அந்தப்பூமியில் வைத்தால் ஒருபெரும் வெளியில் விழுந்த மோதிரத்தைப்போலா யிருக்கும், இபுனு அறபி றளியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள்; ஆரிபீன்களிலொருவர் என்னிடஞ் சொன்னார்கள், இந்தப் பூமியாவது சஹூதைக் கொண்டு வெளியாகும், நானொருநாள் அங்கு றகுமத்தென்று சொல்லுகிற மஜ்லீசுக்குப்போனேன், இதிலும் புதுமையான மஜ்லீசை நான் காணவில்லை. இதில் அல்லாசுத்தஆலாவுடைய தஜல்லியாத்துகள் தன் சுயஉணர் விருக்கையிலே வெளியாகும், துன்யாவில் தஜல்லியாத் துண்டாகிறதானால் அவுலியாக்களா யிருந்தாலும் நபிமார்களா யிருந்தாலும் தங்கள் புத்தியும் அறிவுமற்று பனாவான பிறகுதான் உண்டாகும், அ

ன்யாவிலோ வானலோகத்திலோ
அர்சு குர்சிலோ தன் சுயபுத்தியிருக்
கும் வரையில் தஜல்லியாத்துகள்
வெளியாகா. இதில் காணப்படுகிற
அதிசயங்களைக் காணாதவர்களுக் கி
வ்விதமென்று சொல்லக் கூடாது,
அதிலுள்ள பிராணிகளையும் தாவர
வஸ்துகளையும் லோகவஸ்துகளையும்
அல்லாகுத்தஆலா ஒருவனையன்றி
வேறொருவருக்கும் மட்டுப்படுத்தக் கூ
டாது, அந்த ஹபாத்துள்ள படை
ப்புகளுக்கெல்லாம் பேச்சுண்டு ஆ
னாலவைகள் துன்யாவிலுள்ள படை
ப்புகளைப்போலல்ல, அவைகளுக்கு
அழிவில்லை பேதகமுமில்லை, மண்
ணாலுண்டான இயற்கைச்குண முள்
ள படைப்புகளை அந்தப்பூமி யொ
ப்புக்கொள்ளாது, அங்கு ஆரிபீன்க
ளிருந்தாலும் தங்கள் சரீரத்துடன்
செல்லுகிறதில்லை. அவர்கள் சரீர
த்தை துன்யாவில் வைத்துவிட்டு
அரூவாகுகளாகப் போவார்கள், அந்
தப்பூமியின் வாசலில் மகா புதுமை
ப்படத்தக்க படைப்புகள் நிறுத்தப்
பட்டிருக்கின்றன. இன்னும் ஆரி
பீன்கள் அல்லது மலாயிக்கத்துகள்
அல்லது ஜின்கள் அங்கேபோனால்
அந்தப் படைப்புகளிலொன்று அவ
ர்களுடைய மக்காம்களுக்குத் தக்க
உடைகளை யணியச்செய்து அவர்க
ளைப் பிடித்து உள்ளேகொண்டுபோ
ய் அவர்களுக்குப் பிரியமான விடங்
களெல்லாம் கொண்டுபோகப்படும்,
அங்குள்ள படைப்புகளெல்லாம் கல்
லு மரம் முதலியவைக ளெல்லாம்
அவன் நாடினால் பேசும், அவைக
ளுக்கெல்லாம் பற்பல பாஷைகளி
ருந்தாலும் அங்கு சென்றவர்களுக்
கெல்லாம் விளங்கும், அங்கு சென்
றவர்கள் வெளியேவரும்வேளையில்
அவர்களுக்குக் கொடுத்திருந்த உ
டைகளைக் கழட்டிக் கொடுத்துவிட
ப்படும், அந்தப்பூமியிற் போனவர்
களுக்கு ஹக்குத்தஆலாவைப் பற்றி
ய இல்மும் முஷாஹிதாவும் வேறு
விடத்திலு முண்டாகாதமட்டு உண்
டாகும். ஆரிபீன்களிலொருவர் சொ
ல்லுகிறார்கள் இந்தப்பூமிக்கு நான்
சென்றபோது முழுதுங் கஸ்தூரியா
யிருந்தது, அதின் பரிமளத்தின் க
டுமையினால் இந்த துன்யாவிலுள்ள
வர்கள் அந்த வாசனையை முகர்ந்
தால் உடனே இறந்து போவார்கள்.
இன்னும் இதிலொருபூமி முழுதும்
தங்கமாகவும் அதிலுள்ள மரங்களு
ம் கனிகளுந் தங்கமாகவு மிருந்தன,
கனிகளின் வடிவு துன்யாவிலுள்ள
வைகள் போலிருந்தாலும் மதுரத்
தையும் அழகையும் இன்பத்தையும்
வர்ணித்துச் சொல்லக்கூடாது, புத்
திகளுக்கு இவ்விதமா யிருக்குமென்
று நினைக்கவுங்கூடாது. அங்குள்ள
சிறு கனிகளைப்பார்த்துப் பெரிதாயி
ருக்க நாடினால் உடனே பெரிதாகி
விடும், அதுபோல பெரிது சிறிதா
கிவிடும். துன்யாவின் ஒருநாள்
அங்கு ஒரு வருஷமாயிருக்கும், அ
தாவது ஒரு மனிதன் இந்தப்பூமி
யிலிருந்து அங்குபோய் ஒரு வரு
டமிருந்து வந்தால், இங்கு ஒரு நா
ளில்லாததாயிருக்கும். அதிலொரு
பூமிமுழுதும் வெள்ளியாயிருந்தது,
அதிலுள்ள மரங்களும் படைப்புக
ளும் ஆறுகளுங் கடல்களும் வெள்
ளியாகவே யிருந்தன. அங்குள்ள க
னிகளின் மதுரங்களை இவ்விதமெ
ன்று சொல்லக்கூடாது இன்னும்
இங்கு கற்பூரமாயொரு பூமியிருக்கி
ன்றது, இது நெருப்பிலுஞ் சூடாயி
ருந்தாலும் இன்சானுக்கு அதிலிருக்
கக்கூடும் சூடுதெரியாது. இவைக
ள் யாவிலும் மிகவும் அழகானபூமி

மஞ்சற்பூமியாயிருக்கும், அதில் அ
டியாளர்கள் இருக்கிறார்கள் அவர்
களின் இல்லின் நிரப்பத்திற்கும்
சற்குண மயாளத்திற்கும் பட்சம்
பாராட்டி நடப்பதற்கும் இந்த து
ன்யாவி லுள்ளவர்களை யொப்புச்
சொல்லக்கூடாது. அங்கொரு கனி
யைப்பறித்த க்ஷணமே அந்த வி
டத்தில் வேறொரு கனி யுண்டாகி
விடும், அங்குள்ள பெண்களினழ
கு துன்யாவிலுள்ள பெண்களுக்கு
ஹூருலீன்க ளெவ்வளவு அதிக அ
ழகுள்ளவர்களோ அதுபோல ஹூ
ருலீன்களிலும் அதிக அழகுள்ளவர்
கள், அவர்களோடு சையோகஞ்செ
ய்யுமின்பம் துன்யாவின் பெண்க
ளோடு கூடும இன்பம் போலல்ல,
அதை இவ்விதமென்று சொல்லக்
கூடாத இன்பமாயிருக்கும். அங்கு
ள்ளவர்கள் மிகவும் ஆசையுடைய
வர்கள் அவர்களிடத்தில் வெளிச்
சட்டங்களில்லை, ஆகிலும் ஹக்குத்
தஆலாவின் நாட்டத்திற்கு விரோ
திக்காது நடந்து வருவார்கள். அங்
குள்ளவர்கள் இவ்விதமானது வே
ண்டுமென்று நினைத்தாலுண்டாகிவி
டும், ஆனால் துன்யாவில் சட்டுகிற
துபோலுமுண்டு அங்குள்ள கடல்
கள் ஒன்றோடொன்று சேர்ந்திருந்
தாலும் நீர் கலந்துவிடாது, பொன்
நீர்க்கடலும் இரும்பு நீர்க்கடலும்சேர்
ந்து அலைபடித்துக் கொண்டிருந்தா
லும் சேர்ந்துவிடாது. தண்ணீர் நி
றமோ பழிங்கிலும் வெண்மையா
ய்க் காற்றிலும் மென்மையாயிருக்
கும், குடித்தால் அதின் மதுரத்தி
ற்கு வேறொன்றையும் ஒப்புச்சொ
ல்லக்கூடாது. அங்குள்ளவர்கள் தா
பரவஸ்துகளைப்போ லுண்டாகிறதல்
லாமல் பிள்ளைப்பெறுகிறதில்லை, நிக்
காகு செய்கிறது ஆலசக்கும் இன்

பத்திற்குமே. அங்குள்ள வாகனங்
கள் நாடினவுடன் உண்டாகிவிடும்,
அதிலேறினால் கண்மூடி விழிக்குமு
ன் எவ்வளவு தூலையுங் கொண்டுபோ
ய்விடும். அந்தப்பூமியிலுள்ள கல்து
களின் குணமும் செயலும் பலவித
மாயிருக்கும், சிலர் இச்சை மிகைத்
து இன்பங் கொண்டாடுகிறவர்களா
யிருப்பார்கள். சிலர் ஹக்குத்தஆலா
வின் தரிசனையின் ஆனந்தத்தில் மூ
ழ்கியிருப்பார்கள், அங்குள்ள பொ
ன் செம்பு இரத்தினம் முதலியவை
கள் துன்யாவிலுள்ளவைகள்போலல்
ல. அங்குள்ள சிகப்பு மாணிக்கம் மர
கதம்முதலிய இரத்தினங்களின் நிற
மும் ஒளியும் பிரகாசமும் கண்களை
த்துழைப்பதுபோலாயிருக்கும். இன்
னுஞ் சொல்லுகிறார்கள் நான் துன்
யாவிலில்லாத நிறங்களைக் கண்டே
ன், பூமியில் கண்டிபவையுடையவை
களுக்குத்தான் நிறங்களிருக்கும், அ
ங்கு காற்றுபோலுள்ளவைகளுக்கெ
ல்லாம் பற்பல அலங்காரமான நிற
ங்களிருக்கக் கண்டேன். அந்தப்
பட்டணத்தின் வாசலில் தூண்களி
ருக்கின்றன, அந்தத்தூண்க ளொவ்
வொன்றும் ஒவ்வொரு சிகப்பு மா
ணிக்கமாயிருந்தன, ஒரு மாணிக்க
த்தின் உயரம் ஐந்நூறு முழத்து
ககதிசமாயிருந்தது. அங்கு இருளு
ம் ஒளியுமிருக்கின்றன, ஆனால் ஒளி
சூரியனைக் கொண்டல்ல, இருள்பொ
ருள்களை மறைக்கவுமாட்டாது இன்
னும் முஎயித்தனிபுனு அறபிறவியல்
லாகு உன்கு புத்தாஹூத்தூல் மக்கி
ய்யாவில் அந்தப்பூமியிலுள்ளவர்களு
டைய குணங்களையும் நடக்கைகளை
யும் அங்குள்ள சுல்தான்களின் உத்
தம நடக்கைகளையும், இராஜாக்களி
ன் மேன்மையான குணங்களையும்
விவரித்துச் சொல்லியபின் சொல்

றுகிறார்கள். இந்தப்பூமியிலுள்ளவ
ர்கள் அல்லாகுத்தஆலாவை அறிக
மறிந்தவர்கள், எங்களுக்கு எங்கள்
பூமியில் கண்ணுக்குத் தெரியாமல்
புத்திக்கு விளங்குகிறவைக ளெல்லாம்
அங்கு கண்ணுக்குத்தெரியும், அல்
லாகுத்தஆலாவுடைய வல்லமைக்கு
மட்டில்லை. பூமியில்இலக்ஷணம் கு
ணம் ஒரு பொருளிலமைந்திருக்கும்
அங்கு அவைகள் ஒரு பொருளி
லமைந்திராமலிருக்கும், பல விடங்
களுக்கும் மாறும். ஹதீதுகளும் கு
றுஆனிலுள்ள ஆயத்துகளும் புத்தி
க்கு மட்டுப்படாதது அங்கு வெளி
யாகத்தெரியும் மலக்குஜின் முத
லிய றூஹானிய்யாக்களெல்லாம் ப
ற்பல சரீரங்களெடுப்பார்கள், சொ
ப்பனத்தில் மனிதர்கள் ரூபங்களைக்
காண்பதுபோல் இந்தப்பூமியல் கா
ணப்படும். இந்தப்பூமியி லிருந்து
மென்மையான பொருள்விரிந்து பல
ஆலங்களையுங் கொழுகிநிற்கும், பர்
ஸகையும் சேர்ந்திருக்கும். றூஹா
னிய்யாக்கள் அங்குள்ள சடலங்களை
யெடுத்து சொப்பனத்திலும் மவுத்
துக்குப்பின்னும் தோற்றப்படுவார்க
ள், எவ்விதமானால் சூரியனையல்லது
ஒரு விளக்கைப்பார்க்கையில் கண்
ணிமையைக்கொண்டு மறைந்திருந்
தால் சூரியனில் நின்றும் அல்லது
விளக்கில் நின்றும் மென்மையான
நூல்போல் கண்வரையும் பிரகாசம்
வீசும், நிமையை மெள்ள உயர்த்
தும்பொழுது அந்தப் பிரகாசம் உ
ள்வாங்கிப்போய் சூரியனில் அல்ல
து விளக்கின் வெளிச்சத்தி லமைந்
துவிடும். குறித்தபூமி அந்தச் சூரி
யனுக்கும், கண் மற்றும் ஆலங்களு
க்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் அந்தப்
பூமியிலிருந்து றூஹானிகள் வெளி
யாகிற விதமும், மறைகிறவிதமும்
விளங்குமென்று முகியித்தீனிபுனு
அறபி றளியல்லாகுஅன்கு அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள்.

## கறுமாத்து அற்புதம்.

---

கறுமாத்து ஹக்குத்த ஆலாவின்
(பிர்) என்கிற இஸ்மைக்கொண்டா
யிருக்கும். இது பெரியோர்களுக்
குக் கொடுக்கப்படும் கூலியிலுள்ள
து. இது இரண்டுவகையாயிருக்கும்,
பஞ்சேந்திரியங்களுக்குத் தெரியப்ப
டும் கறுமாத்துக ளொருவகை தோ
ற்றப்படாத கறுமாத்துக ளொருவ
கை. பஞ்சேந்திரியங்களுக்குத் தெ
ரிகிற கறுமாத்துகள் மனததிலிருப்
பதைச் சொல்லுதல், சென்றுபோ
ன மறைவான காரியங்களைத் தெரி
விக்குதல், ஆகாசததிற் பறக்குதல்,
கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து
விடுதல்போ லுள்ளவைகளைத் தான்
சாதாரணமாய்ச் சனங்கள் கறுமத்
தென்று அறிந்திருக்கிறார்கள். பஞ்
சேந்திரியங்களுக்குத் தெரியாத க
றுமாத்துகள் பெரியோர்களுக்குத்
தான் தெரியும், பெரியோர்களிடத்
தே கறுமத்தாவது சரீஅத்தின் பி
ரமாணங்களை யற்பமாகுதல் தவறு
து நடப்பதும், சற்குண முடையவ
ர்களாகவும் கடமைகளொன்றையும்
விடாதவர்களாகவும், நலவுசெய்வதி
ல் விரைந்து கொள்கிறவர்களாகவும்,
மனிதர் யாவர்பேரிலும் கிருபை நி
றைந்தவர்களாகவும், கல்பு பழிப்பா
னவைகளை யெல்லாம் விட்டுத் துப்
புரவா யிருப்பவர்களாகவும், தன்
நபுசையே எவ்வேளையுங் கவனித்
துப்பேணி நடப்பவர்களாகவும், ஹ
க்குத்தஆலாவின் முறாக்கிபாவிலும்

முஷாஹிதாவிலும் மூழ்கினவர்களா
கவுமிருத்தலே கருமத்தாயிருக்கு
ம். இதில் யாதொரு தந்திரமுஞ்
சேராது, மனம் கல்பு செய்கை ச
கலதும் சுத்தமாயிருக்கும். இன்சா
ன் மலாயிக்கத்துகளின் தன்மையா
யிருப்பதிலும் மேலான கருமத்திரு
க்கக்கூடுமா ? முன்சொன்ன கரு
மாத்துகளில் மறைவான தந்திரங்
களும் கலந்துவிடக்கூடும். பெரி
யோர்கள் தங்களில் கருமாத்துகள்
வெளியாகாமல் மறைக்கும்படி ஹக்
குத்தஆலாவைக் கேட்டுக்கொள்வா
ர்கள், அவர்கள் தேடுவதெல்லாம்
இல்மையே. அபூஸயீதுல் புஸ்தாமீ
றளியல்லாகு அன்கு அவர்களிடம்
கருமாத்துகளில் பூமியைச்சுற்றி வ
ருவதைப்பற்றிக் கேட்டபோது அது
ஒரு காரியமல்ல, இபுலீசு ஒரு நொ
டியில் பூமியைச்சுற்றி வந்துவிடுவா
ன், இது அல்லாவினிடத்தே ஒரு
பதவியல்லவென்றார்கள். ஆகாசத்
திற் பறப்பதைப்பற்றிக் கேட்டபோ
து பட்சிகள் பறக்கின்றனவே, மூமீ
ன்கள் பட்சிகளிலும் உயர்த்தியான
வர்களல்லவா ? பட்சிகள் செய்யும்
வேலையை எவ்விதம் கருமத்தென்
று பேசலாமென்று சொன்னார்கள்,
இதுபோலுள்ள அற்புதங்களையெல்
லாம் அற்பமாய்ப் பேசினார்கள். மு
ற்காலங்களிலிருந்த அபுலாத்தூன்
முதலிய ஹுக்குமாக்களும் ரிஷிக
ளும் இவ்விதமான சித்திகளைச் செ
ய்திருக்கிறார்கள், அவர்களை ஒலியு
ல்லாவென்று சொல்லலாமா ? அத
னால் அவைகளையறிந்த பெரியோர்க
ள்இலேசாய்க் காண்கிறார்கள். சித்த
த்தைச் சொற்பகாலம் அப்பியாசப்
படுத்தினால் பிறர் மனத்திலிருப்ப
தைச் சொல்லாமல், துலையிலிருப்ப
வைகளையும் நடக்கின்ற காரியங்க
ளையுஞ் சொல்லலாமா நபிசல்லல்லா
கு அலைகிவசல்லமவர்கள் இல்மை
யதிகமாக்கி யருளென்று கேட்டதல்
லாமல் இப்படிப்பட்ட அற்புதங்க
ள் செய்யுந் தத்துவம் அதிகம் வே
ண்டுமென்று கேட்கவில்லை, இவ
ர்கள் இல்மென்றது அல்லாகுத்த
ஆலாவை யறியவும் ஆகிறத்தைப்
பற்றியுமுள்ள இல்முகளையே. முன்
சொல்லிய இந்திரியங்களுக்குத் தெ
ரியக்கூடியவைகளுக்கு அறபுப்பா
ஷையில் ( கர்குல் ஆதாத்து ) என்று
சொல்வார்கள், அதின் பொருள் இ
யல்புக்கு மாறானது, இவைகள் பல
விதமாயிருக்கும் ஒருவிதம் நபுசின்
தத்துவத்தைக்கொண் டுண்டாகிற
வைகள். உனது செய்கு மௌம
ரிஸமென்கிற தல்ஸமாக்களைப் பற்
றிச் சில விவரங்களை யுனக்குச்சொ
ல்லித் தந்திருக்கிறார். அவைகளெ
ல்லாம் இந்த வகையைச் சேர்ந்த
வைகள், நபுசின் தத்துவமென்று
முகியித்தீனிபுனு அறபி றளியல்லா
கு அன்கு அவர்கள் சொன்னதின்
கருத்து சித்தத்தின் தத்துவத்திற்
கே. இவைகள் நமது பார்வைக்கு
ம் எண்ணத்திற்கும் தபீயத்திற்கும்
மாற்றம்போலிருந்தாலும் அவைகள்
தபீஅத்தின் சட்டத்திற்கு மாற்றம
ல்ல, நமது சித்தத்தின் தத்துவத்
தைக்கொண்டு தபீயத்தின் சட்டப்
படிக்கே நடத்தப்படுகிற வைகளா
யிருக்கும். தபீஅத்தின் இல்முகளை
யறிந்த உலமாக்களல்லாதவர்கள் இ
வைகளை இயல்புக்கு மாற்றமென்று
நினைப்பார்கள். இரண்டாவது எழு
த்துகளின் தத்துவங்களைக்கொண்டு
ம் சில இயல்புக்குமாறான காரியங்
கள் செய்யப்படும். ஆரிபீன்கள் எ
ழுத்துகளுக்கும் தத்துவங்களிருப்ப
தற்குக் காரணஞ் சொல்லியிருக்கி

ரூர்கள். அவர்கள் செல்லியிருப்பவைகளை ஆராய்ந்தும், நுஜூம்சாஸ்திரமல்லாது சோதிட சாஸ்திரத்தை ஆராய்ந்தும் அந்த இல்முகளில் தேர்ச்சியடைந்தார்கள் இல்முகளை யெழுதி அவைகளைக் கொண்டு சில கர்குல் ஆதாத் துண்டாகச் செய்வார்கள். மூன்றாவது இஸ்முகளை வாயினால் மொழிவதைக்கொண்டும் இவைகளுண்டாகும், ஹக்குத்தஆலாவுடைய தொண்ணூற்றொன்பது இசும்களில் ஒவ்வொரு இஸ்மும் ஒவ்வொரு தத்துவமாயிருக்கும். அந்த இஸ்முகளைச் சார்த்துப்படிக்கு ஓதுவதுகொண்டு சில இயல்புக்கு மாறான அற்புதங்கள் சம்பவிக்கும் இது இரண்டுவகை; ஒன்று மனிதர்களின் பார்வைக்கு அற்புதமாயிருக்கும் உள்ளமையி லப்படியல்ல, மற்றது பார்வைக்கு மவ்விதமே, உள்ளமையிலு மவ்விதமே. இன்னும் அதைச்சேராத ஹக்குத்தஆலாவைச்சேர்ந்த அற்புதங்களு மிருக்கின்றன, அவைகள் அதின் தத்துவத்தைக் கொண்டு உள்ளதல்ல. அறபுபாஷையில் முஉஜிஸாத்து, ஆயாத்து, கறாமாத்து, முஜய்யிதாத்து, முனப்பஹாத்தென்று பல வகைகளிருக்கின்றன. அவுலியாக்களுக்குரிய கர்குல் ஆதாத்துகள் தங்கள் நபுசின் ஆதத்துகளுக்கு மாறாக நடப்பதினாலுண்டாகும் பசி, உறக்கம், பேச்சு, மனிதரோடு சகவாசஞ்செய்தலாகிய இயல்புப் பழக்கங்களுக்குமாறாக நடப்பது கொண்டு இவைகள் செய்யக்கூடிய தத்துவமுண்டாகும் ஆகாசத்திற் பறக்கிறது தண்ணீரில் நடக்கிறதுபோ லுள்ளவைகள் இவைகளின் பதவிகளை முகியித்தீனிபுனு அறபிறளியல்லாகு அன்கு அவர்கள் முவாக்கிஅத்துன் னுஜூமென்கிற கித்தாபில் விவரித்துக் காட்டியிருக்கிறார்கள். மனிதர்கள் நூதனமாக ஒரு காரியத்தைக் கண்டால் அற்புதமென்று அதிசயப் படுவார்கள். பெரியோர்களிடத்தே பார்ப்பவைகளெல்லாம் அதிசயமாயிருக்கும். வானத்திலிருந்து மழைபெய்கிறதும் பூமியிலிருந்து பயிர் முளைப்பதும் அற்புதமாய்க்கண்டு புதுமையாவார்கள். ஒரு எறும்பைப் பார்த்தாலும் அதைப் படைத்திருக்கிற வல்லமையதிசயத்தை யுண்டாக்கும், இவ்விதம் பார்ப்பதெல்லாம் அதிசயமானவைகளா யிருக்கையில் தாங்கள் அற்பமான காரியங்களைச் செய்ய அவர்களுக்கு எவ்விதம் நாட்டமுண்டாகும்.

முஉஜிஸாத்து றசூல்மார்களுக்கு வேண்டியதாயிருக்கும். அல்லாகுத்தஆலாவின் தூதரென்று மனிதர்கள் விசுவாசங் கொள்ளுதற்குத் தேவையாயிருக்கிறது, ஒலிமார்களுக்கு வேண்டியதில்லை. அதனால் ஒலிமார்கள் மார்க்கச் சட்டங்களுக்கு மாறாக நடந்தால் அச்சட்டங்களை நடத்தும் உலமாக்களின் பத்வாவுக்குட்கீழ்ப் பட்டவர்களா யிருப்பார்கள். செய்கு ஹல்லாஜி றகுமகுல்லாகு அவர்கள் மையித்தை அல்லாகுத்தஆலாவுடைய உத்தரவுப்படி எழும்பென்று சொன்னபோது எழும்பாமல் என்னுடைய உத்தரவுப்படி எழும்பென்று சொன்னவுடன் மையித்தெழும்பிவிட, அதற்காக காளிமார்கள் மார்க்கச்சட்டப்படிக்கு முர்த்தென்று தீர்ப்புச்செய்து மரண ஆக்கினை செய்துவிட்டார்கள். அந்த காளிமார்களைக் குற்றஞ் சொல்லக்கூடாது, அவர்கள் ஷறஹென்கிற தராசைக் கையிற்பிடித்தவர்கள். அ

வுலியாக்கள் ஷறஹுக்குக் கீழ்ப்படாதவர்களல்ல, ஷறஹுக்கு விரோதஞ்செய்ததால் ஆக்கினைக்குக் கீழ்ப்பட்டார். ஆனால் அவுலியாக்களுக்கு ஹல்லாஜி றகுமகுல்லாகு அவர்கள் பர்க்குடைய மக்காமிலிருந்து தன்னையும் ஹக்கையும் வேறுக்கி அல்லாகுத்தஆலாவுடைய உத்தரவுப்படி எழும்பென்று சொன்னதால் எழும்பவில்லையென்றும், பின்பு ஐம்உடைய மக்காமில் என் உத்தரவுப்படி எழும்பென்று சொன்னது ஹக்குடைய பேச்சானதால் மையித் தெழும்பிவிட்டதென்பதும் தெரியும். ஆனால் குல்லக்கான் என்பவர்களெழுதிய சரித்திரத்தில் ஹல்லாஜி றகிமகுல்லாகு அவர்களைக் கொலைசெய்யத்தக்கதா யொன்றும் ரூபிக்கப்படவில்லை. இவர்களைக் கொலைசெய்தது ஹிஜிறத்து ஐந்நூற்றுஒன்பதாமாண்டு துல்கஉதா மாதம் செவ்வாய்க்கிழமையிலேயே. அவர்களின் பறக்கத்தின் பேறு எங்களெல்லோருக்கு முண்டாவதாகவென்று ஆபிது முரீதிடம் சொல்லியபின், மகனே! நானுனக்குச் சொல்லிய அறிவுகளை மனத்திலிருத்தி அவைகளால் பிரயோசன மடைதற்கு அமல் செய்து கொள். அல்லாகுத்தஆலாவுடைய அருளும் கடாக்ஷமும் உனது செய்குக்குக் கொடுத்து அனுக்கிரகஞ்செய்யும்படி அல்லாகுத்தஆலாவிடம் துஆக் கேட்டவனுகயிருக்கிறேனென்று அவருக்குச்சொல். அல்லாகுத்தஆலா உனக்கு நேர்வழியைக் காட்டுவானுக வென்று சொன்னபின், முரீது ஆபிதிடம் விடைபெற்றுக் கொண்டு செய்கிடம் வந்து தனக்கு ஆபிது கற்றுக்கொடுத்த இல்முகளையெல்லாம் சொல்லிக்காட்ட, செய்கு என் மகனே! நீ பாக்கிய வந்தனுயிருக்கிருய், இந்த இல்முகளை யுனக்கு இவ்வளவு தெளிவாய் விளக்கிக்காட்டப் பட்டது உனது பாக்கியமா யிருக்குமென்று சொன்னர்.

## அக்கிலுல் அவ்வல், லவ்குல் மஹ்பூளு, தக்தீறு, களா, ஹயூலா.

---

முரீது, அக்கிலுல் அவ்வல், லவ்குல்மஹ்பூளு, தக்தீறு, களா, ஹயூலா வென்பவைகளை யெனக்கு விளங்கச் செய்யவேண்டுமென்று கேட்டான்.

செய்கு, இவைகள் ஆலம் ஜபறூத்துக்குடைய அர்வாகுகள், கல்குகளைப்பற்றிய சமஸ்த தெய்வீக இல்மு ஒளியாய் வெளியானதற்கு அக்கிலுல் அவ்வலென்று சொல்லப்படும், இதில் இல்மு பிரிவில்லாது மொத்தமாயிருக்கும், இது பிரிவாகிப் பலகூறத்தாய் லவ்குல்மஹ்பூளிற் பதிவாகும். அக்கிலுல் அவ்வலைக் கொண்டு லவ்குல் மஹ்பூளில் பதியப்படுவதால் சூபியாக்கள் அக்கிலுல் அவ்வலுக்கு கலமுல் அஉலாவென்று பெயர் கொடுத்திருக்கிருர்கள். நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் முதன்மையாகப் படைத்தது அக்கிலையேயென்று சொல்லி யிருக்கிருர்கள்.

## லவ்குல் மஹ்பூள்.

---

லவ்குல் மஹ்பூளும் ஹக்குத்தஆலாவின் ஒளியாயிருக்கும், அதில் அக்கிலிலிருந்து பதியப்படுகிறவைகளுக்கு களாவென்று சொல்லப்படு

டும். ஒரு மனிதன் இன்ன காலத்தில் இன்னவிதமான ரூபமாய்ப் பிறப்பானென்று திட்டப்படுத்திய தற்கு தக்தீறென்று சொல்லப்படும். ஹக்குத்தஆலாவின் இல்மில் நின்றும் சொற்பந்தான் லவ்குல் மஹ்பூளிற் பதியப்படுகிறவைகள், அவனுடைய இல்முக்கு மட்டுத்திட்டமில்லே, அதற்கு உம்முல்கிதாபென்று சொல்லப்படும். ஆலங்களில் வெளியாகிறவைகளும் ஆகிறத்தில் வெளியாகிறவைகளும் லவ்குல்மஹ்பூளிற் பதியப்பட்டிருக்கும். ஆனால் லவ்குல்மஹ்பூளிற் பதியப்பட்ட வைகளில் வேறுவிதப் படுகிறவைகளு முண்டு, நாயகம் சல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் கார்மானந் தேடியது வேறுவிதப்படக் கூடிய களாவுகளைப் பற்றியே, அல்லாகுத்தஆலா தானும் நான் நாடினல் அழித்துப்போடுவேனென்று திருவுளம்பற்றியிருக்கிறது இந்த வகையான களாக்களுக்கே. அக்கிலும் மஹ்பூளும் கண்டிப்பில்லாதவைகள். அரூபியானவைகளி லெழுதப்படுகிறதென்றும் பதியப்படுகிறதென்றுஞ் சொல்வது உனக்கு மயக்கத்தைக் கொடுக்கும். இது உனக்கு விளங்கும்பொருட்டு உன்னில் உதாரணங் காட்டுகிறேன்; நீ சிறு பராயமுதல் அறிந்த அறிவுகளும் நினைத்த எண்ணங்களும் கற்ற கல்விகளும் உன்னுடைய மனமென்கிற கஸானுவிற் பதியப்பட்டிருக்கின்றன. மனமொரு கண்டிப்பையுடையதுமல்ல, அதின் விஸ்தாரத்திற்கு ஒரு எல்லையுமில்லே. எவ்வளவு அறிவையும் உட்கொள்ளக்கூடியதா யிருக்கிறது. உன் மனத்தை யுனக்கு லவ்குல்மஹ்பூளென்று வைத்துக்கொள்ளலாம், நமது மனத்திற்கும் அதிலடங்கக்கூடிய அறிவுகளுக்கும் ஒரு மட்டில்லாதிருக்க ஹக்குத்தஆலாவால் வெளியான இல்முக்கு மட்டுத்திட்டமிருக்கக் கூடுமோ? உனது மனத்திற்கு அறிவுகள் உனது அக்கிலேக்கொண் டுண்டாகின்றன. அக்கிலில்லாது போனல் ஒரு அறிவு மிருக்கக்கூடாது அது போலவே அக்கிலுல் அவ்வலேக் கொண்டு லவ்ஹில் இல்முகளுண்டாகின்றன. உனது அக்கில் உனது நபுசின் தத்துவமாயிருக்கும். உன் நபுசில்லாதுபோனல் உனக்கு அக்கிலு மிருக்கக்கூடாது, மனமுமிருக்கக் கூடாது. உனது நபுசை ஹக்குத்தஆலாவுக்கு உதாரணமாய் வைத்துக்கொள், நபுசைக்கொண்டே சகலதும் நடக்கின்றதுபோல் ஆலத்திலுள்ளவைகள் சகலதும் ஹக்குத்தஆலாவைக் கொண்டு நடக்கின்றன. லவ்குல்மஹ்பூளு சகல படைப்புகளேயும் சூழ்ந்திருக்கிறது, அக்கிலுல் அவ்வல் லவ்ஹைச் சூழ்ந்திருக்கிறது. லவ்குல்மஹ்பூளுக்கு நபுசுக்குல்லீ என்றுஞ் சொல்லப்படுகிறது.

## ஹயூலா.

லவ்ஹுல் மஹ்பூளிலுள்ள சூறத்துப்படிக்கு ஹயூலாவைக் கொண்டு படைப்புகள் சமையப்படுகின்றன. ஹயூலாவென்பது சகல ரூபமுள்ள பொருள்களுக்கும் மூலப்பொருள் தமிழ் ஞானிகள் மூலப்பிரகிர்தி என்று சொல்வார்கள். ஹயூலாவென்கிற சொல்லே வழக்கத்தில் ஒவ்வொரு வஸ்துக்கும் அஸ்லான பொருள்களுக்குப் பாவிக்கப்படும். எவ்விதமானல் சட்டையென்பது ஒரு வஸ்து, ஆகிலு மதை நோட்டமிட்டால் அது பிடவையை ஒரு கோல

மாய் வெட்டித் தைத்திருப்ப தல்லா மல் அது ஒரு வஸ்தல்ல வென்பது விளங்கும். சட்டைக்குப் பிடவை ஹயூலா வென்று சொல்லப்படும். பிடவை யென்பதற்கும் ஒரு உள்ளமையில்லை, நூல்களை இணைத்திருக்கும் கோலத்திற்குப் பிடவையென்று சொல்லப்படும், அதனால் பிடவைக்கு அசில் நூலாயிருக்கும். நூலுக்கு மூலப்பொருள் பஞ்சாயிருக்கும். பஞ்சைப்பார்த்தால் அது மண் தண்ணீர் காற்று நெருப்பு ஆகிய நாலு பூதங்களுமே அதற்கு மூலப்பொருள்களா யிருக்கின்றன. அந்த நாலுக்கும் உஷ்ணம் ஈரழிப்பு குழிர்ச்சி உலர்தல் ஆகிய நாலும் ஹயூலாவாயிருக்கின்றன. இவ்விதம் பார்த்துவந்து கடைசியாகப் பிரிக்கக்கூடாத தனிமையான மூலப்பொருளுக்கு ஹயூலாவென்று சூபியாக்கள் சொல்வார்கள், நபுசுல்குல்லி அந்த ஹயூலாவை பலபல ரூபமாகவும் வடிவாகவுஞ் சமைக்கும். இந்த அர்வாகுகளைப் பற்றிய இல்முகளை யறிவது ஒன்று பலதெனவும் பலது ஒன்றெனவும் திட்டப்படுத்தும் தவ்ஹீதுக்கு மிகவும் அவசியம், ஆகிலும் இதற்கதிகம் உனக்கு விளங்கக் கொடுக்கக்கூடாததா யிருக்கின்றது. முதலாவது நாங்களிருவரும் பிரியுங்காலம் சமீபித்துவிட்டது, இரண்டாவது அந்த இல்முகளை யறிவதற்குப் பல இல்முகளுங் கற்றிருக்க வேண்டும். ஆரிபீன்கள் தவ்ஹீதுடைய இல்மை விளக்கும் பொருட்டு கணித சாஸ்திரம் அளவு சாஸ்திரம் ( ஹந்தஸ்ஸா ) தற்க சாஸ்திரம். ( மந்திக்கு ) அந்தரக் கரணசாஸ்திரம் ( இல்முல்கலாம் ) தத்துவஞானம் ( இல்முத்தபீஆ ) முதலிய பல சாஸ்திரங்களைக்கொண்டு விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகுஅன்கு அவர்கள் புகூசிலும், புத்தூஹாத்துல் மக்கிய்யாவிலும் நாம் சொல்லிய இல்முகளைக்கொண்டும் வேறுபல இல்முகளைக்கொண்டும் தவ்ஹீதுடைய இல்மை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். இல்முகள் பாலாகவும் மஃரிபாவுடைய இல்மு அவைகளி னின்றெடுக்கும் வெண்ணெயாகவு மிருக்கும். இந்த இல்முகளொன்றையுங் கல்லாத் செய்குமார்களும், அறபுச்சொற்களுக்கு தமிழ்ச்சொல் தெரியாமல் அறபுச் சொற்களையே பாவிக்கின்ற ஆலிம்களும் எவ்விதம் முரீதீன்களுக்கு இந்த மகா வருத்தமான இல்மைக் கற்றுக்கொடுக்கக் கூடுமென்று எனக்குத்தெரியவில்லை. இந்த இல்முகளில்லாதவர்கள் புகூஸ், புத்தூஹாத்துல் மக்கிய்யா போலுள்ள கித்தாபுகளை எவ்விதம் விளங்கிக் கொள்வார்க ளென்று தெரிய வில்லை. இஃவானுஸ்ஸபா வென்கிற கித்தாபில் மேலே நான் சொல்லிய இல்முகளல்லாமல் விலங்கியல்பறி சாஸ்திரம் ( இல்முல்ஹயவான் ) தாபர சாஸ்திரம் ( இல்முன்னபாத்து ) கிரச சாஸ்திரம் ( இல்முல்மஆதின்) சங்கீத சாஸ்திரம் ( இல்முல்மிஉஸிக்கிய்யா ) இரசவாதம் ( இல்முல்கீமிய்யா ) முதலிய பல இல்முகளையும் இலேசாய் விளங்கும்படி காட்டிக்கடைசியாய் அவைகளைக் கொண்டு மஃரிபாவுடைய இல்மைப்போதித்துக்காட்டி யிருக்கிறார்கள். இஃவானுஸ்ஸபாவில் பிக்ஹூ இல்முடையவர்கள் கணித சாஸ்திரம் அளவு சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களறிந்திருக்க வேண்டுமென்று சில நியாயங்களைக் காட்டியிருக்கிறார்கள். ஒரு மனிதனுக்கு ஒரு நிலமிருந்

தது அதின் நீழம் நூறுயார் அகலம் நூறுயார் அந்த நிலத்திற்கு வதலாய் வேறொருவன் இரண்டுதுண்டு நிலங்களைக் கொடுக்கப் பொருத்தம்பண்ணி இரண்டு துண்டு நிலங்களைக் கொடுத்தான், ஒவ்வொரு துண்டும் ஐம்பதுயார் நீழமும் ஐம்பதுயார் அகலமுமுடையதாயிருந்தது இவர்களுக்கிடையே தற்கமுண்டாகி ஹந்தஸாவுடைய இல்மு தெரியாத ஒரு காளியிடம் போனபோது இந்த இரண்டு துண்டுகளும் அந்த ஒரு துண்டும் அளவிற் சரிதானென்று தீர்ப்புச்செய்தார். பின்பு அளவு சாஸ்திரமறிந்த காளியிடஞ் சென்றபோது அவர் உன் இரண்டு துண்டுகளுஞ்சேர்ந்து அவனுடைய பெரிய துண்டுக்கு அரைவாசியளவு தானிருக்கின்றதென்று தீர்ப்புச் செய்தார். அளவு சாஸ்திரம் படித்தவன் குறித்த பெரியதுண்டு நிலம் பதிஞாயிரம் சவுக்கயார் அளவென்றும், அந்த இரண்டு துண்டுகளும் ஐயாயிரம்யார் அளவென்றும் உடனே யறிந்து கொள்வான்.

ஒரு மனிதன் நாலு பாகம் அகலமும் நாலுபாகம் நீழமும் நாலுபாகம் ஆழமுள்ள ஒரு கிணறு தோண்ட எட்டு ரூபா பொருத்தம் பண்ணி இரண்டுபாகம் நீழமும் இரண்டு பாகம் அகலமும் இரண்டுபாகம் ஆழமுமுள்ள ஒரு குழியைத் தோண்டிவிட்டு நான் பொருத்தத்தில் அரைவாசி செய்துவிட்டேன், எனக்கு நாலு ரூபா கிடைக்க வேண்டுமென்று வழக்காடினுன். அளவு சாஸ்திரம் அறிந்தவர் உன்வேலை அரைவாசல்ல, எட்டிலொருபங்கு. ஒரு ரூபாதான் கிடைக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்தார். இந்த விதமான இலேசான கணக்குகள் எவருந் தெரிந்திருக்க வேண்டியதாயிருக்க, மதுறஸாக்களில் இந்த இல்முகளைக் கற்றுக்கொடாமல் மாணுக்கரின் காலங்களை அநியாயமாய் நகுவு படித்துக்கொடுக்கிறதிலேயே போக்கும்படி செய்விக்கிருர்கள். முற்காலத்தில் தற்செயலாய் ஒன்ருய்த் தைத்துக் கட்டப்பட்டிருந்த எட்டுக் கித்தாபுகளையும் ஒரொழுங்காய்ப் படித்துக் கொடுப்பது முஅல்லிம்களின் கடமையென்று நினைத்து அறபுப்பாஷையிலொரு சொல்லுந் தெரியாத மாணுக்கர்களை ஐந்தாறு வருஷக் காலம் கஷ்டப்படுத்தி அறபுப்பாஷையில் சில மார்க்கச் சட்டக் கித்தாபுகளையும் சில கதைகளெழுதிய கித்தாபுகளையுங் கற்றுக்கொடுத்து நீ ஆலிமாகிவிட்டாயென்று வெளியே விடுகிருர்கள். அறபு மிஸ்று முதலிய தேசங்களில் நகுவுச் சட்டங்கள் சுருக்கமாய் எழுதிய ஒரு சிறு புத்தகத்தை மட்டுங் கற்றுக்கொடுத்துவிட்டு பல இல்முகளையுங் கற்றுக்கொடுக்கப் படுகின்றது. அறபு படித்துக்கொடுப்பதையும் அதற்காகப் பரோபகாரசிந்தைவைத்து பொருள்களைச் செலவு செய்யும் உத்தம புருஷர்களின் நன்முயற்சியையுங் குறைவாய் நான் பேசுகிறதல்ல, அவர்கள் கற்றுக்கொடுக்கவேண்டிய இல்முகளையும், கற்றுக்கொடுக்கும் விதிகளையுங் கவனிப்பதற்கே சொல்லுகிறேன். பாஷையாவது ஒரு திறவுகோலைப்போலா யிருக்கும், அந்தத்திறவு கோலைக்கொண்டு இல்மென்கிற கஸாணுவின் கதவைத்திறந்து அதிலிருக்கிற திரவியங்களை யெடுக்கவேண்டும். அந்த வாசலைத் திறக்கக்கூடாத ஒரு திறவுகோலைக் கையில் வைததுக்கொண்டு இந்த

கஸானுவிலுள்ள திரவியங்களை யெல்லாம் சொந்தமாக்கிக்கொண்டோமென்று நினைக்கிறவர்களைப் போல் இந்தத் தேசத்திலுள்ள மிகுதியான உலமாக்களுடையவும், செய்குமார்களுடையவும் நிலைபரங்களிருக்கின்றன. மதுறஸாக்களை நடத்துகிறவர்கள் நான் சொல்லியவைகளைக் கவனித்துத் திருத்திக்கொள்ள வேண்டும். அல்லாதவரையில் அவர்கள் செலவு செய்யும் பொருள்களைக் கொண்டு அறபுப் பாஷையிலும் மற்றும் பாஷைகளிலுமுள்ள இல்முகளைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியாக்கிவந்தால் இல்மு எங்கும் பரக்கும், முஸ்லிம்கள் யாவருக்கும் பிரயோசனங் கொடுக்கும். கனம் பொருந்திய மாப்பிள்ளை ஆலிம்சாகிபவர்களும், நூகுசாகிபுலெவ்வை ஆலிம்சாகிபவர்களும் மார்க்க விஷயங்களைப்பற்றி கோர்வைசெய்து வெளியாக்கிய கித்தாபுகளால் இலங்கை இந்தியா முதலிய தேசங்களிலுள்ள தமிழ்ப்பேசும் முஸ்லிம்களெவ்வளவு பிரயோசன மடைந்து வருகிறார்கள். நான் சொல்லிய இல்முகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்காக ஒரு சபைசேர்ந்து பணஞ் சேகரித்து உலமாக்களைக் கொண்டு மொழிபெயர்த்து வெளியாக்கினால் எவ்வளவு நன்மையுண்டாகும், இல்மின் ஒளி எங்கும் பிரகாசிக்கும். அறபிலிருந்து பாரிஸ்பாஷையில் பல இல்முகளையும் மொழிபெயர்த்திருப்பதுபோலாகிவிடும். நமக்கு அயலாயிருக்கிறவர்கள் பல மதஸ்தர்களுமாயிருப்பதால் உலமாக்கள் அவர்கள் வேதங்களை யறியவேண்டும், ஹிந்துக்களின் வேதாந்தம், புத்தரின் ஞானம், ஐரோப்பியரின் தியோசொபி என்கிற ஞான மாகியவைகளை யறிந்திருந்தால் பிறமதஸ்தர்களோடு தற்கங்களுண்டானால் அவைகளில் ஜயமடையவும், நமது மார்க்கத்தைப் பிரசங்கித்து பிறமதஸ்தர்களை இஸ்லாமாக்கவுங் கூடியதாயிருக்கும். முற்காலத்தில் அல்நகுலவல்மிலல் என்ற ஓர் கித்தாபு கோர்வை செய்யப்பட்டிருக்கிறது, அதில் துன்யாவிலிருக்கிற வேதங்கள் மதுஹபுகள் பற்பல பலாசிபாக்களுடைய விசுவாசங்களெல்லாஞ் சேர்த்துக் கோர்வை செய்திருக்கிறது அந்தக் காலங்களிலுள்ள உலமாக்கள் பல பாஷைகளிலுள்ள இல்முகளையும் அறபாக்கி விர்த்திசெய்து வந்தார்கள். இல்மைப்பற்றியும் உலமாக்களைப்பற்றியும் நானிப்பொழுது "அல்லாது றசூலும் உலமாக்களும்" என்று பெயர் வைத்துக் கோர்வை செய்கிற புத்தகத்தில் அதிக விவரமாய் வரும்.

நமது புலவமார்களும் தமிழ்ப்பாஷையின் வித்துவான்களும் கவனிக்கவேண்டியது, அவர்கள் முன்னுள்ள புலவர்கள்பாடிய பாடல்களையுரை செய்வதும், உரைகளைப் பாட்டாக்குவதும் பதங்கள் கவிகள் பாடுவதுமே நமது கடமையென்றிராமல் பல பாஷைகளிலு மிருக்கின்ற தேவையான இல்முகளைத் தமிழில் எவருக்கும் விளங்கத்தக்க விதமாயெழுதி வெளியாக்கினால் அவர்களுக்குக் கீர்த்தியும், முஸ்லிம்களுக்கு நன்மையு முண்டாகு மென்றுசெய்கு சொன்னார்.

முரீது, எனது பிதாவே! நான் தாங்களிடம் பெற்றுக்கொண்ட அறிவுகள் போதுமென்று நினைத்திருந்தேன். மஃரிபாவுடைய இல்மு மிகுத மிருக்கின்றனவென்றும், அவை

களைக் கற்றுக்கொள்வது மிகவும் பிரயாசமென்று சொன்னது எனக்கு மிகவும் மயக்கத்தைக் கொடுக்கின்றது, அவைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையுமுண்டாகி விட்டது என்று சொன்னான்.

செய்கு, நான் சொல்வதை நன்ருய் விளங்கிக்கொள், நான் உனக்குச் சொல்லிய அறிவுகளும், ஆபிது காட்டிய சுலூக்கின் வழியும் அமல் செய்பவர்களுக்குப் போதுமாயிருக்கும். இல்மில்லாமல் அமலிற் பிரயோசனமில்லை, அதிக இல்மைத் தேடுவதில் காலத்தைப்போக்கி அமலில்லாம விருப்பதும் பலனில்லை. நானுனக்கு இலேசாய் விளங்கக்கூடிய விதமாய்ச் சொல்லியிருந்தாலும் ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வசனத்தையும் சிந்திக்கவேண்டும். சொல்லிய உபதேசப்படி நடக்கவும் வேண்டும், அப்படி நடந்து வந்தால் அல்லாகுத்தஆலாவின் கருணையால் உனது கல்பி லொளி பிரகாசிக்கும், நீ கற்றுக்கொள்ளாத இல்முகளெல்லா முண்டாகிவிடும், அப்பொழுது கித்தாபுகளைப் பார்ப்பதையும் விட்டு விடுவாய், பிறரிடம் கேட்டறியவும் நாடமாட்டாய், அல்லாகுத்த ஆலா நீ யறியாத இல்முகளைக் கற்றுக்கொடுக்கிறவனுயிருப்பான். ஆனல் தங்கள் புத்திக்கு விளங்கி யறிந்து அமல் செய்ய வேண்டு மென்கிற ஆசையுடையவர்களு மிருக்கிருர்கள், அப்படி யாசை யுடையவர்கள் புத்திகூர்மையாவதற்குப் பல கல்விகளையும் முதன்மையாகப் படிக்கவேண்டும், உனக்கு ஒரு மட்டுக்கு இந்த இல்முகளின் பிரிவு விளங்கும் பொருட்டு மனிதர்களை ஐந்து வகையாய்ப் பிரித்துக் காட்டுகிறேன்.

முதலாவது, அவர்கள் ஒரு மனிதனுக்கு ஒரு பிள்ளை பிறந்தால் அது தன் பிள்ளையென்று அன்பா யெடுத்து முத்தமிட்டு வளர்ப்பான், எனது ஒரு துளி இந்திரியம் இப்படிப் பட்ட புதுமைப்படத் தக்க ஒரு பிள்ளையாக எவ்விதம் சமைந்ததென்பதை யோசிக்கமாட்டான், இவன் இவ்விஷயத்தில் மிருகங்களின் பதவியாயிருக்கும். ஒரு மனிதன் பேசுகிறதைக் கேட்டால் அவனுடைய பேச்சின் சத்தத்தைக்கேட்டு அவனின் பேச்சை விளங்கிக்கொள்வான். இந்தச் சத்தம் எவ்விதமுண்டாகின்றது? எவ்விதம் என் காதுக்குக் கேட்கிறதென்று யோசிக்கமாட்டான். இவர்கள் பஞ்சேந்திரியங்களாலுண்டாகிற அறிவுக்குமேல் அதிகம் தேடமாட்டார்கள்.

இரண்டாவது, ளாஹிறுடைய இல்முகள் மட்டுமறிந்தவர்கள், பிள்ளையைக் கையி லெடுத்துப் பார்த்து ஒரு துளி இந்திரியம் இந்த விதமாய்ச் சமையச்செய்த அல்லாகுத்த ஆலாவின் வல்லமையும் கருணையையும் நினைத்து அவனுக்கே புகழென்று சொல்வான். இது அல்லாகுத்த ஆலாவின் குதறத்தென்றுஞ் சொல்வான். அவனிடம் குதறத்தென்பது என்ன? அல்லாகுத்தஆலா நேரே இவைகளைச் செய்கிருனு? சப்புகளைக்கொண்டு செய்விக்கிருனு? அவன் நேரே செய்கிறதானுல் ஒன்பதுமாதச் சுணக்கம் வேண்டியதென்னவென்று கேட்டால் இவைகளுக்கு மறுமொழி சொல்லமாட்டார்கள். பேச்சைப்பற்றிக்கேட்டால் இன்ன எழுத்துகளின் சத்தம் நாவிலிருந்தும், இன்ன எழுத்துகள் உதடுகளிலிருந்தும், இன்ன எழுத்தின் சத்தம்

தொண்டையி லிருந்தும் வெளியா கின்றனவென்று சொல்வார்கள். அது எவ்விதம் காதிற்செல்லுதென்று கேட்டால் அதற்கு மறுமொழி அவர்களிடத்திலிராது. ஆனால் இந்தப்பிரிவிலுள்ளவர்கள் மார்க்கத்தில் விசுவாசமும் அமலுமிருந்தால் சலாமத்தை யடைவார்கள்.

மூன்றாவது, ஹுக்கமாக்களும் பலாஸிபாக்களும் இவர்கள் உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் புத்தியைக்கொண்டும் சோதனைகளைக்கொண்டும் ஆராய்ந்து விளங்கித் திட்டப்படுத்துகிறவர்கள், இந்திரியம் இன்ன மூலப்பொருள்களைக்கொண் டுண்டா யிருக்கின்றது, கற்பவரை இன்ன விதமாயிருக்கின்றது, அது தரிக்கிற விதமும் அது கிரமம் கிரமமாய்ச் சதைக்கட்டியாகி உறுப்புகளும் நரம்புகளும் எலும்புகளுமுண்டாகி ரூபஞ்சமைந்து வருவதைக் கண்ணாற் பார்த்தறிந்தவர்களைப்போ லறிந்திருப்பார்கள். பேச்சாவது வாயிலுள்ள உறுப்புகளால் காற்று உசுப்பப்பட்டு அந்த உசும்புதல் காதில் மிகு விசித்திரமாய்ச் சமைந்திருக்கிற மத்தளம்போ லிருக்கிற அங்கத்தில் தட்டுப்பட்டுச் சத்தமுண்டாகின்ற தென்றும், இராகங்களுண்டாகும் விதங்களையும் அவைகளின் சட்டங்களையுந் திட்டமாக்கியிருக்கிறார்கள். மனிதர்களின் பேச்சுகளின் சத்தங்களையும் சங்கீதங்களின் இராகங்களையும் ஒரு கீத வாத்தியப் பெட்டியிற் பதியச்செய்து தேவையான நேரத்திலவைகள் வெளியாகச் செய்திருக்கிறார்கள். காதைப் படைத்திருக்கிற ஹிக்மத்தை யாராய்ந்ததினால் இவ்விதமான புதுமைப்படத்தக்க யந்திரங்களைச் செய்யக் கூடியவர்களானார்கள். இது போலவே உலகத்திலுள்ள பொருள்களின் மூலப்பொருள்களை யறிந்து அதிசயிக்கத்தக்க வேலைகளைச் செய்யக் கூடியவர்களா யிருக்கிறார்கள். இவர்களிடம் இந்தப் படைப்புகளெல்லா மெவ்விதம் படைக்கப்படுகின்றனவென்று கேட்டால் தபீயத்தல்லது இயற்கைத் தத்துவத்தைக்கொண்டு நடக்கின்றதென்று சொல்லுவார்கள். தபீயத்தென்பது என்னவென்று கேட்டால் அதற்கவர்களிடம் மறுமொழியில்லை, இவர்கள் மார்க்கத்தை விசுவாசித்தவர்களாயிருந்தால் அவர்களின் ஈமானுறுதியாகிவிடும். விசுவாசிக்காதவர்களா யிருந்தால் தபியீன்களென்ற காபிராய் மோசம்போவார்கள்.

நாலாவது, முனஜ்ஜிமீன்கள் சோதிடசாஸ்திரத்தின் உள்ளமையை விளங்கி யாராய்ந்தவர்கள். இவர்கள் அந்தப் பிள்ளை தரிக்கையில் இன்ன கிரகத்தின் தத்துவமிருந்தது, அதை வளரச்செய்தது இன்ன கிரகம் இன்ன மாத்தையில் இன்ன கிரகத்தின் அதிகாரம் இவ்விதம் அவனிறக்கும் வரையும் நடக்கின்ற காரியங்களை யெல்லாம் அவர்கள் சொல்லக்கூடியவர்களா யிருக்கிறார்கள். சத்தமுண்டாகிற திவ்விதம், ஒவ்வொரு சுரமுண்டாகிறதற்கும் காரணமின்னதென்று சொல்வார்கள். மரமுண்டாகச்செய்வது இன்னகிரகம், வளர்க்கிறது இன்ன கிரகமென்று சொல்வார்கள். இந்தச் சோதிடசாஸ்திரம் இதுரீஸ் அலைகிஸ்ஸலா மவர்களால் வெளியாக்கப்பட்டுப் பின்னால் மிகவும் வளர்ந்து வந்து சில நூருண்டாக மங்கி நிற்கின்றது. அவுலியாக்கள் பெரியோர்களிடம் மட்டும் தான் இந்த இல்மிருக்கிறது. சிலர்

முன்னுள்ளவர்களெழுதியிருக்கிற புத்தகங்களைப் பார்த்து சாஸ்திரங்களைச் சொல்வதல்லாமல். அந்த இல்மின் ஹக்கீக்கத்தை யாராய்கிறவர்களரிது. இந்தமுனஜ்ஜிமீன்கள் மார்க்கத்தை விசுவாசித்து அதின்படி அமல் செய்கிறதானல் அவர்கள் கஷ்புடைய வாசலை நெருங்கிவிடுவார்கள், அல்லாதவரையில் யாவையும் நடத்துவதும், அதிகாரஞ் செய்வதும் சந்திரன் சூரியன் கிரகங்கள் நக்ஷத்திரங்களாகியவைகளென்று அவைகளைத் தெய்வங்களாக நினைத்துக் காபிராகி விடுவார்கள். இவர்களின் ஆராய்வைக்கொண்டு பூமியையும் வானலோகத்தையும் ஒரு இயந்திரத்தைப்போல காண்பார்கள். ஒரு இயந்திரத்தில் இன்ன சக்கரமுருண்டு இன்னவேலை செய்கிறதென்று சொல்வதுபோல, சந்திரன் இன்ன வேலையைச் செய்கிறது, சூரியன் இன்னவேலையைச் செய்கிறது, பிரகஸ்பதி இன்னவேலை செய்கிறதென்று சொல்வார்கள். ஆகிலும் அந்தயந்திரத்தை நடத்தும் தத்துவமின்னதென்றும் நடத்தும் விதமிவ்விதமென்று மறியாதவர்களாயிருக்கிறார்கள்.

ஐந்தாவது, முஹக்கிக்கீன்கள், அவுலியாக்கள் - அல்லாகுத்தஆலாவினருளால் வெளியான மறைவான ஆலங்களையும் அவைகளின் அந்தரங்கங்களையு மறிந்தவர்கள், அவர்களிடத்தே ஆலங்களெல்லாமொரு யந்திரமாகவும், அவைகளெல்லாம் ஜஸ்முல்குல்லீ யென்கிற ஹயூலாவால் சமைந்து நபுசுக்குல்லீ யென்கிற புகையால் சுற்றப்பட்டு அந்த நபுசுல்குல்லீ யென்கிற புகை அக்கிலுல் அவ்வலால் கிழப்பப்பட்டு அந்த அக்கில் ஹக்குத்தஆலாவின் நாட்டமென்கிற தத்துவத்தால் நடத்தப்பட்டுவருவதை யறிந்திருக்கிறார்கள். இந்த இல்முகள் படிப்படியா யறிந்துமேலெற வேண்டியது, ஒரேமுறையாக வறிந்துகொள்வதற்கு வழியில்லை. அல்லாகுத்தஆலாவின் சித்தத்திலிருந்து நான் திரும்பவுன்னைச் சந்தித்தால் இந்த இல்முகளைச் சொல்லித்தருகிறேன், அல்லது புத்தகரூபமாய் வெளியாக்குவேன், அல்லாகுத்தஆலா உதவிசெய்வானாகவென்று செய்கு சொன்னார்.

முரீது, தாங்கள் சொல்லிய உபதேசங்களையெல்லாம் சேர்த்து ஒரு புத்தகமா யச்சிட நினைக்கிறேன், ஆகிலும் தாங்கள் சொல்லியவைகளில் இந்த ஊர்களிலுள்ள செய்குமார்களும் ஆலிம்களும் உங்கள் பெயரில் பொறாமையும் குரோதமுங் கொள்ளுதற்கு இடமாகுமோவென்று பயப்படுகிறேனென்று சொன்னான்.

செய்கு, இவ்விஷயத்தில் எனக்குக் கொஞ்சமும் அச்சமில்லை, இல்மையுடைய உலமாக்கள் அந்தக் கித்தாபை ஆரிபீன்களுக்கு சுல்தான்களாகிய நாயகமவர்களின் கித்தாபுகளிலுள்ள ஆழமான இல்முகளை இலேசாய் விளங்கும்படி யெழுதிய ஒரருமையான கித்தாபென்றேற்றுக் கொள்வார்கள், அதில் பிழைகளைக் கண்டாலும் கிருபையெனும் பார்வையால் பார்த்து அவைகளை இலேசாய்க் காண்பார்கள். பொறாமையெனுங் கண்ணாடியால் பார்ப்பவர்களின் பார்வைக்கு எனது தெளிவான கருத்து மயக்கமான கருத்தாய்த் தோற்றும், ஒரு அச்சுப்பிழை நமது மார்க்கத்தை யழிக்கும் மகா பிழையாய்க் காணும், இவர்களை நான் கவனிக்க வேண்டியதில்லை, ஆகிலும்

சென்ற இருபத்தைந்து வருடங்களுக்குள்ளே இவ்விதமான ஆலிம்கள் மட்டுமல்ல, பெருங் கூட்டங்களாய்ச்சேர்ந்து எனக்கு விரோதித்தெழும்பி அவர்களின் பொருமையெனும் சூருவழிக் காற்றுக்கு நானும் எனது நன்முயற்சிகளு மகப்பட்டும் நான் சலாமத்தென்னும் குடாவிற்கு வந்து சேர்ந்திருக்கிறேன்; எனது நன்முயற்சிகளெனும் பயிர்கள் சிலது வளர்ந்து செளித்தோங்கியிருப்பவைகளில் அந்த விரோதமாயிருந்தவர்கள் தானும் சௌக்கிய மடைகிறார்கள். பொருமையெனும் அக்கினிக்கு அந்தப் பயிர்களிற் சிலது வாடிக் கருகியிருந்தாலும், எனது மவுத்துக்குப்பின் இவைகளெல்லாம் பொது நன்மைக்காக இன்னார் நட்டியதாயிருக்க, நாங்கள் அநியாயஞ் செய்து அவைகளைக் கெடுத்தோமென்று சலித்துக் கண்ணீர்விட்டு அந்தக்கண்ணீரால் அப்பயிர்களை வளர்ப்பார்கள். ஆகிலும் அல்லாகுத்தா ஆலா எனக்கு விரோதிகளா யிருந்தவர்களெல்லோரையு மெனக்குச் சிநேகிதர்களாகச் செய்தான், அவர்கள் என்பெயரிற் கிருபையா யிருக்கவும், என்னால் அவர்கள் பிரயோசனமடையவும், அவர்களின் துஆபறக்கத்தால் நான் பிரயோசனம் பெறவுஞ் செய்யும்படி அல்லாகுத்த ஆலாவிடம் துஆக்கேட்டு நிற்கிறேனென்று செய்குசொன்னார்.

முரீது, தாங்கள் சொல்லிய மேலான குணங்களுடைய அவுலியாக்களும் பெரியோர்களும் இந்த ஸமானிலிருக்கிறார்களா வென்று கேட்டான்.

செய்கு, எந்த ஸமானிலும் குத்துபுமார்களும் அவுலியாக்களு மிருப்பார்கள், அவர்களில்லாதுபோனால் ஷைத்தானின் அதிகாரம் மேலிட்டு துன்யா அழிந்துபோகும், அல்லாகுத்தஆலா நால்வரை துன்யாமுடியும்வரையும் சரீரத்துடனே மவுத்தாக்காமல் வைத்திருக்கிறான். இதிரீஸ் அலைகிஸ்ஸலாம், இல்யாஸ் அலைகிஸ்ஸலாம், ஈசா அலைகிஸ்ஸலாம், கிழுறு அலைகிஸ்ஸலா மாகிய நால்வரே. இவர்கள் நால்வருக்கும் அவ்தாதுகளென்று சொல்லப்படும், அவர்களி லொருவர் குத்துபு. இருவர் இமாம்கள். ஒருவர் ஈமானைக் கார்மானஞ் செய்கிறவர், ஒருவர் விலாயத்தைக் கார்மானஞ் செய்கிறவர், இவர்களல்லாமல் ஒவ்வொரு சமானிலும் ஒருகுத்துபும், இரண்டிமாம்களு மிருப்பார்கள். இவர்கள் மேலே சொல்லியவர்களின் மக்காமாத்துகளுக்குச் சென்றால் முன் சொன்னவர்களுக்குப் பிரதிகளாயிருப்பார்கள். அவர்களுக்கு உலகத்தில் வளங்கிற பெயர்களேதாயிருந்தாலும், மறு ஆலங்களில் குத்துபுமார்களுக்கு அப்துல்லா வென்றும், இமாம்களுக்கு அப்துல் றப்பென்றும், அப்துல் மலிக்கென்றுஞ் சொல்லப்படும். குத்துபுக்கு அப்துல்லா வென்கிற இஸ்மிருப்பதால் ஹக்குத்தஆலாவின் சகல இசும்களின் தஜல்லியாத்துகளு முண்டாகும். இதனால் எங்கள் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு மிப்பெயரிருந்தது. குத்துபின் அதிகாரம் இந்த ஆலம் மூல்குக்கும், மலக்கூத்துக்குமாயிருக்கும். அந்த இமாம்களிலொருவரின் நோட்டம் இந்த ஆலத்திலும், மற்றவரின் நோட்டம் ஆலம் மலக்கூத்திலு மிருக்கும்.

இன்னும் துன்யாவில் எந்த ஸமானிலும் அவ்தாதுகள் நாலுபெயர்களிருப்பார்கள். இதற் கதிகமாகிறதுமில்லை, குறைகிறதுமில்லை. கிழக்கு மேற்கு வடக்குத் தெற்கு ஆகிய நாலு திசைகளையும் அல்லாகுத்த ஆலா இந்த நால்வரைக் கொண்டுங் கார்மானஞ் செய்கிறுன். அபூயசீதுல் புஸ்தாமி றளியல்லாகு அன்கு இந்தப் பதலியிலுள்ளவர்கள், இன்னும் நாற்பது பெயர்கள் அப்தால்கள், இந்த அப்தால்களில் ஆண்களுமிருக்கிறுர்கள், பெண்களுமிருப்பார்கள். பூமியை ஏழுபகுதியாய்ப் பிரித்து ஒவ்வொரு பகுதி அப்தாலி ஒவ்வொருவர் கார்மானத்தி லிருக்கும். ஒருவருடைய அதிகாரம் இபுருகீம் அலைகிஸ்ஸலா முடையவும், ஒருவர் ஹாறூன் அலைகிஸ்ஸலாமுடையவும், ஒருவர் இதுரீஸ் அலைகிஸ்ஸலா முடையவும், ஒருவர் யூசுபுஅலைகிஸ்ஸலாமுடையவும், ஒருவர் ஆதம் அலைகிஸ்ஸலாமுடையவும். ஆகிய நபிமார்களின் அடிப்பாதையில் நடத்திவருவார்கள். இவர்களுக்கு கிரகங்களின் அஸ்ருறுகளையும் அவைகளின் சுற்றுகளையும், அவைகளைக் கொண்டுண்டாகிற வைகளையும் அல்லாகுத்தலா வெளியாக்கிக் கொடுத்திருக்கிறுன். இவர்களுக்கு அப்துல்ஹய்யி, அப்துல்மூரீது, அப்துல் அலீம், அப்துல்காதிறு ஆகிய பெயர்களிருக்கும் இந்தப் பெயர்கள் அவ்தாதுகளுக்கிருந்தாலும் இவர்களுக்குமிருக்கும். இன்னும் அப்துஷ்சுக்கூர், அப்துல்சமீயு, அப்துல்பசீறு என்கிற பெயர்களும் மற்றவர்களுக்கிருக்கும் இவர்களுக்குப் பலவிடங்களிலும் ஒரே நேரத்தில் தெரிபடவுங்கூடும்.

இன்னும் ஒவ்வொரு ஸமானிலும் நுக்கபாக்கள் 12 பெயர்களிருப்பார்கள். இவர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்குமுள்ள அஸ்ருறுகளை ஹக்குத்தஆலா வெளியாக்கி யிருக்கிறுன்.

இன்னும் ஒவ்வொரு ஸமானிலும் எட்டு நுஜபாக்களிருப்பார்கள், இவர்கள் எட்டுக்கிரகங்களில் கீழ் மண்டலங்களின் அஸ்ருறுகளை யறிந்திருப்பார்கள், இவர்களின் அறிவுகளெல்லாம் கஷ்பைக்கொண்டல்லாமல் இல்மைக்கொண்டல்ல, இன்னும் ஒவ்வொரு ஸமானிலும் ஒரு ஹவாரியூனிருப்பார்கள். இவர்கள் மார்க்கத்தைக் காப்பாற்றுதற்காக யூகமும் வீரியமு முடையவர்களாகவும் அற்புதங்கள் செய்யக்கூடியவர்களாகவுமிருப்பார்கள். இன்னும் ஒவ்வொரு ஸமானிலும் நாற்பது பெயர்களிருப்பார்கள் அவர்களுக்கு றஜீபூனென்று சொல்லப்படும். இவர்கள் அல்லாகுத்த ஆலாவின் வல்லமையைக்கொண்டு ஒரு ஹாலையுடையவர்களா யிருப்பார்கள். றஜபுமாதந் தொடங்கின முதல் நாளையில் வானமவர்களை மூடினதுபோலிருக்கும், எழும்ப இருக்க நடக்க கை காலை யுசுப்பக் கண்ணைத் திறக்கக் கூடாதவர்களா யிருப்பார்கள். அந்த வேளையில் அல்லாகுத்தஆலாவின் வல்லமையான தஜல்லியாத்துகளுண்டாகும், இரண்டாம் நாளில் அந்த ஹால் சற்றுக்குறையும், மூன்ரும் நாளில் மிகுதம் குறைந்துவிடும். அதன்பின் அவர்கள் உறக்கத்திலிருந்து விழித்தவர்களைப்போல் அவர்கள் வேலைகளை அல்லது தொழில்களைப் பார்ப்பார்கள்.

இன்னும் கத்தமென்று பெயருடையவர்களொருவரிருப்பார்கள், அவர்கள் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் உம்மத்துகளிலுள்ள அவுலியாக்களில் மேலானவர்கள், இவர்கள் தான் கடைசியாக வருகிற ஈஸா அலைகிஸ்ஸலாம்.

இன்னும் ஒலிமார்கள் மூந்நூறு பெயர்கள் ஆதம் அலைகிஸ்ஸலாமின் கல்பின் பதவியிலும், நாற்பது பெயர்கள் நூகுஅலைகிஸ்ஸலா முடைய கல்பின் பதவியிலும், ஏழு பெயர்கள் இபுறுகீம் அலைகிஸ்ஸலா மவர்களின் கல்பின் பதவியிலும், ஐந்து பெயர்கள் ஜிபுரீயீல் அலைகிஸ்ஸலா முடைய கல்பின் பதவியிலும், மூன்று பெயர்கள் மீக்காயீல் அலைகிஸ்ஸலாமுடைய கல்பின் பதவியிலும், ஒருவர் இஸ்றுபீல் அலைகிஸ்ஸலா மவர்களின் கல்பின் பதவியிலும் மிருப்பார்கள். ஒவ்வொரு நபிமாருக்கும் தனதாகச் சில அருள்களை அல்லாகுத் தஆலா கொடுத்து அவைகள் அவர்களால் வெளியாக்கப்பட் டிருக்கின்றன; புசூசில் இவைகளை விவரித்துச்சொல்லியிருக்கின்றது அந்தந்த நபிமார்களுக்குரிய அஸ்மாக்களின் தஜல்லியாத்தைப் பெற்றவர்களுக்கு அவர்களின் பதவியை யுடையவர்களென்று ஆரீபீன்கள் சொல்வார்கள். அல்லாகுத்தஆலாவுடைய தொண்ணூற்றொன்பது இசும்களில் ஒவ்வொரு இஸ்மின் அதிகாரம் ஒவ்வொரு அவுலியாவுக் கிருக்கும். மறு ஆலங்களில் அந்த இசும்தான் அவர்கள் பெயராயிருக்கும்.

இன்னும் மறைவானவர்கள் அஸ்ஹாபுல்கைபென்று, ஏழு பெயர்கள் எந்த ஸமானிலு மிருப்பார்கள். இவர்கள் பேசமாட்டார்கள், பேசத்தேவையாகக் கண்டால் முணுமுணுக்கிறதுபோல் பேசுவார்கள். அல்லாகுத்தஆலாவின் தஜல்லியாத்தில் ஆழ்ந்தவர்களா யிருப்பார்கள். மனிதர்களைவிட்டும் நீங்கியும் மனிதர்களோடு பேச வெட்கமுடையவர்களாகவு மிருப்பார்கள். ஒருவர் சத்தமாகப் பேசக்கேட்டால் சரீரம் நடுங்கி முகம் பேதலித்துவிடும்.

இன்னும் வெளியிரங்கமாய் பாத்தினுடைய இல்முகளையும் ளாஹிறுடைய இல்முகளையும் அறிவித்துக் கொடுக்கிற ளாஹிறான்கள் 18 பெயர்களிருப்பார்கள். அற்புதங்களுஞ் செய்வார்கள்.

இன்னு மிதுபோ லநேக பிரிவுகளும் பதவிகளும் மக்காமாத்துகளுமுடை ஒலிமார்கள் மிகுதமிருக்கிறார்கள். கித்தாபுகளைப்பார்த்து உனக்கறிந்து கொள்ளலாம். துன்யாவினுசையில் ஆழ்ந்திருப்பவர்கள் இவர்களைக் காண்பதும் அரிது, காண்பதற்கு அவர்களிடங்கொடுப்பது மரிது. ஒலிமார்கள் மனுச்சரீரமுடையவர்களா யிருந்தாலும் அவர்களின் நபுசோ மலாயிக்கத்துகளின் தன்மையா யிருக்கும். அவர்களுக்கும், பொருளையும் துன்யாவி னின்பங்களையும் வணங்கிக்கொண் டிருப்பவர்களுக்கும் எவ்விதம் சம்பந்தமுண்டாகும்? ஆகையால் அவுலியாக்கள் எந்த ஸமானிலு மிருக்கிறார்கள், அவர்களைச் சந்திக்கும் ஆசையும் அதற்குத் தக்க ஆயத்தமு முடையவனுயிருந்தால் சந்தித்துக் கொள்வாயென்று செய்கு சொன்னார்.

மூரிதூ, தங்களிடம் கடைசியான ஒரு கேள்வி கேட்கப் போகிறேன், பல முறைகளிலும் நான் கேட்க நாடியும் வெட்கித்திருந்து விட்டேன். அதாவது, ஆணும் பெண்ணுஞ் சேருதல், சுஹூதுகள் யாவிலும் நிரப்பமானதென்று செய்குமார்கள் சொல்லுகிறார்களே இது உண்மையாவென்று கேட்டான்.

செய்கு, அநேக துஷ்டர்கள் செய்கின் வேஷத்தைப்பூண்டு நாடுகளுக்குப்போய் நசீஹத்துக்கொடுத்து பெண்களுக்கு அகமலுஷ் சுஹூதை விவரித்துச் சொல்லி மோகத்தையெழுப்பி பசாதுகளைச் செய்கிறார்கள். இல்முன்னிசா, கொக்கோகம் முதலிய இல்முகளை மஃரிபாவுடைய இல்மோடுகலந்து சொல்லி, அந்த மிஸ்கீன்கள் இதுதான் பேரின்பம் மோக்ஷ ஆனந்தமென்று இந்த இன்பத்தில் மருண்டுவிடச் செய்கிறார்கள். செய்கு தானும் தங்கள் பிள்ளைகளை அவைகளிற் பளக்கிவிடுவதிலும் சேர்ந்து கொள்ளுகிறார்கள், இவ்விதமான பசாதுகள் பல நாடுகளிலும் பல முறைகளிலும் நடந்ததற்கு உண்மையான அத்தாட்சிகள் கிடைத்திருக்கின்றன. இவர்களல்லாமல் இந்தத் தேசங்களிற் பிரபலமாக நசீஹத்துக் கொடுக்கிற செய்குமார்களில் இதைக் குறித்துப் பல பெயர்களிடமுங் கேட்டிருக்கிறேன். ஒருவராவது ஆரிபீன்களின் கருத்தைச் சரியாக எனக்கு விளக்கிக் காட்டவில்லை. இவர்களிலொருவர் தங்கள் முரீதீன்களுக்கு அக்மலுஷ் சுஹூதைக் குறித்து எழுதிக் கொடுத்திருக்கிறது:—

“அக்மலுஷ் சுஹூதாவது, ஹக்குத்தஆலாவை பாயிலென்கிறதாகவும் கொண்டு குல்லு ஜூஸியினளவில் மோகமாகிற இஷ்கு கொண்டு தன் ஹலாலுடன் சுஹ்பத்துச் செய்யும் போது கல்பில் அல்லாவென்கிற இஸ்மு தாத்தை திக்று தன் ஹலால் கல்பில் லாயிலாஹ இல்லல்லா என்கிற திக்றும் தவிர, யாதொரு உரியாட்டமும் துன்யாவில் இன்பத்தை நிறைவேற்றுகிறதை எவ்வளவும் நினையாமல் ஹக்கைத் தானே தரிசிப்பாயாகில் உன்னுடைய செயல் கலமாகவும், அவளுடைய சுஹூது லவ்ஹாகவும் நூறுமுகம்மதிய்யாவெனும் அஸ்லுக்கு ஒரு நுஸ்காவாகும் அவனை நபிசல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்களுடைய நாவால் இதற்காகத்தான் (ஹூப்பிய இலைய மினத்துன்யாக்கும் தலாதத்துன் அன்னிஸாஉ வத்தீபு வகுர்றத்து ஜனி பிஸ்ஸலாத்து) என்று உங்கள் துன்யாவில் நின்றும் எனக்கு உகந்தது மூன்று காரிய முண்டும்; ஹலாலான பெண்களும், வாசங்களும், தொழுகையில் என்கண் குளிர்ந்திருப்பது முண்டு என் றெழுதியிருக்கிறது.”

இதில் அறபுச் சொற்களிலுள்ள எழுத்துப் பிழையையும் தமிழ்ப் பேச்சிலுள்ள பிழைகளையுந் திருத்தியும், அறபுச் சொற்களை தமிழில் மொழிபெயர்த்துப் பார்த்தும் ஒரு கருத்தும் விளங்கவில்லை; நானவர்கள் சொல்லியிருப்பது முழுதுஞ் சரியல்லவென்று சொல்லுகிறதல்ல, ஆனால் வாசிப்பவர்களுக்கு அதின் கருத்து விளங்காததுபோலவே எழுதினவருக்கும் விளங்கவில்லையென்று தெரிகிறது.

ஆரிபீன்களின் கருத்தை விளங்கும்பொருட்டு ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள சம்பந்தத்தை மூன்று பிரிவாக்கிக் காட்டுகிறேன். முதலாவது ஆணுக்கும் பெண்ணுக்கும் மோகத்தைக்கொண் டுண்டாகிற சம்பந்தம், ஹயாத்துடைய படைப்புகளெல்லாவற்றுக்கும் மோகமிருக்கின்றது, இது நபுசானிய்யாவாலுண்டாகிற ஆசை, இதற்கு சரீர இச்சையென்றுஞ் சொல்லப்படும். இரத்தம்கொதித்து நரம்புகளிற் பாய்ந்தோடி அவைகள் விம்மி மீறி ஒவ்வொரு துளி இரத்தமும் புணர்த்தேடும், இது ஒரு உறுப்பைச் சேர்ந்ததல்ல, சரீரமுழுவதும் பரந்ததா யிருக்கும். பஞ்சேந்திரியங்களொவ்வொன்றும்மையோகஞ் செய்வதி லின்பமனுபவிக்கும், இது சொற்ப நேரத்திற் குரியதானதால் இதற்குச் சிற்றின்பமென்று சொல்லப்படும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இந்த மோகத்தைக்கொண்டேசம்பந்தமா யிருந்தால்அவர்கள் மிருகங்களின் தன்மையாயிருப்பார்கள், ஒருவனுக்கு மோகம் மீறினல் வலோத்காரஞ் செய்வான் கற்பழிப்பான் பெண்கள் சீவியகாலம் முழுவதும் சிறுமையுந் துன்பமுமடையச் செய்வான்.

இரண்டாவது, நபுசானிய்யாவும் றூஹானிய்யாவுஞ் சேர்ந்துண்டாகிற ஆசை அதுதான் இன்சானின் தன்மை, அன்பாவது சரீரத்தைச் சேர்ந்தல்ல, சரீரம் பெலங் குறைந்தால் மோகங்குறைந்துவிடும், அன்பு குறையாது அதனல் அன்பு சரீரத்தைச் சேர்ந்ததல்ல றூஹைச்சேர்ந்ததென்று திட்டமாய் விளங்குகின்றது மனைவி எனக்காதாரம் துன்யாவில் வேறில்லையென் புருஷனே யென்று நம்பிக்கை வைத்திருப்பதையும், என் உயிரும் புருஷனுடைய உயிரும் ஒன்றென்று வைத்திருக்கிற அன்பையும், தன் சுகதுக்கங்களுக்கு அவள் பங்காளியாயிருப்பதையும், தன் வமிசம் பெருகுவதற்குத் தன் நுத்துபாவை அவள் கற்பத்தில் வைதது வெகு கஷ்டத்துடன் பிள்ளை பிறக்கச்செய்து அவளிரத்தத்தை யுருக்கிப் பாலூட்டி வளர்த்துத் தந்து தன் பெயர் வளங்கச்செய்யும் நன்றியையும், ஸனுவின் மோசத்திலாகாதிருக்க அவள் சரீரத்தைத் தனக்குச்சொந்தமாக்கித் தந்து சுகிக்குமின்பத்தையும், ஹக்குத்தஆலாவின் இபாதத்தில் தரிபடுகிறதற்கு அவளால் பெறும் உதவியையும் நினைக்கும்போது கல்புருகி தன் கிருபை அவளின் சரீரத்தையும் நபுசையும் மூடிவிடும். இப்படிப்பட்ட அன்புடனே மோகமுஞ்சேர்ந்து சுகித்து வாழ்வதுதான் இன்சானுடைய தன்மையாயிருக்கும்.

மூன்ருவது, அவுலியாக்களின் மறுத்தபாவிலுள்ள சேர்மானம். இதை விளக்குதற்குக் குறித்த செய்கவர்கள் காட்டிய ஹதீதின் கருத்தைச் சொல்லுகிறேன்; நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எனக்குவப்பாயிருப்பவைகள் மூன்று. பெண்களும் பரிமளமும் தொழுகையைக்கொண்டெனதுகண்குளிர்ச்சியுமென்று சொல்லியிருக்கிருர்கள். பெண்களைப் பரிமளத்திற்கும் தொழுகைக்கும் முற்படுத்திப் பேசியிருப்பதற்குக் காரணமென்ன? முகியித்தீனிபுனு அறபிறளியல்லாகு அன்கு அவர்கள் புசுசில் பெண்ணுகிறது ஆணின் பங்காயிருக்கும். ஆதம

லைஹிஸ்ஸலாமிலிருந்து ஹவ்வா அலை
ஹிஸ்ஸலாமவர்கள் பிரிந்ததால் ஹ
க்கீக்கத்தில் ஆணும் பெண்ணு மொ
ன்ருயிருக்கும், ளாஹிரில் பிரிவா
ய்த்தோற்றும். மொத்தமானது தன்
பங்கைச் சேர்த்துக்கொள்ளவும், பங்
கு மொத்தத்தைச் சேரவும் தேடும்
இந்தத் தேட்டந்தான் நபுசானிய்யா
வில் மோகமாகவும், றூஹில் அன்
பாகவு மமைந்திருக்கின்றது.
நாயனை யறிவதற்குமுன் தன்னைய
றிய வேண்டும். ஏனெனில் ஹக்கி
ன் தாத்தை யறியக்கூடா திருப்ப
தாலும், அவனின் அஸ்மாக்களும்
சிபத்துகளும் இன்சானில் வெளி
யாகியிருப்பதாலும், அந்த அஸ்மாக்
களையும் சிபத்துகளையு மறிவதுதான்
தன்னை யறிவதாயிருக்கும். அஸ்மா
க்களையும் சிபத்துகளையும் அறிவதி
ன் முடிவு ஹக்கை யறிவதாயிருக்கு
ம். அதனல் தான் எங்கள் நாயகம்
சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்கள்
தன்னை யறிந்தவன் தன் நாயனைத்தி
ட்டமா யறிவானென்று சொல்லியி
ருப்பது பெண்களிலும் அவனின் அ
ஸ்மாக்களும் சிபத்துகளும் வெளியா
கியிருப்பதுமன்றி, தன்னின் பங்கா
யுமிருப்பதால் அவள் தன்னைவிட்டும்
வேறென் றெண்ணும் எண்ணத்தை
மாற்றி ஒன்றென்பதை நிலைப்படுத்
துதற்கு சுஹூதென்று சொல்லப் ப
டும். முகியித்தீனிபுனு அறபி றளிய
ல்லாகு அன்கவர்கள் ஹக்கு ஆண்
பெண் ணென்று மூன்ருய்ப்பிரித்து,
இவைகள் மூன்றும் ஒன்ருய்ச் சே
ருதல் தான் அக்மலுஷ்சுஹூதென்று
சொல்லியிருக்கிருர்கள். முதலாவ
து தன்னையும், இரண்டாவது பெ
ண்ணையுஞ் சுஹூதுசெய்தல் அதா
வது:- தன்னை (பாயில்) செய்தவ
னென்றும், பெண் செய்யப்பட்ட
பொருளென்றுந் தியானிக்கிறது. இது
திட்டமானதின்பின், தான் செய்யப்
பட்ட பொருளென்றும், ஹக்கு பா
யில் செய்கிறவனென்றும் தியானிக்
கிறது. இவ்விதம் தியானித்து வரு
கையில் இவைகள் மூன்று மொன்ரு
ய்ச் சேர்ந்த தன்மையாகிவிடும், இத
ற்குத்தான் அகமலுஷ் சுஹூதென்று
சொல்லப்படும். இந்த மறுத்தபா
வில் மோகமும் அன்பும் ஏக மென்
கிற சமுத்திரத்தி லாழ்ந்துவிடும்,
பெண் ஆணில் பனுவாகி ஆண் ஹக்
கில் பனுவாகிவிடும் பதவியாயிருக்
கும். இந்தமேலான பதவியைப்
பெற்றுக்கொள்ளுதற்கு அநேக மக்
காம்களும், பல சுஹூதுகளுங் கடந்
தேறவேண்டும். முகியித்தீனிபுனு
அறபி றளியல்லாகு அன்கவர்கள்
சஹ்வத்தைக்கொண்டு சேர்தலாகிற
து நான்கு பூதங்களின் சேர்மானமா
யிருக்குமென்றும், அதற்காகத்தான்
தண்ணீர்கொண்டு துப்பரவு செய்ய
வேண்டுமென்று ஏவப்பட்டிருக்கிற
தென்றுஞ் சொல்லியிருக்கிருர்களெ
ன்று முரீதிடம் சொல்லி, மகனே!
என் உபதேசங்களை யெல்லாம் மனத்
திற் றரித்துக் கீழிருந்து மேலாவதற்
குரிய அமல்களைச் செய்துவரவும், ஒ
வ்வொரு இல்மையும் ஒவ்வொரு அ
மலின் ஹக்கீக்கத்தையுந் தெளிவாய்
விளங்கி அமல் செய்யவு முபதேசிக்
கிறேன், அல்லாகுத்தஆலாவின் கரு
ணை யுனக்குண்டாவதாக, சலாமும்
றகுமத்தும் பறக்கத்து முண்டாவ
தாக வென்று சொல்லிவிட்டு இரு
வரும் பிரிந்து விட்டார்கள்.

இந்தக் கித்தாபை வாசிக்கின்ற
சிநேகிதர்களே! நான் இந்தக் கித்
தாபைக் கோர்வை செய்வதற்குக்
காரணமாவது:—எனக்கிரண்டு அன்
பான நேசர்களிருக்கிருர்கள். கொ

மூம்பில் இல்மு விஷயத்தில் மிகு முயற்சி யெடுக்கிறவரும் மதுறஸாக்கள் திறந்து பொருள்களைத் தாராளமாய்ச் செலவுசெய்து வருகிறவருமாகிய அரசிமரைக்காயர் வாப்பிச்சி மரைக்காயர் பாஸ் என்கிற தருமசீலரும், நன்மைவிஷயங்களில் முன்பாய்கிற தஞ்சாவூர் வெல்லம் குலாமுஇயித்தீன் சாய்பு பஹாவுத்தீன் சாய்பு என்கிற சற்குணருமாகிய இவர்களிருவரும் தாங்கள் அமல்செய்யும் பொருட்டு சைறு சுலூக்கென்கிற கித்தாபைத் தமிழில் மொழிபெயர்த்துத்தரவேண்டுமென்று கேட்டார்கள். எங்கள் நேசத்தையும் ஒத்துமையையும் எவருமறியவும், எங்கள் மூவரையுஞ் சேர்த்து துஆக் கேட்கவுங் கருதி, அந்தக் கித்தாபை மொழிபெயர்க்கத் தொடங்கி வருகையில் மஃரிபாவுடைய இல்மு ஏழு பிரிவாயிருக்க, அதிலொரு பிரிவாகிய சுலூக்கை மட்டும் வெளியாக்குவதினுல் பலன் சொற்பமெனக்கண்டு அல்லாகுத்த ஆலாவின் ஹழுறத்தில் ஐயம்பெற்ற முஹக்கிக்கீன்கள் முகர்றபீன்களாகிய மஹாத்துமாக்களின் திரவியங்களால் சொற்ப தங்கத்தை யெடுத்து என் மனமென்னுங் குகையிலிட்டுத் தியானமெனும் நெருப்பினுலுருக்கி எனது கிருபையான முஸ்லிம்களின் மனம் பிரீதி யடையத்தக்க வோராபரணமாய்ச் செய்து அஸ்ருறுல் ஆலம் என்று பெயர்கொடுத்து வெளியாக்கினேன். சொற்ப அறிவையுடையவனும்பாவத்தில் மூழ்கினவனுமாகிய அடியேனின் தவறுதல்களையும் பிழைகளையும் உலமாக்கள் கண்டால் அவர்கள் அவைகளைக்குறித்துஎனக்கு நேரே எழுதினுல் நான் நன்றியுடைய மனத்தோடும் துஆக் கேட்கிற கல்போடும் அங்கீகரித்து அல்லாகுத்த ஆலாவின் சித்தமிருந்தால் இந்தக் கித்தாபின் மறுபதிப்பில் அல்லது இதற் கிரண்டாம் பாகமாய்க் கோர்வைசெய்ய நாடியிருக்கிற கித்தாபில் திருத்திக் கொள்வேன், அல்லது அவைகளுக்கு மறுமொழி சொல்வேன்.

சிலர் நான் சிர்ரைப் பகிரங்கமாக்கிவிட்டேனென்று குறை கூறுவார்கள். இந்தஸமானில் பல மதஸ்தவர்களும் ஞானத்தையே தேடுகிருர்கள். ஒவ்வொரு வேதத்திலுமுள்ள ஞானத்தை பத்திரிகை வழியாலும் புத்தக வழியாலும் பகிரங்கப்படுத்தி வரப்படுகிறது. நமது ஞானமோ சுத்த ஒளியாயிருக்க இதை மறைக்கவேண்டும், வெளியாக்கிறது குற்றமென்று சொல்லுகிறவர்களுமிருக்கிருர்கள். அந்தந்த ஸமானுக்குத்தக்கதாயும் மனிதர்களின் புத்திக்குத்தக்கதாயும் இல்மையுபதேசிக்கவேண்டும். முகிய்யித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கூ கோர்வை செய்த புகூசும் புத்தூஹாத்தும் மூலையிலொழித்து வைக்கிற தற்கல்ல, விரும்புகிற முஸ்லிம்க ளெவருக்கும் உபயோகமாகுதற்கே. பணுவுடைய மக்காமில் சொல்லிய பைத்துகளைமட்டும் ரிஸாலாக்களிலெழுதி வெளிப்படுத்தி மனிதர்களின் ஈமானை தடுமாறச்செய்து வரப்படுகிறது. இல்மின் தாகங்கொண்ட மூஸ்லிம்களுடைய தாகம் தீர ஆரிபீன்களின் இல்முச்சமுத்திரத்தால் உலமாக்களெடுத்துப் பருக்

குவார்களென்று நம்பியிருக்கிறேன்.

மஹத்துவமும் கருணையும் நிறைந்த றஹுமானே. இந்தக்கித்தாபைக் கோர்வை செய்ய எனக்கு நாட்டத்தைத்தந்தாய். ஷைத்தானின் கெடுதியால் தவறுகள் வராதிருக்க உன்னிடத்தே தஞ்சம் தேடினவனாய் இந்தக்கித்தாபைக் கோர்வை செய்தேன் இதை வாசிக்கின்ற முஸ்லிம்கள் பிரயோசனமடையவும் இந்தஇல்முகளைக் கொண்டு அவர்கள் கல்பு துலங்கவும்செய்தருள். மலாயிக்கத்துகளின்தன்மையிலிருந்த நாம்சரீரமெனும் சிறைச்சாலைக்குள்ளாகியிருப்பதை நினைத்து இச்சிறைச்சாலையை ஹயாத்தோடுடைத்துவெளிவர எங்களுக்கு ஹிம்மதத்தைத்தந்தருள். தபீயத்தல்ல துஇயற்கையெனும் இருளானபாதாளக்கிணற்றில்விழுந்து வெளிவரக்கூடாமலிருக்கின்ற பாவிகளாகிய நாங்கள் சரீயத்தெனும் கயற்றைப்பிடித்து தரீகத்தெனும் படிகளால் ஹக்கீக்கத்தெனும் ஒளியைக்கொண்டேறி மஃரிபாவெனும் விஸ்தாரமண்டடத்தைச்சேர உதவி செய்தருள். நானென்றும் அவனென்றும் பலதென்றும் நினைத்திருக்கிற எண்ணமற்று ஏக பரிபூரணமெனும் உறுதி நிலைக்கச்செய்தருள் புதிதான தற்று பூர்ப்பம் தரிபடச்செய்தருள். என் சமையலற்று நாமமற்று எனது ளாஹிர் உனது ளாஹிருய் எனது பாதத்தின் உனது பாதத்தினுய் அமையச்செய்தருள். றூகு வெளியாகும் வேளையில் சரீரம் நடுங்கியதிர்ந்து அதிலமைந்த அமல்களெல்லாம் ரூபங்களெடுத்து வெளிவருகையில் அஞ்சத்தக்க ரூபங்கள் வெளியாகாமல் ஆனந்தங்கொடுக்கும் காட்சிகள் தரிசனையாகச்செய்தருள் எங்கள் கபுறை சிறப்பான பூங்காவனமாக்கி மகுஷரில் முத்தக்கீன்கள் கூட்டத்திற் சேர்த்து நபிசல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களின் லிவாவுல்ஹம் தெனுங் கொடி நிழலில் நிறுத்தி பிருதவுசெனும் சொர்க்கலோகத்திற்றரிபடுத்தி உனது ஒயாதலிக்காவெனும் மோக்ஷ ஆனந்தத்தைத்தந்தருள் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

அல்ஹம்துலில்லாஹ்

அல்ஹம்துல் ஆலம்.

முற்றிற்று.